[illegible]

மார்ச், ஏப்ரல் 1985

©


IL
V 1110N85
N85
5212

# தமிழரசு





தமிழரசு
திருவள்ளுவர் ஆண்டு 2016
மலர் : 15 ரக்தாக்ஷி - மாசி 18 இதழ் : 17
1-3-1985



முதல்வர் பொறுப்பை ஏற்கும் டாக்டர் எம்.ஜி.ஆர்

# அமைச்சர்கள் பொறுப்பு ஏற்ற துறைகள்

## எம்.ஜி.ஆர்.
(முதல் அமைச்சர்)

பொது, பொது நிர்வாகம், இந்திய அரசுப் பணி (இ.அ.ப அலுவலர்கள்) மாவட்ட வருவாய்த் துறை அலுவலர்கள், துணை மாவட்ட ஆட்சித் தலைவர்கள், காவல் துறை, இலஞ்ச ஒழிப்பு, திட்டம், சர்க்கரைக் கழிவு, தொல்பொருள் ஆராய்ச்சி, மதுவிலக்கு (பெர்மிட் வழங்குதல் நீங்கலாக). எலக்ட்ரானிக், விஞ்ஞானம், தொழில் நுட்பம், வர்த்தக வரி, உற்பத்தி வரி (எக்சைஸ்), ஐவுளி, பெருந்தொழில்கள், சுரங்கம், கனிப் பொருட்கள். பத்திரிகைக் காகிதக் கட்டுப்பாடு, கொத்தடிமை, வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி, பாஸ்போர்ட்.

## 2. டாக்டர் வி.ஆர். நெடுஞ்செழியன்
(நிதி அமைச்சர்)

நிதி, வருவாய்த்துறை (ரெவின்யூ), சட்டப் பேரவை. இளைஞர் அணி, முன்னாள் இராணுவத்தினர். தேர்தல், புள்ளி விவரம்.

## 3. திரு எஸ். இராமச்சந்திரன்
(மின் துறை அமைச்சர்)

மின்சாரம், இரும்பு—உருக்கு கட்டுப்பாடு, ஆதிதிராவிடர் நலம், எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை. அரசு அச்சகம், மலைவாழ் பகுதியினர் நல வாழ்வு.

## 4. திரு கே.ஏ. கிருஷ்ணசாமி
(தொழிலாளர் நல அமைச்சர்)

தொழிலாளர் நலம், கால்நடைப் பராமரிப்பு, பால்வளம், பாலபண்ணை வளர்ச்சி, பத்திரப் பதிவு. முத்திரைச் சட்டம்.

## 5. திரு இராம. வீரப்பன்
(செய்தி-அறநிலையத்துறை அமைச்சர்)

செய்தி-மக்கள் தொடர்பு, திரைப்படத் தொழில் நுட்பம், சுற்றுலா, சுற்றுலா வளர்ச்சிக் கழகம், திரைப்படச் சட்டம், இந்து அறநிலையங்கள். வனத்துறை, சின்கோனா, மது பெர்மிட்கள் அனுமதி வழங்குதல்.

## 6. திரு செ. அரங்கநாயகம்
(கல்வி அமைச்சர்)

கல்வி, ஆட்சிமொழி, தமிழ் வளர்ச்சி, கலாச்சாரம்

## 7. டாக்டர் கா. காளிமுத்து
(வேளாண்மைத்துறை அமைச்சர்)

வேளாண்மை, வேளாண்மை நிதி, வேளாண்மைத் தொழில் நுட்பம், 'அக்ரோ' என்ஜினியரிங், 'அக்ரோ' சேவைக் கூட்டுறவுச் சங்கங்கள், ககரமைப்புத் திட்டங்கள், வீட்டு வசதிக் கட்டுப்பாடு, குடிநீர்-வடிகால் வாரியம்.

## 8. திரு சி. பொன்னையன்
(சட்ட அமைச்சர்)

சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலைகள், எடை-அளவைகள் சட்டம், நிறுவனங்கள் பதிவு, கடன் நிவாரணம் (கடன் கொடுத்தல் பற்றிய சட்டங்கள், சீட்டுகள் பற்றிய சட்டங்கள் உள்பட).

## 9. டாக்டர் எச்.வி. ஹண்டே
(மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்)

மக்கள் நல்வாழ்வு, சுற்றுப்புறச் சூழல் மாசுக் கட்டுப்பாடு.

## 10. திரு எஸ். முத்துசாமி
(போக்குவரத்து அமைச்சர்)

போக்குவரத்து, அரசுடைமை ஆக்கப்பட்ட போக்குவரத்து, மோட்டார் வாகனச் சட்டம், துறைமுகங்கள், நெடுஞ்சாலைகள்.

## 11. திரு எஸ். திருநாவுக்கரசு
(உணவு அமைச்சர்)

உணவு, விலைக் கட்டுப்பாடு, மக்கள் தொகை, கணக்கெடுப்பு (சென்சஸ்)

## 12. திரு ஆர். சவுந்தரராஜன்
(வீட்டுவசதி-உள்ளாட்சிஅமைச்சர்)

உள்ளாட்சித்துறை நிர்வாகம். ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், சமுதாய வளர்ச்சி, நகராட்சி நிர்வாகம், கிராமப்புறக் கடன்கள், வீட்டு வசதி, குடிசை மாற்று வாரியம்.

## 13. திரு எம்.ஆர். கோவேந்தன்
(பிற்பட்டோர் நல அமைச்சர்)

பிற்பட்டோர் நலம், மீன்வளம்.

## 14. திருமதி கோமதி சீனிவாசன்
(சமூக நலம்-சத்துணவு அமைச்சர்)

சத்துணவு, சமூக நலம் (பெண்கள், குழந்தைகள் நலம் உள்பட), பிச்சைக்காரர் இல்லம், அனாதை இல்லங்கள், வெளிநாடுகளில் வாழும் இந்தியர்கள், அகதிகள்-குடிபெயர்ந்தோர், பூதானம், கிராமதானம்.

## 15. திருமதி எஸ். விஜயலட்சுமி பழனிச்சாமி (கைத்தறி அமைச்சர்)

கதர் மற்றும் கைத்தறி.

## 16. திரு. ஒய். எஸ். எம். யூசுப்
(பொதுப்பணித்துறை அமைச்சர்)

பொதுப்பணித்துறை, நீர்ப்பாசனம், (சிறிய நீர்ப்பாசனத் திட்டங்கள் உள்பட) வக்ஃப் போர்டு, பொதுப் பணித்துறை தொடர்பான நிறுவனச் செய்திகள்.

## 17. திரு கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்
(கூட்டுறவு-ஊரகத்தொழில் அமைச்சர்)

கூட்டுறவுத் துறை, கிராமத் தொழில் உள்பட ஊரகத் தொழில்கள், குடிசைத் தொழில்கள், சிறு தொழில்கள்.

# அமைச்சர்கள் பதவி ஏற்பு நிகழ்ச்சி



நிதி அமைச்சராக
நாவலர் டாக்டர் வி.ஆர். நெடுஞ்செழியன்



செய்தி-அறநிலையத்துறை அமைச்சராக
திரு இராம. வீரப்பன்



மின் துறை அமைச்சராக
திரு எஸ். இராமச்சந்திரன்



கல்வி அமைச்சராக
திரு செ. அரங்கநாயகம்



தொழிலாளர் நல அமைச்சராக
திரு கே.ஏ. கிருஷ்ணசாமி



வேளாண்மைத்துறை அமைச்சராக
டாக்டர் கா. காளிமுத்து



சட்ட அமைச்சராக
திரு சி. பொன்னையன்



உணவு அமைச்சராக
திரு எஸ். திருநாவுக்கரசு



மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சராக
டாக்டர் எச் வி. ஹண்டே.



வீட்டுவசதி-உள்ளாட்சி அமைச்சராக
திரு ஆர். சவுந்தரராஜன்



போக்குவரத்துத்துறை அமைச்சராக
திரு எஸ். முத்துசாமி



பிற்பட்டோர் நல அமைச்சராக
திரு எம்.ஆர். கோவேந்தன்






சமூக நலம்-சத்துணவு அமைச்சராக
திருமதி கோமதி சீனிவாசன்



பொதுப் பணித்துறை அமைச்சராக
திரு. ஒய். எஸ். எம். யூசுப்



கைத்தறி அமைச்சராக
திருமதி எஸ். விஜயலட்சுமிபழனிச்சாமி



கூட்டுறவு-ஊரகத்தொழில் அமைச்சராக
திரு கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்

ஆளுநர் மாளிகையில் 10-2-1985 அன்று டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் முதலமைச்சராகப் பொறுப்பு ஏற்றுக் கொண்டார். இந்த விழா எளிய முறையில் நடைபெற்றது.

மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்கள் 14-2-1985 அன்று ஆளுநர் மாளிகைக்குச் சென்று அமைச்சர்கள் பட்டியலை ஆளுநரிடம் கொடுத்தார்.

அன்றே டாக்டர் நாவலர் வி. ஆர். நெடுஞ்செழியன் அவர்கள் நிதி அமைச்சராகவும், திரு. எஸ். இராமச்சந்திரன் அவர்கள் மின்துறை அமைச்சராகவும் பதவி ஏற்றனர்.

15-2-1985 அன்று பதினான்கு அமைச்சர்கள் ஆளுநர் மாளிகையில் பதவிப்பொறுப்பு ஏற்றுக் கொண்டனர்.



# மாண்புமிகு முதல்வர் வாழ்க்கைக் குறிப்புகள்

முதல்வர் டாக்டர் திரு. எம்.ஜி.ஆர். அவர்கள் ஸ்ரீலங்காவில் கண்டி என்னும் ஊரில் 1917ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 17ஆம் நாளில் பிறந்தார்.

தஞ்சாவூர் மாவட்டத்தில் கும்பகோணத்தில் உள்ள ஆனையடிப் பள்ளியில் ஆரம்பக்கல்வி பயின்றார். 20 ஆண்டுகள் திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினராக இருந்தார். 1972ஆம் ஆண்டு அக்டோபர் 17ஆம் நாள் அ. இ. அ. தி. மு. க. வைத் தோற்றுவிக்கும்வரை, தி.மு.க. பொருளாளராக இருந்து வந்தார். பேரறிஞர் அண்ணா முதல்வராக இருந்த பொழுது இவர் சிறுசேமிப்புத் திட்டத் துணைத் தலைவராக நியமிக்கப்பட்டுப் பணியாற்றினார்

சிறந்த திரைப்பட நடிகர்; தயாரிப்பாளர்; இயக்குநர்; தினப் பத்திரிகைகளுக்கும், வாரப் பத்திரிகைகளுக்கும் கட்டுரைகள் பல எழுதியுள்ளார். சதுரங்கம், குதிரைச் சவாரி, பூப்பந்து, கூடைப் பந்து, கேரம் போன்ற விளையாட்டுக்களில் ஆர்வம் உடையவர். புத்தகங்கள் படிப்பதில் மிகுந்த ஈடுபாடு உள்ளவர். இலங்கை, பர்மா, சிங்கப்பூர், ஜப்பான், ஹாங்காங். அமெரிக்கா போன்ற பல வெளிநாடுகளுக்குச்சென்று வந்துள்ளார். 1967 லிருந்து தொடர்ந்து தமிழ்நாடு சட்டப் பேரவை உறுப்பினராக இருந்து வருகிறார்.

1977-ஜூன் திங்களில் நடந்த பொதுத் தேர்தலில் அ.இ.அ.தி.மு.க. மகத்தான வெற்றி பெற்றது. இராமநாதபுரம் மாவட்டம் அருப்புக்கோட்டைத் தொகுதியிலிருந்து சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். டாக்டர் எம்.ஜி.ஆர். தமிழக முதல்வராகப் பதவியேற்றார். 17.2.1980 அன்று டாக்டர் எம்.ஜி.ஆர். தலைமையிலான தமிழக அமைச்சரவை கலைக்கப்பட்டது. அதன் பிறகு,

1980 மே மாத இறுதியில் நடைபெற்ற தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தலில் மீண்டும் அ.இ.அ.தி.மு.க. தனிப்பெரும்பான்மை பெற்றது. மதுரை மேற்குத் தொகுதியிலிருந்து சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். டாக்டர் எம்.ஜி.ஆர் மீண்டும் முதல்வர் பொறுப்பேற்றுக் கொண்டார். 1984 டிசம்பரில் நடைபெற்ற தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தலில் அ.இ.அ.தி.மு.க. மிகப் பெரும் வெற்றி பெற்றது. மதுரை மாவட்டம் ஆண்டிப்பட்டித் தொகுதியிலிருந்து சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். 10.2.1985 அன்று, முதல்வர் பொறுப்பை ஏற்றுக் கொண்டார்.



# மாண்புமிகு அமைச்சர்களின் வாழ்க்கைக் குறிப்புகள்



நாவலர் டாக்டர்
இரா நெடுஞ்செழியன்.

நிதியமைச்சர் டாக்டர் நாவலர் நெடுஞ்செழியன் அவர்கள் தஞ்சாவூர் மாவட்டம் நன்னிலம் வட்டம் திருக்கண்ணபுரத்தில் 11.7.1920ல் பிறந்தார். அவருடைய இயற்பெயர் நாராயணசாமி என்பதாகும். தந்தை பெயர் இராசகோபாலன். தாயார் பெயர் மீனாட்சிசுந்தரம். பட்டுக்கோட்டை கழக உயர்நிலைப் பள்ளியில் பயின்றார். அதன் பிறகு, அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் பட்டப் படிப்பும் பட்ட மேல்படிப்பும் பயின்றார். அப்பொழுதுதான், தன் பெயரை நெடுஞ்செழியன் என்று மாற்றிவைத்துக் கொண்டார். அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் பயின்ற காலத்திலேயே தந்தை பெரியார் அவர்களின் பகுத்தறிவுக் கொள்கையில் ஈடுபாடு இவருக்கு ஏற்பட்டது.

1950ல் நாவலரின் திருமணம் சேலத்தில் நடைபெற்றது. சேலத்தைச் சேர்ந்த திரு. இராமலிங்கனார் அவர்களின் திருமகளார் டாக்டர் விசாலாட்சி அம்மையாரை நாவலர் மணந்தார். இவர்களுக்கு ஒரே ஒரு மகன் மதிவாணன் ஆவார்.

நாவலர் நெடுஞ்செழியன் அவர்கள் 1944ல் திராவிடர் கழக உறுப்பினரானார். 1949ல் தி.மு.க. தோன்றியபோது அதன் துணைப் பொதுச் செயலாளரானார். 1955ல் தி.மு.க. பொதுச் செயலாளராகப் பொறுப்பேற்றார்.

1962 முதல் 1976 வரை மூன்று முறை தமிழ் நாடு சட்டப் பேரவை உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

1962ல் எதிர்க்கட்சித் தலைவர், 1967-69ல் கல்வி-தொழில் அமைச்சர், 1969-71 கல்வி நல்வாழ்வுத் துறை அமைச்சர், 1971-72 கல்வி-வருவாய்த்துறை அமைச்சர், 1972-74 கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர், 1974-76 கல்வி சுற்றுலாத்துறை அமைச்சராகப் பொறுப்பு வகித்தார்.

நாவலர் நெடுஞ்செழியன் பல நூல்களை எழுதியுள்ளார். ''மன்றம்'' தமிழ் வார இதழின் ஆசிரியர் மற்றும் உரிமையாளராகவும் ''மாலைமணி'', 'நம் நாடு'' ஆகிய தமிழ் நாளிதழ்களின் ஆசிரியராகவும், பணியாற்றியுள்ளார்.

காமன்வெல்த் நாடுகள் மன்ற உறுப்பினர்கள் மாநாட்டில் கலந்து கொள்ளவும், முதல் உலகத்தமிழ்மாநாட்டில் கலந்து கொள்ளவும், வெளிநாடுகள் சென்றிருந்தார்.

1972ல் மதுரைப் பல்கலைக் கழகம் இவருக்கு 'டாக்டர்' பட்டம் வழங்கியுள்ளது.

தமிழில் இவரது புலமை, திறமை கண்டு அறிஞர் அண்ணா அவர்கள் இவருக்கு ''நாவலர்'' ''நடமாடும் பல்கலைக்கழகம்'' என்ற பட்டங்களை வழங்கினார்.

1980 சட்டப் பேரவைத் தேர்தலில் திருநெல்வேலி தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டார். டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்களின் அமைச்சரவையில் நிதியமைச்சராக இருந்தார்.

1984ல் நடைபெற்ற பொதுத் தேர்தலில் மதுரை மாவட்டம் ஆத்தூர் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு, நிதியமைச்சராக உள்ளார்.



திரு எஸ். இராமச்சந்திரன்

திரு. எஸ். இராமச்சந்திரன் அவர்கள் 1937ஆம் ஆண்டு தென்னார்க்காடு மாவட்டத்தில் உள்ள புலியூரில் பிறந்தார். அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் பொறியியல் துறையில் படித்து பி. இ. (ஆனர்ஸ்) பட்டம் பெற்றவர்.

பல்கலைக் கழகத்தில் படிக்கும்போது திராவிட மாணவர்

முன்னேற்றக் கழகச் செயலாள ராகப் பணியாற்றியிருக்கிறார். பல்வேறு தொழிற்சங்கங்களின் தலைவராகவும் இருந்தவர். தமிழ்நாடு மின்சார வாரியத்தில் பொறியாளராக 1959-ஆம் ஆண்டில் சேர்ந்தார். 1966 ஆம் ஆண்டில் பதவியை விட்டு விலகி அரசியலில் தீவிரமாக இறங்கினார்.

1967ஆம் ஆண்டு சட்டசபைத் தேர்தலில் பண்ருட்டித் தொகுதியில் போட்டியிட்டு எம்.எல்.ஏ. ஆனார். 1967, 1971, 1977, 1980 மற்றும் 1984ஆம் ஆண்டுகளில் இதே தொகுதியிலிருந்து ஐந்து முறை தொடர்ந்தாற்போலத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்.

1971 ஆம் ஆண்டிலிருந்து 5 ஆண்டுகள் போக்குவரத்துத் துறை அமைச்சராக இருந்தார். தொழிலாளர்களுக்குப் பங்குத் தொகை கொடுத்து, நிர்வாகத்தில் தொழிலாளர் பிரதிநிதிகளைச் சேர்த்த பெருமை இவருக்கு உண்டு.

77ல் பொதுப்பணி, சிறு பாசனம், இரும்பு, உருக்குக் கட்டுப்பாடு, மின்சாரம் ஆகிய துறைகள் இவரிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தன.

1980ல் மின்துறை அமைச்சராக இருந்தார். தற்பொழுதும் மின்துறை அமைச்சராகப் பணியாற்றி வருகிறார்.

## திரு கே. ஏ. கிருஷ்ணசாமி

திரு கே. ஏ. கிருஷ்ணசாமி அவர்கள் 1932 ஆம் ஆண்டு மார்ச் 24ஆம் தேதி கோவை மாவட்டம் கனியூரில் பிறந்தார். இவர் மறைந்த முன்னாள் அமைச்சர் திரு கே.ஏ.மதியழகனின் தம்பி. அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் பட்டப் படிப்புப் படித்தார். சென்னை பச்சையப்பன் கல்லூரியில் எம்.ஏ. படித்துத் தேறியபின் சட்டக் கல்லூரியில் பயின்று 'பி.எல்,' பட்டம் பெற்றார்.

தி.மு.கழகத்தை 1949ல் பேரறிஞர் அண்ணா தொடங்



கியது முதல் அதில் உறுப்பினராக இருந்தார். இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் சிறை சென்றார்.

அ.இ.அ.தி.மு.க. தொடங்கப்பட்ட காலத்தில் அதன் அமைப்புச் செயலாளராகப் பணியாற்றினார்.

திரு கே. ஏ. கிருஷ்ணசாமி அவர்கட்கு 1963 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 1ஆம் தேதி பேரறிஞர் அண்ணா தலைமையில் திருமணம் நடந்தது. மனைவி பெயர் புனிதவதி.

கிருஷ்ணசாமி - புனிதவதி தம்பதிகளுக்கு மாங்கனி, கயல்விழி என்ற 2 மகள்களும், அருண், முகில் என்ற 2 மகன்களும் உள்ளனர்.

இவர் சிறந்த பேச்சாளர், எழுத்தாளர், ஒரு சிறந்த பத்திரிக்கையாளர், 'தென்னகம்' நாளிதழின் ஆசிரியராகப் பணியாற்றினார்.

முந்திய அமைச்சரவையில் பால்வளத் துறை அமைச்சராகப் பதவி வகித்தார். 1980, 1984 ஆம் ஆண்டுகளில் ஆயிரம் விளக்குத் தொகுதியிலிருந்து சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

## திரு இராம. வீரப்பன்

திரு இராம. வீரப்பன் அவர்கள் புதுகோட்டை மாவட்டத்தைச் சேர்ந்த வல்லத்திராக் கோட்டையில் 1926 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 9 ஆம் நாள் பிறந்தார்.

நாச்சியாபுரத்தில் (செட்டிநாடு) பள்ளிக்கூடக் கல்வியை முடித்தார். ஆரம்பத்தில் 11வது வயதில் காங்கிரசில் ஈடுபாடு கொண்டு இருந்தார். பிறகு 1939ல் டி.கே.எஸ்.சகோதரர்கள் நாடகக் குழுவில் சேர்ந்தார். அப்போது பெரியாரின் சுயமரியாதை இயக்கத்துடன் தொடர்பு ஏற்பட்டது.



1944 முதல் 1945 வரை திராவிடர் கழகத்தில் சேர்ந்து காரைக்குடியில் முழு நேர ஊழியராகப் பணியாற்றினார். பிறகு பெரியார் ஈ. வே. ரா. அவர்களுடன் ஈரோட்டில் இருந்தார். பின்னர் கே. ஆர். இராமசாமி நாடகக் குழுவில் நிர்வாகியாகப் பணியாற்றினார். 1946ல் பேரறிஞர் அண்ணாவுடன் இவருக்குத் தொடர்பு ஏற்பட்டது. அண்ணா அவர்களுடன் காஞ்சிபுரத்தில் சில காலம் இருந்து, 1953ல் திரு எம்.ஜி.ஆர். அவர்களின் 'எம்.ஜி.ஆர்: நாடக மன்றத்'தில் நிர்வாகியாகச் சேர்ந்தார். பிறகு 'எம்.ஜி.ஆர். பிக்சர்ஸ்' பட நிறுவனத்தை நிர்வகித்து வநதார். 1963-ல் 'சத்யா மூவீஸ்' பட நிறுவனத்தைத் தொடங்கினார்.



தி.மு.க.வில் பொதுக்குழு உறுப்பினராகப் பதவி வகித்தார். அ. இ. அ. தி. மு. க. தொடங்கியதில் இருந்து அரசியலில் தீவிரப் பங்கு ஏற்றார். அ.இ.அ.தி.மு.கவில் கலைப் பிரிவுச் செயலாளராக இருந்தார். பிறகு தலைமை நிலையச் செயலாளராக இருந்தார். 1977 ஆம் ஆண்டு தமிழக அமைச்சரானார். செய்தி-மக்கள் தொடர்பு, திரைப் படத் தொழில் நுட்பம், சுற்றுலா, சுற்றுலா வளர்ச்சிக் கழகம், திரைப்படச் சட்டம் ஆகிய துறைகள் இவரிடம் ஒப்படைக்கப்பட்டன. பின் அற-நிலையம், வனத்துறை ஆகிய துறைகளும் ஒப்படைக்கப் பட்டன. 1980 ஆம் ஆண்டு அமைச்சரவையிலும் அதே துறைகளின் பொறுப்பினை ஏற்றுச் செயல்பட்டார்.

1977ஆம் ஆண்டும் 1984-ஆம் ஆண்டும் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைத் தொகுதியிலிருந்து சட்டமன்ற மேலவைக்குத் தேர்ந்தெடுக்கப் பட்டார். தற்பொழுது, செய்தி அறநிலையத்துறை அமைச்சராகப் பொறுப்பேற்றுள்ளார்.

## திரு செ. அரங்கநாயகம்

திரு செ. அரங்கநாயகம் அவர்கள் கோயம்புத்தூரில் 25.4.1931ல் பிறந்தார். பி.ஏ., பி.டி. பட்டம் பெற்ற இவர் காரமடை, சித்தோடு அரசு உயர் நிலைப்பள்ளிக் கூடங்களில் ஆசிரியர் வேலை பார்த்தார்.

பின்பு, திங்களூரில் உள்ள உயர்நிலைப் பள்ளியில் தலைமை ஆசிரியராக வேலை பார்த்து வந்தார். ஆசிரியர் தொழிலில் இருக்கும் போதே எம். ஏ., பட்டம் பெற்றார். பகல்பூர் பல்கலைக் கழகத்தில் சட்டப் படிப்புக்கான 'பி.எல்' பட்டம் பெற்றார்.

தலைமை ஆசிரியர் பதவியை ராஜினாமா செய்துவிட்டு வக்கீல் தொழில் செய்து கொண்டே தீவிரமாக தி.மு.கழகத்தில் பங்கு கொண்டார்.



திரு. எம். ஜி. இராமச்சந்திரன் அவர்கள் அ.இ.அ.தி.மு கழகத்தை அமைத்ததும், இவரும் தி.மு.கவிலிருந்து வெளியேறி அ.இ.அ.தி.மு.கவில் சேர்ந்தார். 1973 ஆம் ஆண்டு நடந்த கோவைச் சட்டமன்ற இடைத் தேர்தலில் அ. இ. அ.தி.மு.க. சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்றார்.

திரு செ. அரங்கநாயகம் அவர்களுக்கு 1958 ஆம் ஆண்டு நாவலர் நெடுஞ்செழியன் தலைமையில் சேலம் மாவட்டம் குல்லம்பட்டியில் திருமணம் நடந்தது.

1980ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் கோயம்புத்தூர் மேற்குத் தொகுதியிலிருந்து இவர் தேர்ந்தெடுக்கப்பட்டார். 1984ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் கோயம்புத்தூர் மாவட்டம் தொண்டாமுத்தூர் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப் பட்டார்.


1977, 1980ஆம் ஆண்டுகளில் அமைக்கப்பட்ட அமைச்சரவைகளில் கல்வி அமைச்சராகப் பணியாற்றினார். தற்பொழுதும் கல்வி அமைச்சராகப் பணியாற்றுகிறார்.

## டாக்டர் கா. காளிமுத்து

டாக்டர் கா.காளிமுத்து அவர்களின் சொந்த ஊர் சிவகாசிக்கு அருகில் உள்ள ராமுத் தேவன் பட்டி. 25.5.1942இல் பிறந்தார்.

மதுரை தியாகராசர் கல்லூரியில் பி.ஏ., படித்தார். படிக்கும்போதே இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் தீவிரப் பங்கு கொண்டார். மாணவர் தலைவராக விளங்கினார்.

பி.ஏ., முடித்தவுடன் தனியாக எம்.ஏ. தேர்வு எழுதிப் பட்டம் பெற்றார். 1965ஆம் ஆண்டில் அவர் மாணவர் தி.மு.க.வின் தென்மாவட்டப் பொறுப்பாளராக இருந்தார். 1970ஆம் ஆண்டு தன்னுடைய சொந்த ஊரில் ஊராட்சி மன்றத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.



பின்பு, 1971 ஆம் ஆண்டு அவர் சிவகாசித் தொகுதியிலிருந்து எம்.எல்.ஏ. ஆகத்தேர்ந்தெடுக்கப்பட்டார். தி.மு.க.விலிருந்து டாக்டர் எம். ஜி. ஆர் அவர்கள் விலகி அ.இ. அ.தி.மு.க.வைத் தொடங்கியவுடன் இவரும் அதில் சேர்ந்தார்.

1983 ஆம் ஆண்டு மதுரைப் பல்கலைக் கழகத்தில் டாக்டர் பட்டம் பெற்றார்.

டாக்டர் கா. காளிமுத்து சிறந்த கதை ஆசிரியர். திரைப்படம் ஒன்றிற்கும் கதை வசனம் எழுதியுள்ளார். 1977ஆம் ஆண்டு ஜீன் திங்களிலிருந்து 1980

பிப்ரவரி திங்கள் வரை இவர் ஊரக வளர்ச்சி உள்ளாட்சித் துறை அமைச்சராக இருந்தார். நகரமன்ற நிர்வாகம், சமுதாய வளர்ச்சி, ஊராட்சி ஒன்றியம், கிராமக்கடன் வசதி ஆகிய துறைகள் இவரிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தன.

1980ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் திருப்பரங்குன்றம் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டார். வேளாண்மை, வேளாண்மை நிதி ஆகிய துறைகள் இவரிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தன. 1984ம் ஆண்டு பொதுத் தேர்தலில் மதுரை கிழக்குத் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டார். தற்பொழுது வேளாண்மைத் துறை அமைச்சராகப் பொறுப் பேற்றிருக்கிறார்.



## திரு சி. பொன்னையன்

திரு சி. பொன்னையன் அவர்கள், சேலம் மாவட்டம் திருச்செங்கோடு வட்டத்தில் உள்ள படலூர் கவுண்டம்பாளையத்தைச் சேர்ந்தவர். 22.2.1942ல் பிறந்த இவர், திருச்செங்கோடு உயர்நிலைப் பள்ளிக்கூடத்தில் படித்துவிட்டு, பட்டப்படிப்பை திருச்சி ஜமால் முகமது கல்லூரியிலும், சட்டப் படிப்பைச் சென்னை சட்டக் கல்லூரியிலும் முடித்தார்.

1958ஆம் ஆண்டிலிருந்து திராவிட மாணவர் முன்னேற்றக் கழகத்தில் தீவிர ஈடுபாடு கொண்டார். விலைவாசி எதிர்ப்புப் போராட்டத்திலும் இந்தி எதிர்ப்புப் போராட்டத்திலும் பங்கேற்றுச் சிறை சென்றார். திரு எம். ஜி. ஆர். அவர்கள் தி. மு. க. விலிருந்து பிரிந்து அ.இ.அ.தி.மு.கவைத் தொடங்கிய ஆரம்ப நாள் தொட்டு அதில் சேர்ந்து பணியாற்றினார். சென்னை உயர் நீதி மன்றத்தில் வழக்கறிஞராகப் பணிபுரிந்து வந்த இவர் சர்க்காரியா விசாரணைக் கமிஷனில் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் வழக்கறிஞராகவும் பணிபுரிந்தார்.

1977 ஜூன் மாதத்தில் நடந்த தமிழ்நாடு சட்டப் பேரவைத் தேர்தலில் அ.இ.அ.தி.மு.க.வின் சார்பில் சேலம் மாவட்டம் திருச்செங்கோடு சட்டசபைத் தொகுதியிலிருந்து, தமிழ்நாட்டிலேயே அதிகமான வாக்குகள் பெற்றுத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

இதேபோல 1980, 1984ல் நடந்த பொதுத் தேர்தல்களிலும் திருச்செங்கோடு சட்டசபைத் தொகுதியிலிருந்து தேர்தெடுக்கப்பட்டார்.

1977ல் போக்குவரத்து நாட்டுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து, மோட்டார், வாகனவரி, பெருவழித்துறை, துறைமுகம் ஆகிய துறைகள் இவரிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தன. 1980ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட அமைச்சரவையில் சட்ட அமைச்சராக இருந்தார். தற்பொழுதும் சட்ட அமைச்சராகப் பணியாற்றுகிறார்.

## டாக்டர் எச். வி. ஹண்டே

அரசுத்துறையில் பல ஆண்டுகளாகப் பணிபுரிந்த டாக்டர் எச். வி. ஹண்டே அவர்கள் கோயம்புத்தூரில் பிறந்தவர். பள்ளிப் பருவத்தில் நாட்டு விடுதலை இயக்கத்தில் தீவிரமாகப் பங்கேற்றார்.

டாக்டர் எச். வி. ஹண்டே அவர்கள் 28.11.1927இல் பிறந்தார்.

சென்னை செனாய் நகரில் 1950ஆம் ஆண்டு முதல், புகழ் பெற்ற மருத்துவராக விளங்கி வருகிறார். 1964 ஆம் ஆண்டு சென்னை மாவட்டப் பட்டதாரிகளின் தொகுதியில் போட்டியிட்டு, சட்ட மேலவை உறுப்பினராகத் தேர்தெடுக்கப் பட்டார்.



1965ல் மூதறிஞர் இராஜாஜி அவர்களின் சுதந்திராக் கட்சியில் பங்கேற்று தமிழ்நாடு சுதந்திராக் கமிட்டிக் கிளையின் பொதுச் செயலாளராகவும், அகில இந்திய சுதந்திராக் கட்சியின் கூட்டுச் செயலாளராகவும் பணிபுரிந்தார்.

1967, 1971 ஆகிய ஆண்டுகளில் நடைபெற்ற சட்ட மன்றப் பொதுத் தேர்தலில் பூங்கா நகர்த் தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்றார்.

1973 ஆம் ஆண்டு டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களால் தோற்றுவிக்கப்பட்ட அ.இ.அ.தி.மு.க.வில் சேர்ந்து அக்கட்சியின் தலைமை நிலையச் செயலாளர், அமைப்புச் செயலாளர் ஆகிய பதவிகளை வகித்தார். 1978ஆம் ஆண்டில் சென்னை மாவட்டப் பட்டதாரிகள்




தொகுதியிலிருந்து சட்டமன்ற மேலவைக்குப் பெரும்பான்மையான வாக்குகள் வித்தியாசத்தில் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

1980 மே மாதத்தில் நடைபெற்ற சட்டமன்றப் பொதுத் தேர்தலில் அண்ணா நகர்த் தொகுதியில் போட்டியிட்டு மிகக் குறைந்த அளவு-699 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி வாய்ப்பை இழந்தார்.

1977, 1980 ஆண்டு அமைச்சரவையில் மக்கள் நல்வாழ்வுத் துறையின் அமைச்சராகப் பொறுப்பேற்றிருந்தார். 1984ல் நடைபெற்ற சென்னை பட்டதாரித் தொகுதியில் தேர்ந்தெடுக்கப் பெற்று எம்.எல்.சி. ஆனார்.

மீண்டும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சராகப் பொறுப் பேற்றிருக்கிறார்.



## திரு. எஸ். முத்துசாமி

போக்குவரத்து அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ள திரு. எஸ். முத்துசாமி அவர்கள் ஈரோடு தொகுதியில் இருந்து 1977, 1980, 1984 ஆகிய தேர்தல்களில் சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

திரு எஸ். முத்துசாமி அவர்கள் 1948ஆம் ஆண்டு அக்டோபர் 16ல் பிறந்தார்.

திருமணமான திரு எஸ். முத்துசாமிக்கு ஒரு மகன் இருக்கிறார். பேருந்துத் தொழிலில் மிகுந்த அனுபவமும் ஆர்வமும் உள்ளவர். 1980ஆம் ஆண்டு போக்குவரத்து, நாட்டுடைமையாக்கப்பட்ட போக்குவரத்துக்கள் மற்றும் மோட்டார் வாகனச் சட்டம், துறைமுகம் ஆகிய துறைகள் இவரிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தன. தற்பொழுதும் போக்குவரத்து அமைச்சராகப் பணியாற்றி வருகிறார்.



## திரு. எஸ். திருநாவுக்கரசு

திரு. எஸ். திருநாவுக்கரசு அவர்கள் 5.7.1949ல் புதுக்கோட்டை மாவட்டம் தியத்தூரில் பிறந்தார்.

தனது ஆரம்பப் படிப்பைப் பாதிரக்குடி, ஒரியூர் ஆகிய இடங்களில் முடித்த திரு. திருநாவுக்கரசு அவர்கள், கல்லூரிப் படிப்பைப் பாளையங்கோட்டையில் உள்ள சவேரியார் கல்லூரியிலும், அதிராமப்பட்டினத்தில் உள்ள காதர் முகைதீன் கல்லூரியிலும் முடித்து, "பி.ஏ." பட்டம் பெற்றார். பின்பு சென்னை சட்டக் கல்லூரியில் படித்து, "பி.எல்" பட்டம் பெற்றார். பிறகு புதுக்கோட்டையில் வழக்கறிஞராகத் தொழில் செய்தார்.

பள்ளியில் மாணவத் தலைவராக இருந்தார். கல்லூரியில் படிக்கும் போதே தி.மு.க.வில் மிகுந்த ஈடுபாடுகொண்டவர். அதன்பின்பு டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் அ.இ.அ.தி.மு.கவைத் தொடங்கியவுடன் இவரும் தி.மு.க.வில் இருந்து விலகி அ.இ.அ.தி.மு.க.வில் சேர்ந்தார்.

முதல் முதலில் 1977ல் அறந்தாங்கித் தொகுதியிலிருந்து சட்டப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார். பின்னர் 1980, 1984 தேர்தல்களிலும் அதே தொகுதியில் மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

1977 முதல் பிப்ரவரி 1980 வரை சட்டமன்றப் பேரவைத் துணைத் தலைவராக இருந்தார்.

நியூஸிலாந்து நாட்டில் நடைபெற்ற காமன்வெல்த் நாடுகளின் பார்லிமெண்டரி கழகத்தின் 25 வது வருடாந்திர மாநாட்டில் தமிழ்நாடு கிளையின் பிரதிநிதியாகக் கலந்து கொண்டார்.

1980ஆம் ஆண்டு பெருந்தொழில்கள், சுரங்கம் மற்றும் ஆலைத் துணி ஆகிய துறைகள் இவரிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தன. தற்பொழுது உணவு அமைச்சராகப் பணியாற்றி வருகிறார்.

## திரு. ஆர். சவுந்தரராஜன்.

திரு. ஆர். சவுந்தரராஜன் அவர்கள் திருச்சியில் 1.12.1933ல் பிறந்தார்.

பள்ளிப் படிப்பையும் கல்லூரிப் படிப்பையும் திருச்சியில் முடித்தார். "பி.காம்" பட்டம் பெற்றவர்.

பெரியாரின் வாழ்க்கை வரலாற்றை நாடகமாக்கி அதில் பெரியாராக நடித்துப் புகழ் பெற்றார்.

அகில இந்திய எம்.ஜி.ஆர். மன்றச் செயலாளராகப் பதவி வகித்தார்.



திரு. ஆர். சவுந்தரராஜனின் மனைவி பெயர் சக்குபாய். இவர்களுக்கு ரெங்கநாயகி (27), தேன்மொழி(22) என்ற .ள உளவ.ளர்.

மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களுடன் பல திரைப்படங்களில் நடித்துள்ளார். 1977, 1980, 1984 ஆகிய தேர்தல்களில் ஸ்ரீரங்கம் தொகுதியிலிருந்து சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். 1978 இல் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சராகவும், 1983இல் சத்து.வு அமைச்சராகவும் இருந்தார். தற்பொழுது வீட்டுவசதி-உள்ளாட்சித் துறை அமைச்சராக உள்ளார்.

## திரு எம். ஆர். கோவேந்தன்

திரு. எம். ஆர். கோவேந்தன் அவர்கள் 1932ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 9ந்தேதி தஞ்சை மாவட்டம் முடச்சிக்காடு கிராமத்தில் பிறந்தார்.

எஸ்.எஸ்.எல்.சி. வரை படித்த இவர் 1952ஆம் ஆண்டு முடச்சிக்காடு பஞ்சாயத்து உறுப்பினரானார். 1955 ஆம் ஆண்டு இந்த பஞ்சாயத்தின் துணைத் தலைவரானார்.

1959ஆம் ஆண்டில் இருந்து 1977ஆம் ஆண்டு வரை முடச்சிக்காடு பஞ்சாயத்து துணைத் த.லைவராக இருந்தார். 1970 ஆம் ஆண்டு சேது பாவாசத்திரம் பஞ்சாயத்து யூனியன் துணைத் தலைவரானார்.

முதலாவதாக 1977ஆம் ஆண்டு நடந்த தேர்தலில் வெற்றிபெற்றார். தொடர்ந்து 1980ஆம் ஆண்டும், 1984 ஆம் ஆண்டும் நடந்த தேர்தலிலும் வெற்றிபெற்றார்.



1983ஆம் ஆண்டு பிற்பட்டோர் நலத் துறையமைச்சராகப் பணியாற்றினார். தற்பொழுதும் பிற்பட்டோர் நலத்துறை அமைச்சராகப் பணியாற்றி வருகிறார்.

இவருக்கு 4 குழந்தைகள் உள்ளனர்.

## திருமதி கோமதி சீனிவாசன்

திருமதி கோமதி சீனிவாசன் அவர்கள், தஞ்சை மாவட்டம் வலங்கைமான் தொகுதியில் போட்டியிட்டு வெற்றிபெற்றவர். 'பி.ஏ., பட்டதாரி. 1.10.1948இல் பிறந்தார்.

கும்பகோணம் அரசினர் பெண்கள் கல்லூரியில் 'பி.ஏ' வரை படித்தார். அதன் பின்பு கோவை அரசினர் பயிற்சிக் கல்லூரியில் (பி.டி) ஆசிரியர் பதவிக்குரியபட்டம் பெற்றார்.



இவரது சொந்த ஊர், வலங்கைமான் தொகுதியில் உள்ள நரியலூர்.

இவர் கர்நாடக சங்கீதத்தில் மாநில விருது பெற்றிருக்கிறார். 1980 ஆம் ஆண்டு சமூகநலத்துறை, மகளிர் நலம், சிறுவர் நலம், கால்நடை வளம், பிச்சைக்காரர் மறுவாழ்வு, அனாதை இல்லம், வெளிநாட்டு இந்தியர், அகதிகள் நலம், இடம் பெயர்ந்தோர் நலம், சீர்திருத்தப்பள்ளிகள் ஆகிய துறைகள் இவரிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தன. தற்பொழுது சமூகநலம் சத்துணவு அமைச்சராகப் பணியாற்றி வருகிறார்.

## திருமதி எஸ் விஜயலட்சுமி பழனிச்சாமி:

திருமதி எஸ். விஜயலட்சுமி பழனிச்சாமி அவர்கள் 1954ஆம் ஆண்டு பிப்ரவரி 22ஆம் தேதி சேலம் மாவட்டம் பாரபட்டியில் பிறந்தவர்.

தியாகக் குடும்பத்தைச் சேர்ந்த இவர் சேலம் அரசினர் பெண்கள்உயர்நிலைப் பள்ளிக்கூடத்தில் எஸ்.எஸ்.எல்.சி. படித்தார்.

முதன் முதலாக 1980-ஆம் ஆண்டு வீரபாண்டித் தொகுதியிலிருந்து சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.



1983 இல் கதர்த்துறை அமைச்சராகப் பணியாற்றினார்.

19.8.83ல் சேலத்தில் முதலமைச்சர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் தலைமையில் அமைச்சர் விஜயலட்சுமிக்கும், சேலம் அ.இ.அ.தி.மு.க. ஒன்றியச் செயலாளர் திரு.பழனிச்சாமிக்கும் திருமணம் நடந்தது.

இந்த வீரபாண்டித் தொகுதியில் 1984 தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்ற இவர், தற்போது கதர்-கைத்தறித் துறை அமைச்சராகப் பணியாற்றி வருகிறார்.

## திரு ஒய்.எஸ்.எம். யூசுப்

அமைச்சர் திரு. ஒய்.எஸ். எம். யூசுப் அவர்கள் முழுப் பெயர் யாகூப் செய்யது முகமது யூசுப். இவர் 1942ம் ஆண்டு ஜூன் 17ல் பிறந்தார்.

சொந்த ஊர் நெல்லை மாவட்டம் பணகுடி. பாளையங்கோட்டையில் கல்லூரிப் படிப்பை முடித்த பிறகு 19 வயதிலேயே அரசியலில் ஈடுபட்டார்.

1970ல் நகரபஞ்சாயத்துத் தலைவரானார். வள்ளியூர் கூட்டுறவு நிலவளவங்கித் தலைவராக 4 ஆண்டுக் காலம் பணியாற்றினார்.

அ.இ.அ.தி.மு.க. தொடங்கியது முதல் பணகுடியில் நகரச் செயலாளராக இருந்தார்.


கடந்த 1977 சட்டசபைத் தேர்தலில் நெல்லை மாவட்டம் ராதாபுரம் தொகுதியில் இருந்து அ.இ.அ.தி.மு.க. சார்பில் தமிழ்நாடு சட்டசபைக்குத் தேர்ந்து எடுக்கப்பட்டார்.




1983 ஜூலை மாதம் 12ம் தேதி தமிழ்நாடுமேல் சபைக்கு தேர்ந்து எடுக்கப்பட்டார்.

1983இல் நீர்ப்பாசனத்துறை அமைச்சராக நியமிக்கப்பட்டார். பெல் நிறுவனத்தில் பணியாற்றியுள்ளார். விளையாட்டில் ஆர்வம் உள்ளவர்.

இவருக்கு 1964ல் திருமணம் நடந்தது. மனைவி பெயர் அஷ்ரபிபீவி. ஒரு மகனும், ஒரு மகளும் இருக்கிறார்கள். தற்போது இவர் பொதுப் பணித்துறை அமைச்சராகப் பணியாற்றுகிறார்.





## திரு கே.கே.எஸ்.எஸ் ஆர். இராமச்சந்திரன்

திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் 8.8.1949இல் பிறந்தார். 1977, 1980, 1984 தேர்தல்களில் சாத்தூர் தொகுதியில் இருந்து சட்டசபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

இவரின் சொந்த ஊர் விருதுநகர். ''எஸ்.எஸ்.எல்.சி'' வரை படித்தவர்.

இவரது குடும்பம் வியாபாரக் குடும்பமாகும்.

அரசியல் போராட்டங்களில் கலந்து கொண்டு மூன்று முறை சிறை சென்றுள்ளார்.

திருமணம் ஆனவர். இவருக்கு மூன்று குழந்தைகள் உள்ளனர்.

1983-ல் கூட்டுறவு அமைச்சராக நியமிக்கப்பட்டார். தற்போது இவர் கூட்டுறவு மற்றும் ஊரகத்தொழில் அமைச்சராகப் பணியாற்றுகிறார்.

# அரசியல் சட்டத்தை மீறவில்லை ஆளுநர்!

## மாண்புமிகு சட்ட அமைச்சர் திரு சி.பொன்னையன்

“ஆளுநர் குரானா அவர்கள் அரசியல் சட்டத்தை மீறவில்லை” என்று, மாண்புமிகு சட்ட அமைச்சர் திரு சி. பொன்னையன் அவர்கள் கூறியுள்ளார். மற்ற அமைச்சர்கள் நியமிக்கப்படாமல் முதல் அமைச்சருக்கு மட்டும் ஆளுநர் பதவிப் பிரமாணம் செய்துவைத்தது அரசியல் சட்டத்துக்கு விரோதம் என்று எழுப்பப்பட்ட குற்றச்சாட்டு பற்றி, மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள் வெளியிட்டுள்ள அறிக்கை விவரம் வருமாறு;

“தமிழக முதல் அமைச்சராக டாக்டர் எம்.ஜி.இராமச்சந்திரன் அவர்களைத் தமிழக ஆளுநர் நியமித்து அவருக்கு மட்டும் 10.2.'85ல் பதவிப் பிரமாணம் செய்து வைத்து, மற்ற எந்த அமைச்சர்களையும் அன்று நியமிக்காமல் ஆளுநர் நடந்துகொண்ட முறையைப் பற்றி, தேவையில்லாத சர்ச்சை ஒன்று எழுப்பப்பட்டு இருப்பது என்னுடைய கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டது.

டாக்டர் எம்.ஜி.இராமச்சந்திரன் அவர்கள் முதல் அமைச்சராக நியமிக்கப்பட்டு 10.2.'85ல் பதவிப் பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

மற்ற அமைச்சர்கள் யாரையுமே அதே தேதியில் நியமிக்காமல் மாண்புமிகு டாக்டர் எம்.ஜி.இராமச்சந்திரனை மட்டும் முதல் அமைச்சராக நியமித்ததும், அவருக்குப் பதவிப் பிரமாணம் செய்து வைத்ததும் முழுக்க முழுக்க அரசியல் சட்டத்திற்கு உட்பட்டது தான்.

அரசியல் சட்டப் பிரிவின் 164(1)யின்படி ஆளுநரால் முதல் அமைச்சர் நியமிக்கப்படுகிறார். அந்த முதல் அமைச்சரின் ஆலோசனைப்படிதான் மற்ற அமைச்சர்களை ஆளுநர் நியமிக்கிறார்.

ஆகவே, அரசியல் சட்ட விதிப்படி ஆளுநரால் முதலில் நியமிக்கப்பட வேண்டியவர் முதல் அமைச்சர் தான்.

முதல் அமைச்சர் நியமிக்கப்பட்டு, பதவிப்பிரமாணம் செய்து வைக்கப்பட்ட பிறகு தான், முதல் அமைச்சரின் ஆலோசனைப்படி மற்ற அமைச்சர்களை ஆளுநர் நியமிக்க முடியும்.

ஆகவே, மற்ற அமைச்சர்களை ஆளுநர் நியமிப்பபதற்கு முன்னால், முதல் அமைச்சரின் ஆலோசனையை ஆளுநர் கேட்க வேண்டும் என்ற முன் நிபந்தனை ஒன்று இருக்கிறது. முதல் அமைச்சரின் ஆலோசனை இல்லாமல் எந்த அமைச்சரையும் ஆளுநர் நியமிக்க முடியாது.

அரசியல் சட்ட விதி 163(1)ன்படி ஆளுநர் தன் பணிகளை நிறைவேற்றுவதற்காக உதவி செய்யவும், ஆலோசனை கூறவும் முதல் அமைச்சர் தலைமையில் ஒரு அமைச்சரவை இருக்க வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது.

இதில் கூறப்பட்டுள்ள அமைச்சரவை அரசியல் சட்ட விதி 164(1)கீழ் சட்டமுறைப்படி அமைக்கப்பட்ட தாகும். எந்தெந்த முறையில் எந்த வகையில் முதல் அமைச்சரும், மற்ற அமைச்சர்களும் நியமிக்கப்பட வேண்டும் என்பது, இந்த விதி 164(1)ல் கூறப்பட்டுள்ளது. இந்த விதிமுறைப்படி நடந்துதான் இந்த அமைச்சரவை அமைக்கப்பட்டுச்செயல்பட வழி உண்டாக்குகிறது. விதி 164(1)ன்படி


முதல் அமைச்சராகப் பதவி ஏற்ற பிறகு மற்ற அமைச்சர்களைப் பற்றி ஆளுநருக்காக ஆலோசனை கூற, சிறிது கால அவகாசத்தை முதல். அமைச்சர் எடுத்துக் கொள்ளலாம்.

இந்தக் கால அவகாசம் சூழ்நிலைக்குத் தக்கவாறு நீண்டதாகவோ, குறுகியதாகவோ இருக்கலாம். மற்ற அமைச்சர்களை முதல் அமைச்சர் தேர்ந்து எடுக்கும்பொழுது சம்பந்தப்பட்ட எல்லாச் சூழ்நிலைகளையும் அவர் பரிசீலிக்க வேண்டியது இருக்கும். ஆக, இயற்கையாகவே முதல் அமைச்சர் நியமிக்கப்பட்ட நேரத்திற்கும், அவர் ஆலோசனையின் பேரில் மற்ற அமைச்சர்கள் நியமிக்கப்படும் நேரத்திற்கும் இடையே ஒரு கால இடைவெளி ஏற்படுகிறது.

முதல் அமைச்சரை மட்டும் 10.2.85ல் நியமித்து மற்ற அமைச்சர்களை அதே தேதியில் நியமிக்காமல் விட்டு, ஆளுநர் செய்த செயல், “அரசியல் சட்டத்தைக் காப்பாற்றி, பாதுகாப்பேன்” என்று அரசியல் சட்டவிதி 159ன்படி, தான் பதவி ஏற்றபொழுது ஆளுநர் செய்த சத்தியப் பிரமாணத்தை மீறியதாகும் என்ற வாதம் முழுதும் ஏற்றுக் கொள்ள முடியாதது, குறும்புத்தனமானது, பொறுப்பற்றது ஆகும்.

இந்திய அரசாங்கத் தலைமை வழக்கறிஞர், தமிழக அரசுத் தலைமை வழக்கறிஞர், இந்திய அரசாங்கத் தலைமை வழக்கறிஞராக முன்பு பல ஆண்டுகாலமாக இருந்த பிரபல வழக்கறிஞர் லால் நாராயண சின்காவின் கருத்துக்கள் மற்றும் மத்திய-மாநில அரசுகளில் பல சந்தர்ப்பங்களில் கையாளப்பட்ட நடைமுறைகள் மூலம் இந்த முடிவுக்கு ஆதரவு கிடைத்துள்ளது.

டாக்டர் லால் நாராயண சின்கா 18.2.1985ல் எழுதியுள்ள கடிதத்தில் கூறியிருப்பதாவது:





“அரசியல் சட்ட விதி 164(1)ன் படி முதல் அமைச்சர் நியமனத்திற்கும், மற்ற அமைச்சர்கள் நியமனத்திற்கும் இடையே ஒரு இடைவெளிக்காலம் இருக்க வேண்டியது அவசியமாகிறது. வேறு வார்த்தையில் கூறுவது என்றால், வேறு எந்த அமைச்சரும் இல்லாமல் கொஞ்ச காலத்திற்கு முதல் அமைச்சர் மட்டும் தான் இருப்பார்.


163(1)ன் விதிப்படி ஒரு அமைச்சரவையும், அதன் தலைமையில் முதல் அமைச்சரும் இருப்பது, 164(1)ன்படி அமைச்சரவை நியமிக்கப்பட்டதன் விளைவாகும். 164(1)ன்படிதான் அமைச்சரவையும், அதன் தலைமையில் ஒரு முதல் அமைச்சரும் உருவாக்கப்படுகிறார்கள்.

ஆகவே, 164(1) விதியின் அடிப்படையில்தான் 163(1) விதியை நாம் கருத்தில் கொள்ள வேண்டும்.

அரசியல் சட்டம் என்பது ஒரு கற்பனை உருவில் இருப்பதல்ல, செயல்முறை வடிவில் வந்த பத்திரமாகும். ஆகவே, அதை அணுகும் பொழுது செயல்முறைக் கோணத்திலேயே அணுக வேண்டும். ஆக இருக்கிற நிலையில் அதைப் பார்க்கும்போது, முதல் அமைச்சர் நியமனத்திற்கும், மற்ற அமைச்சர்கள் நியமனத்திற்கும் இடையே காலச் சூழ்நிலைக்கு ஏற்ப சிறிதோ, பெரிதோ ஒரு கால இடைவெளி இருந்தே ஆகவேண்டும். அந்தக் கால இடைவெளி ஏற்படுவதனால் அரசியல் சட்டம் பாதிக்கப்படுவது இல்லை.

நாட்டின் பிரதமர் மட்டும் ஒரு குறிப்பிட்ட தேதியில் பதவி ஏற்பதும், மற்ற மத்திய மந்திரிகள் பிறகு ஒரு நாளில் பதவி ஏற்பதும், அதுபோல் ஒரு மாநில முதல் அமைச்சர் ஒரு குறிப்பிட்ட நாளில் பதவி ஏற்பதும், அவருடைய மற்ற அமைச்சர்கள் இன்னொரு நாளில் பதவி ஏற்பதும் பல சந்தர்ப்பங்களில் நம்நாட்டில் ஏற்கெனவே நடந்து இருக்கிறது. அதில் சிலவற்றைக் கூறவிரும்புகிறேன்.

(1) இந்தியாவின் பிரதமராக 24.3.77ல் மொரார்ஜி தேசாய் மட்டுமே பதவி ஏற்றார். அவருடன் அமைச்சர்கள் யாரும் பதவி ஏற்கவில்லை. அமைச்சர்களின் முதல் பட்டியலை மறுநாள் அறிவிப்பதாகவும், எல்லாப் பிராந்தியங்களுக்கும் பிரதிநிதித்துவம் அளிக்கும் வகையில், பிறகு அடுத்தடுத்து அமைச்சர்கள் பதவி ஏற்பார்கள் என்றும் அன்றைய தினம் தேசாய் அறிவித்தார். அமைச்சர்களில் முதல் பகுதியினர், 26.3.1977ல் பதவி ஏற்றனர்.



(2) பஞ்சாப் சட்டசபை காங்கிரஸ் தலைவராக (முதல் அமைச்சராக) 6.6.80ல் தர்பாராசிங் ஒருமனதாகத் தேர்ந்து எடுக்கப்பட்டார். அவர் 7.6.80ல் முதல் அமைச்சராகப் பதவி ஏற்றார். அமைச்சர்கள் பட்டியலை அவர் பிறகுதான் தயாரித்தார். அமைச்சர்கள் 9.6.80ல் பதவி ஏற்றனர்.

(3) ராஜஸ்தான் முதல் அமைச்சராக ஜகந்நாத் பகாடியா 6.6.80ல் பதவி ஏற்றார். அமைச்சர்கள் பட்டியலை அவர், பிறகுதான் தயாரித்தார். அமைச்சர்கள் 18.6.80ல் பதவி ஏற்றனர்.

(4) மராட்டியமுதல் அமைச்சராக ஏ.ஆர். அந்துலே 9.6.'80ல் பதவி ஏற்றார். அமைச்சர்கள் யார் யார் என்பதை அவர் பிறகுதான் முடிவு செய்தார். அதன் பிறகு அமைச்சர்கள் பதவிஏற்றனர்.

(5) ஆந்திர முதல் அமைச்சராக டி.அஞ்சைய்யா, 11.10.80ல் பதவி ஏற்றார். அமைச்சர்கள் பட்டியலை அவர் பிறகு தயாரித்தார். 16.10.80ல் அமைச்சர்கள் பதவி ஏற்றனர்.

இவைகளில் எல்லாம் அரசியல் சட்ட விதிகள் செல்லுமா செல்லாதா என்ற சந்தேகம் எப்போதும் எழுப்பப்படவேயில்லை.

மேலும் தமிழ்நாட்டில் 10.2.85 முதல் 14.2.85 வரை அரசியல் சட்டபூர்வமாக அமைக்கப்பட்ட அரசு இல்லை என்று குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

அரசியல் சட்டத்தின்படி அமைக்கப்பட்ட அரசு 10.2.85 அன்று, முதல் அமைச்சராக மாண்புமிகு டாக்டர் எம்.ஜி. இராமச்சந்திரன் நியமிக்கப்பட்டதில் இருந்தும், முதல் அமைச்சராகவும், அரசுத் தலைவராகவும் அவர் பொறுப்பேற்றதில் இருந்தும் நடைமுறைக்கு வந்துவிட்டது.

10.2.85 அன்று தமிழக அரசு பொதுத்துறை வெளியிட்ட உத்தரவு எண்.229 “நான் தமிழ்நாடு ஆளுநராகிய எஸ்.எல்.குரானா, 1985ஆம் ஆண்டு பிப்ரவரி 10ஆம் தேதி முற்பகலில் இருந்து புதிய அரசாங்கத்தை நடத்திச் செல்லும் முதல் அமைச்சராக டாக்டர் எம்.ஜி.இராமச்சந்திரனை இதன் மூலம் நியமிக்கிறேன்” என்று கூறப்பட்டுள்ளது.

எனவே, 10.2.85லிருந்து 14.2.85 வரை அரசியல் சட்டப்படி அமைக்கப்பட்ட அரசாங்கம் இல்லை என்றோ அல்லது ஒரு சூனியம் இருந்தது என்றோ சில அரசியல் கட்சிகள் கூறும் வாதம் முற்றிலும் ஆதாரமற்றது.

10.2.85லிருந்து 14.2.85 வரை நிறைவேற்றப்பட்ட நிர்வாக நடைமுறைகள் செல்லாது என்றும் சில அரசியல் கட்சிகள் குற்றஞ்சாட்டியுள்ளன. இந்த விமர்சனம் தவறானது. சரியான சட்ட மற்றும் அரசியல் சட்ட நிலைக்கு இந்த விமர்சனம் முரணாக இருக்கிறது.

10.2.85லிருந்து 14.2.85 வரை முதல் அமைச்சர் பார்த்த கோப்புகள், விதிப்படி

அவரிடம் உத்தரவுக்காகச் சமர்ப்பிக்கப்பட வேண்டியவை. எனவே முதல் அமைச்சர் பிறப்பித்த உத்தரவுகள் சட்டப்படியேதான் இருந்தன.

ஒரிசா மாநில உயர்நீதிமன்ற வழக்கில், கூறப்பட்ட உண்மைகளுக்கும் இப்போது எழுப்பப்பட்ட பிரச்சனைகளுக்கும் சம்பந்தமே இல்லை.

எனவே, முதல் அமைச்சரை 10.2.85 அன்றும், மற்ற அமைச்சர்களை 14.2.85 அன்றும் ஆளுநர் நியமித்த உணர்விலும், உத்தரவிலும் அரசியல் சட்ட விதிகள் மீறப்படவில்லை.

ஆளுநர் எடுத்த நடவடிக்கை முழுமையாகச் சட்டப் பூர்வமானதும், செல்லுபடியாவதும், அரசியல் - சட்டவிதி 159ன் கீழ் ஆளுநர் பதவி ஏற்றதற்கு ஒத்த நிலையில் உள்ளதுமாகும்.

பிரபல சட்ட நிபுணர் லால் நாராயண் சின்கா கருத்தும், முன்னோடிகளான முன்னாள் பிரதமர் மொரார்ஜி தேசாய், மற்ற மாநில முதல் அமைச்சர்களான தர்பாராசிங், அந்துலே, அஞ்சையா, ஜெகனாத் பகாடியா ஆகியோர் எடுத்த நடவடிக்கைகளும், 10.2.85 அன்று, முதல் அமைச்சராக டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரனையும் 14.2.85 அன்று மற்ற அமைச்சர்களையும் சட்டப்பூர்வமாகவும், அரசியல் சட்டப்படியும் ஆளுநர் நியமித்ததற்கு நிச்சயமாக வலுவூட்டுவதாக அமைந்துள்ளன.

எனவே, இது தொடர்பாக அரசியல் கட்சிகள் கூறிய குற்றச்சாட்டுகளெல்லாம் அரசியல் சட்ட விதிகளைத் திரித்துக் கூறியதாகும். இவை அனைத்தும் அவதூறானவை. அடிப்படையற்றவை. விஷமத்தனமானவை, அரசியல் காரணங்களால் கூறப்பட்டவை.

தமிழ்நாடு வாக்காளர்கள் கொடுத்த ஈடு செய்ய முடியாத தோல்வியின் காரணமாக ஏற்பட்ட விரக்தியால் வந்ததுதான் இந்தப் புகார்கள்.

அரசியல் கட்சிகள் கூறிய புகார்கள் அனைத்தும், உண்மையில் நடைமுறையில் இல்லாத ஒரு பிரச்சினை பற்றியே கூறப்பட்டனவாகும்.


# 'எல்காட்' கடிகாரம் விலை குறைகிறது

சென்னைத் தீவுத்திடலில் உள்ள அகில இந்திய சுற்றுலா மற்றும் தொழிற் பொருட்காட்சியில் அமைக்கப்பட்டுள்ள அரங்குகளிலேயே மிகப் பெரியது தொழில் துறை அரங்குதான். ஐயாயிரம் சதுர அடி அளவில் அமைக்கப்பட்டிருக்கும் இந்த அரங்கம், தமிழ்நாடு தொழில் துறையில் எவ்வாறெல்லாம் பெரு வளர்ச்சி பெற்றிருக்கிறது என்பதை விளக்கும் வகையில் உருவாக்கப்பட்டிருக்கிறது.

"தொழில் வளர்ச்சியில் இந்தியாவிலேயே தமிழகம் மூன்றாவது இடத்தை வகிக்கிறது! சுயவேலை வாய்ப்புத் திட்டத்திலோ அனைத்து மாநிலங்களிலும் தமிழகத்திற்கே முதலிடம்!" என்று பெருமையோடு தெரிவிக்கிறார் தொழில்வர்த்தகத் துறை இயக்குநர் திரு டி.சி.சவ்கான்.

தொழில் துறை அரங்கில் எல்காட் நிறுவனம் தயாரிக்கும் ஏழு வகைக் கடிகாரங்களும் வைக்கப்பட்டுள்ளன. இதைத் தனிப்படச் சொல்ல ஒரு சிறப்பிருக்கிறது.

எல்காட் கைக்கடிகாரங்களின் விலை பெருமளவில் குறைக்கப்பட்டுள்ளது. ரூ.520க்கு விற்கப்படும் கைக்கடிகாரம் ரூ. 350 ஆகக் குறைக்கப்படுகிறது. அதேபோல் ரூ. 250 விலையுள்ள கைக்கடிகாரம் ரூ. 160க்கு கிடைக்கும். பெண்கள் கைக்கடிகாரமோ ரூ. 150 தான்!











# இரு ரோஜா மலர்கள்



—திருமதி அருணா அப்பாசாமி

காஷ்மீர் ரோஜா மலருக்கும் தமிழக ரோஜா மலருக்கும் பல ஒற்றுமைகளும் வேற்றுமைகளும் உள்ளன. இந்த ஒற்றுமை, வேற்றுமை பற்றிய ஆராய்ச்சி படிப்பவர் உள்ளங்களைக் கவரக்கூடியதாகும்.

காஷ்மீர் ரோஜா யார், தமிழக ரோஜா யார் என்று நான் விளக்கத் தேவையில்லை. பாரதத்தின் தவப்புதல்வர் ஜவகர்லால் நேரு அவர்களையே காஷ்மீர் ரோஜா என்று நான் குறிப்பிடுகிறேன். அவர் மறைந்து பல ஆண்டுகளாயினும் நம் எவராலும் மறக்க முடியாத ஒருவர் அவர். தமிழக முதல்வர், புரட்சித்தலைவர், பொன்மனச்செம்மல் என்று மக்களால் போற்றப்படுபவர், டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களையே தமிழக ரோஜா என்று குறிப்பிடுகிறேன். தனது இனிய புன்னகையால் தமிழகத்தின் இலட்சக்கணக்கான மக்களைக் கவர்ந்துள்ள தலைவரின் பெருமை பற்றிப் பக்கங்கள் பல எழுதலாம். இந்த இரு தலைவர்களும் தங்களது தோற்றத்தினாலும் ஏற்றத்தினாலும் மக்களின் அன்பைப் பெற்றவர்கள். பண்டிட்ஜி என்று மக்களால் வாஞ்சையுடன் அழைக்கப்பட்ட நேரு அவர்கள் சென்றவிடங்களில் எல்லாம் மக்கள் கடலெனத் திரண்டனர். தனது நாட்டு மக்களைப் பார்க்க, அவர்களுடன் கலந்துரையாட அவர்கள் குறை கேட்க, குறை களைய, அல்லும் பகலும் அயராது ஊர் ஊராகச் செல்ல அவர் என்றும் தயங்கியதில்லை. வண்டிகள் செல்ல முடியாத இடங்களுக்குக் கால் கடுக்க நடந்து சென்றும், மக்களைச் சந்தித்து, புதியதோர் உலகம் செய்வோம் என்று சூளுரைத்து, ஏழை, எளிய மக்களின் கண்ணீரைத் துடைக்க தமது வாழ்க்கையையே அவர் அர்ப்பணித்தார். அநீதி கண்டவிடத்து ஆத்திரம் கொண்டார்; குழந்தைகளிடம் தனிப் பாசமும் பரிவும்காட்டி, தனக்கு எவ்வளவோ பணிகள் இருந்தும், சிறார்களிடம் பேசிப் பழகுவதில் தனி இன்பம் கண்டார்.

தமிழக முதல்வர், புரட்சித் தலைவர் மக்களின் நெஞ்சங்களைக் கொள்ளை கொண்டவர் என்பதை எவராலும் மறுக்க முடியாது. அவரது ஏற்றமிகு தோற்றத்தைக் கண்டவுடனே, மக்கள் தங்கள் சாதி, சமய வேறுபாடுகளை மறந்து, பாலர்கள், இளைஞர்கள், முதியவர்கள் அனைவரும் மகிழ்ச்சிமிகுதியால், கரவொலி செய்வது சாதாரணமான காட்சியாகும். எங்கள் எம்.ஜி.ஆர். துயர் துடைக்க வந்த எங்கள் புரட்சித் தலைவர், எங்கள் வாத்தியார் என்றெல்லாம் அவரை அழைத்து மக்கள் தங்கள் ஈடுபாட்டை வெளிப்படுத்துகின்றனர். அவரைக் கண்ட மகிழ்ச்சியில், மக்கள் தங்களை மறந்து, ஒருவரை ஒருவர் முந்திக் கொண்டு அவர் காலைத் தொட்டு வணங்கத் துடிக்கும் காட்சி நெஞ்சை உருக்குவதாகும்.

கடல் அலை போன்று வந்து குவிகின்ற மக்கள் திரளைக்

## பிரமிடுகள் (Pyramids)

எகிப்து நாட்டில் நைல் நதியின் மேற்குக் கரையில் மெம்பிஸ் அருகே உள்ள மலை போன்ற பிரம்மாண்டமான பிரமிடுகள் உலகப் புகழ் பெற்றவையாகும். இவை கி.மு. 2690 முதல் 2560 வரையிலான காலகட்டத்தில் கட்டப்பட்டவை. இந்த பிரமிட் கல்லறைகளில்தான் எகிப்தின் [illegible]

[illegible]

கட்டுப்படுத்துவது காவலருக்கு ஒரு பெரும் பிரச்சினை. தங்கள் அருந்தலைவர் நின்று, தங்களை விசாரித்து, ஒரு சொல் பேசி, தங்கள் குறைகளை நேரில் கேட்டு ஆறுதல் கூறும்போது அவர்கள் உள்ளம் நெகிழ்ந்து அவரிடம் நெஞ்சை பறிகொடுக்கின்றனர். தம்மிடம் பேச தடுமாறி முன் வரும் முதியவரை கண்டால், தயங்காது, பொறுமையுடன் அவர்களுடன் உரையாட அவர் எந்நாளும் தயங்கியதில்லை. அத்தகைய முதியவர்களை, மகளிரைத் தடுத்து நிறுத்தும் காவலரைக் கடிந்து கொள்ளவும் அவர் தயங்குவதில்லை.

முதியவரோ, மூதாட்டியோ தன் கால்களில் விழுந்து கதறி அழுது தம் துன்பங்களை எடுத்துரைக்கும்போது, அவரும் கண்ணீர் விடுகிறார். உடனடியாக அவர்கள் துன்பங்களைய ஆவன செய்கிறார். தங்கள் தலைவரை ஒரு முறை கண் குளிரப் பார்க்க, தங்கள் கனவுகளை நனவாக்க வந்துள்ள, ஏழை எளிய மக்களுக்கு இழைக்கப்படும் அநீதியை அகற்றி அவர்கள் வறுமையைப் போக்கி, அவர்களுக்கு ஒளிமயமான எதிர்காலத்தை உருவாக்கி அரசியல் சதித்துள்ள நீதி தேவனை ஒரு முறை பார்க்க, தலைமைச் செயலகக் கட்டடத்திற்கு வெளியே திரண்டு நிற்கும் மக்களை நான் பார்த்து வியந்ததுண்டு. அவர்கள் நம்பிக்கை வீண் போகவில்லை. ஏழைகளுடன் ஏழையாக, பாமரருடன் ஒருவராகக் கலந்து உண்பதில் அவர் பெருமகிழ்ச்சி அடைகிறார். முதலமைச்சர் சத்துணவுத் திட்டம் என்று மக்களிடம் பிரபலமாகியுள்ள திட்டம் வெளிநாட்டு மக்களாலும், ஏன், அரசியலில் அவரை எதிர்ப்பவர்களாலுமே போற்றப்பட்டுள்ளது.

நேரு அவர்கள் போன்று, எம்.ஜி.ஆர். அவர்கள் கனவுலகில் சஞ்சரிப்பவர்; இலட்சியவாதி, ஏழை மக்களை வறுமையினின்றும் விடுவிக்க வேண்டும் அவர்களின் அறியாமையை, பகுத்தறிவின்மையைப் போக்க வேண்டும், சாதி சமயமற்ற சமுதாயத்தைப் படைக்க வேண்டும் ஆகிய உன்னதமான பல இலட்சியங்களைக் கொண்டவர்கள். அவர்களை நாத்திகர்கள் என்று சொல்ல முடியாத போதிலும் தொழிற் பெருக்கம், வேலையின்மையை அகற்றுதல், தீண்டாமை ஒழிப்பு, ஏழை எளிய மக்களின் முன்னேற்றம், எல்லாவற்றையும் விட நாட்டின் வளமிகுந்த எதிர்காலத்தை உருவாக்குதல் ஆகிய கொள்கைகளை அவர்கள் கோயில்களாக மதித்தனர்.

நேரு அவர்களைப்போன்று எம்.ஜி.ஆர் அவர்கள் அமைதியான, இனிமையான, புன்னகையுடன் கூடிய தோற்றம் உடையவர். அதே சமயத்தில் அவருக்குக் கோபம் வந்துவிடின், அது தீக்கனல் போன்றது. நேருஜி போன்று அநீதியைக் கண்டால் கொதித்தெழுபவர் எம்.ஜி.ஆர். நேருஜிக்குத் தமது நாடும் கட்சியும் தான் முக்கியம். அதே போன்று எம்.ஜி.ஆர் அவர்களுக்குத் தமிழ் நாடும் தமது கட்சியும்தான் சிறப்புடையதாகும். நேருஜியைப் போன்று, எம்.ஜி.ஆர். அவர்களும் தேசியவாதி, தேசிய ஒற்றுமைக்காகவும், ஒருமைப்பாட்டிற்காகவும் பாடுபடுபவர்.

உருவத்திலும் தோற்றத்திலும் கூட இருவருக்கும் ஒற்றுமை. ரோஜா இதழ் வண்ணமும், ஏற்றமிகு தோற்றமும், ஏறு நடையும் கொண்டவர்கள். நண்பர்களுக்காக உயிரைக் கூடத் தியாகம் செய்யத் தயங்காதவர்கள்.

இந்த இருபெருந் தலைவர்களிடையே வேற்றுமையும் உண்டு. நேருஜி அவர்கள் செல்வத்திலேயே பிறந்தவர்; வளர்ந்தவர்; வறுமையின் கொடுமையை அறியாதவர். நம் தலைவரோ சாதாரண குடும்பத்தில் பிறந்தவர்; வறுமையின் கொடுமையை அறிந்தவர்; ஏழ்மையின் துயரத்தைத் துய்த்தவர். நேருஜிக்குக் காந்தியடிகள், ராஜேந்திர பிரசாத், ராஜாஜி போன்ற பெருந்தலைவர்களின் ஆதரவு முதலிலிருந்தே இருந்தது. நமது தலைவர் அரசியலில் மக்களின் ஆதரவுடன் நுழைந்தவர். நேரு அவர்களுக்கு நிர்வாகத்தில் சர்தார் வல்லபாய் பட்டேல், தேசாய் போன்ற திறமையாளர்களின் உதவி இருந்தது. நமது தலைவர் அரசியலில் காலடி வைக்கும் நாள் வரை வெள்ளித்திரையில் உழைத்தவர். அரசியலில் தலைமை ஏற்றபின்னரும் மற்றவர்களுக்கு இவர் ஆலோசனை கூற வேண்டிய நிலையும், எல்லா பொறுப்புகளையும் தாமே ஏற்றுச் செயல்பட வேண்டிய அவசியமும் ஏற்பட்டது. அரசியலிலே உழன்று வந்தவர்கள் கூட வியக்கும் வண்ணம் இவர் திறம்படச் செயலாற்றி, அரசியலில் தம்மை எதிர்த்தவர்கள் கூட பாராட்டும் பெருமையைப் பெற்றுள்ளார்.



# அரசு ஊழியர்களுக்கு இடைக்கால நிவாரணம்

தமிழ்நாடு அரசுப் பணியாளர்களின் ஊதிய விகிதங்கள் பற்றிப் பரிந்துரைகள் வழங்க தமிழ்நாடு அரசு, நான்காவது ஊதியக் குழுவை நியமனம் செய்தது. அதன் அறிக்கை கிடைக்கும் வரை இடைக்கால நிவாரணம் வழங்க வேண்டும் என்று பல்வேறு அரசுப் பணியாளர்களின் சங்கங்கள் அரசுக்கு வேண்டுகோள் விடுத்தன.

வேண்டுகோளை ஏற்ற அரசு (தன்னுடைய நிதித்துறை ஆணை எண். 33, நாள்: 13.1.85 மூலம்) அடிப்படை ஊதியம் ரூ.350க்குக் குறைவாகப் பெறுகிறவர்களுக்கு ரூ. 200ம், ரூ. 350க்கு மேல் பெறுகிறவர்களுக்கு ரூ. 300ம் இடைக்கால நிவாரண முழுத் தொகையாக வழங்க ஆணை பிறப்பித்து, நிவாரணத் தொகையை வழங்கியது.

இவ்வாறு வழங்கப்பட்ட இடைக்கால நிவாரணத் தொகையில் 50% தொகை, ஊதியக் குழுப் பரிந்துரையின் மூலம் அரசு ஊழியர் பெறவிருக்கும் ஊதிய மாற்றத்தால் ஏற்படும் நிலுவைத் தொகையில் ஈடுகட்டப்படும்.

இதன் வாயிலாக 8 லட்சம் ஊழியர்கள் பயன்பெறுகிறார்கள். இதனால் அரசுக்கு ரூ.22 கோடி ரூபாய் கூடுதல் செலவு ஆகிறது.

## 2 தவணை அகவிலைப்படி

அண்மையில் மத்திய அரசு ஊழியர்களுக்கு அளித்ததுபோல் தங்களுக்கும் அகவிலைப்படி உயர்த்தப்பட வேண்டும் என்று தமிழக அரசு ஊழியர்கள் கோரிக்கை விடுத்து வந்தனர்.

தமிழக அரசு ஊழியர்களுக்கு 1-1-1985 அன்று சம்பள உயர்வு அறிவிக்கப்பட்டது. அவர்களுக்கு 13 முதல் 60 ரூபாய் வரை அகவிலைப்படி உயர்வு அளிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் குறைந்தபட்ச அகவிலைப்படி 181 ரூபாயிலிருந்து 194 ரூபாய் ஆகும். அதிகபட்ச அகவிலைப்படி 870 ரூபாயிலிருந்து 930 ரூபாயாக உயர்கிறது. இதனால் 8 லட்சம் ஊழியர்கள் பயன் பெறுகிறார்கள்.

இதில் முதல் தவணை டிசம்பர் 1-ஆம் தேதி முதலும், 2-வது தவணை மார்ச் மாதம் 1-ஆம் தேதியிலிருந்தும் அமலுக்கு வரும். இவை 30வது 31வது தவணைகளாகும்.

இந்தச் சம்பள உயர்வு காரணமாகத் தமிழக அரசுக்கு நடப்பு ஆண்டில் 3 கோடி ரூபாய் அதிகமாகச் செலவாகும்.

மொத்தத்தில் ஆண்டுக்கு 24 கோடி ரூபாய் அளவில் அகவிலைப்படி உயர்வு அளிக்கப்பட்டுள்ளது.

உள்ளாட்சித் துறையைச் சேர்ந்த ஆசிரியர்கள், ஆசிரியர் அல்லாத ஊழியர்கள் மற்றும் அரசு மானியம் பெறும் நிறுவனங்களின் ஊழியர்களுக்கும் இந்த அகவிலைப்படி அளிக்கப்படும்.

நேரு அவர்கள் போன்று குழந்தையுள்ளம் கொண்டவர் எம்.ஜி.ஆர். அவர்கள். குழந்தை போன்ற உள்ளத்தையும், சீரிய அரசியல் சிந்தனையும் கொண்டு ஆட்சிப்பொறுப் பேற்று, செவ்வையான நிர்வாகத்தை உருவாக்கியவர். குழப்பத்தை உருவாக்கி ஆட்சியைக் கவிழ்ப்பதிலேயே நாள் முழுவதையும் செலுத்துபவர்களிடையே நிதானம் இழக்காது செயல்படுவது என்பது அவ்வளவு எளிதல்ல. அவருக்கு எதிராக யார் என்ன சொன்ன போதிலும், இரண்டு முறை அரசை வழி நடத்திச் செல்வதில் வெற்றி கண்டவர் என்பதை மறுக்க முடியாது.

நேருவுக்கும் இவருக்கும் வேறு ஒற்றுமைகளும் உண்டு. இருவரும் உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசாதவர்கள். மற்றவர்களைப் புகழ்ந்து பேசி காரியம் சாதிக்க வேண்டும் என்ற எண்ணமில்லாதவர்கள். தன்னம்பிக்கையும் உறுதியான கொள்கையும் தளராத முயற்சியும் கொண்டவர்கள். எதிர்ப்புகளுக்கு அடிபணியாதவர்கள், மக்களின் நம்பிக்கையைப்பெற்றவர்கள்.

ஆயிரக்கணக்கான மைல்களுக்கு அப்பால் உள்ள நாட்டில் ஒரு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுக்கொண்டும் தமது கட்சிக்கு மாபெரும் வெற்றி தேடித்தந்துள்ள இப் பெருந்தலைவர் பெருமையை வெளிநாட்டு மக்களும் உணர்ந்துள்ளார்கள் என்று சொன்னால் அது மிகையாகாது.



# இந்தியாவுக்கு வலிமையான வழிகாட்டி

**இளைஞர் ஆண்டு**

ஸ்வாமி விவேகானந்தர் சிறந்த மதச் சீர்திருத்தவாதி மட்டும் அல்லர், சிறந்த சொற்பொழிவாளர்.

அவரது போதனைகள் யதார்த்தமானவை; தினசரி வாழ்க்கைப் பிரச்சினைகள் பற்றியவை.

1863ஆம் ஆண்டு ஜனவரி 12ம் நாள் கல்கத்தாவில் இந்துக் குடும்பம் ஒன்றில் விவேகானந்தர் பிறந்தார். அவரது துவக்க காலப் பெயர் நரேந்திர தத்தா.

கல்கத்தாவில் ஸ்காட்டிஸ் சர்ச் கல்லூரியில் படிக்கும்பொழுது தத்துவத்தில் அவருக்கு நாட்டம் ஏற்பட்டது. மாணவராக இருக்கும்பொழுது பிரம சமாஜத்தில் சேர்ந்தார்.

தொடர்ந்து பேரறிவினைத் தேடி வந்த விவேகானந்தருக்கு ராமகிருஷ்ண பரமஹம்சரைச் சந்திக்கும் வாய்ப்பு ஏற்பட்டது. கேள்விக் கணைகளால் அவரைத் துளைத்தெடுத்தார். அவர் அளித்த பதில்களில் திருப்தியடைந்து அவருடைய உண்மையான சீடரானார். தனக்காகக் கடவுளைத் தேடும் போக்கினை ராமகிருஷ்ணர் கேலி செய்தார். ஏழை மக்களின் நன்மையைப் பற்றிக்கவலைப்படாமல் அவர்களின் வாழ்க்கையை உயர்த்துவதற்கு எதுவுமே செய்யாதவரை சந்நியாசி ஒருவரின் வாழ்க்கையில் அர்த்தமே இல்லை என்று அவர் கூறினார்.

1886ல் நரேந்திரன், விவேகானந்தர் என்று பெயர் சூட்டிக்கொண்டார். பர்னாகூரில் மடம் ஒன்றை நிறுவினார். விவேகானந்தர் துறவியாக உலகமெங்கும் சுற்றினார். ஏழைகளுக்கும் பணக்காரர்களுக்குமிடையில் பெரும் பள்ளம் இருப்பதையும், மக்கள் சுரண்டப்படுவதையும் உணர்ந்தார். இந்தச் சுரண்டல் உடனடியாக நிறுத்தப்படவேண்டுமென்று அவர் உணர்ந்தார். அப்பொழுதுதான் மதம், பசிக்கும் வயிறுகளுக்காக இல்லை என்பதைக் கண்டுகொண்டார். தொடர்ந்து 2 ஆண்டுகள் தன்னுடைய மடத்தை நிறுவும் பணியில் ஈடுபட்டார். பின்னர் இருமுறை இந்தியாவின் பல பகுதிகளுக்கும் சென்றுவந்தார். 2வது முறை சுற்றுப்பயணம் மேற்கொண்டபோது அவர் தமிழ்நாட்டில் மதுரை-ராமேஸ்வரம் ஆகிய இடங்களுக்குச் சென்றார். சுதந்திரப் போராட்ட இயக்கத்தின் வன்முறைகள் பயன்படுத்தப்படுவதை விவேகானந்தர் ஏற்றுக் கொள்ளவில்லை. ஆனால் உடல்நலன் போற்றப்படவேண்டும் என்று வலியுறுத்தியிருக்கிறார். ஒருமுறை ''நம்முடைய மதமாகிய ராணுவத்தில் முன்னோடிப் பிரிவு தேவை. எனவே இளைஞர்களே! உங்கள் தசைகளுக்குப் பயிற்சி கொடுங்கள். துறவிகள் வேண்டுமானால் பட்டினி கிடக்கட்டும். தொழிலாளர்களுக்கு உறுதியான உடற்கட்டுதேவை. இரும்பு போன்ற தசைகளும் உருக்கு போன்ற நரம்புகளும் வேண்டும்'' என்று கூறினார்.

> "நீ தைரியசாலியே! பெருமை கொள்! தைரியமாக இரு! நீ இந்தியன் எனபதில் பெருமைகொள்! நீ இந்தியன் என்பதையும் ஒவ்வொரு இந்தியனும் எனது சகோதரன் என்றும் உரிமை கொண்டாடு". இது விவேகானந்தரின் வீர வசனம். 1985-ஆம் ஆண்டு சர்வதேச இளைஞர் ஆண்டாகக் கடைப்பிடிக்கப்படுகிறது. விவேகானந்தர் வாழ்க்கையும், வரலாறும் நம்து இன்னய தலைமுறைக்குப் பெரிதும் உதவும். விவேகானந்தர் பிறந்தநாள் ஜனவரி 12 ஆகும்.

''நாட்டில் மூன்றில் ஒரு பங்கு துயரங்களுக்கு நாம் நோஞ்சான்களாக இருப்பதே காரணம்'' என்று கூறியுள்ளார். ''நாம் சோம்பேறிகள். நம்மால் வேலை செய்ய முடியாது. நமக்கு இப்பொழுது துடிப்பான ரத்தம் தேவை. நரம்புகள் வலிமைபெறவேண்டும்'' என்று விவேகானந்தர் அழைப்பு விடுத்திருக்கிறார்

கீதை படிப்பதைவிட கால்பந்துவிளையாடுவதன் மூலம் சொர்க்கத்தை அடையலாம் என்று சொல்லியிருக்கிறார்.

இளைய தலைமுறையின் சக்தி தவறான வழிகளில் செலவிடப்படக்கூடாது என்பதிலும் விவேகானந்தர் கவனமாக இருந்தார்.

1893ல் செப்டம்பர் திங்களில், விவேகானந்தர் சிகாகோ சென்றார். அங்கு மதங்களின் பாராளுமன்றக் கூட்டத்தில் பேசினார்.

அமெரிக்காவிலும், ஐரோப்பிய நாடுகளிலும்சுற்றுப்பயணம் செய்ததன் பயனாக, விவேகானந்தர் ஒரு விஷயத்தைத் தெளிவாக உணர்ந்து கொண்டார். கிழக்கிந்திய நாடுகளில், பண்பாடு மேல்நாடுகளின் பண்பாடு மேல்நாடுகளின் பொருளாதார உற்பத்தியோடு சேராத பட்சத்தில் உங்களுக்கு நன்மையில்லை என்பதுதான் அவர் கண்ட முடிவு.

நாட்டு மக்களுக்குச் சேவை செய்ய 1897ல் ராமகிருஷ்ண மிஷனை விவேகானந்தர் நிறுவினார்.

விவேகானந்தர் சிறப்புமிக்க சொற்பொழிவாளர். அமெரிக்கா, இங்கிலாந்து, ஐரோப்பா ஆகிய இடங்களில் அவர் சொற்பொழிவாற்றிய இடங்களில் எல்லாம் பல லட்சக்கணக்கான மக்கள் அவருடைய உரையைக் கைதட்டி ஆரவாரம் செய்து வரவேற்றனர்.

எளிமை, மக்கள் பயன்படுத்தும் வார்த்தைகள், உணர்வுக் கலப்பு ஆகியவைதான் அவரது சொற்பொழிவின் ரகசியம்.

விவேகானந்தரின் சொற்பொழிவுத் திறமையைக் கவியரசு தாகூர் வியந்து பாராட்டியிருக்கிறார். 1886ல் சென்னையில் 'பிரபுத்த பாரத்' என்ற பத்திரிகையை விவேகானந்தர் துவக்கினார். இந்தப் பத்திரிகை 1908ல் நிறுத்தப்பட்டது. பின்னர் மறுபடியும் உத்திரபிரதேசத்தில் இருந்து துவக்கப்பட்டது. 1899ல்லிருந்து 'உத்போதன்' என்ற வங்காளி மொழிப் பத்திரிகையை விவேகானந்தர் நடத்தி வந்தார். 1902 ஜூலை 4ஆம் தேதி விவேகானந்தர் காலமானார். அவருடைய முழக்கங்கள் இன்றும் பல லட்சம் மக்களுக்கு வழிகாட்டுகின்றன.


---


வெளிநாடுகளில் இந்தியத்தொழிலாளர்களுக்கான வேலை வாய்ப்பு பற்றிய விளம்பரங்களை நாம் அடிக்கடி செய்தித்தாள்களில் பார்க்கிறோம். இது சம்பந்தமாக அரசு சில விதிமுறைகளை வெளியிட்டுள்ளது.

வெளிநாட்டு வேலைகளுக்காக ஆட்களை எடுப்பதற்கு மத்தியத் தொழிலாளர் நலத்துறை அங்கீகாரம் அளிக்கும் பதிவுச் சான்றிதழ் பெற்ற நியமன ஏஜெண்டுகள் மட்டுமே அத்தகைய காலி இடங்கள் குறித்து விளம்பரம் செய்யலாம் என்று அதிகாரப் பூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

வெளிநாடுகளில் இந்தியத் தொழிலாளர்களை நியமிப்பதற்கு அனுமதி அளிக்கப்பட்ட முதலாளிகளும் இத்தகைய விளம்பரங்களை ஏற்றுக் கொள்வதற்கு முன், இந்தியத் தொழிலாளர் நல அமைச்சகம் அல்லது சம்பந்தப்பட்ட நாட்டிலுள்ள இந்தியத் தூதரகம் அளித்த பதிவுச் சான்றுகளைக் கேட்குமாறு அனைத்துப் பத்திரிகைகள் மற்றும் விளம்பர ஏஜென்சிகளுக்கு யோசனை கூறப்பட்டுள்ளது.

## வெளிநாட்டில் வேலை பற்றி...





## வேம்பின் மகத்துவம்!

பலமோசமான தோல் நோய்களுக்கும், குடலில் வாழும் கொக்கிப்புழு, நாடாப்புழு போன்ற ஒட்டுண்ணிகளுக்கும் சாதாரண வேம்பை மருந்தாகப் பயன்படுத்தி வெற்றி கண்டிருப்பதாக லக்னோவிலுள்ள ஜார்ஜ் மன்னர் மருத்துவக் கல்லூரியின் மருந்தியல் துறையினர் கூறியுள்ளனர்.

காய்ந்த வேப்பிலையிலிருந்து தயாரிக்கப்பட்ட ஒரு கசாயம் சொறி, படை, சிரங்கு போன்ற தோல் நோய்களுக்குக் குணமளிப்பதாக அந்தத் துறையின் இயக்குநர் டாக்டர் நரேந்திரசிங் கூறினார்.

காய்ந்த வேப்பிலையிலிருந்து தயாரிக்கப்பட்ட ஒரு மருந்தை மூன்று நான்கு நாட்கள் நோயுள்ள இடத்தில் தடவியதில் நிரந்தர குணம் ஏற்பட்டது, நீடித்த நோய்கள் இரண்டு வாரத்திற்குள் குணமடைந்தன.

அந்தக் கசாயத்தை ''காப்ஸ்யூல்'' வடிவில் தயாரித்துச் சாப்பிட்டால் ஒரே முறையிலேயே குடலில் வாழும் நாடாப் புழுக்கள் இறந்து போவதாக டாக்டர் சிங் தெரிவித்தார்.

# உழைப்பின் வாரா உறுதிகள் உளவோ...!

எம். பிரான்சிஸ்
முதல்வர் கூடுதல் ஊரக வளர்ச்சி இயக்குநர்,
மாநில ஊரக வளர்ச்சி பயிற்சி நிறுவனம்,
பவானி சாகர்

**பெ**ற்றோர்களின் ஏளனத்திற்கும் கண்டனத்திற்கும் ஆளாக்கப்பட்ட இளைஞர் ஒருவர் சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் பயிற்சி பெற்றதன் விளைவாக வாழ்க்கையில் முன்னேறி வருவதை விளக்குகிறது இந்தக் கட்டுரை.

இளைஞர் ஆண்டு

அவர் ஓர் இளைஞர்; 29 வயது நிறைந்தவர். சி.வெங்கடாசலம் என்பது அவரது பெயர். இன்னும் திருமணமாகவில்லை. இவர் பெரியார் மாவட்டம் ஊத்துக்குளி ஊராட்சி ஒன்றியப் பகுதிக்குட்பட்ட சின்னையம்பாளையம் கிராமத்தில் வேளாண் தொழிலை நம்பி வாழும் வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ள குடும்பத்தைச் சேர்ந்தவர். குடும்பத்தில் மொத்தம் ஆறு பேர் உள்ளனர்.

ஏழாவது வகுப்பு படித்துக்கொண்டிருக்கும் போது பெற்றோர்களின் விருப்பத்திற்கு மாறாக விளையாட்டாகப் படிப்பை நிறுத்திவிட்டதாகக் கூறும் அவர் படிப்பை நிறுத்திவிட்ட பிறகு பால்காய்ச்சும் வேலையில் வாரத்திற்கு 7 ரூபாய் கூலியாகவும், பணிமனை ஒன்றில் மாதம் 90 ரூபாய் மட்டும் ஊதியமாகவும் பெற்று, வாழ்க்கைச் செலவைச் சிறிதும் சரிக்கட்ட முடியாத அளவிற்குச் சிரமப்பட்டார். மோட்டாருக்குக் காயில் சுற்றும் வேலையை கற்றுக் கொள்வதற்கு எவ்வளவோ முயன்றும் எந்தப் பணிமனையிலும் கற்றுக் கொள்ள முடியவில்லை. அந்த வேலையிலிருந்து பின்னால் நின்றுவிட்ட இவர் தினம் 4 ரூபாய் கூலி அடிப்படையில் ஈரோடு சென்று ஒரு பணிமனையில் பல வேலைகளைச் செய்ய நேர்ந்தும், அங்குகூட காயில் பிரிக்கத்தான் சந்தர்ப்பம் கிடைத்தது. காயில் சுற்றச் சொல்லித்தருவது மறுக்கப்பட்டது. இதனால் அவர் மிகவும் வேதனையடைந்தார். தினமும் கிடைக்கும் 4 ரூபாயைக் கொண்டு ஒரு வேளை உணவு உண்ணக்கூட முடியாதபடி பல நாட்கள் பட்டினி கிடந்தார். இதனால் இரவு முழுவதும் 10 ரூபாய் சம்பளத்தில் சம்மட்டி அடிக்கும் வேலை பார்க்க வேண்டிய கட்டாயத்திற்கு ஆளானார். காயில் கட்டுவதைப் பழகிக் கொள்ள முடியவில்லையே என்ற ஏக்கம் இவரை வாட்டி வதைத்தது. வேலையை விட்டுவிட்டு ஏமாற்றத்துடன் ஊர் திரும்பிய இவர், பின்னால், கூலி வேலையாக விசைத்தறி ஓட்டி வந்தார்.



மோட்டார் பழுதுவேலை பார்க்க விரும்பிய இவருக்குப் பெற்றோர்கள் பண உதவி எதுவும் செய்யமறுத்து விட்டனர். முயற்சியில் தளராத இவருக்கு இரு நண்பர்கள் ரூ. 1000 கடன் கொடுத்து உதவ முன்வரவே இவர் சைக்கிள் ஒன்றும் சில கருவிகளும் விலைக்கு வாங்கி வெள்ளிரவெளி என்ற இடத்தில் மாத வாடகை ரூபாய் 20க்கு ஒரு கடையை அமர்த்தி சிறு சிறு மோட்டார் சம்பந்தமான வேலைகளைச் செய்து கொடுத்துவந்தார். காயில் சுற்றும் வேலையை மற்றும் வேறு ஒருவர் உதவி கொண்டு பல சிரமங்களுடன்செய்து கொடுத்து வந்தார். அவ்வூர் ஊர்நலஊழியரின் பழக்கம் அவருக்கு ஏற்பட்டபோது தான் அவரது வாழ்வில் ஒரு புதிய திருப்பம் காண முடிந்தது. அரசு நடத்தும் சுய வேலைவாய்ப்புப் பயிற்சிக்கு அவரைத் தேர்வு செய்ய ஏற்பாடு செய்தனர். ஊர் நல ஊழியர் அதிலும் சோதனைகாத்திருந்தது. குறிப்பிட்ட பயிற்சியாளர் பட்டியலில் இவரது பெயர் இடம் பெறவில்லை. இதற்காக வேதனைப்பட்ட அவர் மற்றொருவரின் உதவியுடன் பவானிசாகர் பயிற்சி நிலைய முதல்வரை அணுகிப் பயிற்சி பெற இடம் தரவேண்டுமென மன்றாடிக் கேட்டுக்கொண்டார். இவரது ஏழ்மை நிலையை உணர்ந்தார் முதல்வர். பயிற்சிக்கு வந்துவிட்டு நின்று விட்ட ஒருவரது இடத்தில் இவரைச்சேர்த்துக்கொண்டார். அதனால் மட்டற்ற மகிழ்ச்சியும் நம்பிக்கையும் இவருக்கு ஏற்பட்டது.

பயிற்சியில் சேர்வதற்கு முன்னர் நடத்தப்பட்ட பாடங்களையெல்லாம் இரண்டே நாட்களில் நோட்டில் எழுதித் தெரிந்துகொண்டார். படிப்பில் அத்தனை ஆர்வமும் அக்கறையும் கொண்ட அவர் முதல் தர மாணவராகத் தேர்ச்சி பெற்றார். பயிற்சி முடிவில், ரூ.250 மதிப்புள்ள கருவிகள் இவருக்கு அளிக்கப்பட்டன.

காலை 5.00 முதல் இரவு 12.00 மணிவரை கடுமையாக உழைத்த இவர் பயிற்சிக் காலத்தில் அஞ்சல் வழிக்கல்வி முறையில் 9ஆம் வகுப்புத் தேர்விலும் தேர்ச்சி பெற்றார். இதனால் இவரது விருப்பங்கள் நிறைவேறின.

பயிற்சி முடிந்து ஆசிரியர்களின் நல்லாசியுடன் வீடு திரும்பிய இவர், வாடகைக் கட்டடமொன்றில் தொழிலை மீண்டும் தொடங்கி நடத்திவருகிறார். இவரால் இப்போது ஒயரிங் செய்தல், மோட்டார் பழுதுநீக்குதல், காயில் சுற்றுதல் போன்ற எல்லா வேலைகளையும் பிறர் துயவின்றித் திறமையாகச் செய்ய முடிகிறது. வருமானத்தை ஆண்டுதோறும் பெருக்கிக்கொள்ளும் வகையில் வளர்ந்து வரும் இவர் வறுமைக்கோட்டிற்கு மேல் தன் அயராத உழைப்பால் உயர்த்திக்கொண்டுவிட்டார்.

சுய வேலைப்பயிற்சி பெற்றும் தொழில் செய்யாமல் சோம்பி இருக்கும் பலரை இவர் சாடுகிறார். தொழிலுக்கான கருவி வசதிகளை ஏற்படுத்திக்கொண்டு பலருக்கு வேலை கொடுக்க வேண்டும் என்ற ஆசையின் மேலீட்டால் தொடர்ந்து உழைத்து வரும் இவர், அரசு அளித்த பயிற்சியை வாழ்க்கையில் திருப்பமாகவும் கிடைத்ததற்கரிய பெரும் வாய்ப்பாகவும் கருதுகிறார்.

''ஆசிரியர்கள் எனபால் காட்டிய அன்பும் பாசமும் பசுமையான நினைவுகளாக இருந்துவருகின்றன'' எனக் கூறும் இவர் பயிற்சி நிலையத்தோடுகடிதத் தொடர்பும் வைத்துக்கொண்டிருக்கிறார்.

அரசின் சுயவேலைவாய்ப்புப் பயிற்சி திட்டத்தின் கீழ் இதுபோன்ற இளைஞர்கள் பலர் நல் வாழ்வு பெற்றுவருகின்றனர். இக்கால இளைஞர்களுக்கு முன் மாதிரியாகவும்; இலக்கணமாகவும் திகழ்கிறார் வெங்கடாசலம்.




## வாழைப்பழம் உடலுக்கு நல்லது

"**தி**னமும் இரண்டு வாழைப்பழங்கள் சாப்பிட்டால மருத்துவரிடம் செல்ல வேண்டியது இருக்காது" என்று மொரதாபாத்திலுள்ள டாக்டர் ஆர் பி. சிங் கூறியுள்ளார். அவர் வாழைப்பழம், ஆரஞ்சுப்பழம் ஆகிய பழங்கள் குறித்து நீண்டகாலமாக ஆராய்ச்சி செய்துள்ளார்.

"தினமும் இரண்டு வாழைப்பழங்கள் சாப்பிட்டு வந்தால் ரத்த அழுத்தம் இயல்பாக வைக்கப்படும். வாழைப் பழத்தில் சோடியமும், கால்சியமும் மிகக் குறைவாக இருக்கின்றன. பொட்டாசியமும், மேக்னீசியமும் அதிக அளவில் இருக்கின்றன. இது உடலின் சமநிலையைப் பாது காக்க உதவும். தினமும் இரண்டு வாழைப் பழங்கள் சாப்பிட்டு வந்த நோயாளிகளின் ரத்த அழுத்தத்தின் நிலையில் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது" என்று அவர் கூறியுள்ளார்.

# உத்தம தர்மம்



**மகாகவி பாரதியார்**

நமது தேசத்தின் மேல் கடற்கரை நெடுக ஒரு பெரும் மலைத்தொடர் பரவி இருக்கிறது. அந்த மலைத்தொடரின் தென் பாகத்திற்குப் பொதிய மாமலை என்று பெயர். அந்த மலையில் பெரிய காடுகள் இருக்கின்றன. அக்காடுகளில் பலவிதமான மிருகங்கள் கூட்டம் கூட்டமாய்ச் சஞ்சரிக்கின்றன. அதில் ஒரு காட்டில் வானரங்கள் மிகுதியாய் இருக்கின்றன. நாங்கள் ஒரு நாள் அந்தக் காட்டின் வழியாய்ப் போனோம். அங்குள்ள வானரங்கள் கூட்டம் கூட்டமாய்க் கூடிக்கொண்டு எப்பொழுதும் இருப்பது போல் இல்லாமல் கலக்கங்கொண்டு கத்திக்கொண்டிருந்தன. நாங்கள் அதென்னவென்று பார்க்க ஆவலாய் இருந்தோம். அங்கும் இங்கும் சுற்றிப் பார்த்த பொழுது ஒரு பெரிய மலைப்பாம்பு எங்கள் கண்களுக்குப் புலப்பட்டது. அப்பாம்பானது ஒரு பெரிய குரங்கை வாயில் கவ்விக்கொண்டிருந்தது. அந்தப் பாம்பின் வாய்ப்பட்ட வானரம் மிகவும் பரிதாபமான மாதிரியாகக் கூவிக்கொண்டிருந்தது. அதன் கூச்சல்களைக் கேட்டுக் கொண்டிருந்த குரங்குகள் கோபாவேசங் கொண்டிருந்தன. இன்னவிதம் தம் இனத்தானை உடனே மீட்கலாமென்று அவைகள் ஆலோசிக்கும் முன்னமே அப்பெரும் பாம்பு அந்தக் குரங்கை விழுங்கிவிட்டது.

நாங்கள், 'இனிமேல் வானரங்கள் செய்வதற்கு ஒன்றுமில்லை; அவற்றின் கூட்டத்தைச் சேர்ந்த ஒரு குரங்கு மலைப் பாம்பிற்கு இரையாய் விட்டபடியால் அவைகள் மன வருத்தத்தோடு சும்மாயிருந்து விடு'மென்று எண்ணிக்கொண்டு போய் விட்டோம். கொஞ்சநேரம் அக்காட்டின் வினோதங்களைப் பார்த்துவிட்டு அதே வழியாய்த் திரும்பிவந்தோம். வரும் வழிக்குச் சமீபத்தில் 50 அல்லது 60 வானரங்கள் ஒன்றாய்க்கூடி ஒரு பெரிய கல்லைப் புரட்டிக் கொண்டிருந்தன. நாங்கள் அவை எதற்காக அப்படிச் செய்து கொண்டிருந்தனவென்று பார்க்க ஆவல் கொண்டிருந்தபடியால், சற்றுநேரம் அங்கிருந்த மரத்தின் நிழலில் தங்கினோம். குரங்குகள் கொஞ்சமேனும் சப்தமிடாமல் மிகவும் ஜாக்கிரதையாய் அப்பெரும் கல்லைத் தள்ளிக் கொண்டேவந்து ஓரிடத்தில் அதை நிறுத்தின. கல்லைக் கடைசியாகப் புரட்டி வைத்திருந்த இடமானது ஒரு பாறையின் ஓரமாய் இருந்தது. அந்த ஓரத்திலிருந்து பார்த்தால் கீழே செங்குத்தான பள்ளம் தோன்றும். அப் பள்ளத்தில்தான் நாம் முன்னே சொன்ன மலைப்பாம்பு படுத்துக் கிடந்தது. இந்தக் குரங்குகள் ஒரேமுகமாய் நின்று அப்பெருங்கல்லை ஒரே மூச்சில் திடீரென்று தள்ளிவிட்டன. அக்கல்லானது இரண்டு பனை ஆழத்திற்குக் கீழே படுத்திருந்த மலைப்பாம்பின்மேல் திடீரென்று பெருத்த ஓசையுடன் போய் விழுந்து அதை நசுக்கிவிட்டது. அப்பாம்பின் இரத்தம் ஒருசிறு குட்டம்போல் தேங்கிநின்றது. அது சற்று நேரத்திற்கெல்லாம் அவஸ்தைப் பட்டு இறந்துவிட்டது. இறந்த மலைப் பாம்பைப் பார்க்க, குரங்குகள் கும்பல் கும்பலாய் வந்தன. ஒவ்வொன்றின் முகத்திலும் விஜயலட்சுமி பிரசன்னமாகி இருந்தாள்.

இவற்றையெல்லாம் பார்த்திருந்த எங்களுக்கு மிகுந்த ஆச்சரியமும் பல எண்ணங்களும் உண்டாயின. மிருகங்களாய் இருந்தாலும் தங்கள் இனத்தைச் சேர்ந்த ஒரு பிராணியைக் கொன்ற மற்றொரு பிராணியைத் திரும்பக் கொன்று பழிக்குப் பழி வாங்க வேண்டுமென்கிற உத்தம தர்மத்தை இவற்றிற்குப் போதித்தது யார்? இது கடவுளின் பிரயாணமாகத்தானே இருக்கவேண்டும்? மிருகங்களுக்கு உள்ள சுய அறிவுகூட நமக்கில்லாமல் போவதேன்! மனிதரில் எந்த ஜாதியார் சுஜனசங்கத்தில் அபிமானம் கொள்ளாதிருக்கிறார்களோ அந்த ஜாதியார் வேரோடு அழிந்துபோய் விடுவார்கள் என்பதில் சந்தேகமேயில்லை.

புதுச்சேரி-இந்தியா
12.12.1908


அனுப்பி உதவியவர்:
சீனிவிசுவநாதன்



(குடும்ப நலம்)

# இரண்டே பெறுக!





சென்னை மாநகராட்சி குடும்ப நல முனைப்பு இயக்கம் ஒன்று 1-2-85 அன்று வடபழனியில் உள்ள மாநகராட்சிப் பேறுகாலப் பின்பணி நிலையத்தில் தொடங்கியது. இந் நிகழ்ச்சியில் மாநில அரசின் இரண்டாம் செயலர் திரு டி. வி. அந்தோணி, இ.ஆ.ப. கலந்து கொண்டார். கிரின்லேஸ் வங்கி மாநகராட்சிக்கு அன்பளிப்பாக அளித்த மிகப் பெரிய பலூன் அதன் தென் வட்டாரப் பொது மேலாளர் திரு கே. வி. சீதாராமன் அவர்களால் பறக்க விடப்பட்டு முனைப்பு இயக்கம் தொடங்கிவைக்கப்பட்டது. இது 100 அடி உயரத்தில் பறந்து கொண்டிருக்கும்.

முனைப்பு இயக்கம் பிப்ரவரி முதல் தேதி முதல் மார்ச் 31ஆம் தேதி. வரை சென்னையில் நடைபெறும். இக்கால கட்டத்தில் அறுவைச் சிகிச்சை செய்துகொள்ளும் ஆண்களுக்கும் பெண்களுக்கும் ஊக்கத்தொகை சமமாக ரூ 200 வழங்கப்படும். அரசின் ஊக்கத்தொகையான பெண்களுக்கு 160 ரூபாய், ஆண்களுக்கு ரூ 130 உடன் மாநகராட்சி அதிகத் தொகையான ரூ 40, ரூ 70 வழங்கும்.

மாநகராட்சியின் நான்கு பேறுகாலப் பின்பணி நிலையங்கள், அரசு மருத்துவ மனைகள் மற்றும் குடும்ப நல அறுவைச் சிகிச்சை நடத்தும் தொண்டு நிறுவனங்கள் ஆகிய 28 இடங்களில் இம்முனைப்பு இயக்கம் செயல்படும். 21 இடங்களில் ஆண்டுகளுக்கான வாசக்டமி செய்யப்படும். 18 இடங்களில் பெண்களுக்கான டுபெக்டமியும், 8 இடங்களில் 15 நிமிடங்களில் முடியக்கூடிய லாப்ராஸ்கோப் அறுவைச் சிகிச்சையும் செய்ய வசதிகள் உள்ளன.

சென்னை மாநகரத்திற்கு (1984-85) ஏற்படுத்தப்பட்ட இலக்கு 46,300 அறுவைச் சிகிச்சைகள். இதுவரை செய்யப்பட்டவை 34,000 அறுவைச் சிகிச்சைகள். இந்த முனைப்பியக்கத்தில் 15,000 அறுவைச் சிகிச்சைகள் செய்து முடிக்கப்படும்.

சுழற் சங்கங்கள், அரிமா சங்கங்கள்' ஜேஸீஸ்கள், பெண்கள் நிறுவனங்கள் முதலிய தொண்டு நிறுவனங்கள் இம்முனைப்பியக்கத்தில் பங்கு பெறும்.

சென்னைப் பெண் அரிமா சங்கம், சஞ்சீவ ராயன்பேட்டை பேறுகாலப் பின் பணி நிலையத்தில் 3-2-1985 முதல் லாப்ராஸ்கோப் அறுவைச் சிகிச்சை செய்துகொள்ளும் முதல் நூறு தாய்மார்களுக்கு 100 எவர்சில்வர் டிபன் கேரியர்களை அன்பளிப்பாக வழங்கும்.

அறிவியல் சாரம்:

# எதையும் தாங்கும் புதிய இதயம்



உடலில் பழுதுபட்டுள்ள உறுப்புகளை அகற்றி மாற்று உறுப்புகளைப் பொருத்தும் அறுவை மருத்துவமுறை நன்கு வளர்ந்து வருகிறது. இயற்கையான, அல்லது செயற்கையான உறுப்பை எந்த ஒரு நோயாளிக்குப் பொருத்த வேண்டும் என்றாலும் அவரது இதயம் சீராகச் செயல்பட வேண்டியது அவசியம். ஆனால் இதய நோயினால் அவதிப்படுபவர்ளுக்கு இதயத்தையே மாற்ற வேண்டி இருந்தால் என்ன செய்வது?

இதற்கென,செயற்கை இதயத்தையே உருவாக்கி இருக்கிறார்கள் அமெரிக்க மருத்துவ விஞ்ஞானிகள். டாக்டர் ராபர்ட் ஜார்விக் என்பவர் வடிவமைத்த செயற்கை இதயத்தை 52 வயது இதய நோயாளி வில்லியம் ஷ்ரோடர் என்பவரின் உடலில் வெற்றிகரமாகப் பொருத்தியவர் டாக்டர் வில்லியம் டெல்ரீஸ். மனிதர்களுக்குச் செயற்கை இதயம் பொருத்துவதற்கு அமெரிக்க அரசால் அனுமதிக்கப்பட்டுள்ள ஒரே டாக்டர் வில்லியம் டெவ்ரீஸ்.

முதல் செயற்கை இதயத்தை டெவ்ரீஸ் பார்னி க்ளார்க் என்பவருக்கு 1982ம் ஆண்டு டிசம்பர் முதல் தேதியன்று பொருத்தினார். க்ளார்க் அதன் பிறகு 112 நாட்கள் உயிர் வாழ்ந்து நிமோனியா காய்ச்சல் ஏற்படுத்திய விளைவுகளுக்குத் தாக்குப் பிடிக்காமல் இறந்து போனார்.

இரண்டாவது செயற்கை இதயம் பெற்ற ஷ்ரோடருக்கு மாற்று இதய அறுவைச் சிகிச்சை சென்ற ஆண்டு நவம்பர் 25ஆம் தேதி நடைபெற்றது. இன்னும் 24 மணி நேரத்தில் இறந்து போவார் என்ற நிலையில் வில்லியம் ஷ்ரோடருக்கு செயற்கை இதயம் பொருத்தப்பட்டது. அவர் நன்றாக இருக்கிறார். நித்ய கண்டம் -பூரண ஆயுசு என்பார்களே அது போல. இன்னும் எவ்வளவு காலம் இவர் வாழ்வார் என்பதைத் திட்டவட்டமாகச் சொல்ல முடியாது. செயற்கை இதயம் உடைந்து போனாலோ, பழுதுபட்டாலோ அவர் இறந்து விடுவார். ஆனால் அதுவரை தொல்லைகள் இன்றி இயல்பாகவே நடமாடுவார் என்று சொல்கிறார் டாக்டர் டெவ்ரீஸ்.

ப்ரஸ்ஸல்ஸ், தி ஹேக், டெல் ஆவில் ஆகிய நகரங்களில் இருந்தவாறே தொலைக்காட்சியில் தோன்றி உரையாடலில் பங்கு பெற்றனர்.

அப்பொழுது பேசுகையில் மனிதர்களுக்குச் செயற்கை இதயம் பொருத்தும் மருத்துவ முறை வெற்றிகரமாகச் சோதனைக் கட்டத்தைத் தாண்டி விட்டது என்றார் டெவ்ரீஸ். இது முழு வெற்றி அடைந்து விட்டால் ஆண்டுக்கு 50,000 பேர் செயற்கை இதயம் பெற்றுக்கொண்டு மறுவாழ்வு பெறுவர். அமெரிக்காவில் மட்டும் இதய நோயினால் ஒவ்வொரு நாளும் 1000 பேர் இறக்கிறார்கள் என்றும் டெவ்ரீஸ் தெரிவித்தார்.

தக்க நபர் கிடைப்பதைப் பொறுத்து மூன்றாவது செயற்கை இதயம் பொருத்துவது ஹுமானா இதய நிலையத்தில் நடைபெறும். இருப்பினும் தொடக்கக் கட்டத்தில் ஆண்டுக்கு 50 முதல் 100 நோயாளிகளுக்கு மட்டுமே செயற்கை இதயம் பொருத்தப்படும். இந்த ஆண்டில் அமெரிக்காவிலும் வெளிநாடுகளிலும் மொத்தம் ஆறு மருத்துவ மனைகளில் செயற்கை இதயம் பொருத்தும் பணி நடைபெறும். அடுத்த ஆண்டு 20 மருத்துவ மனைகளில் இந்த வசதி செய்து கொடுக்கப்படும்.

முதலில் ஜார்விக் செயற்கை இதயம் நூற்றுக்கணக்கான மிருகங்களுக்குப் பொருத்தப்பட்டது. அந்தச் சோதனைகளின் வெற்றிக்குப் பிறகே முதல் முதலில் க்ளார்க் என்ற நபருக்குப் பொருத்தப்பட்டது. அதில் ஒரு வால்வு உடைந்து விட்டது. இப்பொழுது படைக்கப்பட்டுள்ள செயற்கை இதயத்தில் 'வால்வு' வலுவுள்ளதாக அமைக்கப்பட்டுள்ளது. வேறு சில சிக்கல்களும் சீர் செய்யப்பட்டன.

இப்பொழுது செயற்கை இதயம் பொருத்திக் கொள்ள ஆகும் செலவு.... மலைக்காதீர்கள்! ஒரு இலட்சம் டாலர் அல்லது ஒன்றரை லட்சம் டாலர். அதாவது இந்தியக் கணக்கில் இது சுமார் ரூ.12 இலட்சம் முதல் 17 இலட்சம் வரை. போகப் போக இது குறையும் என்கிறார், புதிய இதயத்தை ''பாலியுரேதேன்'' என்ற வகை பிளாஸ்டிக் மற்றும் அலுமினியப் பொருட்களைக் கொண்டு தயாரித்துள்ள டாக்டர் ஜார்விக்.

தொடர்ந்து மருத்துவ மனைகளில் சேர்க்கப்பட்டு வேறு வகைகளில் செலவிடப்படும் தொகையையும், நோயாளியின் அவதியையும் ஒப்பிட்டுப் பார்த்தால் இந்தத்தொகை அதிகம் அல்ல என்கிறார் டாக்டர் ஜார்விக். வளரும் நாடுகளில் இந்த அளவுக்கு இதயமாற்று மருத்துவத்திற்குச் செலவிடுவது இயலுமா என்று கேட்டபோது ஜார்விக் கூறினார்: ''தொழில் நுட்பம் வளர்ந்துள்ள நாடுகளுடன் வளரும் நாடுகள் ஏதாவது ஒப்பந்தம் செய்து கொள்ளலாம் என்று நினைக்கிறேன். எனினும் இந்த உயர்தனித்தொழில் நுட்பம் இப்போதைக்குச் சிலருக்கு மட்டுமே வாய்க்கப் பெறும்''.

இப்போது செயற்கை இதயம் பெற்றுள்ளவர்கள் கம்ப்ரெ'ஸர் என்று சொல்லப்படும் காற்றழுத்தக் கருவியையும் சுமந்துகொண்டே நடமாட வேண்டும். அடுத்த 10 அல்லது 20 ஆண்டுகளில் வெளியில் இருந்து இயங்கும் துணைக்கருவிகள் செயற்கை இதயத்திற்குத்தேவைப்படாது. அவை முழுக்க முழுக்க தானியங்கிக் கருவிகளாக உருவாக்கப்படும் என்று நம்புவதாகவும் ஜார்விக் தெரிவித்தார்.

இப்பொழுது சுமந்து செல்லப்படும் கம்ப்ரெசரின் எடை 5.4 கிலோ. ஆனால் இனிமேல் சிறிய பாட்டரி; அத்துடன் உடலின் தோல் பரப்பில் செருகப்படும் சிறு கம்பி மட்டும் உள்ளே இருக்கும் செயற்கை இதயத்தை இயக்க வல்லதாக அமையும். ''எலெக்ட்ரோ ஹைட்ராலிக்'' தொழில் நுட்ப முறையில் இயங்கும் புதிய வகைச் செயற்கை இதயத்தை மிருகங்களுக்குப் பொருத்தி அவற்றின்செயல்திறனை ஆயும் பணி அமெரிக்காவில் மும்முரமாக நடைபெற்று வருகிறது.

—அமெரிக்கத் தகவல் நிலையம்

## மாஸ்கோவில் இந்திய

### அறிவியல் கண்காட்சி

இந்திய அறிவியல், தொழில் நுட்பத்தின் பத்துநாள் கண்காட்சி 1985 செப்டம்பர் மாதம் 5ந் தேதி மாஸ்கோவில் தொடங்கும்.

இந்தக் கண்காட்சிக்கு, அறிவியல் மற்றும் தொழில் ஆராய்ச்சிக் கழகம் ஏற்பாடு செய்கிறது.

வேளாண்மை சுகாதாரம், சுற்றுப்புறவியல், தகவல் தொடர்பு, மின்துகளியல், கடல் வளர்ச்சி ஆகிய துறைகளில் இந்தியா அடைந்துள்ள முன்னேற்றங்கள் அந்தக் கண்காட்சியில் சித்திரிக்கப்படும்.

விண்வெளி ஆராய்ச்சி, ஆழ்கடல் சுரங்கத் தொழில், அணுக்கரு பொறியியல் ஆகிய துறைகளில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்களுக்குச் சிறப்பிடம் கொடுக்கப்படும்.

# முன்னாள் படை வீரர்கள் முன்னேற உதவிகள்

முன்னாள் படைவீரர்களுக்கு வேலை வாய்ப்பில் முன்னுரிமை.

போரில் வீர மரண மெய்திய-ஊன முற்ற படைவீரர்களின் குழந்தைகட்கு வேலை வாய்ப்பில் முன்னுரிமை.

முன்னாள் படைவீரர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட மத்திய-மாநில அரசுத் துறை-நிறுவனங்களில் உள்ள பணியிடங்களுக்கு முன்னாள் படைவீரர்களைப் பரிந்துரை செய்தல்.

படையில் பணிபுரிந்த காலவரையுடன் மூன்று ஆண்டு வரை மத்திய அரசின் வேலைகளுக்கு வயது வரம்புச்சலுகை.

ஆதி திராவிடர்கள் - பழங்குடியினர் மற்றும் பிற்பட்ட வகுப்பினருக்கு 53வயது வரையும் ஏனையோர்க்கு 48 வயதுவரையும் தமிழ்நாடு அரசு வேலைகளுக்கு வயது வரம்புச் சலுகை.

**சுயவேலை வாய்ப்பு**

தொழிற்பேட்டைகளில் தொழிற்கூடங்கள் - காலி மனைகளில் முன்னாள் படைவீரர்களுக்கு ஒரு விழுக்காடு ஒதுக்கீடு.

லாரி போக்குவரத்து தேசிய உரிமம் ( National Permit ) வழங்குவதில் 10 விழுக்காடு முன்னாள் படைவீரர்களுக்கு ஒதுக்கீடு.

ஜெய் ஜவான் பெட்டிக் கடைகள் வழங்குதல்.

தமிழ்நாடு கூட்டுறவுப் பால் உற்பத்தியாளர் இணையத்திலிருந்து முன்னுரிமையில் முன்னாள் படைவீரர்களுக்குத் தானியங்கிப் பால் வழங்கும் இயந்திரம் பெறுவதில் உதவி செய்தல்.

**வங்கிக் கடன்**

வங்கிக்கடன் வட்டி மானிய உதவித் திட்டத்தின் கீழ் வங்கிகளிலிருந்தும் மற்றும் தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்திலிருந்தும் (Tamil Nadu Industrial Investment Corporation) தொழில் புரியக் கடன் பெறும் முன்னாள் படைவீரர்கள்-அவர் தம் விதவைகளுக்கு ரூ.5,000 வரையுள்ள கடனுக்கு 4 விழுக்காட்டிற்கு அதிகமான வட்டித் தொகையும் ரூ. 5,000 மேல் ரூ. 50,000 வரையுள்ள கடனுக்கு 7 விழுக்காட்டிற்கு அதிகமுள்ள வட்டித் தொகையும் தொகுப்பு நிதியிலிருந்து மானியமாக வழங்குதல்.

**கல்விச் சலுகைகள்**

மருத்துவ, பொறியியல் கல்லூரிகள், தொழில் நுட்பக் கல்லூரிகள், ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி - பள்ளி, விவசாயக் கல்லூரி, சட்டக் கல்லூரி, டி.பார்மசி கல்வி முதலியவற்றில் முன்னாள் படைவீரர் குழந்தைகட்கு இட ஒதுக்கீடு.

தமிழ்நாடு முன்னாள் படைவீரர் நல நிதியிலிருந்து பள்ளி-கல்லூரிகளில் கல்வி பயிலும் முன்னாள் படைவீரர்களின் குழந்தைகட்குக் கல்வி உதவித் தொகை.

தமிழ்நாடு அரசிலிருந்து இரண்டாம் உலக யுத்தத்தின்போது சேவை செய்த முன்னாள் படைவீரர்களின் குழந்தைகட்கு புத்தகப் படி தருதல்.

தொகுப்பு நிதியிலிருந்து போரில் உயிரிழந்த-ஊனமுற்ற படைவீரர்களின் குழந்தைகட்குக் கல்விஉதவித் தொகை, சீருடைப் படி மற்றும் புத்தகப் படி வழங்குதல்.

தொகுப்பு நிதியிலிருந்து மருத்துவக் கல்லூரி, பொறியியல் கல்லூரி, தொழிற் பயிற்சி நிலையம், தட்டெழுத்துப் பயிற்சிப் பள்ளி முதலிய தொழிற் கல்வி நிலையங்களில் பயிலும் முன்னாள் படைவீரர்கள் மற்றும் அவர்தம் குழந்தைகட்குப் பயிற்சி உதவித்தொகை வழங்குதல்.

முன்னாள் படைவீரர்களின் விதவையர் மற்றும் பெண்களுக்குத் தையற் கலையில் பயிற்சியளித்தல்.

முன்னாள் படைவீரர்கள் மற்றும் அவர்களைச் சார்ந்தோர்க்குத் தட்டெழுத்து மற்றும் சுருக்கெழுத்துப்பயிற்சி அளித்தல்.

**தொகுப்பு நிதியிலிருந்து உதவிகள்**

1971ல் நடந்த இந்திய-பாகிஸ்தான் போரில் வீர மரணம் எய்திய படைவீரர்களின் அடுத்த வாரிசுதாரருக்கு மற்றும் ஊனமுற்ற படைவீரருக்கு ஆண்டுப் பராமரிப்பு மானியம்.

இந்தியா சுதந்திரமடைந்த பின் நடந்த எல்லாப் போர்களிலும் வீரமரண மெய்திய படைவீரர்களின் விதவைகளுக்கு ஆண்டுப் பராமரிப்புப் படி.

1.1.1964க்கு முன்பாக படைப்பிரிவிலிருந்து ஒய்வு ஊதியத்துடன் விலகி பின்பு இறந்துபோன முன்னாள் படைவீரர்களின் விதவைகளுக்கு மாதாந்தரப் பராமரிப்பு நிதியுதவி.

நாடு சுதந்திரம் அடைந்த பின் ஏற்பட்ட போர்களில் வீரமரணம் எய்திய படைவீரர்களின் விதவைகளுக்கு வீடு கட்டுவதற்கு மானியம்.

போரில் வீரமரணம் எய்திய வீரர்களின் மகளுக்கு ரூ. 1,500 திருமண மானியமாக வழங்குதல்.

காசநோய் - பொதுமருத்துவமனைகளில் தங்கிச் சிகிச்சைபெற்று வரும் முன்னாள் படைவீரர்களுக்குச் சத்துணவு மற்றும் அதிக விலையுள்ள மருந்துகள் வாங்க நிதியுதவி.

இராணுவப் பயிற்சி நிலையங்களில் பயிற்சி பெறுவோர்க்கு வட்டியில்லாக் கடனுதவி.

**தமிழ்நாடு முன்னாள் படைவீரர் நல நிதியிலிருந்து உதவிகள்**

முன்னாள் படைவீரர்கள் மற்றும் அவர்களைச் சார்ந்தோர்க்கு சிறுதொழில் செய்வதற்கு மொத்த நிதி உதவி.

முன்னாள் படைவீரர்கள் மற்றும் அவர்தம் விதவைகள் பராமரிப்புக்காக மாதாந்தர நிதியுதவி.

ஆதரவற்ற நிலையிலுள்ள வயது முதிர்ந்த முன்னாள் படைவீரர்கள்-அவர் தம் விதவைகளுக்கு ஆயுட்காலம் முழுமைக்கும் மாதாந்தரப் பராமரிப்பு நிதியுதவி.

தொழுநோயால் அவதியுறும் முன்னாள் படைவீரர்களுக்கு ஆயுட்காலம் முழுமைக்கும் மாதாந்தர நிதியுதவி.

முன்னாள் படைவீரர்கள் இறந்து போகும்பட்சத்தில் அவரது ஈமச் சடங்கிற்கு நிதியுதவி.

**உடனடி நிவாரண நிதியுதவி**


இறந்து போன ஓய்வு பெற்ற முன்னாள் படைவீரரின் விதவைக்குக் குடும்ப ஓய்வூதியம் ஒப்பளிப்பு ஆகும் வரையில்











மாதாந்தர இடைக்கால நிவாரண நிதி உதவி (திரும்பச் செலுத்தக்கூடியது.)

காசநோய், தொழுநோய், புற்றுநோய் மருத்துவமனைகளில் தங்கிச் சிகிச்சை பெற்றுவரும் முன்னாள்படை வீரர்களுக்கு கைப்பணம்.

வெள்ளம், தீ விபத்து போன்ற இயற்கைச் சூழலால் பாதிக்கப்பட்ட முன்னாள் படைவீரர்கள் மற்றும் அவர்களைச் சார்ந்தோர்களுக்கு நிதியுதவி.

செயற்கைப் பற்கள், மூக்குக் கண்ணாடி, காதுகேட்கும் கருவி வாங்குவதற்கு முன்னாள் படைவீரர்களுக்கு நிதியுதவி.

ஊனமுற்ற முன்னாள் படைவீரர்களுக்குச் செயற்கை உறுப்புகள் பெற நிதி உதவி.

பூனாவில் உள்ள இராணி மேரிப் பயிற்சிப் பள்ளியில் பயிற்சி பெறும் ஊனமுற்ற முன்னாள் படைவீரர்களுக்குப் பயிற்சி உதவித்தொகை.

முன்னாள் படைவீரர் -தம் ஒரு மகளுக்கு ரூ.500-க்கு மிகைபடாமல் திருமண நிதியுதவி.

தொழுநோயால் அவதியுறும் முன்னாள் படைவீரர்களின் விதவைகளுக்கு மாதாந்தர நிதியுதவி.

கண் பார்வையிழந்த முன்னாள்படைவீரர்களுக்கு மாதாந்தர நிதியுதவி.

இந்தியச் செஞ்சிலுவைச் சங்கத்திலிருந்து, தொழுநோய் மற்றும் காசநோயால் அவதியுறும் முன்னாள் படைவீரர்களுக்கு நிவாரணம் அளிக்கப்படும் வரை இடைக்கால நிதியுதவி.

**இதர நிதியுதவி**

இராணுவ மத்திய நல நிதி, மருத்துவப் பிற்காப்பு நிதி போன்ற நிதிகளிலிருந்து முன்னாள் படைவீரர்களுக்கும் அவரைச் சார்ந்தோர்களுக்கும் நிதியுதவி பெற்றுத் தருதல்.

**மருத்துவம்**

அரசு வட்டத் தலைமை மருத்துவமனைகளில் 2 படுக்கைகள் கொண்ட தனி வார்டு.

ரூ.200க்கும் குறைவான மாத ஊதியம் பெறும் முன்னாள் படைவீரர்கள்-அவர் தம் குடும்பத்தினருக்கு இலவச மருத்துவச் சிகிச்சை.

காசநோய் மருத்துவமனைகளில் முன்னாள் படைவீரர்களுக்கு 10 படுக்கைகள் ஒதுக்கீடு.

**சட்ட ஆலோசனை-உதவி**

படைப்பிரிவைச் சேர்ந்தவர்களுக்கு நீதி மன்றங்கள் மூலம் தீர்வு செய்யவேண்டிய வழக்குகளில் இலவசச் சட்ட உதவி பெற உதவுதல்.





# உங்களுக்குத் தெரியுமா?

* நாட்டில் 1947-ல் 1.41 லட்சம் ஆரம்பப் பள்ளிக்கூடங்களும், 9 லட்சம் நடுத்தரப் பள்ளிக்கூடங்களும் 4,000 உயர்நிலைப் பள்ளிக்கூடங்களும் இருந்தன. இதைப் பன்மடங்காக அதிகரித்து 1982-ல் 4.95 லட்சம் ஆரம்பப் பள்ளிக்கூடங்களும், 1.2 லட்சம் நடுத்தரப் பள்ளிக்கூடங்களும், 53,000 உயர்நிலைப் பள்ளிகளும் உள்ளன.

இளநிலைக் கல்லூரிகளும், பட்டப்படிப்புக் கல்லூரிகள் எண்ணிக்கை 477லிருந்து 4544 ஆக அதிகரித்துள்ளன. (உத்திரப்பிரதேச இளநிலைக் கல்லூரிகளைத் தவிர)

இதே காலத்தில் பொறியியல், தொழில் நுட்பக்கல்லூரிகள், பாலிடெக்னிக் ஆகியவை 101லிருந்து 607 ஆக அதிகரித்துள்ளன. 1947-ல் 16 ஆக இருந்த பல்கலைக் கழகங்கள், கல்வி நிறுவனங்கள் 1982-ல் 134ஆக அதிகரித்துள்ளன.

1947-ல் பள்ளிக்கூட மாணவர்களின் எண்ணிக்கை 1.27 லட்சம். 1982-ல் இது 10.62 லட்சமாக உயர்ந்துள்ளது கல்லூரிகளில் 20,000-லிருந்து 3,60,000 ஆகவும், பொறியியல் கல்லூரிகளில் 6,610-லிருந்து 91,000 ஆகவும், மாணவ மாணவியர் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

இதே காலத்தில் பள்ளிக்கூட ஆசிரியர்களின் எண்ணிக்கை 4.87 லட்சத்திலிருந்து 31.54 லட்சமாக உயர்ந்துள்ளது.

** படித்தவர்கள் சதவிகிதம் 16.7-லிருந்து 36.2 சதவிகிதமாக அதிகரித்துள்ளது. 1947-ல் ஆதிதிராவிட மற்றும் பழங்குடியினரில் கல்வியறிவு பெற்றோர் சொற்பமாக இருந்தனர். 1982-ல் ஆதிதிராவிட வகுப்பினர் 14.7 சதவிகிதமும் ஆதிதிராவிட, பழங்குடியினர் 11.3 சதவிகிதமும் கல்வியறிவு பெற்றுள்ளனர்.

** இதே காலத்தில் கல்விக்கான மொத்தச் செலவு ரூ. 55 கோடியிலிருந்து ரூ. 5,186 கோடியாக உயர்ந்துள்ளது. தனிநபர் கல்விச் செலவு ரூ. 2.20-லிருந்து ரூ. 74 ஆக அதிகரித்துள்ளது.

**நிலம் வீட்டுமனை வீடுகள் குடியிருப்புத் தட்டுகள்**

தமிழ்நாடு அரசிலிருந்து முன்னாள் படைவீரர்கள் மற்றும் போரில் வீரமரணமெய்திய ஊனமுற்ற படைவீரர்கள் குடும்பங்களுக்கு வீட்டு மனைகள்-விவசாய நிலங்கள் ஒப்படை செய்வதில் முன்னுரிமை.

தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தினால் தவணைமுறையில் விற்கப்படும் வீடுகள்-குடியிருப்புத் தட்டுக்கள் - வீட்டு மனைகள் பெறுவதில் முன்னாள் படைவீரர்களுக்கு 7½% ஒதுக்கீடு. இந்த 7½ல்% "பரம் வீர் சக்கரா, "மகாவீர் சக்கரா" மற்றும் "வீர்சக்கரா" விருது பெற்றவர்களுக்கு 1% ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**பலவிதம்:**

ஓட்டுநர் உரிமம் துப்பாக்கி உரிமம் பெறுவதற்கும், உரிமைகளைப் புதுப்பிப்பதற்கும் முன்னாள் படைவீரர்களுக்கு கட்டண விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

1899ஆம் ஆண்டு இந்திய முத்திரைவரிச் சட்டத்தின் கீழ் முன்னாள் படைவீரர்கள் முத்திரை வரியிலிருந்து விலக்களிக்கப்படுகிறார்கள்.

இராணுவ உபரி வாகனங்கள் பெறுவதில் முன்னாள் படைவீரர்களுக்கு உதவி செய்தல்.

மிலிட்டரி அங்காடிகளில் வேண்டிய பொருட்களைப் பெறுவதில் உதவி செய்தல்.

அவ்வப்போது தேவைக்கேற்ப வேலைகளுக்கேற்பப் பயிற்சி அளித்தல்.

படையில் சேர இளைஞர்களுக்குப் பயிற்சி அளித்தல்.

# பட்டினி போக்கிடும் பச்சைப் பயறு

டாக்டர் சி.ஆர். லட்சுமி நரசிம்மன்

இன்றைய சமுதாயத்தில் பல திட்டங்களைத் தீட்டி அவைகளை நிறைவேற்றி வருகிறோம். இன்றைய குழந்தை எதிர்காலத்தின் குடிமகன் ஆவான். வளரும் குழந்தைகளுக்குச் சரியான உடல் மற்றும் மூளை வளர்ச்சி மிகவும் முக்கியம். அவர்களுக்கு அளிக்கப்படும் உணவில் அவர்களுடைய உடல் மற்றும் மூளை வளர்ச்சிக் கேற்ற சத்துக்கள் நிறைந்த உணவாகக் கொடுப்பது பெற்றோரின் கடமையாகிறது. ஆனால் எல்லோராலும் இதை நிறைவேற்ற முடிவதில்லை. ஏழ்மை நிலை, விலைவாசி உயர்வு முதலான காரணங்களால் 20 சதவீதக் குழந்தைகள் மட்டுமே நல்ல சத்துணவு பெற்று வந்தனர். தற்போது தமிழக அரசின் சத்துணவுத் திட்டத்தின் மூலம் குழந்தைகள் பெரும் எண்ணிக்கையில் பயன்பெறுகின்றனர்.

சில ஆண்டுகளுக்கு முன்பு சத்துணவு கிடைக்காததால் குழந்தைகள் கலோரி (எரியூட்டச்சக்தி) மற்றும் புரதச்சத்துக் குறைபாடுகளுக்கு உள்ளாகியிருந்தனர். உடல் எடை குறைந்தும், தளர்ச்சியுற்றும் காணப்பட்டனர். பெற்றோருக்கு உணவு பற்றிய அறிவு இல்லாமை, ஏழ்மை, தூய்மையற்ற சூழ்நிலை மற்றும் இயலாமை இவற்றால் இவர்களின் எதிர்காலம் பாழாவதோடு அரசுக்கும் பல்வேறு பிரச்னைகளைத் தோற்றுவித்து வந்தனர். சத்துணவுத் திட்டம் நிறைவேற்றப்பட்ட பின் இவர்கள் நிலை உயர்ந்துள்ளது.

இதேபோல ,தாய்ப்பால் மறக்கும் தருணத்தில் உள்ள குழந்தைகளுக்கும் தேவையான சத்துணவு அளிக்கப்படவேண்டும். இவர்களுக்குக் கூழோ, தண்ணீர் கலந்த பசும்பாலோ மட்டும் போதுமானதல்ல. இந்தப் பருவத்தினருக்குப் புரதச்சத்து மிக்க உணவு மிகமிகத் தேவை என உடற்கூறு வல்லுநர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

தற்கால நிலையில் டின்களில் விற்கப்படும் குழந்தை உணவுப் பொருட்களின் விலை அதிகமாக உள்ளதாலும் மாமிச உணவு ஏழை எளியோர்க்கு அரிதாகிவிட்டபடியாலும் வேறுவழிமுறைகளை நாம் சிந்திக்கவேண்டியிருக்கிறது. இதற்குத் தாவரப் புரதச் சத்துக்கள் எளிய உரிய முறை எனத் தெரிந்து கொள்ளலாம்.

பயறுவகைப் பயிர்கள் புரதச் சத்து மிக்கவை; நமது நாட்டில் பரவலாக விளைபவை உளுந்து, துவரை, பச்சைப்பயறு, சோயா மொச்சை, அவரை, கடலை, பட்டாணி போன்ற பயிர்களில் பச்சைப் பயறுக்குத் தனிச் சிறப்பு உண்டு. இது பல்வேறு பயிர்களுக்கிடையே 'ஊடுபயிராக'ப் பயிரிட முடியும்; எல்லாப் பருவகாலங்களுக்கு ஏற்றதுமாகும். சத்துப் பொருள்களான புரதம் 28 சதமும்; மாவுப்பொருள் 50 சதவீதமும் நிறைந்துள்ளன. ஒரு கை பச்சைப்பயிரில் கோழிமுட்டையின் சத்துக்களில் பாதி அளவுக்குக் கிடைக்கிறது. பச்சைப்பயிரில் 'லைசின்' எனப்படும் அமிலோ அமிலம் கூடியும், மிதியோனின் மற்றும் 'சிஸ்டின்' அளவில் குறைந்தும் உள்ளன. இவற்றை ஈடு செய்தால் எளிய சத்துணவு கிடைக்கப் பெறலாம். மற்ற பயறுவகைகளைவிட பச்சைப் பயறு எளிதில் செரிக்கும் தன்மையுடையது ஆகும்.

முளைகட்டிய பச்சைப்பயறு ஒரு எளிய உணவு முறையாகும்: பழங்காலந்தொட்டே சீன மற்றும் ஜப்பான் நாட்டு உணவுப் பழக்கங்களில் மிகப் பிரபலமானதுமாகும். இன்றும் அமெரிக்க நாட்டில் 10 மி.கிலோ முளைவிட்ட பச்சைப்பயறு ஒரு ஆண்டில் உட்கொள்ளப்படுகிறது. ஏற்கெனவே உள்ள சத்துக்களுடன் முளைவிட்ட பச்சைப் பயறில் வைட்டமின் சி, கூடியுள்ளதும் ஒரு நல்ல அம்சமாகும். இவற்றோடு, மென்மை, எளிதில் செரிக்கும் தன்மை, கவர்ச்சியான வண்ணம் இவையெல்லாம் பச்சைப்பயிறை 'ஒரு நேரடி உணவாகப் பயன்பட உதவுகின்றன.

பச்சைப் பயறை முளைகட்டுவது எளிது. மற்ற வகைப் பயறுகள் கிடைக்காதபோதும் அவற்றின் இடத்தைப் பச்சைப் பயறால் நிரப்பலாம். பஞ்சம், வெள்ளம் போன்ற இயற்கை அபாய காலங்களில் எளிதாகத் தயாரிக்கவும் இடம் விட்டு இடம் எடுத்துச் செல்லவும் முடியும். விரைவாகவும் பரவலாகவும் மக்களுக்கு வினியோகித்துப் பயன் பெற முடியும்.

இவ்வாறு நேரடி உணவாக மட்டுமல்லாது துணைப் பொருளாகவும் உபயோகிக்கலாம். சேமியா (Noodles), கூழ் (Soup) சுண்டல் போன்றவற்றுக்கு ஏற்றது. பலவகை திடீர் உணவுப் பண்டங்களிலும் குழந்தை உணவுப்பொருட்களிலும் கலந்து பயன்பெறலாம். பிரித்தெடுக்கப்பட்ட புரதப்பொருளை வேறு பொருட்களுடன் கலந்தும் முழுப் பயன்பெறலாம்.

எனவே, பெற்றோரும் பல்வேறு திட்ட அமைப்பாளர்களும் இது குறித்து தக்க நடவடிக்கை மேற்கொண்டு வளரும் இளம் தலைமுறையைப் பச்சைப் பயறு மூலம் செம்மையாக உருவாக்க உதவிட வேண்டுகிறோம்.

**தாய்ப்பாலில் அதிக சத்து**

**குறைமாதப் பிரசவத்தில் குழந்தைகள் பெறும் தாய்மார்கள் தங்கள் குழந்தைகளுக்குக் கண்டிப்பாகத் தாய்ப்பாலையே புகட்ட வேண்டும்**

**அமெரிக்க அரசு சார்ந்த வேளாண்துறை செய்துள்ள ஆய்வுகளின்படி குறைமாதக் குழந்தைகளை ஈன்ற தாய்மார்களிடம் சுரக்கும் பாலில், நிறைமாதக் குழந்தைகளைப் பெற்ற தாய்களிடம் இருப்பதைவிட அதிகமான சத்து — எளிதில் செரிக்கக் கூடிய சத்து 70 சதவிகிதம் அதிகமாக இருப்பதாக அறியப்பட்டிருக்கிறது.**





# தியாகதீபங்கள் ௨௦

**மா**ண்புமிகுமுதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் உடல்நலம் இல்லாமல் இருந்த போது அதைத் தாங்கமாட்டாமல் அவருக்காகப் பலர் தீக்குளித்தார்கள். அவர்களில் 22 பேர் மரணமடைந்தார்கள். 20 பேர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு, சிகிச்சைக்குப் பின் உயிர் தப்பினார்கள். இவர்களுக்கு அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் உதவிப் பணம் வழங்கப்படும் என்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் 20.2.85ல் வெளியிட்ட அறிக்கையொன்றில் அறிவித்துள்ளார். அதன் விவரம் வருமாறு :

"கடந்த ஆண்டு அக்டோபர் திங்கள் 5ந் தேதி சென்னை அப்பல்லோ மருத்துவமனையில் நான் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெறத் தொடங்கியது முதல், என் உடல் நலத்தைப் பற்றி பல்வேறு செய்திகள் உலா வரத் தொடங்கின.

''என் உடல் நிலையில் சற்றும் எதிர்பாராத வகையில் கவலை தரத்தக்க சூழ்நிலை அக்டோபர் 13ந் தேதி ஏற்பட்டதும், மனிதாபிமானமற்ற வன்நெஞ்சக்காரர்கள் அந்தச் சூழ்நிலையைப் பயன்படுத்திக் கொண்டு, தங்களது அந்தரங்க ஆசைகளையே வதந்திகளாகப் பரப்பிவிட்டனர்.

''என்பால் உயிரையே வைத்து இருந்த தமிழக மனித தெய்வங்கள், கல்மனக்காரர்களால் திட்டமிட்டுப் பரப்பப்பட்ட வதந்திகள் காரணமாகத் தங்கள் தேகத்தில் தீயிட்டுக் கொண்டும், நஞ்சு அருந்தியும் இன்னும் பல்வேறு முறைகளைக் கையாண்டும் என் ரத்தத்தின் ரத்தமான உடன் பிறப்புக்கள் பலர் தங்கள் இன்னுயிரைப் பலியிட்டுக் கொண்டார்கள் என்ற துயரச்செய்தி என் நெஞ்சத்தில் ஆழமான வடுக்களை ஏற்படுத்தி விட்டது.

''குடும்பத் தலைவர்களை, சம்பாதிக்கும் வாலிபர்களை, இல்லறப் பொறுப்பு ஏற்றுள்ள தாய்க்குலத் தங்கங்களை, கல்வி பயிலும் மாணவர்களை எல்லாம் நானும் அவர்கள் குடும்பங்களும் இழந்து நிற்கிறோம்.

''என்னைக் கண்ணில் காண முடியுமா என்ற ஐயத்திலேயே தங்கள் விலை மதிப்பற்ற உயிர்களைப் பலிகொடுத்துவிட்ட அந்த அன்புத் தெய்வங்களை இனி எப்படி நம்மால் பெற இயலும்? தங்களையே பலி கொடுத்துக் கொண்ட அந்தத் தியாகச் செம்மல்களுக்கு எப்படி எனது நன்றியைச் செலுத்துவது? அவர்களை இழந்து வாடும் உற்றார் உறவினருக்கு எப்படி ஆறுதல் கூறுவது?

''இத்தகைய உடன்பிறப்புக்களை இழந்து நிற்கிற என்னுடைய இதயம் வடிக்கிற ரத்தக் கண்ணீரை எப்படித் துடைத்துக் கொள்வது என்றெல்லாம் என் மனம் தேம்பியழுதபடி திகைத்து நிற்கிறது.

''என் மீது இந்தத் தமிழ்ச் சமுதாயம் கொண்டுள்ள ஈடு இணையற்ற பற்று என்றும் நினைத்துப் போற்றுவதற்குரிய ஒன்றாகும். என்றாலும், என் மீதுள்ள அன்பை வெளிப்படுத்த என் அருமை உடன்பிறப்புக்கள் இப்படியா தங்கள் முடிவை அமைத்துக் கொள்வது.

''இந்த வழியை நான் ஒருநாளும் ஊக்குவிப்பவன் அல்ல. 'எனக்காக இத்தனைப் பேர் உயிர்த்தியாகம் செய்து கொண்டார்கள் பார்த்தீர்களா?' என்று பெருமை பேசிக் கொள்பவனும் அல்ல.

''இப்போது மட்டுமல்ல, எப்போதும் எதற்காகவும் தங்களைத் தாங்களே பலியிட்டுக் கொள்வது அல்லது அழித்துக் கொள்வது போன்ற வழிமுறைகள் என் இதய தெய்வம் அமரர் பேரறிஞர் அண்ணா அவர்களாலோ என்னாலோ ஏற்றுக் கொள்ளப்பட்டவை அல்ல என்பதைத் திட்டவட்டமாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

''இந்த உயிர்த் தியாகங்கள் தமிழகத்தில் வதந்திகளை உருவாக்கிய வன்நெஞ்சக்காரர்களின் அற்பப் புத்தியினால் விளைந்த பலிகளாகும். அதுமட்டுமல்ல, பல்வேறு துறைகளில் என்னை அழிக்கவும், அகற்றவும், முயன்று தோற்றுப்போன சக்திகள் தங்கள் தீய எண்ணங்களை விற்பனை செய்ய மக்கள் சமுதாயத்தை எந்த அளவு பொய்களால் ஆட்டிப் படைத்திருக்கிறார்கள் என்பதையும் நான் தெரிந்து கொண்டேன்.

''அந்தத் தீய சக்திகள் மேலும் தோல்வி கண்டன. மக்களின் ஒன்றுபட்ட விருப்பத்தால் நான் மீண்டும் முதல்வர் பொறுப்பேற்று உடல் நலத்துடன் பணியாற்றி வருவதை தியாகத் தீபங்களாகிவிட்ட என் ரத்தத்தின் ரத்தமான உடன் பிறப்புக்கள் கண்டு மகிழ வாய்ப்பற்றுப் போய்விட்டதே என்கிற வருத்தம் என் நெஞ்சைக் குடைகிறது.

''விலைமதிப்பற்ற உயிர்களைப் பலி கொடுத்தவர்களின் குடும்பத்துக்கு ஏற்பட்டுள்ள இழப்பை யாராலும் ஈடு செய்ய இய

லாது. அவர்கள் நினைவுக்கு நான் எனது வாழ் நாள் முழுதும் கண்ணீரால் அஞ்சலி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

''தங்களைப் பலி கொடுத்துக் கொண்டு என் மனத்தில் நீங்கா இடம் பெற்ற அந்தச் செம்மல்களை வணங்குகிறேன். உற்றார் உற வினருக்கு என் இதயத்தின் ஆழத்திலிருந்து ஆறுதலைத் தெரிவிக்கிறேன்.

''தங்களை உயிர்ப்பலி கொடுத்தவர் களின் 22 குடும்பங்களுக்கு ரூ. 15 ஆயிரம் வீதமும், பல்வேறு தியாக முயற்சிகளால் பாதிக்கப்பட்டு, செயல்படாத நிலையில் எப்ப டியோ உயிர் தப்பிவிட்ட நிலையில் சிரம வாழ்க்கையை எதிர்நோக்கியுள்ள 20 குடும் பங்களுக்கு ரூ. 10 ஆயிரம் வீதமும் அனைத் திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக்கழக நிதியில் இருந்து அளிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

''இந்தத் தொகை எவ்வகையிலும் உயிர்த்தியாகத்திற்கு ஈடு அல்ல. எனினும் இன்றைய சூழ்நிலையில் வெறும் அனுதாபம் என்பதோடு நில்லாமல், செயலளவில் துயர் நீக்கப்பட ஏதாவது செய்யப்பட வேண்டும் என்கிற உந்துதலினால் இவற்றை அறிவித் துள்ளேன்.

''என் அன்பு உடன் பிறப்புக்களை இழந்து தவிக்கும் குடும்பத்தினர் என்னுடைய கண்ணீர் காணிக்கையை ஏற்று, நான் நேரில் வந்து ஆறுதல் சொல்லி தொகை வழங்குவ தாகக் கருதி, அன்புடன் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அண்ணா நாமம் வாழ்க....!''

**தீக்குளித்து இறந்தவர்கள் :**

மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களுக்காக உயிர்த்தியாகம் செய்த வர்கள் 22 பேர். அவர்களில் தீக்குளித்து இறந்தவர்கள் 14 பேர். அவர்கள் விவரம்:—

1. பாண்டியன், வயது 19, எண்ணூர், சென்னை
2. கேசவன், வயது 38, பெரம்பூர், சென்னை
3. கோவிந்தன், வயது 28, குளகோம்பை, நீலகிரி
4. எம்.எஸ்.பாண்டியன், வயது 35. சேடப்பட்டி, மதுரை.
5. மாதையன், வயது 26 அரிசிப்பாளையம் சேலம்
6. பரிமளா வயது 25, விரூர், உத்திர மேரூர்.
7. மணி, வயது 21, ஒடைப்பாளையம்' கோபி
8. திருமதி பியாரி வயது 22, மெகபூப் பாளையம், அன்சாரிநகர், மதுரை.
9. ராணி வயது 15, தட்டான்குளம், சூளை, சென்னை-7.
10. சந்திரன், வயது 21, போயர் காலனி, மாரண்டஹல்லி, தர்மபுரி
11. கணேசன், வயது 24, ஆர்க்காடு.
12. சுப்பிரமணி, திருப்புவனம்
13. விஜயகுமாரி. வயது 28, மடுவங்கரை, சென்னை-32.
14. வீராசாமி, வயது 23, சிங்காநல்லூர், கோவை

**தூக்குப் போட்டு மாண்டவர்கள் :**

15. பழனிகுமார், வயது 35, சத்தியவாணி முத்துநகர், செம்பியம்.
16. ரமேஷ், வயது 16, கள்ளக்குறிச்சி, தென் ஆர்க்காடு.
17. பரமசிவம், வயது 38, வரதராஜபுரம், சிங்காநல்லூர், கோவை.

**விஷம் குடித்தவர்கள் :**

18. அமுதா, வயது 20, பாப்பநாயக்கன் புதூர், ஆர்.எஸ்.புரம், கோவை.
19. முனியப்பன், வயது 21, வத்தலக்குண்டு, மதுரை வடக்கு,

**மற்றவகையில் இறந்தவர்கள் :**

20. ஏ.டி.கிருஷ்ணசாமி, வயது 80, சினிமா டைரக்டர், ஆழூர், வட ஆர்க்காடு (அதிர்ச்சியால் இறந்தார்)
21. முருகேசன், வயது 17, அரக்கோணம் (தூக்க மாத்திரை சாப்பிட்டார்)
22. கோபி, வயது 24, சென்னை-12

**உயிர் தப்பியவர்கள் :**

மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்களுக்காக உயிர்த் தியாகம் செய்ய முயன்று, உயிர் தப்பியவர்கள் 20 பேர். அவர் களில் தீக்குளிக்க முயன்றவர்கள் விவரம்:—

1. அண்ணாதுரை, வயது 24, புதுக் கோட்டை கிராமம், திருப்பத்தூர், வடஆர்க்காடு மாவட்டம்.
2. பெரியசாமி, வயது 27, பழையதர்மபுரி
3. பாலகிருஷ்ணன், வயது 22, அண்ணா நகர், மதுரை.
4. ஆர்.சேகர், வயது 31, மன்ற உதவிச் செயலாளர், கிருஷ்ணாபுரம், ஆம்பூர், வட ஆர்க்காடு.
5. கிருஷ்ணன், வயது 23, திருக்கோஷ்டி யூர், முகவை.
6. பெருமாள், வயது 40. பஸ்ஸ்டாண்டு' கள்ளக்குறிச்சி.
7. குளஞ்சி, வயது 26, மணவாளநல்லூர்' தென் ஆர்க்காடு.
8. பாண்டியன், வயது 35, கீழமுத்துப் பேட்டை, மதுரை.
9. மாரியப்பன், வயது 30, காமராஜர் புரம், கோவை.
10. ராமசாமி, வயது 40 மேல் சங்கம், வட ஆர்க்காடு.

**விஷம் அருந்திச் சாக முயன்றவர்கள் :**

11. குப்பன், வயது 25, காட்பாடி, வட ஆர்க்காடு.
12. உன்னிகிருஷ்ணன், வயது 23, திருப் பூர், கோவை.
13. மோகன், வயது 23, காட்டூர், கோவை.
14. சுந்தரம், வயது 23, பாப்பேடு, செங் கல்பட்டு மேற்கு.
15. நடராஜன், வயது 34, ராஜிநகர், கோவை.

**காயம் உண்டாக்கி சாக முயன்றவர்கள் :**

16. சுப்பிரமணியம், வயது 20 வண்ணாரப் பேட்டை, சென்னை.
17. செல்வராஜ், வயது 35, மதுரை.
18. மாணிக்கம், வயது 35, திண்டுக்கல்.
19. ஆனந்தன், வயது 35, குடியாத்தம்.
20. அறிவழகன், வயது 24, மன்றச் செய லாளர், திண்டுக்கல்.



# கிரிக்கெட் வீரர் அசாருதீன் உலகச் சாதனை!



திரு முகமது அசாருதீன், கிரிக்கெட் டெஸ்ட் போட்டி யில் இறங்கி 3 தொடர்ச்சி யான டெஸ்டுகளில், 3 செஞ் சுரிகள் அடித்து வரலாறு படைத்துள்ளார். இது ஒரு உலகச் சாதனையாகும்.

ஆந்திர மாநிலம் ஐதராபாத் தைச் சேர்ந்த 21 வயதான இளம் பாட்ஸ்மேன் 1.2.85 அன்று காலை இந்தச் சாத னையை நிகழ்த்தினார்.

இங்கிலாந்துக்கு எதிராகக் கல்கத்தாவில் நடந்த 3வது டெஸ்டில் திரு அசாருதீன் அறி முகப்படுத்தப்பட்டார். முதல் டெஸ்டிலேயே அவர் 110 ரன் அடித்தார். அடுத்து, சென்னை யில் நடந்த டெஸ்டில் 105 ரன் எடுத்தார். கான்பூரில் நடைபெற்ற டெஸ்டில் முதல் இன்னிங்ஸில் அவர் 122 ரன் எடுத்துள்ளார்.

இதையொட்டி இளம் வீர ருக்கு கான்பூர் ஸ்டேடியத்தில் மகத்தான பாராட்டு கிடைத் தது.

இதற்கு முன்பு இரண்டு ''டெஸ்ட்'' போட்டிகளில் ''சதம்'' எடுத்ததுதான் உலகச் சாதனையாக இருந்து வந்தது. இந்தச் சாதனையைப் புரிந்த வர்கள்:

1. பில் ஸ்போன்ஸ் போர்டு (ஆஸ்திரேலியா), 2. டக்ளஸ் வால்டர்ஸ் (ஆஸ்திரேலியா), 3 காளிச்சரன் (வெஸ்ட் இண்டிஸ்)

இப்போது திரு அசாருதீன் இதை முறியடித்துப் புதிய சாதனையை உருவாக்கியுள் ளார்.

உலகச் சாதனை புரிந்துள்ள அசாருதீனைப் பாராட்டி மாண்புமிகு பிரதமர் திரு ராஜீவ் காந்தி அவர்கள் வாழ்த்துச் செய்தி அனுப்பி யுள்ளார். அதில், ''சாதனை யைத் தொடருங்கள், எங் களுக்குப் பெருமையாக உள் ளது'' என்று கூறியுள்ளார்.

திரு அசாருதீன் கிரிக்கெட் உல கச் சாதனை புரிந்ததும், அவ ரைப் பாராட்டி மேதகு இந்தி யக் குடியரசுத் தலைவர் திரு கியானி ஜெயில்சிங் அவர்கள் வாழ்த்துச் செய்தி அனுப்பி னார். அதில் ''நீங்கள் நிகழ்த் திய உலகச் சாதனையைப் பெரிதும் பாராட்டுகிறேன். தொடர்ந்து வெற்றிகளைக் குவிக்க வாழ்த்துகிறேன்'' என்று கூறியுள்ளார்.

புதிய வரலாறு படைத் துள்ள திரு அசாருதீனுக்குப் பாராட்டுத் தந்தி ஒன்றை மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்கள் நியூயார்க் மருத்துவமனையில் இருந்த போது அனுப்பினார்.

அதில் அவர் கூறியிருப்ப தாவது.

''கிரிக்கெட்டில், தொடர்ச் சியாக 2 'டெஸ்ட்'' பந்த யங்களில் 100 ரன்கள் (செஞ்சுரி) எடுத்து உலகச்






மாண்புமிகு சட்டப் பேரவைத் தற்காலிகத் தலைவர் திரு ப.உ. சண்முகம் அவர்கள் முன்னிலையில், மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் 26.2.85 அன்று சட்டப் பேரவை உறுப்பினராகப் பதவிப் பிரமாணம் எடுத்துக் கொண்டார்.

சாதனை புரிந்துள்ள ஆஸ்திரேலியா நாட்டைச் சார்ந்த பில்பான்ஸ்போர்டு, டக்ளஸ்வால்டர்ஸ் மற்றும் மேற்கு இந்தியத் தீவைச் சேர்ந்த ஆல்வின் காளிசரன் ஆகியோரின் சாதனைகளை முறியடித்து தொடர்ந்து 3 ''டெஸ்ட்'' பந்தயங்களில் ''செஞ்சரி'' எடுத்து ஒரு புதிய உலகச் சாதனையை நீங்கள் ஏற்படுத்தி இருப்பதைக்கேட்டு மிகவும் மகிழ்ச்சியடைகிறேன்.

''கிரிக்கெட் உலகத்தில் இந்தியாவின் பெருமையை இமாலய உச்சிக்கே உயர்த்தி விட்டீர்கள். நீங்கள் எடுத்துள்ள இந்தப் புதிய சாதனை இந்தியா முழுவதும் உள்ள துடித்துக் கொண்டிருக்கும் இளம் கிரிக்கெட் வீரர்களுக்கும், ரசிகர்களுக்கும் நல்ல ஊக்கத்தையும் உற்சாகத்தையும் கொடுக்கும்.

''தாங்கள் அடைந்துள்ள அபாரமான சாதனைக்கு என்னுடைய அன்பான வாழ்த்துக்களையும், பாராட்டுகளையும் தெரிவிப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன்.''

மாண்புமிகு ஆந்திர முதல் அமைச்சர் திரு என்.டி.ராமாராவ் அவர்களும் திரு அசாருதினுக்குப் பாராட்டு தெரிவித்திருக்கிறார்.

தனக்கு வாழ்த்து தெரிவித்த பிரதமர் அவர்களுக்கு திரு அசாருதீன் நன்றி தெரிவித்துள்ளார்.

''தங்களின் பாராட்டு எனக்கு மிகுந்த உற்சாகத்தைக் கொடுக்கிறது. கிரிக்கெட் சாம்ராஜ்யத்தில், நமது இந்தியக் கொடியைத் தொடர்ந்து வானளாவப் பறக்க விட்டுக் கொண்டே இருப்பேன் என்று உறுதி கூறுகிறேன்.''

மகன் புரிந்த சாதனை பற்றித் திரு அசாருதீனின் தந்தை கூறியதாவது:

''எப்படியாவது 3-வது சதத்தையும் என் மகன் போடவேண்டும். அதன்மூலம் உலகச் சாதனை நிகழ்த்த வேண்டும் என்று விரும்பினோம். எங்களுக்குள் பரபரப்பு அதிகமானது.

''எங்களால் எங்களையே கட்டுப்படுத்திக் கொள்ள முடியவில்லை. நெஞ்சே வெடித்து விடும்போல இருந்தது. ஆனால் என் மகன் கொஞ்சம் கூட பரபரப்பு இல்லாமல் மிகவும் நிதானமாக அடிக்கொண்டிருந்தது எங்களுக்கே ஆச்சரியமாக இருந்தது.

''எங்கள் வாழ்நாளில் நேற்றுத்தான் எங்களுக்குப் பொன்னான நாள். இந்த மகிழ்ச்சியான நாளுக்கு ஈடு இணையாக இனிமேல் எங்கள் வாழ்வில் ஒரு நாள் வருமா? என்பது சந்தேகம்தான்.''

# குழந்தைகள் நலம்

ஆப்பிரிக்காவிலுள்ள 46 நாடுகளை ஒன்றாகச் சேர்த்தாலும் குழந்தைகள் அதிகமுள்ள நாடு இந்தியாவே. ஆனால் பெரும்பான்மையான இக்குழந்தைகள் வறுமையில் வாடுகின்றனர். மூன்றில் ஒரு பங்குக் குழந்தைகள் எடை குறைவாகும். ஏழு குழந்தைகளில் ஒரு குழந்தை ஐந்து வயதுக்கு முன்பே இறந்து விடுகின்றது. நீரிழப்பு மற்றும் தடுப்பு ஊசியின்மையால் ஆண்டுதோறும் 30 லட்சம் குழந்தைகள் இறக்க நேரிடுகிறது.

குழந்தைகள் நலத்திற்கான சிறுதிட்டங்கள் மற்றும் முன்னோடித் திட்டங்களால் முன்னேற்றம் உறுதி செய்யப்பட்டுள்ளது. மாநில அரசுகளின் ஒத்துழைப்புடன் அம்மை மற்றும் தடுப்பூசித் திட்டங்கள் மூலம் 1990-ல் 85சதவீதக் குழந்தைகள் பயன்பெறும்.


ஒருங்கிணைந்த குழந்தைகள் நலத் திட்டத்திற்குப் பால்வாடி மையங்கள் பெரிதும் உறுதுணையாக விளங்குகின்றன. ஒவ்வொரு பால்வாடி மையத்திலும் 6 வயதுக்குட்பட்ட 100 குழந்தைகள் பராமரிக்கப்படுகின்றன.

தமிழ்நாட்டில் 2 முதல் 4 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு நாளொன்றுக்குத் தலா44 காசுகள் மதிப்புள்ள சத்துணவு வழங்கப்படுகிறது. 2 வயதுக்குட்பட்ட குழந்தைகள் கர்ப்பிணிகள் மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்கு 'கேர்' நிறுவனத்தின் மூலம் சத்துணவு வழங்கப்படுகிறது.

தமிழ்நாட்டின் கிராமப்பகுதிகளிலுள்ள 22,961 மையங்கள் மற்றும் 4933 நகர்ப்புற மையங்கள் மூலம் பல லட்சம் குழந்தைகளுக்குச் சத்துணவு வழங்கப்படுகிறது. இதனால் கிராமப்பகுதியிலுள்ள 1.5 இலட்சம் பெண்கள் வேலை வாய்ப்புப் பெறுகின்றனர்.

ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டப்பகுதிகளைச் சேர்ந்த 15 மையங்களில் ஒரு ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. 21 மாதங்களில் 21.9 சதவீதமாக இருந்த ஊட்டச் சத்தின்மை 5.4 சதவீதமாகக் குறைந்துள்ளது இதன் மூலம் கண்டறியப்பட்டுள்ளது.







# நோய் வருமுன் காப்போம்!

சென்னை மருத்துவக் கல்லூரியின் 150-வது ஆண்டு விழாவை ஒட்டி கல்லூரியின் முதலாவது சிறப்பு விருதளிப்பு (பெல்லோஷிப்) விழாவும், வீடியோ நூலகத் திறப்பு விழாவும் 7.2.85 அன்று காலை மருத்துவக் கல்லூரி வளாகத்தில் நடைபெற்றன.

மேதகு குடியரசுத் துணைத்தலைவர் திரு ஆர்.வெங்கட்ராமன் அவர்கள், மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர் எச். வி. ஹண்டே அவர்கள், தமிழக மருத்துவத்துறைச் செயலர் திரு ஆர். சண்முகம் ஆகியோருக்குச் சென்னை மருத்துவக் கல்லூரியின் சிறப்பு விருது வழங்கப்பட்டது.

சிறப்பு விருது வழங்கும் விழாப் பேருரையாற்றிய மேதகு குடியரசுத் துணைத்தலைவர் திரு ஆர்.வெங்கட்ராமன் அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டார்:

"பழமையையும் புதுமையையும் இணைப்பதாக இந்தச் சிறப்புப்பட்டமளிப்பு விழா அமைந்துள்ளது.

"மருத்துவக் கல்லூரியின் முக்கிய இரண்டு பணிகளான-எதிர்கால மருத்துவர்களை உருவாக்குவது, நோயாளிகளுக்கு உரிய சிகிச்சை அளித்துக் குணப்படுத்துவது ஆகியவற்றைச் சென்னை மருத்துவக் கல்லூரி மிகச் செம்மையாக நிறைவேற்றி வருகிறது.

"மாண்புமிகு தமிழக முதலமைச்சர் திரு எம்.ஜி.ஆர். கொடிய நோய்த் தாக்குதலிலிருந்து மீண்டும் முழுமையான உடல் நலம் பெற்றுள்ளது மருத்துவத் துறையின் சாதனைக்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டு.

"மருத்துவத் துறையில் ஏற்பட்டுள்ள வியத்தகு முன்னேற்றமும், நவீன வசதிகளும், ஒருகாலத்தில் மனித குலத்துக்குச் சவால் விட்டுக் கொண்டிருந்த கொடிய நோய்களைத் தற்போது ஒழித்துக் கட்டியுள்ளன. இருந்தபோதிலும் காசநோய் போன்ற நோய்கள் ஏற்படுவதற்கு முன்பாக அவற்றைத் தடுக்கும் வழிமுறைகளைக் கண்டுபிடித்து மக்களிடையே பரப்பவேண்டும். பொதுவாகவே நோய் வருமுன் காக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவது சாலச் சிறந்தது.

"சாதாரண நடுத்தர மக்களுக்கு மருத்துவச் செலவுச்சுமையை அதிகரிக்காத வகையில் குறைந்த செலவிலான மருந்துகளையே மருத்துவர்கள் சிபாரிசு செய்ய வேண்டும். தேவையற்ற வீணான செலவுகளை அதிகரிக்கக் கூடிய மருத்துவப் பரிசோதனைகளையும் தவிர்க்கவேண்டும்.

"கிராமப்புற மக்களுக்குக் கூடுதலான மருத்துவ வசதி, குறிப்பாகத் தொற்று நோய்த் தடுப்பு மருந்து வசதிகள் கிடைக்கச் செய்ய வேண்டும்.

"உலக நாடுகள் ராணுவ காரியங்களுக்காக ஒதுக்கும் தொகையில் ஒருநாள் செலவை மட்டும் மலேரியா ஒழிப்பு போன்ற சுகாதார மேம்பாட்டுப் பணிகளுக்குப் பயன்படுத்தினாலேயே போதுமானது. மேலும், அழிவு காரியங்களுக்காகச் செலவிடப்படும் அளவுக்கு மனித குல வளர்ச்சி மற்றும் ஆக்கப்பூர்வமான பணிகளுக்கு அவை (உலக நாடுகள்) செலவிடுவதில்லை.

"கண்டுபிடிப்புகள் மற்றும் ஆராய்ச்சிப் பணிகள் வளர்ச்சியுற வேண்டும். பல்வேறு ஆராய்ச்சிகளின் பலனாகத்தான் மருத்துவ உலகம் பல்வேறு கண்டுபிடிப்புகளைத் தன்னகத்தே தற்போது கொண்டுள்ளது. எனவே, ஆராய்ச்சிப் பணிகள் தொடர்ந்து நடைபெற வேண்டும். ஆயுர்வேதம், சித்த வைத்தியம், யுனானி ஆகியவற்றிலும் ஆராய்ச்சிப் பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

"மருத்துவத் தொழிலில் ஈடுபட்டுள்ள டாக்டர்களுக்கு அவ்வப்போது மறுபயிற்சி வகுப்புகள் நடத்தப்பட வேண்டும். அதன் மூலம், நவீன மருத்துவ முன்னேற்றம் குறித்து அவர்கள் பூரணமாக அறிந்து கொண்டு பணியாற்ற முடியும்.

"உன்னதமான மருத்துவத் தொழிலை மனித குலத்துக்கு அருந்தொண்டு ஆற்றிடும் வகையில் மருத்துவர்கள் பணி புரியவேண்டும்"

# 'கவிஞர் சாமி பழனியப்பன் கவிதைகள்' வெளியீட்டு விழா



"கவிஞர் சாமி பழனியப்பன் கவிதைகள்" நூல் வெளியீட்டு விழா சோவியத் கலாசாரக் கழக அரங்கில் தமிழ் எழுத்தாளர் சங்கத்தலைவர் திரு. விக்கிரமன் தலைமையில் 16.2.1985 மாலை சிறப்பாக நடைபெற்றது. மாண்புமிகு செய்தி அறநிலையத் துறை அமைச்சர் திரு இராம. வீரப்பன் அவர்கள் நூலை வெளியிட, திரைப்பட இயக்குநர் திரு.எஸ்.பி. முத்துராமன் முதற் பிரதியைப் பெற்றுக் கொண்டார்.

விழாவுக்கு வந்திருந்தோரை, புஷ்கின் இலக்கியப் பேரவையின் சார்பில் திரு.த.சலாவுத்தீன் வரவேற்றார்.

விழாத் தலைவர் திரு. விக்கிரமன், உரையாற்றும்போது, "1956 ஆம் ஆண்டிலேயே கவிஞர் சாமி பழனியப்பனின் கவிதையை இந்து முதலான பல பத்திரிகைகள் பாராட்டியுள்ளன" என்று குறிப்பிட்டார்.

திரைப்பட இயக்குநர் திரு எஸ்.பி.முத்துராமன் தமது உரையில், "நான் மாணவனாக இருந்த காலத்தில் எழுதுவதற்கும், மேடையில் பேசுவதற்கும் வழிகாட்டியாக அமைந்தவர் கவிஞர் சாமி பழயினியப்பன். தந்தை பெரியாரின் குடியரசுப் பத்திரிகையில் பகுத்தறிவு வழி நிற்கும் இவர் பாராட்டுப் பல பெற்றிருக்கிறார் "என்று குறிப்பிட்டார்.

அடுத்து, சோவியத் கலாசாரக் கழகத்தின் பொறுப்பாளர் திரு ஃபெ லோவ் ரஷியக் கவிஞர் புஷ்கின் அவர்களின் கவிதைத் தொண்டு குறித்து உரையாற்றினார்.

அடுத்து உரையாற்றிய திரு. த.கோவேந்தன், "பல ஆண்டுகளுக்கு முன்பு கவிஞர் சாமி பழனியப்பன் எழுதிய இந்திஎதிர்ப்புப் பாடல்கள் பலருக்கும் உந்துதலைத் தந்தன" என்றார்.

அடுத்து உரையாற்றிய பெருங்கவிக்கோ வா.மு.சேதுராமன், "மரபுக் கவிதைகளைச் சிறப்பாக எழுதிவரும் சாமி பழனியப்பன் ஓர் ஒப்பற்ற கவிஞர்" எனக் குறிப்பிட்டார்.

"பொன்னி பத்திரிகை அறிமுகம் செய்து வைத்த பாவேந்தர் பரம்பரையின் 47 பேரில் சாமி பழனியப்பனும் ஒருவர். இவர் வாழ்கிறார் என்றால் பாவேந்தர் மரபு வாழ்கிறது என்று பொருள்" என, உவமைக் கவிஞர் சுரதா, தமது உரையில் தெரிவித்தார்.

செய்தி-மக்கள் தொடர்புத் துறையின் துணை இயக்குநர் திரு.வி.டி.வீரப்பன் அவர்கள், 'தமிழரசு' இதழின் சார்பில் சுவர்க்கடிகாரம் ஒன்றைக் கவிஞருக்கு அன்பளிப்பாக வழங்கி உரையாற்றினார். அப்போது அவர் குறிப்பிட்டதாவது:

"சாமி பழனியப்பன், பெரியார் அவர்களின் கொள்கைகளால் ஈர்க்கப்பட்டவர்; இன்றும் அரசுத் துறையின் சார்பில் உருவாக்கப்பட்டு வரும் பெரியார் நூல்கள் வெளியீட்டுப் பெரும்பணியில் இவர் ஈடுபட்டுள்ளார்."

வாழ்த்துரை வழங்கிய மாண்புமிகு சட்டமன்ற மேலவைத் தலைவர் சிலம்புச் செல்வர் டாக்டர் ம. பொ. சிவஞானம் அவர்கள் குறிப்பிட்டதாவது:

"1949ல் நான் இலங்கைக்குச் சென்றபோது அங்கு வீரகேசரி பத்திரிகையில் சாமி பழனியப்பன் பணியாற்றி வந்தார். அவர் உத்வேகத்துடன் கவிதைகள் எழுதி வந்தார்.

"விசாலமான பாதையில் நடைபோட்ட மகாகவி பாரதியின் பாதையில் பாரதிதாசன் நடைபோட்டார். பாரதிதாசனை வழிகாட்டியாகக் கொண்டு இவர் தமது கவிதைகளை உருவாக்கினார்."

கவிஞர் சாமி பழனியப்பன் அவர்களுக்குப் பொன்னாடை போர்த்தி, பாராட்டுரை வழங்கிய மாண்புமிகு செய்தி - அறநிலையத்துறை அமைச்சர் திரு இராம. வீரப்பன் அவர்கள் தமது உரையில் குறிப்பிட்டதாவது:

"முருகு சுப்பிரமணியம் அவர்கள் நடத்திய பொன்னி பத்திரிகையில் பாரதிதாசன் பரம்பரை என்ற வரிசையில் முதலிடம் பெற்றவர் கவிஞர் சாமி பழனியப்பன். தமது திறமைக்கு ஏற்ற அளவில் இவர் வளர்ச்சி பெறவில்லை என்பதை நாம் ஏற்றுக் கொண்டே ஆக வேண்டும். வாழ்க்கைக்கு எனச் சில பொறுப்புகளைத் தேர்ந்தெடுத்து அவற்றை நிறைவேற்றுவதுதான் அவர்களது பொறுப்பு.

"சாமிபழனியப்பன் தனது திறமையை வெளிப்படுத்த முடியாத சூழ்நிலை ஏற்பட்டுவிட்டது. அரசுப் பணியை அவர் மேற்கொண்டதால், பெற வேண்டியதைப் பெறவில்லை.

"இன்று கவிஞர் உலகில் கற்பனை மிக்க இளைஞர்கள் பலர் புறப்பட்டிருக்கிறார்கள் ஆவேசம் மிகுந்த - அனுபவம் குறைந்த அவர்களது கற்பனைகளுக்கு அரண் அமைக்காவிட்டால் அது ஆபத்தாகப் போய் முடியும்.

"ஒரு கவிஞன் தொடக்கத்தில் எப்படி இருந்தான், இடையில் எப்படி மாற்றம் பெற்றான், இறுதியில் என்ன சொல்கிறான் என்று பார்க்க வேண்டும். மற்ற துறையில் இருப்பவர்களுக்கு நிலையான கருத்து இருக்க முடியும். ஆனால் கவிஞர்கள் அப்படி இல்லை. உலகம் உள்ளவரை மாறிக்கொண்டே இருப்பவர்கள். இது பரிணாம வளர்ச்சி ஆகும்"

நூலாசிரியர் கவிஞர் சாமி பழனியப்பன் அவர்கள் ஏற்புரை நிகழ்த்த, அதன் பின்னர், ஏர்வாடி இராதாகிருஷ்ணன் நன்றியுரை கூறினார்

– எஸ். எஸ். சுந்தரம்






இந்தியாவில் உள்ள சீன நாட்டின் தூதுவர் திரு லியான் குலிங், மேதகு தமிழக ஆளுநர் திரு எஸ். எல். குரானா அவர்களை, ஆளுநர் மாளிகையில் 15-2-1985 அன்று சந்தித்தார்.



தமிழகத் திரைப்படத் துறையினர் மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களைச் சந்தித்து வாழ்த்துத் தெரிவித்தனர். (19-2-'85)



திரு ப. உ. சண்முகம் அவர்கள், 23.2.'85 அன்று சட்டப் பேரவையின் தற்காலிகத் தலைவராகப் பதவிப் பிரமாணம் செய்து வைக்கப் பெற்றார்.



# ஊனமுற்றோருக்கு உதவிக் கரம்

"ஒரு தொண்டு நிறுவனம் எவ்வாறு செயல்பட வேண்டும் என்பதற்கு ஓர் உதாரணமாக பகவான் மகாவீரர் அகிம்சை பிரச்சார சங்கம் விளங்குகிறது. இந்தச் சங்கத்தின் துயர் துடைப்புப் பணிகள் மிகவும் பாராட்டப்பட வேண்டியவை ஆகும்'' என்று மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் டாக்டர் எச்.வி.ஹண்டே அவர்கள் கூறினார்.

*28.1.85* அன்று சென்னை ராஜாஜி மண்டபத்தில் பகவான் மகாவீரர் அகிம்சை பிரச்சாரச் சங்கம் ஏற்பாடு செய்திருந்த சீர்மிகு விழாவில் உடல் ஊனமுற்றோருக்குக் கருவிகள் இலவசமாக வழங்கப்பட்டன. மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் விழாவுக்குத்தலைமை வகித்தார். அவர் மேலும் பேசுகையில்–

''பிற்காலத்தில் உடல் ஊனம் ஏற்படுவதைத் தடுக்க இளம் வயதில் தடுப்பு மருந்துகளைத் தரலாம். இதற்காக முகாம்களை நடத்தலாம். பகவான் மகாவீரர் அகிம்சைப் பிரசாரச் சங்கம் இது குறித்துப் பரிசீலிக்க வேண்டும். இந்த வகையில் எல்லாவித ஒத்துழைப்பையும் அளிக்கத் தமிழ்நாடு அரசு தயாராக உள்ளது'' என்று கூறினார்.



பகவான் மகாவீரர் அகிம்சைப் பிரசாரச் சங்கம் ''தன்ராஜ் ஜெக்ராஜ் பெர்மேச்சா உடல் ஊனமுற்றோருக்கான ஜைன நிதி''யிலிருந்து இலவசமாக ஏற்பாடு செய்திருந்த கருவிகளை மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் திரு எஸ். ஆர்.ராதா அவர்கள் உடல் ஊனமுற்றோருக்கு வழங்கிப் பேசுகையில், சுயநலம் இல்லாமல், எந்தவிதமான பிரதிபலனையும் எதிர்பார்க்காமல் இந்தச் சங்கம் பணி புரிகிறது'' என்று குறிப்பிட்டார்.







மூன்று சக்கர சைக்கிள், சக்கர நாற்காலிகள், காது கேட்கும் கருவிகள், ஊன்று கோல்கள் ஆகியன வழங்கப்பட்டன.

இச்சங்கத்தின் நிறுவனத் தலைவர் காலஞ்சென்ற எஸ்.மோகன்மல்ஜி சோர்டியா நினைவாகத் தயாரிக்கப்பட்ட ''அகிம்சா-கா-அக்ர தூத்'' சிறப்பு மலரை மாண்புமிகு பாசனத்துறை அமைச்சர் திரு ஓய்.எஸ்.எம். யூசுப் அவர்கள் வெளியிட்டார். அன்னாரின் புதல்வர்கள் சிறப்பு மலரின் பிரதிகளை அமைச்சரிடமிருந்து பெற்றுக் கொண்டார்கள்.

**அன்னாரின் கொடை உள்ளம், தார்மீக நோக்கு, கடுமையான உழைப்பு ஆகியவை பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்**கள் குறிப்பிட்டுப் பாராட்டினார்.

எஸ்.சம்பாலால்ஜி கோல்சா நினைவு ஆறாவது அகிம்சைக் கட்டுரைப் போட்டியில் வெற்றி பெற்ற மேல்நிலைப் பள்ளி மாணவ, மாணவியருக்கு வெள்ளிப் பதக்கங்களையும் சான்றிதழ்களையும் மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் திரு. க. ராசாராம் அவர்கள் வழங்கினார்.

''வன்முறை தவிர்க்கப்பட வேண்டும், அன்புநெறி வளர வேண்டும் என்ற நோக்கில் இச்சங்கம் பணி புரிகிறது'' என அவர் குறிப்பிட்டார்.




தமிழ்நாடு அரசு மறுவாழ்வு மருத்துவக் கழக இயக்குநர் டாக்டர் ஐ.எஸ். சண்முகம், பேராசிரியர் தி.முத்துக்கண்ணப்பர், திரு ஜி.உமாபதி, திரு பவர்லால்ஜி சோட்டி ஆகியோர் பேசினர். 'கலைமாமணி' கருப்பையா அறிமுக உரை நிகழ்த்தினார்.

அன்றைய விழா, ஊனமுற்றோருக்கு உதவிக்கரமாக விளங்கியது என்றால் அது மிகையல்ல!

**பீ.வி.ஜி.**

# பார்த்தோம் படித்தோம்

1-2-85 தமிழரசு இதழில் முதல்வர் படம் நன்றாகச் சித்திரித்திருந்தது சிறப்பு அம்சமாகும். கவிஞர் பட்டுக்கோட்டை இராசேந்திரனின் 'அண்ணா, அண்ணா...' கவிதையும், கவிஞர் இளந்தேவனின் 'காலத்தை வென்ற மகன் கண்மூடித் தூங்கட்டும்' கவிதையும் என் உள்ளத்தைத் தொட்டன.

— எஸ். பி. சந்தான ராஜகோபால்,
அக்கரைக்கோட்டகம்.

கருத்துக்கு விருந்தளிக்கும் கவின்மிகு காட்சி அரங்குளை நேரில் காண்பதற்கு வாய்ப்பில்லாத என் போன்றவர்களுக்கு, தங்களது இதழ் நேரில் கண்டுணரும் வாய்ப்பினை அளித்தது.

— மதுரை வீ. ஹரிகிருஷ்ணன்
திருச்சி.

1-2-85 இதழில் ''மாபெரும் வெற்றி'' 'மக்களுக்காக நாங்கள்' ''திருவள்ளுவர் திருநாள்'' ஆகிய கட்டுரைகள் நன்றாக இருந்தன.

— எஸ். என். சிங்காரம்,
செருகடம்பூர்.

'நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்' என்ற தலைப்பில் வெளியான கட்டுரை உண்மையில் ஒரு செல்வமாக அமைந்திருந்து.

— இரா. ஜெகந்நாதன்
அக்கரைப்பட்டி, திருச்சி

அறிஞர் அண்ணாவைப் பற்றிய கவிதைகள், கட்டுரைகள் படித்த போது என்னையே நான் மறந்தேன்.

— திருமதி நாராயணராவ்
சென்னை-39.

மாணவர் பக்கத்தில் ஒவ்வொரு இதழிலும் வெளிவரும் செய்திகள் படிப்பதற்கு மட்டுமல்லாமல் பாதுகாக்கப்பட வேண்டியவையுமாகும்.

— புதூர் குமரன்,
ஒரத்தநாடு.

அறிஞர் அண்ணா பற்றிய பல கவிதைகளை வெளியிட்டு, அண்ணா நினைவு நாளில் அஞ்சலி செலுத்தியது மிகவும் பொருத்தமாக இருந்தது.

— செந்தூர் மணியன்,
திருச்செந்தூர்.

'எல்லாம் ஆனாய் அண்ணா' என்ற கவிஞர் மு. முத்துக்காளத்தி பாடலில், 'உத்தமவாய் வாழ்ந்து உயரத்தில் கொண்டு வைத்தாய், அத்தனைக்கும் கைம்மாறாய் அமைந்ததே இவ்வரசு' என்ற வரிகள் பொற்காலத்தைச் சொல்லாமல் சொல்லுகின்றன.

'தாயென வாழ்ந்த அண்ணா தகவினை நினைவோம்' என்ற கவிஞர் தமிழ்ப்பித்தன் பாடல் சொற்சுவை பொருள் சுவை எளிமையழகு அமைந்து கற்கண்டு கட்டிகள் போல உள்ளது.

—ஆ. செயராமன்
வெள்ளிமேடுபேட்டை

இதழுக்கு இதழ் துணுக்குத் தோரணங்கள் அணிசெய்கின்றன.

—ஓ. எஸ். குத்புதீன்
திட்டச்சேரி.

காந்தியடிகளைப் பற்றி அறிஞர் அண்ணா எழுதிய கட்டுரையும், அம்மகானைப் பற்றிப் பண்டித நேரு எழுதிய கட்டுரையும் இம்மாதத் தமிழரசை அலங்கரிக்கின்றன.

'இளைஞர் ஆண்டை ஒட்டி இளைஞர்களைப் பற்றிய அண்ணாவின் கட்டுரையை வெளியிட்டிருப்பது மிகப் பொருத்தம்.

—த. பூபதி. காயல்பட்டணம்

சிந்தையைக் கவரும் சீரிய கவிதைகள், சிறப்பான கட்டுரைகள் படித்தேன்; ரசித்தேன்.

—ஆர். ஜி. துரைராஜு
திருச்சி

''அறிவியல் சாளரம்'' ''செய்திகள் செய்திகள்'' ''நூல் நயம்'' போன்ற பகுதிகள் சிறப்பாக உள்ளன.

—ஜி. டி. சத்யா
கீழப்பழுவூர்

தலைநகர் வந்து சுற்றுலா, மற்றும் தொழில் பொருட்காட்சி காண இயலாத தொலைதூர மக்களுக்கும் பொருட்காட்சியின் ஒவ்வொரு அங்குலத்தையும் தொலைக்காட்சியைப் போலத் துல்லியமாய்ப் படம் பிடித்துக் காட்டியது, ''கருத்துக்கு விருந்தளிக்கும் கவின்மிகு காட்சி அரங்குகள்'' என்னும் கட்டுரை.

—தளவை இளங்குமரன்
செங்கல்பட்டு.

## ஆகா! இந்தப் பழம் இனிக்கும்!

விஞ்ஞானிகளின் ஆராய்ச்சி விவசாயிகளுக்குப் பயன்படும் திட்டத்தின் மூலம் சிறு விவசாயிகளின் தரிசு நிலங்கள் இன்று மிகுந்த மகசூலை அளித்து அவர்களது வாழ்க்கையை மாற்றி வருகின்றன.

விவசாயத்திலிருந்து தொடர்ந்து வருவாய் கிடைக்க இத்திட்டம் துணை புரிகின்றது. முற்போக்கு விவசாயிகள், வேளாண்மைத்துறை வல்லுநர்கள் கூறும் அறிவுரையின்படி தங்கள் தரிசு நிலங்களைப் பயிரிட்டுத்தானியக் குவியல்களாக மாற்றி வருகின்றனர்.

மதுரை மாவட்டத்தில் காந்தி கிராமத்தில் வெங்கடசாமி என்கின்ற விவசாயி கடந்த 5 ஆண்டுகளாகத் திராட்சைத் தோட்டத்தை வைத்துப் பயிரிட்டு வருகின்றார். ஆரம்பத்திலிருந்து அவரது சிறு நிலத்தினின்று 2,500 கிலோ கிராம் திராட்சையே அவருக்குக் கிடைத்தது. காந்தி கிராம வேளாண்மை ஆராய்ச்சி நிறுவனத்தின் விஞ்ஞானிகள் அவருக்குப் புதிய சாகுபடிமுறை பற்றிய ஆலோசனையை அளித்தனர். உரக வளர்ச்சித் திட்டம் இதற்குத் துணை புரிந்தது. விசேட உரங்கள் மற்றும் பருவத்திற்கு ஏற்ற ஆலோசனைகளின் மூலம் இவ்வாண்டு அவரது மகசூல் இரட்டிப்பாகிறது.

இவ்வாண்டு அவருக்கு 5,000 கிலோ கிராம் திராட்சை உற்பத்தி கிடைத்தது. தமது திராட்சைகள் அனைத்தும் இனிப்பானவை என்று பெருமிதமாக அவர் கூறுகிறார். வருகின்ற பருவ காலத்தில் திராட்சையை அதிக ஏக்கரில் பயிரிட அவர் உத்தேசித்துள்ளார். திண்டுக்கல் திராட்சை, தமிழ்நாடு முழுவதும் நன்றாக விற்பனை ஆகின்றது. காரணம் அவற்றின் இனிப்புத் தன்மையேயாகும்





# இலக்கண இமயம்

மா.சு.சம்பந்தன்

அண்மையில் மறைவுற்ற மகாவித்துவான் மே. வீ. வேணுகோபாலப்பிள்ளை அவர்கள், தமிழுலகம் நன்கு தெரிந்த முது பெரும் தமிழ்ப்புலவராவர். இவர் புகழ் பெற்ற புதுவை ஆனந்த ரங்கம் பிள்ளையின் மரபைச் சார்ந்தவர்.

சைதாப்பேட்டைக்கு மேற்கிலுள்ள மேட்டுப்பாளையம் என்னும் சிற்றூரில் வாழ்ந்த வீராசாமி பிள்ளை - பாக்கியம் அம்மைக்கு 31-8-1896இல் மகனாகப் பிறந்த இவர், சைதை ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியைச் சார்ந்த மாதிரிப் பள்ளியில் (Model School) தொடக்கத்தில் சேர்ந்து படித்தவர். குடும்ப நிலை காரணமாகப் பள்ளிப் படிப்பை இடையிலே விட்டுவிட நேர்ந்தது.

பின்னர், இவரது குடும்பம் சென்னைக்குக் குடியேறியபோது சென்னை வேப்பேரியில் எஸ். பி.சி.கே. அச்சகத்தில் அச்சுக் கோக்கும் பணியில் சேர்ந்தார். என்றாலும் கல்வியில் இவருக்கு இருந்த ஆர்வம் காரணமாக இரவுப் பள்ளியில் சேர்ந்து ஓய்வு நேரத்தையெல்லாம் அறிவைப் பெருக்கிக் கொள்வதிலே நாட்டஞ் செலுத்தினார். அடுத்து, அஞ்சலகத்திலும் வழக்கறிஞரிடத்திலும் ஊழியம் செய்துமுள்ளார்.

சென்னையில் தமிழ் இலக்கிய இலக்கணங்களில் வல்லுநராய்த் திகழ்ந்த திரு கா.ரா. கோவிந்தராச முதலியாரிடத்தில் வேணுகோபாலர் முறையாகத் தமிழ்ப் பாடங்கேட்டுப் புலமை அடைந்தார். மேலும், தம் சொந்த விடா முயற்சியால் திரு கலா நிலையம் சேஷாசல ஐயர் நடத்தி வந்த இரவுப் பள்ளியில் சேர்ந்து ஆங்கிலத்தையும் நன்கு கற்றுத் தேர்ந்தார். சென்னைப் பல்கலைக் கழகம் நடத்தி வந்த வித்துவான் தேர்விற்குச் சென்று வித்துவான் பட்டமும் பெற்றார்.

சென்னை முத்தியாலுப் பேட்டை உயர்நிலைப் பள்ளியில் 1920-23ல் தமிழாசிரியராகவும், புரசை பெப்ரீஷியஸ் உயர்நிலைப் பள்ளியில் 18 ஆண்டுகளாகத் தலைமைத் தமிழாசிரியராகவும் பணியாற்றினார். இவர் பள்ளி மாணவர்களுக்குத் தமிழ்கற்றுக் கொடுத்ததோடு நில்லாமல் ஜெர்மானியப் பாதிரிமார்களுக்கும், சென்னை குருக்கள் கல்லூரி என்னும் கிறிஸ்தவ மதக் கல்லூரி மாணவர்களுக்கும் சைவ வைணவ நூல்களைப் போதிக்கும் சித்தாந்தப் பேராசிரியராகவும் இருந்து பயிற்றுவித்துள்ளார். தே. சோமசுந்தரம் செட்டியார் நினைவாக நிறுவப்பட்ட சுந்தரர் தமிழ்க் கல்லூரியில் இவர் தலைமையாசிரியராக இருந்து பணி புரிந்தார்.

இவர் தமிழாசிரியர் தொழிலை விட்டு ஓய்வு பெற்ற பின்பும், விரும்பியவர்களுக்கு முறையாகத் தமிழ் நூல்களைப் பாடஞ் சொல்லி வந்தார்; எழுத்து வேலையையும் பதிப்புத் தொழிலையும் மேற்கொண்டார். தொடக்கப் பள்ளிக்கும் உயர்நிலைப் பள்ளிக்கும் ஏற்ற பல பாட நூல்கள் இவர் எழுதிக் கொடுத்துள்ளார்.


இவர் 'பத்திராயு அல்லது ஆட்சிக்குரியோன்' (1928), 'திருகண்ணபிரானார்' (1929), 'குணசாகரர் அல்லது இன்சொல் இயல்பு' (1929), 'அற்புத விளக்கு' 'அரிச்சந்திர புராணச் சுருக்கம்' 'இளைஞர் தமிழ்க் கையகராதி', அராபிக் கதைகள்' கம்பராமாயணம் நான்கு பகுதிகள் முதலான நூல்களை எழுதி வெளியிடச் செய்துள்ளார்.

இரண்டாம் உலகப் போர்க் காலத்தில் இவர் காஞ்சிபுரத்திற்குச் சென்று வாழ்ந்திருந்த போது, திருத்தக்க தேவர் இயற்றிய 'சீவக சிந்தாமணி'யை யாவரும் கேட்டு மகிழும்படி தொடர் சொற்பொழிவு செய்தார். இவரது ஆழ்ந்த இலக்கியப்புலமையைக் கண்டு மகிழ்ந்த பெருமக்கள், இவருக்கு 'சிந்தாமணிச் செல்வர்' என்னும் விருதைக் கொடுத்துச் சிறப்புச் செய்தனர். இவரது ஆழ்ந்த இலக்கணப் புலமையையும் இலக்கியத் தேர்ச்சியையும் பாடம் சொல்லும் திறமையையும் கண்டு வியந்த அறிஞர் கூட்டம் இவருக்கு 'மகா வித்துவான்' என்னும் பட்டத்தைக் கொடுத்துப் பெருமைப் படுத்தியது. உலகப் பல்கலைக் கழகத்தின் சார்பில், இவருக்கு முனைவர் (டாக்டர்) பட்டம் அளித்துப் புகழ் சேர்த்துள்ளனர்.

ஐந்தாவது உலகத் தமிழ் மாநாட்டின்போது தமிழக அரசினால் பொன்னாடை போர்த்திப் பொற்கிழி அளித்து இவர் சிறப்பிக்கப்பட்டுள்ளார். மதுரை காமராசர் பல்கலைக் கழகமும் முனைவர் வ.சுப. மாணிக்கனார் தலைமையில் மகாவித்துவான் மே. வீ. வேணுகோபாலப் பிள்ளைக்கு விருது கொடுத்து சால்வை போர்த்தி, பதக்கம் அணிவித்துப் பாராட்டுச் செய்து பெருமைப்படுத்தியது.

மே. வீ. வேணுகோபாலர் அவர்கள் பரிசீலனை செய்து திருத்திப் பதிப்பித்த நூல்கள் பலவாகும். அவற்றுள் குறிப்பிடத்தக்கவை: 'இறையனார் அகப்பொருள்' களவியலுரை, 'தொல்காப்பியம்' சொல்லதிகாரம்-நச்சினார்க்கினியர் உரை, 'வீரசோழியம்' 'தஞ்சைவாணன் கோவை விளக்கப்புத்துரை' 'அட்டப்பிரபந்தம்' விளக்கக் குறிப்புரை, 'சித்தர் ஞானக் கோவை' (அருஞ்சொற் பொருளகராதி முதலிய பிற்சேர்க்கையுடன்), 'யாப்பருங்காரிகை' 'யசோதார காவியம்' முதலியனவாகும்.

சென்னை பவானந்தர் கழகச் சார்பில் வெளியான நூல்கள் பலவும் இவரது ஆசிரியர் திரு. கா. ரா. கோவிந்தராச முதலியாரின் பரிசீலனைக்குட்பட்டும், இவருடைய தனித்த பெருழைப்பினாலும் மேற்பார்வையினாலும் பிழை களைந்து செவ்விய முறை



யில் அமைந்த விளக்கக் குறிப்புகளுடனும், அருஞ்சொல்லகராதி, பொருட் குறிப்பகராதி, மேற்கோளகராதி முதலிய பிற்சேர்க்கையுடனும் வெளியிடப்பட்டவையாகும். இதில் 'யாப்பருங்கல விருத்தியுரை' திருத்தப் பதிப்பாக இவரால் செப்பஞ் செய்யப்பட்டுப் பதிப்பிக்கப்பட்டதாகும்.

''தமிழ் நூல்கள் - சிறியவையாயினும் பெரியவையாயினும்—பிழையின்றித் திருத்தமானமுறையில் கண்கவர் வனப்புடன் வெளிவருதல் வேண்டும் என்பதே என் வாழ்க்கையின் குறிக்கோள். ஆதலின், பதிப்புத் துறையில் என்னால் இயலும் வகையில் அறிவை வளர்க்கும் ஆங்கில நூல்கள் பலவற்றை யான் பெரிதும் பயின்று வந்துள்ளேன்'' என்று பெரும் புலவர் மே. வீ. வேணுகோபாலப் பிள்ளை அவர்களே குறிப்பிட்டுள்ளது இங்கு நினைவுகூரத் தக்கதாகும்.

இவர் பதிப்புத் துறையில் பெற்றுள்ள தேர்ச்சியைப் பயன்படுத்திக் கொண்டுள்ள பதிப்பகத்தினர்; பவானந்தர் கழகம், கே. பழனியாண்டிபிள்ளை அண்ட் கோ எம்.ஆர். அப்பாதுரைப்பிள்ளை ஆகியோராவர். மேலும், பல பதிப்பாளர்களும், பல பேராசிரியர்களும், நூலாசிரியர்களும் தங்கள் வெளியீடுகள் செம்மையாக அமைய இவரது துணையை நாடிச் சிறப்படைந்துள்ளனர்.

முன்பு வெளியான பள்ளிக்கூடப் பாடப் புத்தகங்களின் பெரும்பகுதி இவரால் பார்வையிடப்பட்டே வெளியிடப்பட்டுள்ளன. நூல் அச்சாகும்போது கவனிக்க வேண்டிய திருத்தம் முதலியனசெய்யும்விதிமுறைகளை நன்கு கற்றுத் தேர்ந்து, அவற்றை, உரிய வகையில் நடைமுறையில் பயன்படுத்திய வித்தகராகத் திகழ்ந்துள்ளார் முதுபெரும்புலவர் வேணுகோபாலப் பிள்ளை அவர்கள்.

இவரிடம் முறையாகத் தமிழ் பயின்று புலவர்களானோர் பலராவர். அவர்களில் கே.ஏ. பாலசுப்பிரமணியமுதலியார், பி.என். இராமச்சந்திர ஐயர், பாலூர், கண்ணப்ப முதலியார், க. வா. சச்சிதானந்தம் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்களாவர்.

முப்பது ஆண்டுகளுக்கு மேலாக தமிழ் நூல்களை நன்கு ஆய்ந்தும் பிறர்க்குப் பயன்படும்படி பாடம் சொல்லியும் பதிப்பித்தும் வந்த மேலோராக விளங்கியவர் திரு பிள்ளை அவர்கள். இவரிடத்தில் டாக்டர் உ.வே. சாமிநாதையர் போன்றவர்களுக்குப் பெரு மதிப்புண்டு. திரு பிள்ளை ஆழ்ந்து கூறும் அரிய இலக்கண எடுத்துக்காட்டுகளைக் கண்ணெனப் போற்றியுள்ளார்.

அறிஞர்களிடத்தும் இளைஞர்களிடத்தும் பொதுமக்களிடத்தும் எளிமையுடன் இனிமையாகப் பேசிப் பழகிய பெரும்புலவர் இவரே ஆவர்.

எந்த நூலையும் நன்கு படித்துத் தேர்ந்த பின்னரே, அந்நூலைப் பற்றிய விளக்கத்தையோ கருத்தையோ கூற முன்வர வேண்டும் என்றும், அரைகுறையாக எதைப் பற்றியும் கூறுவது தகாது என்றும் திரு பிள்ளை அவர்கள் அறிவுரை கூறுவார். உலகம் என்பது உயர்ந்தோர் மாட்டே என்றும், சொற்களைத் திருத்தமாகவும் இலக்கண வழுவு இன்றியும் பேசுதல் வேண்டும் என்றும், கட்டுரை எழுதும்போதும் நூல்கள் ஆக்கும்போதும் மிகக் கவனத்துடனும் எச்சரிக்கையுடனும் சொற்பிழை எழுத்துப் பிழை, கருத்துப் பிழை வராமல் காக்க வேண்டும் என்றும் தகுந்தவர்களிடம் காண்பித்துத் திருத்திக்கொண்ட பின்னரே வெளியிடுதல் வேண்டும் என்றும், அவசரக் கோலம் அள்ளித் தெளித்தாற் போல் செய்யக்கூடாதென்றும் அவரது பட்டறிவை ஆணித்தரமாகச் செப்புவார். எந்த அவையிலும் யாருக்கும் அஞ்சாமல் தமக்குச் சரியெனப்பட்டதைப் பக்குவமாக எடுத்துரைக்கும் அறிஞர் அவர்.

தமது இறுதிக் காலத்திலும் தமது அன்பர்களுடன் இலக்கண இலக்கிய நூல்களைத் தொடர்ந்து ஓதிக் கொண்டிருப்பதைப் பலமுறை நான் கண்டு களித்திருக்கிறேன். கற்பதற்கு வயதோ, தளர்ச்சியோ, தடையாக இருக்க முடியாது என்பது அவரிடமிருந்து நாம் கற்றுக் கொள்ளும் பெரிய பாடமாகும்.

அவர் மகாவித்துவானாக இருந்தும் இளம் கவிஞர்களின் பாடல்களைப் படித்து நல்லவற்றைப் போற்றுவார். திருத்த வேண்டியதைத் திருத்திக் கொடுப்பார். சாதி, இனப் பாகுபாடின்றிப் பிறரை ஊக்குவிப்பதே பெரும் கடனாக அவர் கொண்டிருந்தார்.

மகாவித்துவான் மே.வீ.வேணுகோபாலப் பிள்ளை அவர்களிடம் அணிந்துரை பெறுவதும், பாராட்டுரை பெறுவதும், மதிப்புரை பெறுவதும் மதிப்பு மிக்கனவாக, என்றும் போற்றத்தக்கனவாக இருக்கும். அப்படிப் பெற்றவர்கள் ஏற்றம் பெற்றவர்களே ஆவர்.

மகாவித்துவான் சீவகசிந்தாமணியைப் பற்றிய சொற்பொழிவு நிறைவாக 'சீவகசிந்தாமணி நினைவு மலரில்' வெளியிடப் பெற்றுள்ளது. அவரது 60ஆம் ஆண்டு மணி விழா மலர்ஒன்றும் வெளியாகியுள்ளது. ஒவ்வொரு ஆண்டும் அவரது பிறந்த நாள் விழா, புரசை சுந்தரர் தமிழ்க்கல்லூரியில் சிறப்பாகக் கொண்டாடப் பெற்று வந்துள்ளது குறிக்கத்தக்க ஒன்றாகும். ''பாவலர் போற்றும் மகாவித்துவான் மே. வீ. வே.'' எனும் தொகுப்பு நூல் 1976இல் வெளியாகி இவரது புகழைப் பறைசாற்றுகிறது.

அவரது புலமையையும் ஆற்றலையும் கண்டு மகிழ்ந்து, அன்னாரை ஏற்றிப் போற்றும் அன்பர்களுக்குக் கணக்கே இல்லை. அவர் ஒரு குணக்குன்று; கல்விக் கடல்; இலக்கண இமயம்; காட்சிக்கு எளியவர்; கடின உழைப்பாளி; தேனீயைப் போல் அறிவைத் தேடிக் கொண்ட செம்மல்; வீடு நிறைய நூல்களைப் பேழையுள் வைத்துப் பேணிக் காத்து வந்த பேரறிஞர். தாம் கற்றதைத் தமக்கே வைத்துக் கொள்ளாது, அண்டியவர்களுக்கு எல்லாம் வரையாது வழங்கிய வள்ளல்; தாம் பெற்ற பேரறிவை மறைத்து வைத்துக் கொள்ளாமல் பிறர்க்கு விதந்தோதிய வித்தகர்.

92 ஆண்டுகள் வரை தொடர்ந்து தமிழ்ப் பணியாற்றி வந்த மகாவித்துவான் மே.வீ.வே. அவர்களின் இறுதி மூச்சு 4-2-1985 விடியற்காலை 4 மணிக்கு அடங்கி விட்டது! என்றாலும், அவரது உழைப்பும் ஆழ்ந்த அறிவும் பிறர்க்கு என்றென்றும் வழிகாட்டி நிற்கும் கலங்கரை விளக்காகும்!



சென்னையில் ரயிலேறி திருச்சியில் இறங்கினோம். அங்கிருந்து கால்நடையாக நடந்து மதுரை, கோவை, சேலம் முதலான பதினாறு மாவட்டங்களையும் போய்ப் பார்த்தோம்!

'என்ன, கனவிலா?' என்று கேட்டு விட வேண்டாம். உண்மையில்தான். சென்னைத் தீவுத் திடலில் அமைந்துள்ள அகில இந்தியச் சுற்றுலா மற்றும் தொழில் பொருட்காட்சியில் உள்ள குழந்தைகள் ரயிலில் ஏறினோம். அது நேரே எங்களைச் சுமந்து கொண்டு திருச்சி மாவட்டக் காட்சி அரங்கம் முன் நின்றது. பிறகு அடுத்தடுத்து இருந்த மற்ற மாவட்டக் காட்சி அரங்கங்களுக்கு நடந்து சென்றோம்! யார்? நாங்கள்தான், செய்தியாளர்கள்!

18-2-85 அன்று, செய்தி - மக்கள் தொடர்புத் துறையின் சார்பில் அமைக்கப்பட்டுள்ள 'வளரும் தமிழக'க் காட்சியரங்குகளைக் காணச் சென்றோம்.

காட்சியரங்குகளுக்குப் போவதற்கு முன்பாக ஓட்டல் தமிழ்நாட்டில் வயிற்றுக்கு விருந்து, பிறகு கண்ணுக்கும் காதுக்கும் கருத்துக்கும் விருந்து!

நரிக்குறவக் குழந்தைகளின் கலை நிகழ்ச்சிகள் மனத்தைக் கவர்ந்தன. டப்பாவைத் தட்டிக் கொண்டு டப்பாங் குத்து ஆடவில்லை அவர்கள். எல்லாரும் மூக்கின்மேல் விரலை வைக்கும்படி வீரபாண்டியக் கட்டபொம்மனாகவும், கலெக்டர் விஞ்ச் துரையாகவும் நடித்தார்கள்!

தமிழ்நாடு வளர்கிறதா? இல்லையா? என்பதைக் காண மாவட்டங்களுக்குப் போக வேண்டாம். இங்கு அமைந்துள்ள பதினாறு மாவட்டக் காட்சி அரங்குகளைப் பார்த்தாலே போதும் மாவட்டங்கள் வளர்கின்றன. என்பதற்கு! ஏனென்றால் மாவட்டங்களே இங்கு வந்துவிட்டனவே!

ஒவ்வொரு மாவட்டத்துக்கும் ஒரு தனிச் சிறப்பு உண்டல்லவா? அவற்றை அப்படியே காட்டுகின்றன காட்சி அரங்குகள்.

சென்னை, செங்கல்பட்டு, வடஆர்க்காடு, தென் ஆர்க்காடு, தருமபுரி, சேலம், கோயம்புத்தூர், பெரியார், மதுரை, இராமநாதபுரம், தஞ்சாவூர், திருச்சி, புதுக்கோட்டை, திருநெல்வேலி, நீலகிரி, கன்னியாகுமரி ஆகிய மாவட்டக் காட்சி அரங்குகள் 'வளரும் தமிழகம்' என்ற ஒரு குடையின் கீழ் காட்சியளிக்கின்றன; கருத்து விருந்தளிக்கின்றன.

ஒவ்வொன்றையும் போய்ப் பார்க்கிறோம். வளர்ச்சிப் பணிகள் அறிந்து வியக்கிறோம்.




ஒவ்வொரு காட்சி அரங்குமே ஒரு பெரிய கட்டுரையாகி விடும்! அந்த அளவுக்குச் செய்திகள் உள்ளன. (தனிக்கட்டுரைகள் ஒவ்வொரு இதழிலும் இடம் பெறும்).

மாவட்டக் காட்சி அரங்குகளில் அரசின் திட்டங்களை விளக்கும் புகைப் படங்கள், புள்ளி விவரங்கள், மாதிரி வடிவங்கள் ( Models ), செய்திகள், வீடியோ படங்கள், ஒலி-ஒளிக் காட்சிகள் எல்லாம் நம்மை மகிழ்விக்கின்றன, மாவட்டங்கள் வளர்ந்திருக்கின்றன என்பதைச் சொல்லாமல் சொல்கின்றன.

அரசின் பல்வேறு துறைகள் ஆற்றும் அரும்பணிகள் எல்லாம் தெளிவாக, எவரும் எளிதில் புரிந்து கொள்ளும்படியாக எடுத்துக் காட்டியிருக்கும் பாங்கு மகிழ்தற்குரியது.



# வளரும் தமிழகம்

'வளரும் தமிழகம்' என்னும் வரிசையில், மாவட்ட வளர்ச்சிப் பணிகள் குறித்த விளக்கக் கட்டுரைகள் 'தமிழரசு' அடுத்த இதழிலிருந்து வெளிவரும்.

—ஆசிரியர்

வேளாண்மை, கல்வி, குடும்பநலம் தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டம், தன்னிறைவுத் திட்டம் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம், சத்துணவுத் திட்டம், மின்சாரம், குடிநீர், உணவுப் பொருள் வழங்குதல் போன்ற பல்வேறு மக்கள் நல்வாழ்வுத் திட்டங்கள் எல்லாம் ஒவ்வொரு மாவட்டக் காட்சி அரங்குகளிலும் தெளிவாக்கப் பட்டிருக்கின்றன.

இன்னின்ன கைவினைப் பொருள்கள் இன்னின்ன மாவட்டத்தில் என்று பார்த்த மாத்திரத்திலேயே சொல்லிவிடலாம். அதேபோலக் கோயில்களையும் கூறிவிடலாம். இவற்றையும் பார்த்து மகிழ்கிறோம்.

மாவட்ட அரங்குகளைச் செய்தியாளர்கள் பார்வையிட வருகை தந்த போது, அந்தந்த மாவட்டச் செய்தி—மக்கள் தொடர்பு அலுவலர்கள், உதவி செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்கள் ஆகியோர் வரவேற்று, தங்கள் மாவட்டப் பணிகள் குறித்து விளக்கந் தந்தனர்.

தொடக்கத்தில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சித் துறைச் செயலாளர் திரு ஆர். கிருபாகரன் இ.ஆ.ப. செய்தியாளர்களிடம் பேசுகையில், ''இந்தப் பொருட்காட்சி மார்ச் மாதம் 20-ந் தேதி வரை நடைபெறவுள்ளது. பொருட்காட்சியில் முன்னாள் படை வீரர்கள் நாள், சமூக நலத்துறை நாள் ஆகியவை கொண்டாடப் படவிருக்கின்றன. அத்துடன் தமிழ்த் திருமணம் - கலப்புத் திருமணம் எப்படி நடைபெறுகிறது என்பதை நேரில் கண்டு மகிழ மேலை நாட்டினர் அழைக்கப்படுவார்கள்.'' என்றார்.

செய்தி-மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் திரு நா. கிருஷ்ணபாரதி, இ.ஆ.ப. செய்தியாளர்களை வரவேற்றுப் பேசுகையில், ''தமிழ்நாட்டின் பதினாறு மாவட்டக் காட்சி அரங்குகள், அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்கள், மாவட்டச் செய்தி - மக்கள் தொடர்பு அலுவலர்கள் முயற்சியினாலும், அயராத உழைப்பினாலும் இங்கே உருப் பெற்றிருக்கின்றன. ஒவ்வொரு மாவட்டத்தின் கலாசாரம், பண்பாடு, சுற்றுலாத்தலம், தனித்தன்மை எல்லாம் இங்கே எழிலுற எடுத்துக் காட்டப்பட்டுள்ளன'' என்றார்.

செய்தி-மக்கள் தொடர்புத்துறை ஆணையர் மற்றும் செயலர் திரு ஏ.பி. முத்துசாமி இ.ஆ.ப., சுற்றுலாத்துறைத் தனி அலுவலர் திரு எஸ். துரைராஜ், செய்தி-மக்கள் தொடர்புத் துறைத் துணை இயக்குநர் திரு வெ. நாமதேவன், துணை இயக்குநர், திரு வி.டி. வீரப்பன், கூடுதல் மக்கள் தொடர்பு அலுவலர் திரு நீ. நீலகண்டன் ஆகியோர் செய்தியாளர்களை மகிழ்ச்சியுடன் வரவேற்றனர்.

'வளரும் தமிழகம்'—தமிழ்நாடு வளர்கிறது, வளம் பெறுகிறது, வாழ்கிறது என்பதைத் தெள்ளிதின் எடுத்துக் காட்டும் கண்ணாடியாகத் திகழ்ந்தது என்றால் அது உண்மை; வெறும் புகழ்ச்சியில்லை!

—பி. வி. கிரி

ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002.





பதிவு எண். M. 8676
Licence No. TN/MS(C)/PP-23



இலங்கையில் உள்ள இந்தியத் தூதர் திரு எஸ்.ஜே சத்வால் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்களை 18.2.1985 அன்று சந்தித்தார்.



தென் பிராந்திய ராணுவத் தளபதி லெப்டினண்ட் ஜெனரல் ரஞ்சித் சிங் தயாள், மாண்புமிகு முதல்வர் அவர்களை 20.2.1985 அன்று சந்தித்து உரையாடினார். மாண்புமிகு மின் துறை அமைச்சர் திரு எஸ். இராமச்சந்திரன், தலைமைச் செயலர் திரு கு. சொக்கலிங்கம் இ.ஆ.ப ஆகியோர் உடன் உள்ளனர்.

# தமிழரசு

16-3-1985 75 காசு







சென்னை மருத்துவக் கல்லூரியின் நூற்றைம்பதாவது ஆண்டு நிறைவையொட்டி, இந்திய அஞ்சல் துறை 6.3.1985 அன்று சிறப்பு அஞ்சல் தலை வெளியிட்டது. மேற்படி அஞ்சல் தலைகள் அடங்கிய தொகுப்பு ஒன்றை தமிழக தபால்துறைத் தலைவர் திரு. எம். எஸ். ரங்கசாமி, மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் எம். ஜி. ஆர் அவர்களைச் சந்தித்து வழங்கினார். மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர் எச். வி. ஹண்டே, மற்றும் மருத்துவக் கல்லூரித் தலைவர் டாக்டர் ஆறுமுகம் ஆகியோர் உடன் உள்ளனர்.

# சட்டமன்றக் கூட்டவையில் மேதகு ஆளுநர் உரை



தமிழரசு

மலர் : 15 திருவள்ளுவர் ஆண்டு 2016 இதழ் : 1

ரக்தாக்ஷி - பங்குனி 3

16-3-1985

# சமதர்மச் சமுதாயம் சமைப்போம்


**மேதகு தமிழக ஆளுநர்**

## திரு. எஸ். எல். குரானா

**தமிழ்நாடு சட்டமன்றக் கூட்டு அவையில் 8-3-1985 அன்று ஆற்றிய உரை.**


புதிதாக அமைக்கப்பட்டுள்ள இச் சட்ட மன்றத்திற்கு வருகை தந்துள்ள உங்கள் அனைவரையும் வரவேற்பதில் நான் பெருமகிழ்ச்சியடைகிறேன். மக்கள் உங்களிடத்தில் மிகப் பெரும் நம்பிக்கை வைத்திருக்கிறார்கள். அவர்களுடைய எண்ணங்கள் நிறைவேற நீங்கள் மேற்கொள்ளும் முயற்சிகளில் வெற்றி பெற வாழ்த்துகிறேன். திருமதி இந்திரா காந்தி அம்மையாரின் கொடுமை மிகுந்த மரணத்தை முன்விட்டு நாம் அனைவரும் மிகப் பெருங்கவலையில் ஆழ்ந்து கிடக்கையில், ஆளுகை அதிகாரத்தைச் சனநாயக முறைகளின் மூலம், அமைதியான முறையில் மாற்றிக்கொடுத்து, நாட்டைப் பழைய நிலைக்கு மீட்டுக் கொணர்ந்துள்ள சூழ்நிலை, நமக்கெல்லாம் தன்னம்பிக்கையையும், ஊக்கத்தையும் அளிப்பதாக இருக்கின்றது. இயற்கையின் சோதனைகளிலிருந்து விடுபட்டு இந்தியா மீண்டும் தன்னுடைய முழுவலிவையும் நிலைநாட்டியிருப்பதோடு மட்டுமல்லாமல் இங்கு குடியாட்சி முறையானது மிக ஆழமாக வேரூன்றி நிற்கிறது என்பதை உலகுக்குத் தெளிவுபடுத்திக் காட்டியும் விட்டது.

**2.** இம் மாநிலத்தில் பொதுத் தேர்தல்கள் மிக அமைதியான முறையில் நடந்தேறியிருக்கின்றன. பெருமளவிலான மக்களும் முன் வந்து தங்கள் வாக்குரிமையை முறைப்படி பயன்படுத்தியுள்ளனர். மக்கள் வழங்கிய மாபெரும் தீர்ப்பை இந்த அரசு பெற்றிருக்கிறது என்றால், அதற்குக் காரணம், அரசு மேற்கொண்ட பல்வேறு கொள்கைகளின்பால், மக்கள் கொண்டிருக்கும் உறுதியான ஆதரவும் மறுபடியும் நிலைநாட்டும் நம்பிக்கையும் ஆகும். மக்கள் அளித்துள்ள தீர்ப்பு, அரசின் கொள்கைகளிடத்தே மட்டுமல்லாமல் டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன் அவர்களின் தலைமையிடத்திலும் மக்கள் எவ்வளவு நம்பிக்கையைக் கொண்டிருக்கிறார்கள் என்பதை மீண்டும் நிலைநாட்டும் தன்மையதாகும். பேரன்பையும், அளப்பரிய பெரும்பற்றையும் பெற்ற பொதுமக்களுக்குத் தொண்டு புரியத் தம்மை மறுபடியும் ஒப்படைக்கின்ற தன்மையோடும், உடல்நலத்தோடும் திரும்பி வந்த முதலமைச்சரை, இந்த மாநிலம் முழுவதுமே, விழாக் கோலத்தோடு, பெருமகிழ்ச்சியுடன் வரவேற்று நின்றது. ஏழை எளிய மக்களின் முன்னேற்றத்திற்கும், தாழ்த்தப்பட்டோரின் துயரங்களைத் துடைப்பதற்கும், வறுமையையும் வேலையின்மையையும் நீக்குவதற்கும், இந்த அரசு எடுத்துக்கொண்ட உறுதிமொழியைத் தொடர்ந்து நிறைவேற்றுவதற்கு பாடுபடும் என்பதை இந்த வாய்ப்பிலே நான் மீண்டும் வலியுறுத்திக் கூற விரும்புகிறேன். தூய்மையும் திறமையும் வாய்ந்த நிருவாகத்தை அளிக்க வேண்டும் என்பதில் இந்த அரசு முனைப்புள்ளத்தோடு இருந்து வருகிறது. இந்த நோக்கங்களெல்லாம் சிறப்புற நிறைவேற நீங்கள் அனைவரும் உங்களுடைய ஆதரவைத் தீவிரமாக அளிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.



**3.** இந் நாட்டைப் பொறுத்தவரையில், 1985ஆம் ஆண்டு, குறிப்பிடத்தக்க முக்கியத்துவம் வாய்ந்த ஆண்டாகும். இந்த நாட்டின் மாபெரும் சக்தியாக, மிகப்பெருந்தலைவியாக விளங்கிய திருமதி இந்திரா காந்தி அம்மையாரின் மறைவுக்குப் பின்னர் மத்தியில் அமைதியாக ஆட்சி மாற்றம் கண்டது இந்த ஆண்டு தான். ஏழாவது ஐந்தாண்டுத் திட்டம் வகுக்கப்பட்டு வருகின்ற இந்த நேரத்தில் இந்தப் பெரிய நாட்டின் பிரதமர் பொறுப்பை, திரு. இராஜீவ் காந்தி அவர்கள் ஏற்றுக்கொண்டிருக்கிறார். விரைந்து முன்னேறும் கால கட்டத்தை நோக்கி இந்த நாடு நடைபோட்டுக் கொண்டிருக்கிறது. நாட்டின் உற்பத்தியைப் பெருக்கவும், நிர்வாகத்தைத் தூய்மைப்படுத்தவும் மத்திய அரசு மேற்கொண்டுள்ள முயற்சிகளுக்கு நாம் நம்முடைய மன நிறைவான ஆதரவைத் தெரிவித்துக் கொள்கிறோம். இருபது அம்சத் திட்டத்தைச் செயற்படுத்துவதில் தமிழ்நாடு அரசு மத்திய அரசுக்கு தன் முழுமையான ஒத்துழைப்பைக் கொடுத்துக் கொண்டுவருகிறது. வறுமை ஒழிப்புத்திட்டங்களைச் செயற்படுத்துவதில் நாம் என்றும் எந்தவகையிலும் பின்னடைந்துவிடவில்லை.

**4.** தற்போது மக்களின் விருப்பங்கள் பெருகிய வண்ணம் இருக்கின்றன; அதே நேரத்தில் அவற்றை நிறைவேற்ற வேண்டிய பொறுப்புகளும் அரசுக்கு மேலும் கூடிக்கொண்டே இருக்கின்றன. நிதி ஆதாரங்கள் கிடைப்பதில் ஏற்படும் சற்றுங் குறையாத தடைகள் பலவற்றை நாம் சந்திக்க வேண்டி இருக்கிறது. எட்டாவது நிதிக் குழுவின் பரிந்துரைகள், உண்மையில் தமிழ்நாட்டின் நிதிக் கோரிக்கைகளுக்கு முழு நியாயம் வழங்கவில்லை. இதனால் திறமையான நிதி நிர்வாகத்திற்குப் பெயர் பெற்ற தமிழ்நாடு போன்ற மாநிலங்கள் அதிக நிதி உதவி பெறுவதற்குப் பதிலாக, மிகவும் குறைந்த நிதி உதவி மட்டுமே பெற்றுப்பெரிதும் ஏமாற்றமடைய நேரிட்டது. நிதி ஆதாரங்களில் மட்டுமல்லாமல் நிதி திரட்டுவதிலும் பின்தங்கியுள்ள மாநிலங்களுக்கு உதவுவதையே நிதிக் குழு தன் பரிந்துரைகளின் அழுத்தந்திருத்தமான நோக்கமாகக் கொண்டிருந்தது. திட்டத்தின் மூலமாகப் போதிய நிதிஉதவி வழங்குவதன் வாயிலாக இந்தஇழப்பு ஈடுசெய்யப்படும் என நாம் எதிர்பார்க்கிறோம். இதுவரையில் திட்ட நிதிஉதவி அளிப்பதில் பின்பற்றிய முறையைவிட இனி நியாயமான அளவிலும் சரியான அடிப்படையிலும் திட்ட நிதி உதவி கிடைப்பதற்கான முறையைப்பின்பற்ற வேண்டும் என்ற அடிப்படையில் தான் தமிழ்நாடு திட்ட நிதி உதவி கோரியுள்ளது. நிதி உதவி ஏற்பாடுகளில் தேசிய வளர்ச்சி மன்றம் உட்பட பல்வேறு மன்றங்களில் இப்படிப்பட்ட மாற்றம் ஏற்பட வேண்டுமென்று இம் மாநில அரசு வாதிட்டு வந்துள்ளது. மாநிலங்கள் வரி வாயில்களையொட்டி, வரி திரட்டும் முயற்சிகளைக் கருத்தில் கொண்டு, நிதிப் பங்கீட்டு அளவு அமைய வேண்டுமென்றும், குடும்ப நலத்திட்டத் துறையில் சிறந்த சாதனை புரிந்துவரும் மாநிலங்களுக்கு அளிக்கப்படும் நிதி உதவி எக்காரணங் கொண்டும் குறைந்துவிடும் நிலை ஏற்படக்கூடாது என்றும், இவற்றுக்கேற்றவகையில் மத்திய நிதிப் பங்கீட்டு ஏற்பாடு அமைய வேண்டுமென்றும் நாம் கருதுகிறோம். மக்கள் தொகை அடிப்படையில் நிதி உதவிகளை நிர்ணயிக்கும்போது, 1971-ம் ஆண்டு மாநிலங்களில் நிலவிய மக்கள் தொகையைத்தான் அடிப்படையாகக் கொள்ளவேண்டுமென மைய அரசு எடுத்துள்ள சரியான முடிவு, நபர்வாரி வருமானத்தை வைத்து நிர்ணயிக்கும் நிதி உதவிகளுக்கும் பொருந்துமாறு செய்யவேண்டும். குடும்ப நலத் திட்டத்தின் காரணமாக மக்கள் தொகை வளர்ச்சி குறைந்து நபர்வாரி வருமானம் உயர்ந்துள்ள மாநிலங்கள் குறைந்த நிதி உதவி பெறுகின்ற நிலை உருவாகக்கூடாது. திட்ட நிதி உதவியையும் பொதுமக்கள், வங்கிகள் ஆகியோரிடமிருந்து திரட்டப்படும் கடன்களையும் நடுநிலையான அடிப்படையில் பங்கிட்டுக்கொள்ளும் நிதி ஏற்பாட்டின் மூலமாக, ஏழாவது திட்டப் பணிகளை மேற்கொள்வதற்கான போதிய நிதி ஆதாரம் நமக்குக் கிடைக்கும் என நம்புவதோடு, அதன்மூலம் பல்வேறு துறைகளில் மேம்பாட்டுத் தேவைகளை நிறைவேற்ற முடியும் என்றும் நான் கருதுகிறேன். இத்தகைய நிதிப் பங்கீட்டு ஏற்பாட்டு முறையினால் நபர்வாரி அடிப்படையில் ஆறாவது திட்டக் காலத்தில் மற்ற மாநிலங்களைவிட இம் மாநிலத்திற்கு மிகக் குறைந்த நிதி உதவி கிடைக்கப்பெற்ற முரண்பாடான நிலை நீங்குமென்று நாம் எதிர்பார்க்கிறோம்.



**5.** இலங்கையில் தமிழர்கள்மீது கட்டவிழ்த்துவிடப்பட்டுள்ள படுபயங்கரமான வன்முறை தாக்குதல்கள் இந்தியர்களிடையே, குறிப்பாக, தமிழ்நாட்டு மக்களிடையே பெருந்துயரை ஏற்படுத்தியுள்ளன. இதற்கு விரைவில் அரசியல்வழி தீர்வு காண வேண்டுமென்று இந்தியப் பேரரசிடம் தமிழ்நாடு அரசு பலமுறை எடுத்துக் கூறி வந்துள்ளது. தமிழ்நாட்டு மக்கள் சார்பில் முதலமைச்சர் அவர்கள் இந்தியப் பேரரசுக்கு வேண்டுகோள் விடுத்து, இலங்கையில் தமிழர்களை மனிதாபிமானமற்ற முறையிலும், கண்மூடித்தனமாகவும் தாக்கி வருவதை அறவே நிறுத்துமாறு இலங்கை அரசை இந்தியப் பேரரசு வற்புறுத்த வேண்டுமென்று வலியுறுத்தி வந்துள்ளார்.

இராமேசுவரம் கடற்கரையில் அமைதியாகவும் நிராயுதபாணியாகவும் மீன் பிடித்து வரும் தமிழக மீனவர்கள்மீது இலங்கை தொடர்ந்து தாக்குதல் நடத்தி வருவதும், மீனவர் சிலரைச் சுட்டுக் கொன்றதும் தமிழ்நாட்டு மக்களிடையே கடும் எதிர்ப்பையும் கொந்தளிப்பையும் ஏற்படுத்தியுள்ளன. தமிழ்நாட்டு மீனவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கும் வகையில், மத்திய அரசு பாதுகாவல் படையை வலுப்படுத்தி இருப்பதோடு கப்பல் படையைச் சார்ந்த ரோந்துப் படகுகளையும் அனுப்பிவைத்துள்ளது. இலங்கைத் தமிழர்களின் பிரச்சினைக்குத் தீர்வு காண இராஜதந்திர வழிகளில் மத்திய அரசு எடுத்துள்ள நடவடிக்கைகளும், இந்தியப் பிரதமர் மேற்கொண்டுள்ள முயற்சிகளும் இப்பிரச்சினைக்கு நிலையான தீர்வு காண வழி வகுக்கும் என்று நாம் நம்பிக்கை கொண்டுள்ளோம்.



இலங்கைத் தமிழர்கள்மீது கட்டவிழ்த்துவிடப்பட்ட வன்முறைத் தாக்குதல்களைத் தொடர்ந்து அகதிகளின் வருகை பெருகிக் கொண்டே இருக்கிறது. இனி எதிர்காலத்தில் இந்த வருகை மேலும் தீவிரமாகக் கூடும். இந்தப் பிரச்சினை நமக்கு மிகுந்த கவலையை அளிக்கிறது. அகதிகளின் முகாம்களில் அடிப்படைத் தேவைக்கான வசதிகளை அதிகப்படுத்த தமிழ்நாடு அரசு தக்க நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. மகளிர், குழந்தைகள் உட்பட அகதிகள் பெரும்பாலானோர் மீனவர் சமுதாயத்தைச் சேர்ந்தவர்களாக இருக்கின்றனர். அவர்கள் நாட்டுப் படகுகளிலும், நீராவிப் படகுகளிலும் இராமேசுவரம் கடற்கரைப் பகுதிகளை நோக்கி வந்த வண்ணம் இருக்கின்றனர். 5—2—1985-லிருந்து 4—3—1985 வரையிலான குறுகிய கால அளவில், 12,938 நபர்களைக் கொண்ட 3,023 அகதிக் குடும்பங்கள் இராமேசுவரம் மற்றும் வேதாரண்யம் வந்தடைந்துள்ளனர். இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர், அவர்களை வரவேற்றும், மண்டபம் முகாமில் தற்காலிக வீடுகள் கட்டிக் கொடுத்து அவர்களுக்கு வசதியளித்தும், சில குடும்பங்களை ஏனைய மாவட்டங்களுக்கு அனுப்பி வைத்தும் பல்வேறு நடவடிக்கைகளை ஏற்கெனவே எடுத்துள்ளார். இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித் தலைவரின் ஒத்துழைப்போடு, அவசரகால நடவடிக்கை முறையில் அனைத்து வகை ஏற்பாடுகளையும் செய்து கொடுக்குமாறு மற்ற மாவட்ட ஆட்சித் தலைவர்களும் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர். இலங்கையிலிருந்து வந்துகொண்டிருக்கும் ஆதரவற்ற தமிழர்களின் துயர்துடைப்புப் பணிகளை ஒருங்கிணைத்து விரைவுபடுத்தி நிறைவேற்றுவதற்காக



இலங்கை அகதிகள் மறுவாழ்வு ஆணையர் நியமிக்கப்பட்டு இருக்கிறார்.

**6.** வரும் ஆண்டில், அரசு நிறைவேற்றக் கருதியுள்ள திட்டங்கள், பணிகள் இவற்றைப் பற்றிய செய்திகளை உங்கள்முன் வைப்பதற்கு முன், சென்ற ஆண்டில் அரசு எய்திய சாதனைகள் இவற்றின் சிறப்புகள் குறித்து சுருக்கமாகக் கூற விரும்புகிறேன்.


**7.** ஏற்கெனவே குறிப்பிட்டுள்ளதைப்போல வறுமையை ஒழிப்பதற்காக மத்திய அரசு வகுத்துள்ள திட்டங்கள் பலவும் சென்ற ஆண்டில், மிகத் தீவிரமாகச் செயற்படுத்தப்பட்டன. ஊரக நிலமற்றோர் வேலை வாய்ப்புறுதித் திட்டத்தின்கீழ் மத்திய அரசு, நடப்பு ஆண்டிற்காக இம் மாநிலத்திற்கு ஒதுக்கிய தொகையை முழுமையாக வழங்குவதற்கு முன்னரே, இலக்கிடப்பட்ட தொகையான ரூ. 44.50 கோடியை, இந்தியாவிலேயே, முதலாவதாகச் செலவிட்ட மாநிலம், நமது மாநிலமாகும்; மேலும், மேற்குறிப்பிட்ட திட்டத்திற்காக, மத்திய அரசு கூடுதலாக எவ்வளவு நிதியை வழங்கக் கருதினாலும் அத்தொகையை ஏற்றுக்கொள்ள தயாராக இருப்பதாக இம் மாநில அரசு தெரிவித்துள்ளது. இத் திட்டம், தேசிய கிராமப் பகுதி வேலைவாய்ப்புத் திட்டத்துடன் இணைந்து கிராமப் பகுதிகளில் வேலை வாய்ப்பு வசதியைப் பரவலாக ஏற்படுத்துவதற்கான

உயர்த்தும் பணி நடைபெற்று வருகின்றதென்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும், திருச்சிராப்பள்ளியில் ரூ. 170 கோடி செலவில் 'கனரக உலோகக் கலவை ஊடுருவித் தொழிற்சாலை (Heavy Alloy Penetrator Factory) ஒன்றினை' அமைக்க மத்திய அரசு அனுமதி வழங்கியுள்ளது. இதற்காகவும், ஆவடியிலுள்ள கனரக வண்டிகள் தொழிற்சாலையினை விரிவுபடுத்துவதற்காகவும் மாநில அரசு இலவசமாக நிலம் வழங்கியுள்ளது. திருச்சிராப்பள்ளியில் இரண்டாவது இரயில் பெட்டித் தொழிற்சாலை அமைக்க மத்திய அரசுக்கு இலவசமாக நிலம் வழங்கவும் மாநில அரசு முன்வந்துள்ளது. இதற்கு மத்திய அரசிடமிருந்து பதில் எதிர்பார்க்கப்படுகிறது. இதற்கு அனுமதி வழங்குவதுடன், மணலியிலுள்ள சென்னை இரசாயன உரத் தொழிற்சாலைக்கும், உதகமண்டலத்திலுள்ள 'இந்துஸ்தான் ஃபோட்டோ ஃபிலிம்' தொழிற்சாலையினை விரிவுபடுத்துவதற்கும் மத்திய அரசு அனுமதி வழங்குமென்று நாம் எதிர்பார்க்கிறோம். சேலம் உருக்காலையினை முழு அளவிலான உருக்காலையாக மாற்ற வேண்டுமென்னும் நீண்டநாள் கோரிக்கையும் ஏற்றுக் கொள்ளப்படுமென்று எதிர்பார்க்கிறோம்.



**19.** எனது கடந்த உரையில், தமிழ்நாடு பத்திரிகைத்தாள்-காகித உற்பத்தியை மாநில அரசு தொடங்கியதை மதிப்பிற்குரிய உறுப்பினர்களிடம் தெரிவித்திருந்தேன். பத்திரிகைக் காகிதம், எழுதுதாள் தயாரிப்பில் கரும்புச் சக்கையினைப் பயன்படுத்தும் புதிய தொழில் நுட்ப முறையினை இத்திட்டம் அறிமுகம் செய்துள்ளது. இத்திட்டம் 1984ஆம் ஆண்டில் சோதனை உற்பத்தியினைத் தொடங்கியுள்ளதென்பதை மதிப்பிற்குரிய உறுப்பினர்களுக்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். ரூ. 10 கோடி செலவில் அமைக்கப்பட்ட திருத்தணி கூட்டுறவுச் சர்க்கரை ஆலை கடந்த ஆண்டு உற்பத்தியினைத் தொடங்கியுள்ளது. கரும்பு உற்பத்தியாளர்களின் நலன்களைக் காக்கும் பொருட்டு "மதுரா சுகர்ஸ்" நிறுவனத்தை அரசு தன் பொறுப்பில் எடுத்துக்கொண்டுள்ளதுடன் அதனை ரூ. 5 கோடி செலவில் நவீனப்படுத்தி விரிவுபடுத்தவும் நடவடிக்கை எடுத்துள்ளது. ரூ. 10.8 கோடி செலவில் தஞ்சாவூர் மாவட்டம் மயிலாடுதுறையில் புதிய சர்க்கரை ஆலை ஒன்று நிறுவப்பட்டு வருகிறது.

**20.** "கி.பி. 2000-க்குள் அனைவருக்கும் ஆரோக்கிய வாழ்வு" அளிக்கும் நோக்கத்தினை எய்த அரசு தொடர்ந்து பணியாற்றி வருகின்றது. 5,000 மக்கள் தொகை கொண்ட ஒவ்வொரு பகுதியிலும் ஒரு சுகாதார துணை நிலையம் என்ற வீதத்தில் தற்போது மொத்தம் 5,602 துணைச் சுகாதார நிலையங்கள் உள்ளன.



**21.** தேசிய கிராமப்புற வேலைவாய்ப்புத் திட்டம், ஊரக நிலமற்றோர் வேலைவாய்ப்புறுதித் திட்டம் முதலான வேலைவாய்ப்புப் பெருக்கத் திட்டங்களைத் தீவிரமாகச் செயற்படுத்துவதன்மூலம் கிராமப் பகுதிகளில் வேலைவாய்ப்புகளைப் பெருக்க இயன்ற நடவடிக்கைகள் அனைத்தையும் அரசு மேற்கொண்டு வருகிறது. அத்துடன், எஸ்.எஸ்.எல்.சி., பி.யு.சி. தேறியுள்ளவர்களுக்கும் வேலைவாய்ப்பின்மை உதவித் தொகை வழங்கும் திட்டத்தை நீட்டித்துள்ளது. உதவித் தொகையின் அளவும் கணிசமாக உயர்த்தப்பட்டுள்ளது. இத் திட்டத்திற்கு அடுத்த ஆண்டு முழுவதற்குமாகும் மொத்தச் செலவு ரூ. 5 கோடி அளவில் அமையும்.


**22.** இந்த அரசு, சமூகக் காடு வளர்ப்பின்கீழ், சுவீடன் நாட்டு நிதி உதவியுடன் ஒரு பெரிய திட்டத்தைத் தமிழ்நாட்டில் செயற்படுத்தி வருகிறது. இத் திட்டத்திற்கென 1984–85-ல் ரூ. 8.23 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. 1984 டிசம்பர் திங்கள் முடிய 268 இலட்சம் நாற்றுக்கள் நடப்பட்டு, 16,251 எக்டேர் பரப்பில் தோட்டமும் 1,260 கிலோ மீட்டர் நீளத்திற்கு துண்டு நிலத் தோட்டங்களும் வளர்க்கப் பட்டுள்ளன.

**23.** பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குவது மாநில அரசின் திட்டங்களில் உயரிய முதலிடம் பெறுகிறது என்பதை நீங்கள் அறிவீர்கள். ஆறாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்திற்குள், பிரச்சினைக்குரிய குடியிருப்புகளில் 17,193 குடியிருப்புகளுக்குக் குறைந்தது ஒரு குடிநீர் வாயில் கிடைக்குமாறு செய்யப்படும். உலக வங்கித் திட்டத்தின்கீழ் ரூ. 149.42 கோடி செலவில் மதுரை, கோயம்புத்தூர், சேலம் போன்ற பெரு நகரங்களிலும், 75 நடுத்தர நகரங்களிலும் உள்ள 38.96 இலட்சம் மக்களுக்கு குடிநீர் வழங்கும் திட்டத்திற்கு ஒப்புதல் வழங்கப்பட்டு பணி தொடங்கியுள்ளது. ரூ. 15·2 கோடி மதிப்பீட்டுச் செலவில் ஐரோப்பிய பொருளாதார சமுதாய அமைப்பின் உதவியுடன் பெரியார், கோயம்புத்தூர் மாவட்டங்களில் 4 இலட்சம் பேர் பயன்பெறும் வகையில் 726 குடியிருப்புகளுக்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கும் திட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**24.** வேளாண்மைத் துறையில் உற்பத்தியினை மேம்படுத்துவதற்கு முக்கியத்துவம் அளிக்கப் பட்டுள்ளது. 1984–85ஆம் ஆண்டில் அநேகமாக 60 இலட்சம் மெட்ரிக் டன் என்ற சாதனை உற்பத்தி அளவை எய்துவோம் என்று எதிர்பார்க்கலாம். இனி வரும் ஆண்டில், இந்த ஆதாரத்தின் அடிப்படையில் மிகு பயன்தரும் உயர் ரகங்களை மக்களிடையே பரவச் செய்தல், திறமையாக உரத்தைக் கையாளுதல், ஒருங்கிணைந்த பயிர்ப்பூச்சிக் கட்டுப்பாட்டு முறைகள் உட்பட நவீன அறிவியல் வேளாண் பொருளாதார தொழில் நுட்பமுறைகளை அறிமுகம் செய்தல் ஆகியவற்றின் மூலம் ஆண்டிற்கு 4 முதல் 5 சதவீதம் வளர்ச்சி காணவும் கருதப்பட்டுள்ளது. வேளாண்மையில், தண்ணீர் கிடைத்தற்கரிய, மிக முக்கியமான இடுபொருளாகும். அண்மையில் தொடங்கிய வேளாண்மை வளர்ச்சி நடவடிக்கைகளில் நன்முறையில் சிக்கனமாகத் தண்ணீரைப் பயன்படுத்தும் முறை 1985–86ஆம் ஆண்டில் மேலும் தீவிரப்படுத்தப்படும். உயர்ந்த அளவில் பயன் பெறுவதற்கு "வாரபந்தி" எனப்படுகிற சுழல்முறை நீர்ப்பயன் வழிமுறைகள் பற்றி நம்முடைய பெரிய பாசனப் பகுதிகளில் ஆய்வுகள் நடத்தப் பட்டுள்ளன ; வருமாண்டில் இத் திட்டங்களின் வாய்ப்பளவு மேலும் விரிவுபடுத்தப்படும்.

**25.** அரசுப் பணியாளர்கள் நலனில் தமக்குள்ள பொறுப்பை அரசு நன்கு உணர்ந்துள்ளது. புதுவகையான பணியாளர் நலத் திட்டங்கள் பலவற்றை இவ்வரசு ஏற்கெனவே அறிவித்துள்ளதை நீங்கள் அறிவீர்கள். அத்தகைய திட்டங்களில் அண்மையில் அறிவிக்கப்பட்ட ஓய்வுகால நன்மைத் திட்டமும் ஒன்றாகும். கடினமாக அயராது பணியாற்றும் பொறுப்புள்ள காவல் படையினருக்கு நலத் திட்டங்கள் பலவற்றை அரசு தொடங்கியுள்ளது. 'டெரிகாட்டன்' சீருடைகள் அளிப்பது, மழைக்கோட்டுகளும், காலணிகளும் வழங்குவது, இன்றியமையாப் பொருட்கள் வழங்கலுக்கு அளிக்கப்படும் உதவித் தொகையின் அளவை உயர்த்துவது ஆகியவை இத் திட்டங்களில் அடங்கும். கடந்த ஆண்டு அரசு அறிவித்தது போல நான்காம் சம்பளக் குழு அமைக்கப்பட்டது ; அக்குழு, தனது ஆய்வுகளை இறுதியாக்கும் கட்டத்தை அடைந்துள்ளது. அக்குழுவின் பரிந்துரைகள் கிடைக்கப் பெறுகின்ற வரையில், அதற்கு முன்னதாக அரசுப் பணியாளர்களுக்கு இடைக்கால நிவாரணம் அளிப்பது குறித்து அரசு தானாகவே முன்வந்து அறிவிப்பு வெளியிட்டது. இந்நாட்டிலுள்ள பிற மாநிலங்களுடன் ஒப்பிடுகையில், ஒரு பெரிய எண்ணிக்கையில் வழங்கப்பட்டது என்று சொல்லக்கூடிய அளவுக்கு 8 இலட்சம் அரசுப் பணியாளர்களுக்கு இடைக்கால நிவாரணத் தொகை வழங்கப்பட்டது. அரசுப் பணியாளர்களில் திங்களொன்றுக்கு ரூ. 350-ம் அதற்குக் குறைவாகவும் சம்பளம் பெறுவோர் ஒவ்வொருவருக்கும் ரூ. 200-ம் ஏனையோருக்கு ரூ. 300-ம் ஒருமொத்த நிவாரணத் தொகையாக வழங்கப்பட்டது. இதில் 50 விழுக்காடு மட்டும் சம்பளக் குழுப் பரிந்துரைகளின் அடிப் படையில் வழங்கப்படவிருக்கிற நிலுவைத் தொகையில் சரிக்கட்டப்படும்.

**26.** ஆக, இவ்வரசு, வாக்காளப் பெருமக்களுக்கு அளித்த பல்வேறு வாக்குறுதிகளை நிறைவேற்றி வருவதுடன், மக்கள் சமுதாயத்தின் அனைத்துப் பிரிவினரின் தேவைகளையும் விருப்பங்களையும் நிறைவேற்றி வருகிறது. இருப்பினும், வளங்கெழு அரசுதனை உருவாக்கிவரும் பணி, முடிவிலாத தொடர் பணியாகும். இனி இவ்வரசு எதிர்காலத்தில் மேலும் தொடங்கக் கருதியுள்ள புதிய திட்டங்கள் பற்றிய விவரங்களை உங்கள் முன் எடுத்துக்கூற விரும்புகிறேன். நமது முதலமைச்சர் 1984 ஆகஸ்டு 15-ம் நாள் அறிவித்திருந்த பல்வேறு உறுதிமொழிகள் மீது எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் பற்றி உங்களுக்கு நான் ஏற்கெனவே கூறியுள்ளேன். இப்பணிகள் தொடர்வதோடு, புதிய திட்டங்கள் பலவும் இனி தொடர்ந்து மேற்கொள்ளப் படும் :—



(1) போதிய குடி நீர் ஆதாரம் உள்ள கிராமப் பகுதிகள் அனைத்திலும் குடிநீர்க் குழாய் இணைப்புகள் உள்ளிட்ட கிராமக் குடிநீர் வழங்கல் திட்டத்தை மேலும் விரிவுபடுத்தக் கருதப்பட்டுள்ளது.

(2) ஆதி திராவிடர் நல மேம்பாட்டிற்காக விரிவான திட்டங்கள் தயாரிக்கப்படும்.

(3) நகராட்சிப் பகுதிகள் மேம்பாட்டிற்காக காலவரையோடுகூடிய திட்டம் தயாரிக்கப்படும்.

(4) கைத்தறி வளர்ச்சிக்கு மேலும் முக்கிய கவனம் செலுத்தும் பொருட்டு, தலைமைச் செயலகத்தில், தொழில் துறை இரண்டாகப் பிரிக்கப் பட்டு, கைத்தறி, நெசவு, கதர் இவற்றிற்கென்று தனித்துறை அமைக்கப்படும்.

(5) கைத்தறி நெசவாளர்களின் வீட்டு வசதிக்காக மூன்றாண்டுக் கால அளவில் முடிப்பதென்ற காலவரையோடுகூடிய திட்டம் தயாரிக்கப்படும்.

(6) அரசுப் பணியாளர்களுக்கான குடும்பநல நிதி ரூ. 10,000-லிருந்து ரூ. 20,000-க்கு உயர்த்தப்படும் இதற்குத் தக்கவாறு திட்டம் தயாரிக்கப்படும்.

(7) கடந்த ஆண்டில் உழவுத் தொழிலாளர்கள், கைவினைஞர்கள், சிறு உழவர்கள், சொற்ப நில உழவர்கள், கட்டுமானத் தொழிலாளர்கள் ஆகியோரது நலனுக்காக அறிவிக்கப்பட்ட இழப்பு ஈட்டுத் திட்டத்தின்படி



அத் தொழிலாளர்கள் பணியில் ஈடுபடும்போது இறக்க நேரிட்டால் அளிக்கப்படும் இழப்பு ஈட்டுத் தொகை ரூ. 5,000-லிருந்து ரூ. 10,000-மாக உயர்த்தப்படும்.

(8) 1984 ஆகஸ்டு 15ஆம் நாள் நமது முதலமைச்சர் அறிவித்தபடி, உழவுத் தொழிலாளர்கள், கைவினைஞர்கள், சிறு உழவர்கள், சொற்ப நில உழவர்கள், ஏனைய தொழிலாளர்கள் ஆகியோருக்கான காப்புறுதி-ஓய்வுகால நலத் திட்டம் விரிவான அடிப் படையில் செயற்படுத்தப்படும். ஏற்கெனவே இதற்கென்று, 167 தனி வட்டாட்சியர்கள் நியமிக்கப் பட்டுள்ளனர். இத் திட்டத்தில் உறுப்பினர்கள் சேர்க்கப் பட்டு கிராம நிர்வாக அலுவலர்கள் மூலமாக சந்தாத் தொகை வசூலிக்கப்படும். இதற்கென கால வரம்பு 31-3-1985 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

(9) மீனவர் கூட்டுறவுச் சங்கங்கள் மீனவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் மைய அமைப்புகளாகப் பணியாற்றும் வகையில் வலுப்படுத்தப்பட்டு விரிவுபடுத்தப்படும்.

(10) மரபு சாரா புதிய வகை எரிசக்தி ஆதாரங்களைப் பயன்படுத்தும் திட்டத்தைப் பெரிய அளவில் இவ்வரசு தொடங்கியுள்ளது. சூரிய வெப்ப சக்தி ஆற்றலுடைய சாதனங்களைத் தயாரிக்கும் தொழிற்சாலைகளுக்கு ஊக்கத் தொகை அளிக்கப்படும்.

(11) முதலமைச்சர் தொடங்கிய வாழ்க்கைத் தொழில் அடிப்படையிலான கல்வித் திட்டம், பொருத்தமான வாழ்க்கைத் தொழில் பாடமுறைகளோடு பல பள்ளிகளில், அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. ரூ. 1,000 கோடி அளவில் செலவாகும் இத் திட்டம் படிப்படியாக நிறைவேற்றப்படும். இத் திட்டத்தினை நிறைவேற்ற மத்திய அரசு மூலம் உதவி பெற இவ்வரசு உலக வங்கியை அணுகுவதென்று கருதியுள்ளது.

(12) முதலமைச்சர் சத்துணவுத் திட்டம் 10 முதல் 15 வயது பிள்ளைகளும் பயன்பெறும் வகையில் 15–9–1984-லிருந்து நீட்டிக்கப்பட்டது; இதன் மூலம் இன்று சுமார் 80 இலட்சம் பிள்ளைகள் பயனடைந்து வருகின்றனர். விரிவான அளவில் மேற்கொண்ட இம் மாபெருந் திட்டம் இந்நாட்டில் மட்டுமல்லாது வெளி நாட்டிலும் பாராட்டைப் பெற்றுள்ளது. இத்தகையதொரு திட்டத்தின் பலதரப்பட்ட நன்மைகளும் ஆரோக்கியமான, வலுவுள்ள எதிர்கால சந்ததியினரை உருவாக்கும் சிறப்புத்தன்மையும் அனைவராலும் பாராட்டப்பட்டுள்ளது என்பதையறிந்து மகிழ்ச்சியடைகிறேன். இவ்வகையில் முன்னோடியாக விளங்கும் தமிழ்நாட்டை அனுசரித்து பிற மாநிலங்களும் இத் திட்டத்தைப் பின்பற்றி வருவது நமக்கு பெருமிதமளிக்

கிறது. இவ்வாறாக, சத்துணவுத் திட்டம் இம் மாநிலத்தில் உறுதியாக வேரூன்றியுள்ளது. மாநிலத்தின் வறிய குழந்தைகளின் பல்வேறு தேவைகளை நிறைவு செய்யக்கூடிய நலத் திட்டங்களின் மற்றொரு தொகுப்பை வெளியிடுவதன் மூலம் குழந்தைகளின் ஒருங்கிணைந்த நல வாழ்விற்கு வகை செய்யும் திட்டங்களை நிறைவேற்ற இந்த அரசு கருதுகிறது. ஆகவே, Iஆம் வகுப்பு முதல் VIIIஆம் வகுப்பு வரையிலும் தகுதியுள்ள பிள்ளைகள் அனைவருக்கும் இலவசமாகச் சீருடைகள் வழங்கக் கருதப்பட்டுள்ளது. மேலும், இனி வருமாண்டிலிருந்து Iஆம் வகுப்பு முதல் VIIIஆம் வகுப்பு வரையிலும் தகுதியுள்ள பிள்ளைகளுக்கு இலவசமாகப் பாடப் புத்தகங்கள் வழங்கும் திட்டமொன்றைத் தொடங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. குழந்தைகள் உடல் நலப் பராமரிப்பு வசதிகள் மேற்கொண்டும் விரிவுபடுத்தப்பட்டு பெருக்கப்படும். மதிய உணவு வழங்கப்படும் 10,000 குழந்தை நல நிலையங்கள் பாலர் தொடக்கப் பள்ளிகளாக மாற்றப்பட உத்தரவிடப்பட்டுள்ளது. எஞ்சிய நிலையங்களும் இவ்வாறே மாற்றப்படும்.


*(13)* பழுதுபட்ட நிலையிலுள்ள பள்ளிக் கட்டிடங்களைச் செப்பனிட காலவரையோடு கூடிய திட்டமொன்று வகுக்கப்படும். அவசியமான இடங்களிலெல்லாம் பள்ளிக் கட்டிடங்களைக் கட்டத் தனியே நிதி ஒதுக்கம் செய்யப்படும். இத் திட்டங்கள் தொடங்குவதன் மூலமாகக் குழந்தைகளின் ஒட்டுமொத்த நலனை அரசே கவனித்துக்கொள்கிறது என்பதையும், இத் திட்டங்களின்கீழ் மேற்கொள்ளப்படும் பணிகள் கிராமப் பகுதிகளில் பெருமளவு வேலை வாய்ப்புகளை உருவாக்கும் வகையில் நன்கு திட்டமிட்டுச் செயற்படுத்தப்படும் என்பதையும் காணலாம்.

*(14)* சென்னையில் மருத்துவப் பல்கலைக் கழகம் ஒன்றினைத் தொடங்க அரசு கருதியுள்ளது.

*(15)* உற்பத்தியைப் பெருக்கவும் பொது விநியோக முறையை மும்முரமாகச் செயற்படுத்தவும் அரசு பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொண்ட போதிலும், பதுக்கல், கள்ளச் சந்தை போன்ற ஊக வணிக நடவடிக்கை காரணமாக பொருளாதாரம் பாதிக்கப்படுகிறது. இத்தகைய செயல்களைத் தடுக்கும் நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்தவும் தவறிழைப்போருக்குக் கடுந்தண்டனை விதிக்கவும் அரசு கருதியுள்ளது.

**27.** இவ்வாறு அரசு, இம் மாநில நல்வாழ்வுக்கான வளர்ச்சி வேகத்தை மேலும் பெருக்கி, சமுதாயத்தில் வறிய, நலிவுற்ற பிரிவினரின் நலனுக்கு இயன்ற அனைத்தையும் செய்ய விரிவான ஆக்கபூர்வமான திட்டங்கள் பலவற்றைத் தயாரித்துள்ளது. உயர்ந்த இலட்சியமுடைய இத்தகைய திட்டப்பணிகளில், நீங்கள் ஒருங்கிணைந்து, முழு ஒத்துழைப்பைத் தந்து அவை வெற்றிபெற உறுதுணையாக இருக்க வேண்டுமென்று இச்சந்தர்ப்பத்தில் அனைவரையும் நான் கேட்டுக்கொள்கிறேன்.

வணக்கம்



# அமைச்சர்கள் பதவி ஏற்பு நிகழ்ச்சி

தொழில் அமைச்சராக
**திரு க. இராசாராம்.**



கைத்தறி அமைச்சராக
**திரு வி. வி. சாமிநாதன்.**



வணிகவரி அமைச்சராக
**திரு தா . வீராசாமி.**



வீட்டுவசதி அமைச்சராக
**திரு ந. நல்லுசாமி.**



ஊரகத் தொழில் அமைச்சராக
**திரு ஆனூர் கோ. ஜெகதீசன்.**



மறுவாழ்வு மற்றும் வேலைவாய்ப்பு அமைச்சராக
**திரு டி. இராமசாமி.**



ஆதிதிராவிடர் நல அமைச்சராக
**திரு அ. அருணாசலம்.**



# மாண்புமிகு அமைச்சர்களின் வாழ்க்கைக் குறிப்புகள்

## திரு. க. இராசாராம்

திரு க. இராசாராம் அவர்கள் சேலம் மாவட்டம் ஆத்தூரில் 1926 ஆகஸ்ட் 26-ல் பிறந்தவர்.

சேலம் நகராட்சிக் கல்லூரியில் கல்வி பயின்ற இவர், திராவிடர் கழகத்தில் பணியாற்றியிருக்கிறார்.

சேலத்தில் நடைபெற்ற மாநில திராவிடர் கழக மாநாடு மற்றும் 1952-53-ல் ஈரோட்டில் நடைபெற்ற புத்தமதப் பிரசார மாநாடு ஆகியவற்றின் செயலாளராகப் பணியாற்றினார்,



தி. மு. கழகத்தின் நிர்வாகக் குழுவின் உறுப்பினராக இருந்த இவர், 1952-ல் சேலம் நகராட்சிக் கல்லூரி, மாணவர் கூட்டுறவுப் பண்டகசாலை லிமிடெட்டின் தலைவராகப் பணியாற்றினார்.

1959-64 வரை, சென்னையில் தமிழ்நாடு டாக்சி-ஆட்டோ டிரைவர்கள் சங்கத்தின் தலைவராகப் பணிபுரிந்த இவர், 1962-67, 1967-71ல் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்தார். 1971 முதல் 1975 முடிய தமிழக அமைச்சரவையில் தொழிலாளர் நலம், சுற்றுலா ஆகிய துறை அமைச்சராகப் பொறுப்பேற்றிருந்தார். 1978-79ஆம் ஆண்டில் தமிழக அரசின் சிறப்புப் பிரதிநிதியாகப்புதுடில்லியில் பொறுப்பேற்றிருந்தார்.

சென்னை சட்டக் கல்லூரி சமூக சேவைக் கழகத்தின் உறுப்பினரான இவர், இச்சங்கத்தின் பிரதிநிதி என்ற முறையில் இலங்கையில் பல சமூக சேவை நிலையங்களுக்குச் சென்று வந்துள்ளார்.

இலங்கை, பர்மா, மலேயா, சிங்கப்பூர், தென்வியட்நாம், ஹாங்காங், ஜப்பான், பார்மோசா ஆகிய நாடுகளுக்கும் இங்கிலாந்து பாரீஸ் ஆகிய நகரங்களுக்கும் இவர் சென்று வந்துள்ளார். ரோமாபுரிக்குச் சென்றிருந்த போது போப் அவர்களைச் சந்தித்திருக்கிறார்.

டில்லியில் திருவள்ளுவர் சிலையைத் திறந்து வைத்த இவர், சேலம் தமிழ்ச் சங்கத்தின் உறுப்பினராக இருந்து வருகிறார்.

'திருவிளக்கு' என்னும் வார ஏட்டைப் பல்லாண்டுக் காலம் நடத்தி வந்திருக்கும் இவர், சிறந்த நூலாசிரியர்.

1980, 1984ல் நடைபெற்ற சட்டமன்றப் பொதுத் தேர்தலில் பனைமரத்துப்பட்டித் தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்ற இவர், 21.6.80 அன்று சட்டப் பேரவைத் தலைவராக ஒரு மனதாகத் தேர்ந்தெடுக்கப் பட்டுப் பணியாற்றினார்.

தற்பொழுது 3.3.1985 முதல் தொழில் அமைச்சராகப் பொறுப்பேற்றுள்ளார்.



## திரு வி. வி. சாமிநாதன்

திரு. வி. வி. சாமிநாதன் 15.2.1927 இல் தென் ஆர்க்காடு மாவட்டம் வில்வராய நல்லூரில் பிறந்தவர். கும்பகோணம், சிதம்பரம், சென்னையில் கல்வி பயின்றார். சிதம்பரம் நகராட்சித் தலைவராகப் பணியாற்றியுள்ளார். போராட்டங்கள் பலவற்றில் பங்கு கொண்டு சிறை சென்றுள்ளார். 1972 முதல் 1980 வரை மாநிலங்கள் அவை உறுப்பினராக இருந்தார்.

1980, 1984 ஆகிய இரு பொதுத் தேர்தல்களிலும் தென் ஆர்க்காடு மாவட்டம் புவனகிரித் தொகுதியிலிருந்து சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப் பட்டார். விளையாட்டுகளில் ஆர்வம் உள்ளவர். ரஷ்யா, வடகொரியா, மங்கோலியா ஆகிய வெளிநாடுகளுக்குச் சென்று வந்துள்ளார்.

தற்பொழுது கைத்தறித்துறை அமைச்சராகப் பொறுப்பேற்றிருக்கிறார்.



## திரு தா. வீராசாமி

திரு தா. வீராசாமி 8.9.1938ல் தஞ்சை மாவட்டம் வெள்ளூர் கிராமத்தில் பிறந்தவர். ஒரத்தநாடு, தஞ்சாவூர், சிதம்பரம் ஆகிய ஊர்களில் கல்வி பயின்றார். 1980, 1984 ஆகிய பொதுத் தேர்தல்களில் தஞ்சை மாவட்டம் ஒரத்தநாடு தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டார்.

1970 ஆம் ஆண்டுமுதல் ஒரத்தநாடு ஊராட்சி மன்றத் தலைவராகப் பல ஆண்டுக் காலம் தொடர்ந்து பதவி வகித்தார்.

தஞ்சை மருத்துவக் கல்லூரியிலும், அதிராம்பட்டினம் கல்லூரியிலும் விரிவுரையாளராக இருந்தார். 5.9.'84இல் உணவு அமைச்சராகப் பொறுப்பேற்றார்.

தற்பொழுது வணிகவரி அமைச்சராகப் பொறுப்பேற்றிருக்கிறார்.



## திரு ந. நல்லுசாமி

திரு ந. நல்லுசாமி திருச்சி மாவட்டம் குளித்தலையை அடுத்த ஒசலூரில் 1939ஆம் ஆண்டு பிறந்தவர்.

திருச்சி பிஷப் ஹீபர் உயர்நிலைப் பள்ளியிலும், திருச்சி ஜோசப் கல்லூரியிலும், சென்னை சட்டக்கல்லூரியிலும் கல்வி பயின்றார்.

திருச்சி தந்தை பெரியார் கல்லூரியில் ஏழு ஆண்டுகள் பகுதி நேரப் பேராசிரியராகப் பணிபுரிந்தார்.

திருச்சியில் உள்ள 'காவேரி பெண்கள் கல்லூரியை'த் தொடங்கியவர் இவர்.

வெளிநாடுகளுக்குச் சுற்றுப் பயணம் சென்றுள்ளார். இவருக்கு இரண்டு மகன்கள் உள்ளனர்.

1984இல் நடந்த பொதுத் தேர்தலில் திருச்சி மாவட்டம் திருச்சி-2 தொகுதியிலிருந்து சட்டமன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

தற்பொழுது வீட்டுவசதி அமைச்சராகப் பொறுப்பேற்றுள்ளார்.

## திரு ஆனூர் கோ. ஜெகதீசன்

திரு. ஆனூர் கோ. ஜெகதீசன் 13.11.1937 இல் சென்னை பெரம்பூரில் பிறந்தவர். சென்னையில் கல்வி பயின்றார். செங்கல்பட்டு மாவட்டம் ஆனூர் கிராம ஊராட்சித் தலைவராகப் பல ஆண்டுகள் பணியாற்றினார். போராட்டங்கள் பலவற்றில் பங்கு கொண்டு சிறை சென்றவர். 1977, 1980, 1984 ஆகிய பொதுத் தேர்தல்களில் செங்கல்பட்டு மாவட்டம், செங்கல்பட்டில் இருந்து சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப் பட்டார்.




1979 முதல் 1980 வரை கூட்டுறவு அமைச்சரின் பேரவைச் செயலராகப் பணியாற்றினார்.

தற்பொழுது ஊரகத் தொழில் அமைச்சராகப் பொறுப்பேற்றுள்ளார்.

## திரு. டி. இராமசாமி

திரு. டி. இராமசாமி 17.7.1942 இல் இராமநாதபுரத்தில் பிறந்தவர். இராமநாதபுரம் நகராட்சியில் உறுப்பினராக 7 ஆண்டுக்காலம் பணியாற்றியுள்ளார். போராட்டங்கள் பலவற்றில் பங்கு கொண்டு சிறைக்குச் சென்றவர்.

1977, 1980, 1984 ஆகிய ஆண்டுகளில் நடைபெற்ற பொதுத் தேர்தல்களில் இராமநாதபுரம் சட்டமன்றத் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டார். சமூகப் பணிகளில் அதிக ஈடுபாடு உள்ளவர். இவருக்கு ஐந்து மகன்கள் உள்ளனர்.



தற்பொழுது மறுவாழ்வு மற்றும் வேலை வாய்ப்புத்துறை அமைச்சராகப் பொறுப்பேற்றுள்ளார்.

## திரு. அ. அருணாசலம்

திரு. அ. அருணாசலம், திருச்சி மாவட்டம் வேப்பூர் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த அந்தூர் கிள்ளியூரில் 1953 ஆம் ஆண்டு பிறந்தவர். திருச்சியிலும், சென்னையிலும் கல்விபயின்றார்.



திருச்சி மாவட்டம் வரகூர் தொகுதியிலிருந்து 1984-ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இவரது துணைவியார் அரியலூரில் 'தாட்கோ' நிறுவனத்தில் பணியாற்றுகிறார். தற்பொழுது ஆதிதிராவிடர் நல அமைச்சராகப் பொறுப்பேற்றுள்ளார்.



# சட்டப் பேரவைத் தலைவர், துணைத் தலைவர் வாழ்க்கைக் குறிப்புகள்



## திரு. பி. எச். பாண்டியன்

தமிழ்நாடு சட்டப்பேரவைத் தலைவராக ஒருமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கும் திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் நெல்லை மாவட்டத்தைச்சேர்ந்த சேரன்மாதேவியில் 19-3-1945ல் பிறந்தவர்.

பாளையங்கோட்டையில் உள்ள புனித ஜான் உயர்நிலைப் பள்ளியில். பள்ளிக் கல்வியை முடித்த இவர், சென்னை பச்சையப்பன் கல்லூரியில் பட்டப் படிப்பைத் தொடர்ந்து, பிறகு, சென்னை சட்டக் கல்லூரியில் பயின்று வழக்கறிஞர் ஆனார்.

சென்னை மருத்துவக் கல்லூரியில் சட்ட மருத்துவமும் குற்ற இயலும் பயின்று முதுகலைப் பட்டம்பெற்றிருக்கிறார். கடந்த 12 ஆண்டுகளாகச் சென்னை உயர் நீதிமன்றவழக்கறிஞராக இருந்து வருகிறார். இவர் 'தமிழ்நாடு பார் கவுன்சில்' உறுப்பினராகவும் இருந்து வருகிறார்.

அ.இ.அ.தி.மு.க. தொடங்கப் பட்டதிலிருந்து அதன் மாநில வழக்கறிஞர் குழு அமைப்பாளராகப் பணிபுரிந்து வருகிறார்.

இவர் துணைவியார் திருமதி சிந்தியா பாண்டியன் அவர்கள் பேராசிரியராக, சென்னைப் பல்கலைக் கழகத்தில் பணிபுரிந்து வருகிறார். இவருக்கு ஐந்து குழந்தைகள் உள்ளனர்.

இவர் திருநெல்வேலி மாவட்டத்தில் 1977, 1980, 1984 ஆகிய பொதுத் தேர்தல்களில் சேரன்மாதேவி தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டார். 1980ல் சட்டமன்றப் பேரவையின் துணைத் தலைவராகப் பணியாற்றினார். பல வெளிநாடுகள் சென்று வந்துள்ளார். தற்போது 27-2-85 அன்று சட்டப் பேரவைத் தலைவராக ஒருமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுப் பொறுப்பேற்றுள்ளார்.

## திரு. வி. பி. பாலசுப்பிரமணியன்

திரு. வி.பி. பாலசுப்பிரமணியன் அவர்கள் 1-7-1946ல் மதுரை மாவட்டம் வெல்லம்பட்டியில் பிறந்தவர். எரியோடு, திண்டுக்கல், சென்னை ஆகிய ஊர்களில் கல்வி பயின்றார். 1980, 1984 ஆகிய பொதுத் தேர்தல்களில் மதுரை மாவட்டம்வேடசந்தூர் தொகுதியிலிருந்து சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

இவர் வேளாண்மைக் குடும்பத்தைச் சார்ந்தவர். அரசு சார்பில் பல வெளிநாடுகளுக்குச் சென்று வந்துள்ளார்.

தற்போது 27-2-85 அன்று சட்டப் பேரவைத் துணைத் தலைவராக ஒருமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுப் பொறுப்பேற்றுள்ளார்.

ஆளுநர் மாளிகையில் 10-2-1985 அன்று டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் முதலமைச்சராகப் பொறுப்பு ஏற்றுக் கொண்டார். இந்த விழா எளிய முறையில் நடைபெற்றது.

மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்கள் 14-2-1985 அன்று ஆளுநர் மாளிகைக்குச் சென்று அமைச்சர்கள் பட்டியலை ஆளுநரிடம் கொடுத்தார்.

அன்றே டாக்டர் நாவலர் வி. ஆர். நெடுஞ்செழியன் அவர்கள் நிதி அமைச்சராகவும், திரு. எஸ். இராமச்சந்திரன் அவர்கள் மின்துறை அமைச்சராகவும் பதவி ஏற்றனர்.

15-2-1985 அன்று பதினான்கு அமைச்சர்கள் ஆளுநர் மாளிகையில் பதவிப்பொறுப்பு ஏற்றுக் கொண்டனர்.

3.3.1985 அன்று மேலும் ஏழு அமைச்சர்கள் பதவிப் பொறுப்பு ஏற்றுக் கொண்டனர்.



வானளாவத் தோன்றிக் காட்சிதரும் திருவரங்கம், விண்ணை முட்டி நிற்கும் கலைக் கோட்டை, பசுமைக்கு உரமிடும் காவிரி அன்னை, பழம் பெரும் கலை பேசிடும் கங்கை கொண்ட சோழபுரம் ஆகிய பெருமைகளைக் கொண்ட திருச்சிராப்பள்ளி மாவட்டம் தமிழகத்தின் இதயமாய் விளங்கி புகழ்பெற்ற மாவட்டமாகத் திகழ்ந்து வருகிறது.

பொன்னி நதியாம் காவிரித்தாயின் மடியில் தவழ்ந்து வளங்கொழித்துச்செழிப்போடு விளங்கிடும் இம்மாவட்டம்தான், தமிழக அரசின் சார்பில் தொடங்கப்படும் பல சிறப்புத் திட்டங்கள் வெற்றி பெற்று பார் புகழக் காரணமாய் அமைந்துள்ளது.

பார் புகழும் சத்துணவுத் திட்டம், அதன் விரிவாக்கத் திட்டம், சுயவேலைவாய்ப்புத் திட்டம், ஆலய மேம்பாட்டுத்திட்டம் போன்ற பல சிறப்புத்திட்டங்கள் தொடங்கப் பட்டது, இம்மாவட்டத்தில் தான்.

**வ. விஸ்வநாதன், இ.ஆ.ப.,**
**மாவட்ட ஆட்சித் தலைவர்,**
**திருச்சிராப்பள்ளி.**

புதிய இருபது அம்சத் திட்டத்தின் முதலாவது அம்சமான பாசன வசதியைப் பெருக்குதல், மழையை நம்பியிருக்கும் விவசாயிகள் உற்பத்தியைப் பெருக்குதல் ஆகிய திட்டங்களுக்கு நீர்த்தேக்க அணைகள் கட்டுதல் மற்றும் கசிவுநீர்க் குட்டைகள் அமைத்தல் போன்ற திட்டங்களினால் இம்மாவட்டத்திற்கு 1984-85ஆம் ஆண்டிற்கு 2342 எக்டேர் குறியீட்டளவு நிர்ணயிக்கப்பட்டு இதுவரை 5024 எக்டேர் நிலம் பாசன வசதி பெற்றுள்ளது.

**சுயவேலை வாய்ப்புத் திட்டம்**

படித்த் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கத்தொடங்கப்பட்ட இந்தியப் பிரதமரின் சுயவேலை வாய்ப்புத்திட்டம் இம்மாவட்டத்தில் சிறப்பாகச் செயலாக்கப்பட்டு வருகிறது. இத்திட்டம் தொடங்கப்பட்ட நாளிலிருந்து டிசம்பர் 84 முடிய 1678 நபர்கள் ரூ. 277.75 லட்சம் கடன் வங்கி மூலம் பெற்று சுயவேலை வாய்ப்பினைப் பெற்றுள்ளனர். கடன் பெற்றுத் தொழில் தொடங்கிச் சுயவேலை வாய்ப்புப் பெற்ற சிலரது வளமான வாழ்வு பற்றி. ..

**திரு. செயது சுல்தான்**

இவரது வயது 22. இவர் ரேடியோ மற்றும் எலக்ட்ரானிக் தொழில் டிப்ளமோ பயின்றவர். சுயவேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் இவர் ரூ.10,000 வங்கிக் கடன் பெற்று மணப்பாறையில் ரேடியோ பழுது பார்க்கும் தொழிலும், உதிரி பாகங்கள் விற்பனையும் செய்துவருகிறார். இத்தொழிலில் இவருக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.1,200 வருமானம் கிடைத்துவருகிறது.

**திருமதி செபஸ்தியம்மாள்**

இவர் மணப்பாறை ஒன்றியம் குப்பாத்த மேடு கிராமத்தைச் சேர்ந்தவர். பி.யூ.சி.வரை படித்துள்ளார். இவரது அப்பா, அம்மா வயதானவர்கள். தம்பி தங்கைக்கு வேலையில்லை. இவர் சுயவேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் ரூ.5,000 கடன் உதவி பெற்று, சுயமாக ''ரொட்டி பேக்கரி'' தயாரித்து விற்பனை செய்து வருகிறார். இத்தொழிலில் இவருக்கு ரூ. 300 வருமானம் கிடைப்பதால், இவர் தனது குடும்பத்தைச் சிரமமின்றிக் காப்பாற்றி வருகிறார்.

**திரு கணேசன்**

இவர் எஸ்.எஸ்.எல்.சி.வரை பயின்றவர். இவர் சுயவேலை வாய்ப்புத் திட்டத்தில் ரூ.25,000 வங்கிக் கடன் பெற்று மணப்பாறையில் 'டைப்ரைட்டிங் இன்ஸ்டிடியூட்' நடத்தி வருகிறார். இவர் 6 டைப்ரைட்டர்கள் வாங்கி 27 மாணவர்களுக்கு 'டைப்ரைட்டிங்' பயிற்சி அளித்து வருகிறார். இவருக்கு இத்தொழிலில் மாதம் ரூ. 500 வருமானம் கிடைத்து வருகிறது.

**வேளாண்மைப் பணிகள்**

ஆராய்ச்சிப் பண்ணைகள் மூலம் வெளியிடப்பட்ட புதிய ரக வித்துக்களை அதிக அளவில் கிராமப்புற ஏழை எளிய விவசாயிகளிடையே பரப்புவதற்கான ''மினிகிட் திட்டம்'' செயல்பட்டு வருகின்றது. இத்திட்டத்தின்கீழ் 1984-85ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள்

# திருச்சிராப்பள்ளி மாவட்டம்



**வளரும் தமிழகம்:**

முடிய திருச்சி மாவட்டத்தில் 9338 நெல் விதை மினிகிட்டுகளும், 5983 சிறு விதை மினிகிட்டுகளும், 4637 பயறுவிதை மினிகிட்டுகளும் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டன.

மேலும் 105 எக்டேர் பரப்பளவில் சமுதாய நாற்றங்கால் அமைக்கப்பட்டு சிறு உழவர்களுக்கு நெல் நாற்றுகள் விநியோகம் செய்யப்பட்டு, உழவர்களிடையே வேளாண்மை ஆர்வத்தினை வளர்க்கவும், வேளாண்மைத் திறனைப் பெருக்கவும், ''பயிர் விளைச்சல் போட்டிகள்'' நடத்தப்பட்டு வருகின்றன. நெல், சோளம், கம்பு ஆகிய பயிர்களில் அதிக மகசூலை உற்பத்தி செய்யும் விவசாயிகளுக்குப் போட்டி மூலம் முதற்பரிசு ரூ.1,000, 2ஆம் பரிசு ரூ.500 வழங்கப்பட்டு வரப்படுகிறது.

ஆஸ்பெஸ்டாஸ் பைப் நிறுவனம். இத்தொழிற்சாலை ஆண்டிற்கு 36,000 டன் குழாய் தயாரிக்கும் திறன் கொண்டது. இவ்வாலை தென் மாநிலங்களில் அரசு முதலீட்டில் ஆரம்பிக்கப்படும் முதல் ஆலையாகும்.

பெரிய அளவிலான தொழிற்சாலை தவிர, சிறுதொழில் முன்னேற்றமும் கணிசமான அளவில் இம்மாவட்டத்தில் வளர்ச்சி அடைந்துள்ளது. மாவட்டத் தொழில் மையம் மூலம் தொழில் தொடங்க 1979 முதல் 1984 டிசம்பர் முடிய 1977 நபர்களுக்குத்தற்காலிகச் சான்றிதழ்களும் 1447 நபர்களுக்கு நிரந்தரச் சான்றிதழ்களும் வழங்கப்பட்டுள்ளன. கிராமப்புறத் தொழில் திட்டக் கடன் திட்டத்தில் இம்மாவட்டத்திற்கு ரூ. 7 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



உலகத் தொழில் அரங்கில் முக்கிய பங்கேற்கும் பாரதமிகு மின் தொழில் நிறுவனம் அமைந்துள்ள மாவட்டம் திருச்சி மாவட்டம். இம்மாவட்டத்திற்கு மேலும் பெருமை சேர்க்கதோற்றுவிக்கப்பட்டதுதான் தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித நிறுவனம். இக்காகித ஆலை புகளூரில் ரூ.200 கோடி செலவில் அமைக்கப்பட்டு உற்பத்தி தொடங்கும் நிலையில் உள்ளது. இப்புதிய ஆலை ஆண்டுக்கு 50 ஆயிரம் டன் செய்தித்தாள் காகிதமும், 40 ஆயிரம் டன் எழுது, அச்சுக் காகிதமும் தயாரிக்கும் திறன் கொண்டது. இவ்வுற்பத்தியால் செய்தித்தாள்கள் இறக்குமதியைத் தவிர்ப்பதுடன் ரூ. 40 கோடி அந்நியச் செலாவணி மிச்சப்படுத்தப்படும். கரும்புச் சக்கையைக் கொண்டு காகிதம் தயாரிக்கப்படும் இந்த ஆலை உலகத்திலேயே இரண்டாவது ஆகும்.

திருச்சி மாவட்டம் மாயனூரில் ரூ.10 கோடி மூலதனத்தில் தொடங்கப்பட்டுள்ளது,

இம்மாவட்டத்தில் 31 ஊராட்சி ஒன்றியங்களிலும் 930 மகளிர் மன்றங்கள் செயல்பட்டு வருகின்றன.

ஆண்டு வருமானம் ரூ. 3,000க்குக் குறைந்த விதவைப் பெண்களின் குழந்தைகள் 1 முதல் 12 ஆம் வகுப்பு வரை படிக்க ஆண்டுதோறும் ரூ. 13,000க்கு இலவசப் பாடப்புத்தகங்கள் வழங்கப்படுகின்டுறன.

விதவை மகள் திருமணத் திட்டத்தின் கீழ் 1984-85ஆம் ஆண்டில் ஒரு பெண்ணுக்கு ரூ.1,000 உதவித் தொகையாக ரூ. 1.49 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

ரூ.1,000 மாத வருமானத்திற்கு உட்பட்டவர்களுக்கும்அவர்களதுகுழந்தைகளுக்கும் காது கேளாமல் இருப்பின் அவர்கட்கு இலவச காது கேட்கும் கருவி வழங்கப்படுகின்றது. நடப்பாண்டில் 1,000 கருவிகள் வழங்கப்பட்டுள்ளன.



## மின்சார ரம்பம்

சென்னை மாநகராட்சி ரூ. 16,000 செலவில் மின்சார ரம்பம் ஒன்றை வாங்கியுள்ளது. மின்சாரத்தால் இயங்கும் இந்த ரம்பம் இரு நிமிடத்தில் மரத்தை அறுக்கவல்லது

புயலால் சென்னை மாநகரத்துச் சாலலயோர மரங்கள் சரிந்தபொழுது அவற்றை அறுத்து அப்புறப்படுத்த,முதலில் மின்சாரரம்பம் ஒன்று வாங்கப்பட்டது. இது இரண்டாவது கருவியாகும். இதை மாநகராட்சி பயன்படுத்துவதோடு, பொதுமக்களும் இதைக் குறைந்த வாடகை செலுத்திப் பயன்படுத்திக் கொன்னலாம்.

ஒரு மணி நேர உபயோகத்திற்குத் தாங்களே மின்சாரம் தந்தால் ரூ. 20, மாநகராட்சி ஜெனரேட்டரோடு மின் சக்தியும் தர வேண்டுமாயின் ரூ. 30 கட்டணம் தர வேண்டும். பொதுமக்களின் தேவை மிகுந்தால் இதுபோல் அதிக மின்சார ரம்பங்களை மாநகராட்சி வாங்க உத்தேசித்துள்ளது.



தமிழகத்தில் உள்ள ஐந்தரை இலட்சம் கைத்தறிகளில் திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் 32,185 கைத்தறிகள் உள்ளன. இம்மாவட்டத்தில் 116 நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் 25,150 தறிகளுடன் சிறப்புற இயங்கி வருகின்றன.

இம்மாவட்டத்தில் உற்பத்தி செய்யப்படும் கைத்தறி ரகங்களில் உறையூர் புடவைகள், தாத்தையங்கார் பேட்டை வேட்டிகள், ஜெயங்கொண்டம் மேலங்கிகள், கரூர் சுருள் படுக்கை விரிப்புகள் பெயர் பெற்றவை. இதில் சிறப்பு அம்சமாகத் தாத்தையங்கார் பேட்டைக் கைத்தறி வேட்டிகள் ஐ.எஸ்.ஐ சான்றிதழ் பெற்றுள்ளன. ஐ.எஸ்.ஐ முத்திரை பெற்ற வேட்டிகள் ரகம் வேறு எங்கும் கிடையாது.

நெசவாளருக்கான வீட்டு வசதித்திட்டத்தில் 434 நெசவாளர்கட்கு ரூ.41.22 இலட்சம் மதிப்பில் 434 வீடுகள் கட்டிக்கொடுக்கப்பட்டுள்ளன. இதில் 4.34 இலட்சம் மானியமாக அளிக்கப்பட்டுள்ளது. கைத்தறித்துணி விற்பனைத் திட்டத்தில் தள்ளுபடி மானியமாக இம்மாவட்டத்தில் 1983ஆம் ஆண்டில் ரூ. 12.92 இலட்சமும் 1984ஆம் ஆண்டில் ரூ. 14.70 லட்சமும் அனுமதிக்கப்பட்டுள்ளன.

திருச்சி மாவட்டத்தின் கரூர்ப் பகுதியிலிருந்து அமெரிக்கா, ஆஸ்திரேலியா, இங்கிலாந்து, பிரான்ஸ், பெல்ஜியம், நார்வே, அயர்லாந்து, மேற்கு ஜெர்மனி மற்றும் ஸ்வீடன் போன்ற நாடுகளுக்கு ரூ.15 கோடி மதிப்புள்ள படுக்கை விரிப்புகள், மேசை விரிப்புகள், தலையணை விரிப்புகள், துண்டுகள், அழகிய வண்ணத் துணிகள் முதலியன ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

### குழந்தைகள் சத்துணவுத் திட்டம்

(1) 2 வயது முதல் 5 வயது வரை 1,55,600 குழந்தைகள் பயன்பெறுகிறார்கள். இதேபோல (2) 5 வயது முதல் 9 வயது வரை 3,00,700 பேர்கள் (3) 10 வயது முதல் 14 வயது வரை 10,500 பேர்கள் ஆகமொத்தம் 4,66,800 பேர்கள் பயனடைகிறார்கள். சத்துணவு விரிவாக்கத் திட்டத்தின்கீழ் 10ஆம் வகுப்பு வரை பயன்பெறும் மாணவர்கள் 1,62,327 பேர்கள். ஆகமொத்தம் 6,29,127 பேர்கள் பயனடைகிறார்கள்.

சத்துணவுத் திட்டத்தின் மூலம் வேலை வாய்ப்பு. (1) குழந்தைகள் நல அமைப்பாளர்கள் எண்ணிக்கை 1968 (2) குழந்தைகள் நல உதவியாளர்கள் எண்ணிக்கை 3936. (3) பள்ளி சத்துணவு அமைப்பாளர்கள் ஆண் 1367. பெண் 1332 (4)சமையல் மற்றும்உதவியாளர்கள் எண்ணிக்கை. 5265 (5) சமையல் பணியாளர்கள் எண்ணிக்கை 13589. சமையல் பணியாளர்களில் (அ) விதவைகள் 2139 (ஆ) கணவரால் கைவிடப்பட்டோர்: 2369.

முதியோர் உதவித்தொகை பெறும் ஏழை எளியவர்களுக்கு வழங்கப்படும் முதலமைச்சர் சத்துணவுத் திட்டத்தில் பயன்பெறும் முதியோர்கள் 18,297

### வீட்டுவசதித் திட்டம்

திருச்சி நகருக்கு அருகில் ரூ. 9கோடி செலவில் 171 ஏக்கர் நிலப்பரப்பில் இப்புதிய நகரம் அமைக்கப்பட்டு 15.9.84 அன்று மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களால் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இப்புதிய நகரின் சிறப்பு அம்சம். மாநிலத்திலே இங்குத்தான் காவலர்களுக்கெனத் தனியாக 720 வீடுகள் நவீன வசதிகளுடன் ரூ. 2 கோடி செலவில் அமைக்கப்பட்டுள்ளன. இக்குடியிருப்பில் சாண எரிவாயு மூலம் எரிபொருள் கொடுக்கப்படுகிறது. மேலும் ரூ 7 கோடி செலவில் 898 வீடுகள் கட்டப்பட்டு அனைவருக்கும் வழங்கப்பட்டுள்ளன, இந்த நவீன குட்டி நகரத்தில் பள்ளி வசதி, அங்காடி, விளையாட்டு அரங்கம், மருந்தகம் போன்ற அனைத்து வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டுள்ளன.

இந்தியாவில் திருச்சி, திருச்சூர், கூம்பே, ஜெய்ப்பூர் ஆகிய நான்கு இடங்களில் செயற்கை வைரம் உற்பத்தி செய்யப்பட்டு

வருகிறது. இதில் திருச்சியில் தயாரிக்கப்படும் செயற்கை வைரம் மிகப் பிரசித்தி பெற்று விளங்குகிறது

திருச்சி மாவட்டத்தில் இத்தொழிலில் மொத்தம் 40 ஆயிரம் தொழிலாளர்கள் பணி புரிந்து வருகின்றனர் இது ஓர் குடிசைத் தொழிலாகவே இயங்கி வருகிறது. இத் தொழிலை வளர்த்து மேலும் உற்பத்தியைப் பெருக்கத் தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் மாவட்டத் தொழில் மையத்தின் மூலம் ஆரம்பிக்கப்பட்டுஇயங்கி வருகின்றன.சுமார் 1190 உறுப்பினர்களைக் கொண்டு, ரூ.2.06 லட்சம் முதலீட்டுடனும்ரூ.50,000அரசு உதவியுடனும் இச் சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன.

இம்மாவட்டத்தில் தயாரிக்கப்படும் செயற்கை வைரம் ஆந்திரா, கர்நாடகா, கேரளா, ஒரிசா போன்ற மாவட்டங்களில் நல்ல விற்பனையாகிறது. ஆண்டிற்கு ரூ 5 இலட்சத்திற்கு விற்பனை ஆகிறது.

**விஞ்ஞான விந்தை**

பல கோடி ஆண்டுகளுக்கு முன் கடலில் வாழ்ந்த உயிரினங்கள் கல்லாக மாறிய விநோதம் ஏறக்குறைய் 15 கிலோ எடை, 1½ அடி அகலமுள்ள மிகப் பெரிய நத்தை பலகோடி ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்துள்ளது என்பதற்குச் சான்றாக,இன்று அரியலூர்ப் பகுதியில் பூமிக்கடியில் தோண்டியெடுக்கப்பட்டுள்ளது. இதே போன்று பல உயிரினங்கள் இங்குக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இதிலிருந்து அரியலூர்ப் பகுதி முன்னொரு காலத்தில் கடல் பகுதியாக இருந்திருக்கலாம் எனக் கருதலாம்.

பலகோடி ஆண்டுகளுக்கு முன்தோன்றிய மரம் மண்ணில் புதைந்து இன்று கல்லாகக் காட்சியளிக்கிறது. இம்மரக் கல்லும் அரியலூர்ப் பகுதியில்தான் தோண்டியெடுக்கப்பட்டது.

பச்சைமலைப் பகுதியில் 11,930 மலைவாழ் மக்களின் முன்னேற்றத்திற்காக, ரூ. 92 லட்சம் செலவில் அரசு அரும்பணியாற்றி வருகிறது.

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் 1984-85ஆம் ஆண்டிற்கு ரூ.248.46 இலட்சம் செலவழிக்கவும், 24456 பேருக்கு உதவி அளிக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. நடப்பு ஆண்டில் 25.1.85 முடிய ரூ.207.77 இலட்சம் செலவழிக்கப்பட்டுள்ளது. மற்றும் வங்கிகள் மூலம் 539.69 லட்சம் கடனாக அளிக்கப்பட்டுள்ளது. 22198 நபர்கள் பயன் அடைந்துள்ளனர். மேலும் 616 ஆதி திராவிடர் குடும்பங்களும், 5484 பெண்களும் பயன் அடைந்துள்ளனர்.

இதுவரை கிராம சுயவேலைவாய்ப்பு மற்றும் தொழிற் சேவை உதவித் திட்டத்தின் கீழ், 1158 பேர் பயிற்சிக்குச் சென்றுள்ளார்கள். அவர்களுக்குப் பயிற்சி உதவிப் பணம் ரூ.11.92 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

மேற்படி திட்டத்தின்கீழ் சுயவேலை தேடிக்கொள்ளும் பொருட்டு 5692 நபர்களுக்கு ரூ.32.11லட்சம் மானியமும், ரூ.93·62 லட்சம் கடனும் அளிக்கப்பட்டுள்ளன.


**தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டம்**

கிராமங்களில் வசிக்கும் மக்களில் வேலைவாய்ப்பற்ற மக்களுக்கு வேலைவாய்ப்பு அளிப்பதற்கும், விவசாயப்பணி நடைபெறாத நாட்களில் போதிய வேலைவாய்ப்பில்லாத கிராம மக்களுக்குக் கூடுதல் வேலை வாய்ப்பு அளிக்கும் திட்டத்தின் மூலம் 1.4.84 முதல் இதுவரை ரூ.261.26 லட்சம் மதிப்புள்ள வேலைகள் செய்து முடிக்கப்பட்டுள்ளன. வேலைகளில் பயன்படுத்திய பொருட்களுக்கென ரூ.112.66 லட்சமும், தொழிலாளர்களின் ஊதியத்தின் ஒருபகுதி ரொக்கமாக வழங்கிய வகையில் ரூ.117.64 லட்சமும் ஆக மொத்தம் ரூ. 230.30 லட்சம் செலவிடப்பட்டுள்ளது. ஊதியத்தின் மற்றொரு பகுதி அரிசியாக வழங்கிய வகையில் ரூ.30.96 இலட்சம் மதிப்புள்ள 1615 மெட்ரிக் டன் அரிசி விநியோகம் செய்யப்பட்டுள்ளது.

இந்த ஆண்டு இதுவரை 12,080 தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த மக்கள் உள்பட 32,805 பேர்கள் வேலைவாய்ப்பு பெற்றுள்ளனர்.

ஊரகப் பகுதிகளில் வாழும் நிலமற்ற ஏழை விவசாயிகளுக்கு ஒரு ஆண்டில் குறைந்தபட்சம் 100 நாட்களுக்குத் தொடர்ந்தாற் போன்று வேலைவாய்ப்பளித்து அவர்களது வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கெனத் தொடங்கப்பட்ட ஊரக நிலமற்றோர் வேலை வாய்ப்பு உறுதியளிப்புத் திட்டத்தின்கீழ் 1984-85ஆம் ஆண்டுவேலைகளில் பயன்படுத்திய பொருட்களுக்கென ரூ. 195.91 லட்சமும், தொழிலாளர்களுக்குக் கூலி ஒரு பகுதி ரொக்கமாக வழங்கிய வகையில் ரூ.249.25 லட்சமும் ஆகக் கூடுதல் ரூ. 445.16 லட்சம் செலவிடப்பட்டுள்ளது. மேலும், தொழிலாளர்களின் கூலியின் மறுபகுதி அரிசியாக ரூ.40.96 லட்சம் மதிப்புள்ள 2214 மெட்ரிக் டன் அரிசி விநியோகம் செய்யப்பட்டுள்ளது.

இவ்வாறு பல்வேறு முனைப்புத் திட்டங்கள் மூலம் முன்னேற்றப் பாதையில் விரைந்துசெல்கிறது திருச்சி மாவட்டம் என்றால் அது மிகையல்ல!





# வெற்றிக்கனி பறிப்போம்!


**து. இரா. இராமசாமி இ.ஆ.ப.**
**மாவட்ட ஆட்சித்தலைவர்**
**தஞ்சாவூர்**


இயற்கை வளம், பொருளாதார வளம், மனித வளம், விஞ்ஞான தொழில் நுட்ப வளம் போன்ற பல்வேறு துறைகளுக்கிடையே ஏற்படும் விளைவுகளின் பயனே நாட்டின் வளர்ச்சி எனப்படும். வளர்ச்சிக்கு மூல காரணமாகத் திகழும் மேற்கண்ட வளங்களில் மனித சக்தி என்பதே மிகவும் வலிமை வாய்ந்தது. எனவே வளர்ச்சிக்கு அவசியமான மனித சக்தி வளர்ச்சிக்கு ஊக்கம் அளிக்க வேண்டிய நிலையில் இருக்கின்றோம். மனிதசக்தி என்பதற்கும் சாதாரணமா... மக்கள் தொகை என்பதற்கும் நிறைய வேறுபாடுகள் உள்ளன. மக்கள் தொகை என்பது வெறும் எண்ணிக்கையை மட்டும் குறிக்கிறது. ஆனால் மனித வளம் என்பது அவர்களின் அறிவையும், ஆற்றலையும் திறன்மையையும் குறிக்கிறது. மனித வளம் நல்லமுறையில் பயன்படுத்த முடியாமல் போவதற்கு மூல காரணம் மக்களை வாட்டும் வறுமையே ஆகும். நம் நாட்டில் மக்கள் தொகையில் 50 சத விகிதத்தினர் வறுமைக்கோட்டிற்குக் கீழ் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இவர்களில் பெரும்பாலோர் கிராமங்களில் விவசாயத்தையும், அதைச் சார்ந்த தொழில்களையுமே நம்பி வாழும் நிலமற்ற கூலிகள், மிகச் சிறு விவசாயிகள், கைவினைஞர்கள், ஆதிதிராவிடர் சமூகத்தினர் போன்றவர்களாவர். வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழ்கிறார்கள் என்று கூறும்போது தங்களுடைய அடிப்படைத் தேவையான உணவு, உடை, இருப்பிடம், ஆரோக்கியம், கல்வி முதலியவற்றை குறைந்தபட்ச அளவிற்குக்கூட பூர்த்தி செய்ய,போதுமான அளவிற்கு வருமானம் அவர்களுக்கு கிடைக்கவில்லை என்பதாகும். இத்தகைய நலிவுற்ற மக்களின் வாட்டம் போக்கிட வறுமை நீங்கிட ஒளி கொடுக்க வந்த 20 அம்சத்திட்டத்தில் ஒன்றுதான் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம்.

இத்திட்டத்திற்கான நிதி உதவி மத்திய மாநில நிதியிலிருந்து சரி சமமாக வழங்கப்படுகிறது. ஒவ்வொரு ஆண்டும் ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் இருந்து 600 ஏழைக் குடும்பங்களை தேர்ந்தெடுத்து உதவி செய்யப்பட்டு வருகிறது. அவ்வாறு தேர்ந்தெடுக்கப்படும் ஒவ்வொரு குடும்பத்திற்கும் ஆண்டு ஒன்றுக்கு ரூ. 3,500 வருமானம் தொடர்ந்து வருவதற்காக வங்கிக் கடனுடன் மான்யமும் வழங்கி உடமைகள் வாங்கி வழங்கப்படுகின்றன.

இம்மாதிரி குடும்பங்களை கிராமங்களில் இனம் கண்டு புள்ளி விவரம் சேகரித்து அவர்களுக்கு விவசாயத்திட்டம், கால்நடைப் பராமரிப்புத் திட்டம், சிறு நீர்ப்பாசனத் திட்டம், மீன் வளர்ப்புத் திட்டம், பட்டு வளர்ப்புத் திட்டம் மற்றும் சிறு தொழில் நடத்தத் திட்டம் போன்றவற்றில் உதவி செய்யப்படுகிறது. அவ்வாறு உதவி செய்யும் பொழுது சிறு விவசாயிகளுக்கு 25 சத விகிதம் மான்யமும் மிகச் சிறு விவசாயி, விவசாயக் கூலி மற்றும் கைவினைஞர்களுக்கு 33· 1/3 சத விகித மான்யம் வழங்கப்படுகிறது.

விவசாயத்தையே பெரிதும் நம்பி வாழ்கின்ற மாவட்டம் தஞ்சை மாவட்டம் என்பது எல்லோருக்கும் தெரிந்ததே. தமிழகத்தின் 'நெற்களஞ்சியம்' என அழைக்கப்படும் தஞ்சை மாவட்டம் 2,172 எழில் மிகு கிராமங்களை உடையதாகும். பசிப்பிணி போக்



கும் விவசாயிகள் பெரும்பாலும் கிராமங்களிலேயே வாழ்கிறார்கள். விவசாயத்துடன் இணைந்த திட்டமாக மக்களுக்குப் பயன் பெறும் திட்டமாக விளங்கி வருவது கால்நடை வளர்ப்புத் திட்டமே. அதிலும் மக்கள் பெரிதும் விரும்பி ஏற்றுக் கொள்ளும் திட்டமாக கறவை மாடுகள் வழங்கும் திட்டம் அமைந்துள்ளது. கடந்த நான்கு ஆண்டுகளில் 70,000 கறவை மாடுகள் வழங்கி சாதனை புரியப்பட்டுள்ளது. கறவை மாடு வளர்ப்பில் ஆர்வம், அதற்கான வைக்கோல், தீவனம், புல் வசதிகள் நீர்நிலைகள் இம்மாவட்டத்தில் நிறைய உள்ளன. உபரி வருவாயாக மாதம் ரூ. 300 மிகவும் எளிதாகக்கிடைப்பதை மக்கள் உணர்ந்து வருகிறார்கள். மற்றும் புதிதாக 150 பால் உற்பத்தியாளர் சங்கம் உருவாக்கப்பட்டு, பால் விற்பனை நல்லமுறையில் ஊக்குவிக்கப்பட்டு வருகிறது. பசுந்தீவனப் புல் வளர்ப்பிற்காக இவ்வாண்டு ஏரிப் பகுதிகளிலும் ஆற்றுக் கரையோரப் பகுதியிலும் புல் வளர்ப்புத் திட்டம் உருவாக்கப்பட்டு உள்ளது.

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் ஒரு பகுதியாக கிராம இளைஞர்களுக்கு சுயவேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் தொழில் பயிற்சி அளித்து தொழில் நடத்த உதவி செய்யப்பட்டு வருகிறது. சுயவேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ், கடந்த நான்கு ஆண்டுகளில் 14,217 பேர் பயன் அடைந்துள்ளார்கள். முக்கியமாக கீழ்க்கண்ட தொழில்களில் பயிற்சி அளிக்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கதாகும். மோட்டார் மெக்காணிசம், டிராக்டர் பழுது பார்த்தல், பம்பு பழுது பார்த்தல், தச்சு, கொல்லுத் தொழில், ரேடியோ ரிப்பேர், மோட்டார் சைக்கிள் மற்றும் ஸ்கூட்டர் பழுது பார்த்தல், வெல்டிங் ரீவைண்டிங், தஞ்சை கலைத்தட்டு தயாரித்தல், நெட்டி வேலை, பெண்களுக்காகப்பாய் நெசவு, கதர் ராட்டை நூற்பு, பட்டு நூல் தயாரித்தல், கயிறு முறுக்குதல். போன்ற தொழில்களில் பயிற்சி அளிக்கப்பட்டு உரிய சாதனங்கள் வாங்க மான்யம் வழங்கப்பட்டு வருகிறது.

தனி நபர்களின் வருவாயைப் பெருக்கும் திட்டத்தைச் செம்மையாகச்செய்ய அதற்கு தேவையான அடிப்படை ஆதார வசதிகளைப் பெருக்க கூட்டுறவு நிறுவனங்களுக்கு 50% அரசு நிறுவனங்களுக்கு 100% மான்யமும் அளிக்கப்படுகிறது.

தஞ்சையில் கலை நுட்பம் கொண்ட தஞ்சை கலைத்தட்டு, வெங்கலச் சிலைகள் செய்வதை ஊக்குவிக்க சுவாமிமலை வெங்கல கூட்டுறவு உற்பத்தியாளர் சங்கத்திற்கு 1.70 இலட்சம் ரூபாய் தொழில்கூடம் அமைக்கப்பட்டுள்ளது. கைத்தறி நெசவுத்தொழிலாளர்களின் வருவாயை ஊக்குவிக்கும் பொருட்டு திருநாகேஸ்வரத்தில் 100 தறிகள் கொண்ட தொழிற்கூடம் அமைக்க ரூ. 1.45 இலட்சம் மான்யம் அளிக்கப்பட்டுள்ளது.

கூட்டுறவு பால்வழங்கும் சங்கத்திற்காக பல்வேறு சாதனங்களைப் பெற ரூ. 9.55 இலட்சம் மான்யம் கொடுக்கப்பட்டுள்ளது.

கறவை மாடுகளின் சிகிச்சை நோய் தடுப்பிற்காக ஆறு நடமாடும் கால்நடை மருத்துவ வசதிகள் கொண்ட ஊர்திகள் வாங்க ரூபாய் ஆறு இலட்சம் மான்யமாக வழங்கப்பட்டு உள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

சிறு விவசாயிகள் முயற்சியால் பயிர் செய்யப்படும் காய்கறிகளின் உற்பத்தியை ஊக்குவிக்கவும் நல்ல விற்பனையைப் பெறவும் கத்தரிப்புலம் காய்கறி உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கத்திற்கு ரூ. 80,000 மதிப்புள்ள காய்கறி விற்பனை மோட்டார் வண்டி ஒன்றும், தஞ்சை கூட்டுறவு காவேரி சிறப்பு அங்காடிக்கு காய்கறி விற்பனை செய்ய ஒரு மோட்டார் வண்டியும் வாங்கி வழங்கப்பட்டுள்ளது, மிகவும் சிறப்பான அம்சமாகும். இவ்வாண்டு மயிலாடுதுறையில் பால் குளிரூட்டுச் சாதனம் அமைக்க ரூ. 10 இலட்சம் வழங்கப்படவுள்ளது, பால் உற்பத்திப்பெருக்கத்திற்கு மிகவும் உறுதுணையாக இருக்கும்.

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் தஞ்சை மாவட்டத்தில் இது வரை 1,87,819 பேர்கள் பயன் அடைந்துள்ளார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.







# பற்களைப் பாதுகாக்க...

டாக்டர் ர. பாலாஜி

அனைவருக்கும் அரிய, ஒப்பற்ற நண்பன் பற்கள். 'பல்போனால் சொல் போயிற்று' என்ற மூதுரை அதை வற்புறுத்தி வருகிறது!

மனிதனின் சொல் தானே, ஆக்கலும் அழித்தலும்! எனவே பற்களைப் பாதுகாக்க வேண்டாமா?

பற்களைப் பாதுகாக்கத் தவறினால்-தலைவலி, வயிற்றுக்கோளாறு, முடக்கு வாதம், தோல் சம்பந்தப்பட்ட நோய்கள் சுவாச கோச நோய், கண் நோய்-ஏன் இருதய நோய்களும் வரும்! 'நோய்ச் சிறையில்' சித்திரவதைப்படவேண்டுமா?

முடியாது! கூடாது....

நம் குழந்தைகளின் பற்கள் இரண்டாம் ஆண்டே சரியாகஅமைந்துள்ளனவா? பிரச்சினைகள் உள்ளனவா? தீர்க்க, பல் டாக்டரைக் கலந்து ஆலோசிக்க வேண்டும்.

இரவில் படுக்கைக்குச் செல்லும் முன்பும், காலையில் எழுந்தவுடனும் பல் துலக்கியே ஆக வேண்டும். மாலையிலும் ஒருமுறை துலக்கினால் நல்லது.

எப்படி முறையாகப் பல் துலக்குவது?

ஈறுகளை ( gums ) முன்னும், பின்னும் பிரஷினால் முதலில் தேய்க்க வேண்டும்.. முரட்டுத்தனமாக வேண்டாம். தடுப்புச்சுவர் ( enamel ) பாதிக்கும். அடுத்து வெந்நீரில் வாய் கொப்பளியுங்கள். சில 'துகள்' உப்பும் கலந்து கொள்ளுங்கள்.

தயவுசெய்து செங்கல் தூள், சாம்பல், கரி இவைகளை எக்காரணம் கொண்டும் பயன்படுத்தாதீர்கள்.'

வெற்றிலை, பாக்கு, புகையிலை, பீடி, சிகரெட் இவைகளை உபயோகப்படுத்துகிறீர்களா? இந்த நொடியே விட்டு விடுங்கள், 'வாய்ப்புற்று' வரும்.

'புளோரைட்' உப்புக் கலவாத பற்பொடி பசைகளையே உபயோகியுங்கள்.

காலை உணவாயிற்றா?

இப்போது வாயை நன்றாகக் கொப்பளியுங்கள். ஈறு பகுதிகளையும் பலமுறை தேய்த்து விடுங்கள். அடிக்கடி ஈறுகளை ( gums ) தேய்த்துச் சிறந்த பயிற்சி கொடுத்தே ஆக வேண்டும். பயிற்சி பற்களின் அன்னை.

பகல் பத்து மணி!

அருமையான காப்பி சாப்பிட்டீர்களா? இல்லை குளிர் பானமா, ஐஸ்கிரீமா? எதுவும் பற்களில் பாக்டீரியாக்களை, விஷக் கிருமிகளை லட்சக்கணக்கில்தோற்றுவிக்கும். சற்றுச் சோம்பேறித்தனம் காட்டினாலும் பல்கோட்டையையே அழித்துவிடும்.

என்ன செய்ய வேண்டும்? எவ்வளவு செலவானாலும் சரி.

பயப்படாதீர்கள்! செலவில்லை, சிரத்தைதான்.

மறந்து விடாதீர்கள் நம் குழந்தைகளுக்குப் பயிற்சி அளிக்க.

மதிய உணவு ஆயிற்றா?

இன்று பலமான விருந்தா?

நிச்சயம் பலவகை இனிப்புகளை, ஜமாய்த்து' இருப்பீர்களே! கடைசியில் ஐஸ்கிரீமா? இவைகளை 'அறவே' தவிர்த்தால்தான் பற் சொத்தைகளைத் தடுக்கலாம்.

தினம் ஒரு [illegible] சாப்பிடுங்கள்! அந

# 'கடல் யானை'

'கடல் யானை' பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறோமா?

மீன் பிடிக்கச் சென்ற மீனவர்கள் கடலில் ஒரு அதிசயமான விலங்கைக் கண்டனர். இந்தச் செய்தி பரவியதும் கொல்லம் கடற்கரையில் ஆயிரக்கணக்கான மக்கள் கூடினர்.

அந்த அதிசய விலங்கை 'கடல் யானை' என்று அந்த மீனவர்கள் குறிப்பிட்டனர். அந்த விலங்கு கறுப்பு நிறத்தில், சுமார் '15 மீட்டர்' நீளம் இருந்ததாகவும், அது தங்களுடைய நாட்டுப் படகுகளில் ஒன்றைக் கவிழ்த்துவிட்டதாகவும் அவர்கள் கூறினர். ஆனால் அந்தப் படகிலிருந்த இரண்டு பேர் பாதுகாப்பாக வேறு படகுகளில் ஏறிக்கொண்டனர்.

அந்த அதிசய விலங்கு கொல்லம் துறைமுகத்திற்கு அருகில் காட்சியளித்ததாகக் கூறப்படுகிறது. 'கடல் யானை' தோன்றினால் கடற்கரையில் ஒரு பெரிய 'மண் கரை' உருவாகும் என்பது மீனவர்களின் நம்பிக்கை. அந்த நிகழ்ச்சி நடப்பதை எதிர்பார்த்து மீனவர்கள் ஆர்வத்துடன் காத்திருக்கின்றனர்.

# இளைஞர் ஆண்டுத் திட்டங்கள்

"சர்வதேச இளைஞர் ஆண்டைக் கொண்டாடச் செயல் திட்டங்களடங்கிய அட்டவணை ஒன்றை மத்திய அரசு தயாரித்துள்ளது. அதன்படி கொண்டாடுமாறு எல்லா மாநில அரசுகளும் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளன" என்று மாண்புமிகு இளைஞர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டுகள் துறைத் துணை அமைச்சர் திரு ஆர். கே. ஜெய்சந்திர சிங் அவர்கள், மாநிலங்கள் அவையில் தெரிவித்தார்.

இளைஞர்கள் பணி முகாம்கள், தேசிய ஒருமைப்பாடு முகாம்கள், கருத்தரங்குகள், கண்காட்சிகள், விளையாட்டு முதலியன அந்த அட்டவணையில் இடம் பெற்றுள்ளன. தேசிய இளைஞர் தினம், தேசிய இளைஞர் வாரம் ஏற்கெனவே கொண்டாடப்பட்டு விட்டன.

தற்போதுள்ள விளையாட்டுத் திட்டங்களைத் தீவிரப்படுத்த அரசு தீர்மானித்துள்ளது. ஏழாவது 5 ஆண்டுத் திட்டத்தில் நிதி வசதி ஒதுக்கீட்டைப் பொறுத்துச் சில புதிய திட்டங்களும் மேற்கொள்ளப்படும் என்றும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியுள்ளார்.

தந்தக் காலங்களில் ( Seasonal Fruits ) கிடைக்கும் பழங்களைச் சாப்பிடுங்கள்! பப்பாளிப் பழத்தையும் சாப்பிடலாம். தினம் குறைந்தது எட்டுக் குவளை சுத்தமான வெந்நீரைப் பருகுங்கள்.

பற்கள், நீங்கள், உங்கள் குடும்பம், நாடு, மனித உலகம் முழுமையும் சிறக்க வைக்கும்! வியப்பாக இருக்கிறதா? உண்மை! விஞ்ஞான வழிவரும் சாதனைக் 'கனி'கள்; நிகரற்ற சுவையும் கூட!

பழங்களை மட்டும் தானே இரவில் உணவாக உண்கிறீர்கள்? நூற்றுக்கு நூறு நல்லது.

மாலை ஏழு மணிக்குள் முடித்துவிடுங்கள். அப்பொழுதும், பற்களை விளக்கியே ஆக வேண்டும். பழச் சர்க்கரையும் ஈறுகளையும், பற்களையும் பாதிக்கும். நினைவிருக்கட்டும்.

கடைசியாகப் பற்களை எப்பொழுது பரிசோதித்துக் கொண்டீர்கள்?

நினைவில்லையா?

போகட்டும். வயதிற்கு ஏற்ப ஒரு முறை கட்டாயம், பரிசோதனை செய்ய வேண்டும். இதோ அட்டவணை!

குடும்பத்துடன்-ஏன் நண்பர்களுடன் இப்பொழுதே புறப்படுங்கள்.

நல்ல நேரம்! மிக நல்ல நேரம்!

கீழ்க்கண்டவாறு குறித்த காலத்திற்கு ஒருமுறை பல் மருத்துவரிடம் சென்று சோதித்துக் கொள்ளுங்கள்:

2—6 வயதுவரை 6 மாதத்திற்கு ஒருமுறை
7—12 வயதுவரை 3 மாதத்திற்கு ஒருமுறை
13—18 வயதுவரை 6 மாதத்திற்கொருமுறை
19 வயதிற்கு மேல் 1 ஆண்டிற்கு ஒருமுறை






## 'பணம் பணம் பணம்

ஆசிரியர் : ஏர்வாடி
எஸ். இராதாகிருஷ்ணன்

வெளியீடு: சுதா பதிப்பகம்,
4, முத்து முதலி தெரு,
சென்னை-600 007.

பக்கம்: 204 விலை: ரூ. 15

நாடகங்கள் பலவாகப் பெருகி வருகின்றன. வானொலி நாடகம், தொலைக்காட்சி நாடகம், நாள்-வார இதழ்களில் வரும் நாடகம் என்ற அனைத்துத் துறையிலும் சிறப்பிடம் பெற்றுள்ளவர் இந் நூலாசிரியர்.

'பணம் பணம் பணம்' எனும் இந்நாடக நூல், 5 நாடகங்களை தன்னகத்தே பெற்றது. முதல் நாடகம் பணம் பணம் பணம். திருட்டுத்தனமாக வந்த ஐந்து லட்சம் ரூபாய் படுத்தும் பாடு நாடகத்தால் விளக்கப்படுகிறது. ''சீ....பணமா இது? பிணம்! பிணத்தை வீட்டுல ஒளிச்சி வச்சிக்கிட்டு தூங்கவா முடியும்?'' என்பதன் மூலம் உழைப்பின் வாராப்பணம்-பிணத்துக்குச் சமம் என்பதனைத் தெளிவு படுத்துகின்றார்.

இரண்டாவது நாடகம் 'அவர்கள் காத்திருக்கிறார்கள்; ஒரு வீட்டின் தலைவனை நம்பித்தான் அக்குடும்பமே இயங்குகிறது. அவனுக்குக் கிடைக்க வேண்டிய வேலையை, பொழுது போக்குக்காக வேலைக்குப் போகும் சிலர் தம் செல்வாக்கால் தட்டிப்பறிப்பதும், ஒரு வீட்டிலேயே கணவன், மனைவி, அண்ணன், தம்பி போன்ற அனைவரும் வேலைவாய்ப்புகளைப் பகிர்ந்து கொள்வதும் குற்றம் தான் என்பதனை மையக் கருத்தாகக் கொண்டு எழுதப்பட்டது.

பழமொழிகள் மிளிரும் இந் நாடகத் தொகுப்பு நூலில், சமுதாயத்தின் பலதிறப்பட்ட நிலைகளில் வாழ்பவரின் வட்டார மொழிகளும் இடம்பெறுகின்றன.

டாக்டர் சிவ அரசி முத்துக்காளத்தி

## உழைப்பாளரும் உரிமைப் போரும்

ஆசிரியர் : கல்பாக்கம்
தமிழ்மணி

வெளியீடு : மயிலவன் பதிப்பகம்
7, எம்.கே. அம்மன்
கோயில் தெரு,
மயிலாப்பூர்,
சென்னை-600 004.

விலை: ரூ. 6.00 பக்கம்: 96

புரட்சிப் பூக்கள் பூத்த நாடுகளே இன்று மணம் கமழும் எற்றமிக பூங்காக்களாகத் திகழ்கின்றன.

'உழைப்பாளரும் உரிமைப் போரும்' என்று அழகாகத் தலைப்பிடப்பட்ட இந் நூல் பண்டைக்காலப் புரட்சியிலிருந்து, உழைப்பாளரின் ஆட்சி நிலைபெறுதல் வரை பல உரிமைப் போர்களையும், அடிமை ஒழிப்பையும், தேசிய சங்கங்களின் அமைப்பையும் பற்றி அழகாக விளக்குகிறது.

உழைப்பாளருக்கு உரிமை பெற்றுத் தர முயன்ற தலைவர்கள் எத்தனை கொடுமையாக அழிக்கப்பட்டனர் என்பதை ஆதாரத்துடன் விளக்குகிறார்.

உரிமைப் போர்களில் பெரும் பகுதியை இந்நூலில் காணலாம். பயனுள்ள தொகுப்பு. பாராட்டப்பட வேண்டிய எழுத்து.

## விவேக சூடாமணி சாரம்

தொகுப்பு: சி.யு. நஞ்சப்பா,
வெளியீடு: சி.என். ராமசாமி,
முருகானந்த நிலையம்,
சிக்காரப் பாளையம்,
காரமடை (வழி)
கோவை மாவட்டம்.
641 104.

பக்கம்: 62 விலை: ரூ 3.00

சுருதி, யுக்தி அனுபவத்தால் உண்மையை உணர்ந்த மகான்கள், தங்கள் அனுபவங்களையும், அனுஷ்டித்த வழிகளையும் சாஸ்திரங்களாகச் செய்து வைத்தார்கள். அத்தகையவற்றுள் ஒன்று ஜகத்குரு ஆதிசங்கரரின் விவேக சூடாமணி.

விவேக சூடாமணியின் சுலோகங்கள் — கருத்துக் குறையாமல், சொல்லப்பட்ட அழகும், அழுத்தமும் விலகாமல் - எளிய நடையில் அனைவரும் புரிந்து கொள்ளும் வண்ணம் இந்நூலில் எடுத்துக் கூறப்பட்டிருக்கின்றன

இந்நூல் நல் வாழ்விற்கு வழி காட்டி.

— அ. மருதவிநாயகம்

## முல்லைச் செல்வி

ஆசிரியர்: சு. சாம்ராஜ்,

கிடைக்குமிடம் ; சு. சாம்ராஜ்,
கண்ணுவிளை, உதய
மார்த்தாண்டம் அஞ்சல்,
குமரி மாவட்டம் 629 178.

விலை: ரூ. 7. பக்கங்கள்: 84.

இயற்கைக் காட்சிகளின் இனிய கடைவிரிப்பாகத் திகழ்கிறது இந் நூல். முக்கியமாக வெண்மையான தூய இதழ்களைத் திறந்து சிரிக்கும் அதோ அந்த முல்லைப் பூ ஆசிரியரின் கவியுள்ளத்தைப் பெரிதும் ஆக்கிரமித்துக்கொண்டு அழகுற விவரிக்கப்படுகிறது.

67 பக்கங்கள் வரை, புதுக் கவிதை முறையில் எழுதப்பட்டுள்ளது. அந்த வகையில் முதலிடம் பெற்றோர் தம் வழிமுறைகள் பின்பற்றப் பட்டிருப்பதாகத் தெரியவில்லை. அருமையான வருணனைக் கட்டுரையொன்று, இரண்டு மூன்று சொற்களோடு வரிவரியாக உடைத்துப் போடப் பட்டால் எப்படியிருக்குமோ அப்படிக் காணப்படுகிறது.

நூலின் முக்கால் பங்கிற்கு மேலே-அறுசீர் விருத்தங்கள், அகவற்பாக்கள் அணி செய்கின்றன. முழுவதையும் இப்படியே படைத்திருக்கக் கூடாதா என்ற கவலை சிலருக்கு எழக் கூடும்.

சொல்லாட்சி, கருத்தாழம், எல்லாம் உடையதாக விளங்குகிறது 'முல்லைச் செல்வி'.

—ராஜு

## முதல் குழந்தை

ஆசிரியர் : பட்டுக்கோட்டை
ராஜா

வெளியீடு : பூங்கொடிபதிப்பகம்
14, சித்திரைக்
குளம் மேற்கு வீதி
மயிலாப்பூர்,
சென்னை-600 004.

பக்கம்: 204 விலை: ரூ. 16

இளைய தலைமுறையின் ஏக்கங்கள், எதிர்பார்ப்புகள், ஏமாற்றங்களைத் தனது சிறுகதைகளில் பிரதிபலிக்கும் ஆசிரியர் இன்றைய தலைமுறை எழுத்தாளர்.

சின்னச் சின்னக் கதைகள். நறுக்கென்ற முடிவுகள்; நீள் கதை படித்த சோர்வு, தொய்வு இல்லை.

ஏழ்மை, வேலையின்மை, வரதட்சிணை போன்ற சமூகக் கொடுமைகளை மிக நாசூக்காக விவரித்து, நெருட வைத்து இருக்கிறார்.

அழுத்தமான, எளிமையான எழுத்து. அழகான மேற்கோள்கள், கற்பனையிலும் [illegible] முறைச் சாத்தியக் கூறுகள், மண் வாசனை தெறிக்கும் மரபுகள், பேச்சுகள் மனத்தை நிறைக்கின்றன.

இச்சிறுகதைகள் ஒவ்வொன்றும் நாள், வார, மாத இதழ்களில் வெளிவந்தவை. எனவே ஒவ்வொரு கதையும் கருத்தாய் எழுதப்பட்டவையாய், கட்டுக்கோப்போடு கதையையும் கொண்டிருக்கின்றன.

ஆசிரியருக்கு இது 'முதல் குழந்தை'யாம். நம்பமுடியவில்லை. பேரன், பேத்தி எடுத்த அனுபவம் தெரிகிறது.

— என். குமாரசாமி

## சத்துணவுப் பாடல்கள்

ஆசிரியர் : புலவர் பி. வெங்கடேசன்

வெளியீடு : அறிவரசி பதிப்பகம், ஐகுந்தம், கொத்தப்பள்ளி, தருமபுரி மாவட்டம் 635 203.

சிறுவர்க்குரிய கவிதைகள் 68 கொண்டது இந்தத் தொகுப்பு. மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் அறிமுகம் செய்துள்ள முதலமைச்சர் சத்துணவுத் திட்டத்தின்பெருமை குறித்துப் பல கவிதைகள் சிறப்பாக எழுதப்பட்டுள்ளன.

பசிப்பிணி நீங்கிப் பட்டம்-பெற
பக்குவ மான திட்டம்
கசிந்திரும் தாய்க்குலக் கஷ்டம்-கண்டு
கருத்துடன் தோன்றிய திட்டம்

அலைகடல் கடந்த திட்டம்-உலக
அறிஞர்கள் போற்றும் திட்டம்
தலைமகன் வகுத்த திட்டம்-வரும்
தலைமுறை தலைமுறை திட்டம்

என்னும் வரிகள் 'சத்துணவுத் திட்டத்'தின் பெருமையை எடுத்துரைக்கின்றன.

சிறுவர்களுக்கு நீதி சொல்லும் வகையில் இத்தொகுப்பில் அமைந்துள்ள பல கவிதைகள் இனிமையை நல்குகின்றன. கவிதை நடையில் மிகச் சுவையாகக் கவிதையை வடித்திருக்கும் நூலாசிரியர் பாராட்டுக்குரியவர்.

## நவமணிக் கதைகள்

ஆசிரியர் : புலவர் தமிழ்முடி

வெளியீடு : தமிழ்முடி நிலையம் ஏ. பி. 1332, 7 வது செக்டர், 33 வது தெரு, கே.கே. நகர் சென்னை-600 078.

விலை : ரூ. 4-25 பக்கம் : 64

நாளைய தலைமுறைகளான இன்றைய குழந்தைகள் நல்லவர்களாகவும் வல்லவர்களாகவும் விளங்க நல்ல நல்ல கதைப்புத்தகங்களும் தேவை. அந்த வகையில் அவர்களின் அறிவு வளர்வும், ஒழுக்கம் பேணவும் உதவுகின்றன இதிலுள்ள நீதிக் கதைகள். மொத்தம் 12 சிறு கதைகள் உள்ளன. எல்லாம் மணியானவை; குழந்தைகளின் மனத்தைத் தொடுபவை

—பி.வி.கிரி.

## பாட்டுலகில் கண்ணதாசன்

ஆசிரியர் : தமிழ்ப்பித்தன்

வெளியீடு: பூங்கொடி பதிப்பகம், 14, சித்திரைக்குளம் மேற்கு வீதி, மயிலாப்பூர், சென்னை-600 004.

விலை: ரூ. 15.00 பக்கம்: 192

கண்ணதாசன் திரையுலகப் பாடலாசிரியர்களிடையே 'ஒரு கம்பராகத் திகழ்ந்த பீடுகெழுமிய கவிஞர்' என்ற புகழுக்குரியவர். பல்லாயிரம் பாடல்களைப் பாடிய பல்துறைச் செல்வர்.

'கறுப்புப் பணம்' என்ற படத்திற்கான ஒரு பாடலைத் தொலைபேசியிலேயே சொல்லி முடித்த பெருங்கவிஞர் கண்ணதாசன். இந்த மகத்தான சாதனை இந்தியத் திரைப்பட வரலாற்றிலேயே இவர் ஒருவருக்குத்தான் உண்டு என்கிறார் நூலாசிரியர். கவிஞரின் இதுபோன்ற அரும் பெரும் சாதனைகள் பல, நூலாசிரியரால் பல்வேறு இடங்களில் பரவலாகச் சொல்லப்பட்டுள்ளன.

'தங்கத்திலே ஒரு குறை இருந்தாலும் தரத்தினில் குறைவதில்லை' என்ற பாடல், எல்லாத் தரப்பு ரசிகர்களையும் வெகுவாகக் கவர்ந்த பாடலாகும்.

'கன்னங் கருத்த கிளி கட்டழகன் தொட்ட கிளி'-நாட்டுப்புறப் பாடலும் திரையுலகில் இடம் பெற்றதை விளக்குகிறது. கவிஞரின் கடைசிப் பாடல் 1981ல் அமெரிக்க மண்ணில் உதித்த அற்புதமான பாடலாகும்.

கவியரசின் ஆற்றல் வாய்ந்த தனித்திறமை நூலெங்கணும் தெளிவாக அருமையாக மிக அழகாகச் சான்றுகளோடு பொருத்தமான தலைப்புகளில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

பாட்டுலகில் அவருக்குள்ள இடத்தை நிரப்புவதற்குரிய கவிஞர் இன்றுவரை எவரும் இல்லை என்று கூறும் ஆசிரியரின் கருத்து மிகையன்று. வானொலி மூலம் என்றென்றும் வாழுகின்றார் கவிஞர்.

மரணத்தை வென்ற மாக் கவிஞரின் புகழ், நூலெங்கும் மணக்கின்ற வகையில் கருத்து மலர்களை அழகுறத் தூவிச் சென்றுள்ள ஆசிரியர், திரையுலகச் செய்தி[illegible] பலவற்றைச் சுவை ததும்ப[illegible]யில் தெரிவித்திருக்கிறார். [illegible] பிரியர்களுக்கு இந்நூல [illegible]ரியதொரு விருந்தாகும்.

- மு.முத்துக்காளத்தி

> மனிதப் பிறவிக்கு அடுத்தாற் போல் இவ்வுலகில் விந்தையான பொருள் புத்தகம்தான். ஏனென்றால் ஆயிரக்கணக்கான மைல்களுக்கு அப்பால் உள்ளவர்களுடனும், நூற்றுக்கணக்கான ஆண்டுகளுக்குமுன் வாழ்ந்தவர்களுடனும் நகம் இன்னும் உரையாடி இன்புற உதவும் அரிய சாதனம் புத்தகம்.
>
> —கிங்ஸ்லி

> புத்தகங்களும் மனிதரைப் போலவே சாதனை புரிகின்றன. மிகப் பெரும் காரியங்களை மிகச் சில புத்தகங்கள் சாதித்து விடுகின்றன. மிகப் பல புத்தகங்கள் போன இடம் தெரியாமல் போய்விடுகிறன.
>
> படிக்கும்போது சோர்வை உண்டாக்காத நூல்கள் அனைத்தும் நல்ல நூல்களே!
>
> - வால்டேர்





# கலைஞர்களுக்கு சங்கீத நாடக அகாடமி விருது

சிறந்த அனைத்திந்தியக் கலைஞர்களுக்குச் சங்கீத நாடக அகாடமி மூலம் விருது வழங்கும் விழா எந்த ஆண்டும் போலு டில்லியில் நடைபெறாமல், இந்த முறை (23-2-'85) சென்னையில் நடைபெற்றது.

மியூசிக் அகாடமி, டி.டி.கே. அரங்கில் நடைபெற்ற இவ்விழாவில் பங்கேற்றுச் சிறப்பித்த மேதகு இந்தியக் குடியரசுத் துணைத் தலைவர் திரு ஆர். வெங்கட்ராமன் அவர்கள், இந்தியாவின் தலைசிறந்த கலைஞர்கள் 15 பேருக்கு விருதுகள் அளித்துப் பாராட்டினார். அவர் தமது உரையின்போது—''தேசியக் கலைஞர்களாகத் தகுதி பெற்றோர், தங்கள் பெயரும் புகழும் நிலைக்க நல்ல பல வாரிசுகளை உருவாக்க முயலவேண்டும்'' என்று கேட்டுக்கொண்டார்.

சங்கீத நாடக அகாடமியின் தலைவர் டாக்டர் நாராயண மேனன் வரவேற்புரையாற்றினார். விழா முடிவில், சங்கீத நாடக அகாடமியின் தலைவர் திரு. பி.வி. கிருஷ்ணமூர்த்தி நன்றி கூறினார்.

விருது பெற்றோர் விவரம் வருமாறு:

மகாராஜபுரம் வி. சந்தானம் (கர்நாடக வாய்ப்பாட்டு), என். ரமணி (புல்லாங்குழல்), சராபாத் உசேன்கான் (இந்துஸ்தானி வாய்ப்பாட்டு), கிருஷ்ண மகராஜ் (தபேலா), பாலகிருஷ்ணதாஸ் (ஒடிசி இசை), ஷிர்சப்லே (மராட்டிய கிராமீய இசை), திருமதி கரீந்தர் கவுர் (பஞ்சாப் கிராமிய இசை), சுப்பிரமணியம் சாரதா (பரதம்-குரு), சுதாராணி ரகுபதி (பரதம்), துர்காலால் (கதக்), ஆர்.கே. சிங்கஜித் சிங் (கற்பனைத் திறன்) வசந்த் எஸ். கனேட்கர் (நாடகம்), குமாரி உத்தரா போக்கர் (நடிப்பு), ராஜாரம்பான் கடம் (கோத்தல்), குலாப் பாய் (நாதங்கி).

இவர்கள் தவிர, ஃபெலோஷிப் பட்டம் பெற்றவர்களுக்குக் கேடயமும் பாராட்டுப் பத்திரமும் வழங்கப்பட்டன.

இவ்விழாவில் திருமுருக கிருபானந்த வாரியார், சியாராம் திவாரி, குஜராத் நாடகாசிரியர் பேராசிரியர் சந்திரவதன். சி. மேத்தா ஆகியோருக்கு ஃபெலோஷிப் விருதுகள் அளிக்கப்பட்டன.

தமிழ் நாடக உலகில் சரித்திரம் படைத்த ஆர். எஸ். மனோகர், புல்லாங்குழல் இசைக் கலைஞர் ஹரிபிரசாத் சௌராசியா ஆகியோருக்கும் தாமிரப் பத்திரங்கள் குடியரசுத் துணைத் தலைவரால் அளிக்கப்பட்டன, இவர்களிருவரும் முன்பே சங்கீத நாடக அகாடமி விருது பெற்றோராவர்.

- பி.எஸ்.ஆர்

> **ஆலயங்களின் பெருமை கூற ஒரு கலைக் களஞ்சியம்**
>
> தமிழ்நாட்டின் பழம்பெரும் ஆலயங்கள் குறித்த செய்திகளைக் கொண்ட கலைக் களஞ்சியம் ஒன்றினை, தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் தத்துவப் பிரிவு உருவாக்கி வருகிறது. தொடக்கத்தில் ரூ 2 இலட்சம் இதற்காகச் செலவிடப்படுகிறது. இக்கலைக் களஞ்சியம் இரண்டு ஆண்டுகளுக்குள் உருவாக்கப்பட்டுவிடும். தமிழ் நாட்டுக் கிராம தேவதைகளின் ஆலயங்கள் குறித்தும் இந்தக் கலைக் களஞ்சியத்தில் செய்திகள் இடம் பெறுகின்றன.







# வேலூரில் மூன்றாவது பொருட்காட்சி

வேலூர் கோட்டை மைதானத்தில் அரசு சார்பில் வட ஆர்க்காடு மாவட்டத்தின் 3-வது பொருட்காட்சி 20.2.1985 அன்று தொடங்கியது.

விழா ஆரம்பத்தில் திரு கே.வி. பழனிவேல், திரு முருகதாஸ் குழுவினரின் கிளாரினெட் இன்னிசை நடைபெற்றது.

செய்தி-மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் திரு நா. கிருஷ்ணபாரதி, இ.ஆ.ப. வரவேற்புப் பேசுகையில், ''சென்ற இரண்டு பொருட்காட்சியைக் காட்டிலும் இந்த ஆண்டுப் பொருட்காட்சி சிறப்புடன் அமைந்துள்ளது. பொருட்காட்சிகளின் மூலம் மக்களுக்குப் புதிய உணர்வுகளைக் கடந்த எட்டு ஆண்டுகளாகக் கொடுத்து வருகிறோம்'' என்றார்.

மாவட்ட ஆட்சித் தலைவர் திரு இ.எஸ்.தானியேல் குணாநிதி இ.ஆ.ப. தலைமை உரையாற்றுகையில் குறிப்பிட்டதாவது:

''பொருட்காட்சிகளில் அமைக்கப்பட்டுள்ள காட்சிக் கூடங்கள் மூலம் அறிவை வளர்த்துக்கொள்வதோடு மட்டுமல்லாமல், பொழுதுபோக்கவும் இப்பொருட்காட்சி அமைக்கப்பட்டுள்ளது. வேலூர் நகர மக்கள் இப்பொருட்காட்சியைக் கண்டு களிப்பதன் மூலம் நமது மாவட்ட வளர்ச்சிக்கு உதவி புரிகின்றனர் என்று பொருளாகும். வேலூரில் கலைக் கூடம் அமைக்க அரசு முன் வரவேண்டும்.''

அரக்கோணம் நாடாளுமன்ற உறுப்பினர் திரு ஆர். ஜீவரெத்தினம் பேசுகையில், ''இந்த மாவட்டத்தில் உள்ள நான்கு நாடாளுமன்ற உறுப்பினர்களும் ஒன்று சேர்ந்து தொழில்மயமாக்கப் பாடுபடுவோம்'' என்றார்.

தண்டராம்பட்டுச் சட்டமன்ற உறுப்பினர் திரு இ.வச்சிரவேலு சட்டமன்ற உறுப்பினர்கள் சார்பில் பேசுகையில், ''திருவண்ணாமலையில் வேலூரில் உள்ளது போன்று கலையரங்கம் கட்ட வேண்டும்'' என்றார்.


வேலூர் நாடாளுமன்ற உறுப்பினர் திரு ஏ.சி.சண்முகம் பேசுகையில், ''அரசு பொழுதுபோக்கிற்காகவும், அரசின் திட்டங்களை மக்கள் அறிவதற்காகவும் நட்டம் வராமல் பொருட்காட்சி நடத்தி வருவது பாராட்டத்தக்க செயல் ஆகும். வேலூரில் உள்ள கலையரங்கைப் புதிய பொலிவுடன் அமைக்க வேண்டும். வேலூரில் ரூபாய் இரண்டு கோடி ஒதுக்கீட்டில் வீட்டு வசதி செய்யப்பட்டு வருகிறது. ரூ. 3 கோடி செலவில் புதிய ஆட்சித் தலைவர் அலுவலகம் அமைய உள்ளது. வறட்சியைப் போக்க இந்த மாவட்டத்தில் இரண்டு அல்லது மூன்று அணைகளைக் கட்ட வேண்டும்'' என்று கேட்டுக் கொண்டார்.

தமிழகம் வந்துள்ள உத்தரப் பிரதேசக் கலைக் குழுவினரை வரவேற்று, அண்ணா கலையரங்கில் நடைபெற்ற கலைநிகழ்ச்சியினைத் தொடங்கி வைத்து மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு ஆர்.சவுந்தரராசன் அவர்கள் பேசுகையில், ''ஏழை எளிய மக்கள் பொருட்காட்சியின் அரும் பெரும் பொருள்களைப் பார்க்க வேண்டும். அதுதான் பொருட்காட்சியாகும் என்றார் அண்ணா. பொருட்காட்சி நிதி, அந்தந்த மாவட்ட வளர்ச்சிக்குப் பயன் படுகின்றது.

# பொருட்காட்சியில் நிலநீர்ப் பிரிவு









அரசுப் பொருட்காட்சி என்றால் நட்டம் வரும் என்பார்கள். ஆனால் 23 பொருட்காட்சிகளிலும் நட்டம் இல்லை. இங்குள்ள கோட்டையைச் சுற்றி உள்ள அகழியை நவீனப்படுத்த வேண்டும். பொருட்காட்சியைக் காண வருபவர்கள் இங்குள்ள அரங்குகளைக் கண்ணால் கண்டு களித்தால் மட்டும் போதாது. கலைநிகழ்ச்சிகளையும், நாடகங்களையும் காண வேண்டும். ஒருமைப்பாட்டை எடுத்துக்காட்டும் வகையில் உத்தரப்பிரதேச கலைநிகழ்ச்சி இன்று இங்கு நடைபெறுகிறது. ஒட்டகச்சிவிங்கி போன்று கொக்கேலிக்கட்டை நடனம் இங்கு நடந்தது பாராட்டத் தக்க வகையில் இருந்தது. மக்கள் இந்தப் பொருட்காட்சியை நல்ல முறையில் பார்த்துப் பேராதரவு தரவேண்டும்'' என்றார்.

மாண்புமிகு செய்தி-அறநிலையத்துறை அமைச்சர் திரு இராம. வீரப்பன் அவர்கள் விழாவைத் தொடங்கி வைத்துப் பேசினார். அப்போது அவர் பேசுகையில்—

''1977 ஆம் ஆண்டு இந்த அரசு பொறுப்பேற்றதற்குப் பிறகு 78ல் சேலத்தில் தொடங்கி இன்று 24வது பொருட்காட்சி இங்கு நடைபெறுகிறது. உலகத்தமிழ் மாநாடு மதுரையில் நடைபெற்ற பொழுது நான்கு மாதங்கள் அங்கு பொருட்காட்சி நடைபெற்றது. வறட்சியின்போது பொருட்காட்சி நடத்தப்படவில்லை.

**பு**துடெல்லியில் 26.1.85 அன்று நடைபெற்ற குடியரசுதின விழா அணிவகுப்பில் தமிழ்நாடு அரசின் சார்பில் பங்கேற்ற கொக்கேலிக் கட்டை கிராமிய நடனக் கலைக் குழுவினை வெளிநாட்டினர் புகழ்ந்து பாராட்டினார்கள் என்று மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு ராஜீவ்காந்தி அவர்கள் கலைக் குழுவினரிடம் தெரிவித்தார்கள்.





# தொழ நாட்டிய கொக்கேலிக் கட்டை!

**கு**டியரசு தின விழா அனைத்துலக மக்கள் பாராட்டு கின்ற வகையில் எழுச்சியோடு கொண்டாடப்பட்டது. 26.1.85 அன்று காலை 6 மணியிலிருந்து குடியரசுத் தலைவர் மாளிகையி லிருந்து நேஷனல் ஸ்டேடியம் வரை லட்சோப லட்ச மக்கள் விழாவினைக் கண்டுகளிக்க, சாலையின் இருபக்கத்திலும் கூடி யிருந்தனர்.

காலை 9.20 மணிக்கு யானை போன்று அலங் கரிக்கப்பட்ட எலிகாப்டர் முத லாவதாக 100 அடி உயரத்தில் மெதுவாக அசைந்து அசைந்து பறந்து, பொது மக்களை மகிழ்ச் சிக் கடலில் ஆழ்த்தியது.

மேதகு இந்தியக் குடியரசுத் தலைவர் அவர்களை வரவேற்க விழாவிற்காக சிறப்பாக அமைக் கப்பட்டிருந்த சிறப்பு மேடையின் அருகே மாண்புமிகு இந்தியப் பிர தமர் அவர்களும் அவரது துணை வியார் அவர்களும் வருகை தந் தார்கள். மேதகு இந்தியக் குடி யரசுத் தலைவர் அவர்களும், குடியரசு விழாவினைப் பார்க்க சிறப்பு விருந்தினராக இந்தியா விற்கு வருகைதந்த அர்ஜெண் டைனா அதிபர் டாக்டர் ராவுல் அல்போன்சின் அவர்களும் காரில் குதிரைப்படை முன்செல்ல ஊர்வலமாக வருகை தந்து 9.45 மணிக்கு தேசியக்கொடி யினை ஏற்றி வைத்தார்கள். தொடர்ந்து முப்படைகளின் ஊர்வலம் ,முப்படை வீரர்களின் அணி வகுப்பு, தேசிய மாணவ, மாணவியரின் அணிவகுப்பு,பள்ளி மாணவ மாணவியரின் கலை நிகழ்ச்சிகள் ஊர்வல அணி வகுப்பில் பங்கேற்றன. மேலும் இதனைத் தொடர்ந்து குடியரசுத் தலைவர் அவர்களின் விருதினைப் பெற்றவர்கள் யானை மீது ஊர் வலமாக அழைத்து வரப்பட்டார் கள்.

மக்களுடைய எண்ணத்தை விளக்கும் வகையில் 14 மாநிலங் களின் அலங்கார ஊர்திகள் அந் தந்த மாநிலங்களின் கலாச் சாரத்தைப் பிரதிபலிக்கும் வகையில் வெள்ளோட்டம் விடப் பட்டன. அலங்கார ஊர்திக்குப் பின் 11.20 மணிக்கு தமிழ்நாடு உட்பட 14 மாநிலங்களின் கிரா மியக் கலை நிகழ்ச்சிகள் ஊர்வல



''தமிழக முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் மூன்றாவது முறையாகப் பொறுப்பேற்றதற்குப் பிறகு அரசு சார்பில் நடைபெறும் முதல் நிகழ்ச்சியாகும் இது. குடும்பத்தோடு சென்று பொழுது போக்குவதற்காக மட்டு மல்லாமல், மைய, மாநில அரசு கள் திட்டங்களைத் தீட்டி எவ் வாறு செயல்படுகின்றன என் பதை அறிந்துகொள்ளப் பயன் படும் வகையிலும் இதுபோன்ற பொருட்காட்சிகளை அமைத்துள் ளார்கள்.

"செய்தித்துறை என்றால் செலவு செய்யும் துறை என்பார்கள். தமிழ கத்தில்தான் பொருட்காட்சி மூலம் வருமானம் வருகிறது. இந்தியா வில் உள்ள மற்ற மாநிலத்தைச் சார்ந்தவர்கள் பாராட்டுகிறார்கள்.

''1982இல் வேலூரில் நடை பெற்ற பொருட்காட்சி மூலம் ரூ. 4 இலட்சத்து 50 ஆயிரமும், 1984இல் நடைபெற்ற பொருட் காட்சி மூலம் ரூ. 5 இலட்சத்து 32 ஆயிரமும் வருமானம் கிடைத் தது. இந்த ஆண்டு ரூ. 10 இலட் சம் வருமானம் வரும் என்று எதிர்பார்க்கிறேன்.

''மாண்புமிகு முதல்வர் அவர் கள் கோவையில் கலையரங்கம் கட்ட ரூ. 25 இலட்சம் அனுமதித் துள்ளார்கள். மைய அரசு ஏழு ஆண்டுத் திட்டத்தில் மாவட்டத் தலைநகரங்களில் கலைஅரங்கம் கட்ட ஒத்துக்கொண்டுள்ளது. வேலூரில் எல்லோருக்கும் பயன் படும் வகையில் அரங்கம் கட்ட மாவட்ட ஆட்சித் தலைவர் ஒரு திட்டத்தை அரசுக்கு அனுப்பி வைக்கக் கேட்டுக்கொள்கிறேன்.


''இதுவரையில் மாவட்டத் தலைநகரங்களில் ஆறு இடங் களில்தான் பொருட்காட்சியை நடத்தி வந்தோம். இனிமேல் பெரியார், தென்ஆர்க்காடு, கன்னியாகுமரி மாவட்டங்களி லும் நடைபெறும்.

''இப்பொருட்காட்சியில் உத் தரப்பிரதேசக் கலைஞர்கள் கலை நிகழ்ச்சி நடத்த உள்ளனர். இதே நேரத்தில் நம்முடைய நாட்டியக் குழுவினர் ராஜஸ்தான் மாநிலம் ஜெய்ப்பூரில் நிகழ்ச்சி நடத்திக் கொண்டிருக்கின்றனர். கலைஞர் கள் இந்திய ஒற்றுமையைக் கலை நிகழ்ச்சிகள் மூலம் ஏற்படுத்தி வருகின்றனர்.

''ஜனவரியில் நடைபெற்ற குடி யரசு தினத்தில் எல்லோராலும் பாராட்டப்பட்ட கொக்கேலிக் கட்டை நடனப்பரம்பரையினரை அரசு சார்பில் பாராட்டுகிறேன். இக்கலையை நாம் பாதுகாக்க வேண்டும். நாட்டு மக்கள் நல னுக்காக ஒன்றுபட்டு உழைப் போம். சேலத்தில் ஏறத்தாழ 39 ஆண்டுகளாகப் பொருட்காட்சி நடைபெற்று வருகிறது. அதே போல் இங்கும் தொடர்ந்து பொருட்காட்சி நடைபெற வேண் டும் என்று விரும்புகிறேன்'' என்றார்.

விழா இறுதியில் உத்தரப்பிர தேசக் கலைக் குழுவினரின் கலை நிகழ்ச்சி நடைபெற்றது. எந்த ஆண்டும் இல்லாத அளவிற்கு இந்த ஆண்டு மக்கள் கூட்டம் அதிகமாக இருந்தது என்பதற்குச் சான்றாக முதல் நாள் மட்டும் ஏறத்தாழ ரூ. 5,000 வசூலா கியது.

—அ. மருது

அணிவகுப்பில் பங்கேற்றன. 11.35 மணிக்கு தமிழ்நாடு அரசின் சார்பில் ஊர்வல அணிவகுப்பில் பொது மக்களின் ஆரவாரத்திற்கிடையே குழந்தைகள் முதல் பெரியோர் வரை ஆச்சரியப்படுகின்ற வகையில் கொக்கேலிக்கட்டை நடன நிகழ்ச்சி குடியரசுத் தலைவர் முன் நடத்திக் காட்டப்பட்டது. தொடர்ந்து நேஷனல் ஸ்டேடியம் வரை கலைக் குழுவினர் நடன நிகழ்ச்சியினை நடத்திச் சென்றனர்.


17.1.85 அன்று பத்திரிகையாளர்களுக்கு அனைத்து மாநிலக் கலை நிகழ்ச்சிகள் நடத்திக்காட்டப்பட்டன. மத்திய அரசு கிராமிய கலைக்குழு தேர்வுக்குழு தலைவர் திருமதி உஷா பகத் அவர்கள் கலைக்குழுவினைப் பார்வையிட்டார்கள். தேர்வுக்குழு உறுப்பினர் திரு அப்புள்ளி கர்த்தா மேற்பார்வையில் ஒத்திகை நிகழ்ச்சி நடத்தப்பட்டது.

19, 20, 21, 23.1.85 ஆகிய நாட்கள் குடியரசுத் தலைவர் மாளிகையிலிருந்து நேஷனல் ஸ்டேடியம் வரை ஒத்திகை நிகழ்ச்சி நடத்தப்பட்டது. 26.1.85 அன்று கொக்கேலிக்கட்டை கிராமிய கலைநிகழ்ச்சி ஊர்வல அணி வகுப்பில் சிறப்புடன் பங்கேற்று தமிழகத்திற்குப் பெருமை தேடிக் கொடுத்தது.

இதன் பின்னர் 24, 26, 27, 28.1.85 ஆகிய நாட்களில் புது டெல்லி தால்கோத்ராவில் உள்ள பாதுகாக்கப்பட்ட கலையரங்கில் ஏற்பாடு செய்யப்பட்ட கிராமிய கலை நிகழ்ச்சிக்கான விழாவில் அனைத்து மாநில கிராமியக்கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன. வெளிநாட்டினருக்கும், பத்திரிகையாளர்களுக்கும், குழந்தைகளுக்கும், பொது மக்களுக்கும் முக்கியப் பிரமுகர்களுக்கும், "கிராமிய நடன சிறப்பு விழாவாக" கொண்டாடப்பட்டபோது தமிழ்நாடு கலைக் குழுவினருக்கு அனைத்துத் தரப்பிலும் பெரும் பாராட்டு கிடைத்தது.

27.1.85 அன்று மேதகு குடியரசுத் துணைத் தலைவர் திரு ஆர். வெங்கட்ராமன் அவர்கள் தமது இல்லத்தில் அனைத்து மாநிலக் கலைக் குழுவினருக்கு விருந்தளித்துப் பாராட்டினார். "நான் இதுவரை தமிழ்நாட்டில் இந்நடனத்தைப் பார்க்கவில்லையே" என்று கலைக் குழுவினரிடத்தில் தெரிவித்துப் பாராட்டினார். வியப்புற்றார்.

28.1.85 அன்று மேதகு இந்தியக் குடியரசுத்தலைவர் திரு ஜெயில்சிங் அவர்கள் அனைத்து மாநிலக் குழுவினருக்கும் தனது இல்லத்தில் விருந்தளித்து, பாராட்டினார். தமிழ்நாட்டின் நடனத்தைப் பார்த்து, "எவ்வளவு நேரம் இவர்களால் ஆடமுடியும்?" என்று வியப்புடன் கேட்டு, "இவர்கள் தொடர்ந்து 3 மணி முதல் 6 மணி நேரத்திற்கு மேல் ஆடுவார்கள்" என்று அறிந்தவுடன் பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொண்டார்.



29.1.85 அன்று மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு ராஜீவ் காந்தி அவர்கள் இல்லத்தில் நடைபெற்ற விருந்தில் தமிழ்நாடு கலைக் குழுவினருக்குப் பாராட்டுத் தெரிவித்ததோடு, "தமிழ்நாடு கிராமிய நடனத்தை அனைவரும் விரும்பிப் பார்த்தனர். குறிப்பாக வெளிநாட்டைச் சார்ந்த பிரதிநிதிகள் என்னிடம் மிகவும் பாராட்டுத் தெரிவித்தார்கள்" என்று கலைக்குழுவிற்குத் தலைமையேற்றுச் சென்ற அலுவலர்களிடமும் கலைக் குழுவினரிடத்திலும் தெரிவித்தார்.

மேலும் தொடர்ந்து எந்தப் பகுதியிலிருந்து கலைக்குழுவினர் அழைக்கப்பட்டார்கள் என்று மாண்புமிகு இந்தியப் பிரதமர் அவர்கள் கேட்டபோது வடார்க்காடு மாவட்டம் வாலாஜாவிலிருந்து அழைத்து வரப்பட்டார்கள் என்று தெரிவிக்கப்பட்டது.

29.1.85 மாலை மாண்புமிகு உள்துறை அமைச்சர் திரு. எஸ். பி. சவான் அவர்கள் இல்லத்தில் கலைக் குழுவினருக்குக் கொடுக்கப்பட்ட விருந்தில் தமிழ்நாடு கலைக் குழுவினரை மிகவும் பாராட்டினார்.

31.1.85 அன்று மாண்புமிகு பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. பி. வி. நரசிம்மராவ் அவர்கள் அனைத்துக் கலைக் குழுவினருக்கும் பாராட்டுகள் தெரிவித்துப் பரிசுகள் வழங்கினார்.

அனைத்து மாநிலக் கிராமியக் கலைஞர்கள் 29.1.85 அன்று மாலை குடியரசுத் தலைவர் மாளிகையின் அருகே நடைபெற்ற Beating Retreat நிகழ்ச்சிக்கு அழைத்துச் செல்லப்பட்டார்கள்.


இந்த ஆண்டு 23.1.85 அன்று புதுடெல்லி மத்திய அரசின் நாடகத் (Song & Drama) துறையின் மூலம் கூட்டப்பட்ட கூட்டத்தில் தமிழ்நாட்டின் சார்பில் எடுத்துரைத்த கோரிக்கையினை ஏற்றுக் கொண்டு அனைத்துக் கலைக் குழுவினருக்கும் இந்தியா குடியரசு அடைந்த பின் முதன்முறையாக 29.1.85 அன்று தேநீர் விருந்து கொடுத்தார்கள். பின்னர் 14 மாநிலத்திற்கும் ஒரு சிறிய மயில் முதன்முறையாக நினைவுப் பொருளாக கொடுத்தார்கள். மத்திய பாதுகாப்பு அமைச்சகம் 29.1.85 அன்று கூட்டிய கூட்டத்தில் தமிழ்நாட்டின் சார்பில் எடுத்துரைக்கப்பட்ட கோரிக்கைகளை அடுத்த ஆண்டிலாவது நடைமுறைப் படுத்துவதற்கான ஏற்பாட்டினைச்செய்யுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டது.

குடியரசு விழாவின் போது கலைக்குழுவினர் நிகழ்ச்சியினை குடியரசுத் தலைவர் முன்பு ஒரு நிமிடம் விளையாடுகின்ற முறையினை மாற்றி, குறைந்தது 2 நிமிடமாவது நடன நிகழ்ச்சியினை நடத்துவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். மேலும் பாதுகாப்பு அமைச்சகத்தின் மூலம் குடியரசுதின விழா அணிவகுப்பில் பங்கேற்கும் மாநிலங்கள் அனைத்திற்கும் ஒரு நினைவுப் பொருள் வழங்கப்பட வேண்டும் என்று எடுத்துரைக்கப்பட்டது. இந்த இரண்டு கோரிக்கைகளையும் அடுத்த ஆண்டில் நடைமுறைப்படுத்துவதற்கான பணிகள் மேற்கொள்ளப்படும் என்று மத்திய அரசு அலுவலர்கள் தெரிவித்தார்கள்.

புதுடெல்லி ரபிந்தரா ரங்ஸாலாவில் கலைக்குழுவின் நிகழ்ச்சிகளை மாண்புமிகு இந்திய அரசு Personnel Administration and Cultural Affairs இணை அமைச்சர் திரு. கே. பி. சிங் தேவ் அவர்கள், மாண்புமிகு மிசோராம் மாநிலச் சட்டமன்றப் பேரவைத் தலைவர், மாண்புமிகு மேற்கு வங்காள செய்தி மற்றும் கலாச்சாரத்துறை அமைச்சர் அவர்கள் மற்றும் தமிழ்நாட்டினைச்சார்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் திரு. பி. குழந்தைவேலு, திரு. ஏ. சி. சண்முகம், திரு. மகாலிங்கம் ஆகியோர் பார்த்து கொக்கேலிக்கட்டை கிராமியக்கலை நிகழ்ச்சியினைப் பாராட்டினார்கள்.

**– வி. சச்சிதானந்தம்**





# ஹெலிகாப்டரில் குடும்பநலப் பிரசாரம்

**சென்னையில் 3.3.85 அன்று ஹெலிகாப்டர் மூலம் துண்டுப் பிரசுரம் வீசி புதுமையான முறையில் குடும்பக் கட்டுப்பாட்டுப் பிரசாரம் செய்யப்பட்டது.**

**தமிழக அரசு மற்றும் சென்னை மாநகராட்சியின் சார்பில் சென்னையில் குடும்பநலத் திட்ட தீவிர முகாம் கடந்த பிப்ரவரி மாதம் தொடங்கி மார்ச் மாதம் 31ஆம் தேதி வரை நடத்தப்படுகிறது.**

**சைதாப்பேட்டை, வடபழனி, சஞ்சீவராயன் பேட்டை, புளியந்தோப்பு, மயிலாப்பூர் ஆகிய பகுதிகளில் உள்ள குடிசைப் பகுதிகளுக்கு மேல் 100 அடி முதல் 200 அடி உயரம் வரை தாழ்வாக ஹெலிகாப்டரில் பறந்து, சுமார் 9.30 மணி முதல் பகல் 11 மணி வரை காலை 50 ஆயிரம் துண்டுப் பிரசுரங்கள் வீசப்பட்டன.**

**மாவட்டக் குடும்பநல மருத்துவ டாக்டர் ஹேமா பாலச்சந்திரன், குடும்பக் கட்டுப்பாடு பற்றிய அந்தத் துண்டுப் பிரசுரத்தில் வேண்டுகோள் விடுத்திருந்தார்.**

**தமிழக அரசு 2-வது செயலாளர் திரு டி. வி. அந்தோணி, இ. ஆ. ப; குடும்பக் கட்டுப்பாட்டு விளக்குநர் திரு ஜெயபால், மாநகராட்சித் துணை ஆணையாளர் திரு குணசேகரன் ஆகியோர் ஹெலிகாப்டரிலிருந்து இந்தத் துண்டுப் பிரசுரங்களை வீசினார்கள்.**

**"இந்தப் புதுமையான பிரசாரம், குடும்பக் கட்டுப்பாட்டு அறுவைச்சிகிச்சை செய்துகொள்ள வேண்டுகோள் விடுப்பதற்காக மட்டும் அல்ல. குடும்பம் எப்படி இருந்தால் நலமாக வாழ முடியும் என்பதை விளக்குவதற்காகவும்தான். கடவுள் கொடுக்கிறார் என்று அதிகம் பெற்றால் நாட்டுக்கும் சுமை, வீட்டுக்கும் சுமை. 1984ஆம் ஆண்டு 5 லட்சம் பேருக்குக் குடும்பக் கட்டுப்பாட்டு அறுவைச் சிகிச்சை செய்து தமிழகம் இந்தியாவிலேயே முதலிடத்தைப் பெறுகிறது" என்று திரு டி. வி. அந்தோணி, இ. ஆ. ப. நிருபர்களிடம் தெரிவித்தார்.**

**குடும்பக் கட்டுப்பாட்டுப் பிரச்சார ஹெலிகாப்டரில் சிவப்பு முக்கோணச் சின்னமும், 'அதிகம் பெறாதே அவதிப்படாதே' என்ற வாசகமும் பொறிக்கப்பட்டிருந்தன.**

# இல்லறம் நல்லறமாக இரண்டே போதும்!

—புலவர் தமிழ்ப்பித்தன்

மனையாட்சி செய்துவரும் மனையாட்டி—வள்ளுவரின்
மனைமாட்சி கற்றிருத்தல் போதாது இந்நாளில்!

அச்சடிக்கும் இயந்திரம்போல் அநேக குழந்தைகளை
அச்சடித்து அனுப்பிவைத்தால் அகிலம் தாங்கிடுமோ?

தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற
சொற்காத்துச் சோர்விலாள் பெண்என்றார் குறள்வேந்தர்!

தற்காத்து என்றால் மாற்றான்பால் வீழாது
கற்புநெறி காத்திடுதல் எனமொழிவார் உரைகாரர்!

கட்டிய கணவனெனும் கண்ணாள னிடத்திருந்தும்
எட்டிநின்று சிலநேரம் தமைக்காத்தல் வேண்டும்எனும்

தத்துவத்தை உட்பொருளாய் ஆக்கியுள்ளார் வள்ளுவனார்
கொத்துமலர்க் குழலார்கள் இதையுணர வேண்டும்


மனைமாட்சி பெறுவதற்கே மகவுபல பெறவேண்டும்
துணையாவோம் கணவனுக்கு! பிள்ளைபெறும் திருப்பணிக்கு


என்றிருக்கும் இல்லாள்தான் அறிவில்லாள்; அன்பில்லாள்;
பண்பில்லாள்; பாசமில்லாள்; பக்குவ மில்லாள்!

கண்ணான தாய்நாட்டின் புண்ணான நிலையுணர்ந்தே
அன்பாகச் சிறுகுடும்பம் அமைப்பவளே அன்புஇல்லாள்

பண்புஇல்லாள்; அறிவு இல்லாள்; அவளுக்கே வாழ்த்துமடல்
என்றும் வழங்குதற்கு வரிந்தெழுவோம்! அட்டியில்லை!

அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அதுஎன்றே குறள்கூறும்





இல்வாழ்வில் பயனிருக்க இனிதான பண்பிருக்க
நல்வாழ்வாய் அஃதிருக்க வேண்டு மென்றால்

குன்றுபோல் நிதியம் குவிந்து கிடந்தாலும்
ஒன்றிரண்டின் மேலே உயிர்ச்சிலைகள் பெற்றெடுத்தால்

குன்றும் குன்றாதோ! குறைந்து மறையாதோ!
என்றும் ஏழ்மைக் கிணற்றினிலே தள்ளாதோ!

குழந்தைகளை, குட்டிகளை கணக்கின்றிப் பெறுவதனால்
குழந்தைபெறும் தாயென்பாள், குடும்ப விளக்கென்னும்

நிறைந்தபெயர் கொண்ட மனையரசி மனம்மாறி
விரைந்துவரும் தீயைப்போல் சினமூச்சு உதிர்த்திடுவாள்!

உற்றார்கள் உறவோர்கள் அனைவோர் இடத்தினிலும்
செற்றம் கொண்டே பேசிடுவாள்; பிள்ளையால்

அளவற்ற பணிச்சுமைகள் அண்டிவந்து சேர்வதனால்
குளம்விட்டு வெளிவந்த மீன்போலத் துடித்திடுவாள்


முப்பது வயதுக்குள் மூதாட்டி ஆகிடுவாள்
உப்பிருக்கும் பானையைப்போல் உள்ளம் கசிந்திடுவாள்!

இந்நிலை எதனாலே! குடும்பநலம் கருதாமல்
சிந்தனையைத் தவறவிட்ட தீச்செய லால்அன்றோ?

ஐந்தாறு, ஏழெட்டு கணிதத்தில் இருக்கட்டும்!
அந்த எண்களெல்லாம் இல்லத்துள் வரவேண்டாம்!

இரண்டுக்கு மேலே எண்ணிடா இனியநிலை
திரண்டு வருவதற்கே இல்லத்தில் வழிசெய்வோம்!

## இளைஞர் ஆண்டு நினைவு!



இது இளைஞர் ஆண்டு!
இன்பம் மலர்க யாண்டும்!
புது நெறிகள் வகுப்போம்!
புவி அதிர நடப்போம்!

நாம் இளைஞர் எனினும்
நமது காந்தி தாத்தா
தாம் நடந்த பாதை
சென்றால் இல்லை உபாதை!

சாலை நாடி உலகம்
சடுதியில் நடக்கும் போது
ஜீவ நாடி ஆகி
தேவ வார்த்தை தந்தார்!

வன்பு நெறி கண்டு
வாடி நின்ற போது
அன்பு நெறி சொன்னார்
அகிலத்தையே வென்றார்!

என்றும் அவரைப் பாடும்;
எங்கள் இதய நாதம்
குன்று போல் உயர்ந்தார்
குவலயத்தார் புகழ்ந்தார்!

அவரைப் போல நாமும்
அன்பு நெறி நடப்போம்
எவரும் போற்ற வாழ்வோம்;
இமயம் போல உயர்வோம்!



செல்வி.தி. கமலி, எம்.ஏ.,
எம்.ஃபில், ஆய்வு மாணவி
சென்னைப் பல்கலைக் கழகம்,
சென்னை-600 005.

## நாட்டு நலப் பணிகள்

செங்கற்பட்டு மாவட்டம் கன்னியம்மன் பேட்டை என்ற கிராமத்தில் பெரம்பூர், தருமமூர்த்தி இராவ்பகதூர் கலவல கண்ணன் செட்டி மேல்நிலைப் பள்ளி, பெரம்பூர் டோன் பாஸ்கோ மேல்நிலைப் பள்ளி, மூத்தியாலு பேட்டை மேல்நிலைப் பள்ளி ஆகிய மூன்று பள்ளிகளைச் சார்ந்த நாட்டு நலப்பணித் திட்ட மாணவர்கள் அண்மையில் கூட்டுச் சிறப்பு முகாம் ஒன்றை மிகச் சிறப்புடன் நடத்தி முடித்தனர்.

இம்மாணவர்கள், தியம்பாக்கம் காலனிக்குப் பாதை அமைத்தனர். மரம் நடுதலின் முக்கியத்துவம், வரதட்சணைக் கொடுமை போன்றவற்றைப் பொம்மலாட்டக் கலை நிகழ்ச்சி மூலம் மக்களுக்கு எடுத்துரைத்தனர். 600 மரக்கன்றுகளை நட்டனர். சூரிய அடுப்பின் முக்கியத்துவத்தையும் மக்களுக்கு எடுத்துக் கூறினர்.

நிறைவு விழாவில், புழல் ஊராட்சி ஒன்றிய ஆணையர் திரு சுப்பிரமணியம் கலந்து கொண்டு நாட்டு நலப்பணித் திட்ட மாணவர்களைப் பாராட்டினார்.



### இது உங்கள் பக்கம்!

மாணவ மணிகளே!
இது உங்கள் பக்கம்.
பள்ளி-கல்லூரி மாணவர்கள்
இப் பகுதிக்கு எழுதலாம்.

கதை, கவிதை உங்கள் சொந்தக் கற்பனையாக இருத்தல் வேண்டும். பொது அறிவுக் கட்டுரைகள், துணுக்குகளுக்கு ஆதாரம் குறிப்பிட வேண்டும். பள்ளிப் படிப்போடு பிற துறைகளில் சிறந்து விளங்கும் மாணவ, மாணவிகள் தங்களைப் பற்றிய சிறு குறிப்புடன் 'பாஸ்போர்ட்' அளவு புகைப்படத்தையும் இணைத்து, தலைமை ஆசிரியர் கையொப்பத்துடன் அனுப்பி வைக்கலாம்.

—ஆசிரியர்

மாணவர் பக்கம்

# ஓட்டப் பந்தயம்



— வி. பி. கே. மூர்த்தி

சீவல்புரி... அந்த ஊரில் பெரியவர்கள் ஓட்டப்பந்தயம் வைத்திருந்தார்கள். அந்தப் பந்தயத்தில் சிறுவர்கள்தான் கலந்து கொள்ள வேண்டுமென்பது நியதி. அந்தப் பந்தயம் கொஞ்சம் புதுமையானதும் கூட. பந்தயம் என்றால் இரவு பகலாக ஓடவேண்டும். அந்த ஊரில் ஒரு காடு இருக்கிறது. அந்தக் காட்டை இரவு நேரத்தில் ஓடுவதன் மூலமாகக் கடந்து வந்துவிட வேண்டும். அந்தக் காட்டில் பல கொடிய மிருகங்கள் இருப்பதாகப் பலரும் அறிவர். அந்தக் காட்டிற்குப் பகலிலேயே பெரியவர்கள் போகப் பயப்படுவார்கள். அப்படியிருக்க சிறுவர்கள் காட்டைக் கடக்க முன் வருவார்களா என்ன?

அந்த ஊரில் சிங்காரம் என்ற ஒருவன் இருந்தான். அவன் நல்ல துணிச்சல்காரன். எதையும் ஆலோசித்துப் புத்தி சாலித்தனமாகச் செய்யக் கூடியவன். அவன்தான் காட்டைக் கடக்கும் ஓட்டப்பந்தயத்தில் துணிந்து சேர்ந்து கொண்டான்.

சிங்காரம் சிறுவனாயிருந்தாலும் பல வீரக்கதைகளைக் கேட்டு வளர்ந்தவன். அதோடு அவன் காடுகளின் கதைகளையும், மிருகங்களின் வாழ்க்கையையும், பல புத்தகங்களையும் படித்திருக்கிறான். மேலும் அவனுக்குப் பல கதைகளையும் துணிச்சலான செயல்களையும் நிகழ்ச்சிகளையும் அவன் தாயாரும், அவன் குடும்பத்தாரும் அடிக்கடி சொல்லி வந்திருக்கிறார்கள். அவையெல்லாம் அவன் நெஞ்சில் நல்ல உரத்தை வளர்த்திருந்தன. அந்த தைரியத்தினால்தான் அந்த ஓட்டப் பந்தயத்திலே சேர்ந்து கொண்டான்.

ஓட்டப் பந்தய நாளும் வந்தது. வெற்றியாய் இருந்தாலும் தோல்வியாய் இருந்தாலும் மேற்கொண்ட கடமையில் பின்வாங்கக் கூடாது என்று நன்கு தெரிந்து வைத்துக் கொண்டிருந்த சிங்காரம், ஓட்டத்துக்கு முழு மூச்சாக வந்து நின்றான். அவன் ஒருவன் மட்டும் போட்டிக்கு வந்திருந்த புதுமையைக் காண ஊரே திரண்டு வந்தது. எல்லோரும் இதே பேச்சையே பேசிக் கொண்டிருந்தார்கள்.

பஞ்சாயத்தார்கள், சிங்காரம் மட்டும் பந்தயத்துக்கு வந்திருப்பதால் அவன் ஓடினாலும் ஓடாவிட்டாலும் இரவு நேரத்தில் அந்த ஊரிலுள்ள காட்டைத் தாண்டி வந்துவிட்டால் போதுமென்று சொல்லி விட்டார்கள்.

சிங்காரம் ஓடிக்கொண்டே, இரவு நேரத்தில் காட்டில் இருந்துவிட்டு வந்து விடுவதாக உறுதி கூறிவிட்டுப் பந்தயத்தில் கலந்து கொண்டான். அவன் எதையும் பொருட்படுத்தாமல் ஓடிக் கொண்டிருந்தான்.

மாலை நேரமும் நெருங்கிக் கொண்டிருந்தது. காடு வரவர மனத்தில் பயமும் இலேசாக எழுப்ப ஆரம்பித்தது. இரவு வரவும் அவன் காட்டுக்குப் போய்ச் சேரவும் சரியாக இருந்தது. இனிமேல் அவன் ஊருக்குத் திரும்பிச் செல்லவும் முடியாது.

சிங்காரம் துணிச்சலை வரவழைத்துக் கொண்டான். காட்டில், பேயே இருந்தால் மிருகங்களின் ஆபத்து வரும் என்று அஞ்சி அடர்ந்த மரமாகப் பார்த்து அதில் ஏறி ஒளிந்து கொண்டான். குளிர் வேறு அவன் உடலை உதறி எடுத்தது. அதனால் அவனுக்குத் தூக்கம் வரவில்லை. காட்டிலுள்ள பயங்கர மிருகங்களின் ஓசையும் ஆரவாரமும் அவன் காதுகளில் இடைவிடாமல் கேட்டுக் கொண்டிருந்தது. மிருகங்கள் அங்கும் இங்கும் ஓடியும் ஆடியும் திரிந்தன.

தொடர்ந்து கேட்டுக் கொண்டிருந்த மிருகங்களின் ஓசைகள் திடீரென்று குறைந்தன. கொஞ்சம் நேரங்கழித்து மையிருட்டாய் இருந்த காட்டில் பிரகாசமான வெளிச்சமும் தெரிந்தது. அதைத் தொடர்ந்து ஒரு பெரிய லாரியும் வந்தது. இந்த இரவு நேரத்தில் காட்டிற்கு லாரி ஏன் வர வேண்டும்?

சிங்காரத்தின் மூளை மிகச் சுறுசுறுப்பாக வேலை செய்தது. லாரிகள் வந்து போகும் காரணத்தை அவசியம் தெரிந்து கொண்டுதான் ஆக வேண்டும் என்று முடிவெடுத்துக் கொண்டான். தான் மரத்தில் இருப்பதை யாரும் அறியாத வண்ணமாக மரத்தில் நன்றாக ஒண்டிக் கொண்டான்.

யாரோ இரண்டு மூன்று ஆட்கள் தீவட்டிகளைத் கொண்டு வந்தார்கள். லாரியில் இருந்தும் நாலைந்து முரடர்கள் இறங்கினார்கள். லாரியிலிருந்து கொள்ளை அடித்த பல வகையான பொருட்களையும் ஏராளமான மூட்டைகளையும் இறக்கினார்கள். அந்த மூட்டைகள் அனைத்தும் உணவுப் பொருள்களாக இருக்கலாம். அவைகளைப் பூமிக்கடியில் சுரங்கம் போல் யாருக்கும் தெரியாமல் தோண்டி வைத்திருந்த கிடங்குகளில் போட்டு மூடி வைத்தார்கள். பின்னர் லாரி புறப்பட்டது. இப்படிப் பலதடவை அந்த லாரி போய்க் கொண்டும் வந்து கொண்டும் இருந்தது.

அந்தக் கூட்டத்தில் ஒரு குண்டன் இருந்தான். அவன் அதிக உயரமாக இருந்தான். அவன் மார்பும் தோளும் உருவமும் அரக்கனை ஒத்து இருந்தன. அவன் சொன்னான்: ''இன்னும் நன்றாகக் கொள்ளையடித்துக் கொண்டு வாருங்கள். நம்மை யாரும் பிடித்துக் கொண்டுபோய்விட முடியாது. இந்தக் காட்டிற்குப் பகலிலேயே எவரும் வரமாட்டார்கள். நாம் இருக்கும் இடத்தை யாராலும் கண்டுபிடிக்க முடியாது.'' – இப்படிக் கர்வமாகப் பேசினான்.

இதையெல்லாம் மரத்தில் இருந்தபடியே கேட்ட சிங்காரம் தலையை ஆட்டிக் கொண்டான்.

பொழுது விடிந்தது. அந்தக் கொள்ளைக்காரர்கள் அனைவரும் போய்விட்டார்கள். கொள்ளையர்கள் கொண்டு வந்து ஒளித்த வேடிக்கையைப் பார்த்துக் கொண்டிருந்ததிலேயே பொழுதும் சீக்கிரமாகவே விடிந்து விட்டது போல் இருந்தது. தான் ஒளிந்திருந்த இடத்தை நன்றாக அடையாளம் வைத்துக் கொண்டு, அங்கிருந்து மீண்டும் ஓட்டம் பிடித்தான். ஓடினான், ஓடினான் ஓடினான்...


எங்கே ஓடினான் தெரியுமா? நேராகக் காவல் நிலையத்திற்குத்தான்! ஓடிப் போய், கள்வர்கள் கொள்ளையடித்து ஒளித்து வைத்திருக்கும் விவரங்களை இன்ஸ்பெக்டரிடம் விளக்கிக் கூறினான்.

வெகுநாட்களாகத் தேடிக் கொண்டிருக்கும் கொள்ளைக் கூட்டத்தினராகத்தான் அவர்கள் இருக்க வேண்டுமென்று அப்போது இன்ஸ்பெக்டர் தீர்மானித்துக் கொண்டார்.

அன்று இரவே சிறுவனையும் அழைத்துக் கொண்டு போய் மரத்தில் பதுங்கியிருந்து, அந்தக் கொள்ளைக் கூட்டத்தினர் அனைவரையும் கையும் களவுமாகப் பிடித்துக் கொண்டு வந்துவிட்டார் இன்ஸ்பெக்டர்.

ஓட்டப்பந்தயத்திலும், காட்டில் இரவு நேரத்தில் தங்கியிருந்து கடந்து வந்ததற்காகவும் பஞ்சாயத்தார்கள் சிங்காரத்திற்கு 'வீரன்' என்று பெயர் சூட்டினார்கள். அதே நேரத்தில் கொள்ளைக் கூட்டத்தினரைப் பிடித்துக்கொடுத்ததற்காகப் பெரிய போலீஸ் அதிகாரியும் அவனுக்குத் தங்கப் பதக்கம் வழங்கிப் பாராட்டினார்.

சிங்காரத்தின் வெற்றி அவனுக்கு மட்டும் கிடைத்த வெற்றியல்ல. நாட்டிற்கும் கிடைத்த பெரும் வெற்றி அல்லவா?



## அறிவியல் வளர்ச்சி அவசியம்

### நேரு

நீண்ட அரசுப் பொறுப்பில் என்னை ஈடுபடுத்திக் கொண்ட நாள் முதலே, விஞ்ஞான வளர்ச்சியில் கவனம் செலுத்த வேண்டும் என்பதை உணர்ந்து வருகிறேன். அதன் காரணமாகத்தான் விஞ்ஞானக்கழகம் மற்றும் தொழிலியல் ஆய்வு மையம் போன்ற முக்கியமான நிறுவனங்களில் என்னையும் இணைத்துக் கொண்டேன்; அணு ஆற்றல் குழுவுடன் மிகவும் நெருக்கமாகப் பணியாற்றி வருகிறேன். இதனால் எல்லாம், விஞ்ஞானத்தைக் குறித்தும் நான் மிகவும் தெரிந்திருக்கிறேன் என்று பொருள் அல்ல. இந்த வகையில் நான் வேடிக்கை காட்டும் சிறுவனைப் போலவே என்னை எண்ணிக் கொள்கிறேன். இத்தகைய அறிவியல் நிறுவனங்களுடன் நான் கொண்டுள்ள கூட்டுறவு காரணமாக இவை அரசுடன் எளிதில் தொடர்பு கொள்ள முடிகிறது.

இந்திய மக்களும் அரசும் விஞ்ஞான அறிவு பெற வேண்டும்-விஞ்ஞான ஆய்வுகளின் அவசியத்தை உணர வேண்டும் என்பதுதான் அறிவியலில் எனக்கு ஆர்வம் ஏற்பட்டதற்குரிய அடிப்படை! அறிவியல்பணிகள் என்னால் செய்து முடிக்கப்படவில்லை. ஆனால்புகழ்பெற்ற எனது சகாக்களால் இந்தியாவில் அறிவியலுக்கு முதன்மை தருகின்ற அந்த மேதைகளால்-பணிகள் முடிக்கப்படுகின்றன. இந்திய நாட்டில் விஞ்ஞான ஆய்வுகள் வளர்ச்சி பெறவும்-விஞ்ஞான முறைகள் கையாளப்படவும் எல்லா வகையிலும் நான் உதவிகளைச் செய்வதற்குச் சித்தமாக இருக்கிறேன்.

(பெங்களூரில் 2.1.1951ல் நடைபெற்ற இந்திய விஞ்ஞான காங்கிரஸைத் தொடங்கி வைத்து ஆற்றிய உரையிலிருந்து).

# இலங்கைத் தமிழர் மறுவாழ்வு

**1964**-ஆம் ஆண்டு இந்திய இலங்கை ஒப்பந்தத்தின்படி, இந்திய வம்சாவழியைச் சேர்ந்த 6 இலட்சம் நபர்கள் 15 ஆண்டுக்கால இடைவெளியில் இலங்கையிலிருந்து தாயகம் அனுப்பப்படவேண்டும். 1964-ஆம் ஆண்டிலிருந்து இராமேஸ்வரம், தூத்துக்குடி துறைமுகங்கள் வாயிலாக 1,14,811 குடும்பங்களைச் சார்ந்த 4,57,215 அகதிகள் நாளது வரை தாயகம் வந்துள்ளனர்.

இம்முறையில் தாயகம் திரும்பிய இந்தியர்கள் அகதிகள் எனப்படுவர். இந்தியக் குடியுரிமையோ அல்லது இலங்கைக் குடியுரிமையோ அல்லாத நாடற்று இலங்கையில் பல ஆண்டுகள் வாழ்ந்து வருகின்ற இந்தியர்களைக் கொழும்பில் உள்ள இந்தியத் தூதரகத்திற்கு மனுச் செய்யப் பணிக்கப்படுகிறது.

அப்படி மனுச் செய்யும் இந்தியர்கள் 1964-ஆம் ஆண்டு ஒப்பந்த நிபந்தனைகளுக்கு உடன்பட்டால் இந்தியக் குடியுரிமை வழங்கப்பட்டு, இந்தியாவில் அவர்கள் பெறப்போகும் உதவியைக் குடும்ப அடையாள அட்டைகளில் பதிவு செய்து தாயகத்திற்கு அகதிகளாக அனுப்பப்படுகின்றனர்.

அகதிகளுக்கு அளிக்கப்படும் அடையாள அட்டையில் குடும்ப விவரம், கொண்டு செல்லும் பணம், இந்தியாவில் அளிக்கப்படும் உதவி முதலானவைகள் குறிக்கப்பட்டு கொழும்பிலுள்ள கண்டி உதவி தூதரக அலுவலகத்தில் குடும்ப அட்டைகள் அளிக்கப்படுகின்றன. இந்த அகதிகள் இந்திய கப்பல் கார்ப்பரேஷனின் போக்குவரத்துக் கப்பல்களில் தலைமன்னாரிலிருந்து இராமேஸ்வரம் துறைமுகம் மூலம் இந்தியா வந்தடைகிறார்கள்.

## இராமேஸ்வரம் வரவேற்பு மையம்

வரும் அகதிகளை இராமேஸ்வரத் துறைமுகத்தில் ஒரு தனி வட்ட ஆட்சியரும் அவரது அலுவலர்களும் வரவேற்கின்றனர். சாதாரண காலங்களில் வாரத்தில் செவ்வாய், வியாழன், சனி ஆகிய மூன்று நாட்களில் தலைமன்னாரிலிருந்து கப்பல் போக்குவரத்து உண்டு. கடல் துறைமுகம் வந்தடைந்த அகதிகளுக்கு முதலில் தேநீரும், அகதி ஒருவருக்கு ரூ.3.50 வீதம் ஒரு வேளை உணவும் அரசு ஒப்பந்தக்காரர் மூலம் அரசு நிதி உதவியுடன் அளிக்கப்படுகிறது. அகதிகள் கொண்டுவந்த உடைமைகள், குடும்ப அடையாள அட்டை, பயணச்சீட்டு ஆகியவைகளைத் தனித் தாசில்தாரும் அவரது அலுவலர்களும் தணிக்கை செய்து அவர்களுக்கு ஏற்படுத்தப்பட்ட உதவிகளின்படி பாகுபாடு செய்து, திட்டங்களுக்கு அனுப்பப்படுபவர்களை திருச்சியிலுள்ள கோட்டப்பட்டு என்ற முகாமிற்கும், 'வியாபாரக்கடன்' நிதி உதவி பெறுபவர்களை மண்டபம் முகாமிற்கும் இரயில் மூலம் அனுப்பிவைக்கின்றனர். சுங்க இலாகாவினால் அகதிகளின் உடைமைகளைச் சோதனை செய்வதில் தாமதம் ஏற்பட்டால் இராமேஸ்வரத்திலேயே தங்க வைத்து மறுநாள் கோட்டப்பட்டு முகாமிற்கு அனுப்பப்படுகின்றனர்.

## மண்டபம் முகாம்

மண்டபம் தற்காலிகத் தங்கும் முகாம் 294.25 ஏக்கர் நிலப்பரப்பைக் கொண்டது. 1092 குடியிருப்புக் குடில்கள் அடங்கிய 226 கட்டடத் தொகுதிகளைக் கொண்ட இந்த நிலப்பரப்பை, 1965-ஆம் ஆண்டு இலங்கை அரசிடமிருந்து ரூ.26 இலட்சத்திற்குத் தமிழ்நாடு அரசு விலைக்கு வாங்கியது. தற்போது





75 கட்டடத் தொகுதிகளில் அமைந்துள்ள 728 குடியிருப்புக் குடில்கள் அகதிகள் தற்காலிகமாகத் தங்குவதற்கென ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. மறுவாழ்வுத் துணை ஆட்சியர் ஒருவரின் நேரடிப் பார்வையில் முகாம் இயங்கி வருகிறது.

'வியாபாரக்கடன்' என நிதி உதவி பெறத்தக்க குடும்பங்கள் இம்மையத்தில் சேர்க்கப்படுகின்றனர். முகாமில் அனுமதிக்கப்பட்டவுடன் பண உதவியும் குடும்பம் நடத்தத் தேவையான அத்தியாவசியப் பொருள் உதவிகளும் அளிக்கப்படுகின்றன. அவர்களுக்கு அரிசி கிலோ 57 காசுக்கு அளிக்கப்படுகிறது. முகாமுக்கு வந்த இரண்டு நாட்களுக்குள் வியாபாரக் கடன் ரூ.3000 அளிக்கப்பட்டு அவர்கள் விரும்பும் இடங்களுக்கு அரசு செலவிலேயே அனுப்பி வைக்கப்படுகின்றனர்.

காபி, தேயிலைத் தோட்டங்கள், நூற்பாலை போன்ற திட்டங்களுக்கு உதவி நிர்ணயம் செய்யப்பட்ட குடும்பங்கள் திட்டங்களைச் சார்ந்த அலுவலகங்களிடமிருந்து குறிப்புகள் வரும்வரை முகாமிலே தங்க ஏற்பாடு செய்யப்படுகிறது.

மண்டபம் முகாமில் தங்கும் காலத்தில் பண உதவி உண்டு. அரிசி, விறகு குறைந்த விலைக்கு அதாவது அரிசி கிலோ 57 காசுக்கு, விறகு கிலோ கிராம் 40காசுக்கு விநியோகம் செய்யப்படுகின்றன. மண்டபம் முகாமிலுள்ள தற்காலிக முகாமிற்கு (டிரான்சிட் கேம்பிற்கு) அகதிகள் வந்தவுடன் வயது வந்தவர்களுக்குக் காலைச்சிற்றுண்டி ரூ.2 விதமும் குழந்தைக்கு 1.50 விதமும், சாப்பாடு முறையே ரூ.3.50 ரூ.2 விதமும் ஒரு நாளைக்கு அளிக்கப்படுகின்றன. இதற்கான செலவு பணக்கொடைத் தொகையில் பிடித்தம் செய்யப்படுகிறது.

## மருத்துவ வசதி

மண்டபம் முகாமில் 20 படுக்கைகள் கொண்ட அரசு மருத்துவமனை உள்ளது. இத்தப் பகுதியிலுள்ள மக்களுக்கும் குறிப்பாக முகாமில் தங்கும் அகதிகளுக்கு இம்மருத்துவமனை பெரிதும் பயன்படுகிறது. சில நோயாளிகளை இராமநாதபுரத்திலுள்ள அரசு மருத்துவமனைக்கு எடுத்துச் செல்வதற்குப் பாண்டிச்சேரி பொதுமக்களால் அன்பளிக்கப்பட்ட முதலுதவி வாகனம் பயன்படுத்தப்படுகிறது.

அகதிகளின் குழந்தைகளின் கல்வியை முன்னிட்டு. ஆரம்பக் கல்வி நிலையம் ஒன்றும், மேல்நிலைப்பள்ளி ஒன்றும் உள்ளது.

பாதுகாப்பு அளிக்கும் வகையில் முகாமிலேயே ஒரு காவல் நிலையம் உள்ளது.

## தஞ்சமடைந்த அகதிகள்

1983-ஆம் ஆண்டு ஜூலைத் திங்களில் இலங்கையில் வெடித்த இனக் கலவரக் கொடுமையினால் தமிழர்கள் கொழும்பில் அமைக்கப்பட்ட துயர்துடைப்பு முகாம்களில் அனுமதிக்கப்பட்டனர். கொடுமைக்கு இலக்கான அந்த மக்களில் முதல் அணியினர் 'பாரத சீமா' என்ற இந்தியக் கப்பலில் 22-8-83ஆம் நாள் தூத்துக்குடி துறைமுகம் வாயிலாக இந்தியா வந்தடைந்தனர். அவர்கள் 107 குடும்பங்களைக் கொண்ட 334 நபர்கள் ஆவார்கள்.

அவர்கள் 23-8-83ந் தேதி பஸ் மூலம் மண்டபம் முகாமுக்கு அனுப்பப்பட்டு அகதிகளாக அனுமதிக்கப்பட்டனர். அதற்குப் பின்னால் அக்டோபர் 1984வரை தாயகம் திரும்பிய அகதிகளைத் தவிர கொடுமையின் கடுமையின் பாற்பட்டு எந்த ஒரு அகதியும் வரவில்லை. ஆனால் ஜனவரி 1985 முடிய 395 குடும்பங்களடங்கிய 1160 அகதிகள் மண்டபம் முகாமில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

## அகதிகள் பிரிவினை

இலங்கையில் ஏற்பட்ட இனக்கலவரக் கொடுமையினால் கலவரப்பட்ட பகுதிகளிலிருந்து வெளியேறி அகதிகளாக இந்தியாவிற்குத் தஞ்சம் அடைந்தவர்களைக் கீழ்க்கண்டவாறு பாகுபாடு செய்து பிரிவினை செய்யலாம்.

1. இலங்கைக் குடியுரிமை கொண்டவர்கள்
2. இந்தியக் குடியுரிமை கொண்டவர்கள்
3. நாடற்றவர்கள்.

(அ) முதல் பிரிவினைச் சேர்ந்தவர்கள், இலங்கை அரசால் வழங்கப்பட்ட 'எமர்ஜென்சி சர்டிபிகேட்' என்ற பயணச்சீட்டைக் கொண்டுள்ளார்கள். அவர்கள் இலங்கையிலுள்ள தூதரகத்தில் விசா வழங்கப்பட்டு இந்தியாவிற்கு வந்திருப்பார்கள்.

(ஆ) இரண்டாவது பிரிவினர், இந்தியத்தூதரகத்தினால் வழங்கப்பட்ட பயணச்சீட்டு அல்லது 'எமர்ஜென்சி சர்டிபிகேட்' கொண்டவர்களாக இருப்பார்கள்.

(இ) மூன்றாவது பிரிவினர், இலங்கை அல்லது இந்தியக்குடியுரிமை கோரிமனுச் செய்தவர்கள் என்றும், அவர்களது மனுக்கள் முடிவு பெறாத நிலையில் உள்ளன என்றும் கூறலாம். சிலர்



குடியுரிமைக்கே மனுச் செய்யாதவர்களாகவும் இருப்பார்கள். அந்த மாதிரி இனங்களில் இலங்கை அரசு அடையாளச் சான்றிதழ் ஒவ்வொரு நபருக்கும் அளிக்கிறது.

மேலே கண்ட மூன்று பிரிவினைச் சார்ந்த மக்கள் அனைவரும் ஆதரவற்ற நிலையில் உள்ளவர்கள். அனைவரும் மண்டபம் முகாமில் அனுமதிக்கப்பட்டு உதவி பெறுவார்கள்.

பயணச்சீட்டுகள் பெறாமல் ஆதரவற்ற நிலையில் இந்தியாவில் தஞ்சமடைந்த அகதிகளும் மண்டபம் முகாமில் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள். ஆனால் கலவரப் பகுதியிலிருந்து தப்பித்து வந்தவர்களாகவும் இராமேஸ்வரம் போர்ட் எமிகிரேஷன் ஆபீஸ்' அல்லது இராமேஸ்வரம், மண்டபம் காவல் நிலையங்களிலிருந்து அதற்கான சான்று பெற்றவர்களாகவும் இருக்க வேண்டும். அப்போது தான் அவர்களுக்கு முகாமில் உதவி அளிக்கப்படும்.

**தஞ்சமடைந்த அகதிகளுக்கு அளிக்கப்படும் உதவிகள்**

முகாமில் அனுமதிக்கப்பட்டவுடன், ஒவ்வொரு அகதிகள் குடும்பத்தாருக்கு அனுமதிக்கப்பட்ட நாளன்று ஒருவேளை சிற்றுண்டியும் ஒரு வேளை சாப்பாடும் முறையே ரூ. 2ம, ரூ. 3.50-ம் வீதத்தில் அளிக்கப்படுகின்றன. அரிசி, விறகு குறைந்த விலைக்குப் பெற்றுக் கொள்ள ஒவ்வொரு குடும்பத்தாருக்கும் குடும்ப அட்டை அளிக்கப்படுகிறது. நிர்ணயம் செய்யப்பட்ட பண உதவியும் அளிக்கப்படுகிறது. குடும்பங்களின் அளவினைப் பொறுத்து பண உதவி கீழ்க்காணும்படி அளிக்கப்படுகிறது.

| குடும்ப அளவு | அளிக்கப்படும் மாதப் பண உதவி |
|---|---|
| | ரூ! |
| 1. ஒரு நபரைக் கொண்ட குடும்பம் | 110.00 |
| 2. வயது வந்த இரண்டு நபர்களைக்கொண்ட குடும்பம் | 192.50 |
| 3. இரண்டு வயது வந்த நபர்கள் ஒரு குழந்தை ஆகியவர்களைக் கொண்ட குடும்பம் | 247.50 |
| 4. இரண்டு வயது வந்தவர்கள் இரண்டு குழந்தைகள் ஆக நான்கு பேர் கொண்ட குடும்பம் | 275.00 |
| 5. மூன்று வயது வந்தவர்கள் இரண்டு குழந்தைகள் ஆக ஐந்து நபர்களைக் கொண்ட குடும்பம் | 357.50 |

இவை தவிர ஒரு வயது வந்தவர் அல்லது ஒரு குழந்தை குடும்பத்தில் கூடுதலாக இருக்குமேயானால் அந்த நபர்களின்படி முறையே ரூ82.50ம்,ரூ. 27.50ம் கூடுதலாக அளிக்கப்படும்.

முகாமில் சேர்க்கப்பட்டவுடன், பெரியவர்களுக்குச் சேலை, துணி வழங்கப்படுவதோடு, குழந்தைகளுக்கு ஆடைகளும் அளிக்கப்படுகின்றன. குடும்பத்திற்கு வேண்டிய பாத்திரங்களும், அரிக்கன் விளக்கும்கூட அளிக்கப்படுகின்றன.

துணிமணிகள் ரூ. 556. பாத்திர வகையறா ரூ.55. விளக்கு ரூ. 35. மொத்தம் ரூ. 646.

இலங்கையில் கலவரத்தின் காரணமாக இருந்து வரும் சூழ்நிலைகளின் பொருட்டு தலைமன்னாரிலிருந்து இராமேஸ்வரத்திற்கிடையே கப்பல் போக்குவரத்து 5-1-85 முதல் நிறுத்தப்பட்டு விட்டது. இருந்தாலும் 5-2-85-ஆம் தேதி முதல் நாட்டுப் பிளாஸ்டிக் இயந்திரப்படகுகள் மூலம் அகதிகள் வந்த வண்ணம் இருக்கின்றனர்.

இப்படி வந்தவர்கள் 7-3-85 வரை 3,700 குடும்பங்கள்; 15,500 நபர்கள்; இவர்கள் பயணம் செய்த படகுகள் 443.

அகதிகள் இராமேஸ்வரம் வந்தவுடன் தொற்று நோய் போன்றவற்றிலிருந்து தடை செய்யும் வகையில் மருத்துவக் குழுவால் சோதனை செய்யப்படுகின்றனர். காலரா டைபாய்டு நோய்களுக்கான தடுப்பு ஊசிகள்

# திருப்பத்தூர் இடைத் தேர்தல்

1984 டிசம்பரில் நடைபெற்ற பொதுத் தேர்தலில், வடஆர்க்காடு மாவட்டம் திருப்பத்தூர் தொகுதிச் சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட திரு. ஒய். சண்முகம் அவர்கள் இயற்கை எய்தியதையொட்டி 5-3-1985-ல் இடைத் தேர்தல் நடைபெற்றது. அதன் முடிவு வருமாறு.

## சட்டமன்றத் தொகுதி

### 41 திருப்பத்தூர்

மொத்த வாக்காளர் : 1,38,120

பதிவான வாக்குகள் : 95,581

செல்லாதவை : 2,864

| வேட்பாளர் பெயர் | கட்சி | பெற்ற வாக்குகள் |
|---|---|---|
| எஸ். பி. மணவாளன் | காங் (இ) | 46,031 |
| ஜி. சண்முகம் | தி.மு.க. | 31,381 |
| ஜி. பொன்னுசாமி | சுயே | 13,855 |
| எம். பி. பொன்னுசாமி | சுயே | 359 |
| ஜே. சி. ஆர். மனோகரன் | சுயே | 316 |
| என். கிருஷ்ணன் | சுயே | 278 |
| எஸ். ஆர். சுப்பிரமணியம் | சுயே | 235 |
| டி. குமாரசாமி | சுயே | 122 |
| கே. ரவிச்சந்திரன் | சுயே | 73 |
| எம். பாபு | சுயே | 67 |

போடப்படுகின்றன. அகதிகளுக்குத் தேநீர் அளிக்கப்பட்டு, பின் இராமேஸ்வரத்திலுள்ள தங்கும் விடுதிகளுக்கு அனுப்பப்படுகின்றனர். அவர்கள் ஏறிவந்த படகுகள் பாதுகாப்புக்குக் கொண்டு வரப்படுகின்றன. மண்டபம் முகாமில் இட வசதி ஏற்பட்டவுடன் இராமேஸ்வரத்திலிருந்து அகதிகள் மண்டபம் முகாமுக்கு அனுப்பப்படுகின்றனர்.

**பதிவுக் குறிப்பேடுகள்**

அகதிகள் பற்றிய முழு விவரங்களையும் பதிவு செய்து நிலையான குறிப்பேடுகள் தயாரிக்கப்படுகின்றன. வரும் காலங்களில் பயன்படும் வகையில், அகதிகள் ஒவ்வொருவரையும் நிழற்படம் எடுக்கப்படுகிறது. அவர்கள் எங்கிருந்து, எப்படி, எந்த நாளில் வந்தார்கள் என்ற விவரங்கள் சேகரிக்கப்பட்டு, பதிவேடுகளில் பதிவு செய்யப்படுகின்றன. இவ்வகையான பதிவேடுகள் காட்டும் விவரங்கள் இரு நாடுகளுக்கிடையே ஏற்படக்கூடிய ஒப்பந்தங்களுக்கு மிகவும் பயன்படும்.

கருவுற்ற தாய்மார்களின் உடல் நிலைக்கேற்ப உதவியளிக்கப்படுகிறது. பேறுகாலம்

கோவையில் நடைபெற்ற அரசுப் பொருட்காட்சிகளின் இலாபத்தைக் கொண்டு கலையரங்கம் கட்டும் முயற்சியில் அரசு ஈடுபட்டு வருகிறது. கலையரங்கு கட்டுவதற்குரிய இடத்தை, மாவட்ட ஆட்சித் தலைவர் திரு நா. ஆதிமூலம், இ.ஆ.ப., செய்தி-மக்கள் தொடர்பு இயக்குநர் திரு நா. கிருஷ்ணபாரதி, இ.ஆ.ப., சுற்றுலா இணை இயக்குநர் திரு ஆர். கே. கிருஷ்ணமூர்த்தி, தமிழ்நாடு முதன்மைக் கட்டடக் கலை நிபுணர் திரு முருகேசன் மற்றும் அலுவலர்கள் 7.3.85ல் பார்வையிட்டனர்.





மிகவும் அண்மையில் இருக்குமானால் அவர்களை வேறு வெளியிடங்களுக்கு அனுப்பாமல் இராமேசுவரத்திலோ, மண்டபத்திலோ தங்கவைத்துக் கொள்கிறார்கள்.

ஒரே குடும்பத்தைச் சார்ந்த தாய்தந்தையர் ஒருபக்கம், பிள்ளைகள் வேறு ஊரில் என்று பிரிந்துவிடாதபடி, அவர்களை ஒரே இடத்தில் தங்க வைக்கவும், சேர்க்கவும் தக்க ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

மண்டபத்திலிருந்து மற்ற மாவட்டங்களுக்கும் அகதிகள் அனுப்பப்படுகிறார்கள்.

புதுக்கோட்டை மாவட்டத்தில் மிகவும் அதிகம் பேர் தங்க வைக்கப்பட்டுள்ளனர். மற்ற எல்லா மாவட்ட ஆட்சித் தலைவர்களும் அகதிகளை ஏற்றுத்தத்தம் மாவட்டங்களில் குடியேற்றி வருகின்றனர்.

மண்டபத்தில் தற்சமயம் 728 குடியிருப்புகள் உள்ளன. இதை 1,000ஆக உயர்த்தத் திட்டமிட்டுள்ளார்கள். மேலும் இதனை இருமடங்காக்கவும்திட்டமிடப்பட்டுள்ளது.

மாநிலம் முழுவதும் 5,000 கூடங்கள் அமைக்கத் திட்டமிட்டுள்ளார்கள். அகதிகள் கையில் இலங்கைப் பணம் இருந்தால் அதற்கு ஈடான இந்தியப் பணம் வழங்கவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அகதிகளுக்கு உதவிட ரூபாய் 15 லட்சம் உடனடியாக ஒதுக்கப்பட்டது இந்தநிதி பழுதடைந்தகுடியிருப்புகளைச்சீரமைக்க வும், தீப்பிடிக்காதகுடியிருப்புகள் அமைக்கவும் பயன்படுத்தப்படும்.

கடலலைபோல் கண்ணீரும் கம்பலையுமாக இலங்கை அகதிகள் ஆயிரக்கணக்கில் உதவி நாடி, தமிழகத்திற்கு ஓடிவந்து ஏற்படுத்திய வரலாறு காணாத அறைகூவலை, இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. எஸ். குருமூர்த்தி, இ ஆ. ப. அவர்களும், அவருக்கு உறுதுணையாக விளங்கும் மற்ற அலுவலர்கள் குழாமும் மனிதாபிமானத்தோடு அணுகி, உற்ற உதவிகளை இரவு பகல் பாராது. 24 மணி நேரமும் செய்வதை, நேரில் காணும் யாராலும் பாராட்டிப் போற்றாமல் இருக்க முடியாது.

இலங்கை அகதிகள் மறுவாழ்வுப் பிரச்னையின் முக்கியத்துவத்தை முற்றும் உணர்ந்துள்ள தமிழக அரசு, உணவுத்துறைச் செயலர் திரு. யு. எஸ். நடராசன், இ. ஆ. ப. அவர்களை மறுவாழ்வு ஆணையராகவும் நியமித்து, உதவிப் பணிகளை விரைவாகவும் சிறந்த பயனளிக்கும் வகையிலும் முடுக்கி விட்டுள்ளது.

மு. முத்துக்காளத்தி



# அமைச்சர்கள் பொறுப்பு ஏற்ற துறைகள்

**1. டாக்டர் எம்.ஜி.ஆர்.**
**(முதல் அமைச்சர்)**

பொது, பொது நிர்வாகம், இந்திய அரசுப் பணி (இ.அ.ப அலுவலர்கள்), மாவட்ட வருவாய்த் துறை அலுவலர்கள், துணை மாவட்ட ஆட்சித் தலைவர்கள், காவல்துறை, இலஞ்ச ஒழிப்பு, திட்டம், சர்க்கரைக் கழிவு, தொல்பொருள் ஆராய்ச்சி, மதுவிலக்கு (பெர்மிட் வழங்குதல் நீங்கலாக), உற்பத்தி வரி (எக்சைஸ்), பாஸ்போர்ட்.

**2 டாக்டர் வி.ஆர். நெடுஞ்செழியன்**
**(நிதி அமைச்சர்)**

நிதி, வருவாய்த்துறை (ரெவின்யூ), சட்டப் பேரவை, இளைஞர் அணி, முன்னாள் இராணுவத்தினர், தேர்தல், புள்ளி விவரம்.

**3 திரு எஸ். இராமச்சந்திரன்**
**(மின் துறை அமைச்சர்)**

மின்சாரம், இரும்பு—உருக்கு கட்டுப்பாடு, எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை, அரசு அச்சகம், பத்திரிகைக் காகிதக் கட்டுப்பாடு.

**4 திரு கே.ஏ. கிருஷ்ணசாமி**
**(தொழிலாளர் நல அமைச்சர்)**

தொழிலாளர் நலம், கால்நடைப் பராமரிப்பு, பால்வளம். பால்பண்ணை வளர்ச்சி, பத்திரப் பதிவு. முத்திரைச் சட்டம்.

**5 திரு இராம. வீரப்பன்**
**(செய்தி-அறநிலையத்துறை அமைச்சர்)**

செய்தி-மக்கள் தொடர்பு, திரைப்படத் தொழில் நுட்பம், சுற்றுலா, சுற்றுலா வளர்ச்சிக் கழகம், திரைப்படச் சட்டம், இந்து அறநிலையங்கள். வனத்துறை, சின்கோனா, மது பெர்மிட்கள் அனுமதி வழங்குதல்.

**6 திரு க. இராசாராம்**
**(தொழில் அமைச்சர்)**

எலக்ட்ரானிக், விஞ்ஞானம், தொழில் நுட்பம், பெருந்தொழில்கள், சுரங்கம், கனிப் பொருட்கள்.

**7 திரு செ. அரங்கநாயகம்**
**(கல்வி அமைச்சர்)**

கல்வி, ஆட்சிமொழி, தமிழ் வளர்ச்சி, கலாச்சாரம்.

**8 டாக்டர் கா. காளிமுத்து**
**(வேளாண்மைத்துறை அமைச்சர்)**

வேளாண்மை, வேளாண்மை நிதி, வேளாண்மைத் தொழில் நுட்பம், 'அக்ரோ' என்ஜினியரிங், 'அக்ரோ' சேவைக் கூட்டுறவுச் சங்கங்கள், குடிநீர்-வடிகால் வாரியம்.

**9 திரு சி. பொன்னையன்**
**(சட்ட அமைச்சர்)**

சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலைகள், எடை-அளவைகள் சட்டம், நிறுவனங்கள் பதிவு, கடன் நிவாரணம் (கடன் கொடுத்தல் பற்றிய சட்டங்கள், சிட்டுகள் பற்றிய சட்டங்கள் உட்பட).

**10 டாக்டர் எச்.வி. ஹண்டே**
**(மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்)**

மக்கள் நல்வாழ்வு, சுற்றுப்புறச் சூழல், மாசுக் கட்டுப்பாடு.

**11 திரு எஸ். முத்துசாமி**
**(போக்குவரத்து அமைச்சர்)**

போக்குவரத்து, அரசுடைமை ஆக்கப்பட்ட போக்குவரத்து, மோட்டார் வாகனச் சட்டம், துறைமுகங்கள், நெடுஞ்சாலைகள்.

**12 திரு எஸ். திருநாவுக்கரசு**
**(உணவு அமைச்சர்)**

உணவு, விலைக் கட்டுப்பாடு, மக்கள் தொகை கணக்கெடுப்பு (சென்சஸ்).

**13 திரு வி. வி. சாமிநாதன்**
**(கைத்தறி அமைச்சர்)**

கைத்தறி மற்றும் துவுணி.

**14 திரு ஆர். சவுந்தரராஜன்**
**(உள்ளாட்சித்துறை அமைச்சர்)**

ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், சமுதாய வளர்ச்சி, நகராட்சி நிர்வாகம், கிராமப்புறக் கடன்கள்.

**15 திரு தா. வீராசாமி**
**(வணிகவரி அமைச்சர்)**

வணிகவரி.

**16 திரு ந. நல்லுசாமி**
**(வீட்டு வசதி அமைச்சர்)**

வீட்டு வசதி, குடிசை மாற்று வாரியம், நகரமைப்புத் திட்டங்கள், வீட்டு வசதிக் கட்டுப்பாடு.

**17 திரு ஆனூர் கோ.ஜெகதீசன்**
**(ஊரகத் தொழில் அமைச்சர்)**

கிராமத் தொழில் உள்பட ஊரகத் தொழில்கள் குடிசைத் தொழில்கள், சிறு தொழில்கள்.

**18 திரு டி. இராமசாமி**
**(மறுவாழ்வு மற்றும் வேலைவாய்ப்பு அமைச்சர்)**

வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி, வெளிநாடுகளில் வாழும் இந்தியர்கள், அகதிகள்-குடிபெயர்ந்தோர்.

**19 திரு அ. அருணாசலம்**
**(ஆதிதிராவிடர் நல அமைச்சர்)**

ஆதிதிராவிடர் நலம், மலைவாழ் பகுதியினர் நல் வாழ்வு, கொத்தடிமை.

**20 திரு எம்.ஆர். கோவேந்தன்**
**(பிற்பட்டோர் நல அமைச்சர்)**

பிற்பட்டோர் நலம், மீன்வளம்.

**21 திருமதி கோமதி சீனிவாசன்**
**(சமூக நலம்-சத்துணவு அமைச்சர்)**

சத்துணவு, சமூக நலம் (பெண்கள், குழந்தைகள் நலம் உட்பட), பிச்சைக்காரர் இல்லம், அனாதை இல்லங்கள்.

**22. திருமதி எஸ். விஜயலட்சுமி பழனிச்சாமி (கதர்த்துறை அமைச்சர்)**

கதர், பூதானம், கிராமதானம்.

**23 திரு. ஒய். எஸ். எம். யூசுப்**
**(பொதுப்பணித்துறை அமைச்சர்)**


பொதுப்பணித்துறை, நீர்ப்பாசனம், (சிறிய நீர்ப்பாசனத் திட்டங்கள் உட்பட) வக்ஃப் போர்டு, பொதுப் பணித்துறை தொடர்பான நிறுவனச் செய்திகள்.

**24 திரு கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்**
**(கூட்டுறவு அமைச்சர்)**

கூட்டுறவுத் துறை.



சுனில் கவாஸ்கர்



# இமாலய வெற்றி

ஆஸ்திரேலியாவில் விக்டோரியா மாநில கிரிக்கெட் சங்கம் தொடங்கப்பட்டு 150 ஆண்டு ஆகிறது. இதை முன்னிட்டு 'உலகச் சாம்பியன்' பட்டத்துக்கான கிரிக்கெட் போட்டியை 'விக்டோரியா மாநில கிரிக்கெட் சங்கம்' நடத்தியது.

இதில் இந்தியா, பாகிஸ்தான், வெஸ்ட்இன்டீஸ், நியூசிலாந்து, ஆஸ்திரேலியா, இங்கிலாந்து, இலங்கை ஆகிய 7 நாடுகள் கலந்து கொண்டன. இந்தப் போட்டியில் இந்தியாவும், பாகிஸ்தானும் இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றன.

இந்தியா 8 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் அபாரமாக வெற்றி பெற்று உலகச் சாம்பியன் கோப்பையை வென்றது.

இந்தியாவின் இந்த மகத்தான வெற்றிக்கு முக்கியப் பங்கு வகித்தவர்கள் கபில்தேவ், ஸ்ரீகாந்த், சிவராமகிருஷ்ணன், ரவிசாஸ்திரி ஆகியோர் ஆவர்.

மகத்தான வெற்றி பெற்ற இந்திய அணிக்கு 'பென்சன் அண்டு ஹெட்ஜஸ்' உலகச் சாம்பியன் தங்கக் கோப்பை'யும், 4 லட்சத்து 65 ஆயிரம் ரூபாய் ரொக்கப் பரிசும் வழங்கப்பட்டன, இந்திய அணியின் சார்பில் கேப்டன் கவாஸ்கர் 'சாம்பியன்' கோப்பையைப் பெற்றுக் கொண்டார்.

இந்தச் சாம்பியன் கோப்பைப் போட்டியில், 'சிறந்த வீரரில் சிறந்த வீரர்' ஆக இந்திய வீரர் ரவிசாஸ்திரி தேர்ந்தெடுக்கப்பட்டார். அவருக்கு 3 லட்சத்து 40 ஆயிரம் ரூபாய் மதிப்புள்ள அழகான கார் பரிசளிக்கப்பட்டது. காரின் சாவி ரவிசாஸ்திரியிடம் வழங்கப்பட்டது.

போட்டியில் சிறந்த வீரராக, சிறப்பாக ஆடி 67ரன்கள் குவித்து இந்திய அணியின் வெற்றிக்கு வலுவான அடித்தளம் போட்ட ஸ்ரீகாந்த் தேர்ந்தெடுக்கப்பட்டார். அவருக்குத் தனியாகப் பரிசு வழங்கப்பட்டது. அத்துடன் அவருக்கு 7 ஆயிரம் ரூபாய் ரொக்கப் பரிசும் வழங்கப்பட்டது.

இந்திய வீரர்களின் மாபெரும் வெற்றியைப் பாராட்டி மேதகு குடியரசுத் தலைவர் திரு கியானி ஜெயில் சிங் அவர்கள், 'இது அற்புதமான வெற்றி' என்று வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டு உள்ளார். மாண்புமிகு பிரதமர் திரு ராஜீவ் காந்தி அவர்களும் இந்திய வீரர்களுக்கு வாழ்த்துச் செய்தி அனுப்பி உள்ளார். கேப்டன் கவாஸ்கருக்கு அவர் அனுப்பியுள்ள வாழ்த்துச் செய்தியில், 'உலகச் சாம்பியன் கோப்பையை வென்று இந்தியாவுக்குப் பெருமை சேர்த்திருக்கிறீர்கள். உங்களுக்கும், இந்திய வீரர்கள் ஒவ்வொருவருக்கும் எனது இதயபூர்வமான வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்' என்று குறிப்பிட்டுள்ளார்.

இந்திய வீரர்களின் வெற்றியைப் பாராட்டி மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் கேப்டன் கவாஸ்கருக்கும், இந்தத் தொடர் போட்டியின் சிறந்த வீரராக அறிவிக்கப்பட்ட ரவி சாஸ்திரிக்கும், இந்தப் போட்டியின் சிறந்த வீரர் ஸ்ரீகாந்துக்கும் தனித் தனியாக வாழ்த்துச் செய்தி அனுப்பி உள்ளார்.


கவாஸ்கருக்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் அனுப்பியுள்ள செய்தியில், 'இந்த வெற்றியின் மூலம் கிரிக்கெட் உலகில் இந்தியாவின் பெருமையை மேலும் உயர்த்தி இருக்கிறீர்கள். இந்த வெற்றியைக் கொண்டாடும் இந்திய மக்களுடன், குறிப்பாக தமிழக மக்களுடன் சேர்ந்து நானும் பாராட்டுகிறேன்' என்று குறிப்பிட்டுள்ளார்.

ஸ்ரீகாந்துக்கு அனுப்பியுள்ள செய்தியில், 'உங்களது சிறப்பான விளையாட்டினால் இந்திய அணிக்கு- குறிப்பாக 'தமிழ்நாட்டுக்குப் பெருமை சேர்த்துள்ளீர்கள்' என்று பாராட்டி இருக்கிறார்.

உலகச் சாம்பியன் கிரிக்கெட் போட்டியில் வெற்றி வாகை சூடிய இந்திய கிரிக்கெட் அணி வீரர்களுக்குத் தமிழகச் சட்டப் பேரவை 11-3-85 அன்று பாராட்டுத் தெரிவித்தது.

அசாருதீன் | எம். அமர்நாத் | மதன் லால் | விஸ்வநாத் | ஸ்ரீகாந்த் | சேத்தன் சர்மா







# சிறுவர் கலைக் களஞ்சியம்

தமிழ் வளர்ச்சிக் கழகம் உருவாக்கியுள்ள சிறுவர் கலைக் களஞ்சியத்தின் திருத்திய 2வது பதிப்பின் 4வது தொகுப்பு 22.2.'85 அன்று மாலை 6 மணியளவில் சென்னை மயிலாப்பூர் பாரதீய வித்யா பவன் அரங்கில் வெளியிடப்பட்டது.

மத்திய அரசின் முன்னாள் நிதி அமைச்சர் திரு சி.சுப்பிரமணியம் அவர்கள் விழாவுக்குத் தலைமை ஏற்றார்.

தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் அமைப்பாளரும் காப்பாளருமான திரு தி.சு.அவிநாசிலிங்கம், சிறுவர் கலைக் களஞ்சியத்தை வெளியிட்டார்.

திரு சி.சுப்பிரமணியம் தமது உரையில் தெரிவித்ததாவது:

''எல்லாப் பாடங்களுக்கும் தமிழ் பயிற்சி மொழியாக இருக்க வேண்டும் என்ற ஆசை இருக்கிறது. என்றாலும், தமிழில் பாடப் புத்தகங்களும் மேற்கோள் நூல்களும் தேவையான அளவுக்குவெளியிடப்படவில்லை. ஆங்கிலப் பாடநூல்கள் தமிழில் பெயர்க்கப்பட்டுள்ளதில் குறைபாடுகள்உள்ளன. மொழி பெயர்ப்புப் பணியில் ஈடுபட்டவர்கள் மொழியில் மட்டுமே யல்லாது அந்தப் பாடத் துறையிலும் தேர்ச்சி பெற்றவராக இருக்க வேண்டும்.

''அறிவியல் துறையில் தமிழ் வளர, திட்டமான முடிவுகள் சிலவற்றை மேற்கொள்ள வேண்டும். இன்றைய நிலையில், தொடர்புக்கு ஆங்கில மொழி அவசியம். ஆங்கிலத்தைப் பயிற்சி மொழியாக ஏற்காமல் அதனை ஒருதனி மொழியாகக் குழந்தைகளுக்குக் கற்பிக்க வேண்டும்.''

திரு தி.சு.அவிநாசிலிங்கம் அவர்கள் தமது உரையில் குறிப்பிட்டார்:

''தமிழ் வளர்ச்சிக் கழகம் பெரியவர்களுக்குரிய கலைக் களஞ்சியத்தையும் சிறுவர்க்குரிய கலைக் களஞ்சியத்தையும் சிறந்த முறையில் அரசின் துணையோடு உருவாக்கியது.

''இந்த முயற்சி தொடங்கப்பட்ட காலத்தில், தமிழக, ஆந்திர, கர்நாடக, கேரள அரசுகள் எல்லாம் இணைந்திருந்த கூட்டு அரசு சென்னை ராஜதானியில் ஆட்சி செய்து வந்தது.

''பல குழுக்களை உருவாக்கிக் கலைக் களஞ்சியப் பணிகள் நடைபெற்றன. அந்தக் குழுக்களில் இடம் பெற்றிருந்த வேத ரத்தினம் பிள்ளை, கல்கி, சி.ஆர். சீனிவாசன், டி.கே.சிதம்பரநாத முதலியார் போன்றோர் எல்லாம் தற்போது உயிருடன் இல்லை. அவர்களை எல்லாம் இந்த நேரத்தில் நினைவு கூர்கிறோம்.

''பெரிய காரியங்களை எல்லாம் தனியொரு மனிதர் செய்து விட முடியாது. அனைவரும் சேர்ந்துதான் செய்ய முடியும். மகத்தான காரியங்களைச் செய்வதற்கு மகத்தான முயற்சிகள் தேவை. வாழ்க்கையைத் தத்தம் செய்ய வேண்டும்.



''அறிவியல், நாட்டில் முக்கியம்தான்; தொழில் நுணுக்கம் முக்கியம்தான். ஆனால் இவற்றைவிட ஒழுக்கம் மிகவும் முக்கியம். தேச பக்தி முக்கியம். ஆன்மீகம் முக்கியம்.

''இந்தக் கலைக் களஞ்சியம் மலர்வதற்கு எத்தனையோ பேர்களின் யோசனை-தியாகம் பயன்பட்டிருக்கிறது''.

மாண்புமிகு சட்டமன்ற மேலவைத் தலைவர் சிலம்புச் செல்வர் டாக்டர் ம.பொ.சி. அவர்கள் தமது உரையில் தெரிவித்தார்:

''நாடு விடுதலை பெற்றபோது இந்தக் கலைக்களஞ்சியப் பணியை எப்படி முடிப்பது என்பது கூட அல்ல-எப்படித்தொடங்குவது என்பதே பெரும் பிரச்சினையாக இருந்தது. அது மட்டுமல்ல. இங்கே கலப்பு ராஜ்யம் இருந்த காலத்தில் இந்தப் பணியைத் திறம்படச் செய்து முடித்தார்கள் தமிழ் வளர்ச்சிக் கழகத்தார். அதிலும் அக்காலத்தில் கழகம் என்னும் சொல்லைக் கேட்ட பலர் அஞ்சி நடுங்கினர். அந்தச் சூழ்நிலையில் கழகம் என்னும் சொல்லை வெறுக்கவில்லை அவிநாசியார் அவர்கள். சங்கம் என்ற சொல்லை அவர்கள் அறிவார்கள். என்றாலும் கழகம் என்ற தமிழ்ச் சொல்லை வெறுப்பது தேசியவாதிக்கு அழகல்ல என்று அவர்கள் கருதினார்கள்.

''ஆங்கிலப் புலமை இல்லாதவர்கள் கூட கலைக் களஞ்சியத்தைப் பயன்படுத்தி வருகிறார்கள் என்பதற்கு நானே சான்றாகத் திகழ்கிறேன்.

''இந்த நூற்றாண்டில் தமிழுக்காகச் செய்யப்பட்ட பணிகளில் எல்லாம் மிகச் சிறந்த பணி இந்தக் கலைக்களஞ்சியத்தை வெளியிட்டதுதான், என்று சொல்லலாம்.''

அண்ணா பல்கலைக் கழகத் துணைவேந்தர் திரு வா.செ. குழந்தைசாமி அவர்கள் தமது உரையில் தெரிவித்ததாவது:

''கலைக் களஞ்சியப் பணி ஈடு இணையற்ற ஒரு தொண்டு.

இந்தத் தமிழ்த் தொண்டு குறித்துத் தமிழக மக்களே முழுக்கப் புரிந்து கொள்ளவில்லையோ என்று எண்ணத் தோன்றுகிறது.

''பொதுமக்கள் மட்டுமல்ல- பத்திரிகை ஆசிரியர்கள், தமிழ்த் துறையில் பணிபுரிவோர் முழுமையாக உணர்ந்திருப்பதாகத் தெரியவில்லை.

''தமிழின் வளர்ச்சி எந்தப் பாதையில் அமைய வேண்டும் என்பதற்கு அணுகுமுறைதான் கலைக் களஞ்சியம் ஆகும். இதன் மூலம் 25 ஆயிரம் புதுச் சொற்கள் தமிழுக்குக்கிடைத்துள்ளன.''

சிறந்த அறிவியல் நூல் எழுதிய டாக்டர் ஒ.சோமசுந்தரம், டாக்டர் ஜெயராம கிருஷ்ணன் ஆகியோருக்கு முதல் பரிசு ரூ. 5,000, திரு டாக்டர் கோ.அரங்கசாமிக்கு 2ஆம் பரிசு ரூபாய் 1,500, டாக்டர் ந.சுப்பு ரெட்டியாருக்கு 3ஆம் பரிசு ரூ. 1,000 வழங்கப்பட்டன.

சிறந்த அறிவியல் கட்டுரைகளுக்குரிய முதல் பரிசு ரூ. 2,000 சென்னை விவேகானந்தா கல்லூரி மாணவர் ஜே. ரவிச்சந்திரனும் இரண்டாம் பரிசு ரூ. 1000, சென்னை நேஷனல் கல்வி இயல் கல்லூரி மாணவி அ. வசந்தியும், மூன்றாம் பரிசு ரூ. 500 கொமாரப்பாளையம் அலமேலு அங்கப்பன் கல்லூரி மாணவி இரா.விஜயலட்சுமியும் பெற்றனர்.

எஸ். எஸ். சுந்தரம்



# மீனாட்சி கல்லூரியில் குடியரசுத் துணைத்தலைவர்

சென்னை மீனாட்சி பெண்கள் கல்லூரியின் 10வது ஆண்டுவிழா 22.2.1985 அன்று கல்லூரித் திடலில் நடைபெற்றது.

விழாவிற்கு வந்திருந்தோரை இக்கல்லூரி அறக்கட்டளையின் தலைவர் திரு எல்.நாராயணன் வரவேற்றார்.

மேதகு ஆளுநர் திரு எஸ்.எல். குரானா அவர்கள் தலைமை வகித்துப் பேசுகையில், ''கல்வி வளர்ச்சியில் புதிய முறைகளைப் புகுத்த வேண்டும். பெண்களுக்கும் ஆண்களுக்கும் சமவாய்ப்பு அளிக்க வேண்டும் என்றார்.

10-வது ஆண்டு விழாவைத் தொடங்கி வைத்து மேதகு குடியரசுத் துணைத்தலைவர் திரு. ஆர்.வெங்கட்ராமன் அவர்கள் பேசுகையில்:

''இங்குள்ள கல்வி முறையில் சில பாடங்களை விருப்பப் பாடமாகக் கற்பவர்கள் மற்ற சில பாடங்களையும் கட்டாயமாகப் படிக்க வேண்டும் என்ற நிலை உள்ளது. ஆனால் மேல்நாடுகளில் எந்தப்பாடத்தை வேண்டுமானாலும் விருப்பப் பாடமாகப் படிக்கலாம். விருப்பம் உள்ள பாடங்களில் படிக்கப் பல்கலைக் கழகங்கள் ஆவன செய்ய வேண்டும். அப்பொழுதுதான் மாணவர்கள் தங்களது திறமையை வெளிக்கொணர முடியும்.

''நாம் எல்லோரும் இந்தியர்கள், சகோதரர்கள், அனைவரும் சமம் என்று நமது கல்வி முறை அமைய வேண்டும். பசுமைப் புரட்சியில் இந்தியா மூன்றாவது இடத்தை வகிக்கிறதுபெங்ளூரில்' ஒரு தொழிசாலையில் அதிக அளவில் பி.எச்டி. வாங்கிய பெண்கள் இருந்தனர். மிக மகிழ்ச்சியடைந்தேன். அதே போல் நீங்களும் பி.எச்டி.பட்டங்கள் பெற வேண்டும் என்று வாழ்த்தி விடை பெறுகிறேன்'' என்றார்.

> [illegible] கல்லூரி 1975ஆம் [illegible] மாணவிகள் படிக்கும் [illegible] ஆரம்பிக்கப்பட்டது. [illegible] மாணவிகள் படிக் [illegible] வளர்ச்சியடைந் [illegible]


மாண்புமிகு கல்வி அமைச்சர் திரு செ.அரங்கநாயகம் அவர்கள் பேசுகையில்:

''நமது நாட்டில் உயர் கல்வி முறை பற்றி ஆராய்ந்து மைய அரசுக்கோ ,மாநில அரசுக்கோ ஆலோசனை கூறும் வகையில் நிறுவனம் ஏதுமில்லை. நிறுவனம் ஒன்று ஏற்பட்டால் கல்விமுறை நல்ல முறையில் அமையும்.

கல்வி முறைகள் இப்படித்தான் இருக்க வேண்டும் என்று ஆராய்ச்சி செய்து ஆராய்ச்சியாளர்கள் கொள்கை வகுக்க வேண்டும். பின்தங்கிய ஏழைக் குடும்பத்தைச் சார்ந்தவர்கட்கு இக்கல்லூரியில் இடம் கிடைக்கிறது'' என்றார்.

கல்லூரி முதல்வர் செல்வி கே. எஸ்.இலட்சுமி ஆண்டு அறிக்கை படித்தார். விழா இறுதியில் டாக்டர் ஏ.வேணுகோபால் நன்றி கூறினார்.

–அ. மருது





# நோய்த்தடுப்பு இயக்கம்

இளம் குழந்தைகளுக்கு உண்டாகும்தட்டம்மை,இளம்பிள்ளை வாதம், கக்குவான், தொண்டை அடைப்பான், இரணஜன்னி போன்ற கொடிய நோய்களில் இருந்து குழந்தைகளைக் காப்பாற்றும் முன்னோடித் திட்டம் நீலகிரி மாவட்டத்தில் துவக்கப் பட்டுள்ளது. நூறு சதவிகிதம் குழந்தைகளுக்குப் பாதுகாப்பு அளிப்பது நோக்கம்.

இந்த இயக்ககத்தின் முக்கிய அம்சம், அரசுத்துறை, அரசு சார்ந்த நிறுவனங்கள், தோட்ட அதிபர்கள் சங்கங்கள், சமூக சேவை சங்கங்கள் ஆகியவைகள் இணைந்து மேற்கொண்டுள்ள ஒரு கூட்டு முயற்சியாகும்.

இந்த இயக்ககத்தின் முதல் கட்டமாக பிப்ரவரி திங்கள் 18 ஆம் நாள் முதல் 23 ஆம் நாள் வரை நீலகிரியில் உள்ள அனைத்து நகரங்கள், கிராமங்களில் நடத்தப் பட்டது.

தட்டம்மை தடுப்பூசி மூலம் மாவட்டத்தில் 77,000 குழந்தைகளும், முத்தடுப்பு ஊசி மூலம் 38 ஆயிரம் குழந்தைகளும் பயன் பெறுவர்.

இந்த முகாமுக்காக மாவட்டம் முழுவதும் 410 முகாம் மையங்களும், 50 மருத்துவக் குழுக்களும் அமைக்கப்பட்டிருக்கின்றன.

மொத்தம் 50 டாக்டர்கள் 201 சுகாதாரப் பணியாளர்கள் 910 மற்ற துறைப் பணியாளர் ஊழியர்கள் ஈடுபட்டுள்ளனர். மேலும் 486 தொண்டர்களும் உள்ளனர்.

இந்த இயக்கத்தில் அரசுத் துறைகளான நல்வாழ்வுத்துறை மருத்துவம், சமூகநலத்துறை, ஊரக வளர்ச்சி, செய்தி-மக்கள் தொடர்புத்துறை, உள்ளாட்சித் துறை மற்றும் தனியார் சேவை நிறுவனங்கள் ஈடுபட்டுள்ளன.

ரூ.8.50 லட்சம் மதிப்புள்ள ஊசி மருந்துகளும் ரூ.1.6 லட்சம் மதிப்புள்ள மற்ற துணைக் கருவிகளும் பயன்படுத்தப்படுகின்றன.

இந்த இயக்ககம் ஒரு தொடர் இயக்கம் ஆகும். இதன் இரண்டாம் கட்டம், மூன்றாம் கட்டம் முறையே மார்ச், ஏப்ரல் ஆகிய இருதிங்கள்களில் முறையே 18ஆம் நாள் முதல் 28 ஆம் நாள் வரை தொடர்ந்து நடததப்படவுள்ளது.



இயக்ககத்தின் மூலம் நீலகிரி முழுவதும் சுமார் ஒரு லட்சம் குழந்தைகள் 5 வயது வரை உள்ளவர்கள் பயன்பெறுகிறார்கள்.

மேலும் வாய்வழி-தண்ணீர் சர்க்கரை, உப்பு ஆகியவைகளின் கரைசலைக் கொண்டு வயிற்றுப்போக்கிற்குக் கொடுக்கும் முதல் உதவியை மக்கள் அறிந்து கொள்ளச் செய்வதும் இந்த இயக்ககத்தின் குறிக்கோளாகும்.

இவ்விதமாக, குழந்தைகளுக்கு வரும் நோயினைத் தடுப்பது பெற்றோர்க்குக் குழந்தைகள் உயிருடன் இருப்பதில் நம்பிக்கை அளிப்பதுடன் ;''சிறு குடும்பம்'' என்ற குறிக்கோளினை ஏற்றுக் கொள்ள வழி வகை செய்யும் என எதிர்ப்பார்க்கப்படுகிறது.

இதன் தொடக்க விழா உதகை இராமகிருஷ்ணாபுரத்தில்18.2.85 அன்று நடைபெற்றது. விழாவிற்கு அரசு இரண்டாம் செயலர் திரு டி.வி.அந்தோணி இ.ஆ.ப., தலைமை தாங்கினார்.. மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர் எச்.வி. ஹண்டே அவர்கள் கலந்து கொண்டு தொடங்கி வைத்தார். மாவட்ட ஆட்சித் தலைவர் திரு என்.பி. குப்தா, இ.ஆ.ப., வரவேற்றுப் பேசினார்.

விழாவில் டாக்டர் இரா. ஜனார்த்தனம், எம்.எல்.சி., திரு கே. உச்சிகவுடர், எம்.எல்.ஏ., திரு கே. கல்லன், எம்.எல்.ஏ., பொதுச் சுகாதாரத் துறை இயக்குநர் டாக்டர் கல்யாணராமன், உபாசி டாக்டர் ரகமதுல்லா, சேவை நிறுவனங்களின் சார்பில் மறைதிரு அந்தோணிசாமி ஆகியோர் கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கினார்கள்.

**கிருபால்தாஸ் ஜான்**
செய்தி, மக்கள் தொடர்பு அலுவலர்,
நீலகிரி மாவட்டம்.

# உயர் விளைச்சல் உழைப்பாளர்கள்

கே.எம். இராமானுஜம்,
பி.எஸ்ஸி.(விவ)
வேளாண்மை இணை இயக்குநர்,
திருச்சி.

இன்றைய தமிழகத்தில் சராசரி நெல் மகசூல் எக்டேருக்கு 3.5 டன் மட்டுமே. அதே நேரத்தில் எக்டேருக்கு 10 டன்னுக்கு மேல் விளைவித்துச் சாதனை புரிந்த விவசாயியும் (கோவை மாவட்டம்) தமிழகத்தில்தான் இருக்கிறார். ஏன்? 20 ஆண்டுகளுக்கு முன் இந்திய நாட்டிலேயே நெல் விளைச்சல் போட்டியில் முதல் பரிசு பெற்ற விவசாயி வெள்ளியங்கிரி கவுண்டர், (தர்மபுரி மாவட்டத்தைச் சேர்ந்தவர்) இவரும் தமிழகத்தில்தான் இருந்தார். அவர் இந்தியப் பேரரசின் நெல் விளைச்சல் போட்டியில் முதல் பரிசாக ஒரு டிராக்டரைப் பெற்றார். அவர் எடுத்துக்காட்டிய விளைச்சல் எக்டேருக்கு 10 ஆயிரம் பவுண்ட் நெல். அதாவது எக்டேருக்கு 4 மெட்ரிக் டன். அவருக்குக் கிடைத்த பட்டம் 'கிருஷி பண்டிட்', பல ஆண்டுகளுக்கு முன் சிறந்த மாங்கனி உற்பத்தி செய்த ஒரு விவசாயிக்கு 'வித்யான் பண்டிட்', என்ற பட்டம் கிடைத்தது. அவரும் தமிழகத்தில்தான் இருந்தார்.

இன்னும் இதுபோலவே பயிர் உற்பத்தியில் பல சாதனைகளைப் புரிந்துவரும் பல விவசாயிகள் தமிழ்நாட்டில் இருந்து கொண்டுதான் இருக்கிறார்கள். ஆனால் இப்படிப்பட்டவர்கள் எண்ணிக்கையில் மிகச் சிலரே என்பதை எண்ணிப்பார்க்கும்போது வேதனையாக இருக்கிறது. சாதாரண விவசாயி கூட இந்த அளவுக்கு அதிக உற்பத்தியை எடுக்க முடியும்.

பொதுவாகப் பெரும்பாலான விவசாயிகள் தமிழ்நாட்டிலே அதிக விளைச்சலை எடுப்பதற்கு வாய்ப்புகள் நிறைய உள்ளன. இதுவரை எக்டேருக்கு 3.9 டன்னுக்கு மேல் மகசூல் எடுக்காத விவசாயிகள் இந்த ஆண்டு (1984) குறுவை நெல் பட்டத்தில் எக்டேருக்கு 5 டன்னுக்குக் கூடுதலாகவே எடுத்துக்காட்டியுள்ளது இதை உறுதிப்படுத்துகிறது.

## குறுவையில் குவித்த வெற்றி:

தஞ்சையிலும் திருச்சியிலும் குறுவையில் 5.4 டன் வரை சராசரி மகசூல் கிடைத்திருக்கிறது. இது முந்தைய ஆண்டு வரை இருந்த சராசரி விளைச்சலான 3.5 டன்னோடு ஒப்பிடும் போது 1.9 டன் கூடுதல் மகசூல் ஆகும். இதிலிருந்து தமிழகத்தில் நெல்விளைச்சலில் உற்பத்தித் திறனை அதிகரிக்க முடியும் என்பது தெளிவாகத் தெரிகிறதல்லவா?

இவ்வாறு உற்பத்தித் திறனைப் பல்வேறு நிலைகளில் நாம் காட்ட முடியும். ஒரு எக்டேர் நிலத்திலும் கூடுதல் விளைச்சல்; ஒரு நாளிலும் கூடுதல் விளைச்சல்; ஒரு லிட்டர் தண்ணீரிலும் கூடுதல் விளைச்சல்; ஒரு ரூபாய் செலவிலும் கூடுதல் விளைச்சல் என்ற நோக்கினில் நாம் உற்பத்தித் திறனை அதிகரிக்க முயற்சிகள் மேற்கொள்ள வேண்டும்.

நெல்லில் காட்டிய ஆர்வத்தையும், அதிக விளைச்லையும், நாம் மற்ற பயிர்களிலும் காட்ட முடியும். உலகத்தில் இன்று கொரியா, ஜப்பான், தைவான், ஆஸ்திரேலியா ஆகிய நாடுகள் நெல் உற்பத்தியில் முன்னணியில் நிற்கின்றன. எக்டேருக்கு 10 டன்னுக்கு அதிகமாகவே உற்பத்தி செய்கின்றன. இந்த நாடுகள் எல்லாம் இந்த அளவு உற்பத்தித் திறனைப் பல ஆண்டுகளுக்கு முன்னதாகவே அடைந்து விட்டன.

## ஜப்பானைப் பாரீர்!

ஜப்பான் நாட்டில் 1969ஆம் ஆண்டிலேயே எக்டேருக்கு 5 டன் விளைச்சலை ஜப்பானிய விவசாயிகள் எடுத்து விட்டார்கள். அவர்கள் அந்த அளவு விளைச்சலை எடுப்பதற்கு என்னென்ன ஆதாரங்களையும், என்னென்ன உற்பத்தி நுட்பங்களையும் கையாண்டார்கள் என்பதை நாம் இப்பொழுது ஆராய்வோம்.

ஜப்பானில் 'எக்டேருக்கு விளைச்சல்' 1878-1887 ஆண்டு வரை 1.85 டன் உற்பத்தித் திறனாக இருந்தது. 1969-லிருந்து உற்பத்தித் திறன் 5 டன்னாக உயர்ந்துள்ளது.

இந்த விளைச்சலை உற்று நோக்கும்போது நெல் விளைச்சல் படிப்படியாகக் கூடி வந்துள்ளதை நாம் காண்கிறோம். இதற்கு முக்கிய காரணங்கள் என்ன என்பதை ஆராயும்போது கீழ் குறிப்பிடுபவைகள்தான் இதற்கு முக்கிய காரணங்கள் என்பது தெரிய வருகிறது.

1. நீர்ப்பாசனத் திட்டங்களை முறையாக மேற்கொண்டு பாசன வசதிகளைப் பெருக்கி பயன்படுத்துதல். (Systematic Introduction of Irrigation System)

2. நெற்பயிரில் தகுந்த வீரிய உயர் விளைச்சல் ரகங்களை உற்பத்தி செய்தல். (Scientific Varietal Improvement)

3. இரசாயன உரங்களை உபயோகித்தல்.

4. அதிகமான அளவில் தழைச்சத்து உரத்தைப் பயன்படுத்துதல்.

5. ஒருங்கிணைந்த பயிர்ப் பாதுகாப்பு முறைகளைக் கையாளுதல் (இதில் பூச்சி நோய், களைக் கொல்லி மருந்துகளைப் பயன்படுத்துதலும் அடங்கும்.)

இவ்வாறு ஆராய்ச்சியின் துணைகொண்டு புதுப்புது உற்பத்தி நுட்பங்களைக் கண்டுபிடித்து அவைகளை நடைமுறைப் படுத்தியிருக்கிறார்கள். ஜப்பானிய விவசாயிகள் கடும் உழைப்பாளிகள்.. சிறு, சிறு துண்டுகளாக உள்ள நிலங்களிலும் இவ்வாறு சாகுபடியை மேற்கொண்டு அதிக விளைச்சலை எடுத்துக்காட்டி வரும் ஆர்வத்தை நாமும் ஏன் மேற்கொள்ளக் கூடாது?

இன்றைய நம்முடைய சராசரி நெல் விளைச்சல் எக்டேருக்கு 3.5 டன். இதனை எக்டேருக்கு 5 டன்னாக அதிகரிக்க வேண்டும் என்ற முயற்சியை நாம் இந்த ஆண்டில் மேற்கொண்டு பெருமளவு வெற்றி கண்டுள்ளோம். குறுவை நெல்லில் இதனை அடைந்து காட்டியுள்ளோம். அதனைச் சம்பா விளைச்சலிலும். நவரைப் பட்டத்திலும், கோடையிலும் விளைகின்ற நெல்லிலும் இதே அளவு விளைச்சலை எடுத்துக் காட்ட எல்லா முயற்சிகளையும் நாம் மேற்கொள்ள வேண்டும். பொதுவாக ஒவ்வொரு பயிரிலும், ஒவ்வொரு இடத்திலும், எந்த அளவுக்கு அதிகமாக உற்பத்தித் திறன் அமைய முடியும் என்பதை ஆராய்ச்சிகளும் அனுபவங்களும் நமக்கு நிரம்ப எடுத்துக்காட்டியுள்ளன.

## திறன் இருக்கிறது:

நெல்லைப் பொறுத்தவரையில் தமிழகத்தினுடைய உற்பத்தித் திறன் 5.57 டன் என்று ஆராய்ச்சியாளர்கள் கணக்கிட்டிருக்கிறார்கள். இந்திய நாட்டிலேயே மிக அதிகமாக நெல் உற்பத்தித் திறனைக் கொண்ட மாநிலம் குஜராத் மாநிலமாகும். குஜராத் மாநிலத்தில் உற்பத்தித் திறன் எக்டேருக்கு 6.91 டன் ஆகும். பஞ்சாப் மாநிலத்தில் எக்டேருக்கு 6.81 டன் ஆகும். ஹரியானா மாநிலத்தில் எக்டேருக்கு 6.60 டன். ஆந்திர மாநிலத்தில் 6.27 டன் ஆகும். கர்நாடக மாநிலத்தில் 5.68 டன் ஆகும்.

தமிழ்நாட்டில் நெல் உற்பத்தித் திறன் எக்டேருக்கு 5.57 டன். தமிழகம் ஆறாவது இடத்தில் உள்ளது. எனவே, நாம் இன்றைய நிலையில் கூட எக்டேருக்கு 5.57 டன் எடுக்கமுடியும் என்பதை ஆராய்ச்சி நமக்கு அறுதியிட்டுக் காட்டியுள்ளது. இதனை நமது விவசாயிகள் அடைய என்ன செய்ய வேண்டும்?

பொதுவாக ஒவ்வொரு பயிரிலும் அதனுடைய உற்பத்தித் திறனுக்கும், தற்போதைய விளைச்சல் அளவிற்கும் இடைவெளிகள் நிரம்ப உள்ளன. தமிழகத்தில் நெல்லைப் பொறுத்த வரையில் இந்த இடைவெளி 1.9 டன் ஆகும். இந்த இடைவெளி ஏற்படுவதற்குப் பல காரணங்கள் உண்டு. அவைகளை இப்போது ஆராய்வோம்.

உலக வங்கி இந்த ஆராய்ச்சியை மேற்கொண்டு கீழ்க்கண்ட காரணங்களே இந்த இடைவெளிக்குக் காரணம் என்று தெளிவுபடுத்தியுள்ளது. அவை;

**உற்பத்தி குறைவுக்குக் காரணங்கள் என்ன?**

1. கால நிலை மாறுபாடு
2. மாசுபடுதல் (Pollution)
3. மண் அரிப்பும், பாலை நிலத் தோற்றமும்.
4. களைகள்
5. பூச்சிகள் தடுப்பின்மை
6. மண் சுகாதாரக் குறைவு
7. நீர் நிர்வாகம் சரியில்லாமை.
8. பண்ணைக் கருவிகள் பயன்படுத்தாமை.
9. அறுவடைக்குப் பின் தொழில் நுட்பம் பேணப்படாமை.
10. எதையும் செய்து பார்ப்பதற்கு தயக்கம்
11. விவசாயத்தில் நிச்சயம் இல்லாமை.
12. இடுபொருள்களைச் சேகரிக்கும் சக்தி இல்லாமை.
13. கடன் வசதிக் குறைவு
14. தொழில் நுட்பத் தெளிவு இல்லாமை.
15. பரம்பரை, பழக்கவழக்கங்கள்.
16. எண்ணங்கள் - நம்பிக்கைகள்.
17. விற்பனை வசதிக் குறைவு.
18. வரவு செலவு சரியில்லாமை.
19. நிரூபணங்கள் இல்லாமை.

## இலக்கினை அடைவோம்:

இந்தக் காரணங்களை அந்தந்த இடத்திற்கேற்ப அலசிப்பார்த்து எந்த இடத்தில் எது, விளைச்சல் குறைவிற்கும், இடைவெளிக்கும் காரணமாகிறது என்பதை நாம் கண்டுபிடிப்பதில் கவனம் செலுத்த வேண்டும். அவ்வாறு கண்டுபிடித்து நிச்சயித்த பின் அதனைக் களைவதற்கான காரியங்களை மேற்கொள்ள வேண்டும்.

'முயற்சித்தால் எதுவும் முடியாதது இல்லை'. நாமும் ஜப்பானைப்போல், தைவானைப் போல், கொரியாவைப்போல், ஆஸ்திரேலியாவைப்போல் நெல் விளைச்சலில் எக்டேருக்கு 5 டன்னுக்கு மேலும் எடுக்கும் காலம் வந்துவிட்டது. அது முடியும் என்பதை வெற்றிகரமாகச் செய்து காட்டிவரும் பல விவசாயிகள் தமிழகத்தில் இருக்கிறார்கள். அவர்கள் முன்னோடிகள். அவர்களைத் தொடர்ந்து மற்றவர்களும் எல்லா நெல் சாகுபடியிலும் எக்டேருக்கு 5 டன்னுக்கு மேல் நெல் விளைச்சல் கண்டிட வேண்டும். இதுவே இப்புத்தாண்டில் நாம் ஏற்கும் இலக்கு. இலக்கு தெளிவாகத் தெரிகிறது. விரிவாக்கப்பணி என்ற வில்லில் உற்பத்தி நுட்பங்கள் என்ற அம்பை ஏற்றி இலக்கினை நோக்கி எய்து, 5 டன் என்ற வெற்றிக்கனி பறிப்போம்.



அறிவியல் சாளரம்:



# கேள்வியும் பதிலும்

**கே. சிலருக்கு சோகை பிடித்திருக்கிறது என்று சொல்கிறார்களே. அப்படி என்றால் என்ன?**

ப. உடலில் குருதி அளவு குறைவாக இருக்கும் போது உடல் வெளிறி காணப்படும். அவர்கள் சோர்ந்து, வலிவு இழந்து, நடை தளர்ந்து, உடல் மெலிந்து காணப்படுவார்கள். இந்த குருதி குறைவான நிலையைத் தான் anaemic என்று ஆங்கிலத்திலும் சோகை என்று தமிழிலும் கூறுகிறார்கள்.

**கே. (Blood Pressure) இரத்த அழுத்தம், அதிகமாகவோ குறைவாகவோ உள்ளவர்களுக்கு, 'Strokes' ஏற்படாது என்கிறார்களே உண்மையா?**

ப. Blood Pressure அதிகமாக உள்ளவர்களுக்கு 'Stroke' ஏற்பட வாய்ப்பு அதிகம் உள்ளது. குறைவாக இருப்பவர்களுக்கு 'Stroke' ஏற்பட வாய்ப்பு இல்லை.

**கே. யானைக்கால் வியாதிக்கு இரவு 12 மணிக்குத்தான் பரிசோதனை செய்யவேண்டும் என்கிறார்களே ஏன்?**

ப. அப்போதுதான் காய்ச்சலைத் தோற்றுவிக்கக் கூடிய கொசு தன் செயல்பாடுகளை ஆரம்பிக்கும்.

**கே. G.T.T. அதாவது Glucose Tolerance Test-க்கும் வழக்கமான Blood Test-க்கும் உள்ள வித்தியாசம் என்ன?**

ப. வழக்கமான Blood Test என்பது, இரத்தத்தில் உள்ள ஹிமோக்ளோபின் அளவு, சிவப்பு, வெள்ளை அணுக்களின் எண்ணிக்கை, வெள்ளை அணுக்களின் சிவப்பு அணுக்களின் ''கீழிறங்கு ஆற்றல்'' முதலியவை போன்ற தகவல்களை அறியவேண்டி, பரிசோதனை செய்வதாகும். G. T. T. என்பது ஒருவருக்கு நீரிழிவு (டயாபிடீஸ்) நோய் உள்ளதா என்று அறிய வேண்டி செய்யும் பரிசோதனையாகும்.

(விடையளித்தவர் : டாக்டர் ரசராபாரதி)

**கே. மெட்டல் கட்டிங் என்பதை விளக்குக, தற்காலத்தில் இம்முறை எவ்வகையில் செயல்படுத்தப்படுகிறது என்பதையும் கூறுங்கள்?**

ப. உலோகங்களை வேண்டிய அளவுக்கு பெறுவதற்காக அவற்றை அளவு மாற்றங்கள் செய்வதற்கு

மேற்கொள்ளும் முறைகள்தான் மெட்டல் கட்டிங் ஆகும். வெட்டுதல், கடைதல், துளையிடுதல் முதலியன ஒரு சில உதாரணங்களாகும்.

மிகவும் சக்தி வாய்ந்த மெட்டல் கட்டிங் கருவிகள் பல தயாரிக்கப்பட்டுள்ளன. இவை டங்க்ஸ்டன் கார்பைட், போரான் நைட்ரைட், டைடேனியம் கார்பைட், இன்டஸ்டிரியல் வைரம் போன்ற மிகவும் கடினமான பொருட்களால் செய்யப்படுகின்றன.

**கே. Plasma cutting என்றால் என்ன?**

ப. Plasmaவில் எலெக்ட்ரான்களும், அயன்களும் சேர்ந்து இருக்கின்றன. இதன் வெப்ப நிலை 10,000 முதல் 20,000 கே. வரை இருக்கும். இந்த Plasmaவை அருவி போல் வெட்ட வேண்டிய உலோகத்தின் மீது விழ வைத்தால் அது மிக சுலபமாக 10 முதல் 15 மில்லி மீட்டர் தடிமனுள்ள துருப்பிடிக்காத எஃகு, அலுமினியம் முதலியவற்றை சரியான அளவில் வெட்டிவிடும்.

## எல்லாச் சாலைகளும் தார்ச் சாலைகளாகும்!

தமிழ்நாட்டிலுள்ள வாகனப் போக்குவரத்து மிகுந்த சாலைகள் அனைத்தையும் தார்ச் சாலைகளாக மேம்பாடு அடையச் செய்வதற்கான பெரும் திட்டத்தை வகுத்து, அதை நிறைவேற்றுவதற்கான நிதி ஆதாரங்களைத் திரட்டுவது குறித்து தலைமைச் செயலகத்தில் 20.2.85 அன்று நடைபெற்ற நாட்டுடைமையாக்கப்பட்ட பேருந்து போக்குவரத்துக் கழக நிர்வாக இயக்குநர்கள் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது.

இரண்டு ஆண்டுக் காலத்துக்குள் மாநிலத்திலுள்ள எல்லாச் சாலைகளும் தார்ச்சாலைகளாக மேம்பாடு அடையச் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று கூட்ட முடிவில் மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு. எஸ். முத்துசாமி அவர்கள் தெரிவித்தார்.

**கே. கலவைகள் தயாரிக்கையில் கார்பன், மாலிப்டினம், டங்ஸ்டன், வெனேடியம் போன்ற தனிமங்கள் சேர்க்கப்படுகின்றன. ஒரு உலோகத்தின் இயற்கை குணங்களை இந்தத் தனிமங்கள் எவ்விதம் மாற்றுகின்றன?**

ப. இத்தனிமங்கள் உலோகக் கலவையின் உள் அமைப்பையும் (Structure) அணுக்களிடையே உள்ள பிணைப்பு விசையையும் மாற்றுகின்றன. இதனால் கடினத்தன்மை அதிகரிக்கின்றது. வெப்பத் தடையும் உராய்வுத் தடையும் அதிகரிக்கின்றன. கடைசல் திறனும் அதிகரிக்கின்றது.

(விடையளித்தவர் : டாக்டர் கே. எ. பத்மனாபன்)

—நன்றி : "[illegible]"



பார்த்தோம் படித்தோம் :

# ஏங்கித் தவித்த இதயங்களுக்கு ஆறுதல்!

16.2.85 இதழில் நடுப்பக்கத்தில் வெளியான 'மக்கள் தலைவருக்கு மகத்தான வரவேற்பு!' நிகழ்ச்சிகளின் படங்களைப் பார்த்ததும், நமது முதல்வர் அவர்களை நேரில் கண்ட திருப்தி ஏற்பட்டது.

—எம்.சிவாஜிரவிச்சந்திரன்,
கடலூர்.

டாக்டர் எம்.ஜி.ஆர். மூன்றாவது முறையாக முதல்வராகப் பதவியேற்ற நிகழ்ச்சியைப் படத்துடன் வெளியிட்டு எங்களை மகிழ்வித்த தமிழரசுக்கு நன்றி.

—சேதுராமலிங்கம்,
கோவில்குளம்.

16.2.85 இதழில் காசநோயைக் கட்டுப்படுத்த முடியும்! காச நோய் பரம்பரை நோய் அல்ல. என்ற விவரத்தைத் தெளிவாகத் தெரிந்து கொண்டோம்.

—சி.சேதுராமலிங்கம்,
அம்பாசமுத்திரம்.

16.2.85 இதழில் அட்டைப் படம், எப்பொழுது காண்போம் என்று ஏங்கித் தவித்த இதயங்களுக்கு மிகவும் ஆறுதல் அளித்தது.

—என்.பட்டுசாமி,
தச்சக்காடு.

மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவரது துணைவியார் ஜானகி அம்மையார் ஆகியோர் திருவுருவப்படம் அட்டையில் கண்டேன். அருமையாக அழகாக வெளியிட்ட தமிழரசுக்கு நன்றி.

—நெல்லை சங்கரன்.
திருநெல்வேலி.

முதல்வரின் வரவேற்பினை ஒட்டிய நடுப்பக்கப் புகைப்படங்களை எங்கள் மனம் போல்வெளியிட்டமைக்கு நன்றி கலந்த பாராட்டுகள்!

—ஓ.எஸ்.குத்புதீன்,
திட்டச்சேரி.

'தாய் மனத்து முதல்வர்க்குத் தமிழகத்தின் வரவேற்பு!' கட்டுரையும், புகைப்படங்களும்,

புரட்சித்தலைவரை நேரில் பார்க்க முடியவில்லையே என்ற ஏக்கத்தைப் போக்கின.

—என்.எம்.செல்வகுமார்
நெடுவிளை.

நடுப்பக்க வண்ணப்படத் தொகுப்பு அருமை!

—தே.ம.சேகர்,வந்தவாசி

தமிழரசில் துணுக்குகள் அதிகம் இடம் பெறட்டும்.

—எம்.பி.இளங்கோ,
கவுந்தப்பாடி.

டாக்டர் கா.காளிமுத்து அவர்களின் விவசாயக் கட்டுரை எங்களுக்குப் பயனுள்ளதாய் அமைந்தது.

எம்.ஏ.அகத்தியர்,
அனகாபுத்தூர்.

'36வது குடியரசு தின விழாவில் நடைபெற்ற அனைத்து நிகழ்ச்சிகளையும் தொகுத்து, படங்களுடன் வெளியிட்டமைக்கு நன்றி.

—செந்தூர் மணியன்,
திருச்செந்தூர்.

முதல்வரின் வரவேற்பு விழாவினைக் காணாத என்மனக்குறையினைத் 'தமிழரசில்' வந்த வண்ணப் புகைப்படங்கள் போக்கிவிட்டன.

வீ.சீனிவாசன், ஆத்தூர்

தமிழக அரசின் சேவையை அறிய உதவும் ஒரே இதழ் 'தமிழரசு' தான். அறிஞர் அண்ணா பற்றிய கவிதைகள் என் உள்ளத்தைக் கொள்ளைகொண்டன.

—எஸ்.வெங்கடாசலம்,
நாட்டரசன்கோட்டை

## பழங்காலத்திலேயே அக்யூபஞ்சர் சிகிச்சை முறை

சீன நாட்டில் புகழ்பெற்று விளங்கும் அக்யூபஞ்சர் சிகிச்சை முறை இந்தியாவில் மிகப் பழங்காலத்திலேயே நடைமுறையில் இருந்து வந்திருக்கிறது.

இந்தியாவில் குண்டலினி யோக முறையில் குறிப்பிடப்படும் கருத்தை அடிப்படையாகக் கொண்டுதான் இந்த அக்யூபஞ்சர் முறை அமைக்கப்பட்டுள்ளது.

மகாபாரதத்தில் பீஷ்மர் அம்புப் படுக்கையில் 58 நாட்களுக்கு மேல் படுத்திருந்து, குறிப்பிட்ட நன்னாளில் உயிர்விட்டார் என்று சொல்லப்படுகிறதல்லவா, அவரது முதுகில், அக்யூபஞ்சருக்குரிய இரண்டு இடங்களில் அம்புகளின் அழுத்தம் ஏற்படுத்தப்பட்டதால்தான் அந்த நிலை ஏற்பட்டது. இது, அக்யூபஞ்சர் முறை இந்தியாவில் புராதன காலத்திலேயே நடைமுறையில் இருந்தது என்பதை நிலைநாட்டுவதற்கு அரணாகத் திகழ்கிறது.

சீனநாட்டின் தலைநகரான பீகிங்கில் நடைபெற்ற அக்யூபஞ்சர் குறித்த தேசிய மாநாட்டில் அனைத்துலக அக்யூபஞ்சர் பயிற்சி நிறுவனங்களின் தலைவரான டாக்டர் கே பி. சிங் இந்தக் கருத்தைத் தெரிவித்துள்ளார்.

ஆதாரம்: தமிழ்ப் பல்கலைக்கழகச் செய்தி வெளியீடு.



# காற்றாடி மூலம் மின் உற்பத்தி!

மிகப்பெரிய காற்றாடி மூலம் இரண்டு மின் உற்பத்தி மையங்களைத் தூத்துக்குடியிலும், கம்பம் பகுதியிலும் நிறுவத் திட்டமிடப்பட்டுள்ளது.

தூத்துக்குடி மையம் இந்த ஆண்டு ஜூன் மாத இறுதிக்குள் செயல்படத் தொடங்கும்.

இந்தக் காற்றாடி மூலம் மின்சார உற்பத்தி செய்வதற்கான இரண்டு திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட உள்ளன. ஏழாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் தமிழ்நாட்டில் வழக்கமான மின் உற்பத்திச் சாதனங்களுக்கு அப்பாற்பட்டு பெரிய காற்றாடி மற்றும் சூரிய வெப்பத்தின் மூலம் மின்உற்பத்தி போன்ற திட்டங்களை நடைமுறைப்படுத்துவது குறித்து ஆராயப்பட்டது. இதில் இந்தக் காற்றாடி மூலம் மின் உற்பத்தி செய்வதற்கான ஒரு மையம், நெல்லை மாவட்டம் தூத்துக்குடியில் அமைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

ஒரு கோடி ரூபாய் முதலீட்டுச் செலவில் ஐந்திலிருந்து ஏழு ஏக்கர் நிலப்பரப்பில் இந்தக் காற்றாடி மின் உற்பத்தி மையம் அமையும். இன்னொன்று மதுரை மாவட்டம் கம்பம் பகுதியில் அமைக்கக்கருதப்பட்டுள்ளது.

தூத்துக்குடியில் அமைய இருக்கும் இந்தக் காற்றாடி மின் உற்பத்தி மையம் 1985 ஜூன் மாத இறுதிக்குள் செயல்படத் தொடங்கும்.

இந்தக் காற்றாடி மின் உற்பத்தி மையத்தில் ஆறு மெகாவாட் வரை மின்சாரம் உற்பத்தி செய்யப்படும். தெருவிளக்கு எரிப்பது, ... இயக்குவது ... பயன்படும்.

இந்தக் காற்றாடி மின் உற்பத்தி மையங்களை ... இரண்டு ... நிதி ஒதுக்கம் ...

இலங்கையில் சிங்கள ... தாக்குதலுக்கு ஆளாகி கடந்த ... களில் மட்டும் ஏழாயிரம் பேர் தமிழகம் ... வந்துள்ளனர். 21.2.85 அன்று ... குடும்பங்கள் (சுமார் 900 பேர்) ... லிருந்து அகதிகளாகத் தமிழகம் ...

அகதிகளாக வருபவர்களை ... மாகக் குடியமர்த்தித் தேவையான ... களைச் செய்து கொடுப்பதற்காக மாநில ... சின் மறுவாழ்வுத்துறை ... பாடுகளைச் செய்துள்ளது. அவர்கள் தங்குவதற்கு முகாம்கள், உணவு போன்ற வசதிகள் செய்து கொடுக்கப்படுகின்றன. எதிர்காலத்தில் அவர்களுக்கு எப்படிப்பட்ட உதவி அளிக்க வேண்டும் என்பதைக் கொள்கை அளவில் தமிழக அரசும், மத்திய அரசும் கலந்து பேசி அறிவிக்கும்.

இலங்கைத் தமிழர் தலைவர் திரு அமிர்தலிங்கம் இந்த முகாம்களுக்கு நேரில் சென்று பார்வையிட்டு வந்தார். இப்போது அளிக்கப்பட்டுள்ள வசதிகள், அவசர நடவடிக்கைகள் மிகுந்த மன நிறைவை அளிப்பதாக உள்ளன என்று அவர் தெரிவித்துள்ளார்.

இந்த அகதிகள் முகாம்கள் மேம்பாடு மற்றும் விரிவாக்கப் பணிகளுக்காகக் குறிப்பிட்ட தொகையை அரசு நிதி ஒதுக்கம் செய்துள்ளது.

குடும்ப நல தேசிய திட்டத்தின் கீழ் பணியாற்றும் பல்வேறு துறைகளைச் சார்ந்த அலுவலர்களுக்கு, அவர்கள் தம் திறமைக்குத் தகுந்தவாறு எய்தும் குறியீட்டளவைக் கருத்திற்கொண்டு, பரிசு வழங்கும் திட்டம் ஒன்றினை ஏற்று அரசு ஆணை வெளியிட்டுள்ளது.

குடும்ப நலத் திட்டத்தினை முனைப்பாக நடைமுறைப்படுத்துவதில் ஈடுபடும் பணியாளர்கட்கு ஒதுக்கப்படும் இலக்கினை எட்டி, அதற்கு மேலும் செய்த அலுவலர்களை ஊக்குவிக்கும் வண்ணம் அதன்படி குடும்பநல இயக்குநரும் ஒரு திட்டத்தினை உருவாக்கி அரசிற்கு அனுப்பியுள்ளார். இதை ஏற்று அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

இத்திட்டத்திற்கு நடப்பு ஆண்டில் ஆகும் செலவு ரூ. 15 இலட்சமாகும். இத்திட்டத்தின் படி 1983-'84ல் மிகச் சிறப்பாகப் பணியாற்றியவர்களுக்கு நடப்பாண்டில் பரிசுகள் வழங்கப்படும்.

குடும்பநல மகளிர்க்கான அறுவைச் சிகிச்சைகள், தற்பொழுது ''லாப்ராஸ்கோப்'' என்னும் நவீன கருவி மூலம் செய்யப்பட்டு வருகின்றன. அரசுத் துறையில் மருத்துவர்களுக்கு இந்த நவீன அறுவைச் சிகிச்சை முறையில் பயிற்சி அளிக்கப்பட்டு வருவதுடன், அரசு மருத்துவமனைகளுக்கும் லாப்ராஸ்கோப்புகள் படிப்படியாக வழங்கப்பட்டு வருகின்றன.

அரசுத்துறையில் போதிய அளவு லாப்ராஸ்கோப்புக் கருவிகள் மற்றும் பயிற்சி பெற்ற மருத்துவர் குழுக்கள் போதிய அளவில் இல்லாததைக் கருத்தில் கொண்டு, தனியார் மருத்துவர்கள் மற்றும் இந்தியக் குடும்பநலச் சங்கத்தின் உறுப்பினர்களாக உள்ள மருத்துவர்களைக் கொண்டும் அரசு மருத்துவமனைகளில் லாப்ராஸ்கோப் அறுவைச் சிகிச்சை முகாம்கள் அவர்களின் சொந்தக் கருவியினைக் கொண்டும் நடத்தப்பட்டு வருகின்றன. இச்சேவைக்காக அவர்கள் அறுவைச்சிகிச்சை ஒன்றுக்கு ரூ.50 (உணவு, உறைவிடம் மற்றும் போக்குவரத்துச் செலவு உட்பட, ஊதிய மாகப் பெறுகிறார்கள்)

இத்திட்டம் 31.10.84 வரை நடைமுறையில் இருந்து வந்ததை மேலும் 6 மாதங்கள் அதாவது 31.?.85 வரை நீட்டித்து உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

**(2?.2.85 அன்று தலைமைச் செயலகத்தில் தலைமைச் செயலாளர் திரு. கு. சொக்கலிங்கம் இ.ஆ.ப. செய்தியாளர்களிடம் தெரிவித்த தகவல்களிலிருந்து)**

ஆசிரியரும் வெளியிடுபவரும் ... செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
... அச்சகத்தில் அச்சிடப்பட்டது.




தமிழரசு


தமிழரசு



காவல்துறை, தீயணைப்புப்படை, ஊர்க்காவல்படை, சிவில் பாதுகாப்புப்படை ஆகியவற்றில் சிறந்த சேவை செய்தவர்களுக்கான குடியரசுத் தலைவர் பதக்கங்களை, மேதகு ஆளுநர் திரு எஸ். எல். குரானா அவர்கள் 9.3.85 அன்று சென்னையில் வழங்கினார்.






# நலிந்தோர்க்கு நல்வாழ்வு அளிப்பதே நமது குறிக்கோள்

## மாண்புமிகு நிதி அமைச்சர் நாவலர் டாக்டர் இரா. நெடுஞ்செழியன்

தமிழ்நாடு நிதி அமைச்சர் மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் அவர்கள், 1985-86-ஆம் ஆண்டிற்குரிய வரவு-செலவுத் திட்டத்தைச் சட்டமன்றப் பேரவைமுன் வைத்து 1985ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 26ஆம் நாள், திருவள்ளுவர் ஆண்டு 2016, இரக்தாட்சி; பங்குனித் திங்கள் 13ஆம் நாள் அன்று ஆற்றிய உரை.

மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே

1984–85ஆம் ஆண்டிற்கான திருத்த மதிப்பீடுகளையும், 1985–86ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளையும் இந்த



அவையின் ஒப்புதலுக்கு வைக்க விழைகிறேன். தமிழ்நாட்டில் நடைபெற்று முடிந்த எட்டாவது பொதுத் தேர்தலுக்குப்பின் கூட்டப்பட்டுள்ள இந்த அவையின் முன், இந்த நிதிநிலை அறிக்கையை வைப்பதில் பெருமகிழ்வடைகிறேன். உங்கள் நல்லாதரவைப் பெறுவதில் பெருவிழைவு கொள்கிறேன்.

பொருள் அல்லவரைப் பொருளாகச் செய்யும்
பொருளல்லது இல்லை பொருள்

என்பது வள்ளுவப் பெருந்தகையாரின் வாய்மொழி. ஒரு பொருளுமில்லாமல், ஒரு பொருளாக மதிக்கத் தகாதவராய் இருப்பவரையும், மதிக்கத் தக்கவராகச் செய்யக் கூடியது பொருளே அல்லாமல், வேறு சிறப்புடைய பொருள் எதுவும் இல்லை என்று நிதியின் இன்றியமையாச் சிறப்பினைக் கூற வந்த வள்ளுவர் பெருமான் தெளிவுபடுத்திக் காட்டுகிறார். அதற்கேற்பத்தான் தமிழக அரசு, பொதுவாக வசதி வாய்ப்பற்று விளங்கும் நாட்டினரனைவர்க்கும், குறிப்பாக ஏழ்மையிலும், வறுமையிலும் உழலும் நலிந்தோர்க்கும் நல்வாழ்வு அளிக்கும் நோக்குடன் தொடர்ந்து நற்பணிகள் பலவற்றையும் ஆற்றி வருகிறது.

2. தமிழக அரசின் நிதி நிலையை விளக்கிக் காட்டுவதற்குமுன், இந்தியப் பெருநாட்டின் நிலைமையையும், அதற்கு உள்ளடங்கிக் காணப்படும் தமிழ்நாட்டின் நிலைமையையும் உணர்த்த வேண்டியது


தமிழரசு
திருவள்ளுவர் ஆண்டு 2016
ரக்தாக்ஷி - பங்குனி 19
மலர் : 15 இதழ் : 19
1-4-1985


என் கடமை என்று கருதுகிறேன். இந்தியா முழுவதையும் பாதிக்கின்ற பிரச்சினைகள் பலவும், தமிழ் நாட்டையும் பெருமளவுக்குப் பாதிப்பனவாக இருந்து வருகின்றன. பொருளாதாரப் பற்றாக்குறை, இன்றியமையாப் பொருள்களின் பற்றாக்குறை, பொதுமக்கள் அனைவரும் தாங்கித் தீரவேண்டிய வரி விதிப்புகள், கட்டுப்படுதலுக்கு உட்படாத விலைவாசிகளின் ஏற்றம், கட்டுக்கடங்காத மக்கள் பெருக்கம், வேலையில்லாத் திண்டாட்டம், எரிபொருள்கள், விவசாய இடுபொருள்கள்—கட்டுமானப் பொருள்கள் ஆகியவற்றின் விலை உயர்வு, இரயில்வே போக்குவரத்துக் கட்டண உயர்வு போன்றவைகள் அகில இந்தியா முழுவதிலும் எந்த அளவுக்குப் பாதிப்பை ஏற்படுத்துகின்றனவோ, அந்த அளவுக்குத் தமிழ் நாட்டையும் பாதிக்கவே செய்கின்றன. இவற்றையெல்லாம் சமாளிக்க வேண்டிய பொறுப்பும், வளர்ச்சித் திட்டங்கள், நல்வாழ்வுத் திட்டங்கள், நிவாரணப் பணிகள், ஏழ்மைக் கோட்டிற்குக் கீழே கிடந்து உழல்பவர்களுக்கு உதவி செய்து அவர்களை உயர்த்திவிடும் செயல்கள் போன்றவற்றை நிறைவேற்றி வைக்க வேண்டிய பொறுப்பும் மாநில அரசின் கடமைகளாக அமைந்திருக்கின்றன. மக்களோடு நேரடித் தொடர்பு கொண்டு, அவர்களுக்கு எல்லா வகைகளிலும் நல்வாழ்வு அளிக்க வேண்டிய பெரும் பொறுப்புக்கள் மாநில அரசிடம் அமைந்திருந்த போதிலும், அந்தப் பொறுப்புக்களைச் சிறப்பாகவும், செம்மையாகவும், ஊக்கத்தோடும், உறுதியோடும், நிறைவேற்றுவதற்கான பொருளாதார வசதிகளும், அவற்றைப் பெறுவதற்கான வாய்ப்புக் கூறுகளும், அதற்கான அதிகார அளவுகளும், உரிமை நிலைகளும் மிக மிகக் குறைவாகவே மாநில அரசிடம் அமைந்திருக்கின்றன. வாழ்க்கைக்குத் தேவைப்படும் இன்றியமையாத வசதிகளையும், வாய்ப்புகளையும் எல்லாத் துறைகளிலும் பெருக்கிக் கொள்ள வேண்டும் என்ற எண்ணங்கள் எல்லோரிடத்திலும் பரவலாக விரிவடைந்து நிற்கின்றன.

**3.** இன்றைய இந்தியக் கூட்டாட்சி அமைப்பு முறையில், மாநிலங்களின் அதிகாரங்களும், உரிமைகளும், நிதி ஆதாரங்களும் மிகவும் கட்டுப்படுத்தப் பட்டிருப்பதால், மாநில அரசுகள் மத்திய அரசின் உதவிகளைப் பெருமளவிற்கு அவ்வப்போது எதிர் பார்க்க வேண்டிய அவசிய நிலை ஏற்படுகிறது. எனவேதான், மாநிலங்கள் தாங்கள் வருவாய் ஈட்டும் வழிகளையும், வளங்களையும் பெறும் வகைகளையும் பெருக்கிக் கொள்ளும் சூழ்நிலைகளை அடைய தேவையான தன்னாட்சி உரிமைகளும், அதிகாரங்களும், நிதிப் பங்கீடுகளும் மாநிலங்களுக்கு விரைவில் அளிக்கப்பட வேண்டும் என்பதை அடிக்கடி வலியுறுத்தி வருகிறோம். இந்தியாவின் உண்மையான—வலிவான கூட்டாட்சி அமைப்புக்கு ஊறு நேரிடாமல் இந்தியாவின் ஒருமைப்பாட்டுத் தன்மைக்கு உடன்பட்டதான மாநிலத் தன்னாட்சி அமைப்புகள் ஏற்பட வேண்டும் என்ற கொள்கையைத் தான் இந்த அரசு அடிக்கடி வலியுறுத்தி வருகிறது.

**4.** அரசமைப்புத் தத்துவப் பேராசிரியரான வியர் அவர்கள், " மத்திய அரசும், மற்ற மாநில அரசுகள் ஒவ்வொன்றும் தனது சொந்தப் பொறுப்பின் கீழ்த் தனிப்பட்ட அலுவல்களை ஏற்று நிறைவேற்றுவதற்குப் போதிய நிதி வாயில்களைக் கொண்டிருத்தல் வேண்டும் " என்று தெளிவுபடுத்தியுள்ளார்.

**5.** கூட்டாட்சி—மாநிலத் தன்னாட்சித் தன்மைகளைத் தெளிவுபடுத்திய பேரறிஞர் அண்ணா அவர்கள், " மாநிலங்கள் நகராட்சி மன்றங்களைப் போல் ஆண்டுக்கு ஆண்டு விரைந்து மாற்றப்பட்டு வருகின்றன. மாநிலங்கள் இருக்கும் இடம்






தெரியாமல் ஆதிக்கம், அதிகாரம், நிதி ஆதாரம் ஆகியவற்றில் பின்னணிக்கு தள்ளப்பட்டு வருகின்றன. மாநிலத் தன்னாட்சி முறைக்குத் தேவைப்படுகின்ற அதிகாரங்கள் அனைத்தும் தரப்பட வேண்டும் என்ற இயற்கை உணர்வுகள் மாநிலங்களிடையே தோன்றியுள்ளன. நமது அரசமைப்புச் சட்டம் மெய்யான கூட்டாட்சித் தத்துவத்தின் அடிப்படையில் மறு ஆய்வு செய்யப்பட வேண்டும். இந்தியாவில் உண்மையான கூட்டாட்சி மலர்வதற்கு வழிவகைகள் விரைவில் முழுமையாகச் செய்திடல் வேண்டும் " என்று சுட்டிக் காட்டியுள்ளார்கள்.

**6.** உடலுறுப்புகள் நலமாகவும், வலிவாகவும் இருந்தால்தான், உடல் முழுநலத்தோடு திகழும். அதுபோல மாநிலங்கள் நிருவாகப் பொறுப்புக்களைச் சீராகவும், சிறப்பாகவும் நிறைவேற்றுவதற்கு ஏற்ற வகையில் நிதிவாயில்கள் அவற்றிடம் இருந்தால்தான் இந்தியா வலிவோடும், பொலிவோடும் விளங்க முடியும். இந்த எண்ணங்களையெல்லாம் நிறைவு படுத்தத்தான் இந்திய அரசமைப்புச் சட்டம் ஏற்ற முறையில் திருத்தப்பட வேண்டும் என்பதைத் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறோம்.


**7.** 1985–86ஆம் ஆண்டில் நாட்டில் பொருளாதார வளத்தைப் பெருக்கி உற்பத்தி அளவுகளை உயர்த்தி வாழ்க்கைத் தரத்தைச் சீர்படுத்தும் நிலை உருவாகும் என நாம் திண்ணமாக நம்புகிறோம். அடுத்தடுத்து இரண்டாண்டுகளாக வறட்சி நிலை ஏற்பட்டு தமிழ் நாடு கடுமையாகப் பாதிக்கப் பட்டாலும், 1984–85ஆம் ஆண்டில் பருவநிலை மாறி, வேளாண்மையும், ஏனைய பணிகளும் வளம்பெறும் நிலைமை உருவாகி வேளாண்மை உற்பத்தியிலும் தொழில் வளத்திலும் கணிசமான அளவுக்கு முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. இப்பேரவையின் நல்லாதரவுடன் தமிழ்நாட்டில் வருங்காலத்தில் வளமும் நலமும் நல்ல முறையில் பெருக வேண்டுமென்ற விருப்பத்தைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

### திட்டமிடலும் வளர்ச்சியும்

**8.** நடப்பாண்டு, ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் இறுதி ஆண்டாகும் என்பதை மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் அறிவர். ஆறாவது ஐந்தாண்டுத் திட்ட கால அளவில் இம் மாநிலம் எய்திய சாதனைகள் மனநிறைவு அளிக்கத்தக்கனவாக அமைந்துள்ளன. திட்டப் பணிகளுக்காக முதலில் ரூ. 3,150 கோடி ஒப்புதல் அளித்திருந்தாலும் முடிவாகச் சுமார் ரூ. 3,600 கோடி செலவிட நேரிடலாம். ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் வறுமையை ஒழிப்பதற்கும், மக்கள் நல்வாழ்வுத் திட்டங்களை மும்முரமாகச் செயற்படுத்துவதற்கும் சிறப்பிடம் அளிக்கப்பட்டது. ஏழாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் முந்தைய திட்டங்களின் முழுப் பயன் கிட்டும் வகையில் முயற்சிகள் மேற்கொள்ளப்படும். வளர்ச்சிப் பணியை மும்முரமாகச் செயற்படுத்தவும் சிறப்பான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். இம்மாநிலத்தின் ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்காக ரூ. 7,000 கோடி மொத்தமாகச் செலவிடக் கூடிய திட்டமொன்றை அரசு வகுத்தது. எனினும் மத்திய திட்டக் குழுவுடன் இம் மாநிலம் இதுபற்றிக் கொண்டுள்ள விவாதங்கள் இன்னும் முடியவில்லை. எனவே, ஏழாவது ஐந்தாண்டுத் திட்டம் முழு அளவில் உருப்பெறுவதற்கு இன்னும் சிறிது காலம் ஆகக்கூடும்.

**9.** திட்டப் பணிகளுக்காக ரூ. 927 கோடி ஒப்புதல் அளிக்கப்பட்டிருக்க, 1984–85ஆம் ஆண்டுத் திட்டத்திற்காக ரூ. 975 கோடி செலவு ஏற்படலாம் என்று தெரிய வருகிறது. அதாவது ஒப்புதல் அளிக்கப் பட்ட நிதி ஒதுக்கத்திற்கும் கூடுதலாக ரூ. 48 கோடி செலவு ஏற்படும். 1985–86ஆம் ஆண்டுத் திட்டம் ரூ. 1,002.61 கோடி அளவிற்கு தயாரிக்கப் பட்டிருக்க, 1985–86ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தில் ரூ. 1,102 கோடி நிதி ஒதுக்கம் செய்யப் பட்டுள்ளது. திட்டச் செலவு குறித்து மத்திய திட்டக் குழுவுடன் இறுதியான விவாதம் இன்னும் முடிவடையவில்லையென்பதையும் மத்திய திட்டக்குழு ஒப்புதல் அளிக்கும் தொகைக்கேற்ப இம் மாநிலத்தின் மொத்தத் திட்டச் செலவை மாற்றியமைக்க வேண்டியிருக்கும் என்பதையும் இங்கே குறிப்பிட வேண்டியுள்ளது. மத்திய திட்டக் குழுவுடன் இறுதி விவாதங்கள் முடிந்த பிறகு எடுக்கும் முடிவுகளையொட்டி வரவு-செலவுத் திட்ட நிதி ஒதுக்கீடுகளில் மாற்றங்களை மேற்கொள்ள வேண்டியிருக்கலாம்.

**10.** திட்டப் பணிகளை நிறைவேற்றுவதில், தமிழகத்தின் சாதனைகள், எப்பொழுதுமே அனைவரின் பாராட்டுதல்களையும் பெற்றுள்ளன. எட்டாவது நிதிக் குழு வகுத்த செயற்பாட்டுமுறை தமிழகத்திற்கு நியாயம் வழங்காத காரணத்தினால், இம் மாநிலத்தின் நிதி நிலை மிகவும் இடர்ப்பாடான தன்மைக்கு உள்ளாகக்கூடும். தொடர்ந்து பெருகிவரும் திட்டச் செலவுகளை இந்தப் பின்னணியில் பார்க்க வேண்டும். ஏழாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தின் முதல் ஆண்டாகிய 1985–86ஆம் ஆண்டுத் திட்டத்தின் தலையாய நோக்கம், முந்தைய திட்டப் பணிகளை நன்கு சீரமைத்து, அவற்றின் பயன்களைச் செவ்விய முறையில் பெறுவதற்கு முனைந்து செயற்பட வேண்டியதாகும். உணவு உற்பத்தி, வேலைவாய்ப்பு, உற்பத்தித் திறன் ஆகியவற்றில் முன்னேற்றம் காண்பதற்குத் தேசிய வளர்ச்சிக் குழுவால் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ள ஏழாவது திட்டத்தில், அடிப்படை முதலிடம் கொடுக்கப் பட்டுள்ளது. ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் முதல் ஆண்டாகிய 1985–86ஆம் ஆண்டுத் திட்டத்தில் இவையே முக்கியமான கோட்பாடுகளாக அமையும். எஞ்சிய திட்டங்களை நிறைவேற்றவும், புதிய திட்டங்களைத் தொடங்கவும் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. பொருளாதார வளம் பெருமளவிற்கு முன்னேற மின் சக்தி போன்ற முக்கியத் துறைகளுக்கு அதிக அளவு நிதி ஒதுக்கம் செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது. மக்கள் தொகையில் கணிசமான பகுதியினரை ஏழ்மைக்



கோட்டிற்கு மேலே கொண்டு வரும் நோக்கத்துடன் வறுமை ஒழிப்புத் திட்டங்களுக்கு, அதிக அளவுக்குச் சிறப்பிடம் அளிக்கப்பட்டுள்ளது.

**11.** இருபது அம்சத் திட்டங்களை வெற்றிகரமாக நிறைவேற்ற தமிழ்நாடு மிகவும் முக்கியத்துவம் கொடுத்து வந்துள்ளது. 20 அம்சத் திட்டங்களை நிறைவேற்றும் பணியில் தமிழ்நாடு தலை சிறந்த சாதனையை எய்துள்ளதென்று 1982–83ஆம் ஆண்டிலேயே அறிவிக்கப்பட்டது. முந்தைய ஆண்டுகளில் வரலாறு காணாத கடும் வறட்சி நிலவிய போதிலும், 1983–84ஆம் ஆண்டிலும், இம் மாநிலத்தில் 20 அம்சத் திட்டங்கள் 80 முதல் 90 வரையிலான விழுக்காடு நிறைவேற்றப்பட்டுள்ளன என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். நடப்பாண்டிலும் அனைத்திந்திய நிலையில், 20 அம்சத் திட்டங்களை நிறைவேற்றும் பணியில், தமிழகம் முதலிடம் பெற, நிருவாக அமைப்பு முடுக்கிவிடப்பட்டுள்ளது. உணவு தானிய உற்பத்தி, எண்ணெய் வித்துக்கள் உற்பத்தி, கிராம வளர்ச்சி ஒருங்கிணைந்த திட்டம், கிராம வேலை வாய்ப்பு தேசிய திட்டம், கிராமப்புற நிலமற்றோர் வேலை வாய்ப்புறுதித் திட்டம், உபரி நிலங்களை நிலமற்றோருக்கு வழங்குதல், கொத்தடிமை ஒழிப்பு, ஆதிதிராவிடர்கள், பழங்குடி மக்கள் நலன், குடிநீர் வழங்கல், வீட்டு மனைகள் வழங்கல், குடிசைவாழ் மக்களுக்கு வசதிகள் செய்து கொடுத்தல், பொருளாதார நிலையில் நலிந்தோருக்கு வீட்டு வசதி அளித்தல், விசையேற்றங்களுக்கு மின் இணைப்பு கொடுத்தல், மரங்கள் நடுதல், கரிம வாயு உற்பத்தி மையங்களை உருவாக்குதல், கருத்தடை, தொடக்கச் சுகாதார நிலையங்கள், துணை நிலையங்கள் ஏற்படுத்தல், 6–14 வயது தொகுதியில் உள்ள சிறார்களுக்கு கல்வி வசதி அளித்தல், முதியோர் கல்வி, சிறு தொழில்கள் தொடங்குதல் போன்ற திட்டங்களில் 1985 ஜனவரி முடிய, தமிழ்நாடு 75 விழுக்காட்டிற்கும் மேல் வெற்றி கண்டுள்ளது என்பது பெருமிதத்திற்குரியதாகும்.

**12.** தமிழ் நாட்டில், புதிய, புதுப்பிக்கத்தக்க எரிசக்தி வாயில்களை மேம்படுத்தவும், அது குறித்து பிரச்சாரம் செய்யவும், அரசு, அண்மையில் தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு அமைப்பு ஒன்றை ஏற்படுத்தியுள்ளது. 1985–86ஆம் ஆண்டிற்கு தொழில்களுக்குத் தேவைப்படக் கூடிய வெப்பச் சக்தியைப் பெற, சூரிய சக்தியைப் பயன்படுத்தலாம் என்பதைப் பிரச்சாரம் செய்ய வேண்டுமென்ற நோக்கத்துடன் சூரிய வெப்ப சக்தி பயன்பாட்டு நடவடிக்கைகளுக்கு ரூ. 95 இலட்சம் செலவிட உத்தேசிக்கப்பட்டுள்ளது. எரிசக்திவாயில்கள் குறித்த பழைய, புதிய முறைகளைக் கலந்து அதன்மூலம் கிராமப் பகுதிகளில் தேவைப்படும் எரிசக்தித் தேவைகளை ஈடு செய்வதை நோக்கமாகக் கொண்ட கிராமப்புற எரிசக்தி ஒருங்கிணைந்த திட்டம், தற்போது தெரிந்தெடுக்கப்பட்ட ஐந்து வளர்ச்சி வட்டாரங்களில் செயற்படுத்தப்பட்டு வருகிறது. இதற்காக ஒவ்வொரு வட்டாரத்திற்கும் ரூ. 12.5 இலட்சம் நிதிஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. 1985–86ஆம் ஆண்டில் ஏற்கனவே செயற்படுத்தப்பட்டு வரும் ஐந்து வட்டாரங்களில் இத் திட்டத்தைத் தீவிரப் படுத்தவும் மேலும் 12 வளர்ச்சி வட்டாரங்களுக்கு இத் திட்டத்தை நீட்டிக்கவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

### மறுவாழ்வுத் திட்டங்கள்

**13.** இலங்கையில் இனக் கலவரம் ஏற்பட்டுள்ளது குறித்து அரசு மிகுந்த கவலையும், துயரமும் கொண்டுள்ளது. 5–2–1985 முதல் இலங்கையிலிருந்து அதிக அளவில் அகதிகள் வந்துள்ளனர். இவர்களுக்கு மண்டபம், கோட்டபட்டு மற்றும் பல்வேறு இடங்களில் உள்ள இடைத் தங்கல் முகாம்களில் இடவசதி செய்து கொடுக்கப்பட்டுள்ளது. அவர்கள் வந்தவுடன் [illegible],

உணவு, மலிவு விலையில் அரிசி, உடைகள், சமையல் பாத்திரங்கள், தங்குமிடம் ஆகியவை அளிக்கப்படுகின்றன. மத்திய அரசு தலையிட்டு இலங்கையில் உள்ள தமிழ் மக்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகளை நிறுத்த முன்வரும் என்று மாநில அரசு நம்புகிறது. இலங்கையிலிருந்து தாயகம் திரும்பியோருக்கு அனைத்து வசதிகளைச் செய்து கொடுக்கும் வகையில் அவசியமான நடவடிக்கைகள் அனைத்தையும் அரசு எடுத்து வருகிறது. இலங்கையிலிருந்து தாயகம் திரும்பியோருக்கு 1977ஆம் ஆண்டு முதல் 1984ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் வரை அரசு ரூ. 40 கோடிக்கு மேல் கடனாகவும் மானியமாகவும் வழங்கியுள்ளது. நடப்பு ஆண்டில் மட்டுமே, 10–3–1985வரை இலங்கை அகதிகளுக்கு ரூ. 66 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. இலங்கை வாழ் தமிழர்களின் பிரச்சினைக்கு விரைவில் நன்முறையில் தீர்வு காண மாநில அரசு, மத்திய அரசை வற்புறுத்துவதன் மூலம் இயன்ற நடவடிக்கைகள் அனைத்தையும் எடுத்து வருகிறது.

### வேளாண்மை


**14.** வேளாண்மை நம் பொருளாதாரத்தின் அடித்தளமாகத் தொடர்ந்து திகழ்கிறது. 1984–85ம் ஆண்டில் தென் மேற்குப் பருவ மழை போதுமான அளவு பெய்த போதிலும், வடகிழக்குப் பருவ மழை போதிய அளவில் இல்லை. எனினும், பல இடர்ப்பாடுகளும், பாதகமான சூழ் நிலைகளும் இருந்த போதிலும், வேளாண்மை உற்பத்தியில் குறிப்பிடத் தக்க முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. இந்த ஆண்டில் எதிர்பார்க்கப்படுகின்ற அரிசி உற்பத்தி 60 இலட்சம் மெட்ரிக் டன், சிறு தானியங்கள் 20 இலட்சம் மெட்ரிக் டன், பயறு வகைகள் 4 இலட்சம் மெட்ரிக் டன், கரும்பு 25 இலட்சம் மெட்ரிக் டன் ஆகவும் இருக்கும். 1984–85-ல் கொண்டு வரப்பட்ட, ஒரு எக்டேருக்கு 5 டன் உற்பத்தி செய்யும் திட்டத்தின்கீழ் அடைந்த சாதனை ஊக்கமளிப்பதாக உள்ளது. இம் மாநிலத்தின் பல பாகங்களில் குறுவைப் பருவத்தின் போது ஒரு எக்டேருக்கு 5 மெட்ரிக் டன் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது.

**15.** மண், நீர்வளப் பாதுகாப்பு, பாசனப் பகுதி மேம்பாட்டுத் திட்டம், நிலத்தைச் சமப்படுத்தல் முதலியவற்றைச் செயற்படுத்துவதன் மூலம், வேளாண்மை உற்பத்தியை மேம்படுத்துவதில், வேளாண்மைப் பொறியியல் முக்கிய பங்கு வகிக்கிறது. வேளாண்மைப் பொறியியல் துறை, 1985–86ஆம் ஆண்டில், 7,000 எக்டேர் நிலத்தைச் சமப்படுத்தவும், 18,800 எக்டேர் நிலத்தில் இயந்திர சாதனங்கள் உதவியுடன் பயிரிடவும், 4,850 குழாய்க் கிணறுகளையும், 2,920 வடிமுனைக் குழாய்க் கிணறுகளைத் தோண்டவும் திட்டமிடப்பட்டுள்ளது. மண்வளப் பாதுகாப்புத் திட்டம், ஆற்றுப் பள்ளத்தாக்குத் திட்டம், மேற்கு மலைத் தொடர் மேம்பாட்டுத் திட்டம் ஆகியவற்றின்கீழ் 57,850 எக்டேர் நிலங்களில் நீர், மண்வளப் பாதுகாப்புப் பணிகள் மேற்கொள்ளப்படும். பண்ணைப் பாசனப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் காவிரி, பெரியாறு, வைகை, கீழ் பவானி, சாத்தனூர் பாசனப்பகுதிகளில் 38,000 எக்டேர் நிலத்தில் வளர்ச்சிப் பணிகள் மேற்கொள்ளப்படும். கிராமப்புற நிலமற்றோர் வேலை வாய்ப்புறுதித் திட்டத்தின்கீழ் கசிவு நீர்க் குட்டைகள் கட்டும் பணி 1985–86ஆம் ஆண்டில் தொடர்ந்து செயற்படுத்தப்படும். ரூ. 10 கோடி செலவில் 500 தடை அணைகள், 1,000 கசிவு நீர்க் குட்டைகள் கட்டப்படும்.

**16.** எண்ணெய் வித்துக்களைப் பெருக்கவும் தென்னை பயிரிடப்படும் பகுதியை அதிகரிக்கவும் மாநில அரசு இடைவிடாது கவனம் செலுத்தி வருகிறது. 1984–85ஆம் ஆண்டில், 13.86 இலட்சம் மெட்ரிக் டன் அளவிற்கு எண்ணெய் வித்துக்கள் உற்பத்தி செய்யப்படுமென்று எதிர் பார்க்கப்படுகிறது. துறை வழங்கும் வேர்க்கடலை வித்துக்களைப் பயன்படுத்தி வேர்க்கடலை பயிரிடப்படும் பரப்பளவை அதிகரிக்க அரசு இடையறாது முயற்சி செய்து வருகிறது. இதேபோல, 1984–85ஆம் ஆண்டில், தென்னை பயிரிடப்படும் பரப்பளவையும் அதிகரிக்க பெருமுயற்சி எடுக்கப்பட்டு வருகிறது. அதன்படி, 1984–85ஆம் ஆண்டில், துறை 36 இலட்சம் தென்னங்கன்றுகளை உற்பத்தி செய்து வழங்கியது. தென்னை மேம்பாட்டு வாரியத்தின் உதவியுடன் நெய்வேலியில் 140 எக்டேர் பரப்பளவில் தரமான தென்னங்கன்றுகளை உற்பத்தி செய்ய, தாய் மரப்பண்ணை ஏற்படுத்தப்பட்டுள்ளது. 1985–86ஆம் ஆண்டில் திருநெல்வேலி மாவட்டத்தில் எட்டன்குளத்தில் நெட்டை மற்றும் குட்டை தென்னம்பிள்ளை நாற்றுப் பண்ணை ஏற்படுத்தவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதே போல, 1985–86ஆம் ஆண்டில், மொத்தம் ரூ. 5.43 இலட்சம் செலவில் எண்ணெய் வித்துக்களுக்காக மூல விதைப் பண்ணை ஒன்றை ஏற்படுத்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

**17.** ரூ. 1,02.44 கோடி செலவில் ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களை வலுப்படுத்துவதற்கான திட்டம், உலக வங்கியின் மதிப்பீட்டிற்காக அனுப்பப்பட்டுள்ளது. உலக வங்கியிடமிருந்தும், மத்திய அரசிடமிருந்தும் இசைவு பெற்ற பிறகு, இத்திட்டம் 1985–86ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்படும்.

**18.** கால்நடைகள் தமிழ்நாட்டு உழவர்களின் முக்கியமான சொத்தாகும். ஏனெனில் அவை, வேளாண்மைக்கு அரும்பணி ஆற்றுவதுடன் மக்களுக்குத் தேவையான புரதச்சத்து நிறைந்த பால், இறைச்சி ஆகியவற்றையும் அளிக்கின்றன. கால்நடைச் செல்வத்தைப் பெருக்குவதற்கு மேற்கொண்டுள்ள முயற்சிகள் பெரும்பாலும் முக்கியமாக மாடுகள், செம்மறியாடு, பன்றி, கோழி ஆகிய இனங்களைப் பெருக்குவதை நோக்கமாக கொண்டவையாகும். பால் உற்பத்தியைப் பெருக்கும் நோக்கத்துடன் செங்கற்பட்டு, வடஆர்க்காடு, தென் ஆர்க்காடு மாவட்டங்களில் உள்ள 125 துணை நிலையங்களில், உறைவிந்து தொழில்நுட்ப முறை மூலம் செயற்கை முறைக் கருத்தரிப்பு வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்கான திட்டம் ஒன்று ரூ. 15.26 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. 1985–86ஆம் ஆண்டில், ரூ. 13.00 இலட்சம் செலவில் மேலும் 100 நிலையங்களுக்கு இந்தத் தொழில்நுட்ப முறையை நீட்டிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. 1985–86ஆம் ஆண்டில் ரூ. 19.7 இலட்சம் மதிப்பீட்டுச் செலவில், 10 கால்நடை மருந்தகங்களை ஏற்படுத்துவதற்கான திட்டத்திற்கும் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. வரும் ஆண்டில் ரூ. 27 இலட்சம் செலவில் மேலும் ஒரு தீவிர கால்நடை வளர்ப்புத் திட்டத்தைத் தொடங்க, அனுமதி அளிப்பது என்று அரசு முடிவு செய்துள்ளது.






**19.** வேளாண்மை உற்பத்திக்காகத் தொடர்ந்து ஆராய்ச்சி செய்யவும், சிறந்த தொழில்நுட்ப முறைகளை மக்களிடையே பரப்பவும் 1984–85ஆம் ஆண்டில் மேலும் ஒரு வேளாண்மைக் கல்லூரி ஏற்படுத்த அனுமதி வழங்கப்பட்டு, தொடக்கப் பணிகள் தொடங்கப்பட்டுள்ளன.

**20.** தமிழ்நாட்டில், கால்நடை மருத்துவத் தொழில் நுட்பத்தைப் பெருக்கவும் ஆராய்ச்சிப் பணியை மேற்கொள்ளவும், கால்நடை மருத்துவக் கல்வி கற்பிக்கவும் கால்நடைத் தொழில் நுட்பவல்லுநர்களின் தேவை பெருகிவருவதைக் கருத்தில் கொண்டு, மற்றொரு கால்நடை மருத்துவக் கல்லூரி தொடங்க வேண்டுமென்பதை அரசு கொள்கையளவில் ஏற்றுக் கொண்டுள்ளது. அதன்படி, சேலம் மாவட்டம், நாமக்கல் வட்டம், லத்திவாடியில் 1985–86ஆம் கல்வி ஆண்டில் இரண்டாவது கால்நடை மருத்துவக் கல்லூரியைத் தொடங்க அரசு ஆணைகள் பிறப்பித்துள்ளது.

**21.** பால்பெருக்குத் திட்டம்—2, தமிழ் நாட்டில் இப்போது ஒன்பது மாவட்டங்களில் செயற்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தை திருச்சி, தஞ்சாவூர், புதுக்கோட்டை ஆகிய மூன்று மாவட்டங்களுக்கும் ரூ. 13·83 கோடி மதிப்பீட்டுச் செலவில் நீட்டிக்கக் கருதப்பட்டுள்ளது. இது 1–4–1985 முதல் ஐந்தாண்டுக்கால அளவில் செயற்படுத்தப்படும். ஒரு



நாளைக்கு 10,000 லிட்டர் பாலை குளிர வைக்கக் கூடிய திறன் கொண்ட ஒரு புதிய நிலையம் தஞ்சாவூர் மாவட்டத்தில் மயிலாடுதுறையில் ரூ. 19 இலட்சம் மதிப்பீட்டுச் செலவில் தொடங்க அரசு அனுமதி வழங்கியுள்ளது. இத்திட்டம் 1985 டிசம்பர் இறுதியில் முடிக்கப்பட்டுவிடும். 1985–86ஆம் ஆண்டில் செயலிழந்துள்ள சங்கங்களைப் புதுப்பித்து பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களாக மாற்ற ரூ. 4.24 இலட்சம் வழங்க அரசு உத்தேசித்துள்ளது.

### உணவு—நுகர்வோர் பாதுகாப்பு

**22.** பொதுப் பங்கீட்டு முறையை மேம்படுத்துவதற்கு அரசு அதிக முக்கியத்துவம் அளித்துள்ளது. அதன்படி 1,000-க்கும் மேலான குடும்ப அட்டைகளுக்கு உணவுப் பொருள் வழங்கும் கடைகளை இரண்டாகப் பிரிப்பதென்று அரசு முடிவு செய்துள்ளது. இதனால் 2,714 கடைகள் புதிதாகத் தொடங்கப்பட்டுள்ளன. இதனால், பொதுப் பங்கீட்டு முறை செம்மையாகச் செயற்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. வழங்கப்படும் அரிசியின் உயரளவு 20 கிலோகிராமாக அதிகரிக்கப்பட்டதால், நியாய விலைக் கடைகளில் அரிசிப் பங்கீடு ஒவ்வொரு மாதமும் 50,000 மெட்ரிக் டன்னிலிருந்து 80,000 மெட்ரிக் டன்னாக அதிகரிக்கப்பட்டுள்ளது. உற்பத்தி அதிகமாக இருப்பதால், அரசு இதுவரை எவ்விதப் பிரச்சினையுமில்லாமல் இத்தேவைகளை நிறைவேற்ற முடிகிறது. பொதுப் பங்கீட்டு முறையில், ஒரு கிலோ கிராம் ரூ. 1.75 என்ற மலிவு விலையில் மக்களுக்கு அரிசி விற்கப்படவேண்டும் என நிர்ணயம் செய்யப்பட்டுள்ளதால் இதற்கான நிருவாகச் செலவு ரூ. 90 கோடி எனக் கணக்கிடப்பட்டுள்ளது.

**23.** அரிசி ஆலைகளை நவீனமயமாக்குவதற்கு ஊக்கம் அளிக்கும் வகையில் 1985–86ஆம் ஆண்டில் ரூ. 11.25 இலட்சம் செலவில் தமிழ் நாட்டில் அரைவை இயந்திர உதவித் தொகைத் திட்டத்தைச் செயற்படுத்த அரசு முடிவு செய்துள்ளது. இறக்குமதி செய்யப்பட்ட சமையல் எண்ணெய் வகைகளைப் பாதுகாப்பாக வைப்பதற்காக அடுத்த ஆண்டில் தூத்துக்குடியில் ரூ. 15 இலட்சம் செலவில் கிடங்கு கட்டக் கருதப்பட்டுள்ளது. தஞ்சாவூர் மாவட்டத்தில் நிலையான நேரடிக் கொள்முதல் கிடங்கைப் படிப்படியாகக் கட்டுவதற்கு அரசு திட்டம் ஒன்றைத் தொடங்கியுள்ளது.

### தொழில்கள்

**24.** பொருளாதார வளர்ச்சிக்கு அடித்தளமாக அமைந்துள்ள தொழில் வளர்ச்சியில் அரசு ஆழ்ந்த கவனம் செலுத்திவருகிறது.

**25.** கூட்டுத் துறையில் ரூ. 108 கோடி திட்டச் செலவில் ஆண்டொன்றுக்கு 50,000 டன் லைனியர் ஆல்கையல் பென்ஜின் தயாரிப்பதற்கான பெருந்திட்டத்தை தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் மேற்கொண்டுள்ளது. இதனால் 300 பேருக்கு வேலை வாய்ப்புக் கிடைக்கும். 1985–86ஆம் ஆண்டில் வணிக முறையில் உற்பத்தியைத் தொடங்குமென்று எதிர்பார்க்கப்படும் மற்றொரு திட்டம், ஆண்டொன்றுக்கு 15,000 டன் நிட்ரோ கிளைசிரின் கொண்ட வெடி மருந்துகளைத் தயாரிக்கும் திட்டமாகும். இதற்கான செலவு ரூ. 20.85 கோடியாகும். இதனால் 540 பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும். 6,100 பேருக்கு வேலைவாய்ப்பு அளிக்கக்கூடிய ரூ. 2,76.82 கோடி திட்டச் செலவிலான ஏனைய 16 திட்டங்கள் நடந்தேறிவருகின்றன. சிப்காட்டின் ஆதரவின் கீழ், கும்மிடிபூண்டி, கடலூர், புதுக்கோட்டை, மானாமதுரை ஆகிய இடங்களில் 4 தொழில் வளர்ச்சி மையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. தூத்துக்குடியில் தொழில் வளர்ச்சி மையத்தை ஏற்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. சென்னை ஏற்றுமதி சார்ந்த தொழில் மண்டலத்தை ஏற்படுத்துவதற்கான அடிப்படை வசதிகளைச் செய்து கொடுக்க மாநில அரசு முனைப்பாகச் செயற்பட்டு வந்துள்ளது. 1985–86ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில், இத்திட்டத்திற்கான நிலங்களைக் கையகப்படுத்தும் பணிக்காக ரூபாய் ஒரு கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

**26.** தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனம், புதிதாகத் தொழில்களைத் தொடங்குவதற்கு மட்டுமின்றி, தற்போது செயற்பட்டுவரும் தொழில் பிரிவுகளை விரிவுபடுத்தவும், பல்திறப்படுத்தவும், நவீனமயமாக்கவும் கடன் வசதிகளை அளித்து வருகிறது. இதனால் வேலை வாய்ப்பும் பெருகும். 1984–85ஆம் ஆண்டில் மொத்தம் ரூ. 60 கோடி அளவிற்கு நிதியுதவி அளிக்கப்படக்கூடுமென்று எதிர்பார்க்கப்படுகிறது. 1985–86ஆம் ஆண்டில் சென்னை நகர்ப்பகுதி மேம்பாட்டுத் திட்டம்-II-ன்கீழ் நிதியுதவி அளிக்கும் அமைப்பாக இந்நிறுவனம் செயல்படும். இதற்காக 1985–86ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் ரூ. 2.00 கோடி நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

**27.** தமிழ்நாடு கதர்-கிராமத் தொழில் வாரியம், கதர்-கிராமத் தொழில் துறையின்கீழுள்ள அதன்

தொழிற்பிரிவுகள் மூலம், கிராமப் பகுதிகளிலுள்ள ஏழை மக்களுக்கு வேலைவாய்ப்பு நல்குகிறது. 1984–85ஆம் ஆண்டில், கதர்-கிராமத் தொழில் வாரியம், தொழில் கூட்டுறவுச் சங்கங்கள், வாரியம் நிதியுதவி செய்யும் தனிப்பட்ட கைவினைஞர்கள் ஆகியோர் விற்பனை செய்த பொருட்களின் மொத்த மதிப்பு ரூ. 94 கோடியாக இருக்கும். 1985–86ஆம் ஆண்டில் இது ரூ.107 கோடியாக உயர்த்தப்படவுள்ளது. பல்வேறு கிராமத் தொழில்களில் ஈடுபட்டுள்ள 43,951 கைவினைஞர்களுக்கு இவ்வாரியம் இதுவரை நிதியுதவி அளித்துள்ளது. 1985–86ஆம் ஆண்டில், கூடுதலாக 19,040 பேருக்கு வேலைவாய்ப்பு அளிக்கப்படும்.

**28.** வீட்டுவசதி-நகர்ப்பகுதி மேம்பாட்டு நிறுவனத்தின் நிதியுதவியுடன் நெசவாளர் கூட்டுறவுச் சங்க உறுப்பினர்களின் நலனுக்காக, நெசவாளர் வீட்டு வசதித் திட்டம் செயற்படுத்தப்பட்டு வருகிறது. ஆறாவது திட்டக் கால இறுதிக்குள் 5,000 வீடுகள் கட்டுவதென்று கருதப்பட்டுள்ளது. நியாயமான விலையில் நூல் வழங்கும்பொருட்டு ரூ. 50 இலட்சம் இறுதிச் செலவில் மூலப் பொருள் வங்கியை அமைப்பதென்று அரசு முடிவு செய்துள்ளது.

**29.** 1985–86ஆம் ஆண்டில், ரூ. 18.11 இலட்சம் செலவில் கயிறு உற்பத்தி மேம்பாட்டுத் திட்டங்களை மேற்கொள்ள அரசு உத்தேசித்துள்ளது. ரூ. 7.62 இலட்சம் செலவில் கின்னக்கோரை என்ற இடத்தில் தொழில் கூட்டுறவுத் தேயிலைத் தொழிற்சாலையை அமைக்கவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**30.** கூட்டுறவுத் துறையில் புதிய சர்க்கரை ஆலைகளை அமைப்பது பற்றி ஆளுநர் உரையில் குறிப்பிட்டப் பட்டிருந்தது. ஏழாவது திட்டக்கால அளவில், இம் மாநிலத்தில் மேலும் பத்து சர்க்கரை ஆலைகள் தொடங்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**31.** தமிழ்நாட்டில் தொழில் தொடங்குமாறு வெளிநாடுகளிலுள்ள இந்தியர்களுக்கு ஊக்கமளிக்க அரசு பல நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. இப் பணியை சிப்காட்டில் உள்ள பன்னாட்டுப் பிரிவு கவனித்து வருகிறது. வெளி நாடுகளில் உள்ள இந்திய முதலீட்டு மையங்களின் பணியும் முழுவதும் பயன்படுத்தப்படுகிறது. நியூயார்க் போன்ற முக்கியமான நகரங்களில் வசிக்கும் ஆலோசகர்களின் பணியைப் பயன்படுத்தி இம்முயற்சிகளுக்கு ஆதரவு தேடவும் கருதப்படுகிறது.

### கல்வி


**32.** கல்வி மேம்பாடு, அரசின் முக்கிய கருத்தையும் கவனத்தையும் அனைத்து நிலைகளிலும் எப்பொழுதும் போல் தொடர்ந்து பெற்று வருகிறது. கல்வி மானியத்திற்கான செலவு உயர்ந்து கொண்டே வந்துள்ளது. அது 1985–86ஆம் ஆண்டில் ரூ. 468 கோடியாக உயர்ந்துள்ளது. அனைவருக்கும் தொடக்கக் கல்வி அளிக்கும் திட்டத்தின்கீழ் இம் மாநில அரசு அடைந்துள்ள சாதனை மிகவும் போற்றத் தக்கதாகும். 5 முதல் 11 வயதுத் தொகுதியினரைப் பொறுத்த மட்டில், ஆறாவது திட்டக் காலத்தின் இறுதியில், 95 விழுக்காடு என்ற இலக்கை அனைத்திந்திய அளவில் நிர்ணயித்திருக்கையில், தமிழ் நாட்டின் சாதனை 98.66 விழுக்காடாகும். இதே போல, 11 முதல் 14 வயது தொகுதியினரைப் பொறுத்த மட்டில், அனைத்திந்திய அளவில் நிர்ணயிக்கப்பட்டுள்ள இலக்கு 50 விழுக்காடாக இருக்க, நாம் அடைந்துள்ள சாதனை 72.18 விழுக்காடாகும். 1984–85ஆம் ஆண்டில் இந்த வயதுத் தொகுதியில் 2.98 இலட்சம் பேர் கூடுதலாகப் பள்ளியில் சேர்க்கப்பட்டுள்ளனர். ஆறாவது திட்டக் காலத்தில் கூடுதலாகப் பள்ளியில் சேர்க்கப்பட்டுள்ளவர்களின் எண்ணிக்கை 13.67 இலட்சமாகும். ஒவ்வொரு மாணவரிடமும் தனிப்பட்ட கவனம் எடுத்துக் கொள்ளவும், கல்வியின் தரத்தை



உயர்த்தவும், 1985–86ஆம் ஆண்டில், கூடுதலாக 500 இடைநிலை ஆசிரியர்கள், 75 தமிழாசிரியர்கள், 50 உடற்பயிற்சி ஆசிரியர்கள், 150 பட்டதாரி ஆசிரியர்கள், 75 பட்ட மேற்படிப்பு ஆசிரியர்கள் பதவிகளை ஏற்படுத்தக் கருதப்பட்டுள்ளது.

**33.** பல உயர்நிலைப் பள்ளிகள், மேல்நிலைப் பள்ளிகள் போதிய இடவசதியின்றி இயங்கி வருகின்றன. எனவே, அவற்றிற்குக் கட்டிட வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டிய அவசியத்தை அரசு உணர்ந்துள்ளது. 1977–78 முதல் 1984–85 வரையிலான கால அளவில் அரசு உயர்நிலைப் பள்ளிகள், மேல் நிலைப் பள்ளிகள் ஆகியவற்றிற்குக் கட்டிடங்கள் கட்ட ரூ. 22 கோடிக்கு மேல் செலவிடப்பட்டுள்ளது. இதில், 640 அரசு மேல்நிலைப் பள்ளிகளில் ஒவ்வொன்றிலும் ஒரு வகுப்பறை, ஓர் ஆய்வுக்கூடம் கட்டுவதற்கு செலவிடப்பட்ட தொகை ரூ. 12 கோடியும் அடங்கும். 1985–86ஆம் ஆண்டில் கட்டிடங்கள் கட்டுவதற்கான ஒதுக்கீடு ரூ. 1 கோடியாகும். மேலும் 1985–86ஆம் ஆண்டில் இப் பள்ளிகளுக்கு அதிக அளவில் சுகாதார வசதிகளைச் செய்து கொடுப்பதற்கு ரூ. 75 இலட்சம் செலவிட அரசு அனுமதி வழங்கியுள்ளது.


**34.** பள்ளிக் கல்வியை வாழ்க்கை முறையோடு ஒன்றிய கல்வி முறையாக மாற்றுவதற்கான, புரட்சிகரமான திட்டத்தை 1985–86ஆம் ஆண்டிலிருந்து தொடங்க, தொடக்க நடவடிக்கைகள் 1984–85ஆம் ஆண்டிலேயே எடுக்கப்பட்டன. நடைமுறை



வாழ்க்கையை அடிப்படையாகக் கொண்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வலியுறுத்தி வந்துள்ள புதிய கல்வித் திட்டத்தின் அடிப்படையில், பள்ளிகளில் செயற்படுத்துவதற்கான திருத்தப்பட்ட பாட முறைகளை வல்லுநர் குழுக்கள் தயாரித்து வருகின்றன. புதிய வாழ்க்கைத் தொழில் பாட முறைகள் அறிமுகப் படுத்தப்பட்டு வருகின்றன. இத் திட்டத்திற்குப் பெருமளவில் செலவு ஏற்படும். எனவே, உலக வங்கியிடமிருந்தும் மத்திய அரசிடமிருந்தும் உதவிகள் வேண்டப்பட்டுள்ளன.

**35.** மேல்நிலைக் கல்வி அளவில், வாழ்க்கைத் தொழில் கல்வி முறையில் தமிழ்நாடு, பிற மாநிலங்களை விட தொடர்ந்து முன்னணியில் இருந்து வருகிறது. 1984–85ஆம் ஆண்டில் 3.32 இலட்சம் மேல் நிலைப் பள்ளி மாணவர்களில் (11–12ஆம் வகுப்புகள்) 61,502 (19 விழுக்காடு) பேர் வாழ்க்கைத் தொழில் கல்வியை பயின்றனர். மேல்நிலைப் பள்ளிகளில் பகுதி நேர வாழ்க்கைத் தொழில் கல்வி ஆசிரியர்களுக்கு அளிக்கப் படும் ஊதியம், 1984 ஏப்ரல் முதல் ரூ. 150லிருந்து ரூ. 300ஆக உயர்த்தப்பட்டது. 16 மேல் நிலைப் பள்ளிகளில், 1984–85ஆம் ஆண்டிலிருந்து கணக்கீட்டுப் பொறியியல் கல்வி முறை கொண்டுவரப் பட்டுள்ளது.

**36.** 1984ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 31ஆம் நாளன்று 18,305 முதியோர் கல்வி நிலையங்கள் செயற்பட்டு வந்தன. 5.50 இலட்சம் முதியோர் கல்வி பயில வேண்டும் என்ற இலக்கு 1984–85ல் வரையறுக்கப்பட்டிருக்க, இந்த நிலையங்களில் 5.85 இலட்சம் முதியோர் கல்வி பயின்று வந்தனர். இவர்களில் 5.02 இலட்சம் பேர் மகளிர், 5.85 இலட்சம் முதியோரில் 2.91 இலட்சம் பேர் ஆதி திராவிடர், பழங்குடி வகுப்பைச் சேர்ந்தவர்கள். முதியோர் கல்வி நிலையங்களில், மகளிரைச் சேர்ப்பதில் சிறந்து விளங்கும் மாநிலத்தைத்தெரிந்தெடுத்து மத்திய கல்வி அமைச்சகம் ரூ.25 இலட்சம் பரிசு வழங்குகிறது. இத்திட்டத்தின்கீழ் தமிழ்நாடு 1983–84, 1984–85 ஆகிய ஆண்டுகளில் தொடர்ந்து இப் பரிசைப் பெற்றுள்ளது. இதற்கு முன்னரேயே 1982ஆம் ஆண்டுக்கான பெருமைக்குரிய நாடேஷ்டா குருப்ஷ்சேயா லிட்டிரசி பரிசை யுனெஸ்கோ நிறுவனத்திடமிருந்து மாநில முதியோர் கல்வித் துறை பெற்றுள்ளது என்பதை ஈண்டுக் குறிப்பிடலாம். 1985–86-ல் கூடுதலாக 6 மாநில முதியோர் கல்வித் திட்டங்களைத் தொடங்க அரசு முடிவு செய்துள்ளது.



**37.** அண்மைக்கால ஆண்டுகளில் புதிய பல்கலைக் கழகங்களுக்கு அரசு தாராளமாக மானியங்களை வழங்கியுள்ளது. அதாவது, கோயம்புத்தூரில் பாரதியார் பல்கலைக் கழகம், திருச்சிராப்பள்ளியில் பாரதிதாசன் பல்கலைக் கழகம், தஞ்சாவூரில் தமிழ்ப் பல்கலைக் கழகம், கொடைக்கானலில் அன்னை தெரசா மகளிர் பல்கலைக் கழகம் ஆகியவற்றிற்குக் கட்டிடங்கள் கட்டவும் வளர்ச்சித் திட்டங்களை நிறைவேற்றவும் தாராளமாக மானியம் வழங்கியுள்ளது. பொதுக் கல்விக்காகப் பல்கலைக் கழகங்களுக்கு மானியங்கள் வழங்கும் வகையில் 1985–86 வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் மொத்தம் ரூ. 1.10 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. ஏற்கனவே அறிவிக்கப்பட்டபடி காரைக்குடியில் பல்கலைக் கழகம் ஏற்படுத்துவதற்காக சட்டம் உருவாக்கப்பட்டு அதனை நிறைவேற்றி வைக்க முயற்சி எடுக்கப்பட்டுள்ளது. ஆறாவது திட்டக் கால அளவில் மாநிலத்தில் உள்ள பல்வேறு அரசுக் கல்லூரிகளில் கூடுதலாக 65 பட்டப் படிப்பு பாடமுறைகளும், 30 பட்ட மேற்படிப்பு பாடமுறைகளும் தொடங்கப்பட்டன. 1985–86 வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் கூடுதலாகப் பட்டப் படிப்பு பாடமுறைகளைத் தொடங்க ரூ. 3 இலட்சமும், பட்ட மேற்படிப்புப் பாடமுறைகளைத் தொடங்க ரூ.3 இலட்சமும் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

**38.** தொழில் நுட்பக் கல்வி நிறுவனங்களில் சேர மாணவர்கள் அதிக அளவில் முன்வருவதாலும், மற்றொரு பக்கம் அரசு அல்லது அரசு நிதி உதவி பெறும் தொழில் நுட்பக் கல்வி நிறுவனங்களை ஏற்படுத்த அரசு நிதி ஆதாரங்கள் பற்றாக்குறையாயிருப்பதைக் கருத்தில் கொண்டும், அரசு நிதியில்லாமல், சொந்த நிதியைக் கொண்டு பல்தொழில் நுட்பப் பயிலகங்களையும், பொறியியல் கல்லூரிகளையும் ஏற்படுத்த அரசு தற்போது அனுமதி அளித்துள்ளது. எனினும், இந்த நிறுவனங்களை முறையாக நடத்துவதற்கான பாதுகாப்பு ஏற்பாடுகளையும் அரசு வரையறுத்துள்ளது. தமிழ்நாட்டில் கடந்த மூன்று ஆண்டுகளில் அரசு நிதியில்லாமல் சொந்த நிதியைக் கொண்டு 53 பல்தொழில் நுட்பப் பயிலகங்களை ஏற்படுத்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது. 1984–85-ல் இதே அடிப்படையில் 17 பொறியியல் கல்லூரிகள் ஏற்படுத்த அனுமதி வழங்கப்பட்டது.

**39.** தொழில் நுட்பக் கல்வி இயக்குநர் அலுவலகத்தின் புதிய வளர்ச்சித் திட்டங்களுக்கு, 1985–86 வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ. 20 இலட்சத்திற்கு மேல் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. சில புதிய, பட்ட, தகுதிப் பட்டய பாடமுறைகள் தொடங்குதல், கல்வி நிறுவனக் கட்டிடங்கள், மாணவர் இல்லக் கட்டிடங்கள் கட்டுதல், ஆய்வுக் கூடங்கள், பட்டறைகளைப் புதுமை மயமாக்குதல் ஆகியவை இதில் அடங்கும்.

### நகராட்சி நிருவாகம்—குடிநீர் வழங்கல்

**40.** கிராம, நகர்ப்பகுதிகளிலுள்ள மக்கள் அனைவருக்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்க அரசு உறுதி பூண்டுள்ளது. ஆறாவது ஐந்தாண்டுத் திட்ட இறுதியில் ரூ. 107.69 கோடி செலவில் குடிநீர் பற்றாக்குறையுள்ள 7,226 கிராமங்களுக்குக் குடிநீர் வழங்கப்பட்டுவிடும். ஏற்கனவே குடிநீர்ப் பற்றாக்குறை இல்லாத குடியிருப்புகளாக வகைப் படுத்தப்பட்டிருந்தவைகளும், இம் மாநிலத்தில் தொடர்ந்து நிலவிய வறட்சி காரணமாக குடிநீர் பற்றாக்குறையுள்ள குடியிருப்புகள் என்று வகைப் படுத்தப்பட்டன. மறுவகைப்படுத்தப்பட்ட இக் குடியிருப்புகளுக்குத் தன்னிறைவுத் திட்டத்தின்கீழ் அரசு குடிநீர் வழங்கியுள்ளது. ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இத்திட்டத்தின்கீழ் மொத்தம் ரூ. 89.13 கோடி செலவிடப்பட்டுள்ளது. ஏழாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் சுமார் ரூ. 250 கோடி செலவில் 10,900 குடியிருப்புகளுக்குக் குடிநீர் வழங்குவதே அரசின் நோக்கமாகும்.

**41.** 1985–86ஆம் ஆண்டில் குறைந்தளவு தேவைகள் திட்டத்திற்காக அரசு ரூ. 24 கோடி ஒதுக்கியுள்ளது. நீரில் அதிக புளோரைடு சேர்ந்து, தண்ணீரைக் குடிக்கத்தக்கதாக மாற்றுவதற்காக, ஐரோப்பிய பொருளாதாரக் குழுவின் உதவியுடன் ரூ. 15 கோடி செலவாகும் திட்டம் மேற்கொள்ளப் பட்டுள்ளது. இத்திட்டம் 2½ ஆண்டுக் காலத்தில் செயற்படுத்தப்படும். 1985–86ஆம் ஆண்டில் செலவு ரூ. 6.52 கோடி ஆக இருக்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது. இதுபோன்றே 1985–86ஆம் ஆண்டில் ரூ. 5.65 கோடி இணை மானியம் அளிப்பதன் மூலம் கிராமப் புறத்தில் குடிநீர் வழங்க ஆயுள் ஈட்டுறுத்திக் கழகத்தின் உதவியைப் பெற அரசு கருதியுள்ளது. மொத்தத்தில் 1985–86ஆம் ஆண்டில் கிராமப் பகுதியில் குடிநீர் வழங்குவதற்கான நிதி ஒதுக்கம் ரூ. 55 கோடியாக இருக்கும். ஏற்கனவே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தபடி, நீர் வாயில்கள இருக்குமிடத்தில் குழாய் இணைப்புக் கொடுக்கக் கருதப் பட்டுள்ளது.

**42.** பெரிய, நடுத்தர நகரங்கள் சிலவற்றிற்கு நீர் வழங்க உலக வங்கி உதவி செய்யும் திட்டத்தின்கீழ் 1985–86ஆம் ஆண்டில் மொத்தம் ரூ. 10 கோடி மூலதனம் எதிர்பார்க்கப்படுகிறது. சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல்-கழிவு நீரகற்றும் வாரியம் மாநில அரசின் உதவியுடன் சென்னை மாநகரில் தற்போதுள்ள குடிநீர் வசதியையும் கழிவு நீரகற்றும் வசதிகளையும் மேம்படுத்துவதற்காகப் பல திட்டங்களைச் செயற்படுத்தக் கருதியுள்ளது. மாநகரில் அதிகரித்துவரும் மக்களின் தேவைகளுக்கேற்ப, கீழ்ப்பாக்கத்திலுள்ள நீரைச் சுத்தப்படுத்தும் நிலையத்தை விரிவுபடுத்த வேண்டியதைக் கருத்தில்

கொண்டு ரூ. 470 இலட்சம் மதிப்பீட்டுச் செலவில் கூடுதலாக நாளொன்றுக்கு 90 மில்லியன் காலன் நீரைச் சுத்தப்படுத்தும் நிலையத்தைக் கட்டும் பணி இவ்வாண்டில் எடுத்துக் கொள்ளப்படும்.

**43.** 1983ஆம் ஆண்டு ஜூலை, செப்டம்பர் திங்களில் அமெரிக்க நாட்டு நிறுவனமான திருவாளர்கள் அட்மாஸ்பரிக் இன்கார்ப்பரேட்டட் நிறுவனம் மேற்கொண்ட செயற்கை மழை பெய்விப்பு நடவடிக்கைகள், ஊக்கம் அளிப்பதாய் அமைந்துள்ளன. எனவே, தொடர்ந்து இந்நடவடிக்கைகளை இம்மாநிலத்தில் மேற்கொள்ள அரசு கருதுகிறது. அமெரிக்க நாட்டு நிறுவனமான திருவாளர்கள் அட்மாஸ்பரிக் இன்கார்ப்பரேட்டட் நிறுவனத்திடமிருந்து, அரசு ரூ. 43,13,633 செலவில், மேகத்தில் மருந்து தெளிப்பதற்கான விமானத்தையும், ரேடாரையும், உதிரிப்பாகங்களையும் வாங்கியது. 1984, 1985ஆம் ஆண்டுகளில் ஒவ்வோர் ஆண்டும் ஜூலை முதல் நாள் முதல் நவம்பர் வரை 5 திங்கள் கால அளவில் செயற்கை மழை பெய்விக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ளும்போது, இந்தத் தொழில் நுட்பத்தில் இந்திய விமானப் பணியாளர்களுக்குப் பயிற்சி அளிக்கவும் அவர்கள் ஒப்புக்கொண்டுள்ளனர்.

**44.** 1984–85-ல், தன்னிறைவுத் திட்டத்தின்கீழ் IIIஆம் கட்டப் பணியாக இத்திட்டத்தைச் செயற்படுத்த 30 நகராட்சிகளுக்கு அரசு ரூ. 500 இலட்சம் வழங்கியது. 1,560 பணிகள் மேற்கொள்ளப்பட்டன. நகராட்சிகளில் தன்னிறைவுத் திட்டத்தை செயற்படுத்தி முடிக்க, 1985–86ஆம் ஆண்டில் ரூ. 5 கோடி நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது


### கிராம வளர்ச்சி

**45.** வளமான கிராமங்களே தமிழ்நாட்டின் செழிப்பிற்கு அடிப்படை என்பதை அரசு நன்கு அறியும். இதனைக் கருத்திற் கொண்டு, கிராம வளர்ச்சியை மேம்படுத்தும் பல்வேறு நடவடிக்கைகளில் அரசு முனைப்பாக ஈடுபட்டு வந்துள்ளது. கிராமப்புற நிலமற்றோர் வேலைவாய்ப்புறுதித் திட்டத்தை இணையற்ற ஊக்கத்துடன் மாநில அரசு மேற்கொண்டது. இது மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டமாகும். ஓர் ஆண்டில் 100 நாட்களுக்குக் குறையாமல் ஒரு குடும்பத்தில் குறைந்தது ஒருவருக்காவது வேலை வாய்ப்பு அளிக்க இத்திட்டம் வகை செய்கிறது. இந்த ஆண்டிற்கு இதற்கு ரூ. 44.50 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தில், ரூ. 24 கோடி செலவில் கிராம இணைப்புச் சாலைகள் அமைத்தல், ரூ. 14.33 கோடி செலவில் நில மேம்பாடு, மண்வளப் பாதுகாப்புப் பணிகளை மேற்கொள்ளுதல், ரூ. 16 கோடி செலவில் சிறுபாசனப் பணிகளை மேற்கொள்ளுதல், ரூ. 15.30 கோடி செலவில் கிராமப்புற ஏழைகளுக்கு 20,000 வீடுகள் கட்டுதல் ஆகியவை அடங்கும். 1985–86-ல் இதற்கு ரூ. 65 கோடி ஒதுக்கப்படும்.

**46.** கிராமத் தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பு வசதிகளை அளிக்கும் பொருட்டு, குறிப்பாக வேலைவாய்ப்புக் குறைவான காலங்களில் வேலை வாய்ப்பு அளிக்கும் பொருட்டு, கிராமப்புற வேலை வாய்ப்புத் தேசியத் திட்டத்தை அரசு செயற்படுத்தி வருகிறது. அதே சமயத்தில் பள்ளிக் கட்டிடங்கள், கிராமச் சாலைகள், சமுதாயக்கூடங்கள் போன்ற சமுதாயச் சொத்துக்களையும் உருவாக்குகின்றனர். 1984–85ல் முதலில் ரூ.42.6 கோடி நிதி ஒதுக்கப்பட்டது. 1984–85 திருத்த மதிப்பீட்டில் இது ரூ. 50 கோடிக்கு மேலாக அதிகரிக்கப்பட்டது. 1984-85-ல் 28–2–1985 வரை 13,518 எஞ்சிய பணிகளும் 10,883 புதிய பணிகளும் முடிக்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தின்கீழ் 2,000 பள்ளிக் கட்டிடங்கள், 5,500 சமுதாயக் கூடங்கள், 9,000 கிராம வீடுகள் கட்டப்பட்டுள்ளன. 1985–86-ல் இத்திட்டத்திற்காக ரூ. 53.48 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

**47.** கிராம வளர்ச்சி ஒருங்கிணைந்த திட்டத்தை அரசு பாராட்டத்தக்க முறையில் செயற்படுத்தியுள்ளது. மத்திய அரசு பங்குத் தொகை போக, இத்திட்டத்தின்கீழ் 1984--85-ல் ரூ. 16.28 கோடி ஒதுக்கப்பட்டது. இது 1985–86-ல் ரூ. 29.52 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது.

**48.** 1983–84-ல் ஓரளவு நிலமுள்ள சொற்ப நில உழவர்களுக்கு உதவும் பெருந்திட்டமொன்றை மத்திய அரசு செயலுக்குக் கொண்டுவந்தது. இத்திட்டத்திற்கான செலவை மத்திய அரசும் மாநில அரசும் சம அளவில் ஏற்றுக்கொள்கின்றன. இத்திட்டம் ரூ. 17 கோடி நிதி ஒதுக்கத்துடன், 1985–86ஆம் ஆண்டிலும் தொடர்ந்து மேற்கொள்ளப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.



**49.** ஊராட்சி ஒன்றியங்களில் தன்னிறைவுத் திட்டம் வெற்றிகரமாகச் செயற்பட்டது ஊக்கமளிப்பதாக இருந்ததைக் கருத்தில் கொண்டு அரசு இத்திட்டத்தினை பேரூராட்சிகளிலும் படிப்படியாக நீட்டித்துள்ளது. மூன்றாம் நிலையில் 1984–85-ல் 274 பேரூராட்சிகள் ரூ. 6.89 கோடி மதிப்புள்ள பணிகளை மேற்கொண்டுள்ளன.

### சமூக நலன்

**50.** ஆதிதிராவிடர், பிற்படுத்தப்பட்டோர், ஏனைய நலிந்த பிரிவினரின் முன்னேற்றத்திற்காக அரசு ஏற்கெனவே பல சமூக நல நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

**51.** ஆதிதிராவிடரின் பொருளாதார வளர்ச்சியையும் ஆதிதிராவிடர் காலனிகளுக்கு அடிப்படை வசதிகளையும் செய்து கொடுப்பதை முக்கிய நோக்கமாகக் கொண்டு ஆதிதிராவிடர் சிறப்பு அம்சத் திட்டம் செயற்படுத்தப்பட்டு வருகிறது. 1985–86ல் துறை பல்வேறு முயற்சிகளை மேற்கொள்வதன் மூலம் இந்த நோக்கம் நிறைவேறும். ஆதிதிராவிடர் சிறப்பு அம்சத் திட்டத்தின்கீழ் ரூ. 125.60 கோடி செலவிடப்படும். இத்துடன் மத்திய அரசிடமிருந்து ரூ. 13 கோடி சிறப்பு நிதி உதவியாகக் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. ஆதிதிராவிடர்களுக்கான பொருளாதார வளர்ச்சிக்காக இது பயன்படுத்தப்படும்.

**52.** மாநிலத்தில் பிற்படுத்தப்பட்டோரின் நிலையை அறிவார்ந்த முறையிலும், புள்ளிவிவர அடிப்படையிலும் ஆராயவும், இந்திய அரசியலமைப்பின் விதித்துறைகளின்படி அவர்களுடைய முன்னேற்றத்திற்காகக் குறிப்பிட்ட நடவடிக்கைகளைப் பரிவுரை செய்யவும் அமைக்கப்பட்ட தமிழ்நாடு இரண்டாவது பிற்படுத்தப்பட்டோர் நலக் குழு தனது அறிக்கையை அளித்துள்ளது ; அது அரசின் பரிசீலனையில் உள்ளது. 1985–86-ல் பிற்படுத்தப்பட்டோருக்காக 20 மாணவர் இல்லங்களையும், ஆதிதிராவிடர்களுக்காக 15 மாணவர் இல்லங்களையும் ரூ. 23 இலட்சம் செலவில் தொடங்க அரசு முடிவு செய்துள்ளது.

### மக்கள் நல்வாழ்வு

**53.** கி.பி. 2000ஆம் ஆண்டுக்குள் அனைவருக்கும் நல்வாழ்வு அளிப்பதென அரசு முடிவுசெய்துள்ளது. இக்கொள்கையையொட்டி விரைவான மருத்துவ உதவி அளிக்கவும் பல்வேறு நோய் தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் அரசு பல வசதிகளை அளித்துள்ளது. 1984 டிசம்பர் வரை கூடுதலாக 2,343 சுகாதாரத் துணை நிலையங்கள் ஏற்படுத்தவேண்டும் என இலக்கு நிர்ணயிக்கப்பட்டிருக்க 2,284 துணை நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கதாகும். எஞ்சியவை 1984–85 இறுதிக்குள் ஏற்படுத்தப்படும். ஏழாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் 2,978 துணை நிலையங்களை ஏற்படுத்த அரசு திட்டமிட்டுள்ளது. 1985–86ஆம் ஆண்டில் சமவெளிப் பகுதியில் 5,000 பேர்களுக்கு ஒன்று என்ற வீதத்திலும் மலைப் பகுதிகளில் 3,000 பேர்களுக்கு ஒன்று என்ற வீதத்திலும் துணைச் சுகாதார நிலையங்களை ஏற்படுத்தும் நோக்குடன் ரூ. 44.6 இலட்சம் செலவில் 20 துணை நிலையங்களை ஏற்படுத்த அரசு திட்டமிட்டுள்ளது.

**54.** கைத்தறி நெசவாளர், பீடித் தொழிலாளர்கள் பயனுக்காக சுகாதாரப் பாதுகாப்பு அடங்கல் திட்டத்திற்கு தமிழ்நாடு அரசு அனுமதி அளித்துள்ளது. இத்திட்டத்தின்கீழ் இயங்கும் சிறிய கதிரியக்கவியல் பிரிவுகளின் உதவியுடனான ஐந்து இயங்கும் மருத்துவப் பிரிவுகள் சேலம், ஈரோடு, திண்டுக்கல், தூத்துக்குடி, வேலூர் ஆகிய இடங்களிலிருந்து தொடங்கி மாநிலம் முழுவதிலும் உள்ள எல்லா இடங்களுக்கும் சென்று சிகிச்சை அளிக்கும்.

**55.** அளவான குடும்பத்தில்தான் வளமான வாழ்வு உள்ளது என்பதை மக்கள் உணர்ந்து, குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டங்களில் தாமாகவே முன்வந்து கலந்து கொண்டு பயன்பெற்றால்தான் இத்திட்டம் வெற்றிபெறும் என்பதை அரசு திண்ணமாக நம்புகிறது. இம்மாநிலத்தில் குடும்ப நலத் திட்டங்களை விரைவாகச் செயற்படுத்தும் நோக்குடன் விரிவான அளவில் பொது மக்களுக்கு குடும்ப நலம் பற்றி அறிவு புகட்டப்படுகிறது. இதற்கு வானொலி, தொலைக்காட்சி, திரைப்படம் போன்ற சாதனங்கள் பெருமளவில் பயன்படுத்தப்படுகின்றன. மேலும் குடும்ப நலத் திட்டப் பணிகளும் சாதனங்களும் அளிக்கப்படுகின்றன. 1984–85-ல் 4.75 இலட்சம் பேருக்கு கருத்தடை அறுவை சிகிச்சை செய்யவேண்டுமென இலக்கு நிர்ணயிக்கப்பட்டிருக்க, 1985 பிப்ரவரி இறுதி வரை 4,16,145 கருத்தடை அறுவை சிகிச்சைகள் செய்யப்பட்டுள்ளன. நிதி ஆண்டு இறுதிக்குள் இந்த இலக்கு எய்தப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. 1985–86-ல் ரூ. 87.94 இலட்சம் இறுதிச் செலவில் கூடுதலாகக் கருத்தடை அறுவை சிகிச்சைக்குப் பிந்திய சிகிச்சை அளிப்பதற்காக 250 படுக்கைகளுக்கு அனுமதி வழங்க அரசு திட்டமிட்டுள்ளது.


**56.** சேலத்தில் மருத்துவக் கல்லூரி ஒன்றைத் தொடங்கவும் அரசு முடிவு செய்துள்ளது. இதற்கு நிதி ஒதுக்குவதற்கான விவரங்கள் தயாரிக்கப்பட்டு வருகின்றன. விருதுநகர், சிவகங்கை அரசு மருத்துவமனைகளில் ரூ. 30 இலட்சம் செலவில் படுக்கைகளின் எண்ணிக்கையை அதிகரிக்க அரசு திட்டமிட்டுள்ளது.


### இந்தியமுறை மருத்துவம், ஹோமியோபதி

**57.** இந்திய முறை மருத்துவத்தின் மேம்பாட்டிற்கு அரசு தொடர்ந்து சிறப்பிடம் அளித்து வருகிறது. 1984–85-ல் மாநிலத்தின் 15 மாவட்டங்களில் மாவட்ட சித்த மருத்துவ அதிகாரிகளை அரசு நியமித்துள்ளது. 1985–86-ல் 4 மாவட்டங்களில் ரூ. 10 இலட்சம் செலவில் சித்த மருந்தகத்தை ஏற்படுத்த அரசு திட்டமிட்டுள்ளது. வரும் ஆண்டில் ரூ. 3 இலட்சம் செலவில் இந்திய முறை மருத்துவம் பற்றிய புத்தகங்களையும், கருவி நூல்களையும் அச்சிட்டு வெளியிடும் திட்டம் ஒன்றையும் அரசு மேற்கொண்டுள்ளது.

### வீட்டுவசதி—நகர்ப்பகுதி மேம்பாடு

**58.** அரசு, குறிப்பாக சமூகத்தில் ஏழ்மை நிலையிலுள்ள மக்களின் அடிப்படைத்தேவைகளை நிறைவேற்றுவதில் கண்ணும் கருத்துமாக உள்ளது. ஏழைமக்கள் அனைவருக்கும் வீடுகட்டித் தரவேண்டுமென்ற அரசின் கொள்கையை தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியமும், தமிழ்நாடு வீட்டுவசதி வாரியமும் நிறைவேற்றி வருகின்றன. 1984–85ஆம் ஆண்டில் குடிசைப்பகுதி மாற்றுவாரியம், அரசு அளிக்கும் மானியம் ரூ. 200 இலட்சத்தைப் பயன்படுத்தியும், வீட்டுவசதி-நகர்ப்பகுதி வளர்ச்சி நிறுவனத்திடமிருந்து ரூ. 152 இலட்சம் கடன்பெற்றும் 2,000 குடியிருப்புகளைக் கட்டும் முயற்சியை மேற்கொண்டுள்ளது. 1985–86ஆம் ஆண்டில் சென்னை மாநகரிலும், மாவட்டத் தலைமையிடங்களிலும் 1,000 குடியிருப்புகளைக் கட்ட இவ்வாரியம் கருதியுள்ளது. இது போன்றே 1985–86ஆம் ஆண்டில் விரைவுபடுத்தப்பட்ட குடிசைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் நிதியொதுக்கம் ரூ. 70 இலட்சமாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதனுடன், வீட்டுவசதி-நகர்ப்பகுதி வளர்ச்சி நிறுவனத்திடமிருந்து இணையாக நிதி உதவிபெற்று சென்னை மாநகரிலும், வெளியூர்களிலுமுள்ள 10,000 குடும்பங்களுக்கு வீடுகள் கட்டித்தரப்படும். சென்னை நகர்ப்பகுதி மேம்பாட்டுத்திட்டம்-II, ரூ. 27.80 கோடி மதிப்பீட்டுச் செலவில் 50,000 குடிசைவாழ் குடும்பங்களுக்குப் பயனளிக்கும் வகையில் 1980-81ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது. 1983-84ஆம் ஆண்டுவரை இத்திட்டத்தின்கீழ் 35,000 குடும்பங்கள் பயனடைந்தன. 1984–85ஆம் ஆண்டில் ரூ. 6 கோடி செலவில் 15,000 குடும்பங்களுக்கு வீடு கட்டித் தரக் கருதப்பட்டுள்ளது. 1985–86ஆம் ஆண்டில் மேம்பாட்டுப் பணிகளை மேற்கொள்வதன் மூலமும் வீட்டை மேம்படுத்துவதற்குக் கடன் வழங்குவதன் மூலமும் இத் திட்டத்தின்கீழ் ரூ. 5 கோடி செலவிடக் கருதப்பட்டுள்ளது.






59. சென்னை நகர்ப்பகுதி மேம்பாட்டுத் திட்டம் I-ல் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் செயற்படுத்திவரும் மனைகளும் பணிகளும் என்ற திட்டத்தின்கீழ் 1984–85 ஆம் ஆண்டில் ரூ. 1.3 கோடி செலவாகுமென்று எதிர்பார்க்கப்பட்டது. 1985–86ஆம் ஆண்டில் எஞ்சிய பணிகளை முடிப்பதற்காக ரூ. 1.20 கோடி அளிக்கப்பட்டுள்ளது. சென்னை நகர்ப்பகுதி மேம்பாட்டுத் திட்டம் IIயைச் சேர்ந்த மதுரவாயல் திட்டத்தின்கீழ் 1985–86ஆம் ஆண்டில் 2,715 வீடுகளைக் கட்டி முடிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. சென்னை நகர்பகுதி மேம்பாட்டுத் திட்டம் IIன்கீழ் பணிகளை மேற்கொள்வதற்காக 1985–86ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் ரூ. 350 இலட்சம் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

60. சென்னைப் பெருநகர்ப் பகுதியை முறையாக மேம்படுத்துவதற்காக ஏற்படுத்தப்பட்ட சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழு பெருநகர்ப் பகுதியில் திட்டமிடுதல், ஒருங்கிணைத்தல், மேம்படுத்தல் பணியில் ஈடுபட்டுள்ளது. சென்னை மாநகரில் வர்த்தக மையமான பகுதியில் நெரிசலைத் தவிர்க்க நடவடிக்கைகள் பல மேற்கொள்ளப்பட்டுள்ளன. தற்போதுள்ள கொத்தவால் சாவடியை கோயம்பேட்டுக்கு மாற்றுதல், இரும்பு, உருக்கு இரும்பு சாமான்கள் கடைகளைச் சாத்தங்காட்டுக்கு மாற்றுதல், கோயம்பேடு, மாதவரத்தில் பேருந்து, டிரக் நிலையங்களை அமைத்தல் ஆகியவை இதில் அடங்கும். சென்னை நகர்ப்பகுதி மேம்பாட்டுத் திட்டம் I, II ஆகியவற்றை ஒருங்கிணைத்தல், செயற்படுத்தல் இந்த வளர்ச்சிக் குழுவின் பொறுப்பாகும். மாநில அரசு நிதிகளிலிருந்தும், நிறுவன நிதி ஆதாரங்களிலிருந்தும் மணலி, மறைமலை நகர் ஆகிய இடங்களில் துணை நகரங்களை மேம்படுத்த சென்னை பெருநகர வளர்ச்சிக் குழு முயற்சிகளை மேற்கொண்டுள்ளது. இந்த வளர்ச்சிக் குழு செயற்படுத்தும் பல்வேறு திட்டங்களுக்கு 1985–86-ல் ரூ. 355 இலட்சம் செலவிடக் கருதப்பட்டுள்ளது.

61. சென்னை கடற்கரை-மயிலாப்பூர் லஸ் வரையிலான விரைவுப் போக்குவரத்துத் திட்டத்திற்கு மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இதன் மொத்தத் தொலைவு 8.45 கிலோ மீட்டராகும். இதற்குச் சுமாராக ரூ. 60 கோடி செலவாகும். அப்பகுதி நெடுக அரசுக்குச் சொந்தமான 62 ஏக்கர் காலி நிலத்தை ரயில்வே துறையிடம் இலவசமாக ஒப்படைக்க ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. இத் திட்டத்தை விரைவு படுத்துவதற்காகச் சென்னைப் பெரு நகர் வளர்ச்சிக் குழு உதவி தலைவர் தலைமையின்கீழ் உயர்நிலை ஒருங்கிணைப்புக் குழு ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது. முதல் கட்டப் பணி இப்போது தொடங்கப்பட்டுள்ளது.

62. கிராம வீட்டுவசதித் திட்டத்தை அரசு செயற்படுத்தி வருகிறது. 1985–86-ல் கிராமப்புற நிலமற்றோர் வேலை வாய்ப்புறுதித் திட்டம், கிராமப்புற வேலை வாய்ப்புத் தேசிய திட்டம், கிராம வீட்டுவசதித் திட்டம் ஆகியவற்றின்கீழ் கிராமப்புறத்தில் வீடுகள் கட்டித் தரப்படும். வரும் ஆண்டில் அதிக எண்ணிக்கையில் வீடுகள் கட்டப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

63. கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, சேலம் மற்றும் ஏனைய வட்டாரப் பகுதிகளில் நகர்ப்பகுதி வளர்ச்சித் திட்டத்தை ரூ. 18 கோடி செலவில் செயற்படுத்த அரசு கொள்கையளவில் ஒப்புக் கொண்டுள்ளது. இத் திட்டத்திற்கான விவரங்கள் தயாரிக்கப்பட்டு, அவற்றை நிறைவேற்ற நடவடிக்கைகள் எடுக்கப்படும். சிறிய, நடுத்தர நகரங்களுக்கான, நகர்ப்பகுதி வளர்ச்சி ஒருங்கிணைந்த திட்டத்தை அரசு தொடர்ந்து செயற்படுத்தி வருகிறது. மத்திய உதவித் திட்டம், மாநில திட்டப் பணி ஆகியவற்றின்கீழ் இத் திட்டம் செயற்படுத்தப்பட்டு வருகிறது. 1985–86-ல் இதற்கு ஒதுக்கப்பட்ட மொத்தத் தொகை ரூ. 7.10 கோடியாகும்.

### கூட்டுறவு


64. உழவர்களுக்குக் குறைந்த வட்டியில் கடன் வசதிகளை அளிக்க, அரசு செய்யும் முயற்சிகளில், கூட்டுறவுச் சங்கங்கள் முக்கியமான பங்கு வகிக்கின்றன. எனினும், உழவர்கள் அசல் தொகையை முறையாகத் திருப்பிச் செலுத்துவதைப் பொறுத்துதான் இத் திட்டத்தின் வெற்றி அமைந்துள்ளது. கடந்த காலத்தில் செலுத்தப்பட வேண்டிய பாக்கித் தொகை அதிகமாகச்சேர்ந்துவிட்டதால் கூட்டுறவுச் சங்கங்களுக்கு இடர்ப்பாடான நிலைமை ஏற்பட்டது. கூட்டுறவுக் கடன்களை உழவர்கள் திருப்பிச் செலுத்துவதில் முன்னேற்றம் ஏற்பட்டதால், வேளாண்மைக் கடன் வழங்கு பணியில், கடன் வழங்கு கூட்டுறவு சங்கங்களும் சிறந்த முன்னேற்றமடைந்துள்ளன. நடப்பாண்டில் 1985 ஜனவரி வரை பயிரிடுவதற்காக வழங்கப்பட்ட குறுகிய காலக் கடன்களும், துணைத் தொழில்களை மேற்கொள்வதற்காக வழங்கப்பட்ட நடுத்தரக் காலக் கடன்களும் ரூ. 108.20 கோடியாக அதிகரித்தது. முந்தைய ஆண்டு (1983–84) முழுவதிலும் ரூ. 88.56 கோடி தான் கடனாக வழங்கப்பட்டது. 1985–86ஆம் ஆண்டில் இக்கடன் தொகையை ரூ. 155 கோடியாக அதிகரிக்கக் கருதப்பட்டுள்ளது. வேளாண்மைக்காக 1985 ஜனவரி வரை ரூ. 10.98 கோடி நீண்ட காலக் கடன் வழங்கப்பட்டுள்ளது. 1985–86ஆம் ஆண்டில் நீண்ட காலக் கடன் ரூ. 18 கோடி வழங்கக் கருதப்படுகிறது. நகர்ப் புறக் கூட்டுறவு வங்கிகள் உட்பட கடன் வழங்கு கூட்டுறவு சங்கங்கள் நடப்பாண்டில் 1985 ஜனவரி வரை நகைகளின் பேரில் ரூ. 174.56 கோடி கடன் அளித்துள்ளன. இவற்றில் ரூ. 53.54 கோடி, கிராம வேளாண்மைப் பணிக் கூட்டுறவுச் சங்கங்களால் வழங்கப்பட்டவையாகும்.

65. குறுகிய கால, நடுத்தரக் காலக் கடன் தவணைகளை உரிய காலத்தில் திருப்பிச்செலுத்தும் உழவர்களுக்குத் தொடர்ந்து வட்டியில் 2 விழுக்காடு தள்ளுபடி அளிக்கப்படுகிறது. உழவர்களின் கடன் சுமையைக் குறைக்கும் மற்றொரு நடவடிக்கையாக 1984ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 30ஆம் நாள் நிலவரப்படி, உழவர்கள், தங்கள் பாக்கித் தொகை முழுவதையும் 1985ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 31ஆம் நாளுக்கு முன்னர் திருப்பிச் செலுத்தினால், காலங்கடந்த நிலுவைத் தொகைகள் மீதான வட்டியையும், தொடக்க நில வள வங்கிகளில் கடன் வாங்கியவர்களிடமிருந்து வசூலிக்கப்படும் தண்ட வட்டியையும் தள்ளுபடி செய்ய அரசு ஆணையிட்டுள்ளது. 1983–84ஆம் ஆண்டில் கடன் பாக்கி/காலங்கடந்த நிலுவை முழுவதையும் உழவர்கள் திருப்பிச் செலுத்தியிருந்தால், காலங்கடந்த நிலுவைத் தொகை மீது அவ்வாண்டில் வசூலிக்கப்பட்ட வட்டித் தொகையும் தண்ட வட்டித் தொகையும் திருப்பியளிக்கப்பட்டன. 1985 பிப்ரவரி 15 வரை 74,274 பேர் ரூ. 2.20 கோடி அளவுக்கு இச்சலுகையைப் பயன்படுத்திக் கொண்டுள்ளனர்.

66. ஆதி திராவிட வகுப்பைச் சேர்ந்த வேளாண்மைக் குடும்பங்களைக் கூட்டுறவு அமைப்பின் கீழ்க் கொண்டுவரும் பொருட்டு, அத்தகைய ஒவ்வொரு குடும்பத்திலுள்ள ஒருவர், கூட்டுறவுக் கடன் வழங்கு சங்கத்தில் உறுப்பினர் ஆவதற்கு அரசு ரூ. 100 உதவித் தொகை வழங்குகிறது. இதுவரை 90,000 குடும்பங்கள் கூட்டுறவு அமைப்பின்கீழ்க் கொண்டு வரப்பட்டுள்ளன. 1985–86ஆம் ஆண்டில் ரூ. 10 இலட்சம் உதவித் தொகை அளிப்பதன் மூலம் மேலும் 10,000 குடும்பங்களை இதன்கீழ்க் கொண்டு வரக் கருதப்பட்டுள்ளது. ஆதி திராவிடர்கள் கூடுதலாகக் கடன் வாங்க இயலும் வகையில் கடன் வழங்கு சங்கங்களின் உறுப்பினர்கள் ஒவ்வொருவருக்கும் ரூ. 250க்கு மேற்படாமல் வட்டியில்லாக் கடன் வழங்கக் கருதப்பட்டுள்ளது. 1985–86ஆம் ஆண்டில் இத் திட்டத்தின் கீழ் 1,000 உறுப்பினர்களுக்கு உதவியளிக்கப்படும்.

67. கூட்டுறவுச் சங்கங்கள் தொடர்ந்து உழவர்களுக்கு வேளாண் இடுபொருள்களை வழங்கிவருகின்றன. நடப்பாண்டில் 1985 ஜனவரி வரை சுமார் ரூ. 49 கோடி மதிப்புள்ள இரசாயன உரங்கள் வழங்கப்பட்டுள்ளன. 1985–86ஆம் ஆண்டில் இதனை ரூ. 70 கோடியாக அதிகரிக்கக் கருதப்படுகிறது. உழவர்களுக்கு ஊக்கம் அளிக்கும் வகையில், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்கு நெல் வழங்கிய காவிரி கழிமுகப் பகுதியிலுள்ள உழவர்களுக்கும், குறுவைப் பருவத்தின் போது வேளாண்மைத் துறைக்கு நெல்விதை வழங்கிய விதைப் பண்ணை உழவர்களுக்கும் ஒரு குவிண்டால் நெல்லுக்கு ரூ. 15 மதிப்புள்ள உரங்களை அரசு வழங்கியது. இத் திட்டத்தின்கீழ்க் கூட்டுறவுச் சங்கங்கள், 1985 ஜனவரி வரை ரூ. 7.37 கோடி மதிப்புள்ள உரங்களை வழங்கின. அரசு இந்த ஊக்கத் திட்டத்தை சம்பா பருவத்திற்கும் நீட்டித்துள்ளது.

68. கூட்டுறவுச் சங்கங்கள், குறிப்பாக, கிராமப் பகுதியில் நியாயமான விலையில் இன்றியமையா நுகர்பொருள்களை வழங்குவதில் தொடர்ந்து முக்கிய பங்கு வகிக்கின்றன. 1,000 குடும்புங்களுக்கு ஒரு நியாய விலைக் கடை இருக்கும் பொருட்டு கூட்டுறவுச் சங்கங்கள், கிராமப் பகுதிகளில் கூடுதலாகத் தொடங்கிய 1,439 கடைகள் உட்பட 2,700க்கு மேற்பட்ட கடைகளை ஏற்படுத்தியுள்ளன. கிராமக் கடைகள் 1983–84ஆம் ஆண்டில் ரூ. 1,22.82 கோடி அளவுக்கு விற்பனை செய்துள்ளன. நடப்பாண்டில் 1984 டிசம்பர் வரை ரூ. 90.15 கோடி அளவுக்கு விற்பனை செய்துள்ளன.



### மின் சக்தி

69. மின் உற்பத்தியில், தொழில் வளர்ச்சியும், வேலை வாய்ப்பும் இணைந்துள்ளன என்பதை அவையினர் நன்கு அறிவர். அதனால்தான் மாநில அரசின் ஆண்டுத் திட்டங்களில், மின் உற்பத்திக்கான நிதி ஒதுக்கீடு முக்கிய இடம் வகிக்கிறது. 1985–86ஆம் ஆண்டில், இதற்கான நிதி ஒதுக்கீட்டினை நடப்பாண்டு அளவான ரூ. 237 கோடியிலிருந்து ரூ. 326 கோடியாக உயர்த்துவதென்று கருதப்பட்டுள்ளது. இலவசமாக மின்சாரம் வழங்க சிறு உழவர்களுக்கும், குடிசைப் பகுதியில் வாழ்வோர்களுக்கும் அண்மையில் அளிக்கப்பட்ட சலுகைகள், மின்வாரியத்தின் வருவாயை மேலும் குறைத்தது. மின் வாரியம் திட்ட இலக்கை எய்த அரசு, கணிசமான அளவிற்கு உதவும். கிராமங்களுக்கு மின்வசதி செய்து கொடுக்கவும், விசையேற்றங்களுக்கு மின் இணைப்பு அளிக்கவும் அரசு பெருமுயற்சி எடுத்து வருகிறது. 1984–85ஆம் ஆண்டில் 20 கிராமங்களுக்கு மின் வசதி செய்து கொடுக்க வேண்டுமென்று இலக்கு நிர்ணயித்திருந்ததில், 1985 ஜனவரி வரை 23 கிராமங்களுக்கு மின்வசதி செய்து கொடுக்கப்பட்டது. ஆறாவது திட்டக் காலத்தில், 1983-84 வரை 95,279 விசையேற்றங்களுக்கு மின் இணைப்பு அளிக்கப்பட்டது. 1984-85ஆம் ஆண்டில் 50,000 விசையேற்றங்களுக்கு மின் இணைப்பு அளிக்க வேண்டுமென இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இந்தியாவில் உள்ள மாநிலங்களிலேயே அதிக எண்ணிக்கையில் விசையேற்றங்களுக்கு மின் இணைப்பு அளித்த மாநிலமாகத் தமிழ்நாடு முன்னணியில் இருந்து வருகிறது என்பதை மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் நினைவு கொள்ளலாம்.

70. ஆறாவது ஐந்தாண்டுத் திட்டக்காலத்தில், கூடுதலாக்கப்பட்ட மின் உற்பத்தி நிறுவுத்திறன் மாநில அரசுத் துறையில் 420 மெகாவாட்டாகவும், மத்திய அரசுத் துறையில் 235 மெகாவாட்டாகவும் இருக்கும். மேற்சொன்னவற்றுடன், 4 புனல் மின் திட்டங்கள் குறித்த பணியும், ஒரு அனல் மின் திட்டம் குறித்த பணியும் நடைபெற்று வருகின்றன. இந்த 4 புனல் மின் திட்டங்களில் சேர்வலாறு புனல் மின் திட்டம் (20 மெகாவாட்) 1985 ஜூன் திங்களில் செயற்படத் தொடங்கும். காடம்பாறை நீரேற்றுத் திட்டத்தின் (400 மெகாவாட்) முதல் பிரிவு (100 மெகாவாட்) 1987 ஜனவரியிலும், கீழ்மேட்டூர் புனல் மின் திட்டத்தின் (120 மெகாவாட்) முதல் பிரிவு (15 மெகாவாட்) 1986 செப்டம்பரிலும், குந்தா Vஆம் மின் உற்பத்தி நிலையத்தின் (20 மெகாவாட்) கூடுதல் பிரிவு 1987 செப்டம்பரிலும் செயற்படத் தொடங்கும். மேட்டூர் அனல் மின் திட்டத்தின், நிலை I, நிலை II-ன் கீழ்க் கூடுதலாக 840 மெகாவாட் மின் உற்பத்தி செய்ய வகை செய்யப்பட்டுள்ளது. 210 மெகாவாட் திறன் கொண்ட முதல் பிரிவு 1986 டிசம்பரில் செயற்படத் தொடங்கும். மேற்சொன்ன திட்டங்கள் மூலம் கூடுதலாக உற்பத்தி செய்யப்படும் அளவு 1,400 மெகாவாட்டாக இருக்கும். வடசென்னை மின் உற்பத்தித் திட்டம் (630 மெகாவாட்) தூத்துக்குடி விரிவாக்க அனல் மின் திட்டம் (420 மெகாவாட்) ஆகியவற்றிற்கு தொழில்நுட்ப வகையில் இசைவளிக்கப்பட்டுள்ளது. ஆனால், முதலீடு குறித்து மத்திய திட்டக் குழுவின் முடிவு எதிர்பார்க்கப்படுகிறது. வாயு சுழற்சியின் உற்பத்தித் திட்டமும் (கேஸ் டர்பைன் திட்டம்) (100 மெகாவாட்) மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவை புதிய திட்டங்களாகும். ஏழாவது திட்டக் காலத்தில் மேற்கொள்வதென்று

உத்தேசிக்கப்பட்டுள்ளது. தூத்துக்குடி விரிவாக்க அனல் மின் திட்டத்தில் 210 மெகாவாட் திறன் கொண்ட ஒரு பிரிவும் வட சென்னையில் அதே திறன் கொண்ட மற்றொரு பிரிவும் வாயு சுழற்சி மின் உற்பத்தித் திட்டத்தின் 50 மெகாவாட் திறன் கொண்ட இரண்டு பிரிவுகளும், ஏழாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் இறுதிக்குள் செயற்படத் தொடங்குமென எதிர்பார்க்கப்படுகின்றன.

### பாசனம்

**71.** தமிழ் நாட்டில், போதிய அளவிற்கு இயற்கை வளங்கள் இல்லாமலிருந்தபோதிலும், தற்போது கிடைக்கக்கூடிய வளங்களை அதிக அளவிற்குப் பயன்படுத்திக் கொண்ட பெருமை தமிழ்நாட்டையே சாரும். குறிப்பாக பாசனத் துறையைப் பொறுத்தமட்டில் இது முழுவதும் உண்மையாகும். ஏனெனில் கிடைக்கக் கூடிய மேற்பரப்பு நீர் ஏறக்குறைய முழுமையும் பயன்படுத்தப்பட்டு வருகிறது. ஆகையால், தற்போதுள்ள பழைய பாசன ஏற்பாட்டை நவீனப்படுத்தி, முறையான நீர் ஏற்பாட்டைக் கொண்டுவருவது எதிர்காலத் திட்டமாகும்.

**72.** பெரியாறு-வைகை பாசனத் திட்டத்தை நவீனப்படுத்தி Iஆம் நிலையில் 10,305 எக்டேர் நிலப்பரப்பிற்கும், IIஆம் நிலையில் 7,521 எக்டேர் நிலப்பரப்பிற்கும் பாசனம் அளிக்க வகைசெய்யப்பட்டது. ரூ. 44.50 கோடி செலவிலான Iஆம் நிலைத் திட்டம் உலக வங்கியின் கடனுடன் 1984 டிசம்பரில் முடிக்கப்பட்டுள்ளது. ரூ. 56.86 கோடி செலவிலான IIஆம் நிலைத் திட்டம், 35 மில்லியன் அமெரிக்க டாலர் உலக வங்கி உதவியுடன் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இது, 1988 மார்ச்சில் முடிக்கப்பட வேண்டுமெனத் திட்டமிடப்பட்டுள்ளது. 1985–86ஆம் ஆண்டுக்குரிய செலவு ரூ. 14.056 கோடியாகும்.

**73.** உலக வங்கி உதவியுடன் ரூ. 102 கோடி செலவிலான தஞ்சாவூர் கால்வாயை நவீனப்படுத்தும் திட்டம், 1985–86ஆம் ஆண்டிலிருந்து படிப்படியாக மேற்கொள்வதென்று உத்தேசிக்கப்பட்டுள்ளது. ரூ. 18 கோடி மதிப்பீட்டுச் செலவில், பரம்பிக்குளம்-ஆளியாறு ஆயக்கட்டுப் பகுதியை விரிவாக்கும் திட்டம் நடைபெற்று வருகிறது. 1985–86ஆம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கம் ரூ. 3.10 கோடியாகும். மேலும், ரூ. 6 கோடி மதிப்பீட்டுச் செலவில் கூடுதலாக 14,165 எக்டேர் பரப்பிற்கு பாசன வசதி அளிப்பதற்கான பணிக்கு அரசு அண்மையில் ஒப்புதல் அளித்துள்ளது. செங்கற்பட்டு, வட ஆர்க்காடு, தென் ஆர்க்காடு, புதுக்கோட்டை, இராமநாதபுரம் மாவட்டங்களில், 150 ஏரிகளை நவீனப்படுத்துவதற்கான திட்டத்திற்கு ஐரோப்பிய பொருளாதாரக் குழு ரூ. 25 கோடி மானிய உதவி அளிக்க ஒப்புக்கொண்டுள்ளது. வரும் ஆண்டில் இத் திட்டத்திற்கான நிதி ஒதுக்கம் ரூ. 6.47 கோடியாகும்.

### காடுகள்

**74.** வனப் பாதுகாப்பு, சமூகக் காடு வளர்ப்புத் திட்டங்கள் ஆகியவற்றுக்கு அரசு முன்னுரிமை அளித்து வருகிறது. சமூகக் காடு வளர்ப்புத் திட்டத்தின்கீழ், ஸ்வீடிஷ் அனைத்து நாட்டு மேம்பாட்டு அமைப்பின் உதவியுடன் ஒரு பெருந் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 1985–86 ஆம் ஆண்டில் இதற்கான செலவு ரூ. 10.05 கோடியாக இருக்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது. மேற்கு மலைத் தொடர் மேம்பாட்டுத் திட்டம், மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டம் ஆகியவற்றின்கீழ்க் காடு வளர்ப்புத் திட்டம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**75.** அரசு ரப்பர் மேம்பாட்டுக் கழகம் 1984ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 1ஆம் நாளன்று அமைக்கப்பட்டது. ரப்பர் பயிரிடுவதற்காக 4,785 எக்டேர் பரப்பளவுள்ள நிலம் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது. மூன்று திங்களில், அதாவது குறுகிய கால அளவில் இக் கழகம் ரூ. 2 கோடி அளவுக்கு வருவாய் ஈட்டியுள்ளது.

**76.** இலங்கையிலிருந்து தாயகம் திரும்புவோருக்கு மறுவாழ்வு அளிப்பதை முக்கிய நோக்கமாகக் கொண்டு அமைக்கப்பட்ட தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகம், இதுவரை 2,300 குடும்பங்களுக்கு மறுவாழ்வு அளித்துள்ளது. ஆண்டொன்றுக்கு 1.5 மில்லியன் கிலோ கிராம் தேயிலை உற்பத்தி செய்யக் கூடிய திறன் கொண்ட மற்றொரு தேயிலைத் தொழிற்சாலையை, ரூ. 180 இலட்சம் செலவில் இக் கழகத்தின் பொறுப்பின்கீழ் அமைக்க அரசு அனுமதி வழங்கியுள்ளது. தேயிலையை ஏற்றுமதி செய்யும் பணியையும் மேற்கொண்டுள்ள இக் கழகம் 1983–84ஆம் ஆண்டிலிருந்து ஆதாயம் ஈட்டத் தொடங்கியுள்ளது.

### காவல் துறை

**77.** அண்மைக்கால ஆண்டுகளில் காவல் துறையின் பணி குறிப்பிடத்தக்க அளவில் மாற்றம் அடைந்துள்ளது. சட்டம்-ஒழுங்கு, குற்றத் தடுப்பு ஆகியவற்றைச் செயற்படுத்துவதுடன் நலிந்த பிரிவினரைப் பாதிக்கும் சிவில் உரிமைகள் பாதுகாப்புச் சட்டம் போன்ற சமூகச் சட்டங்களைச் செயல்படுத்துவதில் காவல் துறை தீவிரமாக ஈடுபட்டுள்ளது. தமிழ்நாடு காவல் துறை இவ்விரு பணிகளிலும் தொடர்ந்து நல்ல முறையில் செயலாற்றி வருகிறது. மாநிலத்தில் சட்டம்-ஒழுங்கு நிலைமை செவ்விய முறையில் இருந்து வருகிறது. காவலரின் திறமையை மேம்படுத்த அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. காவல் துறை தகவல் தொடர்பு நிலையை உயர்த்த அண்மையில் ரூ. 64.30 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்பட்ட பணி, சட்டம்-ஒழுங்கு நிலைமையை மேம்படுத்த உதவுவதோடு, விரைவில் குற்ற நிகழ்வுகளைக் கண்டு பிடிக்கவும் உதவி வருகிறது. 1985–86-ல் ரூ. 25 இலட்சம் செலவில் புதிய காவல் நிலையங்களை ஏற்படுத்தக் கருதப்பட்டுள்ளது. காவல் நிலையங்களுக்கான கட்டிடங்கள் கட்டும் பணி ரூ. 59.86 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்படும்.

### சுற்றுச் சூழல் பாதுகாப்பு

**78.** சுற்றுப்புறத் தூய்மையைப் பேணிக் காக்க வேண்டிய அவசியத்தை அரசு நன்கு அறிந்துள்ளது. இதற்கு ஆக்கபூர்வமான, நடைமுறைக்குகந்த, அறிவார்ந்த அணுகுமுறை தேவையாக உள்ளது. ஏனெனில், மனிதர்களின் தேவைகளைச் சுற்றுப்புறச் சூழலைச் சீர்படுத்துவதன் மூலம் ஈடுகட்ட இயலும், இதற்கு வளவாயில்களை நன்கு நிர்வகிப்பது, தூய்மைக் கேட்டைக் கட்டுப்படுத்துதல், ஏனைய சுற்றுப்புறத் தூய்மைக் கேட்டை அகற்றுதல் ஆகியவற்றை மேற்கொள்ள வேண்டும். குறிப்பிட்ட தொழில்களில் காற்றுத் தூய்மைக் கேட்டை கட்டுப்



தொடர்ச்சி 41 ஆம் பக்கம்



கவிஞர் பெருமக்களே ...

# மரபை மீறுவதே மரபாகலாமா?

மாண்புமிகு செய்தி - அறநிலையத்துறை அமைச்சர் திரு இராம. வீரப்பன்



நான் கவிஞர்களை வாழ்த்த முடியாது; ஏனென்றால், கவிஞர்கள் யாருடைய வாழ்த்தையும் எதிர்பார்ப்பவர்களல்ல.

புதுக்கவிதை பற்றிய விவாதங்கள் எங்கும் நடந்து கொண்டிருக்கின்றன. அந்த விவாதத்திற்குள்ளே நுழைந்து, பலரிடம் சலிப்புணர்ச்சியை ஏற்படுத்த நான் விரும்பவில்லை.

நீங்கள் மிகச் சிறந்த கவிதைகளை-இலக்கணத்திற்கு உட்பட்ட கவிதைகளை - மரபுவழிக் கவிதைகளை யெல்லாம் கூட உருவாக்கித் தந்திருக்கிறீர்கள்; அதற்காக உங்களையெல்லாம் வாழ்த்துகிறேன்; பாராட்டுகிறேன்.

இரண்டு வகையிலே நாம் வாழ்வை அமைத்துக்கொண்டிருக்கிறோம். மரபு வழியிலேயும் நடக்கிறோம்; சில நேரத்தில் மரபை மீறியும் நடக்கிறோம். ஆனால் மரபை மீறுவதே மரபாக நாம் எடுத்துக் கொண்டு விடக் கூடாது. மரபை மீறத் தகுந்த அவசியம் எற்பட்டாக வேண்டும். ஆபத்துக்குப் பாவமில்லை என்பதுபோல் இந்தச் சமுதாயத்திலே சில கருத்துக்களைப் படிக்காதவர்களுக்கு நீங்கள் எடுத்துச் சொல்ல விரும்பினால், அதற்குப் புதுக்கவிதை சாதனமாக அமைகிறது என்றால், அதை எங்களாலே புரிந்து கொள்ள முடியும்.

கவிதையை இலக்கணத்திற்குள்ளே - யாப்பிற்குள்ளே வைத்தால் எதுகை மோனைக்குள்ளே அடைத்து வைத்தால் சாதாரண மானவன் எப்படிப் புரிந்து கொள்ள முடியும்? அவர்களுக்காகவே புதியமுறைக் கவிதையைச் சாதன மாக்கினோம் - அதற்குப் புதுக்கவிதை என்று பெயர் தருகிறோம் என்றால் அதையும் எங்களாலே புரிந்து கொள்ள முடியும்.

அப்படிப்பட்ட நிலை உண்டாகியிருப்பதாகவும் தெரியவில்லை.

கவிதையிலுள்ள கருத்தை முதலில் நாங்கள் தொட்டுப் பார்க்கிறோம்; கற்பனையை இரண்டவதாகப் பார்க்கிறோம். கற்பனையை முதலாவதாக வைத்து - கருத்தை இரண்டாவதாக வைத்த காலத்தைத் தாண்டிக் கொண்டிருக்கிறோம் நாம்.

மரபுக் கவிதை வேண்டாம் என்று சொன்னால் நம்முடைய திருவள்ளுவர் யாத்த திருக்குறள் மரபுக் கவிதையே - அது வேண்டுமா, வேண்டாமா என்பதை நாம் தீர்மானிக்க வேண்டும்.

இலக்கணத்திற்கு உட்பட்ட மரபுக் கவிதைகளை - நாம் உதறிவிடுவதர்க முடிவெடுத்துவிட்டோமா என்பதுதான் கேள்வியே தவிர... மரபுக் கவிதை என்பது அழிக்கப்பட வேண்டிய— ஒழிக்கப் படவேண்டிய ஒரு முறை என்று நீங்கள் எடுத்துக் கொண்டால் -. கம்பராமாயணம் இன்றைக்கு இருக்காது. திருக்குறள் இன்றைக்கு இருக்காது. சிலப்பதிகாரம் இன்றைக்கு இருக்காது.


பழம் பெருமையுடைய நமது தமிழ், உரைநடைகளாலே இன்றைக்கு வாழ்ந்துகொண்டிருக்கவில்லை. தமிழின் இரண்டாயிரம் மூவாயிரம் ஆண்டுக்கால வரலாற்றை உரைநடையாலே நாம் தமிழுக்குச் சொல்ல முடியவில்லை.

தொல்காப்பியத்தை வைத்து— திருக்குறளை வைத்து - சிலப்பதிகாரத்தை வைத்து - ஐம்பெருங் காப்பியங்களை வைத்து - கம்பராமாயணத்தை வைத்து - சேக்கிழாரின் பெரிய புராணத்தை வைத்துத்தான் தமிழின், தமிழகத்தின் தொன்மைப் புகழைச் சொல்லமுடிகிறதென்றால், அவைகளெல்லாம் இலக்கணக் கட்டுப்பாட்டோடு தொகுத்துத் தந்த கவிதைகளாக இருந்த காரணத்தாலேதான் என்பதை நாம் மறக்கவோ மறுக்கவோ முடியாது.

ஒரு பாடலை இசையோடு பாட முடிகிறது - மனதிலே நிறுத்த முடிகிறது என்றால் அதற்கு மரபு வழியே சிறந்த வழி என்பதை இன்றுள்ள கவிஞர் பெருமக்கள் அருள் கூர்ந்து ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும்.

இங்கே கூட மலர் மாலை போடாமல்ஜரிகை மாலைபோட்டார்கள். மலர் மாலை மணத்தோடு இருக்கும். ஆனால், புதுக்கவிதை வெளியிடுகிறவர்கள் அல்லவா—ஒரு மாற்றம் வேண்டும் என்பதற்காக மின்னிக் கொண்டிருக்கும் இந்த மாலையைத் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள் என்று நினைக்கிறேன். அழகும் மணமும் வெறுக்கப்படலாமா?

[ 9-3-85-ல் நடைபெற்ற கனிமுத்து பதிப்பகத்தின் நூல் வெளியீட்டு விழாவில் ஆற்றிய உரையிலிருந்து.]




# நன்றி மறவோம்!

நியூயார்க் புருக்ளீன் மருத்துவ மனையில் மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களுக்குச் சிகிச்சையளித்த அமெரிக்க டாக்டர் ஃபிரீட்மேன் மற்றும் அவரது துணைவியாருக்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் 17.3.85 அன்று சென்னையில் விருந்து கொடுத்தார்.

மாண்புமிகு முதல்வர் சார்பில் டாக்டர் ஃபிரீட்மேனை வரவேற்று மாண்புமிகு தொழில் அமைச்சர் திரு.க.ராசாராம்அவர்கள் பேசினார். முதல்வரின் உடல் நலம் குறித்து தனது திருப்தியையும் மகிழ்ச்சியையும் டாக்டர் ஃபிரீட்மேன் வெளியிட்டதாக அப்போது அவர் தெரிவித்தார்.

டாக்டர் ஃபிரீட்மேனுக்கு "அர்த்தநாரீஸ்வரர்" வெண்கலச் சிலை ஒன்றை நினைவுப் பரிசாக மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அளித்தார்.

தமக்களித்த விருந்துக்கு நன்றி தெரிவித்து டாக்டர் ஃபிரீட்மேன் பேசும்போது தெரிவித்ததாவது:

"முதல்வர் எம்.ஜி.ஆர். இந்த அளவுக்கு உடல்நலம் முன்னேற்றம் அடைந்ததில் மருத்துவர்களின் பங்குதான் மிக அதிகம் என்ற தவறான கருத்து உங்களிடையே நிலவுகிறது. ஆனால், 'வாழ வேண்டும்' என்ற அவரது உறுதியான எண்ணம்தான் அவரை இந்த அளவுக்குக் குணமாக்கியுள்ளது. இதுபோல ஒருவர் விரைவாகக் குணமடைந்ததை நான் இதுவரைக்கும் கண்டதில்லை. அப்போலோ மருத்துவமனை மருத்துவர்களும், முதல்வரது தனி மருத்துவர் திரு சுப்பிரமணியம், அமைச்சர் டாக்டர் எச். வி. ஹண்டே மற்றும் பல மருத்துவர்களும் உரிய பங்காற்றியுள்ளனர்".

விருந்தினரை மகிழ்விக்கும் வகையில் செல்வி அலர்மேலு வள்ளியின் பரத நாட்டியமும், மாஸ்பர்சீனிவாசனின் மாண்டலின் இசைநிகழ்ச்சியும் நடைபெற்றன.

இவ்விருந்தில் மாண்புமிகு சட்டப்பேரவை, மேலவைத் தலைவர்கள், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் மற்றும் முக்கியப் பிரமுகர்கள்கலந்து கொண்டனர்.





மதுரை காமராஜர் பல்கலைக் கழகத்தில்

டாக்டர் ஃபிரீட்மேனுக்குத் திரைப்படத் தொழில் துறையினர் சார்பில் 18.3.85 அன்று சென்னை வடபழனியில் உள்ள விஜயா சேஷ மகாலில் பாராட்டு விழா நடந்தது.

விழாவில் மாண்புமிகு முதல்வர் மற்றும் அமைச்சர்கள், கலையுலகப் பிரமுகர்கள், சட்டப்பேரவை, மேலவை உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

இவ்விழாவுக்குப் பட அதிபர் திரு எல்.வி.பிரசாத் தலைமை தாங்கினார். விழாத் தொடக்கத்தில் சினிமா இசை அமைப்பாளர் திரு இளையராஜா கடவுள் வணக்கப் பாடல் பாடினார். பட அதிபர்கள் சங்கத் தலைவர் திரு டி.ராமானுஜம் வரவேற்றுப் பேசினார்.

டாக்டர் ஃபிரீட்மேன், அவருடைய மனைவி திருமதி ஃபிரீட்மேன், மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர்., விழாத் தலைவர் திரு எல்.வி.பிரசாத் ஆகியோருக்குத் திரு எம். சரவணன் மாலைகள் அணிவித்தார்.

அர்ச்சுனனுக்குக் கண்ணன் "கீதோபதேசம்" செய்யும் காட்சியைச் சித்தரிக்கும் சித்திர வேலைப்பாடுகள் கொண்ட 4 அடி நீளம், 2 அடி அகலம் உள்ள வண்ணச் சித்திரத்தையும், வெண்கலத்தினால் செய்யப்பட்ட 2 அடி உயர நடராஜர் சிலையையும், டாக்டர் ஃபிரீட்மேனுக்குத் திரைப்பட உலகத்தின் சார்பாக மாண்புமிகு முதல்வர் பரிசாக வழங்கினார்.


பட அதிபர் திரு எல்.வி.பிரசாத் சார்பாகத் திரு டி.ராமானுஜம், டாக்டர் ஃபிரீட்மேனுக்கும் அவர் மனைவிக்கும் பொன்னாடை அணிவித்தார். தமிழ்த் திரைப்படத் தயாரிப்பாளர் சங்கத்தின் தலைவர் திரு வலம்புரி சோமநாதன் டாக்டர் ஃபிரீட்மேனின் மனைவிக்குப் பட்டுச்சேலை பரிசாக வழங்கினார்.

மாண்புமிகு முதல்வர் நடித்துள்ள படங்களைப் பார்க்க ஃபிரீட்மேன் விருப்பம் தெரிவித்தார். எனவே அவர் நடித்து, ஏவி. எம். "வீடியோவில்" வெளியிட்டுள்ள "அன்பே வா", "நினைத்ததை முடிப்பவன்" ஆகிய கேசட்டுகளை, ஃபிரீட்மேனிடம் திரு எம்.சரவணன் வழங்கினார்.

விழாவில் பட அதிபர் "ஜெமினி" பழனியப்பன் ராம

அட்டை சொல்லும் செய்தி







## சென்னை மருத்துவக் கல்லூரியில்

சாமி, டாக்டர்கள் ஆறுமுகம், ஜெகந்நாதன், நரேந்திரன், தொழில் அதிபர் திரு எம்.ஏ.எம். ராமசாமி, சினிமா டைரக்டர் முக்தா திரு வி.சீனிவாசன், பட அதிபர் திரு டி.வி.எஸ்.ராஜு, நடிகர் திரு கமலஹாசன் ஆகியோர் பாராட்டிப் பேசினார்கள்.

பாராட்டுக்கு நன்றி தெரிவித்து டாக்டர் ஃபிரீட்மேன் பேசினார்.

''எம்.ஜி.ஆர். நடித்த படங்களைப் பார்த்தேன். அன்பு, பாசம், கடமை உணர்வு, நல்லொழுக்கம் போன்ற மனித சமுதாயத்துக்கு உரியவைகளை எடுத்துக் காட்டும் படங்களாக அவை உள்ளன. மக்களின் உள்ளங்களைக் கவர்ந்திருக்கிறார் எம்.ஜி.ஆர். இதிலிருந்து திரைப் படங்கள் மூலம் நல்லவைகளை மக்கள் மனத்தில் பதியச் செய்ய முடியும் என்பது உறுதியாகத் தெரிகிறது '' என்றார்.

டாக்டர் ஃபிரீட்மேனுக்கு மதுரை காமராஜர் பல்கலைக் கழகம் 18.3.85 அன்று கவுரவ டாக்டர் பட்டம் வழங்கிக் கவுரவித்தது. விழாவுக்கு மாண்புமிகு கல்வி அமைச்சர் திரு செ.அரங்கநாயகம் தலைமை தாங்கினார். கவுரவ பட்டத்துக்கான சான்றிதழை வெள்ளிப் பேழையில் வைத்து ஃபிரீட்மேனிடம் பல்கலைக் கழகத் துணை வேந்தர் திரு ஜே.ராமச்சந்திரனும், பதிவாளர் திரு சின்னதுரையும் கொடுத்தார்கள்.

விழாவில் மாண்புமிகு அமைச்சர் டாக்டர் எச்.வி.ஹண்டே, மாநில மருத்துவக் கல்வி இயக்குநர் டாக்டர் லலிதாகாமேசுவரன், மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு இரா.வரதராஜுலு இ.ஆ.ப., மதுரை மருத்துவக் கல்லூரி முதல்வர் டாக்டர் ஜேக்கப் முதலியோர் கலந்து கொண்டனர்.

டாக்டர் ஃபிரீட்மேன் அவர்களுக்கு, சென்னை மருத்துவக் கல்லூரியின் சார்பில் 'கௌரவ ஃபெலோஷிப்' விருது 19.3.85 அன்று கல்லூரி வளாகத்தில் அமைக்கப்பட்டிருந்த அழகிய பந்தலில், மருத்துவ நிபுணர்கள் நிறைந்த அரங்கில் வழங்கப்பட்டது.

மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர் எச்.வி. ஹண்டே அவர்கள் தலைமை வகித்துப் பேசுகையில்,''டாக்டர் ஃபிரீட்மென் அவர்கள் கூறிய ஆலோசனைப்படி சிறுநீரகச் சேமிப்பு நிலையம் ஒன்று சென்னையில் மிக விரைவாக அமைக்கப்படும். இதற்கு மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களும், மத்திய நிபுணர்களும் ஆலோசனை வழங்குவார்கள். டாக்டர் ஃபிரீட்மேன் அவர்கள் இதற்கு வழிகாட்ட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்'' என்றார்.

டாக்டர் ஃபிரீட்மேன் அவர்களுக்கு, தமிழ்நாடு சுகாதாரத் துறை தங்க-வெள்ளிப் பதக்கங்களை வழங்கியது.

சென்னை மருத்துவக் கல்லூரி சார்பில், டாக்டர் ரத்னவேல் சுப்பிரமணியம், டாக்டர் ஃபிரீட்மேனுக்குக் கௌரவ பெலோஷிப் விருதை வழங்கினார்.

தலைமைச் செயலாளர் திரு கு.சொக்கலிங்கம் இ.ஆ.ப.அவர்கள் விழாவில் கலந்து கொண்டு, டாக்டர் ஃபிரிட்மேன் அவர்களுக்குப் பரிசுகள் வழங்கினார்.

தொடக்கத்தில் சென்னை மருத்துவக் கல்லூரி முதல்வர் டாக்டர் எஸ்.ஆறுமுகம், மருத்துவக் கல்வி இயக்குநர், டாக்டர் லலிதா காமேஸ்வரன், டாக்டர் ஆர்.சுப்பிரமணியம் ஆகியோர் டாக்டர் ஃபிரீட்மேன் அவர்களை வரவேற்றுப் பேசினர்.

டாக்டர் குடும்பையா நினைவுச் சொற்பொழிவை, டாக்டர் ஃபிரீட்மேன் அவர்கள் நிகழ்த்தினார். அப்போது அவர் பேசுகையில், ''நீரிழிவு நோய், சிறுநீரகக் கோளாறுக்கு முக்கியமான காரணமாகும். இவ்வாறு கோளாறுக்கு உள்ளாகும் நோயாளிகள் இரத்த அழுத்தம் போன்ற நிலைமைகளையும், இரத்தத்தில் சர்க்கரை அளவுக்கு அதிகமாகாமலும் பார்த்துக் கொள்ள வேண்டும்'' என்றார்.

பிறகு, டாக்டர் ஃபிரீட்மேன் அவர்கள், சிறுநீரகச் சிகிச்சை பற்றிய'ஸ்லைடு'களைப் போட்டு விளக்கவுரையாற்றினார்.

தொகுப்பு : **பி.வி. கிரி**

**கோ. பாஸ்கரன்**



### அன்பு காட்டப் பிறந்த இதயம்

**உழைப்பின் பயனை நல்ல பல நற்பணிகளுக்குச் செலவிட்டு வருபவர் தோழர் எம்.ஜி. இராமச்சந்திரன். வறியோரைக் கண்டால் அவர் காட்டும் அன்பு குறித்துப் பலர் என்னிடம் கூறுவது உண்டு. அதில் ஆச்சரியப்பட எதுவும் இல்லை. ஏனென்றால் அன்பு காட்டவே பிறந்த இதயம் அவருடையது.**

**('எம்.ஜி.ஆர். என் இதயக்கனி' நூலிலிருந்து)**





## உள்ளாட்சித்துறை அமைச்சர் பதவியேற்பு

மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்கள் 16.3.85 அன்று மாலை மேதகு ஆளுநர் திரு எஸ். எல். குரானா அவர்களைச் சந்தித்துப் புதிய அமைச்சர் பட்டியலைக் கொடுத்தார்.

அதைத் தொடர்ந்து திரு ப.உ. சண்முகம் அவர்களை அமைச்சராக நியமித்து மேதகு ஆளுநர் அவர்கள் உத்தரவு பிறப்பித்தார்.

திரு ப.உ. சண்முகம் அவர்கள் உள்ளாட்சித்துறை அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ளார்.

அனைத்திந்திய அண்ணா தி.மு.க. பொதுச் செயலாளரான திரு ப.உ. சண்முகம், நடந்து முடிந்த சட்டமன்றத் தேர்தலில் தென்னார்க்காடு மாவட்டம் மேல்மலையனூர் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டவர்.

இதுவரை உள்ளாட்சித்துறை அமைச்சராக இருந்த திரு ஆர். சவுந்தரராஜன் அவர்கள் இனி சத்துணவு அமைச்சராகிறார்.

சத்துணவுத் துறை இதுவரை சமூக நலத்துறை அமைச்சர் திருமதி கோமதி சீனிவாசன் அவர்களிடம் இருந்தது. எனவே அமைச்சர் திருமதி கோமதி சீனிவாசன் அவர்கள் இனி சமூக நலத் துறையை மட்டும் கவனிப்பார்.

புதிய அமைச்சரான திரு ப.உ. சண்முகம் 18.3.1985 அன்று காலை 10 மணிக்குப் பதவி ஏற்றார்.

ஆளுநர் மாளிகையில் பதவி ஏற்பு விழா நடந்தது. அவருக்கு மேதகு ஆளுநர் திரு எஸ். எல். குரானா அவர்கள் பதவிப் பிரமாணம் செய்து வைத்தார்.

திரு ப.உ. சண்முகத்துக்கு வயது 62. அவர் 1923ம் ஆண்டு ஜூன் மாதம் பிறந்தார்.

திருவண்ணாமலை நகராட்சி உயர்நிலைப் பள்ளியில் 10ம் வகுப்பு (எஸ்.எஸ்.எல்.சி) வரை படித்தார்.

இளமையிலேயே அரசியலில் ஈடுபட்டார். பல்வேறு அரசியல் போராட்டங்களில் பங்கு கொண்டு சிறை சென்றார்.

திருவண்ணாமலை நகராட்சித் தலைவராகவும் மற்றும் பல்வேறு பதவிகளிலும் இருந்து இருக்கிறார்.

1957 முதல் 1962 வரை சட்டமன்ற உறுப்பினராகவும், 1968 முதல் 1973 வரை மேலவை உறுப்பினராகவும் இருந்தார்.

1968 முதல் 1971 வரை உணவு-உள்ளாட்சித்துறை அமைச்சராக இருந்தார். பின்னர் உணவு-வருவாய்த்துறை அமைச்சராகவும் பணியாற்றினார்.

### அமைச்சர்கள் பொறுப்பேற்கும் துறைகள்

**திரு. ப. உ. சண்முகம்**
உள்ளாட்சித்துறை அமைச்சர்
[ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், சமுதாய வளர்ச்சி, நகராட்சி நிர்வாகம், கிராமப்புறக் கடன்கள்]

**திரு. ஆர். சவுந்தரராஜன்**
சத்துணவு அமைச்சர்
[சத்துணவு]

**திருமதி கோமதி சீனிவாசன்**
சமூகநல அமைச்சர்
[சமூகநலம் (பெண்கள், குழந்தைகள் நலம் உட்பட), பிச்சைக்காரர் இல்லம், அனாதை இல்லங்கள்.]




# அருந்தவபுரத்திற்கு வாய்த்த பேறு

அருந்தவபுரம், தஞ்சைமாவட்டம் அம்மாப்பேட்டை ஒன்றியத்தில் உள்ள ஓர் அழகிய கிராமம். தவத்தையே தன் பெயரில் தாங்கிக் கொண்டுள்ள இவ்வூர் இயற்கை எழில் கொஞ்சும் சிற்றூர் ஆகும்.

வேளாண்மையையும், கால் நடைப் பராமரிப்பையும் முக்கிய தொழிலாகக் கொண்டு வாழும் ஏழை எளிய மக்களை - சிறு விவசாயிகளைப் பெரும்பான்மையாகப் பெற்றிருக்கின்ற இச்சிறிய கிராமத்தில் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த திட்டம் ஒன்றின் தொடக்க விழா அண்மையில் நடைபெற்றது.

11.2.85 அன்று தஞ்சை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு து.ரா.இராமசாமி திட்டத்தைத் தொடங்கி வைக்க - இந்தியன் ஓவர்சீஸ் வங்கியின் பொதுமேலாளர் திரு.ஏ. ஜே. செல்வகுமார் திட்டத்திற்கான நிதி உதவிகளை வழங்க, இந்தியன் ஓவர்சீஸ் வங்கியின் மண்டல மேலாளர் திரு. எஸ்.ஆறுமுகம், நிகழ்ச்சிக்குத் தலைமை வகிக்க, அருந்தவபுரத்தில் நடந்த அச்சிறப்புமிக்கவிழா "சாண எரிவாயுத் திட்ட கிராம ஏற்பு விழா" ஆகும்.

நாட்டில் வங்கிகள் கிராமங்களைத் தத்து எடுக்கும் செய்திகளை நாள்தோறும் படிக்கின்றோம். நடைமுறை வாழ்வில் காண்கின்றோம்; வங்கிகள் கிராமங்களைத் தத்து எடுத்துப் பல்வேறு வளர்ச்சிப் பணிகளுக்கு நிதி உதவிகள் செய்து வருவதை இது வரையில் கேள்விப்பட்டிருக்கின்றோம். ஆனால் அருந்தவபுரத்தைப் பொறுத்தவரை, சாண எரிவாயுத் திட்டத்தைச் செம்மையாகச் செயல் படுத்துவதற்காக மட்டுமே இந்தியன் ஓவர்சீஸ் வங்கி இக்கிராமத்தைத் தத்து எடுத்துக் கொண்டிருக்கின்றது. கிராம ஏற்புத் திட்டத்தைப் பொறுத்தவரை வங்கிகளின் வரலாற்றில் இது ஒரு புதுமையாகும. அதன் தொடக்கம் அருந்தவபுரத்தில் நிகழ்ந்துள்ளது



வங்கியின் உதவியோடும் அரசின் உறுதுணையோடும் கிராமங்களில் செயலாக்கப்படும் சாண எரிவாயுத் திட்டம் கிராம மக்களின் பொருளாதார முன்னேற்றத்திற்கு ஆரோக்கியமான வாழ்விற்குத் துணை நிற்கும் அற்புதத் திட்டமாகும். நாடு முழுவதும் செயல்படுத்த வேண்டும் என்று மத்திய அரசும், மாநில அரசும் விரும்பும் 20 அம்சத் திட்டத்தின் ஓர் அம்சம் இத்திட்டமாகும்.

அடுப்பெரிக்க விறகைத் தேடி அலையும் அவலம் நீங்கிட அதற்காகப் பணம் செலவிடுவது குறைந்திட - இத்திட்டம் வழி கோலுகிறது.

நாட்டின் தட்ப வெப்ப மாறுதலுக்கும் சுற்றுப்புறச் சூழ்நிலை-சுகாதாரக் கேடு ஆகியவற்றிற்கும் மூல காரணம் பூமியின் நிலப் பரப்பில் காடுகள் இருக்க வேண்டிய அளவிற்கு இல்லாமல் போனதுதான் என்பது ஆராய்ச்சியாளர்களின் கணிப்பு. வீட்டுச் சமையலுக்கு விறகுதான் தேவை என்றால் கிராமங்களில் இருக்கின்ற மரங்கள் எல்லாம் விரைவில் மறைந்து போவது நிச்சயம். மரங்கள் சமையல் விறகாவதைத் தடுக்க நமக்குக் கிடைத்த அருட்கொடை தான் சாண எரிவாயுத்திட்டம். நமது வீட்டில் கிடைக்கும் மாட்டுச் சாணத்தைப் பயன்படுத்தி வீட்டில் சமைப்பதற்கும் விளக்கு எரிய விடுவதற்கும் தேவையான எரிவாயுவை உற்பத்தி செய்யச் சாண எரிவாயு திட்டம் வகை செய்கின்றது.


இரெ. மகாலிங்கம்
செய்தி - மக்கள் தொடர்பு அலுவலர் (பொறுப்பு),
தஞ்சாவூர்.


சாதாரணமாக, மக்கிப் போகாத நிலையில் உள்ள மாட்டுச் சாணத்தை வயலுக்கு இடுவதைக் காட்டிலும், மக்கிப்போன சாணத்தைப் போடுவது சிறந்தது. மாட்டுச்சாணம் மக்கி, ஊட்டச் சத்து மிகுந்த உரமாக மாற இத்திட்டம் உதவிபுரிகின்றது.





அருந்தவபுரத்தில் சாண எரிவாயுத் திட்டத்தை, தஞ்சை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு து.இரா.இராமசாமி,இ.ஆ.ப. தொடங்கி வைத்தார்.

கிராமத்தின் எரிபொருள் தட்டுப்பாட்டை நீக்கி-கிராமங்களின் இயற்கை எழிலைப் பேணிப்பாதுகாக்க உதவும் இத்திட்டம் அருந்தவபுரத்தில் பார்த்தவர்கள் பாராட்டும் வகையில் - மக்கள் பயன்பெறும் வகையில் செயல் படுத்தப்பட்டு வருகிறது.

அங்கொன்று இங்கொன்று என்று ஒருவர் இருவர் பயன் பெறும் வகையில்தான் முன்பெல்லாம் கிராமங்களில் இத்திட்டம் செயல்பட்டது.

கிராமத்தில் உள்ள அனைத்து மக்களும் பயன் அடையும் வகையில் இங்குள்ள எல்லா இல்லங்களிலும் சாண எரிவாயுக் கலன் இயங்கும் வகையில் அருந்தவபுரத்தில் இந்த அரிய திட்டம் செயல்படுத்தப்படுகின்றது. ஏறத்தாழ 200 இல்லங்களைக் கொண்ட அருந்தவபுரத்தில் 184 சாண எரிவாயுக்கலன்கள் அமைக்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தின் வாயிலாக இக்கிராமத்தில் பயன் பெறுகிறவர்களில் பெரும்பாலானோர் ஆதிதிராவிடர்களும் சிறு விவசாயிகளும் தான் என்றால் மிகையாகாது.

இக்கிராமத்தில் அமைக்கப்பட்டுள்ள 184 சாண எரிவாயுக் கலன்களில் 54 கலன்கள் ஆதி திராவிடர்களின் இல்லங்களிலும், 98 கலன்கள் சிறு விவசாயிகளின் வீடுகளிலும் அமைக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள 32 கலன்கள் தான் மற்றப் பிரிவினருக்கு வழங்கப்பட்டுள்ளன.

இத்திட்டத்தைச்செயல்படுத்த இந்தியன் ஓவர்சீஸ் வங்கியின் கிராமக் கடன் மற்றும் வளர்ச்சிக் கிளையின் மூலம் வழங்கப்பட்ட மொத்தத் தொகை ரூ.6,38,500 ஆகும். மக்கள் பெறுகின்ற கடனைவிட அரசு வழங்குகின்ற மானியம் அதிகம் என்றுசொல்லத்தக்க வகையில் இதில் ரூ. 5 இலட்சத்தை அரசு மானியமாக வழங்கியுள்ளது.

அருந்தவபுரத்தில் இருக்கின்ற ஒரு சிறு விவசாயி சாண எரிவாயு சாதனம் ஒன்று அமைக்க -வங்கியிலிருந்து ரூ.3300 கடனாகப் பெறுகிறார் என்றால் -அவர் திருப்பிச் செலுத்தப்போகும் தொகை ரூ. 440 மட்டுந்தான். மீதமுள்ள 2860 ரூபாயை மானியமாக அரசு வழங்குகிறது. அதனால்தான் சாண எரிவாயுத் திட்டம் அருந்தவபுரத்திற்கு வாய்த்த வரப்பிரசாதம் ஆகும்.

சாண எரிவாயுக் கலன் அமைக்க இந்தியன் ஓவர்சீஸ் வங்கியின் பொது மேலாளர் திரு செல்வ குமார் உதவித் தொகை வழங்குகிறார்.









சென்னை மாநகராட்சியினர் 9.3.85 அன்று கூவம் ஆற்றுப் பகுதியில் கொசுத் தொல்லையைக் குறைக்கத் தீவிர நடவடிக்கையை மேற்கொண்டனர்.

அண்ணாநகர்ப் பகுதியிலிருந்து கொசுத் தொல்லைப் புகார்கள் அண்மையில் வந்ததை ஒட்டி மாநகராட்சி இத்தடுப்பு நடவடிக்கையை மேற்கொண்டது. இங்கு கொசுப் பெருக்கத்திற்குக் கழிவுநீர் கூவத்தில் விடப்படுவதும், நீர்க்குவளைச் (ஆகாயத் தாமரை) செடிகள் அதிக அளவில் கூவத்தின் மீது பரவியிருப்பதுமே காரணம்.

கொசுப்பூச்சிகள் மருந்து தெளிக்கும் போது, இச்செடிகளின் வேர்களைப் புகலிடமாகக் கொண்டு தப்பித்து வந்தன. இதைப் போக்க அரும்பாக்கம் பேருந்து நிலையம் முதல் நுங்கம்பாக்கம் இரயில்வே பாலம் வரை புள்ள கூவம் நதியில் காணப்படும் நீர்க்குவளைச் செடிகளைப் பிடுங்கியெறியும் வேலை தொடங்கியது. இப்பணியில் சுமார் 400 தொழிலாளர்கள் ஈடுபடுத்தப்பட்டனர். இவ்வாறு களையப்பட்ட செடிகள் பத்து லாரிகள் மூலம் குப்பை கொட்டும் இடங்களுக்கு அப்புறப்படுத்தப்பட்டன.

செடிகளைக் களைவதுடன், கொசுப் புழுக்களைக் கொல்லும் மருந்தும் இப்பகுதியில் தெளிக்கப்பட்டது. ஆற்றின் இரு கரைகளிலுமுள்ள புதர்களில் எந்திரங்கள் மூலம் மருந்துப் புகையும் அடிக்கப்பட்டது. இவ்வாறு செய்வதால் கொசுக்களின் எண்ணிக்கை பெருமளவிற்குக் குறைந்து, மக்கள் கொசுத் தொல்லையிலிருந்து பெரிதும் நிவாரணம் பெறுவர்.

கொசு ஒழிப்பு நடவடிக்கையை மாநகராட்சி சிறப்பு அலுவலர் திரு செ. ராமதாஸ் இ.ஆ.ப., ஆணையாளர் திரு. கோ. ராமகிருஷ்ணன், சுகாதார அலுவலர் டாக்டர் சாமிநாதன் மற்றும் மாநகராட்சி நலத் துறை அலுவலர்கள் பார்வையிட்டனர்.

## சென்னை மாநகராட்சிக்கு மத்திய அரசு மானியம்

சென்னை மாநகராட்சிக்கு மத்திய அரசு, மாநில அரசு மூலம் மேலும் ரூபாய் 219.48 இலட்சம் நவம்பர் மாதம் அடித்த புயல் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட சாலைகள், கட்டடங்கள், மின் கம்பங்கள், மருத்துவ உதவி, குப்பையகற்றுதல் போன்றவற்றிற்காக மானியமாக வழங்கியுள்ளது.

ஏற்கெனவே மாநகராட்சிக்கு ரூபாய் 200 இலட்சங்கள் மானியமாக வழங்கியதோடு இப்போது வழங்கப்பட்ட தொகையும் சேர்த்து மொத்தம் 419.48 இலட்சம் புயல் வெள்ளச் சேதங்களுக்காக மாநகராட்சிக்கு மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

மாநகராட்சி இதுவரை 107.65 இலட்சங்களை வெள்ளத்தால் பாதித்த சாலைகளைப் புதுப்பிக்கச் செலவு செய்துள்ளது.

புயலில் சேர்ந்த குப்பைகளை அகற்ற ரூ. 11.80 இலட்சம் மாநகராட்சிக்குச் செலவாயிற்று. இதில் ரூ. 3 இலட்சம் முதல் தவணை மானியமாகக் கிடைத்துள்ளது. தற்போது மேலும் ரூ. 7 இலட்சம் கிடைத்துள்ளது.

320 சாலைகள் புயல் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டன. இவற்றுள் 87 சாலைகள் போடப்பட்டு விட்டன. மீதம் உள்ள 233 சாலைகள் போடப்பட்டு வருகின்றன. மாநகராட்சிக்கு இதற்கென் ரூ. 266.48 இலட்சம் செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

## வளரும் தமிழகம்:

# கன்னியாகுமரி மாவட்டம்

### இரா. பா. கார்மேகம்
**செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்**
**கன்னியாகுமரி மாவட்டம்**

"வடவேங்கடம்தென்குமரியாயிடைத் தமிழ் கூறும் நல்லுலகம்" என்று பனம்பாரனாராலும், 'தொடியோள் பௌவம்' என்று இளங்கோவடிகளாலும், 'நீலத்திரைகடல் ஓரத்திலே நின்று நித்தம் தவஞ்செய்யும் குமரி' என்று மகாகவி பாரதியாராலும், பாராட்டப்பட்டதும், வரலாற்றுச் சிறப்புமிக்கதுமான கன்னியாகுமரி மாவட்டம், கேரள மாநிலத்தில் இருந்து பிரிந்து, தமிழ்நாட்டுடன் இணைந்து 28 ஆண்டுகள் ஆகின்றன.

இந்தியத் துணைக்கண்டத்தின் தென்கோடியில் முக்கடல்களால் சூழப்பட்டு, குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என்ற நான்கு வகை நிலங்களைத் தாங்கி இலங்கும் குமரி மாவட்டம் பல்வேறு சிறப்புக்களைப் பெற்றுள்ளது. பரப்பளவில் சிறியதாயினும், இயற்கை எழிலிலும், மழை வளத்திலும், கல்வி வளர்ச்சியிலும், பிற மாவட்டங்களைக் காட்டிலும் இம்மாவட்டம் முதல் இடத்தைப் பெற்றுள்ளது.

1983, 1984ஆம் ஆண்டுகளில் சென்னையில் நடைபெற்ற அகில இந்திய சுற்றுலா மற்றும்தொழில் பொருட்காட்சியில், கன்னியாகுமரி மாவட்டத்தின் சார்பில் எழில் மிக்க அரங்கு பொதுமக்களாலும், உள்நாட்டு, வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளாலும் கவரப்பட்டு அவர்களின் ஏகோபித்த பாராட்டுதல்களைப் பெற்றது.

கன்னியாகுமரி மாவட்டத்தின் சுற்றுலாச் சிறப்பு மிக்க இடங்களான விவேகானந்தர் மண்டபம், நீலத்திரைக் கடல் ஓரத்தில்நின்று நித்தம் தவம் செய்யும் பகவதி அம்மன் திருக்கோயில், வட்டக்கோட்டை-பத்மனாபபுரம் அரண்மனை, திற்பரப்பு நீர்வீழ்ச்சி, உதயகிரிக் கோட்டை, அதில் அமைந்துள்ள டிலெனாய்டு சமாதி, ஒகேனக்கல் அருவியோ என்று வியக்கின்ற அளவிற்கு அமைந்துள்ள உலக்கருவி ஆகியவை நெஞ்சைத் தொடுவன.

கன்னியாகுமரி மாவட்டத்தில் பாசன வசதி குடிநீர் வசதி ஆகியவைகளை அள்ளித் தருகின்ற முக்கடல், பெருஞ்சாணி, பேச்சிப்பாறை, சிற்றாறு, நீர்த்தேக்கங்களின் அழகிய தோற்றம், குமரி மாவட்டத்திற்கு மின்சாரம் வழங்கும் கோதையாறு அனல் மின்சார உற்பத்தி நிலையம் ஆகியவற்றைக் கண்டு களிப்புக் கடலில் நீந்தலாம்.

எம்மதமும் சம்மதமே என்று எடுத்து இயம்புகின்ற வகையில் கன்னியாகுமரி மாவட்டத்தில் எழுந்தருளியுள்ள, இந்து, முஸ்லீம், கிறித்தவ ஆலயங்களின் எழில்மிகு தோற்றங்களையும் காணலாம்.

இம் மாவட்டத்தின் தனிச் சிறப்பான ரப்பர் மரங்களின் அழகான தோற்றம் காண்போரைக் கவருகிறது.

மேலும் குடிசைத் தொழில்களில் இம்மாவட்டம் முன்னேறியுள்ளது என்பதை எடுத்துக்காட்டும் வகையில்-வாழை நாரால் அழகிய வேலைப்பாடுகளுடன் செய்யப்படும் பைகள், பொம்மைகள், கூடைகள், பழத்தட்டுகள் முதலியன தயாரிக்கும் தொழிற்கூடமும் இங்கே உள்ளது.

மயிலாடி சிற்பக் கூட்டுறவுச் சங்கத்தினால் தயாரிக்கப்படும் கல்லினால் ஆன சிலைகள் உலகப் புகழ் பெற்றவையாகும்.

மணவாளக்குறிச்சியில் அமைந்துள்ள இந்திய மணல் ஆலை, ஆரல்வாய்மொழியில் அமைந்துள்ள நூற்பாலை ஆகியவையும் காணத்தக்கவை.

கன்னியாகுமரி மாவட்டத்திற்கு ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்திற்கென 1984-85ஆம் ஆண்டிற்கு ரூ. 72 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. 31-1-85 முடிய ரூ. 42.65 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. 3,574 நபர்கள் இத்திட்டத்தின் மூலம் பயனடைந்துள்ளனர். இதில் 595 தாழ்த்தப்பட்டவர்களும், 64 பழங்குடியினரும் பயன்பெற்றுள்ளனர்.

நிலமற்ற ஏழைகளுக்கு வேலைக்கு உறுதியளிப்புத் திட்டத்தின்கீழ் 1984-85ஆம் ஆண்டில் 720 வீடுகள் கட்ட அனுமதிக்கப்பட்டுள்ளது. இதுவரையிலும் 525 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. இந்த வீடுகள் அனைத்தும் ஆதிதிராவிட மக்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளன. இத்திட்டத்திற்கு அரசு ரூபாய் 48.30 இலட்சம் பணமாக செலவிட்டுள்ளது. 100 மெட்ரிக் டன் அரிசி தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

ஊரக இணைப்புச் சாலைத் திட்டத்தின் கீழ் 1984-85-ஆம்ஆண்டில் 34ஊரக இணைப்புச் சாலைகள் அமைக்கும் பணி எடுக்கப்பட்டு 6 வேலைகள் முடிக்கப்பட்டுள்ளன. 28 வேலைகள் முடியும் தறுவாயில் உள்ளன. இத்திட்டத்திற்கு அரசு ரூ. 76.90 இலட்சம் ஒதுக்கீடு செய்துள்ளது. அதில் ரூ. 43.62 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.



தேசிய ஊரகவேலை வாய்ப்புத் திட்டம் : ஒதுக்கீடு ரூ. 119.96 இலட்சம், செலவினம்,ரூ.98.45 இலட்சம், அரிசி விநியோகம் 907 மெட்ரிக் டன்.

சுயவேலைவாய்ப்புத் திட்டம்: மொத்த நபர்கள் 564, தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் 120, கடன் வழங்கத் தேர்வு செய்யப்பட்டவர்கள் 29, வங்கிகள் மூலம் வழங்கப்பட்ட தொகை ரூபாய் 2,09,750, பயன் பெற்ற ஆதி திராவிடர் 3 பேர்கள்.

மேலும் இம்மாவட்டத்தில் ஊரக வளர்ச்சித் திட்டத்தின்கீழ் 9 ஊராட்சி ஒன்றியங்களுக்கு ரூ. 20 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவு மையங்கள் இம்மாவட்டத்தில் 1362 செயல்பட்டு வருகின்றன. அவை : கிராமப்புறங்கள் 583, நகர்ப்புறங்கள் 99, பள்ளி சத்துணவுக் கூடங்கள் 669, வனத்துறையைச் சார்ந்தவை 4, ஆதி திராவிடர் கூடங்கள் 7, ஆக மொத்தம் 1362.


இந்தச் சத்துணவு மையங்களின் மூலம் நாளொன்றுக்கு 2,80,259 குழந்தைகளுக்குச் சத்துணவு வழங்கப்படுகிறது.

முதியோர் உதவித் தொகை பெறும் 3,946 முதியோர்களுக்கு நாள்தோறும் சத்துணவுக் கூடங்களின் வாயிலாக உணவு வழங்கப்படுகிறது. மேலும் கிராமப்புறச் சத்துணவுக் கூடங்களில் பயில்கின்ற குழந்தைகளுக்கு மாதம் ஒரு முறை இலவசப் பல்பொடியும் வழங்கப்படுகிறது.

கன்னியாகுமரி நகரியத்தில் சுற்றுலா மேம்பாட்டுத் திட்டத்திற்கு ரூ. 18.5 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு சீரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அவை: குழந்தைகள் பூங்கா, கட்டணக் கழிப்பறைக் கட்டடங்கள், மார்க்கெட் காம்ப்ளெக்ஸ், பொழுதுபோக்கு மையம், பேருந்து டிப்போ.

குமரி மாவட்டத்தில் நினைவுச் சின்னங்கள் எழுப்பவும் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன: 1. அமரர் ஜீவானந்தம் அவர்களுக்கு ரூ. 58,000 செலவில் சிலை திறக்கப்பட்டுள்ளது. 2. தந்தை பெரியாருக்கு நினைவுத் தூண் ரூ. 42,000 செலவில் நிறுவப்பட்டுள்ளது. 3. அதங்கோட்டாசானுக்கு ரூ. 65,000 செலவில் சிலை நிறுவப்பட்டுள்ளது. 4. ரூ. 4.10 இலட்சம் செலவில் சதாவதானி செய்குத் தம்பிப் பாவலருக்கு நினைவு மண்டபம் கட்டப்படுகிறது.

இவ்வாறு கன்னியாகுமரி மாவட்டம் பல்வேறு துறைகளில் சிறந்து விளங்கி வருவதை மகிழ்ச்சியோடு குறிப்பிட வேண்டும்.




### கன்னியாகுமரியில் உ. பி. கலைநிகழ்ச்சிகள்



மாநிலங்களுக்கிடையே கலாச்சாரப் பரிமாற்றத் திட்டத்தின் கீழ், உத்தரப்பிரதேசக் கலாச்சாரக் குழுவினர் கன்னியாகுமரி மாவட்டத்திற்கு வருகை தந்து கலை நிகழ்ச்சிகளை நடத்தினார்கள்.

26-2-85 அன்று நாகர்கோவில் கலைவாணர் கலையரங்கில் நடைபெற்ற இந்தக் கலைநிகழ்ச்சிகளைக் கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித் தலைவர், திரு. மா. கருப்பையா, இ.ஆ.ப., துவக்கி வைத்தார். மாவட்ட ஆட்சித் தலைவரின் நேர்முக உதவியாளர்(பொது) திரு எம்.மாலிக்பெரோஸ்கான் அனைவரையும் வரவேற்றார்.

கலைக்குழுவினரின் புகழ்பெற்ற ''ராசலீலா'' என்ற நாட்டிய நாடகம் அனைவரையும் கவர்ந்தது. கலைக்குழுவினரின் இயக்குநர்களான திருவாளர்கள், சுவாமி ஸ்ரீராம் சர்மா, சுவாமி பதே கிருஷ்ணா ஆகியோருக்கும், கலைக்குழுவினரின் பொறுப்பு அலுவலர் திரு. அவதேஷ் வாஸ்தாவுக்கும் கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித் தலைவர் பாராட்டுத் தெரிவித்துப் பரிசுகள் வழங்கினார். நிகழ்ச்சியின் இறுதியில், செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர் திரு.இரா.பா.கார்மேகம் நன்றி கூறினார்.



# இங்கே கொஞ்சம்... பல்லைக் காட்டலாம்

நம் உடலிலேயே மிகக் கடினமானவை பற்கள். இவைகளை எலும்போடு இணைத்திருப்பது ஈறு.

இவ்விரண்டும் பழுதுறும்போது பல்வலி மாத்திரமல்ல; தலைவலி, தொண்டைவலி, காதுவலி போன்ற சிறிய-புற்றுநோய் போன்ற பெரிய பாதிப்புகளுக்கும்கூட நாம் ஆளாக நேரிடும்.

பல் இல்லாமல் சொல் இல்லை: எனவே தான் 'பல்போனால் சொல் போச்சு' என்பார்கள். எப்படித்தான் அவற்றைப் பாதுகாப்பது?

'ஆலும் வேலும் பல்லுக் குறுதி
நாலும் ரெண்டும் சொல்லுக் குறுதி'



பல் பாதுகாப்புப் பகுதி



—என்பது முதுமொழி. ஆலங்குச்சி பல் ஈறுகளின் அழற்சி நீக்கும்; வேலங்குச்சி நச்சுக் கிருமிகளைத் தாக்கிப் போக்கும். கிராமப்புறமானால் இதெல்லாம் சரிதான். ஆனால் நகர்ப்புறங்களுக்கு இந்த முறைகள் சரிப்படுமோ? அதுவும் இந்நாளில்? சரியான பற்பசைகள் பல்பொடிகள் எல்லாம் வந்தும் கூட நல்லபடி பற்களைப் பாதுகாக்க முடியாத நிலை அங்கிங்கெனாதபடி எங்கும் பரவியிருப்பதைப் பார்க்கிறோம். இந்த நிலை மாற்ற உருவாக்கப்பட்டதுதான் பல் மருத்துவக் கல்லூரி-மருத்துவமனை.

சென்னையில் - 'கோட்டை' மின்சார ரயில் நிலையத்திற்கு எதிரேயுள்ள அந்த நீளமான பல் மருத்துவமனைக் கட்டடத்திற்குள்ளே பலவகைச் சிகிச்சை முறைகளும் இதற்கென அளிக்கப்படுகின்றன, பண்பட்ட மருத்துவநிபுணர்களால்.

தென்னாட்டிலேயே முதன் முதலாக 1953 ஆம் ஆண்டில், சென்னை மருத்துவக் கல்லூரியில்தான் பல் மருத்துவத்திற்கான பட்டப்படிப்பு ( BDS ) தமிழக அரசால் துவக்கப்பட்டது. இதற்கான வெள்ளி விழா, மதுரை மாநகரில் 1978-ல் கொண்டாடப் பட்டபோது, பல் மருத்துவத்திற்கெனத் தனி மருத்துவமனை அமைப்பதன் அவசியம் வலியுறுத்தப்பட்டது.



கல்லூரி முதல்வரும் துணை முதல்வரும்

அவ்விழாவிலே பங்கேற்ற மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம். ஜி. ஆர். அவர்கள் அந்தக் கோரிக்கையை அதற்கு அடுத்த ஆண்டே நிறைவேறச் செய்தார். அன்று முதல் இன்று வரை பல் மருத்துவக் கல்லூரியின் முதல்வராக இருந்து திறம்படப் பணியாற்றி வருகிறார் டாக்டர் பி.பி. ராஜன்.



எக்ஸ்-ரே பகுதி

பேனராமிக் ரேடியோ கிராப்



பல் பரிசோதனைப் பகுதி

நாளொன்றுக்கு ஆயிரத்திற்குக் குறையாமல் புறநோயாளிகள் வருகைதரும் இந்த மருத்துவமனையில், உள்ளிருப்பு நோயாளிகள் 20 பேருக்கென இடம் ஒதுக்கப்பட்டுள்ளது.

அரசு பொது மருத்துவமனையோடு இணைக்கப்பட்டது இதுவானாலும், நிர்வாகமெல்லாம் தனிதான். 280மாணவ மாணவிகள் பல் மருத்துவம் பயிலும் இக் கல்லூரியில் மலேசியா, தென்னாப்பிரிக்கா அமெரிக்கா, அராபியா, இலங்கை, ஐரோப்பிய நாடுகளில் இருந்தெல்லாம்கூட வந்து படிக்கிறார்கள். அப்படி வந்து படிக்கும் 10 பேரும் இங்கு உள்ளனர்.

இதுபற்றி விளக்கிச் சொல்லும்போது- ''இப்போது இலங்கையிலுள்ள நிலை காரணமாகப் பாதியில் படிப்பை நிறுத்த நேர்ந்து



இங்கு வரும் மாணவ மாணவிகள் தகுந்த சான்றுகளைக் காட்டினால், விட்ட இடத்திலிருந்து மேல் படிப்பைத் தொடர நாங்கள் உதவுகிறோம்'' என்றார் கல்லூரி முதல்வர் டாக்டர் பி.பி. ராஜன்.

அரசு பொது மருத்துவமனையிலுள்ள விடுதியும் விளையாட்டுத் திடலும், இங்கு பயிலும் மாணவ மாணவுகளுக்கும் உரிமையுடையதாகும்.

**இங்குள்ள ஏழு பிரிவுகள்:**

சாதாரண அறுவைச் சிகிச்சைகெல்லாம் இங்கேயே செய்யப்படுகின்றன.

85353



பழைய பரிசோதனைக் கூடம்

புதிய பரிசோதனைக் கூடம்

பெரிய அறுவைச் சிகிச்சைகள் அரசு பொது மருத்துவமனையிலேயே நடைபெறும்.

''போதுமான படுக்கைவசதிகள், இரத்த சேமிப்பு வங்கியெல்லாம் விரைவில் இங்கு உண்டாக்கப்பட இருக்கிறது. அதன் பிறகு பல்தொடர்பான பெரிய அறுவைச் சிகிச்சைகளும் இங்கேயே செய்யப்படும்'' என்றார் கல்லூரித் துணை முதல்வர் டாக்டர் பி. வி. ஜனார்த்தனம். பல் எடுத்தல், பல் தொடர்பான அறுவைச் சிகிச்சை போன்றவற்றிற்கான முக்கியப்பிரிவு இவர் நிர்வகிப்பில்தான் உள்ளது.

அத்துடன் - டாக்டர் எஸ். ரங்காச்சாரி தலைமையில் இயங்கும் பல் சீரமைப்புப் பகுதி, டாக்டர் சி. எஸ். பிரசாத் தலைமையில் செயல்படும் ஈறுநோய் சிகிச்சைப் பகுதி, கல்லூரி முதல்வரான டாக்டர் பி.பி. ராஜன் கண்காணிப்பில் இருக்கும் பல் பாதுகாப்புப் பகுதி, டாக்டர் டி. என். சுவாமிநாதன் பொறுப்பிலுள்ள பல்கட்டும் பகுதி, டாக்டர் கலீல் அகமத் கவனிப்பிலிருக்கும் குழந்தைகள் பல்நலப் பகுதி, டாக்டர் என். ஞானசுந்தரம் தலைமையிலிருக்கும் வாய்நோய் அறியும் பகுதி—வாய் கதிர்வீச்சுப் பகுதி, டாக்டர் விசுவநாதன் பொறுப்பில் செயல்படும் நோய்க் குறியியல் பகுதி ஆகியவைகளும் இங்குள்ளன.

''பல்வலி என்று இங்கே சிகிச்சை பெற வருகிறவர்கள்—இதயநோய், சர்க்கரை வியாதி, இரத்த அழுத்தம் போன்ற வேறு ஏதேனும் நோயால் பாதிக்கப்பட்டிருக்றார்களா என்று அறிவது—அப்படிப்பட்டவர்கள் எந்த அளவுக்குச் சிகிச்சையைத் தாங்குவார்கள் என்று கணிப்பது ஆகியவற்றுக்காகப் பொது மருத்துவப் பகுதி ஒன்றும் இங்கே செயல்படுகிறது டாக்டர் சீனிவாசன் தலைமையில்'' என்றார் முதல்வர் டாக்டர் பி.பி. ராஜன்.




காத்திருக்கும் புறநோயாளிகள்

ஏழை எளிய குழந்தைகளுக்கு இலவசப் பல்பொடி வழங்குவதென — மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் அறிவித்த அரிய திட்டத்தைச் செம்மையுறச் செயற்படுத்துவதில் இம்மருத்துவமனையும் பெரும் பங்கு வகிக்கிறது.


**கிராமப்புற மருத்துவ முகாம்:**

சின்கோனா, சிட்கோ நிறுவனங்கள் பொறுப்பில் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலும் தயாரிக்கப்படும் பற்பொடிகள் எல்லாம் இங்கேதான் பரிசோதனைக்காக வருகிறது. இந்தப் பல்பொடி பற்றி ஏதேனும் புகார் என்றால் அந்தந்த மாவட்டத்திற்கும் நேரிலேயே போய் இவர்கள் பரிசீலிக்கிறார்கள். அனேகமாக மாதந்தோறும் இவர்களுடைய மாவட்டப் பயணம் இருக்கும்.

பல்மருத்துவக் கல்லூரி முதல்வர் டாக்டர் பி.பி. ராஜன் தலைமையில் இதற்கென ஒரு எழுவர் குழுவே அமைக்கப்பட்டிருக்கிறது. டாக்டர் கலீல் அகமது, டாக்டர் சோமசுந்தரம், டாக்டர் பிரமீளா ஞானப்பிரகாசம், டாக்டர் என். ஞானசுந்தரம், டாக்டர் அமரநாதன், டாக்டர் பிரசாத் ஆகியோர் அதில் அங்கம் வகிக்கின்றனர்.



ஈறுநோய் ஆராயப்படுகிறது



பல் துலக்கும் சரியான முறை

ஏழைக் குழந்தைகளுக்குப் பற்பொடி இலவசமாக அளிக்கப்பட்ட போதிலும்—தயாரிப்பாளர்களுக்கு ஒரு சிறு பாக்கெட்டிற்கு 42 பைசா வீதம் கணக்கிட்டு அரசு மூலம் பணம் தரப்படுகிறது. எனவே தரக்குறைவான கால்சியம் கார்பொனேட் போன்றவற்றைக் கலந்து யாரேனும் அந்தப் பல்பொடியை அலட்சியமாகத் தயாரித்தார்கள் என்பது கண்டுபிடிக்கப்பட்டாலோ— எடை குறைவாகப் பல்பொடி இருந்தாலோ அவர்கள் மீது தகுந்த நடவடிக்கை எடுக்கவும் இக்குழுவினர் தயங்குவதில்லை.

இலவசப் பல்பொடி தயாரிப்பின் மூலம் பல்லாயிரவர் வேலைவாய்ப்புப் பெற்றுள்ளதும் இங்கே குறிப்பிடத்தக்கது.

''பல் வைத்தியத்திற்கான, நான்காண்டு பட்டப்படிப்பு மட்டுமல்ல; வேறெந்தத் தென்மாநிலங்களிலும் இல்லாதபடி மேல் பட்டப் படிப்பும் - அந்த ஏழு பிரிவுகளிலும் இங்கே ஏற்படுத்தப்பட்டிருக்கிறது'' என்றார் பெருமிதத்தோடு கல்லூரி முதல்வர்.

சமுதாயப் பல்நலப் பாதுகாப்புத் திட்ட முகாம்கள் இம் மருத்துவமனை டாக்டர்களால் கிராமப்புறங்களில் அடிக்கடி நடத்தப்படுகின்றன. இவ்வகையில், பயன் கருதாமல் பாடுபடும் இவர்கள் வருகை முன்கூட்டியே அப்பகுதிகளில் தெரிவிக்கப்படுவதால் கிராம மக்களிடம் நல்ல வரவேற்பிருக்கிறது இந்த முகாமிற்கு. கிராமப்புறப் பள்ளிகள் மட்டுமல்லாமல்—மரத்தடிகளிலும் இம்முகாம் நடப்பதுண்டு.

பல்பொடியின் தரப் பரிசோதனை





பல் சீரமைப்புப் பகுதி

''சிகிச்சையளிப்பது மட்டுமல்ல; பற்களைப் பாதுகாக்கும் விதம் பற்றி அங்கே ஸ்லைடுகள், திரைப்படமெல்லாம் போட்டுக் காட்டுகிறோம். இதெல்லாம் கிராம மக்களுக்கு எளிதில் கிடைக்கும் இலவசப் பாடமாகவும் அமைகிறது'' என்றார் டாக்டர் என். ஞானசுந்தரம்.



குழந்தைகள் பல்நலப் பகுதி

கிராமப்புறங்களுக்குச் செல்ல ஒரு நடமாடும் மருத்துவப் பேருந்தும் இந்த மருத்துவமனைக்கு இருக்கிறது.

ஏறத்தாழ மூன்று லட்ச ரூபாய் பெறுமானமுள்ள 'பேனராமிக் ரேடியோகிராபி' என்கிற ஜப்பானிய தயாரிப்பானதோர் இயந்திரமும் அண்மையில் இங்கு வாங்கப்பட்டுள்ளது. இப்போது இரண்டு மூன்று பற்களை எக்ஸ்ரே பிடித்துப் பார்க்கிறோமே—அப்படியல்லாமல் இந்த இயந்திரம் மூலம் மேல் வரிசை கீழ் வரிசைப் பற்கள் அத்தனையையும் ஒரே படத்தில் எடுத்துவிட முடியும்.

திரு ஆர்க்காடு அனுமந்தராவ் என்பவர் அளித்த மூன்று லட்ச ரூபாய் நிதியில் செயற்கைப்பல் செய்யும் புதிய பரிசோதனைக் கூடமொன்று இங்கே உருவாக்கப்பட்டுள்ளது. பிளாட்டினம் பொருத்திய அடிப்பகுதியோடு தத்ரூபமான செயற்கைப் பற்கள் இங்கே



பல்கட்டும் பகுதி

பீங்கான் பொருளில் பிரமாதமாகச் செய்யப்படுகின்றன. உறுதியோடும் விளங்குகின்றன. இந்தச் செயற்கைப் பல் தயாரிப்புக்கென விலையுயர்ந்த எலக்ட்ரானிக் மெஷின் ஒன்றும் இப்பகுதியில் அமைக்கப்பட்டுள்ளது.

**சிறுவர்கள் பகுதிச் சிறப்பு**

குழந்தைகள் பல்நலப் பகுதிக்குச் செல்லுகிறோம். மருத்துவமனை என்றாலே அரும்புச் சிறுவர்களுக்கு அச்சம் ஏற்பட்டுவிடக் கூடாதென்கிற கருத்திலோ என்னவோ சுவரிலெல்லாம் கார்ட்டூன் சித்திரங்கள் மாட்டி வைத்திருக்கிறார்கள். ஒவ்வொரு படத்தின் கீழும்—''நொறுங்கத் தின்றால் நூறு வயது'' ....''கரடியின் பற்கள் கடினமானவை''...... ''முயலின் பற்கள் முறியாமல் கொறிப்பவை'' .....என்றெல்லாம் எழுதப்பட்டுள்ளன.

முதல்வர் அறைக்கு வந்தமர்கிறோம். ''மொத்தம் இங்கே எவ்வளவு டாக்டர்கள் என்கிற விவரம் தர முடியுமா?'' என்கிறோம்.

கல்லூரி முதல்வரின் நேர்முக உதவியாளர் செல்வி வைஜயந்தி ஏதோ குறிப்பேடுகளையெல்லாம் எடுத்துத்தர—அவற்றை ஒரு முறை புரட்டிவிட்டு நமக்குப் பதிலளித்தார் டாக்டர் பி.பி. ராஜன்—''மொத்தம்11 சிவில் சர்ஜன்கள், 23 அசிஸ்டெண்ட் சர்ஜன்கள், 58 உள்ளுறை மருத்துவர்கள், முதுநிலை பட்டப் படிப்புப் படிப்போர் 41 பேர் எங்கள் பல் மருத்துவமனையில் இருக்கிறார்கள்.''

திறந்தவாய் மூட இயலாதபடி அப்படியே நின்றுவிடுதல், முடியவாய் திறக்க முடியாதபடி பற்கள் கிட்டிக்கொள்ளல் ஆகிய வற்றுக்கும் இங்குள்ள பல் தொடர்பான அறுவைச் சிகிச்சைப் பிரிவில் தக்க சிகிச்சையளித்து சாதனை புரிந்திருக்கிறார்கள். மூடிய வாய் திறக்க முடியாதிருந்து, இங்கு சிகிச்சை பெற்ற பிறகு குணமடைந்த வாலாஜாவைச் சேர்ந்த திரு தேவராஜன் இதுபற்றி நம்மிடம் பெருமகிழ்வோடு விவரம் தெரிவித்தார்.



பல் சுத்திகரிப்புப் பகுதி

பல் மருத்துவமனையின் வளர்ச்சியில் மாண்புமிகு முதல்வர் அவர்களும், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களும் கொண்டுள்ள ஆர்வம்பற்றி மேலும் பேசுகையில் மிகப் பெருமையோடும் நன்றியுணர்வோடும் நமக்குத் தெரிவித்தார் கல்லூரி முதல்வர் டாக்டர் பி. பி. ராஜன்.

**- பி. எல். ராஜேந்திரன்**



மாணவர் பக்கம்



# இவர் ஒரு இளம் விஞ்ஞானி

தஞ்சை மன்னர் சரபோஜி அரசுக் கல்லூரியில் வேதியல் 2-ஆம் ஆண்டு படித்து வருபவர் இரா. கருப்பையா. இவர் ஒரு செடியிலிருந்து ''லிட்மஸ்'' என்ற வேதியல்(இரசாயன)பொருளைத் தயாரித்து உள்ளார்.

தற்போது ஆய்வகத்தில் பயன்படுத்தப்பட்டு வரும் லிட்மஸை விட கருப்பையா தயாரித்த லிட்மஸ் தெளிவாகவும்-விரைவாகவும் சோதனையில் விடையளிக்கிறது.

இந்த அரிய கண்டுபிடிப்பை வேதியல் துறைப் பேராசிரியர்கள் பாராட்டி, மாணவர் கருப்பையாவை ஊக்குவித்தார்கள். இதனை ஆய்வு இதழ்களில் கட்டுரையாக வெளியிடும் முயற்சியில் கருப்பையா தீவிரம் காட்டி வருகிறார். அவர் தமது கண்டுபிடிப்பை இங்கே விளக்குகிறார்:

''ஓய்வு நேரங்களில் நான் பல ஆராய்ச்சிகளைச் செய்து கொண்டு வருகிறேன். இயற்கையின் செல்வங்களை நமக்குப் பயனுள்ளதாகத் தயாரிக்க முடியுமா? என்பதைப் பற்றியே அதிகக் கவனமாக ஆராய்ந்து வருகிறேன்.

நான் பெரும்பாலும் செடி கொடிகளிலிருந்து கிடைக்கும் கனிகள், இலைகள் ஆகியவற்றையும், மலர்களையும் ஆராய்ந்து கொண்டு வருகிறேன். இதன் முதல் படியாக வேதியல் துறையினருக்குப் பயன்படும் 'லிட்மஸ்' என்ற வேதியல் பொருளை ஒரு செடியின் பழத்திலிருந்து கண்டுபிடித்துத் தயாரித்து உள்ளேன்.

''லிட்மஸ்'' என்பது அமிலங்களையும், காரங்களையும் வேறுபடுத்திக் கண்டறிய உதவும் ஒரு சிறந்த அடையாளங் காட்டியாகும். பொதுவாக இது இரண்டு வகைகளாக உள்ளது. அவை நீல லிட்மஸ், சிவப்பு லிட்மஸ்.

நீல லிட்மஸ் அமிலங்களில் சிவப்பாகவும், சிவப்பு லிட்மஸ் காரங்களில் நீலமாகவும் மாறும். இவை பொதுவாக லிட்மஸ் தாள் (Litmus Paper) வடிவில் கிடைக்கின்றன.

**தயாரிப்பு முறை:**

உலக அளவில் இன்று உள்ள லிட்மஸ் லிச்சன்ஸ் (Lichens) எனப்படும் காளான் வகைத் தாவரங்களிலிருந்து தயாரிக்கப்படுகின்றது. இந்த வகைக் காளான்களிலிருந்து பெறப்படும் லிட்மஸ் தாள்கள் இன்று வேதியல் சோதனைக் கூடங்களில் பயன்பட்டு வருகின்றன.

நான் 'யுஃபோர்பியேஸியே' குடும்பத்தைச் சார்ந்த தாவரமான 'சிர்கனீலியா ரெட்டிகுலேட்டா' என்ற தாவரத்தின் பழத்திலிருந்து லிட்மஸ் தயாரித்துள்ளேன். இந்தத் தாவரத்திலிருந்து கிடைக்கும் வேதிப் பொருளிலிருந்து நீல லிட்மஸ், சிவப்பு லிட்மஸ் ஆகிய இரண்டையும் தயாரிக்கும் முறையைக் கண்டுபிடித்து, இரண்டு வகையான லிட்மஸ்களையும் தயாரித்துள்ளேன்.

இப்போது நான் தயாரித்த லிட்மஸ் சோதனையின்போது தெளிவாக விடையளிக்கிறது. இந்தக் கண்டுபிடிப்பை எங்கள் கல்லூரி வேதியல் துறைப் பேராசிரியர்கள் பாராட்டி என்னை ஊக்குவித்தார்கள். மேலும் இந்தக் கண்டுபிடிப்பு பற்றிய செய்தியை வெளியிடும் முயற்சியில் எனக்கு உதவி வருகிறார்கள்.

இந்தக் கண்டுபிடிப்பிற்காகத் தஞ்சையில் 26-1-85 அன்று நடைபெற்ற விழா ஒன்றில் பூண்டி புட்பம் கல்லூரி முதல்வர் பேராசிரியர் மு.க. கோவிந்தசாமி அவர்கள் எனக்குப் பரிசு வழங்கி ஊக்குவித்தார்.''

இந்த இளம் விஞ்ஞானியை நாமும் பாராட்டுவோம்!





# பல்லவன் கலைஞான வாசல்!


பல்லவன் கலைஞான வாசல்—'மா—
—மல்லை' எனும் சிற்பத் திறன்வாழும் கோயில்
'கல்'ஒன்றில் குடைந்துள்ள கோயில்—தமிழ்க்
கலைஞனின் புகழ்கூறும் ஒருகோடிப் பாடல்!

நெய்தலும் குறிஞ்சியும் கூடும்—காட்சி
நெஞ்செல்லாம் இனிக்கின்ற இன்ப விருந்தாகும்
மருதமும் மறுபக்கம் தோன்றும்—'கடல்—
மல்லை'க்கு இவையெல்லாம் அழகின் சிரிப்பாகும்!

'கலை' என்றால் 'கல்'லின்மேல் 'அலை'கள்—ஏழு
கல்லின்மேல் கிலைத்துள்ள 'தமிழ்நெஞ்சின் அலைகள்'—ஆற
கலைக்கோயில் கடற்பெண்ணின் மடியில் இன்று
, கரைகின்ற ஒன்றுதான் தமிழர்க்குப் புதையல்!

பலகாட்டுக் கலம்வந்து போகும்—தமிழர்
பண்டமும் பண்பாடும் ஏற்றிக் கொண்டோடும்
கலைகாட்டுக் கலங்கரை விளக்கம்!—உலகக்
கலைஞர்க்கு அறைகூவல் விடுத்தபடி இருக்கும்.

—கவிஞர் முருகுவண்ணன்




**1982**ஆம் ஆண்டு திரிபுராவில் நடைபெற்ற மாநிலங்களுக்கிடையேயான வாலிபால் போட்டியில் சப்ஜூனியர் பிரிவில் தமிழ் நாடு குழுவில் விளையாடிப் பெயர் பெற்றவர் சி.அருள்தாஸ். தற்போது இராமநாதபுர மாவட்டம், திருப்பத்தூர் ஆறுமுகம் பிள்ளை சீதையம்மாள் கல்லூரியில் இளங்கலை பட்டப் படிப்பு மாணவர். பள்ளி நாட்களில் மாவட்ட அளவிலான போட்டிகள் பலவற்றில் கலந்து கொண்டு பரிசுகள் பல பெற்றிக்கிறார் அருள்தாஸ். ஆறுமுகம் பிள்ளை மேல்நிலைப் பள்ளியில் படித்த போது, 1983 ஆம் ஆண்டுபள்ளி சாம்பியன் இவர்தான்.

இந்தியப் பல்கலைக் கழகங்களுக்கிடையிலான போட்டிகள் வால்டேரில் நடைபெற்ற போது, மதுரை காமராஜ் பல்கலைக் கழகக் குழுவில் சேர்ந்து இவர் விளையாடி இருக்கிறார். கருமுத்து தியாகராசர் நினைவாக நடைபெறும் மாநிலங்களுக்கிடையேயான வாலிபால் போட்டியில் இவரது குழு இரண்டாம் பரிசை வென்றது.



குழந்தைகளுக்குக் குதூகலத்தைத் தரும் மிக்கி மவுஸ், டில்லியில் குழந்தைகளுடன் யானை மீது அமர்ந்து பவனிவரும் காட்சி.






## நூறு வயது கலங்கரைவிளக்கம்

மினிக்காய் தீவில் உள்ள கலங்கரை விளக்கத்துக்கு 1985 பிப்ரவரி திங்களில் நூறு வயது முடிந்தது.

1983-ஆம் ஆண்டு மே மாதத்தில் அப்பொழுது மினிகாய் அமீனாக இருந்தவரின் இளம் மகள் குமாரி ஹவ்வா பெபானு என்பவர் கலங்கரை விளக்கத்துக்கு அடிக்கல் நாட்டினார். அப்பொழுது பிரிட்டிஷ் இன்ஸ்பெக்டராக இருந்த ஜேம்ஸ் டக்ளஸ் என்பவர் முன்னிலையில் 1885 பிப் வரி 2-ஆம் தேதி அந்தக் கலங்கரை விளக்கத்தில் பணி தொடங்கி வைக்கப்பட்டது.

இலண்டனிலிருந்தும் பாரிசிலிருந்தும் இறக்குமதி செய்யப்பட்ட பொருள் ளைக்கொண்டு இந்தக் கலங்கரை விளக்கம் அமைக்கப்பட்டது. 30 வினாடிகளுக்கு ஒரு முறை இந்தக் கலங்கரை விளக்கத்திலிருந்து வெண்மையான ஒளி பளிச்சிடும். இந்த ஒளி 16 மைல் தூரம் தெரியும். கலங்கரை விளக்கத்தின் உயரம் 160 அடி ஆகும். யூனியன் பிரதேசமாக உள்ள லட்சத் தீவில் இதுவே மிக உயர்ந்ததாகும். 10 லட்சத்து 68 ஆயிரம் மெழுகுவர்த்தித் திறன் கொண்ட ஒளியினை இந்தக் கலங்கரை விளக்கம் வழங்குகிறது.

இந்தக் கலங்கரை விளக்கம் அமைக்கப்படுவதற்கு முன்னால் கடலோரக் குன்றுகளின் மீது விளக்குகளை நிறுவி அவற்றின் மூலம் கப்பல்களுக்கும் படகுகளுக்கும் வழிகாட்டப்பட்டது.

மினிக்காய் தீவு, இந்துமகா சமுத்திரத்தில் முக்கியமான பகுதியில் அமைந்துள்ளது. ஏடனிலிருந்து கொழும்பு செல்லும் கடல் வழிப்பாதை மினி காய் தீவு வழியாக அமைந்துள்ளது. எனவே இந்தக் கலங்கரை விளக்கம் சர்வதேசக் கப்பல்களுக்குப் பேருதவியாக அமைந்துள்ளது.

தற்பொழுது கலங்கரை விளக்கத்தில் உள்ள கருவிகள் 1968-ல் பொருத்தப்பட்டதாகும். இரண்டு ஆண்டுகளுக்கு முன்னால் இங்கு வானொலி சமிக்ஞைக் கருவி ஒன்றும் பொருத்தப்பட்டது. தொலைதூரத்தில் கடலில் உள்ள கப்பல்களும் இந்த வானொலி சமிக்ஞைகளைப் பெற்று தங்கள் இருப்பிடத்தை உறுதி செய்து கொள்ளலாம்.

## இவர்கள்...

* அந்நியனுக்குக் கப்பம் கட்ட மறுத்த முதல் குறுநில மன்னர் சிவகங்கைச் சீமையை ஆண்ட முத்து வடுகநாதர் (இவர் துணைவியார் வேலுநாச்சியாரும், அமைச்சர் பெருமக்கள் மருது சகோதரர்களும் கப்பம் கட்ட மறுத்துப் போராடியவர்கள்)
* அந்நியன் கையில் அகப்பட்டு மானமிழந்து உயிர் விடுதலின் சாதலே நன்றென உயிர் நீத்த முதல் வீரன்-வேலுத்தம்பி.
* தூக்கில் மாண்ட முதல் தியாகி இந்தியாவில் வீரபாண்டிய கட்ட பொம்மன். வெளிநாட்டில்-மதன்லால் திங்ரா.
* கப்பலில் படையெடுத்து வந்து குண்டு வீசிய முதல் வீரர்-செண்பகராமன் (பிள்ளை) (1914-ஆம் ஆண்டு முதல் உலகப் போரின்போது ஜெர்மானிய போர்க் கப்பல் 'எம்டன்'ல் வந்து சென்னையில் குண்டு வீசப்பட்டது.)
* கப்பல் வாணிகத்தை மீண்டும் நம்மவர் பெற உழைத்த முதல் தமிழர் - வ. உ. சிதம்பரனார் அவர்கள். (இவரைத் தொடர்ந்து இந்தியர் ஜேம்ஷெட்ஜிடாடா)
* கொடியின் சிறப்பைக் காக்க உயிர்விட்ட முதல் தியாகி - திருப்பூர் குமரன்.

தமிழகத்தில் முதன்முதலில் கதர்ப் பிரசாரம் செய்தவர்-



தந்தை பெரியார். ஈ. வே. ரா. அவர்கள்.

முதல் காந்தி ஆசிரமம் தமிழகத்தில் தொடங்கியவர் - தோழர் ப. ஜீவானந்தம் அவர்கள். (1920-ல் சிறுவயல் எனும் கிராமத்தில் தொடங்கினார்)

* கள்ளுக்கடைகளின் முன் முதலில் மறியல் செய்தவர்கள்- தந்தை பெரியார் அவர்களின் துணைவியார் திருமதி நாகம்மையார் அவர்களும், சகோதரி கண்ணம்மா அவர்களும் ஆவர்.

தொகுப்பு :-
ச. வே. சுப்பிரமணியன்.

### அல்சர் நோயைக் குணப்படுத்த வாழைக்காய்

நேரம் தவறி சாப்பிடுதல், அதிக கார வகைகளைச் சாப்பிடுதல், புகை பிடித்தல் உள்பட பல்வேறு காரணங்களுக்காக குடல் புண் (அல்சர்) நோய் வருகிறது அல்லவா? குடலில் ஏற்படும் அமிலம் குடலின் பாதுகாப்புச் சுவற்றை அரித்து விடுவதால் இந்தப் புண் ஏற்படுகிறது. இதைக் குணப்படுத்தும் மருத்துவ சக்தி வாழைக்காய்க்கு உண்டு என்று இப்போது கண்டு பிடிக்கப்பட்டு உள்ளது. இந்திய நிபுணர்கள் கேட்டுக் கொண்டதற்கு இணங்க இங்கிலாந்தைச் சார்ந்த ஆஸ்டன் பல்கலைக்கழக நிபுணர்கள் ஆராய்ந்து இந்த உண்மையைக் கண்டுபிடித்து இருக்கிறார்கள்.

உலர்ந்த வாழைக்காயை மாவாக்கி அதில் இருந்து ஒரு மருந்தைத் தயாரித்து பரிசோதனை செய்ததில் இந்தப் பலன் தெரிந்ததாக ஆஸ்டன் பல்கலைக்கழக நிபுணர் டாக்டர் டேவிட் ஹயிட் தெரிவித்தார்.

ஸ்ரீராம் டிரஸ்ட்
145, லிங்கிச் செட்டி தெரு, சென்னை - 600001.
போன்: 28545.

அன்பார்ந்த சிந்தனைச் சிற்பிகளே,
இந்த இளைஞர் ஆண்டில்,
உங்களுக்கு ஓர் அரிய வாய்ப்பு!

நம் நாட்டு இளைஞர்களுக்கு வழிகாட்டி, அவர்களுக்கு ஏற்ற திட்டங்களை வகுத்துக் கொடுத்து அறிவுரைகள் கூறி, நாட்டு முன்னேற்றப் பணியில் அவர்களை ஈடுபடுத்துவதே எங்கள் நோக்கம். அதற்கான சிந்தனைக் கட்டுரைப் போட்டியிது.

இதன் மூலம் சிறந்த எழுத்தாளர்களுக்கு ஒரு பொன்னான வாய்ப்பை ஸ்ரீராம் டிரஸ்ட் (அமுதசுரபி வெளியிடுவோர்) பெருமையுடன் அளிக்க முன்வந்துள்ளது.
கட்டுரைப் போட்டியின் தலைப்பு:

கனவுகளைக் கரை சேர்ப்போம்.

இதற்கான இரு பரிசுகள் - மொத்தம் ரூ.20,000.

1. மாண்புமிகு எம்.ஜி.ஆர் சார்பில் அளிக்கப்படும் பரிசு - ரூ.10,000.
20 முதல் 35 வயது வரை உள்ள எழுத்தாளர்கள் மட்டுமே கலந்து கொள்ளலாம்.

2. ஸ்ரீராம் டிரஸ்ட் அளிக்கும் பரிசு — ரூ.10,000.
35 வயதுக்கு மேற்பட்ட எல்லா எழுத்தாளர்களும் கலந்து கொள்ளலாம்.

கட்டுரை கையெழுத்துப் பிரதியாகவோ, டைப் செய்தோ 400 பக்கங்களுக்குள் இருக்க வேண்டும். பரிசு பெறும் கட்டுரை புத்தக வடிவில் வெளியிடப்படும்.
அனுப்ப வேண்டிய முடிவு தேதி: 30.4.85.
மேலும் விபரங்களுக்கு:
'அமுத சுரபி' மார்ச் இதழைப் பார்க்கவும்.

அமுதசுரபி (ஸ்ரீராம் டிரஸ்ட்)
145, லிங்கிச் செட்டி தெரு, சென்னை-600001.
தபால் பை: 5043. போன்: 28545.

ADWAVE/ST/2846



# செல்லம்மாள் கல்லூரியில் செந்தமிழ் விழா

சென்னை கிண்டியிலுள்ள செல்லம்மாள் மகளிர் கல்லூரியில் 21-2-85 அன்று முத்தமிழ் விழா நடைபெற்றது. மாண்புமிகு சட்டமன்ற மேலவைத் தலைவர் சிலம்புச் செல்வர் டாக்டர் ம.பொ. சிவஞானம் அவர்கள் தலைமை வகித்தார்.

போக்குவரத்துத்துறை ஆணையர் மற்றும் பச்சையப்பன் அறக்கட்டளைத் தலைவர் திரு எஸ். டி.காசிராஜன் ஐ. ஏ. எஸ தொடக்கவுரை நிகழ்த்தினார். செல்லம்மாள் மகளிர் கல்லூரி முதல்வர் டாக்டர் திருமதி இந்திரா சோமசுந்தரம் அவர்கள் அறக்கட்டளை ஒன்றைச் செல்லம்மாள் கல்லூரியில் நிறுவியதைக் குறிப்பிட்டு, அதற்கான ரூ. 1,000-க்குரிய காசோலையைப் பெற்றுக் கொண்டு உரையாற்றினார்.

'தெய்வபக்தியும் தேசபக்தியும்' என்ற தலைப்பில் இக்கல்லூரி மாணவியர் கட்டுரைப் போட்டியில் கலந்து கொள்ளலாம் என்றும், ஆண்டுதோறும் நடைபெறும் இப்போட்டியில் ஓராண்டு தெய்வபக்தி என்ற தலைப்பும் மறு ஆண்டு 'தேசபக்தி' என்ற தலைப்பிலும் போட்டிக்குரிய தலைப்பாக எடுத்துக் கொள்ளப்பட வேண்டும் என்றும், போட்டியில் வெற்றி பெறும் மாணவிக்கு முதல் பரிசும், இரண்டாம் பரிசும் மேற்கண்ட அறக்கட்டளை நிதியிலிருந்து கொடுக்கப்படும் என்றும் அவர் கூறினார்.

மாண்புமிகு சிலம்புச் செல்வர் அவர்கள் தம் தலைமையுரையில், முத்தமிழ்க் காப்பியமான சிலப்பதிகாரத்தைப் பற்றி உரையாற்றுகையில், நாடகம் என்ற சொல் தமிழ்ச் சொல்லே .. ..ும் .நாடு அகம் எனப் பிரித்து,மு.. ..ல குறிஞ்சி, மருதம், நெய்தல், பாலை ஆகிய ஐவகை நிலங்களையும் அகப்படுத்தியது என்று கூறினார்.

இயற்றமிழ் பற்றி டாக்டர் இரா. சேது, தமிழின் சிறப்பையும் நயத்தையும் இலக்கிய மேற்கோள்களுடன் விரித்துரைத்தார்.

திருமதி டாக்டர் சேலம் எஸ். ஜெயலட்சுமி, 'அகர முதல எழுத்தெல்லாம்' என்ற குறட்பாவை இன்னிசையோடு இசைத்தார்.

நாடகத்தமிழ் குறித்துப் பேசிய டாக்டர் ஏ.என்.பெருமாள் தம் உரையினிடையே நடிப்பினையும் கலந்து விளக்கவுரையாற்றினார்.

தமிழ்த்துறைத் தலைவர் திருமதி டாக்டர், மேரி கொரினியா நன்றி நவின்றார்.

பிற்பகல் முத்தமிழ் விழாவின் நிறைவுக் கட்டமாகத் தமிழ் வளர்ச்சித்துறை இயக்குநர் திரு சிலம்பொலி செல்லப்பன், முத்தமிழ்க் காப்பியம் சிலப்பதிகாரம் என்று விளக்கவுரையாற்றினார். மாணவியர்களை அன்பு, அறிவு, அடக்கம், இவற்றின் கூட்டலாக, சூது; வஞ்சனை, பொறாமை, இவற்றின் கழித்தலாக, இன்பம், வளம், இவற்றின் பெருக்கலாக அன்புணர்ச்சியை வகுத்துக் கொடுக்கும் வள்ளலாக இருங்கள் என்று வாழ்த்தினார்.

மாணவியர் தலைவி லீலாவதி நன்றி கூறினார்.

## ஆண்டு விழா

செல்லம்மாள் மகளிர் கல்லூரியின் ஆண்டு விழா 7.3.1985 அன்று சிறப்பாக நடைபெற்றது.

ஆண்டு அறிக்கையைக் கல்லூரியில் முதல்வர் டாக்டர் இந்திரா சோமசுந்தரம் வாசித்தார். போகுவரத்து ஆணையரும், பச்சையப்பன் அறக்கட்டளைத் தலைவருமான திரு எஸ். டி. காசிராஜன், ஐ. ஏ. எஸ் அவர்கள் தலைமை தாங்கி, மறைந்த பாரதப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி அவர்களின் திருவுருவப்படத்தைத் திறந்து வைத்துப் பேசினார். அப்பொழுது அவர் குறிப்பிட்டதாவது:

''மறைந்த பிரதமர் இந்திரா காந்தி போன்று புகழுடன் நீங்கள் திகழ வேண்டும். அவர் நிறைய புத்தகங்களைப் படிப்பார். பொதுக்கூட்டங்களில் நடக்கும் நிகழ்ச்சிகளை நன்கு கூர்ந்து கவனிப்பார். தன் பேரக் குழந்தைகளுக்கு எல்லா மாநில உணவுப் பழக்கவழக்கங்களையும், நாகரிகங்களையும் கற்றுக் கொடுத்தார். அவரை மாணவ சமுதாயம் சிறந்ததோர் முன்மாதிரியாகக் கொள்ள வேண்டும்''

சென்னைப் பல்கலைக் கழகப்பதிவாளர் திரு. எம். எஸ். ஸ்ரீனிவாசன் கல்லூரி ஆண்டுவிழாச் சிறப்புரையாற்றுகையில் குறிப்பிட்டதாவது :

''பல்கலைக் கழகத் தேர்வில் நல்லமுறையில் வெற்றி பெற்று இருக்கிறீர்கள், அறிவியல் ரீதியாக நீங்கள் செயல்பட வேண்டும். வெறும் சட்ட திட்டங்களை மட்டும் பார்க்காமல் நடைமுறைச் சாத்தியங்களையும் பார்க்க வேண்டும்''.

பச்சையப்பன் அறக்கட்டளை உறுப்பினரும் நிதி ஆலோசகருமான திரு எஸ். அருணாசலம் பரிசுகளை வழங்கி, கல்லூரியின் வளர்ச்சி பற்றிச் சிறப்புரையாற்றினார்.

# நூல் நயம்

## திருமணங்கள் வெறும் நிகழ்ச்சிகள் அல்ல

ஆசிரியர் : ஏர்வாடி.
எஸ். இராதா
கிருஷ்ணன்.
வெளியீடு: சுதா பதிப்பகம்,
முத்துமுதலி தெரு,
புரசைவாக்கம்,
சென்னை-600 007.

விலை ரூ. 10 பக்: 128.

'திருமணம் என்பது ஆயிரங் காலத்துப் பயிர்.' அந்தப் பயிர் எப்படி வளர்ந்து தழைக்க வேண்டும் என்று பார்த்துப் பார்த்துச் செயல்படும் பார்வதிப் பாட்டி, எப்படியாவது அமைச்சர் தன் வீட்டுக்கு வருகை தர வேண்டும், அதற்குத் தன் மகளின் திருமணம் ஒரு காரணமாக அமையட்டும் என்றெண்ணிப் பரபரக்கும் தந்தை, மனத்துக்குப் பிடித்தவனை இறைவன் சந்நிதியில் கைப்பிடிக்கும் மல்லிகா- இவர்களை வைத்து அருமையான கதையொன்றைச் சித்திரித்துள்ளார் ஆசிரியர், 'திருமணங்கள் வெறும் நிகழ்ச்சிகள் அல்ல' என்ற முதல் கதையின் வாயிலாக!

'அவள் வித்தியாசமானவள்' கதைத் தலைவி, கல்யாணி போற்றுதற்குரியவள். இப் படைப்பு திலகவதியாரை நினைவு படுத்துகின்றது. திருமணம் ஆகாவிட்டாலும் கூட, தனக்கென நிச்சயித்தவன் – இராணுவ வீரன் இறந்து விட்டான் என்பதால் வேறு திருமணம் செய்து கொள்ள மறுத்து விடுகிறாள் கல்யாணி. கதை சிறப்பாக அமைந்துள்ளது.

'வாசமில்லா மலரிது" லட்சுமியின் மனப் போராட்டமும் முடிவும் நல்ல முறையில் அமைக்கப் பட்டுள்ளன. 'ஒருவனுக்கு ஒருத்திதான்' என்பது வலியுறுத்தப்படுகின்றது.

ஆழமான கருத்தை அழுத்தமாகச் சொல்லும் பாங்கும், சமுதாயம் சீர்திருந்த வேண்டும் என்ற ஆசிரியரின் நினைப்பும் இச் சிறுகதைத் தொகுப்புக்கு ஏற்றம் தருகின்றன. மொத்தம் 15 சிறுகதைகள் இருக்கின்றன. பொருளடக்கம் போடப்பட வில்லை.

— டாக்டர் சிவஅரசி

## தாலாட்ட மறந்த தமிழ்க் கவிஞர்

ஆசிரியர் : சேயோன்
வெளியீடு : அல்லயன்ஸ்கம்பெனி
த. பெ. எண் : 617
மயிலாப்பூர்,
சென்னை-600 004.

விலை : 13-25 பக்கம் : 176

தாலாட்ட மறந்த தமிழ்க் கவிஞர் யார்? அவன்தான் பாட்டுக்கொரு புலவன் பாரதி! முதல் கட்டுரையே நூலுக்கு முத்தாய்ப்பாக விளங்குகிறது. இந் நூலில் மொத்தம் 12 கட்டுரைகள் உள்ளன. எல்லாமே அரிய ஆராய்ச்சிக் கட்டுரைகள்; இலக்கிய இன்பத்தைக் கொடுப்பவை :

தமிழ் ஆர்வலரும், ஆராய்ச்சி மாணவரும் இந்நூலைப் படித்துப் பயன் பெறலாம்.

## இன்றைய தமிழகம்

ஆசிரியர் : வை. கந்தசாமி

வெளியீடு : அன்னை நிலையம்
த. பெ. எண் : 211
சிவகாசி-626 123.

விலை : ரூ. 9 பக்கம் : 148

இன்றைய தமிழகத்தை எடுத்துக் காட்டும் அத்தனை செய்திகளும் இத்தொகுப்பு நூலில் அடங்கியுள்ளன. புவியியல், ஆட்சி முறை, பொருளாதாரம், போக்குவரத்து -செய்தித் தொடர்பு, மொழி, கல்வி, சமயங்கள், கோவிற்கலை, நுண்கலைகள், தொல்பொருளியல், அருங்காட்சியகங்கள் - ஆகிய ஒன்பது தலைப்புகளில் தமிழகத்தைப் பற்றிய சுவையான செய்திகளைத் தெரிந்து கொள்கிறோம்.

தகவல்கள் கேள்வி - பதில் முறையின் வாயிலாகத் தெரிவிக்கப்பட்டிருப்பதனால் - எல்லாத் தரப்பினர்க்கும் இது ஏற்றதாக விளங்குகிறது.

—பி.வி.கிரி.

## இரண்டாவது உயிர்

ஆசிரியர் : ராஜேஷ் குமார்.

வெளியீடு: மயிலவன் பதிப்பகம்,
7, எம்.கே. அம்மன்
கோயில் தெரு,
மயிலாப்பூர்,
சென்னை-600 004.

விலை; ரூ, 7.25 பக்கம் 116.

குற்றவியலை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்டுள்ள நவீனம் இது. படிப்பதற்கு விறுவிறுப்பாக இருப்பதுடன் திகிலையும் ஊட்டுகிறது.

உண்மையே வெல்லும் என்ற தத்துவத்தை எடுத்துச் சொல்லும் வகையில் உருவாக்கப்பட்டுள்ள இந்நூலின் நடை நம்மைக் கவருகிறது.; சம்பவக் கோவைகளும் சிறப்பாக உள்ளன. பாத்திரங்களுக்கேற்ற உரையாடல்களும் இடம் பெற்றிருக்கின்றன,

அடுத்து என்ன நேருமோ என்ற ஆர்வ நிலையை நூலாசிரியர் ஏற்படுத்தியிருக்கிறார்.

எலும்புக்கூடு குளிக்கும் காட்சி திகிலை அளித்தாலும், அது அங்கு எப்படிக் கொண்டு வரப் பட்டது என்பதற்கு விளக்கம் இல்லாததால் - அக்காட்சி நம்பத் தக்கதாக இல்லை.

## பெரியார் பிள்ளைத் தமிழ்

ஆசிரியர் : புலவர் மாவண்ணா
தேவராஜன்

வெளியீடு: பாரதி நிலையம்,
105, உஸ்மான் சாலை
தியாகராய நகர்,
சென்னை 600 017.

விலை: ரூ. 12 பக்கம் 224

தலைவர்கள் -கடவுளர்கள் மீது பருவத்துக்குப் பத்துப் பாடல் வீதம் பத்துப் பருவங்களாக அமைத்துப் பாடப்பெறுவது பிள்ளைத்தமிழ் ஆகும். ஆனால் இந் நூலாசிரியர் அந்த மரபை மீறி, பதினான்கு பருவங்களை எழுதியுள்ளார். அவரது கோட்பாட்டின்படி அவர் எழுதியுள்ளது நியாயமானதாகவே தெரிகிறது.

காப்புப் பருவத்தில், பொதுவாக, கடவுளர்கள் காக்க வேண்டுமென்றுதான் புலவர் பாடுவர். ஆனால் இந்நூலின் காப்புப் பருவத்தில் 'அறிவியல் நிபுணர்கள், நடுநிலையறிஞர்கள், உழைப்பாளர்கள், பெண்ணுலகினர், நீதிக்கட்சியினர் முதலானோர் காக்கவே' என்று பாடியிருப்பது, எண்ணி எண்ணி மகிழத்தக்க வகையில் அமைந்துள்ளது.

தமிழகத்தில் தன்மான இயக்கம் வளர்ந்த வரலாற்றையும் - தமிழகத்தின் வரலாற்றையும் இந் நூலிலே காணமுடிகிறது.

தந்தை பெரியாருடன் இணைந்து பணிபுரிந்த பல்வேறு பெருமக்களின் சிறப்பை இந் நூலால் உணர முடிகிறது.

நூலாசிரியர், தம் நண்பருடன் சவால் விட்டு இந்நூலை எழுதியிருப்பதாகக் குறிப்பிட்டிருக்கிறார். அந்த உண்மையை, பொங்கிவரும் செய்யுள்கள் நினைவுறுத்துகின்றன.

பல்வேறு விருத்தப் பாக்களையும், சந்தச் செய்யுள்களையும் நூல் முழுதும் உலாவரச் செய்து, படிப்போரின் நாடி நரம்புகளில் முறுக்கேற்றியிருக்கும் நூலாசிரியர், பழம்புலவர்களின் மரபு மறைந்து விடவில்லை, தொடர்கிறது என் பதைத் தமிழ் உலகுக்கு அறிவித்திருக்கிறார்.

—தமிழ்ப்பித்தன்

## தட்டச்சுப் பொறி!

ஆசிரியர் : சி. சண்முகம்

வெளியீடு: திருமதி எஸ். மோகன
சுந்தரி,
30/15, பத்ரோ
சாலை,
சென்னை—600 078

விலை : ரூ. 8 பக்கம்80

தமிழக அரசின் எங்கும் தமிழ், எதிலும் தமிழ் என்ற நடவடிக்கைகளுக்கு உறுதுணையாகவும் தமிழ் மக்களின் அறிவு ஆற்றல் எளிதாக, விரைவாக வளர வேண்டும் என்ற வகையிலும் இந்நூல் அமைந்துள்ளது.

ஆரம்ப காலத்தில் அரசு அலுவலகங்களிலும் தனியார் நிறுவனங்களிலும் பேனாவைப் பயன்படுத்தி எப்படிச் சிரமம் மேற்கொண்டார்கள். தட்டச்சுப் பொறி கண்டுபிடிக்கப்பட்ட பிறகு எந்த அளவிற்கு மக்கள் அதைப் பயன்படுத்துகின்றனர் என்பதையெல்லாம் ஆசிரியர் முதல் பக்கத்திலே தெளிவாகத் தெரிவித்திருக்கிறார்.

மேலும் தட்டச்சு பயிலும் மாணவர்களுக்கும், பயில்விப்பவர்களுக்கும் பயன்படும் வகையில் ஆங்கிலச் சொற்களுக்கு ஏற்ற தமிழ்ச் சொற்களைப் பயன்படுத்தித் தட்டச்சுப் பொறியின் உட்புற, வெளிப்புறப் பாகங்களின் மாதிரி வடிவங்கள், சுத்தப்படுத்த உபயோகப் படுத்தும் உபகரணங்களின் தமிழ்ப் பெயர்கள், சுத்தம் செய்யும் முறைகள் ஆகியவை படங்களுடன் வெளியிடப்பட்டுள்ளன.

—இரா. தாமோதரன்.

## காந்தி - ஜோஷி கடிதப் போக்குவரத்து

மொழி
பெயர்ப்பு: பி. ராமமூர்த்தி
வெளியீடு: நியூ செஞ்சுரி புக்
ஹவுஸ் பிரைவேட்
லிமிடெட், 41-பி,
சிட்கோ இண்டஸ்டி
ரியல் எஸ்டேட்,
சென்னை-600 098.

விலை: ரூ. 3.50 பக்கம் 110

கடிதங்கள் எழுதி இலக்கியத்தையும் வரலாற்றையும் உலகுக்குத் தந்தார் பண்டித ஜவகர்லால் நேரு. புகழ் பெற்ற எழுத்தாளர் டாக்டர் மு.வ. கற்பனைக் கடிதங்களை வரைந்து, பற்பல தத்துவங்களை நாட்டுக்குத் தந்திருக்கிறார். ஆனால் அண்ணல் காந்தியடிகளுக்கும் கம்யூனிஸ்ட் கட்சியின் செயலாளராக (1944) இருந்த பி.சி. ஜோஷிக்கும் நடைபெற்ற கடிதப் போக்குவரத்து இங்கே நூலாகத் தொகுத்துத் தரப்பெற்றிருக்கிறது.

இருவரின் கடிதங்களின் வாயிலாக இந்திய நாட்டின் வரலாறு, வெள்ளையர் ஆட்சிக் காலம், இந்தியரின் கடமைகள் மற்றும் அனைத்துலகச் செய்திகள், அக் காலச் சூழ்நிலை-யாவும் தெளிவாக்கப்பட்டுள்ளன.

1945-ல் முதற் பதிப்பாக வெளிவந்த இந்நூல் 38 ஆண்டுகள் கழித்து மீண்டும் 1983ல் வெளியிடப் பெற்றுள்ளது. இந்தத் தலைமுறையினருக்கு இந்நூல் அரசியல் அறிவைத் தருவதற்கு உதவுமென்பது உறுதி. நூலின் மொழிபெயர்ப்பு எளிமையாக இருப்பது பாராட்டுக்குரியது. அண்ணல் காந்தியடிகள்-ஜோஷி இருவரின் புகைப்படங்களையும் அவர்தம் கையெழுத்துப் படிகளையும் இந்நூலில் சேர்த்திருக்கலாம்.

—எஸ்.எல்.சுந்தரம்

> புத்தகங்கள் மனித சமூகத்திற்காகப் பேரறிஞர்கள் விட்டுச் சென்றுள்ள பரம்பரைச் சொத்தாகும். தலைமுறை [illegible] முறையாக இனி வரப்போகும் சந்ததியார்களுக்கு [illegible] வேண்டும்.
>
> —[illegible]
>
> சில புத்தகங்களை [illegible] துப் பார்க்க [illegible] வற்றை அப்படியே [illegible] வேண்டும். [illegible] நன்கு சுவைத்து [illegible] செய்யவேண்டும்.
>
> —பேக்கன்

## மாதர் மருத்துவம்

தொகுத்தவர் : டாக்டர் எஸ். சிதம்பரதாணுப்பிள்ளை,

வெளியீடு: சித்த மருத்துவ நூல் ஆராய்ச்சி நிலையம்,

இ-32, அண்ணா நகர் கிழக்கு, சென்னை-600102.

விலை: ரூ 15. பக்கம்: 173.

குழந்தைச் செல்வத்தின் அருமை பெருமைகளைப் பண்டை இலக்கியங்கள் பாராட்டிப் பேசுகின்றன. குறிப்பாகத் திருக்குறள், குழல், யாழ் இனிமையைவிட மழலைச் சொல் மேலானது என்று குழந்தை இன்பத்தைக் கோடிட்டுக் காட்டுகின்றது.

மழலைச் செல்வம் பெறுவதற்கு, மகளிர் நலம் மிகமிக முக்கியம் என்பதைச் சொல்லாமல் சொல்கிறது இந்நூல், இந் நூலில் மொத்தம் 256 பாடல்கள் உள்ளன. எல்லாப் பாடல்களும் மாதர் மருத்துவத்தைப் பேசுகின்றன. அப்பாடல்களுக்கு எளிய, இனிய உரை எழுதியுள்ளார் தொகுப்பாசிரியர் டாக்டர் சிதம்பரதாணுப்பிள்ளை

இந்நூலில் பெண்ணின் பருவ காலங்கள், கர்ப்பக் காலங்களில் வரும் நோய்கள், அவற்றைப் போக்கும் உபாயங்கள், கர்ப்பக் காலத்தில் உண்டாகும் நோய்களுக்கான மருந்துகள், பேறு கால யோசனைகள் முதலானவை விளக்கமாகக் கூறப்பட்டுள்ளன.



# தீயினால் சுட்ட புண் ஆறும்!





தீ விபத்து எப்படி ஏற்படுகிறது?

நம்முடைய அஜாக்கிரதையினால்!

சமையலறையில், தொழிற்சாலையில், அலுவலகத்தில், பள்ளியில், பட்டாசு வெடிப்பில் இப்படித் தீ விபத்துக்கள் அவ்வப்போது நிகழ்கின்றன. இதற்கெல்லாம் காரணம் நம்மையறியாமலேயே நாம் செய்யும் சிறு தவறுதான். சிகரெட் துண்டை வீசியெறிவது, சமையலறையில் கவனமின்மை போன்றவற்றால் இந்த அசம்பாவிதம் ஏற்படுகின்றது. அதனால் பொருட் சேதமும், உயிர்ச் சேதமும் ஏற்படுகின்றன. இவற்றையெல்லாம் நாம் தவிர்க்க வேண்டாமா?

தீ விபத்துக்கள் ஏற்பட்டு அதன் மூலம் தீப்புண் உண்டாகி, உயிருக்குப் போராடுபவர்களை, கீழ்ப்பாக்கம் மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் உள்ள 'தீவிர தீப்புண் சிகிச்சைப் பிரிவு' (Burns Intensive Care unit) உடனடியாகக் கவனிக்கிறது. இதற்கெனவே தனிப்பிரிவு ஒன்று இங்கே கட்டப்பட்டுள்ளது. இதன் தொடக்க விழா 6.3.85 அன்று நடந்தது.

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர் எச்.வி. ஹண்டே அவர்கள் இதற்கான புதிய கட்டடத்தைத் திறந்து வைத்தார். அப்போது அவர் பேசுகையில் தீ விபத்துக்கான காரணங்களை விளக்கினார்:

''தற்கொலை முயற்சியில் சில இளம் பெண்கள் தீ வைத்துக் கொள்வதற்குக் காரணம் வரதட்சிணைக் கொடுமை.

''நமது நாடு சுதந்திரம்பெற்று 38 ஆண்டுகள் ஆகியும், நாம் நாகரிகத்தில் வளர்ச்சி அடைந்தும் அந்தக் கொடுமை மாறவில்லை என்பதால் வெட்கப்பட வேண்டும். எனவே, தற்கொலை முயற்சியில் ஏற்படும் தீவிபத்தைத் தடுக்கும் முதல் நடவடிக்கையாக வரதட்சிணைக் கொடுமையை நமது சமுதாயத்திலிருந்து களைய வேண்டும்.





''தீப்புண்ணுக்குச் சிகிச்சை அளிப்பதில் இப்போது இந்தியாவிலேயே கீழ்ப்பாக்கம் மருத்துவமனை சிறந்து விளங்குகிறது. இந்த நிலையில் இந்த மருத்துவமனைக்கு மேலும் நவீன வசதிகள் செய்யப்பட்டுள்ளன''.

கீழ்ப்பாக்கம் மருத்துவமனை பிளாஸ்டிக் சர்ஜரிப் பிரிவுத் தலைவர் டாக்டர் மாதங்கி ராமகிருஷ்ணன், ''இந்தச் சிகிச்சைப் பிரிவுக்குத் தமிழக அரசு 14 லட்சம் ரூபாய் அனுமதித்தது. இதில் 11 இலட்சம் செலவில் கட்டடப் பணிகள் முடிந்தன. மேலும் இந்தப்பிரிவில் குளிர் சாதன வசதிகளும் செய்யப்பட இருக்கின்றன. 4 உதவி மருத்துவர்கள் மற்றும் செவிலியர்கள், உதவியாளர்கள் உட்படக் கூடுதல் பணியாளர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர். தீப்புண் சம்பந்தமாகப் பல்வேறு ஆராய்ச்சிகளும் இங்கு நடத்தப்படவிருக்கின்றன'' என்றார்.

மக்கள் நல்வாழ்வுத்துறை ஆணையர் மற்றும் செயலர் திரு ஆர்.சண்முகம், இ.ஆ.ப. தமது தொடக்கவுரையில், தீ விபத்து தவிர்ப்பு பற்றிய யோசனைகளைக் கூறினார்.

மருத்துவக்கல்வி இயக்குநர் டாக்டர் திருமதி லலிதா காமேஸ்வரன், உலகச் சுகாதார நிறுவனத்தின் தீப்புண் சிகிச்சைத் திட்டத்தைத் தொடங்கி வைத்தார்.

கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை முதல்வர் டாக்டர் திருமதி ஜி.வி.சுரையா பேகம் அனைவரையும் வரவேற்றார்.

—பி. வி. கிரி

## கிராமத் தொழிலாளர் பயிற்சி வகுப்பு :

ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 4,500 கோடி ரூபாய் அளவுக்குச், செலவிடப்பட்ட ஒருங்கிணைந்த கிராமப்புற மேம்பாட்டுத் திட்டப்பணிகளின் கீழ் ஏழாவது ஐந்தாண்டுத் திட்டக்காலத்தில் பன்னிரண்டாயிரம் கோடி ரூபாய் அளவுக்குச் செலவிடப்படும். மேலும் இருபதாயிரம் குடும்பங்கள் கொண்ட ஒவ்வொரு வட்டாரத்தில் தலா அறுநூறு குடும்பங்களை இத்திட்டத்தின் கீழ் பயன்பெறச் செய்வது என்றுள்ள குறியீட்டை ஆயிரம் குடும்பங்கள் என உயர்த்தவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

இத்தகைய மக்கள் நலத்திட்டங்களின் பலன்களை ஏழை மக்கள் பெறுவதற்கு உதவும் வகையில் ''கிராமப்புற இயக்க அமைப்பாளர்கள்'' பணியாற்ற வேண்டும் என்று தமிழ்நாடு அரசின் தொழிலாளர் நலத்துறைத்தனிச் செயலர் திரு எச்.பி.என். ஷெட்டி, இ.ஆ.ப. கூறினார்.

சென்னையிலுள்ள தொழிலாளர் கல்வி மண்டல இயக்குநரகமும், பாரத ஸ்டேட் வங்கி அலுவலர்கள் சங்கத்தின் தொழிற்சங்கக் கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனமும் இணைந்து நடத்தும் 'கிராமப்புறத் தொழிலாளர்களை இயக்க ரீதியில் உருவாக்குபவர்களுக்கான பயிற்சி வகுப்பை 11.2.'85 அன்று சென்னையில் தொடங்கி வைத்தார்.

பாரத ஸ்டேட் வங்கி அலுவர்கள் சங்கத்தின் பயிற்சிக் கட்டத்தில் தொடங்கிய இந்தப் பயிற்சி வகுப்பு, இரண்டு மாதக் காலம் நடைபெறும். இதில் மொத்தம் எழுபத்தைந்து பேர் பங்கு கொள்கிறார்கள். இத்தகைய பயிற்சி வகுப்பு நடைபெறுவது தமிழ்நாட்டிலேயே இதுதான் முதல் முறை,

தலைமை வகித்துப் பேசிய தொழிலாளர் நல ஆணையர் திரு. ராஜா சுப்பிரமணியன், விவசாயத் தொழிலாளர்களுக்குக் குறைந்த பட்சக் கல்வி நிர்ணயம் உள்ளிட்ட அரசின் பல்வேறு திட்டங்களின்கீழ் கிராம மக்கள் பயன்பெற வேண்டும் என்ற அடிப்படையில் தான் இந்தக் கிராமப்புற இயக்க அமைப்பாளர்களுக்கான பயிற்சி வகுப்பு தொடங்கப் பட்டுள்ளது என்றார்.

# பார்த்தோம் படித்தோம்

மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம். ஜி. ஆர். அவர்களை-தமிழகத் திரைப்படத் துறையினர் சந்தித்து வாழ்த்து தெரிவித்த செய்தியைப் படத்துடன் வெளியிட்டமைக்கு மிக்க நன்றி.

பட அதிபர்,
**எம். சரவணன்**
சென்னை—26.

மாண்புமிகு முதல்வர் எம்.ஜி.ஆர். அவர்கள் வருகையை பற்றியும், பதவிப் பிரமாணம் எடுத்துக் கொண்டதைப் பற்றியும் வண்ணப் படங்களில் வெளியிட்டதற்கு எங்கள் உள்ளம் கனிந்த பாராட்டுகள்.

**என். காசி**
மானாம்பதி.

முதல்வர் முழு நலம் பெற்றுப் புன்னகையோடு கையசைக்கும் அட்டைப்பட அழகையும், இதழின் உள் இருந்த வண்ணப் படங்களையும் என்னவென்று வருணிப்பது!

**கே. ஆர். இராஜேந்திரா**
கருவலூர்.

முதல்வரின் தமிழக வருகையின் போது எடுத்த புகைப்படங்கள் அருமை. நேரில் வரவேற்பு விழாவிற்கு வந்திருந்தாலும் அவ்வளவு தெளிவாகப் பார்த்திருக்க முடியாது!

**—தா. நா. உமாபதி**
தருமபுரி.

மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம். ஜி. ஆர். அவர்களுக்காக உயிர்விட்ட தியாக தீபங்களை நினைத்துக் கண்ணீர் சிந்தினேன்!

**—கமருதீன்-சர்புதீன்**
திட்டச்சேரி.

அமைச்சர்களின் வாழ்க்கைக் குறிப்புகள் மூலம், அமைச்சர்கள் பற்றிய விவரங்களைக் குறித்துக் கொண்டேன்.

**திருச்செந்தூர் மணியன்**
திருச்செந்தூர்.

1-3-85 இதழில் 'இரு ரோஜா மலர்கள்' எனும் தலைப்பில் ரோஜாவின் ராஜாவையும்(நேரு) ராஜாக்களில் ரோஜாவையும் (எம். ஜி. ஆர்.) ஒப்பிட்டுத் தொகுத்தளித்த திருமதி அருணா அப்பாசாமிக்கு நன்றி பல.

**—மதுரை வீ. ஹரிகிருஷ்ணன்**
மதுரை.

'இருரோஜா மலர்கள்' கட்டுரையும், 'சுவாமி விவேகானந்தர்' கட்டுரையும் என்னை மிகவும் கவர்ந்தன.

**—என். எம். செல்வகுமார்**
நெடுவிளை.

காஷ்மீர் ரோஜா நேரு, தமிழக ரோஜா எம். ஜி. ஆர். இருவரும் நாட்டின் இரு கண்கள் எனத் தெரிந்து கொண்டேன்.

**—என். எஸ். ஜெயராமன்**
நத்தம்

காஷ்மீர் ரோஜா, தமிழக ரோஜா சிந்தனை என்னை மிகவும் கவர்ந்தது.

**—புலவர்**
**இ. அகத்தீசுவரன்**
திருநெல்வேலி.

'சூப்பர் கம்ப்யூட்டர்' என்ற கட்டுரையில் கம்ப்யூட்டரை வடிவமைப்பதில் நாடுகளிடையே உள்ள போட்டியையும், அதன் அரிய பணிகளையும் அறிந்து கொண்டேன்.

**கெ. சாமிநாதன்**
காட்டுமன்னார்குடி.

'பட்டினி போக்கும் பச்சைப் பயிறு' மூலம் வளரும் இளம் தலைமுறையைச் செழுமையாக உருவாக்கமுடியும் என்ற டாக்டர் சி. ஆர். லட்சுமி நரசிம்மனின் கட்டுரை, தற்சமயம் குழந்தைகளுக்கு உடுக்கை இழந்தவன் கை போல உதவும் கருத்தாக அமைந்துள்ளது.

**—சரசுவதி செயராமன்**
திண்டிவனம்.

குடியரசு தின விழா நிகழ்ச்சிகளின் தொகுப்பு வெகு அருமை. மாணவர் பக்கம் பகுதியில் 'வேண்டும்' என்ற கவிதை படிக்கப் பயனுள்ளதாக இருந்தது.

**எஸ் ஆறுமுகம்**
பம்பாய்—6.

சென்னை மருத்துவக் கல்லூரி 150வது ஆண்டு பொன் விழா பற்றிய கட்டுரை மிகவும் பயனுள்ளதாக இருந்தது.

**என். எஸ். ஜெயராம்**
கோவில்பட்டி.

1-3-85 தமிழரசு இதழில் 'விவேகானந்தர்' பற்றிய செய்திகளும், 'உத்தம தர்மம்' கதையில் மனிதர்களுக்கு அறிவுறுத்தப் பட்ட செய்திகளும் பயன் மிக்கவை.

**—எஸ். பி. சந்தான ராஜகோபால்**
அக்கரைக்கோட்டகம்.

, நத்தம்,

'தமிழரசு' இதழில் கேள்வி-பதில் பகுதி ஆரம்பிக்க வேண்டும்.

**—பா. புகழேந்தி**
வடார்க்காடு.

தமிழகத்தின் தங்கங்கள் முதல்வர் டாக்டர் எம். ஜி. ஆர். துணைக் குடியரசுத் தலைவர் திரு. வெங்கட்ராமன் இருவரும் நேசத்துடன் கட்டித் தழுவும் காட்சி காண்போர் மனத்தை உவகை கொள்ளச் செய்யும்.

**—சைதை இரா. சி. இரஞ்சன்**
சென்னை—15.

'எதையும் தாங்கும் புதிய இதயம்' (அறிவியல் சாளரம்) படிக்கப் படிக்கத் திருப்தி அளித்தது.

**—வி. பி. பூபதிபாண்டியன்**
வெங்கல்.

# கடற்கரையில் குடும்பநலக் கலைவிழா

தமிழ்நாடு குடும்ப நலத் துறை சார்பில் சென்னைக் கடற்கரை, சீரணி அரங்கில் 16.3.85 அன்று மாலை கலை விழா நடைபெற்றது. இதையொட்டி உழைக்கும் மகளிர் சங்கமும், சென்னை மாவட்ட அரிமா சங்கங்களும் இணைந்து குடும்பக் கட்டுப்பாடு பிரச்சார ஊர்வலத்தை நடத்தின

ஊர்வலம் சென்னை அரசினர் தோட்டத்தில் உள்ள ராஜாஜி மண்டபத்தில் இருந்து புறப்பட்டது. ஊர்வலத்தை தமிழக அரசு 2-வது செயலர் திரு டி. வி. அந்தோணி, இ.ஆ.ப. தொடங்கி வைத்தார். ஊர்வலத்தில் ஏறத்தாழ 3 ஆயிரம் பெண்கள் கலந்து கொண்டனர்.

ஊர்வலத்துக்கு முன்னர் 4 வீரர்கள் குதிரை மீது அமர்ந்து சென்றார்கள். பாண்டு வாத்தியங்கள் முழங்கிக் கொண்டு சென்றன. அலங்கார ஊர்திகள் மக்களைக் கவரும் வகையில் சென்றன.

சாலையில் இருமருங்கிலும் இருந்த பொதுமக்கள் இந்த ஊர்வலத்தைப் பார்த்தபோது மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர்.

வரலாற்றில் இடம் பெறத்தக்க இந்த வண்ணமிகு ஊர்வலத்தை, மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு ஆர்.சவுந்தரராசன், சென்னை மாநகராட்சி தனி அலுவலர் திரு சி.ராமதாஸ், இ.ஆ.ப., குடும்பநல இயக்குநர் திரு எஸ். முருகராஜ், இ.ஆ.ப. சமூகநல இயக்குநர் திருமதி லீலா ராணி சுங்கத், இ.ஆ.ப. அரிமா மாவட்ட ஆளுநர் திரு வி.கே. பத்மநாபன், உழைக்கும் மகளிர் சங்கத் தலைவர் திருமதி ஜெயா அருணாசலம் ஆகியோர் நடத்திச் சென்றனர்.

தமிழக அரசு அலுவலக உதவியாளர் சங்கத்தைச் சேர்ந்த 300 பெண்களும் கலந்து கொண்டனர். பெண்கள் அரிமா சங்க உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.

ஊர்வலத்தில் சென்ற பெண்கள் "திட்டமிட்ட குடும்பம் தெவிட்டாத இன்பம்", "ஒன்று பெற்றால் ஒளிமயம்" போன்ற வாக்கியங்கள் எழுதப்பட்ட "பேனர்களை"ப் பிடித்த வண்ணம் வந்தனர்.

மேலும் "அதிகம் பெறாதே, அவதிப்படாதே", "ஆணோ பெண்ணோ இரண்டே போதும்" ஆகிய முழக்கங்களையும் சொல்லிக் கொண்டே சென்றனர்.

ஊர்வலம் சென்ற பாதை முழுவதும், இந்திய விமானப் படையைச் சேர்ந்த 'ஹெலிகாப்டர்' ஒன்று வானத்தில் பறந்து குடும்பக் கட்டுப்பாடு பிரச்சாரம் பற்றிய துண்டு வெளியீடுகளைப் போட்டுக் கொண்டே சென்றது.

ஊர்வலம் அண்ணாசாலை, வாலாஜாரோடு, திருவல்லிக்கேணி நெடுஞ்சாலை, பாரதி சாலை, கண்ணகி சிலை வழியாகக் கடற்கரை சீரணி அரங்கத்தைச் சென்றடைந்தது.

அதன்பின், சீரணி அரங்கில் தமிழகக் குடும்ப நலத்துறையின் சார்பில் "கடற்கரைக் கலை விழா" நடந்தது.

மக்கள் நல்வாழ்வுத்துறைச் செயலாளர் திரு ஆர்.சண்முகம், இ.ஆ.ப. விழாவைத் தொடங்கிவைத்தார்.

மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு ஆர். சவுந்தரராசன் அவர்கள் பேசுகையில், "நாட்டின் உயிரோட்டமாக இருக்கிற மக்கள், நாடு முன்னேற அரசு கொண்டு வந்துள்ள குடும்பநலத் திட்டத்தைப் பின்பற்ற வேண்டும்" என்று கேட்டுக் கொண்டார்.

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர் எச்.வி.ஹண்டே அவர்கள் பேசுகையில், "பல்வேறு மருத்துவமனைகளில் குடும்பக் கட்டுப்பாடு சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட பெண்களை, அரிமா சங்கத்தைச் சேர்ந்த பெண்கள் சென்று சந்தித்து, அவர்களுக்குத் தேவையான உதவிகளைச் செய்ய வேண்டும்" என்றார்.

**தொகுப்பு : அ. மருதவிநாயகம்**

சென்னை மாநகராட்சியும், குழந்தைகள் நல சங்கமும் சேர்ந்த, "கொழு கொழு" குழந்தைகள் போட்டி நடத்தின. அதில் பரிசு பெற்ற ஒரு குழந்தை





# பாவேந்தர் புகழ் பாடும் மாமன்றம்

இன்னிசை காற்றிலே கலந்து வந்து காதிலே தேனாய் ஒலிக்கிறது.

இசை வந்த திசை நோக்கிச் செல்கிறோம்.

அங்கே, மாணவ மணிகள் இசை மழை பொழிந்து கொண்டிருந்தனர்.

ஆம். பாவேந்தர் பாரதிதாசன் மக்கள் கலை இலக்கிய மன்ற இசை விழாவில்தான் இந்த இனிய காட்சி.

15.3.85 அன்று சென்னை அண்ணாசாலையிலுள்ள தேவநேயப் பாவணர் மாவட்ட மத்திய நூலகக் கட்டடத்தில் இந்த இசை விழா நடந்தது. இந்த விழாவுக்கு வந்திருந்த அனைவரையும் டாக்டர் சு. பாலச்சந்திரன் வரவேற்றுப் பேசுகையில், மன்றத்தின் நோக்கங்களை விளக்கிக் கூறினார்.

தமிழ் வளர்ச்சி - பண்பாட்டுத் துறைச் செயலர் டாக்டர் அவ்வை நடராசன் சிறப்புரையாற்றுகையில், பாவேந்தர் பாடல்களின் சிறப்புகளை எடுத்துரைத்தார்.


மாண்புமிகு கல்வி அமைச்சர் திரு செ. அரங்கநாயகம் அவர்கள் தம் தலைமையுரையில் குறிப்பிட்டார்:

''கலை ஒரு சக்தி வாய்ந்த ஆயுதம். அதைச் சரியான வகையில் பயன்படுத்த முயல வேண்டும் - மக்கள் முன்னேற்றத்துக்குப் பயன்படுத்த வேண்டும். பண்பாடு உயரவும், சமுதாயம் மேம்பாடு அடையவும் பாரதிதாசன் பாடல்கள் உதவும்''

இவ்விழாவில் தமிழ்நாடு அரசு இசைக்கல்லூரி மாணவ, மாணவியர் பாவேந்தர் பாரதிதாசனார் பாடல்களைப் பண்ணுடன் பாடி எல்லோரையும் மகிழ்வித்தனர்.

பி.வி.ஜி.

12 ஆம் பக்கத் தொடர்ச்சி



படுத்துவதற்கான ஆய்வையும், பெரிய நீர் வாயில்களில் ஆய்வை மேற்கொள்ளவும், நீரைச் சிக்கனமாகப் பயன்படுத்துவது குறித்து ஆய்வை மேற்கொள்ளவும் தமிழ்நாடு தூய்மைக்கேடு பாதுகாப்பு வாரியம் உத்தேசித்துள்ளது. 1985–86ஆம் ஆண்டில் ரூ. 9.76 இலட்சம் செலவில் வட்டார ஆய்வுக் கூடங்களை அமைத்தும், சுற்றுப்புறச் சுகாதார வாரியத்தை வலுப்படுத்தியும், அதற்கு உதவ அரசு முடிவு செய்துள்ளது.

### மின்னணுவியல், அறிவியல், தொழில்நுட்பம்

**79.** இம் முக்கியத் துறையின் தனிப் பொறுப்பை மேற்கொள்ளவும், அதன் விரைவான வளர்ச்சியை உறுதி செய்யவும், மின்னணுவியல், அறிவியல், தொழில் நுட்பம் என்ற புதிய துறை ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இம்மாநிலத்தில் மின்னணுவியல் தொழிலை விரைவாக விரிவுபடுத்துவதும், நவீன வாழ்வில் மின்னணுவியல் தொழில் நுட்பத்தைப் பரவலாகப் பயன்படுத்தச் செய்வதும் அரசின் கொள்கையாகும். தமிழ்நாடு, மின்னணுவியலில் முதன்மை இடம் வகிக்கும் வகையில் மின்னணுவியல் தொழில் வளர்ச்சியில் பெரும் திட்டத்தைத் தொடங்குவதற்காக தமிழ்நாடு மின்னணுவியல் நிறுவனம் வலுப்படுத்தப்பட்டு போதிய நிதி வசதியும் அளிக்கப்பட்டுள்ளது. நடைமுறையில் மின்னணுவியல் தொழில்கள் முழுவதும் அடங்கியுள்ள 19 கூட்டு அமைப்புகளைத் தொடங்க இக்கழகம் அனுமதி பெற்றுள்ளது. இப் பத்தாண்டுக் காலத்தில் பொது, கூட்டுறவு துறைகளில் மட்டும், ரூ. 200 கோடிக்கு அதிகமாக மூலதனத்தைத் திரட்ட இயலும் என இந் நிறுவனம் எதிர்பார்க்கிறது. சென்ற ஆண்டின் சொற்ப விற்பனைத் தொகையான ரூ. 35 இலட்சத்திலிருந்து, நடப்பாண்டில் எல்காட் நிறுவனமும், அதன் கூட்டு நிறுவனங்களும் ரூ. 5 கோடி விற்பனைத் தொகையையும், வரும் ஆண்டில் ரூ. 15 கோடி விற்பனைத் தொகையையும் எட்ட இயலும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. மாநில அரசு 1985–86ஆம் ஆண்டில் மேலும் ரூ. 1.5 கோடி அளவுக்கு எல்காட் நிறுவனத்திற்கு நிதியுதவி அளிக்கும்.

**80.** 1985–86ஆம் ஆண்டில் ரூ. 6.25 இலட்சம் செலவில் மூலப்பொருள் கிடங்கையும், ரூ. 9 இலட்சம் செலவில் கோயம்புத்தூர் தொழிற்பேட்டையில் பொது வசதி நிலையத்தையும் ரூ. 6.7 இலட்சம் செலவில் திருச்சியில் மின்னணுவியல் பொருள்-மேம்பாட்டு வளர்ச்சி மையத்தையும் ஏற்படுத்த அரசு கருதியுள்ளது.

**81.** மேற்கு மலைத் தொடர் பொருளாதார வளர்ச்சியில் இயற்கை ஆதாரங்களை சரிய அளவில் பயன்படுத்துவதற்கும், நிலத்தடி நீர், ஏரிப் பாசனம் ஆகியவற்றைத் திறம்படவும் ஒருங்கிணைந்த முறையிலும் பயன்படுத்துவதற்கும் தொலை உணர்வுத் தொழில் நுட்ப முறைகள் பின்பற்றப்பட்டு வருகின்றன. அண்ணா பல்கலைக்கழகத்தில் அமைக்கப்பட்டுள்ள தொலை உணர்வு மையம், ஒன்றுக்கொன்று தொடர்புள்ள, முறைப்படுத்தும் கணிப் பொறிகளையும் ஏனைய நவீன சாதனங்களையும் வாங்க வேண்டியுள்ளது. 1985–86ஆம் ஆண்டில் ரூ. 80 இலட்சம் செலவில் தொலை உணர்வு மையத்தை வலுப்படுத்தும் திட்டத்திற்கு அரசு ஒப்புதலளித்துள்ளது.

### வேலைவாய்ப்புப் பணிகள்

**82.** தொழில் நுட்பத் தேர்ச்சி பெற்றோரை உருவாக்குவதற்கு அரசு முன்னுரிமை அளித்து வருகிறது. ரூ. 20 இலட்சம் செலவில் காந்தி கிராமத்திலும், திருப்பூரிலும் இரு மகளிர் தொழில் பயிற்சி நிறுவனங்களை ஏற்படுத்த அரசு கருதியுள்ளது.

### செய்தி-சுற்றுலா

**83.** தகவல் தொழில் நுட்பவியலில் நவீன சாதனங்களை அதிக அளவில் பயன்படுத்த செய்தி-மக்கள் தொடர்புத் துறை திட்டமிட்டு, நவீன தொழில் நுட்ப முறைகளைப் பயன்படுத்துவதில் ஈடுபட்டும் வருகிறது. இந்த மின்னணுவியல் யுகத்தில், வீடியோ, மிகச்சிறந்த தொடர்பு சாதனமாக ஆகிவிட்டது. அரசின் முக்கிய நேரிட விளம்பரச் சாதனமாக மாவட்டங்களில் படிப்படியான முறையில் இவற்றை நிறுவத் துறை திட்டமிட்டுள்ளது. 1985–86-ல் இதற்கு ஆகும் செலவு ரூ. 4.75 இலட்சமாகும். மாணவர்களின் பயனுக்காக நவீன தொலைக்காட்சி கருவிகள் இறக்குமதி செய்யப்பட்டு, திரைப்பட, தொலைக் காட்சி நிலையத்தில் நிறுவப்பட்டுள்ளன. பொதுக் கூட்டங்களையும், கலை நிகழ்ச்சிகளையும் ஏற்ற வகையில் நடத்தவும் தகவல் மையங்களை அமைக்கவும் மாவட்டங்களில் படிப்படியான நிலையில் திரையரங்கு—தகவல் நிலையங்களைக் கட்டும் பணியை மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது. கவியரசர் கண்ணதாசன் நினைவாக, காரைக்குடியில் மணிமண்டபம் ஒன்றையும் திருப்பூரில் விடுதலை வீரர் திருப்பூர் குமரனின் நினைவாக நினைவாலயம் ஒன்றையும் ரூ. 45 இலட்சம் செலவில் கட்ட அரசு முடிவு செய்துள்ளது.

**84.** தமிழ்நாட்டில் சுற்றுலாவை ஊக்குவிப்பதற்கு அரசு அதிகச் சிறப்பிடம் அளித்துள்ளது. அதன்படி உதகமண்டலத்தில் மொத்தம் ரூ. 25 இலட்சம் செலவில் மிதக்கும் உணவகமும், மக்கள் நடந்து செல்வதற்கான அலங்காரப் பாலமும் கட்டக் கருதப்பட்டுள்ளது. மாவட்டச் சுற்றுலா மையங்களை மேம்படுத்துவதற்காக 1985–86ஆம் ஆண்டில் ரூ. 8 இலட்சம் வழங்க அரசு கருதியுள்ளது. இம் மாநிலத்தில் சுற்றுலா—வளர்ச்சித் திட்டத்தை மேம்படுத்துவதை விரைவுப்படுத்துவதற்காக, கூட்டுத் துறையில் அரசு தனியார் தொழில் முனைவோருடன் பங்கு கொண்டு சுற்றுலாத் திட்டத்தைச் செயற்படுத்தக் கருதி வருகிறது. வெளிநாட்டில் வசிக்கும் இந்தியர்கள் இம் மாநிலத்தின் சுற்றுலா வளர்ச்சித் திட்டத்தில் முதலீடு செய்வதை அரசு ஊக்குவிக்கும். இதனால் அந்நியச் செலாவணி வகையில் சுற்றுலாத் துறைக்குக் கூடுதலாக முதலீடு கிடைப்பது மட்டுமின்றி அனைத்து நாட்டு தரத்திற்கேற்ப சுற்றுலா அடிப்படை வசதிகள் அளிப்பதில் வெளிநாட்டு தொழில் நுட்பமுறைகளும் திறமையான நிருவாக அமைப்பு முறைகளும் கிடைக்கும்.

## நிறுவன நிதி

**85.** வணிக வங்கிகள் முன்னுரிமைப் பிரிவுகளுக்குக் கடன் வசதி அளிப்பதை முறைப்படுத்துவதற்காக நிறுவன நிதித் துறையை அரசு ஏற்படுத்தியது. இத்துறை, மாவட்ட ஆட்சியர்கள் மூலமாக, கிராமப்பகுதி மேம்பாட்டு ஒருங்கிணைந்தத் திட்டம், சிறு உழவர்களுக்கும் சொற்ப நில உழவர்களுக்கும் நிதி உதவியளிக்கும் பெருந் திட்டம், படித்த, வேலையற்ற இளைஞர்களுக்குப் பிரதமரின் சுயவேலை வாய்ப்புத் திட்டம் முதலிய பல்வேறு திட்டங்களின்கீழ்ச் சமூகத்தில் பொருளாதார வகையில் நலிந்த பிரிவினருக்கு வங்கிகளிடமிருந்து கடனுதவி அளிக்க ஏற்பாடு செய்துள்ளது. 1984–85ஆம் ஆண்டில் ரூ. 100 கோடி நிதியுதவியுடன் 5 இலட்சம் பேருக்கு உதவியளிக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. ஆனால், இந்த ஆண்டின் முதல் 9 மாதங்களிலேயே 6 இலட்சம் பேருக்கு அதிகமாகச் சுமார் ரூ. 165 கோடி வழங்கப்பட்டுள்ளது. இதே வேகத்தில் 1985–86ஆம் ஆண்டிலும் இத் திட்டம் செயற்படுத்தப்படும்.

## தொழிலாளர் நலன்

**86.** குடிமக்கள் என்ற வகையில் கிராமத் தொழிலாளர்களின் உரிமைகளையும் கடமைகளையும் எடுத்துக் கூறவும், தொழில் சங்கங்கள், கூட்டுறவுச் சங்கங்கள் ஆகியவற்றை அமைத்துக்கொள்ள ஊக்கமளிக்கவும் அவர்களுக்குத் தொழிலாளர் நலச் சட்டங்கள், சமூக நலச் சட்டங்களை எடுத்துக் கூறவும் வளர்ச்சி வட்டார அளவில் கிராம கௌரவ அமைப்பாளர்களை நியமிப்பதற்காக திட்டம் கொண்டு வரப்பட்டுள்ளது. இத்திட்டம் 1984–85ஆம் ஆண்டில் 75 வளர்ச்சி வட்டாரங்களில் எடுத்துக் கொள்ளப்பட்டு வருகிறது. இது மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டமாகும். 1985–86ஆம் ஆண்டில் மேலும் 100 வளர்ச்சி வட்டாரங்களில் இத் திட்டத்தை நீட்டிக்குமாறு மத்திய அரசு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.


## தமிழ் வளர்ச்சி

**87.** தமிழகத்தின் தொன்மையான பண்பாட்டையும் பாரம்பரியத்தையும் கட்டிக் காக்கும் பொருட்டும் தமிழ் பண்பாட்டின் பல்வேறு கருத்துக்கூறுகளின் வளர்ச்சிக்கு ஊக்கமும் ஆக்கமும் அளிக்கவும், தமிழ் மொழியை ஆட்சி மொழியாகச் செயற்படுத்தவும் தமிழ் வளர்ச்சி-பண்பாட்டுத் துறை அண்மையில் அமைக்கப்பட்டுள்ளது. தமிழ் ஆட்சி மொழியாக இருப்பதால், அரசு தன்னுடைய அலுவல்கள் அனைத்தையும் தமிழில் நடத்த தொடர்ந்து நடவடிக்கைகளை மேற்கொள்ளும். பல்வேறு ஊக்கத் தொகைகள் அளிப்பதன் மூலமும் அதாவது தற்போதுள்ள திரு.வி.க. பரிசு போன்று திருவள்ளுவர், பேரறிஞர் அண்ணா ஆகியோரின் பெயரில் புதிய பரிசுகளை வழங்கவும் அரசு திட்டமிட்டுள்ளது. பண்டைய தமிழ் மக்களின் பண்பைச் சிறப்பாக எடுத்தியம்புவது சங்க இலக்கியமாகும். சங்க காலப் புலவர்களின் நினைவாக, அவர்கள் பிறந்த இடங்களில் நினைவுச் சின்னம் எழுப்பும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளது. முதற்கண் பல்வேறு மாவட்டங்களில் தெரிந்தெடுக்கப்பட்ட 10 இடங்களில் இத்தகைய நினைவுச் சின்னங்களை நிறுவ அரசு திட்டமிட்டுள்ளது.

## வருவாய்

**88.** 1985–86-ல் செங்கற்பட்டு மாவட்டத்தில் மதுராந்தகம் வட்டத்தை இரண்டாகப் பிரித்து செய்யூரில் புதிய வட்டத்தை ஏற்படுத்த அரசு





திட்டமிட்டுள்ளது. அதேபோல 1985–86-ல் தருமபுரி, ஓசூர் வருவாய் கோட்டங்களைச் சீரமைத்து ரூ. 22 இலட்சம் செலவில் கிருஷ்ணகிரியைத் தலைமையிடமாகக் கொண்டு புதிய கோட்டம் ஒன்றை ஏற்படுத்தவும் கருதப்பட்டுள்ளது.

## முன்னாள் படைவீரர் நலன்

**89.** பணியிலிருந்து விடுவிக்கப்பட்ட படைவீரர்கள் மறுவாழ்வுக்கு வழி வகுத்து, அவர்களை ஏனைய தொழில்களில் அமர்த்த வகை செய்யும் நலத் திட்டங்களுக்கு அரசு சிறப்பிடம் அளித்து வருகிறது. எனவே, முன்னாள் படைவீரர்களுக்கு நிதி உதவி அளிக்கவும் பல்வேறு வணிக நடவடிக்கைகளைத் தொடங்கவும், நடத்தவும் எல்லாவிதமான உதவிகளை அளிக்க முன்னாள் படைவீரர்கள் நல நிறுவனமொன்றை அமைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

## கப்பல் போக்குவரத்து


**90.** அனல் மின் உற்பத்தி நிலையங்கள் நன்கு செயல்படவும், அவற்றின் உற்பத்தித் திறனை உயர்த்தவும் நிலக்கரியை மின் உற்பத்தி நிலையங்களுக்குக் குறைவான செலவில் எடுத்துச் செல்ல இயலும் வகையில், அரசு சிறப்பாக வடிவமைக்கப்பட்ட கப்பல்கள் ஐந்தைப் பயன்படுத்தத் திட்டமிட்டுள்ளது. முதல் கப்பல் கட்டப்பட்டு வருகிறது. இது விரைவில் செயற்படத் தொடங்குமென்று எதிர்பாக்கப்படுகிறது.

## சிறார் நலத் திட்டங்கள்

**91.** 1982 ஜூலையில் கொண்டு வரப்பட்ட முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுத் திட்டம் நம் மாநிலத்தில் மட்டுமின்றி பிற மாநிலங்களிலும் பிற நாடுகளிலும் பாராட்டுதலைப் பெற்று வருகிறது. இத் திட்டம் 65,344 மையங்களில் செயற்பட்டு வருகிறது. 2 முதல் 4 வயதுவரை உள்ள 24.34 இலட்சம் குழந்தைகளும் 5 முதல் 9 வயது வரையுள்ள 38.65 இலட்சம் குழந்தைகளும், 10 முதல் 15 வயது வரையுள்ள 16.72 இலட்சம் சிறுவர், சிறுமியரும் இதனால் பயன் பெற்று வருகின்றனர். இவர்களுடன் முதியோர் உதவித் தொகை பெறுபவர்களும், முன்னாள் படை வீரர்களும் இதனால் பயன்பெறுகின்றனர். இத் திட்டம் 10 முதல் 15 வயது வரை உள்ளவர்களுக்கு 1984ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 15ஆம் நாள் முதல் நீட்டிக்கப்பட்டது. இப்புள்ளி விவரங்கள், இவர்களுக்குச் சத்துணவை முறையாக வழங்குவதில் உள்ள பிரச்சினைகளின் அளவைத் தெளிவாகக் காட்டும். குழந்தைகளின் நலனுக்காக அரசு பெரு முயற்சி எடுத்துக் கொண்டு அயராது பாடுபட்டு வருகிறது என்பதை இத் திட்டம் வெற்றிகரமாகச் செயற்பட்டு வருவதிலிருந்து தெரிந்து கொள்ளலாம். இத் திட்டத்தின்கீழ் பயனடையும் சிறார்களின் உயரமும் எடையும், இந்திய மருத்துவ ஆராய்ச்சிக் குழு தெரிவித்த அளவைவிட கடந்த 12 மாதங்களில் அதிகரித்துள்ளது என்பது அண்மையில் நடத்தப்பட்ட ஆய்விலிருந்து தெரிய வருகிறது. திட்டம் தொடங்குகையில் 32 விழுக்காடு குழந்தைகள் ஊட்டச் சத்துடன் இருந்தனர். ஓராண்டுக்குப் பின்னர் 78 விழுக்காடு குழந்தைகள் ஊட்டச் சத்து பெற்று உடல் நலனுடன் வாழ்கின்றனர். இது மட்டுமல்ல, தொடக்கப் பள்ளிகளில் சேரும் மாணவர்களின் எண்ணிக்கை இத்திட்டத்தின் பயனாக உயர்ந்துள்ளது. பள்ளிப் படிப்பைப் பாதியில் விட்டுச் செல்லும் மாணவர்களின் எண்ணிக்கையும் குறைந்துள்ளது. சிறார் நலனுக்காக அரசு தற்போது விரிவான திட்டத்தைக் கொண்டுவரத் திட்டமிட்டுள்ளது. இவ்வாறாகக் குழந்தைகளின் அடிப்படை வசதிகள் அனைத்தையும் பாதுகாக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. முதல் வகுப்பிலிருந்து 8ஆம் வகுப்புவரை உள்ள, தகுதியுள்ள, ஏழைக் குழந்தைகள் அனைவருக்கும் 15–9–1985 முதல் ஆண்டொன்றுக்கு ரூ. 13.5 கோடி செலவில் இலவச சீருடை வழங்குவது என அரசு முடிவு செய்துள்ளது. கிராமப் பகுதிகளில் நெசவாளர்களுக்கு வேலைவாய்ப்பு அளிப்பதற்கும் இத் திட்டம் உதவும். தமிழ் நாடு கிராமப்புற இளைஞர் சுயவேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் சீருடைகளைத் தைக்க கிராமப் பகுதிகளில் உள்ள மகளிருக்குப் பயிற்சி அளிக்கப்படும். கிராம வளர்ச்சி ஒருங்கிணைந்த திட்டத்தின்கீழ் அவர்களுக்குத் தையல் இயந்திரங்கள் வழங்கப்படும். இவ்வாறாக, மகளிரின் பொருளாதார, சமூக நிலையை இத் திட்டம் உயர்த்தும். முதல் வகுப்பிலிருந்து எட்டாம் வகுப்பு வரையுள்ள, தகுதியுள்ள, ஏழை மாணவ-மாணவியருக்கு ஆண்டொன்றுக்கு ரூ. 11.5 கோடி செலவில் இலவசமாகப் பாடபுத்தகங்களை வழங்குவதென்று அரசு முடிவு செய்துள்ளது. பாலர் பள்ளி குழந்தைகளுக்கு முறையாக மருத்துவப் பரிசோதனையும் அளிக்கப்பட்டு வருகிறது. குழந்தைகளுக்கு முழு சுகாதாரப் பாதுகாப்பு அளிப்பதற்காக, சுகாதாரப் பாதுகாப்பு வசதிகள் வலுப்படுத்தப்படும். ஏனெனில் இக் குழந்தைகள்தாம் தமிழ் நாட்டின் வலிவுமிக்க வளம் மிக்க வருங்காலத்திற்கு வழி வகுப்பவர்.

## இளைஞர் நலப் பணிகள்

**92.** சமூக-பொருளாதார வளர்ச்சிக்கு இளைஞர்களின் ஏற்றமிகு எழுச்சியையும், பொங்கியெழும் ஆர்வத்தையும் ஆக்க பூர்வமாகப் பயன்படுத்த வேண்டுமென்பதோடு மட்டுமின்றி, இன்றைக்கு உலக



மக்கள் தொகையில் குறிப்பிடத்தக்க விழுக்காடு இளைஞர்கள் உள்ளனர் என்பதை உணர்த்தவுமே 1985ஆம் ஆண்டு, உலகம் முழுவதிலும் இளைஞர் ஆண்டாக அறிவிக்கப்பட்டுள்ளது. நம் நாட்டில்கூட, 1981ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்குப்படி, மொத்த மக்கள் தொகையில் 32 விழுக்காடு இளைஞர்கள் ஆவர்.

**93.** இளைஞர்கள் என்று குறிப்பிட, பல்வேறு நாடுகள், பல்வேறு வயதுத் தொகுதியினரைக் கணக்கில் எடுத்துக்கொண்டுள்ளன. இந்தியாவில் இதற்காக 15 முதல் 35 வயது வரையுள்ளவர்கள் கணக்கில் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளனர். இதன் அடிப்படையில், தமிழ் நாட்டில், மொத்தமுள்ள 4.85 கோடி மக்கள்தொகையில் 1.54 கோடி பேர் இந்த வயதுத் தொகுதியில் வருகின்றனர். அவர்களில் 75 இலட்சம் பேர் ஆண்கள், 79 இலட்சம் பேர் பெண்கள் ஆவர். இந்த வயதுத் தொகுதியினர்களில் ஆண்களை விட பெண்கள் அதிகமாக உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும். இவர்கள் மொத்த மக்கள் தொகையில் 32.25 விழுக்காடு ஆவர். ஆகையால் இந்த உலக இளைஞர் ஆண்டில், இளைய சமுதாயத்தினர் உடல் நலமும் உள்ளப்பாங்கும் பெறுவதற்கு மட்டுமின்றி, நாட்டின் பொருளாதார, சமூக வளர்ச்சியில் ஆக்க முறையில் பணியாற்ற அவர்களுக்குத் தேவைப்படக்கூடிய வசதிகளையும் வாய்ப்புகளையும் ஏற்படுத்திக்கொடுக்க நாம் திட்டம் தொடங்குவது சாலப் பொருத்தமுடையதாகும்.

**94.** ஏற்கெனவே, இவ்வரசு, இளைஞர் நலத்துறை என்ற ஒரு துறையைத் தனியாக ஏற்படுத்தியுள்ளது. நடப்பாண்டில், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டுக் கழகத்தை இவ்வரசு தொடங்கியுள்ளது. இளைஞர் சக்தியை ஒன்று திரட்டி ஆக்கப்பூர்வமான பணிக்குப் பயன்படுத்துவதற்காகவே இவை ஏற்படுத்தப்பட்டுள்ளன. தற்போது, தேசிய சமூகப் பணித் திட்டம், நேரு இளைஞர் மையங்கள் போன்ற சில அமைப்புகளும் திட்டங்களும் உள்ளன. சமுதாய, ஏனைய நடவடிக்கைகளில் பங்கு கொள்ள இவை, இளைஞர்களுக்கு வாய்ப்பை ஓரளவிற்கு நல்குகின்றன. வரும் ஆண்டில், இம் மாநிலத்தில் அனைத்து ஊராட்சிகளிலும் இளைஞர் மையங்களைத் தொடங்க வேண்டுமென அரசு கருதுகிறது. இவை இளைய சமுதாயத்தினரின் அறிவுத் திறனையும், உடல் உறுதியையும் வளர்க்க வகை செய்யும். சாதி, சமய அல்லது அரசியல் பாதிப்பின்றி, இளைஞர்கள் இம் முறையில் பணியாற்ற இந்த மையங்கள் வழிகாட்டி அமைப்புகளாகச் செயல்படும். இம் மாநிலத்திலுள்ள 378, ஊராட்சி ஒன்றியங்களில், ''இளைஞர் விளையாட்டு மையங்கள்'' தொடங்கப்படும். ஊராட்சி ஒன்றியங்கள் இவற்றிற்குத் தேவையான நிலத்தை அளிக்கும். தகுதியான பயிற்சி ஆசிரியர்களின் மேற்பார்வையின்கீழ், விளையாட்டுகள் அவை தொடர்பான நடவடிக்கைகளுக்கு அவசியமான அடிப்படை வசதிகளை இளைஞர் நலத் துறை செய்து கொடுக்கும். இம் மாநிலத்தில் இத்தகைய வசதிகளை செய்துகொடுப்பதற்கான அமைப்பு முறையை உருவாக்கக் கருதப்பட்டுள்ளது. இது இளைஞர் சக்தியை நன்முறையில் ஒன்று திரட்டும். மேலும், அவசியமாயின் அவர்களுக்குப் பயிற்சி அளித்து அவர்களிடம் மண்டிக் கிடக்கும் திறமையை வெளிக்கொணர்ந்து பிற்காலத்தில் அவர்கள் தேசிய, அனைத்து நாட்டு அளவில் புகழ் பெற்று விளங்கப் பெரிதும் உதவும். இத்திட்டத்திற்குத் தொடக்கத்தில் தோராயமாக ரூ. 4 கோடி அளவில் செலவாகுமென எதிர்பார்க்கப்படுகிறது. இது அரசின் நிதி உதவி மூலமும், உள்ளாட்சி மன்றங்கள் அளிக்கும் பங்குத் தொகை மூலமும் பெறப்படும்.

## அரசுப் பணியாளர்களுக்கான நலன்

**95.** நான்காவது சம்பளக் குழுவை அமைப்பது என்ற அரசின் முடிவை கடந்த ஆண்டு என்னுடைய வரவு-செலவுத் திட்ட உரையில் நான் அறிவித்திருந்தேன். சம்பளக் குழுவின் பணி, முடிவடையும் நிலையிலுள்ளது என்பதையும் அது அதன் அறிக்கையைத் தமிழ்

புத்தாண்டு பிறப்பதற்கு முன் (13-4-85) அரசுக்கு அளிக்கும் என்பதையும் நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். அரசு, அறிக்கையை ஆய்வு செய்து, அதன்படி விரைவில் நடவடிக்கை எடுக்கப்பட்டு ஆணைகள் பிறப்பிக்கப்படும் என்று இந்த அவைக்கு நான் உறுதியளிக்கிறேன்.

**96.** 1985-86ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில், குடும்ப நல நிதித் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் மொத்தத் தொகையை ரூ. 10,000-லிருந்து ரூ. 20,000 ஆக உயர்த்துவதற்குத் தேவையான நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. இத் திட்டத்தைச் செயற்படுத்துவதற்கான ஆணைகள் நடப்பாண்டில் வெளியிடப்படும்.

**97.** 1985ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 31ஆம் நாள் அன்றோ அதற்குப் பிறகோ ஒய்வு பெறும் அரசுப் பணியாளர்களின் ஒய்வூதியத் தொகையின் உச்ச வரம்பு ரூ. 1,500 என்பதை நீக்கிவிட அரசு முடிவு செய்துள்ளது. மேலும், பணிக் கொடையின் உச்ச வரம்பு ரூ. 36,000-லிருந்து ரூ. 50,000 ஆக உயர்த்தப்படும்.

### வரவு-செலவுத் திட்ட விவரம்


**98.** எதிர்பார்க்கக்கூடிய அனைத்து முக்கியமான செலவினங்களுக்கும் 1984-85ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் போதிய அளவுக்கு நிதி ஒதுக்கம் செய்ய அதிகக் கவனம் எடுத்துக் கொண்டிருந்த போதிலும்கூட திருத்த மதிப்பீட்டில் இவ்வாண்டிற்கான வருவாய்க் கணக்குக் குறித்த செலவு ரூ. 120 கோடி உயர்ந்துள்ளது. இந்த உயர்வுக்கான முக்கியமான காரணங்கள், நேரடிக் கொள்முதல் மூலம் பெறப்பட்ட நெல்லுக்கு குவின்டால் ஒன்றுக்கு ரூ. 15 என்ற வீதத்தில் உற்பத்தி ஊக்கத் தொகை வழங்கியது, கரும்பிற்கான அதிக விலைக்கு உதவித் தொகை வழங்கியது, முதியோர் ஒய்வூதியம் பெற இருந்தவர்களுக்கெல்லாம் ஒய்வூதியம் வழங்கியது, அனாதை இல்லங்களைத் தொடங்கியது, 94 உயர்நிலைப் பள்ளிகளுக்கு அனுமதி வழங்கியது, 9 முறை அகவிலைப்படி வீதங்களை உயர்த்தியது, அரசு ஊழியர்களுக்கு இடைக்கால நிவாரணத் தொகை வழங்கியது, வட்டாட்சியர்களுக்கு மதிப்பூதியத் தொகையை உயர்த்தியது, ஆண்டில் அறிவிக்கப்பட்ட ஏனைய பல நல்வாழ்வு நடவடிக்கைகள் ஆகியவையாகும். இருப்பினும் திருத்த மதிப்பீட்டின்படி மூலதனக் கணக்கின்கீழான செலவு, வரவு-செலவுத் திட்டச் செலவு அளவிலிருந்து அதிக மாற்றம் பெறவில்லை.

### நிதிநிலை

**99.** சட்டமன்றத்தில் வைக்கப்பட்ட 1983-84 ஆம் ஆண்டு திருத்த மதிப்பீட்டில், அவ்வாண்டில் எதிர்பார்க்கப்பட்ட பற்றாக்குறை. ரூ. 129.3 கோடி என்பதை மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் அறிவீர். இருப்பினும், 1983-84ஆம் ஆண்டிற்குரிய பற்றாக்குறை ரூ. 42.43 கோடியேயாகும். இவ்வாறு பற்றாக்குறை அதிக அளவுக்குக் குறைந்ததற்கான காரணம், செலவுகளை உன்னிப்பாகக் கண்காணித்து முறைப்படுத்தியதும் சிக்கனத்தை அதிக அளவிற்குக் கடைபிடிக்க பெருமுயற்சி எடுத்துக் கொண்டதுமாகும். மத்திய அரசு, நடுத்தரக் காலக் கடனாக ரூ. 55.78 கோடி வழங்கியது. இதுவும் இந்தக் குறைவுக்கான காரணமாகும். அவ்வாண்டிற்கான வரவு-செலவுத் திட்ட அறிக்கையை அவைமுன் வைத்து ஆற்றிய உரையில் அவ்வாண்டின் இறுதியில் நிகரப்பற்றாக்குறை ரூ. 167·5 கோடியிருக்கும் என்று நான் குறிப்பிட்டிருந்தேன். இருப்பினும், தற்போது தயாரிக்கப்பட்டுள்ள திருத்த மதிப்பீடுகள் அவ்வாண்டில் ரூ. 84.87 கோடி பற்றாக்குறையாக இருக்குமென்று காட்டுகிறது. இவ்வாண்டில் அரசு எண்ணற்ற நலத் திட்டங்களை அறிவித்திருந்த போதிலும்கூட இது குறித்த கூடுதல் செலவு, அதிகமாகக் கிடைக்கப்பெற்ற வருவாய்க் கணக்கு வரவுகள் மூலமும், ஏனைய நிலைகளில் செலவில் சிக்கனம் மேற்கொண்டதன் மூலமும் ஈடு செய்யப்பட்டுள்ளது. 1984-85ஆம் ஆண்டிற்கான தொடக்கநிலை சிறந்த முறையில் இருந்ததால் இந்த மேம்பட்ட நிலை ஏற்பட்டுள்ளது.

**100.** 1985-86ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் வருவாய்க் கணக்கில் வரவு ரூ. 2368.46 கோடியாகும். வருவாய்க் கணக்கில் செலவு ரூ. 2314.86 கோடியாகும். இதன்படி வருவாய்க் கணக்கில் ரூ. 53.60 கோடி உபரியாக இருக்கும். மூலதனச் செலவு ரூ. 156.95 கோடியாக இருக்குமென்றும் எதிர்பார்க்கப்படுகிறது. பொதுக்கடன் என்பதன்கீழ் நிகர உபரி ரூ. 166.75 கோடியாக இருக்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது. கடன்கள்-முன்பணங்கள் என்பதன்கீழான நிகர வரவு-செலவு ரூ. 312.65 கோடி பற்றாக்குறையைக் காட்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. மொத்தத்தில் தொகுநிதியில் ரூ. 249.26 கோடி பற்றாக்குறையாக இருக்கும். பொதுக் கணக்கு என்பதன்கீழ் உபரியாக உள்ள ரூ. 20.93 கோடியைக் கணக்கில் எடுத்துக் கொண்டால் ரூ. 228·33 கோடி பற்றாக்குறையாக இருக்கும். இத்துடன் தொடக்கப் பற்றாக்குறை ரூ. 84.87 கோடியைக் கணக்கில் எடுத்துக் கொண்டால் அடுத்த நிதியாண்டிற்கான இறுதிப் பற்றாக்குறை ரூ. 313.20 கோடியாக இருக்கும்.

**101.** அடுத்த நிதியாண்டிற்கான இறுதி பற்றாக்குறையைக் கணக்கிடுகையில் அரசுக்கு உள்ள முக்கியமான இடர்ப்பாடு, அடுத்த ஆண்டிற்கான திட்டச் செலவை மத்திய திட்டக்குழு இன்னும் முடிவு செய்யவில்லை என்பதும், ஏழாவது திட்டத்தின் முதலாண்டாக உள்ள 1985-86ஆம் ஆண்டிற்கு, மத்திய அரசிடமிருந்து கிடைக்கக்கூடிய அதிக நிதி உதவியைப் பொறுத்தமட்டில் தெளிவான விவரங்கள் பெறப்படாமையும் ஆகும். காட்கில் வகுத்த விதிமுறையின்படி மாநிலங்களுக்கு அளிக்கப்பட்ட மத்திய நிதி உதவித் தொகையில் தமிழ்நாடு குறைவான பங்கைப் பெற்றது என்பதை மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் அறிவர். ஏனெனில் நபர்வாரி வருமானம் தேசிய சராசரியைவிடக் குறைவாக உள்ள மாநிலங்களுக்கு




அளிக்க வேண்டிய உரியபங்கு நமக்கு மறுக்கப்பட்டுள்ளது. மக்கள் தொகை அடிப்படையில் நிதி உதவியின் அளவை நிர்ணயிக்கும் போது 1971ஆம் ஆண்டு மாநிலங்களில் இருந்த மக்கள் தொகையை அடிப்படையாகக் கொள்ளவேண்டுமென மத்திய அரசு சரியான முடிவை எடுத்திருந்தபோதிலும், அதே அடிப்படையை மாநிலங்களின் நபர்வாரி வருமானத்தைக் கணக்கிட எடுத்துக்கொள்ளவில்லை. அதன் விளைவாக ஆண்டு மக்கள்தொகை பெருக்கவீதம், தேசிய சராசரி அளவை விடக் குறைவாக உள்ள தமிழ்நாடு போன்ற மாநிலங்கள், குடும்ப நலத் திட்டத்தைச் செவ்விய முறையில் செயற்படுத்தியதன் காரணமாக, அதிக நபர்வாரி வருமானம் பெறும் மாநிலங்களாகக் காட்டப்படுகின்றன. இந்நிலையை மாற்றுமாறு நாம் மத்திய அரசை கேட்டுள்ளோம். அவ்வாறு செய்தால், மத்திய அரசு அளிக்கும் நிதியுதவியில் நம் பங்கு அதிகரிக்கும். மாநில அரசின் வரி விதிப்புத் திறன் அடிப்படையில் செய்த வரி விதிப்பு முயற்சிகள், போதுமான அளவிற்கு இயற்கை வளங்கள் இல்லாமை, ஏழ்மை நிலை, வேலைவாய்ப்பின்மை போன்ற ஏனைய பின்தங்கிய நிலை ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு தகுந்தவாறு முன்னுரிமைச் சலுகை அளித்து காட்கில் விதிமுறையைத் திருத்தியமைக்கவெண்டுமென நாம் கேட்டுள்ளோம். தேசிய கொள்கைகளை வெற்றிகரமாகச் செயல்படுத்துவதற்கும் சில முன்னுரிமைச் சலுகை அளிக்க வெண்டுமெனவும் கேட்டுள்ளோம். அதன் அடிப்படையில், தேசிய வளர்ச்சிக் குழு முடிவு செய்யக்கூடிய வகையில் இந்த விதிமுறையில் மாற்றம் செய்தால் அதன் மூலம், தமிழ்நாடு, மத்திய அரசிடமிருந்து உரிய பங்கை பெறக்கூடும். மேலும், மொத்தத்தில் ஏழாவது திட்டக் காலத்தில் கிடைக்கக்கூடிய நிதியுதவி ஆறாவது திட்ட காலத்தில் இருந்ததைவிட அதிகமாக இருக்குமென்று எதிர்பார்க்கிறோம். வரும் ஆண்டில், மத்திய அரசு, மாநிலங்களுக்கு, அளிக்கக்கூடிய நிதியுதவியின் அளவை மத்திய அரசு முடிவு செய்வதன் அடிப்படையில் கூடுதல் வருவாய் கிடைக்கும் என்றும் அதன் பயனாகப் பற்றாக்குறை குறையும் என்றும் எதிர்பார்க்கிறோம். வரவு-செலவுத் திட்டத்தில் வகுக்கப்பட்டுள்ள, திட்டச் செலவின் அளவு, மாநிலங்களுக்கான திட்ட ஒதுக்கீடுகளை மத்திய திட்டக்குழு முடிவு செய்வதன் அடிப்படையில் மாறக்கூடும் என்று நான் இங்கு குறிப்பிட விழைகிறேன்.

**102.** பொருளாதார வளர்ச்சியின் நோக்கங்களை எய்தவும், மக்களின் வாழ்க்கை நிலையை மேம்படுத்தவும் மாநில அரசு மேற்கொண்டுள்ள பெரும் பொறுப்புகளை நிறைவேற்ற அதிக நிதி வாயில்களைத் திரட்டவேண்டியது அவசியம் என்பதை முன்னரே குறிப்பிட்டுள்ளேன். மதிப்பிற்குரிய உறுப்பினர்களும் இதை ஏற்றுக் கொள்வார்கள். அதே நேரத்தில் இந்த நடவடிக்கைகள் பணவீக்கத்தை அதிகரிக்காமல் இருக்குமாறு பார்த்துக் கொள்ள வேண்டியது அரசின் நோக்கமாகும்.

**103.** இம் மாநிலத்தின் நிதி வாயில்களைப் பெருக்க வேண்டிய அவசியம் மிக அதிகமாக இருந்த போதிலும் மத்திய அரசின் வரவு-செலவுத் திட்டத்தில் அறிவித்துள்ள புதிய வரிகளால் பெட்ரோலியப் பொருட்களின் விலைகள் உயர்ந்துள்ள நிலையில், வரி உயர்வால் நுகர்வோர்களுக்கு இடர்ப்பாடு உண்டாகக் கூடிய பண்டங்கள் மீது புதிய வரிகள் விதிப்பதையும் வரிகளைக் கூடுதலாக்குவதையும் தவிர்த்துள்ளேன். சாதாரண மக்களைப் பாதிக்காத வகையில் கூடுதல் நிதி ஆதாரங்களைத் திரட்டக்கூடிய தெரிந்தெடுக்கப்பட்ட சில வரி விதிப்பு நடவடிக்கைகள் மட்டும்தான் கருதிப் பார்க்கப்பட்டுள்ளன. அடுத்த ஆண்டில் நிறைவேற்றக் கருதப்பட்டுள்ள வரி விதிப்பு நடவடிக்கைகளை தற்பொழுது கீழே குறிப்பிடுகிறேன் :—

(1) சாராயத்தின்மீது உள்ள ஆயத் தீர்வையை பல்க் லிட்டர் ஒன்றுக்கு 4 ரூபாயிலிருந்து 6 ரூபாயாக உயர்த்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.




(2) சாராயத்தின் மீதான விற்பனை வரி தற்பொழுதுள்ள 6 விழுக்காட்டிலிருந்து 25 விழுக்காடாக உயர்த்தப்படும்.

இந் நடவடிக்கைகளால் அரசுக்குக் கூடுதலாக ரூ. 40 கோடி அளவிற்கு வருவாய் கிடைக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. விற்பனையாளர்களின் ஆதாய விகிதம், நியாயமான அளவிற்கும் அதிகமாகவே இருப்பதால் இந்த வரிச் சுமையை அவர்களே ஏற்க முடியும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

(3) பல்வேறு வகை மோட்டார் வாகனங்கள் மீது தற்பொழுதுள்ள வரி விகிதத்தை உயர்த்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. மோட்டார் வாகன வரி சட்டத்தில் இதற்கான திருத்தங்கள் சட்டமன்றப் பேரவையில் கொண்டு வரப்படும்.

இந்த வரி உயர்வு நடவடிக்கைகள் மூலம் சுமார் 10 கோடி ரூபாய் கூடுதல் வருவாய் கிடைக்கும். இதன் பெரும் பகுதி, நகரப்பேருந்துகளுக்கு, பயணி ஒருவருக்கு ரூ. 150 என்ற காலாண்டுக் கட்டணம், பயணி ஒருவருக்கு ரூ. 180 ஆக உயர்த்தப்படுவதன் மூலமும் வெளியூர் பேருந்துகளுக்கு, பயணி ஒருவருக்கு ரூ. 195 என்ற காலாண்டுக் கட்டணத்தை பயணி ஒருவருக்கு ரூ. 225 என்று உயர்த்துவதன் மூலமும் கிடைக்கும்.

(4) கடந்த பல ஆண்டுகளில் பெருவகைக் கனிமங்கள், சிறு வகைக் கனிமங்கள் மற்றும் அவற்றிலிருந்து உற்பத்தி செய்யப்படும் பொருட்கள் ஆகியவற்றின் விலையில் அதிகமான ஏற்றம் ஏற்பட்டுள்ளது. கனிமச் சுரங்கப் பணிகளை முறைப்படுத்த, நிருவாக அமைப்பைச் சீர்ப்படுத்தவும் அரசு கூடுதல் செலவினத்தை ஏற்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. எனவே கீழ்க்கண்ட பெருவகை கனிமப் பொருள்கள் மீது தற்பொழுதுள்ள உரிமை வரித் தொகைக்குச் (royalty) சமமான அளவில் கனிம உரிமை வரி (Mineral Rights Tax) விதிப்பது அவசியம் என்று கருதப்படுகிறது :—

(1) சுண்ணாம்புக் கல் (Lime stone)
(2) பழுப்பு நிலக்கரி (Lignite)
(3) மாக்னஸைட் (Magnesite)
(4) பாக்ஸைட் (Bauxite)
(5) இல்லுமினைட் (Ilmenite)
(6) ஜிர்க்கான் (Zircon)
(7) ஜிப்ஸம் (Gypsum)

மேலும் சிறிய கனிம வகைகளுக்கு விதிக்கப்படும் உரிமை வரியை (Seigniorage Fee) உயர்த்தவும்

அவற்றின் ஏலத்தின்போது நிர்ணயிக்கின்ற குறைந்த பட்சத் தொகையை உயர்த்தி நிர்ணயிக்கவும் உத்தே சிக்கப்படுகின்றது. கறுப்பு வண்ணக் கருங்கற்கள், சாம்பல் வண்ணக் கருங்கற்கள் ஆகியவை வெளிநாடு களுக்கு ஏற்றுமதி செய்யக்கூடிய மிகப் பெரிய வாய்ப் பினை உடையதாய் இருக்கின்றன. அவற்றின் விலை, ஏற்றுமதிச் சந்தையில் ஆண்டுதோறும் ஏறிக்கொண்டே போகின்றது. தற்பொழுது நடைமுறையில் உள்ள உரிமை வரி, இந்த விலைகளோடு ஒப்பிடும்போது மிகக் குறைந்ததாகவே உள்ளது. கறுப்பு வண்ணக் கற்கள் மீதான உரிமை வரியை 1 கன மீட்டருக்கு 200 ரூபாயிலிருந்து 400 ரூபாயாக உயர்த்தவும், ஏற்றுமதிக் காக பெரிய சதுர வடிவில் வெட்டி எடுக்கப்படும் சாம்பல் வண்ணக் கற்களுக்கு கன மீட்டர் ஒன்றுக்கு ரூ. 200 உரிமை வரி விதிக்கவும் அரசு உத்தேசித் துள்ளது. உள்நாட்டு உபயோகத்திற்காகப் பயன் படுத்தப்படும் சாம்பல் வண்ணக் கற்கள் மீது கன மீட்டர் ஒன்றுக்கு விதிக்கப்படுகின்ற உரிமை வரி ரூ. 1.60 என்பது மாற்றம் இன்றி அப்படியே இருக்கும். இந்த நடவடிக்கைகள் மூலம் ரூபாய் 4 கோடி கூடுதல் வருமானம் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

**104.** மேற்கூறிய வரி விதிப்பு நடவடிக்கைகள் மூலம் ஒட்டு மொத்தமாக ரூபாய் 54 கோடி கூடுதல் வருவாய் கிடைக்கும்.

**105.** நுகர்வோர்களுக்கு ஏற்படக்கூடிய அல்லல் களைப் போக்கவும், பொருளாதாரத்தில் முக்கியத்துவம் வாய்ந்த துறைகளின் வளர்ச்சி பாதிக்காத வகையிலும் விற்பனை வரி விதிப்பு நடவடிக்கைகள் அமைவதற்காக, விற்பனை வரி அமைப்பை, அரசு, அவ்வப்போது ஆய்வு செய்தும் பரிசீலித்தும் வந்துள்ளதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவர். பல்வேறு பொருட்களின் மீதான பல முனை வரியை ஒரு முனை வரியாக மாற்ற வேண்டும் என்று வணிகர்கள் கோரி வந்துள்ளார்கள். வரி ஏய்ப்பைத் தவிர்க்க மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகளின் பின்னணியில் இந்த கோரிக்கைகளைப் பரிசீலிக்க வேண்டி உள்ளது. தொடக்க முயற்சியாக, எல்லோராலும் உபயோகப்படுத்தப்படும் மிளகாய், புளி, மஞ்சள், கொத்துமல்லி, மிளகு ஆகிய ஒரு சில வேளாண்மைப் பண்டங்கள் மீது தற்பொழுதுள்ள 5 விழுக்காடு பல முனை வரியை 8 விழுக்காடு ஒரு முனை வரியாக மாற்ற உத்தேசிக்கிறேன். இந்த மாற்றத்தால் சந்தையில் இப் பண்டங்களின் விலை குறையும் என்பதால் நுகர்வோர் அனைவரும் இதை வரவேற்பர் என்று உறுதியாக நம்புகிறேன். இதனால் சிறு வர்த்தகர்கள், சில்லறை வியாபாரிகள் ஆகியோ ருடைய பிரச்சினைகள் குறையும். வரி விதிப்பு நடைமுறைகளை எளிதாக்கவும் சீராக்கவும் உதவும் இத்திட்டங்களை நிறைவேற்றுவதற்கு அரசுக்கு வணிகப் பெருமக்கள் அனைவரும் முழு ஒத்துழைப்பு நல்குவர் என்று எதிர்பார்க்கிறேன்.

**106.** விவசாய விளைப் பொருட்களின் உற்பத்தியைப் பெருக்கும் முயற்சியில் ஒரு பகுதியாக சிறு உழவர்கள் மற்றும் சொற்ப நில உழவர்களுக்கு உதவி செய்யும் வகையிலும், தற்பொழுதுள்ள இயற்கை உரங்களின் (manures) மீதான 5 விழுக்காடு பல முனை வரியை ஒட்டு மொத்தமாகத் தள்ளுபடி செய்ய உத்தேசிக்கப் படுகிறது.

**107.** தொழில் நுட்பப் புதுமைகளைப் புகுத்த முயற்சி மேற்கொண்டுள்ள இக் கால கட்டத்தில் மின்னணுவியல் தொழிலும் மற்றும் கணக்கிடு பொறிகளும் மிக முக்கியப் பங்கேற்கின்றன. தொழில் வளர்ச்சியில் இத்துறைக்குள்ள முக்கியத் துவத்தின் அடிப்படையில், இத் தொழில்களை ஊக்குவிக்கும் பொருட்டு இப்பொருட்கள் மீது தற்பொழுது விதிக்கப்படும் 12 விழுக்காடு விற்பனை வரி 10 விழுக்காடாகக் குறைக்கப்படும்.

**108.** இந் நடவடிக்கைகள் காரணமாக ரூபாய் 5 கோடி அளவில் வரி இழப்பு ஏற்படக்கூடும். ஆகவே கூடுதல் நிகர வருவாய் ரூ. 49 கோடியாக இருக்கும். இதன் காரணமாக இறுதிப் பற்றாக்குறை ரூபாய் 264.20 கோடியாக இருக்கும்.

**109.** திட்ட நிதியுதவி, பொதுமக்கள், வங்கிகள் ஆகியோரிடமிருந்து பெறப்படும் கடன் தொகையில் அதிக பங்கு ஆகியவை தொடர்பாக, கூடுதல் மத்திய உதவி குறித்து எடுக்கப்படும் முடிவின் பலனாக இப்பற்றாக்குறை கணிசமான அளவுக்குக் குறையுமென்று எதிர்பார்க்கிறோம். மேலும் 1984–85 ஆண்டிறுதியில் இருக்கக் கூடிய இறுதி பற்றாக் குறையைப் போக்க இந்திய அரசு சிறப்பாக உதவி அளிக்குமென்றும் நாம் எதிர்பார்க்கிறோம்.

மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே,

**110.** எந்தக் கொள்கைகளையும், குறிக்கோள் களையும், திட்டங்களையும் மக்கள் மன்றத்தில் முன் வைத்துப் பெரும்பாலான மக்களின் அன்பையும், ஆதரவையும், நம்பிக்கையையும், நன்மதிப்பையும் பெற்று, மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் எம். ஜி. ஆர் அவர்களின் சீரிய தலைமையின்கீழ் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொண்டோமோ, அவற்றைச் சிலபலவாக அடுத்தடுத்து நிறைவேற்றி வருவதிலே இந்த அரசு கண்ணுங்கருத்துமாக இருக் கின்றது.

**111.** இந்த நிதி நிலை அறிக்கை, சென்ற காலத்தில் நிறைவேற்றப்பட்ட பணிகளையும், எதிர் காலத்தில் எடுத்துக் கொள்ளப்பட இருக்கின்ற பணிகளையும், விளக்கமாகவும், தெளிவாகவும் சுட்டிக் காட்டியுள்ளது.

**112.** இந்த நிதி நிலை அறிக்கையின் மீதான விவாதத்தில் கலந்து கொண்டு, ஆய்வுரைகள் வழங்க இருக்கின்ற மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் ஆழ்ந்த அறிவோடும், தெளிந்த சிந்தனையோடும், தூய நோக்கத்தோடும், பண்பட்ட மாண்போடும் எடுத்துரைக்கும் கருத்துக்கள் நாட்டை வளப்படுத்தவும் மக்களுக்கு நலம் பயக்கவும் பேருதவிபுரியும் என்று கருதுகிறேன். மாண்புமிகு உறுப்பினர்களின் அன்பும், ஆதரவும், ஒத்துழைப்பும் அவையின் புகழை நிலைநாட்டவும், விவாதம் பயன்பட அமையவும் பெரிதும் உதவிபுரியும் என்று எதிர் பார்க்கின்றேன்.

**113.** இந்த நிதிநிலை அறிக்கையை உருவாக்கிட எனக்குச் சிறப்பான முறையில் உதவியையும், ஒத்துழைப்பையும் நல்கிய நிதித் துறைச் செயலாளர் திரு. சி. இராமச்சந்திரன் அவர்களுக்கும் அவருடன் இணைந்து நின்று அரும்பணியாற்றிய அதிகாரிகள் — அலுவலாளர்கள் ஆகியோர்க்கும், அரசின் பல்வேறு துறைகளைச் சார்ந்தோர்க்கும் என் உளங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**114.** *1985–86* ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையை அன்புடன் ஏற்குமாறு அவையினரை விழைந்து கேட்டுக்கொள்கிறேன்.

வணக்கம்.



# விவசாயிகளின் உற்ற நண்பன்



**வி**வசாயிகளுக்கு உற்றதுணை வன் கால்நடைகளே. இயந்திர மாகி வரும் இன்றைய வேளாண் தொழிலில் கால்நடைகளின் முக் கியத்துவம் இன்னும் குறைந்து விடவில்லை. பல்வேறு விவசாய வேலைகளுக்கும், பால், மாமிசம், முட்டை, தோல், கம்பளி போன்ற பலவகைக் காரணங் களுக்காகவும் கால்நடைகள் வளர்க்கப்படுகின்றன. தேவைக் கேற்ப அவற்றிற்கு உணவு வழங் கினால்தான் அவை நமக்குரிய முறையில் பலனளிக்க முடியும். ஆனால் நாம் பொதுவாக என்ன செய்கிறோம்?

சத்துள்ள உணவுப் பொருட் களை நாம் எடுத்துக் கொண்டு சக்கையை மட்டும் அதன் உணவாக அளிக்கிறோம். மேலும் மழை, வெள்ளம், புயல் போன்ற இயற்கையின் சீற்றத்தி னாலோ அல்லது பஞ்சம் வறட்சி போன்ற காலங்களில் பயிர்செய்ய முடியாது போனாலோ முதலில் பாதிக்கப்படுவது கால்நடைப் பிராணிகள்தானே? எனவே இத் தகைய கொடுமைகளிலிருந்து கால்நடைகளைக் காப்பாற்ற நாம் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டியது அவசியம். குறிப்பாக வறட்சிக் காலங்களில் அவை தண் ணீருக்கும் தேவையான உணவுக் கும் தவிக்கும்போது நாம் தீவிர முயற்சி மேற்கொள்வதால் நிலைமையை ஓரளவு சமாளித்து வெற்றி பெறலாம். வறட்சி நில வும் காலங்களில் வேறு இடங்களி லிருந்து தீவனம் தருவிப்பதில் தாமதம் ஏற்படலாம். அத்தகைய நேரங்களில் நாம் விளைவித்த பயிர்களின் உப பொருட்களைக் கொண்டு பக்குவம் செய்யப்பட்ட தீவனம் தயாரித்துக் கொடுக்க லாம். சிலவகை மரத்தின் இலை கள் (நாம்) சாப்பிடமுடியாத எண்ணெய் வித்துக்களிலிருந்து கிடைக்கும் பிண்ணாக்கு, சர்க் கரை ஆலைக் கழிவுப்பொருளான மொலாசஸ்' போன்றவை உட னடித் தேவைகளை நிறைவேற்ற உதவுபவை.

**எளிதில் கிடைக்கும் செடிகள்**

வறட்சியைத் தாங்கக் கூடிய செடிகளில் 'கான்ஸ்' (KANS) என்ற செடி இந்தியா முழுவதும் காணப்படுகிறது இதைக்கறவை மாடுகளுக்குத் 'தினப்படிதேவை யைப்' பொறுத்து உணவாக அளிக்கலாம். இது சாதாரணப் புல்லைவிட சத்துக்கள் நிறைந் தது. எளிதில் செரிக்கக் கூடியது. மேலும் இந்தச் செடி உழவு மாடு களுக்கும் கூட ஏற்ற உணவாகும். பசுமையான நிலையிலும் காய்ந்த புல்லாகவும் (STRAW) உபயோ கிக்கலாம்.

முஞ்ச் (MUNJ) ஒருவகைச் செடி. களையாக எங்கும் முளைக் கும். கவனிக்காமல் இருந்தால் நிலத்தையே மூடிவிடும் அளவுக்கு நெருக்கமாக வளரும். இதைக் கூரைகளில் நிழலுக்காகப் பயன் படுத்துகிறார்கள். அல்லது எரித்துவிடுகின்றார்கள். இதற்குப் பதிலாக இச்செடியைப் பக்குவப் படுத்தி, மொலாஸஸ், யூரியா இவற்றுடன் கலந்து கால்நடைத் தீவனமாக 10 சதம் வரை கொடுத்தால் உண்பதற்குச் சுவை யான நல்ல தீவனம் எளிதில் கிடைக்கும். இதையும் பசுமைத் தீவனமாகவோ (SILAGE) காய்ந்த புல் (STRAW) நிலை யிலோ உபயோகித்துக் கொள்ள லாம்.

லெமன் கிராஸ் எனப்படும் புல் காட்டுப் பகுதிகளில் வெகு வாக வளரக் காணலாம். இதி லிருந்து ஒருவகை எண்ணெயும் எடுக்க முடியும். அவ்வாறு எண் ணெய் எடுத்தபின் உள்ள கழிவுப் பொருளைத் தீவனமாகக்கொடுக் கலாம். இதுவும் சாதாரண புல் லைக் காட்டிலும் சத்துக்கள் மற் றும் சுவையில் கூடியதாகும்.

'ஆகாயத்தாமரை' எனப்படும் களைக் கொடி-குளம், குட்டை கள், ஏரி போன்ற நீர் நிலைகளில் படர்ந்து வளரக்கூடியது. கால் நடைத் தீவனத்துக்கு ஏற்றது.

**இதர செடி கொடிகள் மற்றும் மரங்கள்:**

முசுக்கட்டை, மரவள்ளி, முருங்கை மூங்கில், அரசு (மரம்) இலந்தை, கருவேல் மற்றும் எருக்கு போன்றவற்றின் இலை கள் தீவனமாகப் பயன்படுத்தக் கூடியவை. இவற்றை ஆடு, செம் மறியாடு போன்ற கால்நடைப் பிராணிகளுக்கு ஏற்ற உணவாக வும் கொடுக்கலாம்.


**புல் மற்றும் இதர பயிர்க்கழிவுகள்:**

வைக்கோல், கோதுமை மற் றும் ராகி இவற்றின் கழிவுப் பொருட்களுடன் மொலாசஸ் (சர்க்கரைக் கழிவுப்பாகு) ஒரு சதவீதமும், உப்புக்களின் கலவை 0.5 சதவீதமும் கலந்து தீவன மாக அளிக்கலாம். கரும்புச் சோகையையும் இதே முறையில் நன்கு பயன்படுத்திக் கொள்ள லாம்.

அரிசித் தவிடு 25 சதவிகிதம் வரை உணவில் சேர்த்துக்கொடுக் கலாம்.

**டாக்டர்**
**சீ. ஆர். லஷ்மி நரசிம்மன்**
**ஏர்க்காடு.**

காய்கறிக் கழிவுகள், பழம் மற்றும் காய் பதனிடும் அலுவ லகக் கழிவுகள், சாராயத் தொழிற்சாலைக் கழிவுகள், சர்க் கரை ஆலைக் கழிவுகள், எண் ணெய் ஆலையில் கிடைக்கும் பிண்ணாக்குக் கழிவுகள், கடற்



பாசி, மீன் போன்றவற்றின்கழிவுகள் ஆகியனவெல்லாம் தீவனத்துக்கு உபயோகப்படுத்திக்கொள்ளத்தக்கவை.

**தீவனப் பயிர்களை உற்பத்தி செய்தல்:**

கிணறுகள், ஓடை, குளம், ஏரி போன்ற நீர்நிலைகளுக்கு அருகே தேவையான தீவனப் பயிர்களைப் பயிரிட்டு, குறைந்த காலத்தில் பலன் பெறலாம். ஓட்ஸ், நேப்பியர் புல்காராமணி இவற்றுக்குக் குறுகிய காலப் பயிர்களான செஸ்போனியா, டெஸ்மாந்தஸ் போன்ற வகைகளையும், வசதியுள்ள இடங்களில் குதிரைமசால் பயிரையும் விளைவிக்கலாம். பழத் தோட்டம் போன்ற இடங்களில் மரங்களுக்கிடையிலுள்ள இடைவெளிகளில் காராமணி, சோளம் இதர புல்வகைகள் இவற்றைப் பயிராக்கிப் பயனடையலாம். கரும்புப் பயிரினூடே கடுகு, காராமணி, தீவன மக்காச் சோளம் போன்ற பயிர்களை விளைவித்துக் கொள்ளலாம்.

கழிவுநீர் மிகுதியாகத் தேங்குமிடங்களில் தீவனப்புல் மற்றும் தீவனப் பயிர்களைப் பயிர் செய்து பயன்பெறலாம்.

**குறிப்பு:**

தீவன அளவுக்குக் கீழ்க்கண்டுள்ள அட்டவணையில் காண்க):

தீவன அளவு (தினசரி: 150-300 கிலோ எடையுள்ள பெரிய கால் நடைகளுக்கு)

| | (கிலோ அளவில்) 1 | 2 |
|---|---|---|
| கரும்புஆலைக் கழிவு/வைக்கோல் | 2.0 | 3.00 |
| சர்க்கரைப் பாகுக்கழிவு | 0.4 | 0.5 |
| கரும்புச் சோகை | 8.00 | — |
| யூரியா | 0.022 | 0.025 |
| சாதா உப்பு | 0.030 | — |
| சுத்திகரிக்கப் பட்ட எலும்புக் கலவை | 0.020 | — |
| நுண்ணூட்டச் சத்துக்கள்(வாரத்துக்கு இருமுறை) | 0.005 | 0.050 |

தீவன அளவு (தினசரி ,50-150 கிலோ எடையுள்ள சிறிய கால் நடைகளுக்கு)

| | 1 | 2 (கிலோ அளவில்) |
|---|---|---|
| கரும்பு ஆலைக் கழிவு-வைக்கோல் | 2.00 | 3.0 |
| சர்க்கரைப் பாகுக்கழிவு | 0.8 | 0.8 |
| கரும்புச்சோகை | 3.0 | 6.00 |
| யூரியா | 0.035 | 0.020 |
| சாதா உப்பு | 0.020 | 0.020 |
| சுத்திகரிக்கப்பட்ட எலும்புக்கலவை | 0.020 | 0.020 |
| நுண்ணூட்டச் சத்துக்கள் (வாரத்துக்கு இருமுறை) | 0.005 | 0.005 |



ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002.



குழந்தைகள் முதலில் கற்பது — அ.ஆ.இ

குடும்பத்தை என்றும் காப்பதும் — அ.ஆ.இ

# அஞ்சலக
# ஆயுள்
# இன்சூரன்ஸ்

POSTAL LIFE INSURANCE

POSTAL LIFE INSURANCE FOR PROTECTION ESTD.-1884

குறைந்த பிரிமியம் செலுத்தி அதிக போனஸ் பெறுவீர்!
மத்திய மாநில அரசு ஊழியர்கள், அரசுடைமை வங்கி ஊழியர்கள், கல்வி நிலைய ஊழியர்கள், நகராட்சி, ஊராட்சி ஊழியர்கள் போன்றவர்களுக்கு


**சிறந்த இன்சூரன்ஸ் திட்டம்**

**அஞ்சலக ஆயுள் இன்சூரன்ஸ்**

பிரிமியம் மாதா மாதம் சம்பளத்திலேயே பிடித்தம் செய்ய வசதி உள்ளது.

**PLI திட்டத்தில் போனஸ் எவ்வாறு உயர்ந்துகொண்டே வந்துள்ளது என்பதைக் கவனியுங்கள்**

போனஸ் ஆண்டுக்கு ரூ. 1000/-க்கு




**PLI** பாதுகாப்பிற்கும் செழிப்புக்கும்

விவரங்களுக்கு: போஸ்ட் மாஸ்டர் ஜெனரல்
சென்னை-600 002
தொலைபேசி
எண்கள்: 841619
843949
843138





மைய அரசின் மாண்புமிகு பாதுகாப்புத் துறை அமைச்சர் திரு பி.வி. நரசிம்மராவ் அவர்கள். மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்களை 22.3.85 அன்று சந்தித்தார்.

மாண்புமிகு கர்நாடக மாநில முதல்வர் திரு ராமகிருஷ்ண ஹெக்டே அவர்கள், மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்களை 23.3.85 அன்று சந்தித்தார்.







# பாவேந்தர் திறன்

பாரதிதாசன் எந்தப் பிரிவையும் விட்டு வைக்கவில்லை. தொழிலாளர்களைக் கூட விட்டு வைக்கவில்லை. ஒரு தொழிலாளி எப்பொழுது வேலையை விட்டு ஓய்ந்த நிலைமையிலிருந்தாலும் வீட்டுக்குத் திரும்பி விடுவார் என்று அவரது வாழ்க்கைத் துணைவி வீட்டின் வாயிற்படியிலே நின்று ஆலையின் சங்கு ஊதாதோ என்று கேட்பதற்காகக் காத்து நிற்கின்ற ஒரு பெண், தனது கணவனுடைய உழைப்பிற்குப் பின் அவரைக் காணுவதில் எவ்வளவு அக்கறையாக நிற்கிறாள்? அந்த ஆலையின் சங்கு ஊத வேண்டும் என்று என்னும் பொழுது அந்தத் தொழிலாளி எவ்வளவு நாள், எவ்வளவு மணி நேரம் உழைத்துக் கொண்டிருப்பார் என்பதையும், பலன் என்ன என்பதனையும், அந்தப் பாடல்களை, எண்ணிப் பார்க்கும்பொழுது அந்த மங்கையினுடைய மன நுட்பத்தை-மன வேகத்தை—அந்த மனத்தில் இருக்கின்ற வேதனையை எண்ணிப் பார்க்கும்பொழுது நாம் நன்கு புரிந்து கொள்ள முடியும். ஒரு தொழிலாளியுடைய வேதனையை - உழைப்பை- எவ்வளவு மணி நேரம் அந்தத் தொழிலாளி வேலை செய்ய வேண்டும் என்கிற கட்டளையைப் பிறப்பிக்கக் கூடிய நாள் நெருங்க வேண்டும் என்கிறது அவரது ஆசை.

இதுபோல் ஒவ்வொன்றையும் அவர் தொட்டுப் பார்த்திருக்கிறார் என்பது மட்டுமல்ல நம் இதயத்திலே பதிய வைக்கிறார் என்பதை எண்ணிப்பார்க்கும் பொழுது அப்படிப்பட்ட கவிதைகள்-கருத்துக்கள் வெறும் பாடல் புத்தகங்களாக மட்டும் இருந்துவிடாமல் ஒவ்வொரு தமிழ் மகனும் - ஒவ்வொரு மனித உள்ளம் படைத்தவனும் அவைகளைத் தன் உள்ளத்திலே ஏற்றி வைத்துக் கொள்ளக் கூடிய அளவிற்கு அவை நாட்டிலே பரப்பப்பட வேண்டும் என்று நான் விரும்புகின்றேன்.

—மாண்புமிகு முதல்வர்
டாக்டர் எம்.ஜி.ஆர்.

(1978-ல் நடைபெற்ற பாவேந்தர் பிறந்த தின விழாச் சொற்பொழிவிலிருந்து).

தமிழரசு
திருவள்ளுவர் ஆண்டு 2016
குரோதன - சித்திரை 4
மலர் : 15 இதழ் : 20
16-4-1985

முதல் அட்டையில் ...

ஆஸ்திரேலிய நாட்டுத் தூதர் திரு கிரஹாம் ஹாக்கர் மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். சந்திப்பு (3.4 85)

# இளைஞர்க்கு அறிவுரைகள்

பாவேந்தர் பாரதிதாசன்



## சிறார் பொறுப்பு

இன்று குழந்தைகள் நீங்கள்-எனினும்
இனி இந்த நாட்டினை ஆளப்பிறந்தீர்!
இன்று குழந்தைகள் நீங்கள்!

நன்றாய்ப் படியுங்கள்! நாட்டின் குழைந்தைகாள்!
ஒன்றாய் இருங்கள் உயர்வினை எண்ணுங்கள்!
இன்று குழந்தைகள் நீங்கள்!

குன்றினைப்போல் உடல்வன்மை வேண்டும்!
கொடுமை தீர்க்கப்போ ராடுதல் வேண்டும!
தின்றதையே தின்று தெவிட்டுதல் இல்லாமல்
அன்றன்று வாழ்விற் புதுமை காணவேண்டும்
இன்று குழந்தைகள் நீங்கள்!

பல்கலை ஆய்ந்து தொழில் பல கற்றும்,
பாட்டிற் சுவை காணும் திறமையும் உற்றும்,
அல்லும் பகலும் இந்நாட்டுக் குழைப்பீர்கள்!
அறிவுடன் ஆண்மையைக் கூவி அழைப்பீர்கள்!
இன்று குழந்தைகள் நீங்கள்!



## தூய்மை

தூய்மை சேரடா தம்பி-என்
சொல்லை நீ பெரிதும் நம்பித்
தூய்மை சேரடா தம்பி!

வாய்மையாலும் ஒழுக்கத்தினாலும் அகத்
தூய்மை உண்டாகும் மேலும் மேலும்
தூய்மை சேரடா தம்பி!

உடையினில் தூய்மை உண்ணும்
உணவினில் தூய்மை-வாழ்வின்
நடையினில் தூய்மை-உன்றன்
நல்லுடற் றூய்மை-சேர்ப்பின்
தடையில்லை வாழ்நாள் ஒவ்வொன்றும் இன்பம்
தரம்நாள் ஆகும்-நீ-என்றும்
தூய்மை சேரடா தம்பி!

துகளிலா நெஞ்சில்-சாதி
துளிர்ப்பதும் இல்லை;-சமயப்
புகைச்சலும் இல்லை;-மற்றும்
புன்செயல் இல்லை!-தம்பி!
அகத்திலே அன்பின் வெள்ளம் மூளும்;தீய
அச்சம் போகும்!-நீ எந்நாளும்
தூய்மை சேரடா தம்பி!

பாவேந்தர் பாரதிதாசன், இளைஞர்க்குச் சொன்ன அறிவுரைக் கவிதைகள், இளைஞர் ஆண்டை ஒட்டி இங்கே வெளியிடப்பெறுகின்றன.

## மாணவர்க்கு எழுச்சி

நிற்கையில் நிமிர்ந்து நில்!
நடப்பதில் மகிழ்ச்சி கொள்!
சற்றே தினந்தோறும் விளையாடு
பற்பல பாட்டும் பாடிடப் பழகு!-நீ
பணிவாகப் பேசுதல் உனக் கழகு!

கற்பதில் முதன்மை கொள்
காண்பதைத் தெரிந்து கொள்
எப்பொழுதும் மெய்யுரைக்க அஞ்சாதே
சுற்றித் திரிந்திடும் துட்டர் சிநேகம்
தொல்லை என்பதி லென்ன சந்தேகம்? நீ

சித்திரம் பயின்று வா
தேன் போன்ற கதைசொல்
முத்தைப்போலே துவைத்த உடையணிவாய்
புத்தகம் உனக்குப் புத்துயிர் அல்லவோ?
போக்கடிக் காதே இதை நான் செல்லவோ-நீ

பத்திரி கைபடி
பலவும் அறிந்து கொள்
ஒத்துப் பிறர்க்கு நலம் உண்டாக்கு!
நித்தமும் நமதுயர்நாடு தன்னை
நினைத்துப் பொதுப்பணிசெய் அவனுனக் கண்ணை

(இசையமுது என்னும நூலிலிருந்து)

## படமும் செய்தியும்



இலங்கைத் தமிழர் பிரச்சினை குறித்து 2.4.85 அன்று சென்னை தலைமைச் செயலகத்தில் அனைத்துக் கட்சித் தலைவர்களின் கூட்டம் மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் தலைமையில் நடைபெற்றது.



தாம்பரம் பேபி பள்ளி விளையாட்டுத் திடலில் 1.4.85 அன்று நடைபெற்ற விழாவில் மாண்புமிகு நிதி அமைச்சர் நாவலர் டாக்டர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் பள்ளிக் கட்டடங்கள், சத்துணவுக் கூடங்கள் ஆகியவற்றைத் திறந்து வைத்து, நிலவுடைமைப் பட்டாக்களையும் வழங்கினார்.

செங்கல்பட்டு மாவட்டத்தில் இலங்கை அகதிகள் தங்கியுள்ள கேளம்பாக்கம் முகாமில் மாண்புமிகு மறுவாழ்வுத் துறை அமைச்சர் திரு. டி. இராமசாமி அவர்கள் 3.4.85 அன்று பெண் அகதிகளுக்குப் புடவைகள் வழங்கினார். மாண்புமிகு ஆதி திராவிட நல அமைச்சர் திரு அ. அருணாசலம் அவர்கள் உடன் இருந்தார்.



# கன்னித் தமிழுக்கு ஒரு கம்பன்

**மாண்புமிகு செய்தி-அறநிலையத் துறை அமைச்சர்**

## திரு இராம. வீரப்பன்

கம்பனை ஒரு மாபெரும் கவிஞராக அறிமுகப்படுத்துகின்ற பணியிலே நமது புலவர் பெருமக்கள் திட்டமிட்டு ஈடுபட்டாக வேண்டும். அதற்கு நீங்கள் எடுத்துக் கொள்கின்ற தலைப்புகளும் பொருள்களும் துணையாக இருந்தாக வேண்டும்.

கம்பனின் பாத்திரப் படைப்புகளைப் பற்றிப் பல நேரங்களில் வாதிடுகின்றீர்கள். சுவையான விவாதங்கள் பல இடங்களில் நடைபெறுகின்றன. சில நேரங்களில் பாத்திரப்படைப்புகளைப் பற்றிப் பேசும்போது கம்பனுடைய கவித்திறமை-கற்பனை வளம்-காவியப் புலமை பின்னாலே போய் அவன் படைத்த பாத்திரங்கள்-அந்தப் பாத்திரங்கள் மீது ஏற்றிச் சொல்லப்படும் கடவுள் தன்மைகள் மேலோங்கி விடுகின்றன.

வளர்ச்சியினுடைய தொடக்கமா என்பதை நீங்கள் தெளிவுபடுத்தவேண்டும்.

இந்த நூற்றாண்டில் பாரதி வாழ்ந்தான். புதிய முறையில் இலக்கியம் படைக்க வழி வகுத்தான். பாவேந்தர் பாரதிதாசன் அதில் புரட்சிகரமான உணர்வுகளை மேலும் வளர்ச்சியுறச் செய்தார்.

ஆனால் தமிழ் வளர்ச்சி என்பதும் தமிழ் இலக்கிய வளர்ச்சி என்பதும் தமிழ்க் காப்பிய வளர்ச்சி என்பதும் இந்த நூற்றாண்டில்தான்



கம்பனைப் பின்னாலே தள்ளிவிட்டு அவனுடைய படைப்புகள் முன்னாலே வந்து நின்றால் அது ஆன்மீகத்துக்கு வேண்டுமானால் ஓர் அற்புதப் படைப்பாக - கடவுளுடைய ஆற்றலுக்கு வேண்டுமானால் சிறந்த எடுத்துக் காட்டாக இருக்கலாமே தவிர, கம்பனுடைய பெருமைக்குத் துணை நிற்க முடியாது.

அதனால் தான் சொல்கிறேன், நீங்கள் விவாதித்து முடிக்கின்ற நேரத்தில் கேட்பவர்களின் உள்ளங்களில் கம்பன் வந்து நிற்கவேண்டும்; இறுதியாக ஒட்டுமொத்தமாகத் தெரிபவன் கம்பனாக இருக்கவேண்டும்!

இந்த நேரத்தில் கம்பர்-கம்ப இராமாயணத்தோடு இன்னொரு கருத்தையும் புலவர் பெருமக்களின் பரிசீலனைக்கு வைக்கின்றேன். இன்றைக்கு இளைஞர்கள் மத்தியில் -புதிதாக வந்திருக்கின்ற கவிஞர்கள் மத்தியில் தமிழ் வளர்ச்சி என்பது மகாகவி பாரதியின் காலத்திலிருந்துதான் [illegible]குகிறது என்ற எண்ணம் இருக்கின்றது.

எங்களில் சிலர் பாரதிதாசனிலிருந்து அதைத் தொடங்குகிறோம். இதுதான் தமிழ் தொடங்கியதா என்பதை எங்களுக்கு விளக்குங்கள். ஆயிரம் ஆண்டுகளுக்குமுன் வாழ்ந்த கம்பனுக்கு இன்று விழாக் கொண்டாடுகிறோமே, அவன் தமிழை வளர்த்தானா-இல்லையா? அதற்கு முன்னாலே தோன்றிய சமய இலக்கியங்கள் தமிழை வளர்த்தனவா? இல்லையா? இன்றைக்குப் புராணம் என்ற பெயராலே அழைக்கப்படும் சமயநூல்களை இலக்கியம் என்று ஒத்துக்கொள்கின்றீர்களா? இல்லையா? புராணம் என்று சொல்லப்படுகின்ற காரணத்தினாலேயே அது தமிழ் வளர்ச்சிக்கு உதவவில்லை என்று நீங்கள் சொல்லப் போகின்றீர்களா? புராணம் என்ற பெயரினைப் பெற்றிருப்பதனாலேயே சில நல்ல நூல்களை ஒதுக்கித் தள்ளுகின்ற மனப்பான்மையினைப் பெற்றிருக்கின்றோமே அது சரியா? என்று கேட்க விரும்புகிறேன்.

புராணம் என்ற பெயரோடு விளங்கும் பெரிய புராணம் தமிழ் [illegible]மா? வரலாறா? தமிழ்ச் சான்றோர்களின் வரலாறு கூறும் காப்பியமா? அல்லது புராணம் என்ற பெயரைப் பெற்றிருப்பதால் - அது ஒதுக்கப்பட வேண்டிய நூலா? என்று இங்குள்ள பேராசிரியப் பெருமக்களைக் கேட்க விரும்பு



கிறேன்.

பெரிய புராணத்தில் என்ன இருக்கிறது- அதில் என்ன சொல்லப்பட்டு இருக்கிறது என்று புரிந்து கொள்ளாமல் அது எப்படிப் பட்ட அற்புதமான தமிழில் இயற்றப்பட்டிருக்கின்றது என்பதையெல்லாம் ஆராய்ந்து பார்க்காமல் அதை ஒரு குப்பையாகக் கருதி ஒதுக்கிவிடும் சூழ்நிலை இன்றைக்கு வளர்ந்து கொண்டு இருப்பதைக் காண்கிறோம்.


இது சரியா என்பதை ஆய்வு செய்கின்ற கட்டத்தில் நாம் நின்றுகொண்டு இருக்கிறோம். பெரியபுராணத்தை விட்டால் தொண்டுள்ளத்தை வளர்க்கும் தொண்டர்களின் வரலாற்றைக் கூறும் வேறு நூல் இருக்கிறதா? சொல்லுங்கள்.

முன்னாலே பேசிய பேராசிரியர் நமசிவாயம் அவர்கள் இராமாயணம் ஒழுங்கை- ஒழுக்கத்தைக் கற்பிக்கின்ற நூல் என்று குறிப்பிட்டார்கள். உண்மைதான். சமுதாயத்தில் ஒழுக்கச் சிதைவு ஏற்பட்ட கால கட்டத்தில் இராமாயணம் தோன்றவேண்டிய கட்டாயம்வந்தது. மற்ற மற்றசமய இலக்கியங்கள் தோன்றவேண்டிய அவசியம் ஏற்பட்டது.

அப்படி ஒழுக்கத்தை வளர்க்கத் தோன்றிய அந்தச் சமய இலக்கியங்கள் - புராணம் என்ற பெயரிலே இருந்தாலும் -அவை இன்றைக்குத் தமிழை வளர்த்துக்கொண்டு வாழ வைத்துக் கொண்டுதான் இருக்கின்றன.

இடைக்காலத்திலே பெரியபுராணம் தோன்றவில்லை என்றால் தமிழ் எப்படி ஒரு காலகட்டத்தில் வளர்ந்திருக்க முடியும்? மூவர் பாடிய தேவாரம் இல்லை என்றால் தமிழ் எப்படி ஒரு காலத்தில் வாழ்ந்திருக்க முடியும்? கோபாலகிருஷ்ண பாரதி படைத்த நந்தனார் சரித்திரத்தைவிட புரட்சி இலக்கியம் ஒன்று வந்துவிட்டது என்று சொல்ல முடியுமா?

சமய இலக்கியங்கள் சொல்லுகின்ற சில



கருத்துக்களில் வேண்டுமானால் முரண்படலாம். ஆனால் சில வரலாறுகளை எப்படி நாம் ஏற்றுக்கொள்ளாமல் இருக்க முடியும்? 1300 ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த திருஞான சம்பந்தன் தமிழை வளர்த்தானே! அவன் வெறும் சைவ சமய பிரச்சாரம் மட்டுமா செய்தான்? தமிழைக் காப்பாற்றுகின்ற பணியை அல்லவா ஆற்றி இருக்கின்றான்! தமிழைக் காக்கின்ற போராட்டத்திற்குத் தலைமை ஏற்று அல்லவா நடத்தி இருக்கின்றான்!

தனது பெயரோடு தமிழைச் சேர்த்துத் தன்னைத் தமிழ் ஞானசம்பந்தன் என்று அவன் அழைத்துக்கொண்டதாக வரலாறு சொல்கிறதே? புலவர் பெருமக்கள் குறிப்புத் தருகின்றார்களே! நாளெல்லாம் தமிழ் வளர்த்தான்- இசையால் தமிழ் வளர்த்தான் என்று திருநாவுக்கரசர் அவர்களைப் போற்றுகின்றோமே!

தேவாரம் என்று சொல்லி அந்தப்பாடல்களை எல்லாம் மூலையில் ஒதுக்கிப்போட்டு விட்டோம். அந்த இசை இலக்கியங்கள் எல்லாம் இருந்திருந்தால் தமிழ் இசைக்குப் பாட்டே இல்லை என்று சொல்கிற சூழ்நிலை வந்திருக்காதே!

அதனால் தான் தமிழ் அறிஞர்களை- ஆசிரியப்பெருமக்களைக் கேட்டுக்கொள்கிறேன். தயவு செய்து நீங்கள் உங்கள் சிந்தனையைப் புதிய கோணத்தில் செலுத்த வேண்டும். எந்தெந்த இலக்கியங்கள் நமக்குப் பயன்படுகின்ற இலக்கியங்கள் என்பது ஒரு பக்கம். எந்தெந்த இலக்கியங்கள் இதுநாள் வரை தமிழைக் காப்பாற்றி வளர்த்து இருக்கின்றன என்பது இன்னொரு பக்கம்.

அதில் இருக்கின்ற கருத்துக்கள் நமக்கு உடன்பாடு உடையதாக இல்லாமல் இருக்கலாம். ஆனால் அதில் இருக்கின்ற கற்பனை, தமிழ்ச்சுவை, மொழியின் சிறப்பு ஆகியவற்றை நாம் ஏற்றுக்கொள்ளக்கூடாதா?

இங்கே இருக்கின்ற தமிழறிஞர்களைக் கேட்டுக்கொள்கிறேன்-நீங்கள் இனிமேல் கலந்துகொள்கின்ற கருத்தரங்கம், பட்டிமன்றம், விவாதமன்றங்களில் பேசுகின்ற பேச்சுகள்-கல்லூரி, பள்ளிகளில் மாணவர்களுக்குச் சொல்லித் தரும் பாடங்கள்-நமது நீண்டகால 'வரலாற்றை -இரண்டாயிரம் ஆண்டுகளாகத் தமிழுக்குத் தொண்டாற்றி வரும் புலவர் பெருமக்களை-''வாழையடி வாழையாக வந்த திருக் கூட்ட மரபினில் யானொருவன்'' என்று நமது வள்ளல் பெருமான் குறிப்பிடுகின்றாரே - அப்படி வாழையடி வாழையாக வந்து கொண்டிருக்கின்ற வரலாற்றுச் சிறப்பிற்குரிய கவிஞர்கள் - இலக்கிய கர்த்தாக்களை எடுத்துக்காட்டுவதாக இருக்கவேண்டும்.

புலவர்கள் எந்த நூலைப் படைத்திருந்தாலும் அது எத்தகைய பழமையான உணர்வுகளை வெளிப்படுத்தியபோதிலும் அந்த நூல்கள்-காப்பியங்கள் - புராணங்கள் தமிழை வளர்த்த நூல்கள் - தமிழ் வளர்ச்சிக்கு உதவிய நூல்கள் என்பதை இளைஞர்களுக்குச் சொல்லியாக வேண்டும். வருங்காலத் தலைமுறையினருக்கு இந்த வரலாறு தெரிந்தாக வேண்டும்.

தமிழ் மொழிக்கு தொடர்ந்த ஒரு வரலாறு இருப்பதைத் தெரிவித்தாக வேண்டும்.



தொடர்ந்த வரலாறு தமிழுக்கு இல்லையானால் - அது எப்படிக் காப்பாற்றப் பட்டிருக்கும்? படை எடுப்புகள், நுழைவுகள், கலாச்சாரச் சந்திப்புக்கள் காரணமாக மொழி சிதைவுண்டு போவதைப் பல இடங்களில் பார்க்கின்றோம்.

இவையனைத்தையும் தாண்டித் தமிழ் வளர்ந்து இருக்கின்றது என்றால் - வளர்ந்து கொண்டு இருக்கிறது என்றால்-அதற்குக் காரணம் - புலவர்கள் - சான்றோர்கள் தொடர்ந்து பாடுபட்டு வருவதுதானே-அவர்களை எல்லாம் நாம் மறந்துவிடலாமா?

இன்றைக்குக் கம்பனுக்கு மணிமண்டபம் கட்டியிருக்கின்றோம்-ஏன்?

கம்பனை விட்டுவிட்டால் நாம் தமிழை எங்கே போய்த் தேடுவது? கம்ப இராமாயணத்தை விட்டு விட்டுத் தமிழை எப்படிப் பாதுகாப்பது?

அதில் இருக்கின்ற கருத்துக்களில் ஒன்றிரண்டில் வேண்டுமானால் நமக்கு மாறுபாடு இருக்கலாம். அவற்றைக் கூட நாம் ஆழ்ந்து பார்க்காமலேயே விவாதித்துக்கொண்டு இருக்கிறோம்.

இப்படிப்பட்ட சமய இலக்கியங்கள் எல்லாம் புறக்கணிக்கப்பட வேண்டிய இலக்கியங்கள் என்ற கருத்தைச் சரியாகவோ தவறாகவோ பரப்பி இருக்கின்றோம். அதை மாற்றி அவற்றையும் எடுத்துப் பரிசீலனைக்கு உட்படுத்தி அதிலே இருக்கின்ற சிறப்புக்களை எதிர்காலத் தலைமுறையினருக்கு விளக்குகின்ற கட்டத்திலே இன்றைக்கு நாம் நின்று கொண்டு இருக்கிறோம்.

அத்தகைய பணியினை இன்றுமுதல் தொடங்க வேண்டுகிறேன்.

[30.3.85ல் தஞ்சை மாவட்டம் தேரழுந்தூரில் நடைபெற்ற கம்பர் விழாவைத் தொடங்கிவைத்து ஆற்றிய உரையிலிருந்து].

வருகை தாரீர்!

## விஜிபி - யின் வாழுங்கள் வசதியாக கண்காட்சி


சென்னையில் சொந்தமாக வீட்டுமனை வாங்க ஓர் அரிய வாய்ப்பு.

உங்கள் தேவைக்கேற்ற கடற்கரையோர மனைகள், தொழிற்சாலைக்கேற்ற மனைகள்.

குடியிருப்போருக்கென மனைகள் மேடவாக்கம், தாம்பரம், ஸ்ரீபெரும்புதூர், படப்பை, கூடுவாஞ்சேரி மற்றும் பல இடங்கள்.


பல மாதிரி வீடுகள் நீங்கள் விரும்பும் வண்ணம் உங்கள் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது.

முன்பணம் 25 சதவீதம் செலுத்தி மீதம் 24 சுலபத் தவணைகளில் பெறலாம்.
வீடு கட்ட கடன் வழங்கும் வங்கிகளில் கடன்வசதி ஏற்பாடு.




மற்றும் இக்கண்காட்சி விஜிபி ஷோ ரூம், ரத்தன் பஜார், சென்னை-3, நடைபெறுகிறது.
போன்: 39649.


# கல்வியின் ஒளிவிளக்கு




பச்சையப்பன் அறக்கட்டளை தொடங்கப்பட்டு 141-வது ஆண்டு நிறைவு பெறுவதையொட்டிய விழா 20.3.85 அன்று சென்னை பச்சையப்பன் கல்லூரியில் நடைபெற்றது.

விழாவிற்கு வந்திருந்தோரைப் பச்சையப்பன் அறக்கட்டளை உறுப்பினர் திரு பி. முருகன் வரவேற்றுப்பேசுகையில், ''இந்த அறக்கட்டளை கடந்த நான்கு ஆண்டுகளாகச் சிறப்பாகப் பணியாற்றியுள்ளது. மேலும் ஒரு ஆண்டு பணியாற்றும். சென்னை உயர்நீதிமன்றம் வகுத்த தீர்ப்பின் அடிப்படையில் பணியாற்றி வருகிறது'' என்றார்.

பச்சையப்பன் அறக்கட்டளை உறுப்பினர் திரு எஸ். ஆர். கருப்பண்ணன், இ. ஆ ப., உரையாற்றுகையில், ''கடந்த ஆண்டுதான் சிறப்பான முறையில் பச்சையப்பன் விழா இதே இடத்தில் கொண்டாடப்பட்டது. 22.10.'80 அன்று அரசுக்குழு இந்நிர்வாகத்தைப் பொறுப்பு ஏற்றபொழுது ரூ. 10 இலட்சம் பாக்கி இருந்தது. இந்தக் குழு 10 இலட்சம் பாக்கியைத் தீர்த்ததுடன், ரூ. 3 இலட்சம் அதிக வருமானத்தையும் ஈட்டியுள்ளது. இந்த நான்காண்டுகளில் ரூ. 35 இலட்சம் இக்குழு செலவழித்துள்ளது. வருமானம் ரூ. 19 இலட்சத்திலிருந்து ரூ. 30 இலட்சமாக உயர்ந்துள்ளது'' என்றார்.

கல்லூரிக் கல்வி இயக்குநர் திரு என். அனந்தபத்மநாபன் பேசுகையில், ''இந்தக் கல்லூரியில் படித்தவர்கள் அறிஞர்களாகச் சிறப்புப்பெற்றுள்ளனர். நீங்களும் அறிஞர்களாகத் திகழ வேண்டும்'' என்றார்.

பச்சையப்பன் அறக்கட்டளை நிர்வாகக் குழுவின் தலைவர் திரு எஸ். டி. காசிராஜன், ஐ. ஏ. எஸ்., சிறப்புரையாற்றுகையில் குறிப்பிட்டதாவது: ''ஈயாத புல்லர்கள் பணத்தைப் புதைத்து வைக்கும் இவ்வுலகில், 'செல்வத்துப் பயனே ஈதல்' என்ற அறத்தைக் கடைப்பிடித்தார் பச்சையப்பர். அவர் இம்மண்ணுலகில் வாழ்ந்த ஆண்டுகள் நாற்பதே தான். எனினும் இறவாப் புகழ் எய்தி விட்டார்.

''கொடை மேம்பட்ட வள்ளல்கள் தமிழ் வரலாற்றில் உண்டு. ஆனால் பச்சையப்பனின் பொருளோ காலமெல்லாம் நிலைத்து நிற்கும் கல்விப் பணிக்கே உதவுகிறது. இப்பணி மானிடனின் மாண்பை வெளிப்படுத்தும் மாசற்ற பணியாகும். கல்வி கற்ற ஒவ்வொருவரது

இல்லத்திலும் பச்சையப்பனின் பாசறையில் பயின்றவர்கள் இருப்பார்கள் என்பது உறுதி.

"பச்சையப்பன் ஆற்றிய அறப்பணிகள் ஏராளம். முயற்சியால் ஈட்டிய பொருளனைத்தையும் அறப்பணிக்கே செலவிட்ட அண்ணல் பச்சையப்பனின் கொடைத் தன்மையை எங்ஙனம் விரித்துரைக்க முடியும்? 'தோன்றிற் புகழொடு தோன்றுக' என்ற வள்ளுவரது இலக்கணத்திற்கு இலக்கியமாக வாழ்ந்த பச்சையப்பனின் கொடை உள்ளம் எதிர்காலத் தலைமுறையினருக்கு வழிகாட்டியாகும்.''

தலைமை தாங்கியும், பரிசுகள் வழங்கியும் மாண்புமிகு நிதி அமைச்சர் டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் உரையாற்றுகையில், குறிப்பிட்டார்:

''இளைஞர்கள் உள்ளத்திலே பச்சையப்பன் கல்லூரி என்றால் 'அண்ணா' தான் நினைவுக்கு வருவார்.

''தமிழகத்திலே பச்சையென்றால் செழிப்பு என்ற பொருள் உண்டு. அதிலே வறட்சி இல்லை. அந்த வகையில் பச்சையப்பன் அறக்கட்டளை உள்ளது. தமிழகத்திலே உள்ள கல்லூரிகளில் இது-மூன்றாவதாகத் தோன்றிய கல்லூரியாகும்.

''பச்சையப்பன் கூர்ந்த அறிவு பெற்றவர். ஆங்கிலம், தமிழ் மொழியில் வல்லுநராகத் திகழ்ந்தார். கிழக்கிந்தியக் கம்பெனியாருடன் தொடர்பு ஏற்பட்டது. விடாமுயற்சியின் காரணமாகவும், ஊக்கத்தின் காரணமாகவும் உழைப்பால் உயர்ந்து, நாணயமாக வாழ்ந்தார்.

''ஈதல் இசைபட வாழ்தல் என்ற மொழிக்கு ஏற்பத் திகழ்ந்தார். நல்ல உள்ளங்களிலிருந்து நல்ல செயல்பிறக்கும். தான் மறைவதற்கு ஒன்பது நாட்களுக்கு முன்னர் உயில் எழுதினார். அந்த உயிலில் ஏழை-எளிய மக்களுக்கும் கல்விக்கும் சொத்துகளைச் செலவிட வேண்டும் என்று கூறியிருந்தார்.

''1841 வரை சொத்து நீதிமன்றத்தில் இருந்தது. திரு. ஜியார்ஜ் நார்ட்டன் என்ற அட்வகேட் ஜெனரல் உதவியதன் மூலம் பணமும் சொத்தும் மீட்கப்பட்டன. நார்ட்டன் சிந்தனையில் பிறந்தது அறக்கட்டளையாகும்.

''இந்தியா' எல்லா வளங்களையும் கொண்ட ஒரு நாடு. ஆனாலும் முன்னேறவில்லை என்றால் அதற்குக் காரணம் மக்களின் அறியாமை ஆகும். அந்த அறியாமையை, ஒழிப்பதற்கு இதுபோன்ற அறக்கட்டளைகள் அவசியம்.

''கடந்த ஆண்டு படித்து வேலையில்லாதவர்கள் 6,03,245 பேருக்கு ரூ. 161 கோடி கடனாக வழங்கப்பட்டுள்ளது. இந்தக் கடன் 52 வங்கிகள் மூலம் கொடுக்கப்பட்டுள்ளது.''

விழா இறுதியில் திரு என். அருணாசலம் நன்றி கூறினார்.

அ. மருதவிநாயகம்



# தாய்மார்களுக்குப் பயன்தரும்

# குடும்பநலப் பயிற்சி முகாம்கள்

சென்னை நகர குடிசைப் பகுதிகளில் பிப்ரவரி 25ஆம் நாள் தொடங்கப்பட்ட குடும்ப நலப் பயிற்சி முகாம்கள் மார்ச் 29ஆம் நாளன்று நிறைவுற்றது. அதனை யொட்டி நிறைவுவிழா எழும்பூர் கில்டு ஆப் சர்வீஸ் அரங்கில் நடைபெற்றது.

மொத்தம் 100 முகாம்கள் நடத்தப் பெற்றிருக்கின்றன. ஏறக் குறைய 4000-க்கு மேற்பட்ட பெண்களுக்கு இம்முகாம்களின் மூலம் அறிவுரை வழங்கப்பட்டது. இவர்களில் 3076 பேர் ஆதி திராவிட இனத்தவர். ஏனை யோர் 1600 பேர். இவர்கள் அனைவரும் இரண்டுக்கு மேற் பட்ட குழந்தைகள் பெற்றவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. அது மட்டுமல்ல, இவர்களது மாத வருமானம் 200 ரூபாயிலிருந்து 300 ரூபாய் வரைதான்!

சென்னை மாநகர தாய் சேய் நல மருத்துவ நிலைய மருத்துவர்கள், அவர்களது குழு வினர், நல்வாழ்வுத்துறை இயக்குநர் அலுவலகத்தைச் சேர்ந்த அலுவலர்கள், நலப் பணியாளர்கள் - இந்திய குடும்ப நலச் சங்கம், மகளிர் தொண்டு நிறுவனம் அனைவரும் இணைந்து இந்த முகாம்களை வெற்றிகர மாக நடத்தியுள்ளனர்.

நிறைவு விழாவிற்கு வருகை புரிந்தோரைத் தமிழ்நாடு மகளிர் தொண்டு நிறுவனத்தின் தலைவர் திருமதி பத்மினி சிவசுப்ரமணியம் வரவேற்றுப் பேசியபோது குறிப்பிட்டார்:

'மகளிர் தொண்டு நிறுவனம் ஏனையோரின் உதவியுடன் இந்த 100 நாள் குடும்பநலப் பயிற்சி முகாமை நடத்தி முடித்துள்ளது: இந்த வாழ்க்கைக் கல்வி, குடும்ப நலத்தை வலியுறுத்தவும்-மேலும் குழந்தைகள் பெறக்கூடாது என் பதை வலியுறுத்தவும் பயன்படு கிறது! குடும்பநல முகாம்கள் நடத்துவது கடினமான பணி ஆகும். சமுகநலப் பணியில் ஈடு பட்டுள்ள எங்கள் நிறுவனத்தை நாங்கள் கோவில் என நினைக் கிறோம்'.

அடுத்து உரையாற்றிய மகளிர் தொண்டு நிறுவனத்தின் கௌரவச் செயலர் திருமதி மனோ பக்தவத்சலம் உரை யாற்றுகையில், ''மாநகராட்சி யைச் சேர்ந்த டாக்டர்கள் 18 பேர் இந்த முகாம்களில் பங் கேற்றனர். அவர்களது பணியை நாங்கள் மறக்க முடியாது. உலகம் மக்கள் தொகைப் பெருக்கத்தால் தத்தளித்து வருகிறது. உலக வங்கியும் குடும்பநலத்திற்கு முக்கியத்துவம் அளித்து வரு கிறது'' என்றார்.

பயிற்சி முகாமின் மூலம் பயன டைந்த திருமதி சரஸ்வதி தமது அனுபவத்தை எளிய தமிழில் சொல்லியது இனிமையாக இருந்த துடன் - இதயத்தைத் தொடும் வகையில் அமைந்திருந்தது. அவர் குறிப்பிட்டதாவது:



''சென்னை ஷெனாய்நகர் நீச்சல் குளத்துக்கிட்டே நடந்த முகாமிலெ டாக்டர்களோட அறி வுரையைக் கேக்குற சந்தர்ப்பம் எனக்குக் கெடைச்சுது. அதன்படி நான் குடும்பநல ஆபரேசன் செய்துக்கிட்டேன். என் கணவ ரோட வருமானத்துக்கு ஏற்ற படி வாழ்க்கை நடத்துறதுக்கும், வறுமையில இருந்து குழந்தை களைக் காப்பாத்துறதுக்கும் குடும்பநலத் திட்டம் ரொம்ப உதவியா இருக்குதுங்கிறதை நான் அனுபவப்பூர்வமா தெரிஞ் சுக்கிட்டேன். அதை உங்களுக் கும் தெரிவிச்சுக்குறேன்!''

மாநகராட்சி மருத்துவ அலுவ லரும், மாவட்ட குடும்பநல அலுவலருமான டாக்டர் திருமதி ஹைமா பாலச்சந்திரன், 'தாய் மார்கள் எங்கள் மருத்துவ மனைக்கு எப்போதும் வரலாம். நாங்கள் சேவை செய்யக் காத் திருக்கிறோம்' என்று குறிப்பிட் டார்.

பொதுச் சுகாதாரத் துறை இயக்குநர் டாக்டர் திரு வி. கபாலி உரையாற்றுகையில் தெரி வித்ததாவது:

''சமுகநலத்துறை, சுகாதாரத் துறை, மாநகராட்சியின் பல் வேறு துறைகள் ஆகியவற்றுடன் மக்களும் சேர்ந்ததால் முகாம் களை வெற்றியுடன் நடத்த முடிந்திருக்கிறது.

''4000 பேர்களுக்கு மேல் பயிற்சி பெற்று, 447 பேர் அறுவைச் சிகிச்சை அளிக்கப் பெற்றனர் என்பதிலிருந்தே முகாமின் வெற்றி தெற்றென விளங்குகிறது.

''தாய்மார்கள் - கருவுற்றிருக் கும்போது தாய்சேய் நல நிலை யத்திற்குச் சென்று பரிசோதனை செய்து கொள்ள வேண்டும்; பிறகு குழந்தை பிறந்த பின்வர், குழந்தைக்கு நோய்த்தடுப்புக் குரிய மருந்துகளைப் பெற்றுக் கொள்ள வேண்டும். குழந் தைகள் வளரும் சமயத்தில் ஏதா வது கோளாறுகள் ஏற்படலாம். குறிப்பாக வயிற்றுப் போக்கு ஏற் படும். அதனை நிவர்த்திக்க இந்த முகாமில் பயிற்சி அளிக் கப்படுகிறது''.

அடுத்து உரையாற்றிய தமிழ் நாடு சமூகநல வாரியத் தலைவர் திருமதி. தாரா. செரியன் எம். எல். சி., குறிப்பிட்டார்:

''குடும்பநலப் பயிற்சி முகாம் என்பது ஒரு கூட்டுப் பணியாகும். இந்த முகாம்கள் தாய்மார் களுக்கு மிகவும் பயனுள்ள தாகும். குடும்பநலத்தைப்பாது காத்துக் கொள்வதற்கு மட்டு மல்ல-வாழ்க்கையின் பல்வேறு வகையான செயல்முறைகளுக்கும் உதவிகரமாக இருக்கும். நாடு முன்னேற்றம் அடைய வேண்டும் என்றால், நகரங்கள் மட்டும் முன்னேறினால் போதாது; கிராம மக்களும் முன்னேற வேண்டும்.''

அடுத்து, தொடக்க உரை ஆற்றவந்த தமிழக அரசின் 2-வது செயலர் திரு டி.வி. அந்தோணி இ.ஆ.ப., அவர்கள் உடல்நலக் குறைவின் காரண மாகப் பேசமுடியவில்லை. அவரது உரையின் முக்கியமான பகுதி களை மாநகராட்சி கல்வி அதி காரி திரு ஜெயபாலன் கூறி னார். அவர் தெரிவித்ததாவது:

'குடும்பநலம் அவசியமானது என்பதைப் பெரும்பான்மையான மக்கள் அறிந்திருக்கிறார்கள். அதற்குக் கருத்தடை அவசியம். அது குறித்துச் சிலர் அறிந்திருக் கிறார்கள். ஆனால் யாரும் முழுமையாகத் தெரிந்து கொள் வல்லை. அதை அறிந்து கொள் ளப் புத்தகம் வேண்டுமென நினைக்கிறார்கள். பிறரிடம் கேட்டால் அவர்கள் என்ன நினைப்பார்களோ என்று நினைத்துத் தயங்குகிறார்கள். அறுவைச் சிகிச்சை செய்து கொண்டால் மருத்துவமனையில் தங்கிச் சிகிச்சை பெறவேண்டுமே என்றெல்லாம் நினைத்துப் பய மடைந்து வருகின்றனர். இந்த பயத்தை நாம் தெளிவாக்க வேண்டும்.

''குடும்பநலக் கருத்தை யாருக்குச் சொல்கிறோம் என் பதை உணர்ந்து நாம் சொல்ல வேண்டும். ஏழை எளிய மக்களி டம் சொல்லும்போது அவர் களுக்குப் புரியும் மொழியில் சொல்ல வேண்டும்.''

இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்ட மாண்புமிகு நல

வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர் எச். வி. ஹண்டே அவர்கள் தமது உரையில் குறிப்பிட்டார்:

''இங்கு என் எதிரில் அமர்ந்திருக்கும் தாய்மார்களில் பலரை அவர்களது குழந்தைப் பருவம் முதல் நான் அறிவேன். இங்கு குடும்பநலத் திட்டத்தால் பயன் பெற்ற ஒரு சகோதரி தனதுஅனுபவத்தை எடுத்துச் சொன்னார். குடும்ப நலத்தைத் தாய்மார்கள் பேண வேண்டும் என்பதையும்' கணவன் மனைவி வேற்றுமை இன்றி வாழவேண்டும் என்பதையும் அவர் இங்கு வலியுறுத்திச் சொன்னார். வாழ்க்கைக்கு அவசியமான ஒரு கருத்தை இங்கு அவர் உணர்ந்து தெரிவித்திருக்கிறார். ஒரு தெய்வத்தை நான் மனித உருவில் காண்கிறேன்.

''இந்த இடத்தில் நான் ஒரு முக்கியமான செய்தியை வலியுறுத்த வேண்டியுள்ளது. குடும்ப நல முனைப்பு இயக்கங்கள் 14 வாரங்கள் நடத்தப்படும் என்று மைய அரசினால் முதலில் அறிவிக்கப்பட்டுத் தற்போது அது 10 வாரங்கள் எனக் குறைக்கப்பட்டுள்ளது. அத்துடன், ஏப்ரல்-மே மாதங்களில் - அதாவது கோடைக் காலத்தில் நடத்தப்பெறும் என்றும் மைய அரசு அறிவித்துள்ளது.பீகார் மாநிலம், உத்தரப் பிரதேச மாநிலம் ஆகியவை இரண்டும் குடும்பநல முனைப்பு இயக்கத்திற்குரிய இலக்கை நிறைவேற்றத் தவறிவிட்டன. அகில இந்திய அளவில் அவர்கள் செயலாற்றாமல்இருந்துவிட்டதை - ஒழுங்காக வேலை செய்யாதிருந்ததை மூடி மறைப்பதற்காக - இப்போது அவசரப்படுத்துவதுடன் - அறுவைச் சிகிச்சைக்கு ஏற்பில்லாத கோடை காலத்தைத் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள்.

இது குறித்து நாம் மைய அரசுக்கு ஆட்சேபணை தெரிவித்துள்ளோம்.

''குடும்பநலப் பணிகளில் தமிழ்நாட்டில் நாம் நிறையச் செய்துள்ளோம். நம்மை மற்ற மாநிலங்கள் பின்பற்றினால் போதுமானது''.

தமது சொற்பொழிவுக்குப் பின்னர், முகாம்களில் சிறப்புப் பணியாற்றிய மருத்துவர்களுக்குச் சான்றிதழ்களும் தொண்டு நிறுவனத்தைச் சார்ந்தவர்களுக்கு நினைவுப் பரிசுகளையும் மாண்புமிகு நல்வாழ்வுத் துறை அமைச்சர் வழங்கினார்.

நிகழ்ச்சித் தொகுப்பு:
**எஸ். எஸ். சுந்தரம்.**

## அவளா இவள் !

1950ஆம் ஆண்டு ! நான் ஷெனாய் நகரில் தேவகி அம்மாள் தெருவில் மருத்துவமனையைத் தொடங்கியிருந்த காலம். அப்போது ஒரு தாயார் தன் 6 வயதுப் பெண் குழந்தைக்கு வைத்தியம் செய்ய எனது மருத்துவமனைக்கு அழைத்து வந்திருந்தார்.

அந்தச் சிறுமி, எனது மேஜை மீதிருந்த மை பாட்டிலை எடுத்து மையைக் கொட்டி விட்டது. மேஜை விரிப்பெல்லாம் மையால் நனைக்கப் பட்டுவிட்டது. தாயார் குழந்தையைக் கடித்து கொண்டார். நான், 'குழந்தை என்ன செய்யும், பாவம்' என்று சொல்லி ஆறுதல் சொன்னேன். பின்பு அந்த நிகழ்ச்சியை நான் மறந்தே போனேன்.

1980ஆம் ஆண்டில் நான் தேர்தலில் நின்ற போது பொதுமக்களிடம் வாக்குக் கேட்டு, ஷெனாய் நகர்ப் பகுதிக்குச் சென்றபோது, அங்கே, என்னைச் சந்தித்த ஒரு கிழவி, என்னைத் தெரியவில்லையா ஐயா" என்று தெலுங்கில் கேட்டார்.

நான் சில நிமிடங்கள் யோசித்தேன். அந்த அம்மையாரே பேசத் தொடங்கினார்!

''பல' வருஷங்களுக்கு முன்னெ உங்க டிஸ்பன்சரியிலே இங்க் பாட்டிலைக் கொட்டுச்சே ஒரு சின்னப் பொண்ணு, அது நான்தான்" என்று அந்த அம்மையார் சொன்னதும் நான் வியப்படைந்தே போனேன்.

அந்த அம்மையாரின் பக்கத்திலே 16 வயதுப் பெண் நின்று கொண்டிருந்தாள். அவளது கையில் சின்னக் குழந்தை ஒன்று இருந்தது.

''இது என் மகள்; அது என் பேத்தி'' என்று அந்த அம்மையார் அறிமுகம் செய்தார்.

''உனக்கு எத்தனை குழந்தைகள்" என்று நான் கேட்டேன்.

''ஒன்பது குழந்தைகள்'' என்று பதில் சொன்னார் அந்த அம்மையார்.

எனக்கு மயக்கம் வந்துவிட்டது.

"விட்டுக்காரர் எப்படி இருக்கிறார்?'' என்று கேட்டேன்.

''அவர் வீட்டைவிட்டு ஓடிப் போயிட்டாரு" என்றார் அந்த அம்மையார்.

அந்த அம்மையாரின் வாழ்க்கையை அவரது விட்டுக்காரர் எந்த அளவு கெடுத்திருக்கிறார் என்பதை எண்ணிப்பார்க்கும்போது என் மனம் கொதிக்கிறது. ஒன்பது பிள்ளைகளையும் கொடுத்துவிட்டு, அந்தக் கணவன் அந்தப் பெண்ணை விட்டுவிட்டு ஓடியிருக்கிறான் என்றால், தாய்க்குலத்தின் மீது ஆண் இனம் எத்தகைய தாக்குதலை நடத்தியிருக்கிறது என்பது விளங்கும்! 36 வயதுக்குள்ளேயே அந்தப் பெண், கிழவியாவதற்கு அவளது கணவனான ஆண் மகன் தான் காரணம்!

-மாண்புமிகு நல்வாழ்வுத்துறை அமைச்சர்
**டாக்டர் எச். வி. ஹண்டே**
(நூறு நாள் குடும்ப நல முகாம் நிறைவு விழாவில் ஆற்றிய உரையிலிருந்து)

# 60 மணி விழாக் காணும் மலர்க் கண்காட்சி

கத்தரிக்காய் மனிதன்

பாகற்காய் முதலை

சுரைக்காய்ப் படகு

வெள்ளரிக்காய் வண்டி

வெங்காயத் தாமரை

—இவையெல்லாம் எங்கே பார்த்திருக்கிறோம்? 'மைலேடீஸ் பூங்கா'வில் நடந்த மலர்க் கண்காட்சியில்தான்!

27-3-'85 அன்று சென்னை மாநகராட்சியின் சார்பில், 60-ஆம் ஆண்டு மலர்க் கண்காட்சி மிகச் சீரும் சிறப்புமாக நடந்தது.

எங்குப் பார்த்தாலும் பச்சைப் பசேலென்ற புல்தரைகள், கண்ணைக் கவரும் வண்ணமலர்கள். மனத்துக்கு இதந்தரும் இனிய நீரூற்றுகள்... எல்லாம் கண்கொள்ளாக் காட்சியாக விளங்கின.

ஒரு பக்கம் காய்கறிகளைக் கொண்டு, தம் கைவண்ணத்தைக் காட்டும் காரிகையர், இன்னொரு பக்கம் வண்ண உடையணிந்து காட்சிதரும் பள்ளி மாணவியர்!

விழா தொடங்கியது.

சென்னை மாநகராட்சி சிறப்பு அதிகாரி திரு செ. ராம்தாஸ் இ.ஆ.ப. அனைவரையும் வரவேற்றுப் பேசினார்.

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு. ப. உ. சண்முகம் அவர்கள் தலைமை தாங்கிப் பேசுகையில்,''சென்னை மாநகரிலுள்ள பூங்காக்களை அழகாகப் பராமரிக்கும் அரசின் திட்டங்களுக்குப் பொதுமக்களும் ஒத்துழைப்புத் தரவேண்டும்'' என்று கேட்டுக் கொண்டார்.



மேதகு தமிழக ஆளுநர் திரு எஸ். எல். குரானா அவர்கள் மலர்க்கண்காட்சியைத் தொடங்கி வைத்து, சிறந்த சாலைப் பூங்காக்கள், பெட்ரோல் விற்பனை இடங்கள், பூங்காக்கள், கோட்டங்கள் ஆகியவற்றுக்குப் பரிசு வழங்கிப் பேசினார். அப்போது அவர் குறிப்பிட்டார்—.

''சென்னையிலுள்ள ஒவ்வொரு பூங்காவிற்கும் ஒரு குழு வீதம் அமைக்க வேண்டும். இந்தக் குழுக்களே அந்தந்தப் பூங்காக்களைப் பராமரிக்கும் பணியில் ஈடுபட வேண்டும்.

''சென்னை மாநகராட்சியின் வருமானத்தைப் பெருக்கினால் தான், போதிய அளவு நிதி, பராமரிப்புக்குச் செலவு செய்ய முடியும். எனவே சென்னை மாநகராட்சியின் வருவாயைப் பெருக்கும் திட்டங்கள் குறித்து ஆய்வு செய்ய ஒரு குழுவை அமைக்க வேண்டும்.

''சுற்றுப்புறங்கள் சுத்தமாக இருக்கப் பொதுமக்களும் ஒத்துழைக்க முன்வரவேண்டும். சுத்தமான காற்றைச் சுவாசிப்பதே தேக ஆரோக்கியமாகும். இதற்காக நகரில் மரங்களை அதிக அளவில் வளர்க்க வேண்டும்.''

சென்னை நகரில் சிறந்தமுறையில் பராமரிக்கப்படும் போக்குவரத்துத் தீவுப் பூங்காக்களுக்கும் அதைச் சிறந்த முறையில்

பராமரித்த நிறுவனங்களுக்கும் பரிசுகள் வழங்கப்பட்டன.

முதல் பரிசு: ஜெமினி ரவுண்டானாவில் உள்ள தீவுப் பூங்கா-டியூப் இன்வெஸ்ட்மெண்ட் ஆஃப் இந்தியா லிமிடெட்.

இரண்டாம் பரிசு : போர் நினைவுச் சின்னத்திற்கு அருகிலுள்ள தீவுப் பூங்கா-நியூ இந்தியா மாரிடைம் ஏஜென்சிஸ்.

மூன்றாம் பரிசு: தியாகராய நகர் வாணிமகாலுக்கு அருகிலுள்ள தீவுப் பூங்கா-இந்தியன் ஓவர்சீஸ் வங்கி.

சென்னை மாநகராட்சியின் சார்பில் சிறந்த முறையில் பராமரிக்கப்பட்டு, பரிசுகள் பெற்ற பெரிய பூங்காக்கள் - சிவஞானம் பூங்கா, வடசென்னை, பி.டி. ராஜன் சாலையிலுள்ள பூங்கா, கே. கே. நகர்.

சிறிய பூங்காக்கள் - ஜீவா பூங்கா, வடசென்னை; வெங்கடாச்சல முதலி தெருவிலுள்ள பூங்கா, தென்சென்னை, சிறப்புப் பரிசு மைலேடிஸ் பூங்காவுக்குக் கிடைத்தது. இதேபோல, பள்ளித் தோட்டங்களுக்கும் பரிசுகள் வழங்கப்பட்டன.

சென்னை மாநகராட்சி ஆணையர் திரு கோ. ராமகிருஷ்ணன் நன்றி நவின்றார். விழாவில், மாண்புமிகு வீட்டுவசதித்துறை அமைச்சர் திரு.ந நல்லுசாமி அவர்களும், கோ-ஆப்டெக்ஸ் ஆலோசனைக் குழுத் தலைவர் திரு அனகாபுத்தூர் ராமலிங்கம், எம்.எல்.சி., அவர்களும் கலந்து கொண்டார்கள்.



மாநகராட்சியில், மலர் மணம் பரப்பும் பூங்காக்கள் மக்கள் மனத்தைக் கவர்ந்து வருகின்றன. அவை வருமாறு:

திரு.வி.க. பூங்கா (செனாய் நகர்); நாகேசுவரராவ் பூங்கா, (மயிலாப்பூர்) ; பனகல் பூங்கா, நடேசன் பூங்கா, ஜீவா பூங்கா, சரவணா பூங்கா, (தியாகராய நகர்); நேப்பியர் பூங்கா (சிந்தாதிரிப்பேட்டை); நேரு பூங்கா, சத்தியமூர்த்தி பூங்கா, ஸ்பர்டாங்க்சாலைப் பூங்காக்கள் (சேத்துப்பட்டு) அண்ணா பூங்கா, (இராயபுரம்); 'மக்கள் பூங்கா' என அழைக்கப்படும் மலர்க் காட்சி நடக்கும் 'மைலேடீஸ்' பூங்கா; தியாகராயர் பூங்கா, (வண்ணாரப்பேட்டை); சூரிய நாராயணா பூங்கா, (காசிமேடு) காந்தி பூங்கா (பெரம்பூர்); கோபதி நாராயணசாமி பூங்கா, (தேனாம்பேட்டை); சுந்தரராவ் பூங்கா, (எழும்பூர்); வள்ளுவர் கோட்டம் அருகில் உள்ள சுதந்திர தினப் பூங்கா, (நுங்கம்பாக்கம்); காமராசர் பூங்கா, (இராயபுரம்) ஆகியவையாகும்.

இவையன்றி, 1985-86 ஆம் நிதி ஆண்டில் மேலும் பல புதிய பூங்காக்கள் அமைப்பதற்கு-அதுவும் குறிப்பாக அண்மையில் நகரத்துடன் இணைக்கப்பட்ட இணைப்புப் பகுதிகளிலும் ஊராட்சிப் பகுதிகளிலும் அமைக்கத் திட்டங்கள் உள்ளன.

பூங்காக்களைப் பராமரிப்பதற்காக 426 அலுவலர்களும், ஊழியர்களும் மாநகராட்சியில் பணிபுரிகிறார்கள். இவற்றில் இணை இயக்குநர் அளவிலான தோட்டக்கலை வல்லுநர் ஒருவரும், பூங்கா கண்காணிப்பாளர் இருவரும், பூங்கா மேற்பார்வையாளர் பத்துப்பேரும், தோட்டத் தொழிலாளர்கள் 413 பேரும் பணி செய்து வருகின்றனர்.

பூங்காக்கள், மாநகர மக்களின் உயிர் மூச்சாக, இதயமாக இயங்கி வருகின்றன. மாநகர் எல்லைக்குள் புதிய வீடுகட்டும் வசதிகள் அமைத்துத் தரும்போது மாநகராட்சி, மொத்தம் கட்டப்பட ஒதுக்கப்பட்டுள்ள நிலப் பரப்பில் 10 சதவீதம் பூங்காக்களுக்காகவும் விளையாட்டுத் திடல்களுக்காகவும், மற்ற பொது நலத்திற்காகவும் ஒதுக்கும்படி வலியுறுத்தி வருகின்றது.

பூங்காக்களைப் பாதுகாக்கும் முகத்தான் தமிழக அரசு 'தமிழ்நாடு பூங்காக்கள் விளையாட்டுத் திடல்கள், மற்றும் (காலி)பொது இடங்கள் பாதுகாப்பு மற்றும் ஒழுங்குபடுத்துதல் சட்டம் 1953' என்ற சட்டம் ஒன்றினை இயற்றியுள்ளது. இதன் மூலம் நகரிலுள்ள பூங்காக்களும், விளையாடுமிடங்களும் இச்சட்ட வரைவின் கீழ் வெளியிடப்பட்டு, கூடுமானவரையிலும் ஆக்கிரமிப்பினின்றும் பாதுகாக்கப்பட்டு வருகின்றன.

சென்னை மாநகராட்சியின் முயற்சியின் காரணமாக சாலைப் போக்குவரத்துத் தீவுகள் 34-ல் பூங்காக்களைத் தனியார் நிறுவனங்கள் பல,மனமுவந்து ஏற்றுச் சிறப்பாய்ப் பராமரித்து வருகின்றன. இதற்கு அணி செய்யும் வகையில் வண்ண நீரூற்றுக்கள் 'இந்தச் சாலைத் தீவுத் திடல்களில் இயங்கி வருகின்றன.





1985-86 நிதி ஆண்டுகளில் மேலும் பல தீவுகளில் இதனை நிறுவத் திட்டம் உள்ளது. ஒவ்வொரு மலர்க் கண்காட்சியின் போதும் இந்திய ஆயில் கழகம் மூன்று சுழற் கேடயங்களை மிகச் சிறப்பாய்ப் பராமரிப்பில் உள்ள சாலைத் தீவுப் பூங்காக்களுக்கு வழங்கி வருகின்றது.



சாலைகளை விரிவு படுத்தும் நோக்கில் சில ஆண்டுகளுக்கு முன்னர் நன்கு வளர்ந்த மரங்கள் வெட்டி வீழ்த்தப்பட்டன. இவற்றை ஈடுசெய்யும் பொருட்டு 15 ஆயிரம் மரங்கள் நகர் முழுவதும் நடப்பட்டு அவற்றில் 80 சதவீதம் வளர்ந்து வருகின்றன.

சாலை ஓர மரங்கள் நடுவதில் பல தொல்லைகள் குறிப்பாய்-கால்நடைகள் மூலமாகவும், தண்ணீர்ப் பற்றாக்குறையாலும் சமூக விரோத சக்திகளாலும் ஏற்படுகின்றன. பாரதப் பெட்ரோலியம் போன்ற பொது நிறுவனங்கள் தாங்களே முன்வந்து அண்ணாநகர் இரண்டாம் சாலை, தணிகாசலம் சாலை, வெங்கட்டநாராயணசாலை, ஜி. என். செட்டி சாலை போன்றவற்றில், சாலை ஓர மரங்களை நட்டுப் பராமரித்து வருகின்றன.

1984 நவம்பரில் நகரைத் தாக்கிய புயல் காற்று, சாலை ஓர மரங்கள் 954-ஐ வேரோடு சாய்த்து வீழ்த்தியது. இந்தச் சாலை ஓர மரங்கள் அழிக்கப்பட்டன. இதனை ஈடுகட்ட மாநகராட்சி 5,000 மரக்கன்றுகளை முக்கியச்சாலை ஓரங்களில் நட ஆரம்பித்து,இப்பணி 1985-86 ஆம் ஆண்டு வரையிலும் தொடர்ந்து நடைபெற ஆவன செய்யப்பட்டுள்ளது.

'மைலேடீஸ் பூங்கா' நகரின் இதயமாக விளங்கும் ரிப்பன் மாளிகையின் அருகே 4 ஏக்கர் நிலப்பரப்பில் மிக எழிலாய்ப் பராமரிக்கப்பட்டு வருவதுடன், இதுவரை நடந்த அத்தனை மலர்க் கண்காட்சிகளும் இங்கே நடத்தப் பெற்ற சிறப்பையும் உடையது. இப்பூங்காவின் உள்ளே உயர்ந்த அசோகர் தூண் எழிலுடன் நடுவே வான் நோக்கி நிற்க, அதனைச் சுற்றிலும் உள்ள பல அழகிய வண்ண மலர்கள் நீரோடைக் கரையிலும், அருகிலும் நெஞ்சைத் தொட, நீரூற்றுக்கள்,காண வருவோர்க்கு நல்விருந்தாக அமைகின்றன.

இம்மலர்க் கண்காட்சியில் 25 வகைகளுக்கும் மேலான ஆடம்பர,அலங்கார தழைச்செடிகளும், 15-க்கும் குறையாக ஆர்கிட்ஸ் பல நிறங்களிலும் எங்கும் நிறைந்து போகன்வில்லாக்களிடையே நம் கண்களுக்குக் குளிர்ச்சியைத் தருகின்றன. ஜப்பான் வகை 'இக்கிபானா', 'போன்சாய்' வகைகளும் இங்கே உள்ளன.

''1984-85ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டத்தில் பூங்காவிற்கும் விளையாட்டுத் திடல்களுக்குமாக ரூ. 10 இலட்சம் ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் பூங்காக்களை மேலும் மேம்படுத்த ஏற்ற வகையில் ரூ. 35 இலட்சம், மக்கள் திருப்திப்படும் வகையில் ஒதுக்கப்பட்டுள்ளது. இவை 1985-86ஆம் ஆண்டில் ரூ. 40 இலட்சமாக ஆக்கப்பட்டுள்ளது.

''36 இலட்சம் மக்கள்வாழும் சென்னை மாநகரின் வருவாய் ரூ. 35 கோடியாக மட்டும் இருப்பதால் இவை மற்ற முக்கிய அவசியப்பணிகளுக்குச் செலவு செய்யப்பட வேண்டியதால் அதற்கு மேல் ஒதுக்க இயலாத நிலை உள்ளது. இதே நேரத்தில் பம்பாய் மாநகராட்சிக்கு (90 இலட்சம் மக்கள் தொகை) ரூ. 450 கோடி வருமானம், குறிப்பாய், 'ஆக்ட்ராய்' போன்றவற்றால் வருகிறது. அந்த 'ஆக்ட்ராய்' வரிச் சிறப்பு நமக்கில்லை. ஆகையால் அரசு, மாநகரின் நிதி பற்றாக்குறைக் காலங்களில் கைகொடுத்து மாநகராட்சியின் பிரச்சினை தீர்க்கும் வகையில் துணை புரிய வேண்டும்'' என்று சென்னை மாநகராட்சி ஓர் அறிக்கையில் தெரிவித்துள்ளது.

பொதுவாக மலர்கள் நம் மனத்தை மகிழ்விக்கின்றன. குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை அதன் அழகில் மயங்காதவர்கள் இல்லை. எனவே ஆண்டு முழுவதும் அழகிய மலர்களைப் பார்க்கவும், பச்சைப் பசேலென மரஞ்செடி கொடி வகைகளைக் கண்டு மகிழவும் 'மைலேடீஸ்' பூங்கா, மக்களை அன்புடன் வரவேற்கிறது.!

—பி. வி. கிரி




**ரோ**த்மன்ஸ் கோப்பையை இந்தியக் கிரிக்கெட் அணி கைப்பற்றியுள்ளது. 29.3.85 அன்று இறுதி விளையாட்டில் அது 3 விக்கெட் வித்தியாசத்தில் ஆஸ்திரேலிய அணியைத் தோற்கடித்தது. ஐக்கிய அரபு எமரேட்டுகளில் உள்ள ஷார்ஜாவில் இந்தப் போட்டி நடைபெற்றது.

ரோத்மன்ஸ் சர்வதேச கிரிக்கெட் போட்டித் தொடரின் மிகச் சிறந்த ஆட்ட வீரருக்குரிய பரிசை கவாஸகர் பெற்று, இந்தியாவுக்குப் புகழைத் தேடி தந்தார்.

ஆல்-ரவுண்ட் செயல் திறனுக்காக இந்தப் போட்டியின் மிகச் சிறந்த ஆட்ட வீரராக மொகீந்தர் அமர்நாத் அறிவிக்கப்பட்டார்.

மிகச் சிறந்த ஆட்ட வீரருக்குரிய 500 டாலர் சன்மானமும் அமர்நாத்துக்குப் போட்டி முடிவில் கிடைத்தது. இறுதி விளையாட்டில் இத்தகைய விருதை அவர் பெறுவது இது இரண்டாவது தடவையாகும். இங்கிலாந்தில் முன்பு மேற்கிந்தியக்குழுவுக்கு எதிராக நடைபெற்ற இறுதிச் சுற்றிலும் அவர் இந்தப் பெருமையைப் பெற்றார்.

கிரிக்கெட் விளையாட்டுக்குச் சிறந்த சேவை புரிந்ததற்காக இந்தியாவின் முன்னாள் விக்கெட் கீப்பர் சையத் கிர்மானிக்கும், பாகிஸ்தானின் முன்னாள் விக்கெட் கீப்பர் வாஸிம்பாரிக்கும் கிரிக்கெட் வீரர்களுக்கான நல நிதித் தொகுப்பிலிருந்து தலா 50,000 டாலர் வழங்கப்பட்டது.

ஷார்ஜா வர்த்தகப் பிரமுகர் அப்துல் ரஹ்மான் புக்ஜாதிரினால் அமைக்கப்பட்ட நிதியாகும் இது. இதே நிதியிலிருந்து இந்தியாவின் ஏக்நாத் ஸோல்சருக்கும், பாகிஸ்தானின் குல் முகமதுக்கும் தலா 15,000 டாலர் அளிக்கப்பட்டது.

பரிசளிப்பு விழாவிற்கு மன்னர் குடும்பத்தினரும், முன்னாள் மத்திய அமைச்சர் வி. சி. சுக்லா உட்பட பல இந்தியப் பிரமுகர்களும் வந்திருந்தார்கள்.

அண்மையில் ஆஸ்திரேலியாவில் 7 நாடுகளுக்கு இடையே நடந்த உலகச் சாம்பியன் போட்டியிலும் இந்திய வீரர்கள் வெற்றி வாகை சூடி உலகச் சாம்பியன் ஆனார்கள். இப்பொழுது 4 நாடுகளுக்கு இடையே நடந்த ரோத்மன்ஸ் கோப்பைப் போட்டியிலும் வெற்றிபெற்று யாருமே வீழ்த்த முடியாத வெற்றி வீரர்களாகத் திரும்புகிறார்கள்.

ரோத்மன்ஸ் கோப்பையை வென்ற இந்திய அணிக்கு 5 லட்ச ரூபாய் ரொக்கப் பரிசு அளிக்கப்பட்டது. 2 முக்கிய விக்கெட்டை வீழ்த்தி, பின்னர் இந்திய அணியின் வெற்றிக்கு அரணாக நின்று 24 ரன்கள் எடுத்து அமர்நாத் சிறந்த வீரராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அவருக்கு 6 ஆயிரம் ரூபாய் பரிசு அளிக்கப்பட்டது.

இந்திய அணியின் மாபெரும் வெற்றியைப் பாராட்டி மாண்புமிகு பிரதமர் திரு ராஜீவ் காந்தி அவர்கள் இந்திய அணி கேப்டன் கபில்தேவுக்கு வாழ்த்துத் தெரிவித்து, தந்தி அனுப்பினார்.

''இந்திய அணியை மீண்டும் மகத்தான வெற்றி பெறச் செய்துள்ளீர்கள். இந்த வெற்றியினால் இந்திய நாடே பெருமையில் குதூகலித்துள்ளது'' என்று அந்தத் தந்தியில் குறிப்பிட்டுள்ளார்.

இந்திய வீரர்களின் வெற்றியைப் பாராட்டி மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள், இந்திய அணி கேப்டன் கபில்தேவுக்கு அனுப்பியுள்ள வாழ்த்துத் தந்தியில் கூறி இருப்பதாவது:

''ஷார்ஜா நகரில் நடந்த ரோத்மான்ஸ் கிரிக்கெட் போட்டியில் இந்தியா மீண்டும் வெற்றி பெற்றுள்ளது. அதன் மூலம் இந்திய அணி தனது திறமையை மீண்டும் உறுதிப்படுத்திவிட்டது. இந்த வெற்றியினால் இந்திய நாடே பெருமை அடைகிறது. இந்த வெற்றியைத் தேடித் தந்த தங்களுக்கும், இந்திய அணியினருக்கும் தமிழக மக்கள் சார்பிலும் என் சார்பிலும் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்''.

வெற்றி மேல் வெற்றி பெறும் இந்தியக் கிரிக்கெட் அணியை நாமும் மனதாரப் பாராட்டுவோம்.



# சேலம் மாவட்டம்

வளரும் தமிழகம்:



**இயற்கை வளம் மிகுந்த**
**சேலம், தொழில் வளர்ச்சியில்**
**ஊக்கமுள்ள மாவட்டம்.**
**தமிழகத்திலேயே சிறந்த கனிவளங்கள்**
**நிறைந்திருப்பது சேலம்!**
**பசுமைப் புரட்சியிலும்**
**வெண்மைப் புரட்சியிலும்**
**மாநிலத்தில் முதலிடம் வகிப்பது**
**சேலம் மாவட்டம்!**
**கலை வளமும் கல்விச்சிறப்பும்**
**மிகுந்த இம்மாவட்டம்**
**அரசின் முன்னேற்றத் திட்டங்களை**
**நிறைவேற்றுவதிலும்**
**முன்னணி இடம் வகிக்கிறது.**
**இந்திய விடுதலைப் போருக்கு**
**உரிய பங்கை ஆற்றிய சேலம்**
**நாட்டு முன்னேற்றத்திற்கு**
**அயராது, தன்பங்கை அளித்து வருகிறது**

**பாரதப் பிரதமரின் 20-அம்சத் திட்டம்**

**இலக்கும் சாதனையும்**

| | திட்டத்தின் பெயர் | 1983--84 இலக்கு | 1983--84 சாதனை | 1984—85 இலக்கு | 1984—85 சாதனை | |
|---|---|---|---|---|---|---|
| 1 | பாசன வசதி | 445 | 1063·23 | 746 | 792·43 | ஹெக்டேர் |
| 2 | பயிறு வகைகள் | 37800 | 38000 | 31200 | 32951 | மெட்ரிக் டன் |
| | எண்ணெய் வித்துகள் | 131·70 | 132·551 | 130·00 | 131·179 | மெட்ரிக் டன் |
| 3 | ஒருங்கிணைந்த கிராம வளர்ச்சி | 21000 | 23735 | 21000 | 21042 | குடும்பம் |
| | கிராமப்புற வேலைவாய்ப்பு | 32·30 | 32·93 | 41·70 | 32·91 | லட்சம் மனித உழைப்பு நாட்கள் |
| 6 | பிணைத் தொழிலாளர்களுக்கு மறு வாழ்வு | 1976 முதல் 802 குடும்பம் 3226 நபர்கள் உதவி ரூ. 527592 | | | | |
| 7 | ஆதிதிராவிடர் நலம் | 11746 | 17770 | 11441 | 14923 | குடும்பங்கள் |
| | பழங்குடியினர் நலம் | 1661 | 2182 | 2024 | 4888 | குடும்பங்கள் |
| 8 | குடிநீர் வசதி | 98 | 74 | 19 | 15 | கிராமங்கள் |
| 9 | வீட்டுமனை வழங்குதல் | 11000 | 19244 | 13000 | 29153 | நபர்கள் |
| | வீடு கட்ட உதவி செய்தல் | 3000 | 3300 | 2000 | 2042 | நபர்கள் |
| 10 | எளியோர்களுக்கு வீடு கட்டுதல் | 2294 | 2532 | 560 | 1120 | வீடுகள் |
| 11 | கிராமங்களுக்கு மின் வசதி | 11 | 11 | 10 | 10 | கிராமங்கள் |
| | விவசாய பம்புசெட்டு மின் இணைப்பு | 2500 | 1765 | 1796 | 4494 | |
| 12 | காடு வளர்ப்பு | 62·90 | 63·00 | 46·62 | 70·65 | லட்சம் மரங்கள் |
| | கரிமவாயு போன்ற மாற்று எரிபொருள் மூலங்களை வளர்த்தல் | 600 | 828 | 2000 | 1422 | |
| 14 | சுகாதார வசதிகளை அதிகப்படுத்துதல் | 1 | 1 | 1 | 1 | சுகாதார நிலையம் |
| | துணை சுகாதார நிலையங்கள் அமைத்தல் | 52 | 81 | — | — | நிலையங்கள் |
| 16 | 6 முதல் 14 வயது குழந்தைகளுக்கு கல்வி வசதி | 14460 | 14463 | 12200 | 15858 | குழந்தைகள் |

| | | | | |
|---|---|---|---|---|
| முதியோர் கல்வி | 30300 | 46956 | 52590 நபர்கள் | 58709 |
| 18 சிறுதொழில் அமைப்புகள் | | — | 1200 | 1298 |

### தன்னிறைவுத் திட்டம்


| அமுலாக்கப்பட்ட | ஊராட்சி ஒன்றியங்கள் | செலவு ரூ லட்சம் |
|---|---|---|
| 1980—81 | 5 | 158·92 |
| 1981—82 | 16 | 439·74 |
| 1982—83 | 14 | 581·85 |

| | |
|---|---|
| அமலாக்கப்பட்ட பேரூராட்சிகள் | 28 |
| மொத்த ஒதுக்கீடு | 81·76 |
| செலவு | 9.25 |
| எடுத்துக் கொள்ளப்பட்ட வேலைகள் | 540 |
| முடிக்கப்பட்ட வேலைகள் | 121 |

### சத்துணவுத் திட்டம்

சத்துணவு சாப்பிடும் குழந்தைகள் எண்ணிக்கை
(1985 ஜனவரி முடிய)

| | |
|---|---|
| குழந்தைகள்நல மையங்கள் (2 வயது முதல் 4 வயது) | 1,49,731 |
| ஆரம்பப் பள்ளி மற்றும் நடுநிலைப்பள்ளி மாணவர் | 2,62,145 |
| உயர்நிலைப்பள்ளி மற்றும் மேல்நிலைப்பள்ளி மாணவர் | 1,19,405 |
| சத்துணவு சாப்பிடும் மொத்த மாணவர் | 5,31,281 |
| முதியோர் உதவித் தொகை பெற்று சத்துணவு சாப்பிடுவோர் | 20,745 |



### ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம்

| | 1983—84 ரூ. லட்சம் | 1984—85 ரூ. லட்சம் |
|---|---|---|
| திட்ட மதிப்பீடு | 280·00 | 280·00 |
| ஒதுக்கீடு | 315·08 | 240·00 |
| செலவு | 313·68 | 236·93 |
| பயன் அடைந்த நபர்கள் | 23735 | 21042 |
| ஆதி திராவிடர் | 920 | 1444 |
| மற்றவர் | 14508 | 12763 |
| பெண்கள் | 5210 | 2978 |

**வை. பழனிச்சாமி, இ. ஆ. ப.**
மாவட்ட ஆட்சியர்.

### தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டம்

| | | |
|---|---|---|
| நிதி ஒதுக்கீடு | ரூ. 292.76 லட்சம் | 310·99 லட்சம் |
| செலவு | ரூ. 295·47 லட்சம் | 325·05 லட்சம் |
| எடுத்துக் கொள்ளப்பட்ட வேலைகள் | 243 | 422 |
| முடிக்கப்பட்ட வேலைகள் | 243 | 422 |
| எடுத்துக் கொள்ளப்பட்ட புதிய வேலைகள் | 1417 | 961 |
| முடிக்கப்பட்ட வேலைகள் | 995 | 762 |

### சுய வேலை வாய்ப்புத் திட்டம்

பாரதப் பிரதமரின் 20 அம்சத் திட்ட சுய வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் மாவட்ட தொழில் மையத்தின் மூலம்கடன் வழங்கும் திட்டம்.

| | 1983—84 | 1984—85 |
|---|---|---|
| நிதி ஒதுக்கீடு | ரூ. 4·50 கோடி | ரூ. 5·00 கோடி |

| | | |
|---|---|---|
| வங்கிகளுக்குப் பரிந்துரைத்த தொகை | ரூ. 4.05 கோடி | 4·97 கோடி |
| பரிந்துரை செய்யப்பட்ட மனுக்கள் | 3409 | 7013 |
| அனுமதிக்கப்பட்டவர்கள் | 2536 | 1897 |

### சமூக நலத்துறை

| திட்டங்கள் | 1983—84 பயனடைந்தோர் | 1983—84 செலவு ரூ. | 1984—85 பயனடைந்தோர் | 1984—85 செலவு ரூ. |
|---|---|---|---|---|
| விதவைத் தாயின் மகளின் திருமணத்திற்கு நிதி உதவி அளித்தல் | 75 | 75,000 | 43 | 43,000 |
| விதவைக் குழந்தைகளுக்கு இலவசப்பாடப் புத்தகங்கள் வழங்கல் | 260 | 10,000 | 260 | 10,000 |
| மலைவாழ் மக்கள் மேம்பாட்டுத் திட்டம் | 150 | 21,700 | 150 | 25,995 |
| ஆதரவற்ற குழந்தைகள் பராமரிப்பு நிலையம் | 246 | 222873.55 | 249 | 202667.00 |
| பார்வையற்றோர் பள்ளி | 65 | 159794.15 | 69 | 173947.00 |

### கிராமப்புறவேலை வாய்ப்பு உறுதியளிப்புத் திட்டம்

| | | |
|---|---|---|
| நிதி ஒதுக்கீடு | — | 318.00 லட்சம் |
| செலவு | — | 317·50 லட்சம் |
| எடுத்துக் கொள்ளப்பட்ட வேலை | — | 1540 |
| முடிக்கப்பட்ட வேலைகள் | — | 1220 |
| | — | [illegible] |



### ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டம்

சேலம் மாவட்டத்தில் பழங்குடியினர் வளவாழ்வுக்காக, ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டம் 1976ம் ஆண்டு முதல் செயல்பட்டு வருகிறது.

### பழங்குடியினர் மக்கள் தொகை

| | | |
|---|---|---|
| 1 | கொல்லிமலை | 30665 |
| 2 | ஏற்காடு | 21676 |
| 3 | கல்ராயன்மலை | 20665 |
| 4 | அரனூத்துமலை | 6604 |
| 5 | பச்சமலை | 6563 |

### செயல்பட்டு வரும் மேம்பாட்டுத் திட்டங்கள்

1 கொல்லிமலை - அறப்பளீசுரர் கோயிலிருந்து ஆகாசகங்கை வரை புதிய தார்ச்சாலை நீளம் 7 கி. மீ. தொகை ரூ 40 லட்சம்

2 ஏற்காடு, கல்ராயன் மலை, கொல்லிமலையில் 10 கிராமங்களுக்கு சூரியவெப்ப மின் வசதி

3 கல்ராயன் மலை - பாய்முடைதல், மூங்கிற் பொருட்கள் செய்தல் ஆகிய புதிய தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள்-தொகை ரூ. 1.45 லட்சம்

4 கல்ராயன் மலை, பச்சமலை, கொல்லிமலை, அரனூத்து மலை ஆகிய இடங்களுக்கு ஆம்புலன்ஸ் வேன்கள் வழங்குதல்-தொகை ரூ 4.56 லட்சம்

5 கல்ராயன் மலை - 1000 ஏக்கரில் பழப்பண்ணை 2.50 ஏக்கரில் காப்பித் தோட்டம்

6 பழங்குடி மக்களும் வெளியுலக நிகழ்ச்சிகளைக் கண்டுகளிக்க 10 தொலைக்காட்சிப் பெட்டிகள் விநியோகம் செய்யப்பட்டுள்ளது.

7 பச்சமலை பழங்குடியினர்க்கு இலவச வீடுகள்; 29 வீடுகள், தொகை ரூ 2·61 லட்சம்

8 1984-85ம் ஆண்டில் 28 மலைமக்கள் கிராமங்களுக்கு மின்வசதி அளிக்கப்பட்டுள்ளது.

## ஆதி திராவிடர், பழங்குடியினர் நலன்

### பள்ளி மாணவர்க்கு உதவித் தொகை வழங்குதல்

| | 1983-84 | 1984-85 |
|---|---|---|
| உயர்கல்வி (11ம் வகுப்பு முதல்) | | |
| உதவிபெறும் மாணவர் | 3698 | |
| உதவி நிதி வழங்கப்பட்ட தொகை | ரூ. 33,34,756 | ரூ. 25,58,721 |
| ஆரம்பக்கல்வி (10 வகுப்பு வரை) | | |
| உதவி பெறும் மாணவர் | 13149 | |
| உதவி நிதி வழங்கப்பட்ட தொகை | ரூ. 2,76,266 | ரூ. 1,58,152 |

| | | மாணவர், மாணவியர் |
|---|---|---|
| ஆதி திராவிடர் பழங்குடியினர் பள்ளிகள் | 54 | 8973 |
| மாணவர்-மாணவியர் விடுதிகள் | 61 | 2910 |

### பிற்பட்டோர் நலத்துறை

மாணவர்க்கு கல்வி உதவித் தொகை வழங்குதல்

| | 1983—84 | | 1984—85 |
|---|---|---|---|
| உயர் கல்வி (11ம் வகுப்பு முதல்) | 8660 | மாணவர் | 8660 |
| | ரூ 1950425 | | 1568918 |
| ஆரம்பக் கல்வி (10ம் வகுப்புவரை) | 9490 | மாணவர் | 7060 |
| | ரூ 134590 | | 108658 |

### வெண்மைப் புரட்சி

**கோழிப் பண்ணை**

நாமக்கல் வட்டம் நாளொன்றுக்கு 50 லட்சம் முட்டைகளை உற்பத்தி செய்கிறது. இது கிழக்கு ஆசியா முழுவதற்கும் ஆன முட்டை விளைச்சல் சாதனை. சேலத்து முட்டை, விமானம் ஏறி வெளிநாடுகளுக்கும் செல்கின்றது.




**பால் உற்பத்தி**

சேலம் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியம், தமிழ்நாட்டின் மிகச் சிறந்த பால் உற்பத்தியாளர் அமைப்பு என்னும் விருது (1984) பெற்றுள்ளது. பால் உற்பத்தி நாளொன்றுக்கு 1,37000 லிட்டர்.

சேலம் மாவட்டத்தில் ஒரு கால்நடை மருத்துவக் கல்லூரி அமைப்பதற்கான அடிப்படைப்பணிகள் தொடங்கி விட்டன.



சென்னையில் நடைபெற்ற சுற்றுலா வர்த்தகப் பொருட்காட்சியில்—மாவட்ட அளவில் சிறந்த அரங்குக்குரிய முதற் பரிசு சேலம் மாவட்டத்திற்குக் கிடைத்தது. மேற்படி பரிசை மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் திரு இரா. நடேசன் பெறுகிறார்.



### வேளாண்மைத் துறை

| | |
|---|---|
| சேலம் மாவட்டப் பரப்பளவு | 8643 ச. கி. மீ. |
| சராசரி மழை | 860 மில்லி மீட்டர் |
| 1983-84ல் மழை | 1009.30 மி. மீ. |
| 1984-85ல் மழை | 669 மி. மீ. |

| சேலம் மாவட்ட | | |
|---|---|---|
| நிகர சாகுபடி பரப்பு | 1096952 ஏக்கர் | |
| நீர்பாயும் பரப்பு | 379769 ஏக்கர் | |
| | 1983-84 | 1984-85 |
| விதை விநியோகம் | மெட்ரிக் டன் | |
| நெல் | 825.5 | 360 |
| சிறு தானியம் | 34.9 | 61.4 |
| பயிறு | 116.1 | 78.7 |
| உரம் | 44328 | 28966 |

### விவசாய உற்பத்திப் பெருக்கத் திட்டம்

| | 1983-84 ரூ. லட்சம் | 1984—85 ரூ. லட்சம் |
|---|---|---|
| ஒதுக்கீடு | 135·10 | 135·10 |
| அனுமதிக்கப்பட்ட தொகை | 58·10 | 56·70 |
| செலவு | 58·09 | 55·06 |
| பயனடைந்த நபர்கள் | 3398 | 5082 |
| ஆதி திராவிடர் | 38 | 214 |
| பழங்குடியினர் | 124 | 146 |
| மற்றவர் | 3236 | 4722 |

### வனத்துறை

| | 1983–84 | 1984–85 |
|---|---|---|
| மொத்தப் பரப்பளவு | 180816 ஹெக்டேர் | |
| மொத்த வருவாய் | ரூ 21618718 | ரூ. 19608511 |
| சந்தனமரம் விற்பனை | 798 டன் | 403 டன் |
| வருவாய் | ரூ. 29606576 | ரூ. 18258313 |
| தைலமரம் விற்பனை | 5318 டன் | ரூ. 264552 |
| வருவாய் | ரூ. 531850 | |

சேலம் கல்ராயன் மலைப் பகுதி தனிவனக் கோட்டம் ஆக்கப்பட இருக்கிறது. ரூபாய் 10 லட்சம் செலவில் பாதுகாப்பான சந்தன மரக்கிடங்கு ஒன்று கட்டப்பட இருக்கிறது.



### அண்ணா போக்குவரத்துக் கழகம்

| | |
|---|---|
| பேருந்துகளின் எண்ணிக்கை | 750 |
| ஒருநாளில் ஓட்டப்படும் தூரம் | 230000 கிலோ மீட்டர் |
| ஒருநாள் சராசரிப் பயணம் செய்வோர் | 584000 |
| தொழிலாளர்களின் | 5510 |

### கல்வித் துறை
(1983—84)

| | பள்ளிகள் | மாணவ மாணவியர் | மொத்தம் |
|---|---|---|---|
| ஆரம்பக் கல்வி | 1925 | 197533+150971 | 348504 |
| நடுநிலைக் கல்வி | 207 | 60836+ 47117 | 107953 |
| உயர்நிலைக் கல்வி | 148 | 38096+ 27255 | 66351 |
| மேல்நிலைக் கல்வி (12ம் வகுப்பு வரை) | 103 | 76405+ 42650 | 119055 |

### சேலம் இரும்பாலை

இந்திய இல்லம்தோறும் பேசப்படும் பெயராக விளங்குகிறது சேலத்தில் தயாராகும் சேலம் எவர்சில்வர். பிரிட்டிஷ் பாதுகாப்புக் கழகம் வழங்கும் 1984ம் ஆண்டுக்கான தேசிய தொழிற்சாலைப் பாதுகாப்புப் பரிசினைப் பெற்று சேலம் உருக்காலை பெருமை சேர்த்துள்ளது.

### தகவல் தொடர்பு

| | |
|---|---|
| சமுதாய வானொலி மன்றம் | 3496 |
| சமுதாய தொலைக்காட்சிப் பெட்டி | 145 |

தமிழ் மொழியின் முதலாவது முழு நீள வண்ணப் படம் தயாரித்தது சேலம் மாடர்ன் தியேட்டர்ஸ் (1955) நடித்தவர்: புரட்சி நடிகர் எம். ஜி. ஆர். அவர்கள்

இந்தியாவிலேயே, திரைப்படக் கொட்டகைகள் அதிகம் உள்ள நகரம் சேலம்.

### கதர், கிராமத் தொழில் துறை

கதர் கிராமத்தொழில்கள் வாரியம் பாலியஸ்டர் வகைத் துணி உற்பத்தியையும் மேற்கொண்டுள்ளது. அதற்கான பட்டைபோடும் அலகு ஒன்று ஆட்டையாம்பட்டியில் துவக்கப்பட இருக்கிறது.

# நூல் நயம்

## வார்த்தை வாசல்

ஆசிரியர் : உவமைக்கவிஞர் சுரதா

வெளியீடு: சுரதா பதிப்பகம்
56-அ, டாக்டர்
இலக்குமணசாமி
சாலை, கலைஞர்
கருணாநிதி நகர்
சென்னை-600 078,

பக்கங்கள்: 80 விலை: ரூ 7

பலருடைய நூல்களுக்குத்தாம் வழங்கிய அணிந்துரைகளைத் தொகுத்து ஒரு நூலாக்கித் தமிழ்நாட்டில் வழிகாட்டியவர் பெரும்புலவர் வே.கி.ராநாயண சாமிபிள்ளை. அ வ ரை த் தொடர்ந்து தம் அணிந்துரை களை நூலாக்கியுள்ளார் உவமைக் கவிஞர் சுரதா.

''மணிக்கவிஞர் எழில் முதல்வன் வடித்த பாடல் விக்கலுக்கு நீர்போன்ற பாடலாகும்.

வீணைக்கும் நம்பாகும்;கரும்புமாகும்''-இது 'இனிக்கும் நினைவுகள்' எனும் எழில் முதல்வனின் கவிதை நூலுக்கு உவமைக்கவிஞர் அளித்த அணிந்துரையில் ஒரு பகுதி.

மார.தமிழ்ச்செல்வன் எழுதிய 'மணிப்புறா' எனும் நாவலின் அணிந்துரையில்,

''தமிழ்ச்செல்வன் தந்துள்ள கதையின் செல்வம் உரைச் செல்வம்; புதிய பல கருத்துச் செல்வம்'' என்று கூறி அவரின் திறனைச் சிறப்பிக்கின்றார்.

ரம்போலா கவிதைகளின் அணிந்துரை அருமையானது. நாட்டு விடுதலைக்கு ரம்போலா எழுதிய பாடல்கள் கோட்டைக் கதவுகள் என்கின்றார்.

'தமிழே என் உயிர்' என்கிறார் மூவேந்தன். எப்படி? மூவேந்தன் எனும் இக்கவிஞன் கையில் வேலில்லை. என்றாலும் நாவேந்தும் தமிழுண்டு; நன்றாகக் கவிதை எழுதும் ஆற்றலுண்டு' என்கிறார்.

பூவண்ணனின் பாட்டுத்தோட்டத்துக்குரிய அணிந்துரை கவிஞரின் பேராற்றலுக்கோர் உரைகல்.

கவிஞர் பலரின் கருத்துமிக்க கவிதைகள், உவமைக் கவிஞரின் ஆழமிக்க அருமையான அணிந்துரையால் அழகு பெறுகின்றன.

## சாமி பழனியப்பன் கவிதைகள்

ஆசிரியர்: சாமி பழனியப்பன்,
வெளியீடு: கமலாலயம்,
ஏ-3, பூபதி நகர்,
சென்னை-600024
பக்கம்: 179 விலை: ரூ. 15

சாமி பழனியப்பன் பாவேந்தர் மரபில் வந்த தலைசிறந்த கவிஞர். இனிய-எளிய நடையில்-கற்போர் களிப்புறும் வண்ணம், சிந்தை கிளர்த்தெழும் வகையில் கவிதை படைப்பதில் வல்லவர்.

மொழிச் சிறப்பு, நாட்டின் பெருமை, தண்டமிழ்ச் சான்றோர்கள், இலக்கியச் செல்வங்கள், தமிழரின் தன்னிகரில்லாத் தனிப்பெருமை இவை அனைத்தும் இக்கவிதை நூலில் மிக அழகாகவும் தெளிவாகவும் உறுதியாகவும் சொல்லப்பட்டுள்ளன.

தென்றல், தென்னை, நிலவு, மலர், எருதுகள், ஏரி, மரம், போன்ற அனைத்துமே பயன்தருவது நமக்கே அன்றி அவற்றுக்காக அல்ல. ''பொல்லாத மனிதர்கள் மட்டுமே-இந்தப் புவியில் தனக்கென வாழுவார்'' என்று சுயநல மிக்க மனித இனம் காட்டப்படுகின்றது.

இயற்கை வளமும், காதலும் நமது பழந்தமிழர் நாகரிகமும் பட்டை தீட்டப்பட்டு ஒளிர்கிறது இந்நூலில்!

''பழந்தமிழர் பண்பாட்டில்
மேல்கீழ் என்னும்
பாழான இழிவுசொலிச்
சாதிபேசும்
பழிகாரச் சண்டாளர் யாரு
மில்லை''

என்று அன்றையச் சமுதாயத்தின் உயர்வினைச் சித்திரித்துக் காட்டுகிறார்.

''அமுதத் தமிழ்என்
அன்னை மொழியாம்
தமிழ்த்திரு நாடென் தாய்நாடு''

என்று பெருமிதத்தோடு பேசும் கவிஞர், வள்ளுவன் பிறந்த தமிழ் நாடு, இலக்கியம் மலிந்த நாடு என்கிறார். வள்ளலார், பெரியார், பேரறிஞர் அண்ணா, தமிழ்ப் பூக்காட்டிடைத் தோன்றிய தும்பியாம் பாவேந்தர், நாட்டுக்காகத் தன்னுயிர் ஈந்த வள்ளியம்மை போன்றோரைப் பெற்றெடுத்துப் பெருமை மிகக் கொண்ட என் தமிழ்நாடு என்று பூரித்துப் போகின்றார்.

போற்றிப் பாதுகாக்க வேண்டிய கருத்துக் கருவூலம் இக்கவிதைத் தொகுப்பு நூல்.

—டாக்டர் சிவஅரசி
முத்துக்காளத்தி

## யோகாசனம்

ஆசிரியர் : மிழலைத் தொண்டன்

வெளியீடு: மயிலவன் பதிப்பகம்
7, எம். கே. அம்மன்
கோவில் தெரு,
மயிலாப்பூர்,
சென்னை-600 004.

பக்கங்கள்: 136 விலை: ரூ 9-50

உடலை வளமாக - நலமாக வளர்ப்பது எப்படி என்பதை இந்த நூல் மிகத்தெளிவாகச் சொல்கிறது.

உடலுரம் பெற்றால் மனம் வலிமை பெறும். உடல் வலிமையும் மனவலிமையும் மனிதனை நோயற்றவனாக வாழச் செய்கின்றது.

எவரும் எளிதாகச் செய்யக் கூடிய நல்ல பல விளைவுகளைக் கொண்ட அருமையான யோகாசனங்கள் இதனுள் எளிமையான முறையில் கூறப்பட்டுள்ளன.

பயிற்சிக்கு முன், பயிற்சியாளன் பின்பற்ற வேண்டியவை சொல்லப்பட்டுள்ளன.

சத்துள்ள உணவு, பழம், கொட்டைகள்தாம் உடல் வளத்துக்கு உகந்தன; மனிதனை ஒரு நிலைப்படுத்துவன என்கிறார் நூலாசிரியர். யோகாசனப் பயிற்சி குறித்து வெளிவந்துள்ள எளிமையான - ஆனால் அரிய கருத்துக்களையுடைய நூல் இது.

## புஷ்ப கானம்

எழுதியவர்:
தென்னம்பட்டு ப.ஏகாம்பரம்
வெளியீடு:
செல்வன் பதிப்பகம்,



தென்னம்பட்டு அஞ்சல்,
(வழி) சக்கரமல்லூர்.
வ.ஆ.மாவட்டம்
632511

பக்கம்: 104 விலை ரூ.7

பலவித மன உணர்வுகளின் எழுச்சிகளை, பாதிப்புகளை வரிகளாக வார்த்திருக்கும் சிறிதும், பெரிதுமான கவிதைகளின் தொகுப்பு.

'இன்றுள்ள கவிஞர்களில் முன்னணியில் நிற்க கூடியவர் இவரே' என்று கவியரசர் கண்ணதாசனால் பாராட்டப்பட்ட இக் கவிஞர் பக்தன், சீடன், காதலன், காதலி என்று மானசீகமாக பல உருவில் பாடியிருக்கும் கவிதைகள் இவை

'பதங்கள் பரணத்தை ஆயும் ஆய்வுக் கூடங்கள்'

'தன்னையே நினைப்பவன் மிருகமாகிறான்' என்ற வரிகளும் கலியுகக் காட்சிகளில்...
'ஆடவர் முகத்தில் ஆண்மையில்லையே. அடிமைகள் போலவே பெண் ஏவல் புரிந்தனர்...'

'சாதியின் பெயரால் சண்டைகள் மூண்டன. சண்டாளர் கூட்டமே தலைமை ஏற்றது...'

'... காருண்ய வாழ்வு புவியினில் இல்லையோ...?' என்பன போன்ற குமுறல், ஏக்க வரிகள் நெஞ்சை நெருடுகின்றன. இவை போக...

இயற்கை அன்னையின் விந்தைக் கோலங்களில் மயங்கிப் பாடிய கவிக் கோலங்களும் இதில் உண்டு.

—அ. மருதவிநாயகம்

## தரிசனம்

ஆசிரியர் : சக்தி
வெளியீடு: மாணிக்க விநாயகர் பதிப்பகம், 21, வேங்கடசாமித் தெரு, சாந்தோம்,
சென்னை 600 004

விலை ரூ. 12. பக்: 142.

இந்நூல் 12 சிறு கதைகளை உள்ளடக்கியது. ஆசிரியர், கதையைக் கொண்டு செல்லும் முறை மிகச் சிறப்பாக அமைந்துள்ளது.

இக்கதைகளில் கிராமத்து மணத்துடன் விளங்குபவை 'தரிசனம்', 'பரிகாரம்', 'அடைமழை' 'அன்பை அசை போட்டால்' ஆகியன. தரிசனம் கதையில் மகன் செய்யும் தவற்றுக்குத் தாய் செய்யும் பரிகாரம் மிக நன்றாகச் சித்திரிக்கப்பட்டுள்ளது. வேலை வாய்ப்புத் திட்டத்தை மையமாகக் கொண்டு விளங்குகின்றன, 'புதிய பார்வை' 'மன மலர்' ஆகிய கதைகள்!

சரளமான நடை, எளிய தமிழ் இவரது கதைகளுக்குச் சிறப்பூட்டுகின்றன.

— கோ. பாஸ்கரன்

## அமரச் சிறுவன்

ஆசிரியர்: புலவர் அண்ணாமலை

வெளியீடு: பம்மி பதிப்பகம் 32, வெங்கட்டரங்கம் பிள்ளை தெரு, சென்னை-600005
விலை: ரூ 6.50. பக்கம்: 88.

இலட்சியம் என்ற போர்வையில் நாட்டின் ஒற்றுமைக்கே வேட்டு வைக்கும் தீவிரவாதிகள் முகமூடியைக் கிழிக்கிறான் சிறுவன் அமர்சிங்.

பஞ்சாப் மாநிலத்தை மையமாக வைத்து எழுதப் பெற்ற கற்பனை கலந்த கதை இது. ஒருமைப்பாட்டுக்குக் குந்தகம் விளைவிப்பவர்கள் — கடைசியில் அவர்களுக்கு ஏற்படும் கதி,கதையில் நன்கு சித்திரிக்கப்பட்டிருக்கிறது. இக்கதை நாட்டுப்பற்றை ஊட்டும் என்பதில் ஐயமில்லை.

- பி. வி. கிரி

## வசந்தம் வருகிறது

ஆசிரியர் : ஏர்வாடி
எஸ்.இராதாகிருஷ்ணன்

வெளியீடு: சுதா பதிப்பகம்,
4, முத்துமுதலி தெரு
புரசைவாக்கம்.
சென்னை-600 007.

விலை: ரூ. 8 பக்கம்: 96

வானொலி, தொலைக்காட்சி ஆகியவற்றில் ஒலித்த இசைப் பாடல்கள் 72 கொண்ட தொகுப்பு இது. இயற்கை, காதல், சமூகம், கடவுள் என்ற நான்கு பிரிவுகளாகப் பகுத்திருக்கிறார் நூலாசிரியர்.

இசைப் பாடல்கள் என்பதால், எதுகை, மோனைகள் மிகச் சிறப்பாக அமைந்துள்ளன.

உழைப்பின் சிறப்பைக் கூற வந்த ஆசிரியர்,

சொப்பனத்தில் கண்ட நெல்லு
சோத்துக் காகுமா - நாம்
சோம்பலோடு வாழ்வதென்ன
சொர்க்கமாகுமா

என்று கேட்டிருப்பது பாராட்டுக்குரியது.

குடும்பநலம், வரதட்சணை ஒழிப்பு ஆகிய கொள்கைகளை வலியுறுத்திக் கூறியிருக்கிறார். தமிழைப் போற்றிப் புகழும் பாடல்கள் - ஆசிரியரிடம் உள்ள தமிழ்ப்பற்றை எடுத்துக் காட்டுகின்றன. எளிய இனிய நடை, பாடல்களுக்கு உயிரைத் தருகின்றன.

—தமிழ்ப்பித்தன்

## பார் புகழும் பாவேந்தர்

ஆசிரியர் : முல்லை முத்தையா
வெளியிட்டோர் : சங்கீதா,
132, ஜானிகான் ரோடு, இராயப்பேட்டை, சென்னை-600014.
பக்கங்கள் : 96 விலை ரூ. 8.25.

புரட்சிப்பாவேந்தர் பாரதிதாசனாரின் 94வது பிறந்த நாள் வெளியீடான இந்த நூல், உவமைக் கவிஞர் சுரதா அவர்களின் அரிய அணிந்துரையோடு உருப்பெற்றிருக்கிறது.

பாவேந்தர் தொடர்பான பல்வேறு விழாக்களிலே தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, பேராசிரியர் ந. இராமநாதன், சிலம்பொலி செல்லப்பன் போன்றார் - பாவேந்தர் பற்றி ஆற்றிய சொற்பொழிவுகளின் முக்கியப்பகுதிகள், திரு. இராம. அண்ணாமலை தொகுத்துள்ள பாவேந்தர் வாழ்வின் முக்கிய நிகழ்ச்சிகள் ஆகியவை தொகுத்தளிக்கப்பட்டுள்ளன. இவை மட்டுமா?

தமிழ்நாடு அரசு திருச்சியிலே நடத்திய (1982) முப்பெரும் விழாவில் மாண்புமிகு முதல்வர் டாக்டர் திரு. எம்.ஜி.ஆர். அவர்களும் மற்றும் பலரும் பாவேந்தர் பற்றி ஆற்றிய உரைகளிலே மூழ்கியெடுத்த முத்துக்கள், நூலாசிரியருக்குப் பாவேந்தர் அளித்த புத்தாண்டு வாழ்த்து, தன் மகனுக்கெழுதிய ஒரு கடிதம், கவிஞர் நாரா. நாச்சியப்பன் போன்றார் பாவேந்தர் பற்றி எழுதிய கவிதைப் பகுதிகளெல்லாம் கூட இந்தக் கருத்துப் பேழையிலே திருத்தமுற எடுத்தளிக்கப்பட்டுள்ளன.

இது, அளவில் சிறிது எனினும் புரட்சிக் கவிஞரின் பெருமையை எடுத்துச் சொல்வதில் பெரிய நூல்! அரிய முயற்சி! பெரிய சாதனை!

—சோழராஜன்

# வட ஆர்க்காடு லம்பாடிகள்

நாடோடிகளான லம்பாடிகள் எனப்படும் பழங்குடியினர் மகாராஷ்டிராவில் பஞ்சாரா என்று அழைக்கப்படுகின்றனர். இவர்கள் 17ஆம் நூற்றாண்டில் சிவாஜிக்கும் அவுரங்கசீப்பிற்கும் ஏற்பட்ட கடும் போரில், சிவாஜிக்கு உதவினர். அதனால் அவுரங்கசீப் இம்மக்களைத் தாக்கினான். அதற்குப் பயந்து சுமார் 20,000 லம்பாடிகள் ஆந்திராவுக்கும், கர்நாடகத்திற்கும் ஓடி வந்தனர் என்று பூர்வீகக் கதை கூறுகிறது. பிறகு நாளடைவில் பெண்கொடுத்தல் மூலமாய்த்தமிழகத்திலும் லம்பாடிகள் பரவினர். மகாராஷ்டிராவிலும், ஆந்திராவிலும் இவர்கள் பழங்குடியினராகவும் தமிழ்நாட்டில் சிறிது காலத்திற்கு முன்வரை பழங்குடியினராகக் கருதப்பட்ட இவர்கள் தற்சமயம் பின்தங்கிய வகுப்பினராகத் தமிழகத்தில் குறிக்கப்பட்டுள்ளார்கள்.

லம்பாடிகள் எனப்படும் பின்தங்கிய வகுப்பினர் தமிழ்நாட்டில் வடஆர்க்காடு, தருமபுரி மாவட்டப் பகுதிகளில் பரவலாக வசித்து வருகின்றனர். முக்கியமாக வட ஆர்க்காட்டின் செங்கம் வட்டத்தில் பொரசப்பட்டு தண்டா, போயம்பள்ளி தண்டா, போந்தை பெரியதண்டா ஆகிய சிறுசிறு லம்பாடி வாழ்விடங்களில் வசித்து வருகின்றனர்.

சாத்தனூர் அணைக்கட்டின் பின்புறத்தில் ஒருகல் தொலைவில் மலைகளுக்கிடையில் காட்சியளிக்கும் சிறுகுடியிருப்பே போயம்பள்ளி தண்டா ஆகும். இக்குக்கிராமத்தைப் பேருந்து மூலமும், சைக்கிளின் மூலமும், நடந்தும் அடையலாம். சிறுசிறு குன்றுகளின் இடுக்கில் அமைந்துள்ள இக்கிராமத்தின் கூரைவீடுகள் இரண்டு மூன்று வரிசைகளில் அழகாக அமைந்துள்ளன. வீட்டின் முன்புறத்தில் எங்கும்நிலக்கடலை காய வைக்கப்பட்டிருக்கின்றது. அக்டோபர், நவம்பர் மாதங்களின் சிறப்பு அறுவடை நிலக்கடலை எனத் தெரிய வருகிறது.



வயது முதிர்ந்த லம்பாடி பெண்மணிகள் தம்முடைய அழகியமரபு உடைகளை, சிவப்பு மற்றும் பச்சை நிறத்துணிகளைக் கொண்டு ஊசியினால் கையாலேயே கண்ணாடி மணிகள், பிளாஸ்டிக் மணிகள் வண்ண வண்ண நூல்களில் கோத்துத் தைக்கின்றனர்.

அவர்களுடைய மரபு ஆடைகளான சாக்கட், பாவாடைகள், தலை மேலாடைகள் முதலியன உண்மையிலேயே அழகைப் பொழிகின்றன. இவ்வாடைகள் ஆந்திர லம்பாடிப் பெண்களின் ஆடைகளைப் போன்றதேயாகும். இந்தப் பாரம்பரிய வண்ண ஆடைகளையும் கை வளையல்களையும் தற்கால இளம் லம்பாடிப் பெண்கள் விரும்பாமல் மற்ற இனப்பெண்களைப் போலவே சாக்கட்டையும் சேலையையும் அணிவதை இக்குடும்பங்களில் காணலாம். ஆனால் லம்பாடி ஆண்கள் நமது கிராமத்து ஆண்களைப் போன்றே சட்டையையும் வேட்டியையும் அணிகின்றனர்.


இவர்கள் பேசும் மொழி தெலுங்கல்ல. லம்பாடி எனப்படும் ஒரு தனிப்பட்ட மொழியாகும். இம்மொழியில் உருது, ஆங்கிலம், தமிழ், தெலுங்கு ஆகியன இணைந்து காணப்படுமின்றன. ஆங்கிலச் சொற்கள் மற்றும் இந்திச் சொற்கள் இம்மொழியில் இடம் பெறுகின்றன. தெலுங்கு வார்த்தைகள் அதிகம் காணப்படவில்லை.

இவர்கள் தமிழர்களுடன் பழகுவதால் தமிழ்மொழியையும் நன்கு பேசுகின்றனர். ஆங்கில வார்த்தைகளான *Ghee, Ragie, Dhal* போன்றவைகளும், பாணி, பா, பாய், மா, ஆகிய இந்தி வார்த்தைகளும் இதற்குச் சிறந்த உதாரணங்களாகும்.

இந்த லம்பாடி மொழிக்கு எழுத்து வடிவம் *(Script)* இல்லை. ஆனால் பேசலாம். பேசமுடியும, எழுதமுடியாது. இந்த லம்பாடி மொழி இந்தியா முழுவதும் ஒரே மாதிரியாக உள்ளது. மாநிலத்திற்கு மாநிலம் மாறுபடவில்லை.

இவர்கள் பரம ஏழை என்றோ, மிகப் பெரிய செல்வந்தர்கள் என்றோ முற்றிலுமாகக் கூறமுடியாது. இவர்களில் சிலர் நல்ல நிலைமையில் வாழ்ந்து வருகின்றனர்.


**என். தேவசகாயம்**
**எம். காந்தி**
**அருங்காட்சியகத் துறைக் காப்பாட்சியர்கள்**
**சென்னை-வேலூர்.**





லம்பாடிகள் (மகனும் தாயாரும்)


சிலர் ஏழ்மையிலும் உள்ளனர். விவசாயம் இவர்களின் முக்கியத் தொழில். ஒரு சிலருக்கு ஓரிரு ஏக்கர் நிலமும் உண்டு. நெல், சாமை, கேழ்வரகு, கம்பு, சோளம், மணிலா பயிரிடுகின்றனர். ஏர் கலப்பையே இன்னும் வயல்களில் காணப்படுகிறது. சிலர் கூலி வேலையையும் செய்கின்றனர். களை எடுத்தல், விறகு வெட்டி விற்றல் ஆகியவை இதரத் தொழில்கள். ஒருசிலர் மட்டும் வேட்டையாடுகின்றனர். சிலர் ஒரு ஆண்டிற்கு ரூபாய் ஓராயிரம், இரண்



திருமணத்தில் உபயோகிக்கும் பை

டாயிரம் என்று முன் பணம் வாங்கிக் கொண்டு தம்முடைய எஜமானனிடம் வேலை செய்கின்றனர்.

மதச்சார்பில் இரண்டு வித லம்பாடிகள் செங்கம் வட்டத்தில் காணப்படுகின்றனர். ஒருவகையினர் தம்பூரு—இவர்கள் முகமதியர்கள். முகமதியர்கள் வழிபடும் கைவிரல்களைப் போன்றவற்றை வழிபடுகின்றனர். அதாவது முகமதியரான இவர்கள் லம்பாடிகளானார்கள். மற்றொரு வகையினர் இந்துலம்பாடிகள், இவர்கள் பவானி, ஏழுமலையான், மாரியம்மன், காளி, ஆகிய தெய்வங்களை வழிபடுகின்றனர். தீபாவளி, ஒலி பண்டிகைகளைக் கொண்டாடுகின்றனர்.



அழகிய கைக்குட்டை

இவர்களின் குடும்பம் இருவகையாகும். ஒன்று மீட்டு என்றும் மற்றது புக்கையா என்றும் பெயர். இதை விரிவுபடுத்தினால் இதனது கருத்து நன்கு விளங்கும். மீட்டு வகையைச் சேர்ந்த ஒருலம்பாடி மீட்டு என்ற வகையைச் சேர்ந்தவனை எங்கு சந்தித்தாலும் அவன் அவனுக்குச் சகோதரனாகின்றான். ஆனால் இதே மீட்டு என்பவன் புக்கையா வகையைச்



லம்பாடி பெண்கள் - மாவு அரைத்தல்

சேர்ந்தவனைச் சந்தித்தால் அவர்களுக்குள் சம்பந்தி முறையாகும். ஆகவே மீட்டு என்பவன் மீட்டு என்ற அதே இன வகையிலிருந்து பெண், பிள்ளை எடுத்தல் முடியாது. ஆனால் புக்கையாவில் பெண் எடுக்கலாம், பெண் கொடுக்கலாம் என்பதே கருத்தாகும்.


லம்பாடி ஆண்கள்,


லம்பாடிகளின் பலவண்ணத் துணி பாவாடை

திருமண முறைகளில் மற்ற பழங்குடிகளைப் போன்றே ஒருதார மணமும், பலதார மணமும் இவர்களிடம் உண்டு. விதவைமணம், காதல் மணம் ஆகியவையும் உண்டு. தெய்வம் ஒப்புக்கொள்ளாததால் கலப்பு மணம் தவிர்க்கப்படுகிறது. மணப் பெண்ணைத் திருமணத்திற்கு மாப்பிள்ளை வீட்டிற்கு அழைத்துச் செல்லும் போதே, சீதனமாக எருது மீது உட்கார


லம்பாடிகள் வாழ்விடம், பொசப்பட்டு தண்டா

வைத்துப் பாட்டுப்பாடி அனுப்புவது இங்குக்காணப்படுகிறது. வரதட்சிணை கிடையாது. ஆனால் மாப்பிள்ளை விட்டார் பெண்ணுக்குப் பிரியமாக (கரார்) ரூபாய் 125 முதல் ரூ. 500 வரை பணம் கட்டுகிறார்கள். விவாகரத்து மறுமணம் ஆகியவைகளும் அபராதமும் மற்றப்பழங்குடிகளைப் போன்றதே.

இங்கு தனிப்பட்ட முறையில் கல்யாணமான பெண்ணுக்கு, அறிகுறியாக தனது கைமுட்டிக்கு மேல் வளையல்களை அணிந்திருப்பாள். மற்றும் காதில் ஒரு வளையமும் சுங்கும் அணிந்திருப்பாள். இவ்விதத் தாலிக்கு அடையாளமான சுங்கைப் பெண்களே, திருமணப் பெண்ணுக்குக் கட்டுவர். கல்யாணமாகாத பெண்கள் வயது வந்த பெண்கள் யாவரும் முழங்கையில் கை வளையங்களை அணிவர். இது இவர்களின் முறையாகும். பழக்கமாகும். ஆனால் தற்பொழுது தங்களுடைய மரபு வண்ணமிகு ஆடையை அணியாத பெண்டிர், சுங்குபல்லியா (தோள் வளையம்)விற்குப் பதிலாகக் கழுத்தில் பொட்டுத்தாலியை அணிகின்றனர்.

வண்ண வண்ணத்துணிகளால் பலநிற நூல்களால் வேலைப்பாடு அமைந்த கன்னம் என்றழைக்கப்படும் கைக்குட்டை திருமணத்தில் பயன்படுத்தப்படுகிறது. அக்கைக்குட்டையின் ஓரங்களில் சோழிகள் நிறைந்துள்ளன.

திருமணச் சமயத்தில் பானகம் என்ற வெல்லத் தண்ணீர் தயாரிப்பார்கள். அதை ஒரு பானையில் இட்டு, மேற்குறிப்பிட்ட வண்ணக் கைக்குட்டையால் அப்பானையின் வாயை மூடுவர். திருமணம் முடிந்த மறுநாள் மாப்பிள்ளையும் பெண்ணும் பெண்வீட்டை விட்டுச் செல்லுங்கால் மாப்பிள்ளையின் தங்கை கைக்குட்டை மூடிய இந்தப் பானையில் இரண்டு ரூபாய் இட்டு தலையில் வைத்துத்தூக்கிவருவாள். மூன்று


புதிய லம்பாடித்தம்பதிகள் (சாதாரண உடையில்)

முறை மூடப்பட்ட கைக்குட்டை வழியாக வெல்லத்தண்ணீரை மாப்பிள்ளையின் தலையில் தெளிப்பாள். வெல்லம் இனிப்பது போல் என்றும் அவர்களின் வாழ்நாள் இனிக்க வேண்டும் என்பதே இதன் பொருள்.

மேலும் கல்யாண சமயத்தில் பெண்ணுக்குச் சிவப்புக்கை வளையல்களைப் போடுவர். இதைக் கோடி என்றழைப்பர். மற்றொரு பொருள் கல்யாணத்தை ஒட்டியது என்னவென்றால் அது திருமணப்பையாகும். இதுவேலைப்பாடுகள் நிறைந்தது. சோழிகள் பக்கங்களில் கட்டப்பட்டு அழகை மிகைப்படுத்துகின்றன. இப்பையில் தேங்காய் வெற்றிலை பாக்கு முதலியவற்றை வைத்து மாப்பிள்ளை வீட்டார் முதலில்பெண் வீட்டாரிடம் அளித்து,பெண் கேட்பார்கள். திருமணமான பிறகு மாப்பிள்ளை வெற்றிலைப் பாக்கை அப்பையிலிருந்து எடுத்து உறவினர்களுக்கும் மற்றவர்களுக்கும் கொடுக்கும் சிறப்புப்பையாகும்.

திருமணத்தின் பின்னர் மணமக்கள் பாளையம் கும்பிட்டு திரும்புகையில் மணப்பெண் தன் தலையில் பானையில் தண்ணீர் கொண்டு வருவாள். அப்பானைக்குச் சும்மாடு என்று பெயர். இது நூல் கயிற்றினால் சோழிகள், சுங்குகள் சேர்த்து அழகாகப் பின்னப்பட்டதாகும். குழந்தைகள் பெற்ற பெண்கள் தம் கழுத்தில் தேவி என்ற ஒரு பதக்கத்தை அணிந்துள்ளார்கள். அப்பதக்கத்தின் நடுவில் பெருக்கல் குறிகள் உள்ளன. எத்தனைப் பெருக்கல் குறிகள் காணப்படுகின்றனவோ அத்தனை ஆண்மக்களைப் பெற்றவள் என்றுபொருள் படுமாம்.

தூய்மை, சுகாதாரம், பொதுமருத்துவம் என்ற கண்ணோட்டத்தில் நோக்கினால் இந்த லம்பாடிகளிலேயே 100க்கு ஒருவர் விகிதம் பெருநோய் உள்ளவர்களாகக் காணப்படுகின்றனர். இது பரம்பரையாக வருகிறது என்று கூறுகின்றனர். பொதுவாக இம்மக்கள் நாட்டு வைத்தியத்தில் நம்பிக்கை வைத்துள்ளனர். செங்கத்திற்கு மருத்துவமனைக்குச் செல்லுகின்றனர். மாதம் ஒருமுறை நடமாடும் மருத்துவகம் இப்பகுதிகளைப் பார்வையிடுகின்றது.

கல்வியைப் பொருத்தவரையில் இந்து மாணவருடன் சேர்ந்து லம்பாடி மாணவர்கள் கல்வி பயிலுகின்றனர். அவர்களுக்கெனத் தங்கும் விடுதிகளும் உண்டு. ஆடைகள், புத்தகங்கள்-இலவசமாகக் கொடுக்கப்படுகின்றன. சத்துணவுத் திட்டமும் இங்குச் செயல்படுகிறது. இவ்விதமாகக் கல்வியினால் பயனுற்ற ஆறு ஆசிரியர் உண்டு என்று தெரியவருகிறது. படித்த இரண்டு பட்டதாரிகள் வங்கிகளில் வேலை செய்கின்றனர். சேலத்தில் இவ்விதம் ஒரு லம்பாடி காவல்துறைத் துணை இன்ஸ்பெக்டராகப் பணியாற்றுகிறார் என்பது


வண்ண ஆடையைத் தயாரித்தல்



## பள்ளி மாணவர்கள் அமைக்கும் ஆடுகளம்!

இளைஞர் ஆண்டு

சென்னை சைதாப்பேட்டை மாநகராட்சி ஆண்கள் மேனிலைப் பள்ளியில் பயிலும் தேசிய மாணவப்படை மற்றும் சாரணப் படையைச் சார்ந்த 150 மாணவர்கள் 9.3.85 அன்று தங்கள் பள்ளிக்கென ஒரு கூடைப்பந்து ஆடுகளம் அமைக்கும் பணியில் ஈடுபட்டனர்.

நீண்ட காலமாக இப்பள்ளி கூடைப் பந்தாட்டத்தில் வெற்றி பல கண்டு பல்வேறு கேடயங்களையும் கோப்பைகளையும் பரிசாகப் பெற்று வந்த போதிலும், சிறந்த கூடைப் பந்து ஆடுகளம் இல்லாமை ஒரு குறையாக இருந்தது. இதை நிறை செய்ய மாணவர்கள் முன்வந்து ஆடுகளத்திற்குத் தேவையான 2 அடி ஆழம் உள்ள 30 மீட்டர் நீளமும் 17 மீட்டர் அகலமும் கொண்ட குழியை வெட்டினர். இதற்குமேல் 1 அடி உயரத்திற்குச் சரளைக் கல்லும் அதன்மீது செம்மண்ணும் போடப்பட்டு மேற்பரப்பில் காங்கிரீட் தளம் அமைக்கப்படும். இதை அமைக்க மாநகராட்சி ரூ. 65,000 செலவிடும். மாணவர்கள் குழி தோண்டும் பணியில் ஈடுபட்டனர். பிற பணிகளைக் கைத்திறன் பெற்ற தொழிலாளர்கள் செய்வர்.

கூடைப்பந்து ஆடுகளத்திற்கு வேண்டிய இப்பணியோடு மாணவர்கள் பள்ளியின் சுற்றுப்புறம், கழிவறைகள், வகுப்பறைகள், தாழ்வாரங்கள் இவற்றையும் தூய்மை செய்தனர். கரும்பலகைக்கு வண்ணம் பூசினர்.

இந்நிகழ்ச்சிகளை, மாண்புமிகு கல்வி அமைச்சர் திரு செ. அரங்கநாயகம் அவர்கள், மாநில அரசின் இரண்டாம் செயலர் திரு டி.வி. அந்தோணி, இ.ஆ.ப., சைதைத் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் சைதை திரு எஸ். துரைசாமி, மாநகராட்சி ஆணையாளர் திரு கோ. ராமகிருஷ்ணன் ஆகியோர் பார்வையிட்டு மாணவர்களைப் பாராட்டினர். அவ்வமயம் மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் மரக்கன்று ஒன்றையும் நட்டார்.

குறிப்பிடத்தக்கது. படித்த லம்பாடிகள் நான்கு பேர் தபால் துறையில் பணிபுரிகின்றனர். மூவர் ஊர்நல அலுவலராக வேலை செய்கின்றனர்.

இம்மக்கள் விவசாயிகளாக இருப்பதால் அவர்களின் வாழ்க்கை நிலை உயர, விதை, பூச்சி மருந்து போன்றவைகளை மானிய முறையில் பெறுகின்றனர். தண்ணீர் வசதி, மின்சார வசதி, கால்நடை வளர்ப்பு உதவி, வீடுகட்டக்கடன் வசதி, கறவை மாடுகள் வாங்க முன்பண உதவி, போக்குவரத்து வசதி போன்ற பலதரப்பட்ட உதவிகளையும் அரசு இம்மக்களுக்குச் செய்து வருகிறது.

நாடோடிகள் என்று பொதுவாக நாம் அழைக்கும் — நினைக்கும் லம்பாடிகள், ஆந்திர மாநிலத்திற்குத் தான் உரியவர்கள் என்ற நிலையிலிருந்து தமிழகத்திலும், இப்பின்தங்கிய மக்கள் வடஆர்க்காட்டிலும், தருமபுரியிலும் வசித்து வருவது மிகவும் சிறப்பை அளிப்பதாகும்.

சுருங்கக் கூறினால் அவர்களுடைய ஆடை அலங்காரங்கள் மிகவும் சிறப்பானவை. இக்கலையில் அதிக ஆர்வம் கொண்டவர்கள் பெண்டிராகும். இவர்கள் தங்கள் நேரத்தை இக்கலையில் காட்டுவது வியப்பாக உள்ளது. ஆண்கள் உழைப்பாளிகள். முக்கியமாக விவசாயிகள்.

# இளைஞர் ஆண்டில் ஓர் இனிய நிகழ்ச்சி

அனைத்துலக இளைஞர் ஆண்டு தொடர்பாக, சென்னை நகரின் 11 கல்லூரிகளைச் சார்ந்த 17 மாணவ, மாணவியர் பங்கு பெற்ற விநாடி வினா நிகழ்ச்சி மீனாட்சி மகளிர் கல்லூரியில் 26.2.85 அன்று நடைபெற்றது.

இந்த இனிய விழாவில் பங்கு கொண்டோரையும், பார்வையாளர்களையும் மைய அரசின் கள விளம்பர அலுவலர் திரு கே. கே. நாயகம் வரவேற்றுப் பேசினார்.

மீனாட்சி மகளிர் கல்லூரி முதல்வர் செல்வி கே.எஸ்.லட்சுமி தலைமை வகித்தார். அப்போது அவர் குறிப்பிட்டார்:

''நமது நாடு பல்வேறு பிரச்சினைகளைச் சந்தித்து வருகிறது. வறுமை, ஜனத்தொகை போன்ற பல பிரச்சினைகளை நாம் எதிர்நோக்கி வருகிறோம். என்றாலும் நாம் நமது திறமைகளைப் பல வகையிலும் நிரூபித்து வருகிறோம். துணிவு, ஒருமைப்பாடு போன்றவை விவேகானந்தரின் கொள்கைகள் ஆகும். உள்ள ரீதியாகவும் உடல் ரீதியாகவும் ஒழுக்கம் நமக்கு மிகவும் அவசியம். இன்றைய இளைஞர்கள் நாளைய பெருமக்கள் ஆகின்றனர். அவர்கள் கையில்தான் இந்த நாட்டின் எதிர்கால முன்னேற்றம் இருக்கிறது. இளைஞர்கள் மாபெரும் சக்தி படைத்தவர்கள். நமது இளைஞர்களின் ஆற்றலை உலகுக்கு எடுத்துரைக்கும் வகையில் இளைஞர் ஆண்டு பயன்படுமாக''.

விநாடி வினா நிகழ்ச்சியைத் தொடங்கி வைத்த தமிழக அரசின் செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் திரு நா. கிருஷ்ணபாரதி, இ.ஆ.ப. தமது உரையில் தெரிவித்தார்:

''அனைத்துலக இளைஞர் ஆண்டை ஒட்டி இந்த விநாடி வினா நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

''யுனெஸ்கோ ஒவ்வொரு ஆண்டையும் ஒவ்வொரு வகையில் சிறப்பித்துக்கொண்டாடி வருகிறது. பெண்கள் ஆண்டு, குழந்தைகள் ஆண்டு, சுற்றுலா ஆண்டு எனப் பல ஆண்டுகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

''இந்த ஆண்டு, இளைஞர் ஆண்டு-முன்னர் கொண்டாடப்பட்ட ஆண்டுகளுக்கும் இதற்கும் வித்தியாசம் இருப்பதை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

''அந்த ஆண்டுகள் எல்லாம் யாருக்காகக் கொண்டாடப்பட்டனவோ அவர்களுக்காக மற்றவர்கள் பணிபுரிய வேண்டும்-சேவை செய்ய வேண்டும். ஆனால் இளைஞர் ஆண்டில் அப்படி இல்லை. இளைஞர்கள் எல்லாரும் பிறருக்காக உழைக்க வேண்டும். சமுதாயத்தில் அல்லல்படும் தாக்கப்படும்-கஷ்டப்படும்-அழுத்தப்படும் அனைவரின் உயர்வுக்கும் சேவை செய்ய வேண்டும் என்ற எண்ணத்தை - உத்வேகத்தை - எழுச்சியை - இளைஞர்கள் அனைவருக்கும் ஊட்டும் வகையில் இந்த ஆண்டு விளங்க வேண்டும்.



''முன்பு இளைஞர்களாக இருந்து முதியவர்களாகிவிட்டவர்களின் வாழ்க்கை அனுபவங்களை எல்லாம் நாம் நினைவு கூர்ந்து பார்க்க வேண்டும்.

''விநாடி வினா நிகழ்ச்சியின் மூலம் ,தக்க வகையில் பதில் சொல்லக்கூடிய அறிவைப் பெருக்கிக் கொள்கிறோம் என்பதுடன் பிறரது வாழ்க்கையை உயர்த்துவதற்கு நாம் எந்த அளவு பயன்படுகிறோம் என்பதையும் எண்ணிப் பார்க்கவேண்டும்.

''படித்தவர்களுக்கும் படிக்காதவர்களுக்கும் உள்ள இடைவெளி மிகமிகப் பெருகி வருவதைப் பார்க்கிறோம். அதனைக் குறைக்க நாம் உதவ வேண்டும். கல்வி கற்காதவர்களையும் எப்படி உயர்த்துவது என்று திட்டமிட்டு அவர்களுக்காகத் தொண்டாற்றுவது நமது கடமை. அதனை இளைஞர் ஆண்டில் நினைவு கொள்வோம்.

''இந்த ஆண்டுடன் முடிந்துவிடுவதல்ல இளைஞர் ஆண்டு; அது எந்த ஆண்டும் தொடர வேண்டும்.''

அடுத்து, மைய அரசின் கள விளம்பரப் பிரிவின் மண்டல உதவி அலுவலர் திரு என். ரெங்கநாதன் விநாடி-வினாக்களைத் தொடுத்தார்.

''1983ஆம் ஆண்டை என்ன ஆண்டு எனக் கொண்டாடினோம்'' என்ற வினாவைத் தொடுக்க ,மாணவர்கள், உடனே "சுற்றுலா ஆண்டு'' என்று பதிலளித்தனர். கூட்டமாகப் பதிலளித்ததால் மார்க் எவருக்கும் கிடைக்க வில்லை.

''கல்கத்தா, பம்பாய், சென்னைப் பல்கலைக் கழகங்கள் எப்போது தொடங்கப்பட்டன?'' என்ற கேள்வி கேட்கப்பட்டது.

உடனே ஒரு மாணவி, '1811' என்றார்; மற்றொருவர் '1812' என்றார்; '1813' என்றார் மற்றொருவர். இப்படி ஒவ்வொரு

'வரும்' ஒவ்வொரு எண்ணாகக் கூட்டியவாறு இருந்தனர். திடீரென்று ஒரு மாணவி '1857' என்று கணீர்க்குரல் எழுப்பியதும் 'கரெக்ட், கரெக்ட்' என்று மன மகிழ்ச்சியுடன் தெரிவித்தார் விநாடி வினா நிகழ்ச்சி நடத்துநர்.

''தமிழகத்தில் எங்கெங்கு ரீஜினல் பாஸ் போர்ட் அலுவலகம் உள்ளது?''—இது கேள்வி.

''சென்னை-திருச்சி-கோவை,'' என்று அடுக்க ஆரம்பித்தார் ஒரு மாணவர்.

''சென்னை, திருச்சி சரிதான்! இவருக்கு 2 மார்க்'' என்று தெரிவித்தார் நடத்துநர்.

''Who is known as the conductor of the news paper? என்று கேட்டார்.

அரங்கில் சில விநாடிகள் அமைதி கொலுவோச்சியது. பார்வையாளர் பகுதியிலும் மௌனமே நிறைந்திருந்தது.

திடீரென்று ஒரு மாணவி, 'Editor' என்று சரியான விடையையளித்து, 2 மதிப்பெண்கள் பெற்றார்.

''இந்தியாவில் விற்பனை வரியை முதன் முதலில் தொடங்கியவர் யார்?''—வினா இது.

நிகழ்ச்சியில் பங்கு பெற்ற மாணவ, மாணவியர் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டனர். பார்வையாளர்களும் சலனமற்று அமர்ந்திருந்தனர்.

திடீரென்று ஒரு பெண் குரல் ஒலித்தது:

''ராஜாஜி''


சரியான விடைதான் அது! ஆனால் அந்த விடையைச் சொல்லியவர்-மீனாட்சி கல்லூரியைச் சேர்ந்த பேராசிரியர்! அதனால் மதிப்பெண் அவருக்குக் கிடைத்தது.

''ஆங்கிலத்தில் NANA என்ற சொல்லின் விரிவு என்ன? பொதுவாக நாராயணன் என்ற பெயருடையவரை நாம் நாநா என்று சொல்வதுண்டு. அப்படி அல்ல இது! இதன் விரிவு என்ன?''-நடத்துநர் வினவினார்.

சில வினாடி மௌனம்.

ஒரு மாணவி, ''North American News paper Alliance என்று பதில் தந்து, 2 மதிப்பெண் பெற்றார்.





''வீர சோழியம் என்ற நூல் யாரால் எழுதப்பட்டது?'' என்பது வினா.

''டாக்டர் மு.வ.'' என்றார் ஒரு மாணவி.

''ஜெயங்கொண்டார்'' என்று சொன்னார் ஒரு மாணவர்.

''பாரதியார்'' என்றார் ஒருவர்.

''லட்சுமி'' என்று குரல் கொடுத்தார் ஒருவர்.

ஒவ்வொருவரும் தமக்குத் தெரிந்த நூலாசிரியர்களைச் சொன்னார்கள். அதனால் சிரிப்பலை அந்தக் கூடத்தில் எழுந்தது.

இறுதியில், ''புத்தமித்திரா; இவர் 12ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவர்'' என்று நடத்துநரே பதிலளித்தபோது மாணவர் அனைவரும் வியப்புற்றனர். தங்களது பதில் எவ்வளவு தவறானது என்பதை உணர்ந்தபோது அவர்களுக்கே சங்கடமாக இருந்தது.

''காந்திஜியுடன் தொடர்பு கொண்ட பத்திரிகைகள், ஏடுகள் யாவை?''-இது கேள்வி

''டய்ம்ஸ் ஆப் இண்டியா'' ஒரு மாணவி பதில் தந்தார்.

''சுதேசமித்திரன்'' என்றார் மற்றொருவர்.

''நியூ இந்தியா'' இன்னொருவர் சொன்னார்.

''இல்லை, இல்லை'' என்று தெரிவித்தார் நடத்துநர்.

''அரிஜன்'' என்று தெரிவித்தார் ஒரு மாணவி.

''யங் இந்தியா'' என்று கூறினார் மற்றொரு மாணவி.

இவர்கள் இருவருக்கும் ஆளுக்கு ½ மதிப்பெண் வழங்கப்பட்டது.

பின்னர், ''நவஜீவன்'', ''இந்தியன் ஒப்பினியன்'' என்ற பெயர்களையும் நினைவூட்டினார் நடத்துநர்.

''பாரத ரத்னா' பட்டத்தை முதன் முதலில் பெற்றவர் யார்? என்பது கேள்வி

''தாகூர்'' என்று ஒருவர் துள்ளிக்குதித்துச் சொன்னார்.

''ராஜாஜி'' என்றார் ஒருவர் பேரார்வத்துடன்.

சரியான விடையை அளித்த அவர் 2 மதிப்பெண் பெற்றார்.


அடுத்து மிகவும் சுவாரஸ்யமான வினாவைத் தொடுத்தார் நடத்துநர்.

''Burglars Visiting Card' என்றால் என்ன?'' என்பதுதான் அந்த வினா.

பங்கு பெற்ற மாணவ, மாணவியர் ஒவ்வொருவரும் தமக்குத் தெரிந்த பதில்களை எல்லாம் சொன்னார்கள். இறுதியில், பார்வையாளர் பகுதியில் அமர்ந்திருந்த ஒரு மாணவி, ''Finger Print'' என்று பதிலளித்து, 2 மதிப்பெண்கள் பெற்றுக்கொண்டார்.

''திருச்சியில் பணி ஆற்றிய போது காவல்துறை நண்பர் ஒருவரின்மூலம் Burglars Visiting Card என்பதன் பொருளைத் தெரிந்து கொண்டேன்'' என்று நடத்துநர் தெரிவித்து வியப்பை ஏற்படுத்தினார்.

''இந்தியாவில் முதன்முதலாக



தமிழ்த் தென்றல்
திரு.வி.க.

அதிகார பூர்வமாக மதுவிலக்கை அமல் செய்தவர் யார்?''- வினா தொடுக்கப்பட்டது.

''காந்திஜி'' என்றார் ஒருவர். 'நேரு' என்று குரல் எழுப்பினார் மற்றொருவர். ஆளுக்கொரு பதிலை அளித்தார்கள். எதுவும் சரியில்லை என்பதால் நடத்துநரே விளக்கம் தந்தார்:

''அலாவுதீன் கில்ஜி என்னும் மன்னன்தான் முதன் முதலில் அதிகாரபூர்வமாக மதுவிலக்கை நாட்டில் அமல் செய்தான்''

''1984ல் திரு.வி.க. விருது யாருக்கு வழங்கப்பட்டது?'' என்பது கேள்வி.

மாணவர் மத்தியில் மௌன அலைகள்....

''பார்வையாளர்கள் தெரிந்தால் சொல்லலாம்'' - நடத்துநரின் வேண்டுகோள் இது!

அந்தப் பகுதியிலும் மௌனம் ஆட்சி செய்தது.

நிருபர் பகுதியிலிருந்து ஒரு குரல், ''கோவி. மணிசேகரன்'' என்று ஒலித்தது.

நிருபருக்கு 2 மதிப்பெண்கள் கிடைத்தன.

''மார்ச் 8ஆம் நாளுக்கு என்ன சிறப்பு?' என்ற வினாவைத் தொடுத்தார் நடத்துநர்.

''அனைத்துலக மகளிர் நாள்'' —ஒரு மாணவி பதிலளித்து 2 மதிப்பெண்கள் பெற்றார்.

வினாக்கள் முடிந்தன. சரியான பதிலளித்தோர் பெற்ற மதிப்பெண்கள் சரிபார்க்கப்பட்டன. பரிசு பெற்றோர் பெயர்கள் அறிவிக்கப்பட்டன

எதிராஜ் கல்லூரி மாணவி சுஜாதா முதற் பரிசையும், சென்னை பொறியியல் கல்லூரி மாணவர் சுபதி இரண்டாம் பரிசையும், லேடி வெல்லிங்டன் கல்லூரி மாணவி சம்பூர்ணம் மூன்றாவது பரிசையும், பார்வையாளர் பகுதியில் அமர்ந்து குரல் எழுப்பிச் சரியான விடைகளை அளித்த மீனாட்சி கல்லூரி மாணவி சுபஸ்ரீ ஆறுதல் பரிசையும் பெற்றனர்.



எழுத்தாளர்
கோவி. மணிசேகரன்

சென்னை மண்டல பாஸ் போர்ட் அதிகாரி திரு.டி.கே. கோபாலன் பரிசுகளை வழங்கினார்.

ஏறக்குறைய ஒரு மணிநேரத்திற்கு மேல் நடைபெற்ற இந்த விநாடி வினா நிகழ்ச்சி கலகலப்பை ஊட்டியதுடன் மாணவ மாணவிகளின் பொது அறிவு சுடர் வீசுவதற்கும் துணை புரிந்தது.

தொகுப்பு : **தமிழ்ப்பித்தன்**



18.3.85 அன்று காமராஜர் மாவட்ட மக்கள் குறைதீர்க்கும் நாள் விருதுநகரில் கடைபெற்றது. மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. எல். என். விஜயராகவன் இ. ஆ. ப. முதன்முறையாக மனுக்களைப் பெறுகிறார்.

அறிவியல் சாரம்:

# புற்றுநோய் பற்றிய புதிய ஆய்வுகள்





கான்சர் என்று சொல்லப்படும் புற்று நோய் எப்படி ஏற்படுகிறது? விஷக்கிருமி களினாலா? நிச்சயமாக, ஒருவகைப்புற்று நோய் விஷக்கிருமிகளால்தான் உண்டா கிறது.


வாஷிங்டன் மாநகரில் உள்ள தேசியப் புற்று நோய்க் கழகத்தைச் சேர்ந்த— சென்னை வந்திருந்த இரு மருத்துவத் துறை அறிஞர்கள் இந்தக் கண்டுபிடிப்பு இனி புதிய குணமாக்கும் முறைகளை உரு வாக்க உதவும் என்று கூறி இருக்கிறார்கள். டாக்டர் ஜெஃப்ரி க்ளார்க், டாக்டர் மார் ஸியா ப்ரவ்ண் என்ற இந்த இருவரும் கண வன் மனைவியர். இருவரும் வாஷிங்டன் தேசியப் புற்று நோய்க் கழகத்தில் பணிபுரி கிறார்கள்.

இந்தியாவில் நடைபெறும் புற்று நோய் மருத்துவ ஆய்வுப் போக்கை அறிந்து கொண்டு தாம் கண்டுபிடித்தன பற்றிய தகவல்களையும் இந்தியர்களுடன் பகிர்ந்து கொள்வதற்காகவே சென்னை வந்திருந்த னர் இவர்கள் இருவரும். இந்த இந்திய அமெரிக்கக்கூட்டு ஆய்வுப் பணிக்கு ஏற்பாடு செய்திருந்தது வாஷிங்டன் தேசியப் புற்று நோய்க்கழகத்துடன் இணைந்த ஃபாகர்ட்டி பன்னாட்டு மையம்.

எந்த வகை விஷக்கிருமிகள் புற்று நோயைத் தோற்றுவிக்கின்றன என்பதை அடையாளம் காணும் ஆய்வில் அமெரிக்கர் கள் ஈடுபட்டுள்ளனர். ஆனால் பெரும்பா லான புற்றுநோய் வகைகளுக்கு விஷக் கிருமிகள் காரணமல்ல. லூகேமாய்-லிம்ஃ போமா அல்லது ஹெச்.டி.எல்.வி-1 எனப் படும் புற்றுநோயை உண்டாக்கும் விஷக் கிருமிகள் அமெரிக்கா, ஜப்பான், கரீபிய நாடுகள், ஆஃப்பிரிக்க நாடுகள் ஆகிய இடங்களில் உள்ளன. ஒரு ஆறுதல், இந்தியா வில் இவ்வகைக் கிருமிகள் இல்லை!

இந்த விஷக்கிருமிகள் ஒருவரிடமிருந்து இன்னொருவருக்குத் தொற்றிக் கொள்வ தில்லை. ஒருவேளை ஒரே குடும்பத்தில் நெருங்கிப் பழகுவோரிடம் இப்படி நேர லாம். எனினும் கிருமிகள் தொற்றிக் கொண்டவுடன் புற்றுநோய் ஏற்பட்டு விடு வதில்லை. அதற்கு 20 அல்லது 30 ஆண்டு காலம் பிடிக்கும். இந்த வகைக் கிருமிகள் தாக்குதலில் புற்றுநோய் கண்டவர்கள் உலகம் முழுவதும் ஏறத்தாழ 500 பேர் மட்டுமே என்கிறார் டாக்டர் க்ளார்க்.







## புற்று நோயைத் தவிர்ப்பதற்கு

**உயிர்ச்சத்து ஏ பற்றாக்குறை, நுரையீரல், கழுத்து, தோல், சிறுநீர்ப்பை போன்ற உறுப்புகளில் ஏற்படும் புற்று நோயைத் தூண்டுகின்றது. (உபரி உயிர்ச்சத்து ஏ சோம்பல், தலை வலி, வாந்தி போன்றவற்றை ஏற்படுத்துவதுடன், கல்லீரல், எலும்பு மற்றும் மூளை போன்ற உறுப்புகளில் ஓரளவு சேதத்தையும் விளைவிக்கின்றது).**

**உயிர்ச்சத்து சி பற்றாக்குறை இரைப்பை மற்றும் உணவுக் குழல் பகுதிகளில் புற்று நோயைத் தூண்டச் செய்கின்றது. நாளொன்றுக்கு 60 மில்லி கிராம் உயிர்ச்சத்து சி நமக்குத் தேவை. இதற்கு எலுமிச்சை வகைப் பழங்கள், தக்காளி, ஸ்ட்ரா பெர்ரி பழங்கள், உருளைக் கிழங்கு, முட்டைக் கோசு போன்றவற்றை உணவில் சேர்த்துக் கொள்ள வேண்டும். (உயிர்ச் சத்து சி அதிகரித்தால் இரத்த அழுத்தம் உயர் வதுடன், தலைவலி, கண்பார்வை மங்குதல், களைப்பு, தசை களில் வலிமைக் குறைவு போன்ற நோய்களும் ஏற்படு கின்றன). இது இனிப்பு நீர் (diabetes) மற்றும் தைராய்டு பாதிப்பு ஏற்படுவதைத் தூண்டவும் செய்கின்றது.**



ஜப்பானில் புகைமூட்டி உணவு தயா ரிக்கும் முறை புழக்கத்தில் இருப்பதால் புற்றுநோய்க்கு இலக்கானவர்கள் எண் ணிக்கை கூடி வருகிறது. புற்றுநோய் ஏற் பட சிகரெட் பிடிப்பதும் ஒரு முக்கிய காரணம். புற்றுநோய் நல்ல உடல் வடி வுள்ளவர்களையும் கூடத் தாக்கலாம்-எந்த நேரமும் என்கின்றனர் இந்த இரு டாக்டர் களும். எது புற்றுநோயை ஏற்படுத்துவது என்பதைத் தெளிவாகச் சுட்டிக்காட்ட முடியாவிட்டாலும் புற்றுநோய் தோன்று வதற்கான அறிகுறிகளை உடன் அறியலாம். எதிர்பாராமல் உடல் எடை குறைவது, பசி இன்மை, இருமும்பொழுது இரத்தம் வருவது, தோலில் உள்ள மச்சம் நிறத்தி லும் அளவிலும் மாறுவது, மார்பில், பிற இடங்களில் கட்டிகள் முளைப்பது போன் றவையே புற்றுநோய் அறிகுறிகள். குழந் தைகளைவிட முதிர்ந்தவர்களையே புற்று நோய் பெரும்பாலும் தாக்குகிறது என்று அறியப்படுகிறது என்கிறார் டாக்டர் மார் ஸியா ப்ரவ்ண்.

சாவை வரவழைக்கும் உலகின் மூன்று கொடிய நோய்களில் புற்றுநோயும் ஒன்று. இருப்பினும் புற்றுநோய் கண்டவர்களில் 40 சதவிகிதத்தினரை, அறுவைச் சிகிச்சை, கதிர் வீச்சு, கீமோதெரபி ஆகிய முறைகளில் குணப்படுத்திவிடலாம். குணமடைந்தவர் களுக்கு அடுத்த ஐந்து ஆண்டுகளில் இன் னொரு தாக்குதல் வராமல் இருந்தால், பின் எப்பொழுதும் புற்றுநோயினால் அவதிப் படமாட்டார்கள். தவிர, புற்று நோய் மருத்துவ முறைகள் மேன்மேலும் முன் னேறிக் கொண்டே வருகின்றன.

கறுத்த தோலை உடையவர்களை விட சிவப்பான, வெண்மையான தோல் கண்டவர்களுக்குப் புற்று நோய் எளிதில் ஏற்படும் வாய்ப்பு இருக்கிறது.

முகத்துக்கு ஸ்நோ தடவுதல், 'பவு டர்' போட்டுக் கொள்ளுதல் ஆகிய ஒப்பனைகளால் புற்றுநோய் ஏற்படு கிறதா என்பது இதுவரை நிச்சயிக்கப் படவில்லை.

உணவுப் பழக்க வழக்கங்களும் கூட சில வகைப் புற்றுநோய்களை உண் டாக்கலாம்.

புற்றுநோய் இருப்பவர்களிடம் நீரிழிவு போன்ற கடுமையான நோய்கள் அண்டுவ தில்லை! இருந்தாலும் போதிய உடல் வலு இல்லாமையால் நோய்க்கிருமிகளின் தாக்கு தலுக்கு இவர்கள் உள்ளாவார்கள். எனவே புற்றுநோய் கண்டவர்களுக்குச் சாதாரண காய்ச்சல் ஏற்பட்டாலும் நாம் உடனே அவர்களுக்குத் தக்க மருந்து தந்து குணப் படுத்த வேண்டும்.

சென்னையில் தங்கி இருந்த காலத்தில் இந்த டாக்டர் தம்பதி அடையாறு புற்று நோய் ஆய்வு நிலையத்திலேயே பெரும் பொழுதைக் கழித்தனர். சென்னையில் தரமான மருத்துவ வசதிகள் இருக்கின்றன. இந்திய மருத்துவர்களுடன் பயனுள்ள முறையில் உரையாடி, புற்றுநோய் மருத் துவத்துறையில் புதிய கருத்துக்களையும் கண்டுபிடிப்புகளையும் மகிழ்வுடன் பகிர்ந்து கொண்டோம் என்று அவர்கள் தாயகம் திரும்பும்போது சொன்னார்கள்.

—அமெரிக்கத்தகவல் நிலையம்.



# அவர்களில் நீங்களும் ஒருவரா?

வெ. பரஞ்சோதி உதவி இயக்குநர், ஊரக வளர்ச்சித் துறை.

எந்தவொரு திட்டமானாலும் சரி, அத்திட்டத்திற்கு மக்கள் அளிக்கும் ஆதரவைப் பொறுத்தே அதன் வெற்றி அமையும் என்பதைக் கூற வேண்டியதில்லை. இக்கூற்றுக்குச் சாண எரிவாயு அமைக்கும் திட்டமும் விலக்கல்ல!

சமுதாயம் முழுவதும் பயன் பெறத் தக்க திட்டங்களோடு, தனிப்பட்டவர்களும் பயன் பெறும் பல திட்டங்கள் இன்று நிறைவேற்றப்பட்டு வருகின்றன. இந்த இருவேறு வகையான திட்டங்களுள் தனிப்பட்டவர்கள் பயன்பெறும் சாண எரிவாயுத் திட்டம் இங்கே குறிப்பிட்டுக் கூறத்தக்கது.

இன்றைக்கு கிடைக்கும் விறகு, மண்ணெண்ணெய், பெட்ரோலிய சமையல் வாயு, வரட்டி போன்ற எரிபொருள்கள் இனி வரும் ஆண்டுகளில் தட்டுப்பாடின்றிக் கிடைப்பது சந்தேகம்தான் என்ற நிலை இன்றே உருவாகி விட்டது. எனவேதான் என்றைக்குமே தட்டுப்பாடு ஏற்படாத மாட்டுச் சாணத்தில் இருந்து வாயு தயாரித்து அதைச் சமைக்கப் பயன்படுத்த சாண எரிவாயு அமைப்புகள் கண்டு பிடிக்கப்பட்டன.

எந்தவொரு திட்டமானாலும் அதை வெற்றிகரமாக நிறைவேற்றி வரும் தமிழ்நாடு அரசு சாண எரிவாயு அமைப்பு நிறுவும் திட்டத்தையும் வெற்றிகரமாக நிறைவேற்றி வருகிறது.

இருப்பினும்கூட சாண எரிவாயு அமைப்பதில் மக்களிடையே ஒருவிதத் தயக்கம் நிலவி வருகிறது. சாண எரிவாயு அமைப்பை நிறுவினால், செலவு அதிகமாகும்; தொடர்ந்து வாயு கிடைப்பது சந்தேகம் என்பன போன்ற பல வேண்டாத எண்ணங்களே இத்தயக்கத்திற்குக் காரணம்.

சாண எரிவாயு அமைப்பை நிறுவச் செலவு அதிகமாகுமா? அதில் இருந்து தொடர்ந்து வாயு கிடைக்குமா?

இந்த வினாக்களுக்கு இதோ விடை அளிக்கிறார்கள் வட ஆர்க்காடு மாவட்டத்தைச் சார்ந்த விவசாயிகள்:

**திரு கே. வேணுகோபால்**


"என்னுடைய குடும்பத்தில் 9 பேர்கள் உள்ளனர். 2 எருதுகள், 4 பசுக்கள் மற்றும் 2 எருமைகளைச் சொந்தமாகக் கொண்டுள்ள நான், என் வீட்டுச் சமையலுக்குத் தேவையான விறகுகள் வாங்க மாதந்தோறும் ரூ. 150 அதாவது வருடத்திற்கு ரூ. 1800 செலவழித்து வந்தேன். மாதா மாதம், வருடா வருடம் அதிகரித்து வந்த இந்தச் செலவுக்கு முற்றுப்புள்ளி வைக்க இயலாதா என்ற சிந்தனையில் நான் இருந்த போதுதான், சாண எரிவாயு கலன் அமைக்க மானியம் மட்டுமின்றி வங்கியிலிருந்து கடன் உதவியும் கிடைக்கிறது என எங்கள் ஊராட்சி ஒன்றிய அதிகாரிகள் கூறினர். உடனே என் வீட்டில் சாண எரிவாயு அமைப்பை நிறுவி விட்டேன்.

"என் குடும்பம் பெரிதானதால் 6 க.மீ. அளவு கொண்ட சாண எரிவாயுக் கலன் அமைத்தேன். இதற்குச்செலவான 6000 ரூபாயை அரசுடைமை வங்கியில் இருந்து எனக்குக் கடனாக ஊராட்சி ஒன்றிய அதிகாரிகளே பெற்றுத் தந்தனர். அந்தத் தொகையில் ரூ. 2610 மானியம் என்று அவர்கள் கூறியபோது நான் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லை.

"இப்போது மானியம் போக மீதிக் கடன் தொகையை நான் மாதாமாதம் சுலபத் தவணையில் திருப்பிச் செலுத்தி வருகிறேன். அதுமட்டுமல்ல, சாண எரிவாயுவை நான் சமையலுக்கு மட்டும் பயன்படுத்தவில்லை. விளக்கு எரிக்கவும், வேளாண்மைக்கு வேண்டிய நீரைக் கிணற்றிலிருந்து இறைக்கவும் பயன்படுத்தி வருகிறேன். இதன் காரணமாக இன்று எனக்கு எரிபொருள் செலவு மிச்சமாகி விட்டது. அது மட்டுமல்லவிளக்கு எரிக்க, நீர் இறைக்கத் தேவையான மின்சாரச் செலவும் மிச்சமாகிறது."

இவ்வாறு வெற்றிப் புன்னகையோடு கூறுகிறார் வட ஆர்க்காடு மாவட்டம் திருப்பத்தூர்வட்டம், பொன்னேரி கிராமத்தில் வசித்து வரும் திரு கே. வேணுகோபால்.





**திரு கிருஷ்ணசாமி**

இதே மாவட்டத்தைச் சார்ந்த செய்யார் வட்டம், வடக்கம்பட்டு மோட்டூர் கிராமத்தில் வாழ்ந்து வரும் திரு கிருஷ்ணசாமி சொல்வதையும் கேட்போமா?

"என்னுடைய குடும்பத்தில் மொத்தம் 7 பேர்கள். பத்து மாடுகளை நான் சொந்தமாகக் கொண்டிருந்தும் சாண எரிவாயு அமைப்பை அமைக்க நான் முதலில் தயங்கிவந்தேன். ஆனால் என் வீட்டருகே குடி இருக்கும் சிலர், சாண எரிவாயு அமைத்து எரிபொருள் செலவை மிச்சப்படுத்துவதைக் கண்ணால் கண்டதும், என் வீட்டிலும் உடனே ஒரு சாண எரிவாயு அமைப்பை நிறுவி விட்டேன். இதற்குச் செலவான ரூ. 5,500ஐ அரசுடைமை வங்கி கடனாக அளித்தது. மேலும் இதில் 150.0 ரூபாயை மானியமாகப் பெற்றுக் கொண்டேன்.

"இந்த எரிவாயு அமைப்பை அமைக்கும் முன்பு எனது வீட்டில் சமையல் எரிபொருளுக்காக 260 ரூபாய் வரை நான் செலவழிக்க வேண்டியதிருந்தது. ஆனால் இப்போதோ தீப்பெட்டிச் செலவு தவிர வேறு செலவு இல்லை. அது மட்டுமல்ல, விறகு அடுப்பில் புகை நடுவே கண்களில் வழியும் கண்ணீரோடு சமையல் செய்து வந்த என் மனைவி. இன்று புகை வராத சாண எரிவாயு அடுப்பில் மகிழ்ச்சியோடு சமையல் செய்து வருகிறாள்.


'இவர்களைப் போல, தமிழ் நாட்டில் எத்தனையோ பேர்கள் சாண எரிவாயு அமைப்புகளை நிறுவி, எரிபொருள் செலவை அறவே நீக்கி, வாழ்க்கையை வளமாக்கிக் கொண்டதோடு, விளக்கு எரிக்கவும் நீர் இறைக்கவும் செலவான மின்சாரக் கட்டணத்தையும் மிச்சப்படுத்தி வருகிறார்கள்.

சாண எரிவாயு அடுப்புக்களை வீட்டிலே அமைத்துக் கொள்வதால் சாணத்திலிருந்து கிடைக்கும் வாயு மூலம் சமையல் செய்த பிறகு, அச்சாணத்தை வயல்களுக்கு உரமாக இடலாம். விறகு, வரட்டிகள் போன்றவற்றால் சமையல் செய்யும்போது ஏராளமாக வெளியாகும் புகையினால் இல்லத்தரசிகளுக்குக் கண்களில் நோய் தாக்குகிறது. இது சாண எரிவாயுவினால் அறவே ஒழிக்கப்பட்டு விடுகிறது. புகையில்லாச் சாண எரிவாயுச் சமையலால், சமையலறை, சுற்றுப்புறத்தைத் தூய்மையாக வைத்திருக்க இயலுகிறது. சமையல், வெகு சீக்கிரமாகவே முடிந்துவிடுவதால், பெண்களுக்கு நிறைய ஓய்வு கிடைக்கிறது.

மரங்கள், காடுகள் விறகுக்காகப் பெருமளவில் அழிக்கப்படுவது தவிர்க்கப்படுவதால், மரங்கள் செடி கொடிகள் செழுமையுடன் வளர்ந்து, நமக்கு இயற்கை வளம் பெருகுவதுடன், மழைவளம் அதிகரிக்கவும் இவை உதவுகின்றன. சாண எரிவாயுவினால் நமக்கும் நாட்டிற்கும் எண்ணிறந்த நன்மைகள்:

1983-84ஆம் ஆண்டில் 5,000 சாண எரிவாயு அமைப்பு அமைக்க முடிவு செய்யப்பட்டது. இந்த இலக்கையும் மிஞ்சும் அளவில் 1983-84ஆம்ஆண்டில் 5041 சாண எரிவாயு அமைப்புகள் அமைக்கப்பட்டன. நடப்பாண்டில் 10,000 சாண எரிவாயு அமைப்புகள் அமைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. இந்த இலக்கினை நோக்கி நாம் இப்போது முன்னேறும் நிலையில் இருக்கிறோம்.

நீங்களும் ஏன் உங்கள் இல்லத்தில் சாண எரிவாயுக் கலன் அமைக்கக் கூடாது? உங்கள் ஊர்நல அலுவலரை உடனே அணுகுவீர்! அவர் உங்களுக்கு உதவக் காத்திருக்கிறார்!



கலிபோர்னியாவில் தயாரிக்கப்பட்ட உலகிலேயே நீளமான காரை படத்தில் பார்க்கிறீர்கள். 50 அடி நீளமுள்ள இதில் 12 அடி சதுர நீச்சல் குளம், மீன் தொட்டிகள். 4 டெலிபோன்கள், ஒரு பிரிட்ஜ், மைக்ரோவேவ் அடுப்பு கொண்ட குட்டி சமையலறை, வேலைக்காரர் அறை போன்ற பல வசதிகள் உள்ளன.



## அழியாத செல்வம்!

புலவர் வெற்றியழகன்

கல்வியை நாள்தோறும் கற்பாய் - கற்ற
வழிவிட்டு விலகாமல் உறுதியாய் நிற்பாய்!
கல்வியே அழியாத செல்வம் - இது
கடல்போலே நிறைந்திடும் குறையாது என்றும்!

அறியாமை இருளினை விரட்டும்
மரியாதை மாண்பினைத் திரட்டும்
சரியான நெறியினைப் புகட்டும்
அறிவென்னும் இமயத்தில் உயர்த்தும்!

வெற்றியை உன்வாழ்வில் கூட்டும்
கற்றவர் எனுஞ்சிறப்பை ஊட்டும்
குற்றங்கள் அனைத்தையும் ஓட்டும்
பெற்றோர்க்கும் பெருமையைச் சேர்க்கும்!

## நமது பற்கள் எப்படி இருக்க வேண்டும்?



அழகாக இருக்க வேண்டும்
ஆடாமல் இருக்க வேண்டும்
இன்சொல் வழங்க வேண்டும்
ஈறுகளைக் காக்க வேண்டும்
உணவை அரைக்க வேண்டும்
ஊத்தைகள் இல்லாமல் இருக்க வேண்டும்
எடுப்பாக எழிலாக இருக்க வேண்டும்
ஏற்றமிகு தோற்றமுடன் இருக்க வேண்டும்
ஐயமின்றிக்கடிக்க உதவ வேண்டும்
ஒழுங்கான வரிசையில் அமைய வேண்டும்
ஓட்டைகள் இல்லாமல் இருக்க வேண்டும்
ஔடதம் (மருந்து) போடா வண்ணம் இருக்க வேண்டும்



## பரீட்சை வருகுது!

—கவிஞர் தமிழன்பன்

பரீட்சை வருகுது! பரீட்சை வருகுது!
பார்த்துப் படியுங்க;—இனி
உறக்கம் சோம்பல் உதவா தென்று
ஒதுக்கி வையுங்க!

ஆர்வத் துடனே காலையில் எழுந்து
அமைதியாய்ப் படியுங்க—எந்தத்
தேர்விலும் நல்ல மதிப்பெண் பெற்றுத்
தேர்ச்சி கொள்ளுங்க!

ஓர்மனத் துடனே பாடத் தோடு
ஒன்றிப் படியுங்க;—வாழ்வில்
சீர்பெற எண்ணித்தினமும் உழைத்தால்
வெற்றி உண்டுங்க!



பா. சிவகுமார்　　கி. செல்வ குமார்

## தேசிய ஊக்குவிப்பு உதவித் தொகை

கிராமப்புற மாணவர்களுக்கான தேசிய உதவித் தொகை ஊக்குவிப்புத் திட்டத்தின் கீழ் ஊராட்சி ஒன்றிய அளவில் நடைபெறுகின்ற எட்டாம் வகுப்புப் போட்டித் தேர்வில் ஆண்டு தோறும் அரசு பரிசு வழங்கி வருகிறது. அதாவது, ஆண்டுக்கு ரு. 1000- வீதம் நான்கு ஆண்டுகளுக்கு 9, 10, 11, 12 வகுப்புகள் முடிய ரு. 4,000 வழங்கப்படுகிறது.

கடந்த கல்வியாண்டில் (1983-84) நான்குனேரி ஊராட்சி ஒன்றிய அளவில் நடைபெற்ற எட்டாம் வகுப்புப் போட்டித் தேர்வில், மூன்று பிரிவாக நடத்தப்பட்ட போட்டியில் பா. சிவகுமார், பொ.அரிகிருஷ்ணன், கி. செல்வகுமார் என்ற மாணவர்கள் மூன்று முதல் பரிசினையும் பெற்றுள்ளார்கள்.

தொடர்ந்து 5 ஆண்டுகளாக, இந்து அருள்நெறி நடுநிலைப் பள்ளி, நான்குனேரி ஒன்றியத்தில் முதலிடம் பெற்று வருகின்றது.

### தொலைபேசி

அலெக்சாண்டர் கிரகாம்பெல் 1876இல் தொலைபேசியை முதன்முதலாகக் கண்டு பிடித்தார். 1876 மார்ச்சு மாதம் 10ஆம் தேதி முதன்முதலாக தாம் கண்டு பிடித்த தொலைபேசியில் வேறொரு அறையில் இருந்த தனது உதவியாளர் திரு வாட்சனைக் கூப்பிட்டார். இதுவே தொலைபேசியில் பேசப்பட்ட முதல் செய்தி ஆகும்.

## உங்களுக்குத் தெரியுமா?

தொடுவானத்தை, மறையும் சூரியன் தொடுவதை நீங்கள் பார்க்கும்போது, உண்மையில் உங்களுடைய கண்ணில் படுவது காற்றுமண்டலத்தில் வளைந்து தெரியும் அதன் பிம்பம்தான். அந்நேரத்தில் சூரியன் உண்மையில் தொடுவானத்தின்கீழ் காணப்படுகிறது.

பூமியின் மேற்பரப்பு கிரஸ்ட் என (crust) அழைக்கப்படுகிறது. மலைப் பகுதிகளில் இதன் கனம் 25 மைல்களாகும். பூமியின் மொத்த கன அளவைக் கருத்தில் கொள்ளும்போது, இது மிக மெல்லியதாகும். பூமியை ஆப்பிளுடன் ஒப்பிட்டால், பூமியின் மேற்பரப்பை அதன் மெல்லிய தோலுக்கு ஒப்பிடலாம்.

மனிதனுடைய கண்களைக் கொண்டு 17,000 விதமான வண்ணங்களைப் பிரித்து அறியமுடியும்.

1 டிகிரி பாரன்ஹீட் வெப்பநிலைக்கு 1 பவுண்டு நீரை உயர்த்தத் தேவையான சக்தியானது; 778 பவுண்டு எடையுடைய பொருளை நிலத்திலிருந்து 1 அடி உயர்த்தத் தேவையான சக்திக்குச் சமமானது.

ஆர்டிக் துன்டிரா (Artic Tundra) பகுதியில் 10 சதுரமைல்களில் காணப்படும் பூச்சி வகைகள், வடஅமெரிக்கா முழுவதிலும் உள்ள பாலூட்டிகளின் மொத்த எண்ணிக்கையைவிட அதிகமாகும்.

சராசரி மனிதனுடலில் 60,000 மைல் நீளமுள்ள இரத்தக் குழாய்கள் காணப்படுகின்றன.

பாலைவனத்தில் காணப்படும் நத்தைகள் ஒரே நேரத்தில் 4 ஆண்டுகள் வரை உறக்கத்தில் ஆழ்ந்துவிடக்கூடும்.

தற்போது பூமியில் 1.4 மில்லியன் வகை (species) விலங்குகளும், 6 லட்சம் வகையான தாவர வகைகளும் உள்ளன. பூமியில் இதுவரை வாழ்ந்துள்ள ஜீவராசிகளில் இத்தொகை ஒரு சதவீதமே. ஏனையவை மறைந்துவிட்டன.

இரா கந்தசாமி

நன்றி: கலைக்கதிர்



# 12வது அகில இந்திய சுற்றுலா மற்றும் தொழில் பொருட்காட்சி நிறைவு விழா

சென்னைத் தீவுத் திடலில் கடந்த இரண்டு மாத காலத்திற்கு மேலாக நடந்துவந்த அகில இந்தியச் சுற்றுலா மற்றும் தொழில் பொருட்காட்சியின் நிறைவு விழா அண்ணா கலையரங்கில் 28.3.85 அன்று நடைபெற்றது.

இவ்விழாவில் நரிக்குறவக் குடும்பத்தைச் சார்ந்த பள்ளிக் குழந்தைகள் தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடியது குறிப்பிடத்தக்கது.

விழாவுக்கு வந்திருந்தோரைச் சுற்றுலா வளர்ச்சிக் கழகத் தலைவர் திரு க. பாலசுப்பிரமணியன் எம்.எல்.ஏ. அவர்கள் வரவேற்றுப் பேசுகையில் குறிப்பிட்டதாவது:

''கடந்த ஆண்டு ரூ.16 இலட்சம் வருமானம் இங்கு நடைபெற்ற பொருட்காட்சி மூலம் கிடைத்தது. ஆனால் இந்த ஆண்டு ரூ. 24 இலட்சம் வருமானம் கிடைத்துள்ளது. இயற்கையின் சோதனைகள் இருந்தாலும் பொதுமக்கள் நல்லாதரவு கொடுத்துள்ளார்கள்.

''தமிழகத்தின் பெருமையை வெளிநாட்டுப் பயணிகளுக்கும், அண்டை மாநில மக்களுக்கும் சுற்றுலா வளர்ச்சிக் கழகம் மூலம் எடுத்துக்காட்டி வருகிறோம்.''

விழாவிற்குத் தலைமை தாங்கிய செய்தி-அறநிலையத்துறை அமைச்சர் திரு இராம.வீரப்பன் அவர்கள் பேசுகையில்—

**''ஆண்டுதோறும் நடைபெறும் சுற்றுலாப் பொருட்காட்சி இந்த ஆண்டு சீரும் சிறப்புடனும் நடைபெற்றுள்ளது. டெல்லியில் நடைபெறும் பொருட்காட்சிக்கு அடுத்து பெரிய அளவில் தமிழகததில்தான் அரசு சார்பில் பொருட்காட்சி நடைபெறுகிறது இந்தப் பொருட்காட்சியைச் சிறப்புடன் அமைத்த தனி அலுவலர் துரைராஜ் அவர்களைப் பாராட்டுகிறேன்.**

''322 அரங்குகள், பல்வேறு துறைகளின் சார்பில் அமைக்கப்பட்டுள்ளன. இப்பொருட்காட்சியை ஏறத்தாழ 48 இலட்சம் பார்வையாளர்கள் பார்த்துள்ளனர். அதில் இரண்டு இலட்சம் மாணவர்களும் அடங்குவர். இங்கு நடைபெற்ற பொருட்காட்சியில் சிறுசேமிப்பு அரங்கின் மூலம் மட்டும் வருமானம் ரூ. 9 கோடி கிடைத்துள்ளது. கோ-ஆப்டெக்ஸ் மூலம் வருமானம் ரூ. 1 கோடி கிடைத்துள்ளது.

''அரசாங்கத் துறைக்கு வரும் வருமானத்தை தெரிவிக்க இலாபம் என்ற வார்த்தையைப் பயன்படுத்துவது சரி அல்ல. வேலூரில் அரசு சார்பில் நடைபெறும் பொருட்காட்சியில் 24.3.84 அன்று ஒரேநாளில் 60 ஆயிரம் பேர் கண்டுகளித்தனர். அதன் மூலம் வசூல் ரூ. 30 ஆயிரம் கிடைத்துள்ளது.

சுற்றுலா மூலம் ரூ. 700-800 கோடி அன்னியச் செலாவணி வருகிறது என்று தெரிவித்திருக்கிறார்கள். ஆனால் உலகம் முழுவதும் சுற்றுலா வளர்ச்சியடைந்த அளவிற்கு இந்தியாவில் வளர்ச்சியடையவில்லை. மைய அரசு கவனம் செலுத்த வேண்டும்.

''வெளிநாட்டுப் பயணிகள் மூலம் இந்திய அரசுக்கு வரும் வருவாயில் பெரும் பங்கு தமிழகத்தில் இருந்து கிடைக்கிறது. உலகப் பயணிகளில் 14 சதவிகிதம் பேர் சென்னை விமான நிலையத்துக்கு வருகிறார்கள்.

சுற்றுலா வளர்ச்சிக்குத் தமிழகம் கடந்த 6 ஆண்டுகளில் ரூ. 5 கோடி செலவிட்டுள்ளது. 7வது ஐந்தாண்டுத் திட்டத்தில் சுற்றுலா வளர்ச்சிக்காக ரூ. 16 கோடி தமிழ்நாடு அரசு கேட்டுள்ளது.

''இந்தியாவில் தமிழகத்தில் தான் சுற்றுலா நல்லமுறையில் இயங்கி வருகிறது. மைய அரசு நிதி உதவி செய்ய வேண்டும். சுற்றுலா வளர வேண்டும் என்று விரும்புகிறேன்'' என்றார்.

சிறந்த அரங்குகளுக்கான பரிசுகளை வழங்கி மேதகு ஆளுநர் திரு எஸ்.எல்.குரானா அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டதாவது:

''பொதுமக்களிடையே பிராந்திய உணர்வுகள் மறைந்து ஒருமைப்பாட்டு உணர்வு ஏற்பட சுற்றுலா வழி செய்கிறது. எனவே சுற்றுலாத்துறையை வளர்ச்சி அடையச் செய்ய வேண்டும். 7-வது ஐந்தாண்டுத் திட்டத்தில் சுற்றுலாவை ஒரு தொழிலாகச் சேர்க்க வேண்டும். **மாநிலத் திட்டத்திற்கு மைய அரசு ஆழ்ந்த கவனம் செலுத்த வேண்டும்.**

''மைய அரசும், மாநில அரசும் சேர்ந்து புதிதாகப் பல சுற்றுலா மையங்களைத் தேர்வு செய்து வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளுக்குத் தெரிவிக்க வேண்டும். அதோடு மட்டுமல்லாமல் விளம்பரங்களை அதிக அளவில் செய்ய வேண்டும்.

**''குறுகிய தூர விமானங்கள் விடுவதன் மூலம் - தொடர் சுற்றுலா இணைப்புத் திட்ட மூலம், சுற்றுலாப் பயணிகளைக் கவர வேண்டும். வெளிநாட்டுப் பயணிகள் நமது நாட்டுக்கு வருவதால் வருவாய் கிடைப்பதோடு மட்டுமின்றி அவர்களுடைய நட்பும் நமக்குக் கிடைக்கிறது.**

**தனி விமானங்கள் மூலம் வெளிநாட்டுப் பயணிகள் நேரடியாகச் சென்னை வந்து சேரவேண்டும். வெளிநாட்டுப் பயணிகளைக் கவர, தமிழக அரசு நல்லமுயற்சி செய்து வருகிறது''.**


**சுற்றுலாத்துறைச் செயலர் திரு இரா.கிருபாகரன், இ.ஆ.ப., நன்றி கூறினார்.**

**விழா முடிவில் நாட்டிய இளவரசி செல்வி பிரியவதனாவின், மறைந்த பாரதப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி அவர்களின் வாழ்க்கையைச் சித்திரிக்கும் ''இந்திரப் பிரியதரிசினி'' சிறப்பு நாட்டிய நிகழ்ச்சி நடைபெற்றது.**

தொகுப்பு:
**அ. மருதவிநாயகம்**

## கடற்படை வார நிதிக்கு தமிழக முதல்வர் நிதி அளிப்பு

**1984-ஆம் ஆண்டிற்கான கடற்படை வார நிதிக்கு (Navy Week Fund) மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள், முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து ரூ. 10,000 அளிக்க ஆணையிட்டுள்ளார்.**



## பரிசு பெற்ற சிறப்பு அரங்குகள்

**1. அரசுத்துறை பெரிய அரங்குகள் :**

கல்வித்துறை — (முதல் பரிசு)
தொழில்துறை — (இரண்டாம் பரிசு)
நகராட்சி நிர்வாகம் — (மூன்றாம் பரிசு)

**2. அரசுத்துறை சிறிய அரங்குகள் :**

தீயணைப்புத்துறை (முதல் பரிசு)
நெடுஞ்சாலைத் துறை (இரண்டாம் பரிசு)
கைத்தறித் துறை (மூன்றாம் பரிசு)

**3. அரசுத்துறை நிறுவனங்கள்**

சென்னை மாநகராட்சி (முதல் பரிசு)
சிப்காட் (இரண்டாம் பரிசு)
பல்லவன் போக்குவரத்துக் கழகம் (மூன்றாம் பரிசு)

**4. மைய அரசின் துறைகள்**

கடற்படை (முதல் பரிசு)
தென்னக இரயில்வே (இரண்டாம் பரிசு)
இந்திய விண்வெளி ஆராய்ச்சி மையம் (மூன்றாம் பரிசு)

**5. மைய அரசின் பொது நிறுவனங்கள்**

நெய்வேலி நிலக்கரி நிறுவனம் (முதல் பரிசு)
சென்னைத் துறைமுகப்பொறுப்புக் கழகம் (இரண்டாம் பரிசு)
யுனைடெட் இந்தியா இன்சூரன்ஸ் (மூன்றாம் பரிசு)

**6. மற்ற மாநிலங்களின் துறைகள்**

கேரளா சுற்றுலாத் துறை (முதல் பரிசு)
இமாசலப்பிரதேச சுற்றுலாத்துறை (இரண்டாம் பரிசு)
கேரள மாநிலக் கயிறு நிறுவனம் (மூன்றாம் பரிசு)

**7. மாவட்ட அரங்குகள்**

சேலம் (முதல் பரிசு)
கோயம்புத்தூர் (இரண்டாம் பரிசு)
கன்னியாகுமரி (மூன்றாம் பரிசு)

**8. தனியார் துறைகள்**

அரியானா கைத்தறி (முதல் பரிசு)
பிலிம் நியூஸ் ஆனந்தன் (இரண்டாம் பரிசு)
எம். ஏ. ஜேக்கப் (மூன்றாம் பரிசு)

**9. எல்லா அரங்குகளில் சிறப்பான அரங்கிற்கான பரிசை இந்து சமய அறநிலையத் துறை பெற்றது.**

**10. சிறப்புப் பரிசாகச் சிறுசேமிப்புத் துறை பரிசு பெற்றது.**

# பொருட்காட்சியில் கொய்த செய்திகள்



அனைத்து அரங்குகளின் சிறப்புப் பரிசு அறநிலையத்துறைக்கு வழங்கப்பட்டது. சிறப்புப் பரிசு சிறுசேமிப்புத் துறைக்கு வழங்கப்பட்டது.

1984ல் உலகச் சுற்றுப் பயணம் செய்த பயணிகள் எண்ணிக்கை 30 கோடி. அதில் இந்தியாவில் 8 இலட்சம் பேர் சுற்றுப்பயணம் செய்துள்ளனர்.

முதன் முதலில் சேலத்தில் நடந்த பொருட்காட்சியில் சிறுசேமிப்பு அரங்கு அன்றைய இயக்குநர் திரு சி. என். கிருஷ்ணபாரதி இ.ஆ.ப., அவர்களால் ஏற்படுத்தப்பட்டு ரூ.9 இலட்சம் வருமானம் கிடைத்தது. கடந்த ஆண்டு சென்னைத்தீவுத் திடலில் சிறுசேமிப்பு அரங்குக்கு வருமானம் ரூ.1 கோடி கிடைத்தது. இந்த ஆண்டு ரூ.9 கோடி வருலாகி உள்ளது. தற்போது இதன் இயக்குநராகத் திரு கே. சுந்தரமூர்த்தி, இ.ஆ.ப. உள்ளார். இந்தச் சிறபபுச் சிறுசேமிப்புப் பணி மிகவும் பாராட்டத்தக்கது.

பொருட்காட்சியில் அமைக்கப்பட்டிருந்த 322 அரங்குகள் 8 பிரிவுகளாகப் பிரிக்கப் பட்டு ஒவ்வொரு பிரிவுக்கும் 3 பரிசுகள் வீதம் மொத்தம் 24 பரிசுகள் அளிக்கப்பட்டன.

இந்த ஆண்டு சிறப்பு அம்சமாக 80க்கு மேற்பட்ட பள்ளிகளின் சிறுவர்கள் பொருட்காட்சியைப்பார்வையிட்டனர். கண்காட்சிகளைப் பற்றிக் கட்டுரையும் எழுதினார்கள். அவற்றில் 65 கட்டுரைகள் தேர்வு செய்யப்பட்டுப் பரிசுகள் வழங்கப்பட்டுள்ளன.

சிறந்த முறையில் அரங்குகள் அமைத்த அமைப்பாளர்களுக்கும், தொண்டராகப்பணியாற்றியவர்கட்கும் பரிசுகள் வழங்கப்பட்டன.

பொருட்காட்சி ஆரம்ப நாளன்று முழுமையாக முடித்திருந்த கால்நடை பராமரிப்புத்துறை, தொழில்துறை, வனத்துறை. அரங்குகளுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன.

# புதியதோர் உலகம் காணத் துடித்த புரட்சிப் பாவேந்தர்

தமிழகத்தின் எந்தத் தலைவர்களையும் விடக் கவிஞர் பாரதிதாசனுடனேயே மிகுதி பழகும்படி தமிழன்னை எனக்கு அருள் பாலித்திருக்கிறார். இதுபற்றி நான் மிகவும் பெருமைப்படுகிறேன். ஏனெனில் என் உளநோக்கில் அவர், கவிதையுலகில் ஒரு தலை சிறந்த கவியரசர் மட்டுமல்லர், காந்தியடிகள் போன்ற கனவியற் பெரியார்; புலமையரசு மறைமலையடிகள், அறிவுலக அரசன் அண்ணா ஆகியோரைப் போன்ற தமிழாட்சித் திறம், அறிவாட்சித்திறம் உடையவர், பிளேட்டோ காலந்தொட்டு வழிவழி வந்த புத்துலகச் சிற்பிகள், சமதருமச் சிந்தனைச் செல்வர்களிடையே அம்மரபின் முழுமைத் திறம் சான்ற ஒரு சமதருமப் புத்துலகப் படைப்பாளர் என்ற பன்முகச் சிறப்புடையவராய் விளங்கி வருகிறார்.



பாவேந்தருக்கு முன்னும் பின்னும் ஒப்பற்ற ஒளிமரபுப் பரம்பரைகள் உண்டு. பாரத விடுதலைப் போராட்டத்தில் மட்டுமின்றி உலக நாடுகள் விடுதலைப் போராட்டத்திலும் ஈடுபட்ட போர்வீரர்களிடையே ஒரு போர் வீரரின் உணர்ச்சியுடன் பாடிய உலகின் ஒரே வீர விடுதலைக் கவிஞர் பாரதியார். அவருடன் ஒப்பிடத்தக்க மற்றொருவர் ஆங்கிலக் கவிஞர் பைரன் மட்டுமேயாவர். பாவேந்தரின் முன்மரபு இது. பன்னூறு கவிஞர்களைத் தோற்றுவித்து இன்றைய தமிழகத்தை வளப்படுத்தும் பாவேந்தர் கவிதைப் பரம்பரையே அவ்வேந்தரின் பின்மரபொளி ஆகும். உலகின் தலைசிறந்த சமதர்மக் கவிஞராகவும் அவர் விளங்குகிறார். இதில் அவருடன் ஒப்பிடக்கூடிய ஒரே கவிஞர் அமெரிக்காவின் விட்டியரே ஆவர்.

பாரதி புகழ் பாடுவதாகப் பாசாங்கு பண்ணி, பாரதிதாசன் புகழை மறப்பவன், மறக்கடிப்பவன் உண்மையான பாரதி பக்தனாகமாட்டான். அதுபோல பாவேந்தர் புகழ் பாடி அதனைப் பாரதி புகழுடன் இணைக்கத் தயங்குபவன் உண்மைய பாவேந்தர் பக்தனாகமாட்டான். ஏனெனில் பாரதியார் உலகின் ஒப்புயர்வற்ற விடுதலைக் கவிஞன் என்றால், பாவேந்தர் அதுபோல உலகின் ஒப்புயர்வற்ற சமதருமக் கவிஞர் ஆவார். தமிழ்ப் பற்றிலோ, தமிழ் மரபினைப்போற்றுவதிலோ அவ்விரண்டின் புத்துருவாகிய புதுமையார்வத்திலோ, புரட்சியார்வத்திலோ, இருவருமே ஒருவருடன் ஒருவர் போட்டியிடத்தக்கவர் ஆவர். ஒருவர் ஒரு பண்பில் விஞ்சியவர் என்று தோன்றினால், மற்றொன்றில் மற்றவர் விஞ்சியிருப்பார் என்று காண்டல் எளிது. அது மட்டுமன்று. பாவேந்தர் விஞ்சிய பண்புகளிலே பாரதியார் அவர் முன்னோடியாவர் என்பதையோ, பாரதியார் விஞ்சி நின்ற பண்பிலே, பாவேந்தர் அதே பண்பின் புதுமரபு அல்லது புதுவிளக்கமாக வளர்ச்சி நோக்குவதையும் எவரும் காணலாம்.

பாரதியார் அரசியல் விடுதலை பாடுவதில் மேம்பட்டவரானால், பாவேந்தர் சமுதாய, சமய விடுதலையுணர்வில் விஞ்சி நின்று, சமதரும மரபிலும் தமிழ் மரபிலும் அவரைத் தாண்டி நெடுந்தொலை ஒளிவீசியுள்ளார்.

பாரதியார் பெருமை அவர் காலத்திலோ அவர் பாடிய பாரத விடுதலைப் போராட்ட நாளிலோ, அவர் பாடிய உருசியப் பொதுவுடைமைப் புரட்சியின் நாளிலோ தமிழக மக்களிடையே சரிவர உணரப்படவில்லை. பாரதிதாசன் வாழ்நாளிலும், பாரதிதாசன் பரம்பரை வளரும் இந்நாளிலும்தான் பாரதியாரின் பெருமை உணரப்படத் தொடங்கியிருக்கிறது. பாவேந்தர் இன்று வாழ்ந்திருந்தால், இன்றிருப்பதை விடப் பாரதியார் புகழை அவர் இந்தியா அளாவ-உலகளாவப்-பரப்பியிருப்பார் என்பதில் ஐயமில்லை. இதுபோலவே பாரதியார் விடுதலைப் போராட்ட கால முழுதும் வாழ்ந்திருந்தால், அவர், பாவேந்தர் பாடற்புகழை இந்தியா அளாவ, உலகளாவக் கட்டாயம் பரப்பியிருப்பார் எனலாம்.

**பன்மொழிப் புலவர்**
**டாக்டர் கா. அப்பாத்துரை**

பாவேந்தர் கவிதையை உலகறிந்த அளவில்கூட, அவர் அறிவை, புலமையைத் தமிழுலகம் அறியாமல் அவர் மாள்வு தடுத்துவிட்டது. அவர் சிறந்த இலக்கணப் புலவர். 'வருங்காலத் தமிழகம்' என்ற ஏடு அச்சாகும் சமயம் அவர் என்னுடன் என் வீட்டில் தங்கியிருந்தார். இக்காலத்தார் மெள்ள மறைந்து வரும் தமிழ் மரபுகளைக் கண்டிப்பவர் அவர். எனவே சந்திப் பிழைகள் இல்லாமல், அதனை திருத்தும் பொறுப்பை அவர் வலிந்து மேற்கொண்டார்.

'குயில்' வெளியீடு கவிதைக்காக மட்டும் தொடங்கப்படவில்லை. திருக்குறள் ஆராய்ச்சி மெய்யுரைக்காகவும் தொடங்கப்பட்டிருந்தது. என்னையும் கவிஞர் சுரதா போன்றோரையும் உடன் கொண்டே அவ்வுரை விரிக்க அவர் எண்ணியிருந்தார். ஆகவே வள்ளுவர் உள்ளத்தை உள்ளவாறு அறிவதற்குரிய ஆராய்ச்சிமுறைகளைப் பற்றி அவரிடம்

உசாவும் வாய்ப்பு எனக்குக் கிட்டிற்று. அவ்வகையில் பாவேந்தரின் திட்டங்களும் அடிப்படைக் கருத்துக்களும் எனக்கு வியப்பும் தந்தன; புத்தொளியும் தந்தன. ஆராய்ச்சிக் கண்ணோட்டத்துடனும் பகுத்தறிவுக் கண்ணோட்டத்துடனும் ,வரலாற்று நோக்குடனும் செய்யப் பெற்ற தமிழரின் சைவ சித்தாந்தம், தமிழ் வைணவ மரபுகள், தமிழிலக்கிய, சங்க இலக்கிய மரபுகள், தமிழ்ச் சொல்லாய்வுகள் ஆகியவற்றின் மூலமே திருக்குறளின் பின்னணியிலுள்ள வள்ளுவ உள்ளம் காண முடியும் என்றார்.

வெளித்தோற்றத்தை நம்பிப் பலர் பாவேந்தரைச் சமயத்தின் எதிரி என்று நினைப்பதுண்டு. போலிச் சமயம், அதாவது சமயப் போர்வைக்குள்ளிருந்து கொண்டு செய்யப்படும் மனித இனச் சுரண்டல் முறைகளுக்கு அவர் விடாப்பிடியான எதிரிதான். ஆனால் உண்மைச் சமயத்தை எந்தப் பக்தரையும்விட அவர் நன்கறிந்து அறிவிப்பவர் என்பதை அவரது தொடக்கக் காலச் 'சுப்பிரமணியர் துதியமுது' மட்டுமின்றி,அவரது முழுச் சீர்திருத்தக் காலக் கவிதையாகிய 'உலக அன்னை'யும் காட்டும். பாரதியாரோ, பட்டினத்தார்போன்ற பக்திக் கவிஞரோ கூட 'உலக அன்னை' காட்டும் கற்பனை உயர்ச்சியைச் சென்று எளிதில் எட்டிவிடமுடியாது.

பாரதி, பாரதிதாசன் ஆகிய இருவருமே உலகின் ஒப்பற்ற புரட்சிக் கவிஞர்கள்தாம். ஆனால் இருவர் புரட்சிகளுமே இடைக்காலத் தமிழரின் போலி மரபுகளைத்தான் எதிர்த்தன-சங்க காலத் தமிழ் மரபையும் அதற்கு முற்பட்ட பகுத்தறிவுக் கால மரபையும் அவை புதுப்பித்து வளர்த்தன.

'ஒன்றே குலனும், ஒருவனே தேவனும்!'
'யாதும் ஊரே, யாவரும் கேளிர்!'
'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்!'

என்ற பண்டை 'ஓருலக' 'சமதரும'க் குறிக்கோளைப் புதுப்பித்து, அவ்வழி புதிய தமிழகம், புதிய இந்தியா, புதிய உலகம் படைக்கப் பாடுபட்ட முழுநிறை புரட்சிக் கவிஞர் பாவேந்தரேயாவர்.

இளங்கோவை, வள்ளுவனைத் தமிழகத்துக்கு அறிமுகப்படுத்தியவர் பாரதியார்

ஆம்! 18ஆம் நூற்றாண்டு வரை தமிழகத்தில் சிலப்பதிகார நூலைப் பற்றிப் பலரும் அறிந்திருக்கவில்லை. ஆனால் பாரதியார் இளங்கோவின் சிறப்பினை எப்படியோ உணர்ந்திருந்தார். திருவள்ளுவரைச் சமயவாதிகள் ஒரு நாயனாராக்கிக் குடத்தினுள் இட்ட விளக்காக்கி வைத்திருந்தனர். வள்ளுவரின் பெருமையையும் பாரதி அறிந்திருந்தார். அறிவார்ந்த அந்த உண்மையின் விளைவே, பாரதி,

'யாமறிந்த புலவரிலே கம்பனைப்போல்
வள்ளுவர்போல் இளங்கோவைப் போல
பூமிதனில் யாங்கணுமே பிறந்ததில்லை'

என்று அவ்விருவரையும் ஏற்றிப் புகழ்ந்த கவிதைத் தோற்றம்.

பாரதியார் அடியெடுத்துத் திசைகாட்ட, அவ்வழி நின்ற முழுமைத் தமிழ்க் கவியரசராக பாவேந்தர் விளங்குகிறார்.



## தலைமைச் செயலாளர் பேட்டி

**த**லைமைச் செயலர் திரு டி. வி. அந்தோணி, இ.ஆ.ப., அவர்கள் 2.4.85 அன்று, முதல் முறையாகச் செய்தியாளர்களுக்குப் பேட்டி அளித்தார்.

பேட்டியின்போது அவர் கூறியதாவது:

"என்னுடைய தந்தை டி. ஏ. வர்கீஸ் ஐ.சி.எஸ். அவர்கள் 20 வருடங்களுக்கு முன்னர் தமிழ்நாடு அரசில் தலைமைச் செயலாளராக இருந்து ஓய்வு பெற்றார்.

"தமிழ்நாட்டில் குடும்பநலத் திட்டத்தைத் தொடர்ந்து தீவிரமாக நிறைவேற்றப் பாடுபடுவேன். திட்டமிட்ட குடும்பத்தின் சிறப்புகள் பற்றியும் குடும்ப நலத் திட்டங்கள் குறித்தும் பொது மக்களுக்கு விளக்கும் வகையில் பன்னிரண்டு திரைப்படங்கள் விரைவில் வெளியிடப்படும்.

"ஏழ்மைக்கும் கல்வியறிவின்மைக்கும் ஆட்பட்ட பெண்களிடம் குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தை நிறைவேற்றுவதில் சிரமம் உள்ளது. அதற்காக குடும்பநலத் துறைச் செயலர் விரைவில் பெண்கள் கருத்தரங்கை நடத்த உள்ளார்.

"பொதுவாக 33 வயதுக்குமேல் குழந்தைகள் பெற்றுக் கொள்ளக்கூடாது. இதில் கவனம் செலுத்தினால் அனைத்துத் தரப்பினரும் மகிழ்ச்சியோடு வாழ்க்கையை நடத்தலாம்.

"மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களை நான் சந்தித்தபோது, எல்லாத் துறையினரும் தங்களது துறை குறித்து ஒரு இலக்கு வைத்துச் செயல்படவேண்டுமென்றும், அப்பொழுது தான் இலக்கில் எவ்வளவு முன்னேற்றம் அடைந்துள்ளது என்று ஆய்வு செய்துபணி தொடர முடியும்' என்றும் அவர் குறிப்பிட்டார்.



# இராஜேந்திர பிரசாத் நூற்றாண்டு விழா!

**த**மிழ்நாடு அரசின் சார்பில் டாக்டர் இராஜேந்திர பிரசாத் நூற்றாண்டு விழா (27-3-85) சென்னையில் சிறப்புற நடைபெற்றது. அயன்புரம் ஐ.சி.எப். மேனிலைப்பள்ளிக் கலையரங்கில் நடைபெற்றது. மாண்புமிகு சட்டமன்ற மேலவைத் தலைவர் சிலம்புச் செல்வர் டாக்டர் ம.பொ.சி. அவர்கள் பங்கேற்று உரை நிகழ்த்தினார்.

பிற்பகல் 3 மணியளவில் நாயன இசை நிகழ்ச்சியும் அதைத் தொடர்ந்து திரு டி. கே. எஸ். புகழேந்தி குழுவினரின் இசை நிகழ்ச்சியும் நடைபெற்றது.

செய்தித்துறை இயக்குநர் திரு நா. கிருஷ்ணபாரதி, இ.ஆ.ப. அவர்கள் வரவேற்புரையாற்றினார். அப்போது அவர் 'மாணவப் பருவம் முதல், தனது கடைசி மூச்சுவரை எதிலும் முதன்மை பெற்று விளங்கியவர் பாபு இராஜேந்திர பிரசாத். அவருடைய வாழ்க்கை வரலாற்றைத் தெரிந்து கொள்ளுவதானது-நாம் நம்முடைய எதிர்காலத்தைச் செம்மைப்படுத்திக் கொள்ள உதவும் என்பதை மாணவ மாணவிகள் மட்டுமல்ல, அவர்களை வழி நடத்தும் ஆசிரியப் பெருமக்களும் நினைவிற் கொள்ள வேண்டும். அதனாலேயே இவ்விழா பாடசாலையிலே நடத்தப்படுகிறது" என்று குறிப்பிட்டார்.

இதன் பின் - டாக்டர் இராஜேந்திர பிரசாத் படத்தை மாண்புமிகு மேலவைத் தலைவர் சிலம்புச் செல்வர் அவர்கள் திறந்து வைத்தார்.

ஐ. சி. எப். மேனிலைப் பள்ளிக் காப்பாளர் திரு. டி. சேஷாசலபதி பேசுகையில் 'பண்புடையார்ப் பட்டுண்டு உலகம் அது இன்றேல் மண்புக்கு மாய்வது மன்'' என்கிற திருக்குறளுக்கு எடுத்துக் காட்டாக விளங்கியவர்தான் டாக்டர் ராஜேந்திர பிரசாத்"என்று குறிப்பிட்டார்.

பள்ளித் தலைமையாசிரியர் திரு பாப்பையன் தமது உரையில்,''சிறந்த நீதிமானாக - மிகச் சிறந்த மனிதராக விளங்கிய டாக்டர் இராஜேந்திர பிரசாத்தைப் போலப் பலரையும் உருவாக்க ஆசிரியர்களாகிய நாம் பாடுபட வேண்டும்'' என்றார்.

ஐ. சி. எஃப் நிறுவனத் தலைமைப் பொறியாளர் திரு பாஸ்கர் பேசும்போது- ''மிகவும் சிறிய கிராமத்திலே பிறந்தவர் என்றாலும் பாபு ராஜேந்திர பிரசாத் உலகப் புகழ் பெறக் காரணம் மற்றவர்களிடம் அவர் காட்டிய அன்பும், கொள்கையிலிருந்த பிடிப்பும் அனைவரிடமும் கொண்டிருந்த மதிப்புமே காரணம்'' என்றார்.

சட்டமன்ற உறுப்பினர் திருமதி டி. யசோதா அவர்கள் தமது உரையில் ''1911ல், காங்கிரஸ் கட்சியில் சேரும்போதே அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டி உறுப்பினராகச் சேர்ந்த பெருமை டாக்டர் ராஜேந்திர பிரசாத்தினுடையது; அப்படிச் சேருவது அவ்வளவு சாதரண ஒன்றல்ல. தியாகம் பல செய்து சிறந்த அவருக்கு வீட்டுக் கவலையைவிட நாட்டுக் கவலையே அதிகமிருந்தது'' என்றெல்லாம் கூறிப் புகழ்ந்துரைத்தார்.

மாண்புமிகு சட்டமன்ற மேலவைத் தலைவர் சிலம்புச் செல்வர் டாக்டர் ம.பொ.சி. அவர்கள் சொற்பொழிவாற்றுகையில் குறிப்பிட்டதாவது:

''டாக்டர் ராஜேந்திர பிரசாத்தின் நூற்றாண்டு விழாவை நாம் கொண்டாடுகிறோம் என்றால்,







அதற்குக்காரணம் அவர் இந்தியக் குடியரசுத் தலைவராக இருந்தார் என்பது மட்டுமேயல்ல; அவர் சிறந்த பண்பாளராக, விடுதலைப்போராட்ட வீரராகத் திகழ்ந்தவர். அவரை வட இந்தியர் என்பார்கள் சிலர்; வடஇந்தியா மட்டுமே சுதந்தரம் பெற அவர் போராடவில்லை; ஆகவே தென்னிந்தியராகிய நாம் பாராட்டுவது ஒன்றும் தவறில்லை. நான் விடுதலைப் போரில் பங்கேற்றேன் என்றால் தமிழ்நாடு மட்டுமே சுதந்தரம் பெறவா போராடினேன்? இல்லையே!

''நம்மை அடக்கி ஆண்ட வெள்ளையராலே ஹ்யூம் என்பவரால் நமக்கு ஏற்படுத்தித் தரப்பட்ட சுதந்திரப் பாசறைதான் இந்திய தேசீய காங்கிரஸ். அதன் கீழே அணி திரண்டுதான் தியாகத் தழும்பேற்று நாம் நம்நாட்டு சுதந்தரத்தைப் பெற்றோம். வேறு எந்த நாட்டுச் சுதந்தரப் போருக்கும் இப்படிப்பட்ட சிறப்பிருக்க முடியாது.

''இன்றைக்கு இலங்கையிலே கொடுமைப் படுத்துவதாகச் சொல்கிறார்களே, இதை விட - கதர் நூற்போரின் கைவிரல் வெட்டப்படுவது போன்ற பல கொடுமைகள் அன்றைக்கு வெள்ளையரால் நமக்கு இழைக்கப்பட்டதுண்டு. அப்படிப்பட்ட நேரத்தில் நெஞ்சுரத்தோடு நின்ற பெருமை டாக்டர் ராஜேந்திர பிரசாத்துக்கு உண்டு. 'பீகார் சாது' என்று அவரைச் சொல்லுவார்கள். அந்த அளவுக்கு அவர் ஒழுக்க சீலராக விளங்கினார்.


''ராஜேந்திர பிரசாத் என் அடிச்சுவட்டில் நடைபோடுகிறாரா, அவர் அடிச்சுவட்டில் நான் நடைபோடுகிறேனா என்பதே எனக்குச் சில நேரங்களில் விளங்குவதில்லை என்று காந்தியடிகளாரே அவரைப் பாராட்டி எழுதியிருக்கிறார். மூதறிஞர் ராஜாஜியும் அவர் மேல் பெருமதிப்புக் கொண்டிருந்தார்.

''ஏழை எளியவர்களானாலும் அவர்களிடமெல்லாம் சகோதர பாசத்தோடு பழகி வந்தவர் டாக்டர் ராஜேந்திர பிரசாத். அதனாலேதான் ஏழை, எளிய வீட்டுக் குழந்தைகளின் இன்னல் நீங்கச் சத்துணவு தந்தது போதாதென்று, மறுபிறவி எடுத்து வந்து, ஏழைக் குழந்தைகளுக்கு இலவசச் சீருடையும் பாடப் புத்தகங்களும் வழங்கப்படும் என்று அறிவித்த மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம். ஜி. ஆர். அவர்களின் அரசு இந்த நூற்றாண்டு விழாவை நடத்திப் பெருமை கொள்கிறது. அவருக்கு எனது நன்றியும் வணக்கமும் என்றும் உரியது.''

விழா முடிவில் மாவட்டக் கல்வி அதிகாரி (வடக்கு) திரு எம்.ராஜாராம் நன்றியுரையாற்றினார்.


விழா ஏற்பாடுகளைச் செய்தித்துறை துணை இயக்குநர் திரு வி.டி.வீரப்பன், சென்னை மாவட்ட மக்கள் தொடர்பு அலுவலர் திரு கு.கோவிந்தராஜுலு ஆகியோர் சிறப்புறச் செய்திருந்தனர்.

**–பி. எல். ராஜேந்திரன்**





# ஒரு பெண் எழுத்தாளர் பெருமை பெறுகிறார்



சிறந்த எழுத்தாளருக்குரிய 1983ஆம் ஆண்டின் சாகித்ய அகாடமி விருதைப் பெற்ற நாவலாசிரியர் திருமதி லட்சுமி அவர்களுக்குப் பாராட்டு விழாவைப் பூங்கொடி பதிப்பகத்தார் 26.3.85 அன்று மிகச் சிறப்பாக நடத்தினர்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் சிலம்புச் செல்வர் டாக்டர் ம.பொ.சி அவர்கள் விழாவுக்குத் தலைமை ஏற்க, மாண்புமிகு கல்வி அமைச்சர் திரு செ. அரங்கநாயகம் அவர்கள் பூங்கொடி பதிப்பகத்தின் சார்பில் எழுத்தாளர் லட்சுமிக்குப் பொன்னாடை போர்த்தி, பரிசு வழங்கினார்.

விழாவுக்கு வருகை புரிந்தோரைப் பதிப்பக உரிமையாளர் திரு வே. சுப்பையா வரவேற்றார்.

அனைத்திந்தியத் தமிழ் எழுத்தாளர் சங்கத் தலைவர் திரு விக்கிரமன் உரையாற்றுகையில் இவ்வாறு குறிப்பிட்டார்:

''லட்சுமிக்கு சாகித்ய அகாடமி பரிசு அறிவிக்கப்பட்டபோது எந்த விதமான வேறுபட்ட கருத்தும் எழாதது பெருமைக்குரியது''.

பதிப்பாளர் சங்கத் தலைவர் திரு. முத்துக்குமாரசாமி உரையாற்றும் போது தெரிவித்தார்: ''பரிசு பெற்ற இந்த ஒருநூல் மட்டுமல்ல; லட்சுமியின் அத்தனை எழுத்தோவியங்களுமே அருமையானவை.''

இந்திய மாதர் சங்கத்தின் பொறுப்பாளராக உள்ள எழுத்தாளர் திருமதி வசுமதி ராமசாமி கூறினார்—

''பல எழுத்தாளர்களின் நூல்களை நாம் நமது குழந்தைகளிடம் காண்பிக்க முடியாது. ஆனால் லட்சுமியின் நூல்களை எல்லோரும் படிக்கலாம்; பூஜை அறையில்கூட வைக்கலாம்''.

எழுத்தாளர் திருமதி அநுத்தமா பேசியபோது, ''லட்சுமியின் நாவல்களில் பெண்ணின் பெருமை பேசப்படுகிறது; ஆனால் அதே நேரத்தில் ஆண்களை அவர் தாக்குவதும் கிடையாது'' என்று குறிப்பிட்டார்.

எழுத்தாளர் திரு பி.எல். ராஜேந்திரன் உரையாற்றுகையில், ''ஒரு காவிரியைப் போல' என்ற நூலுக்காகத் திருமதி லட்சுமி அவர்களுக்கு .சாகித்ய அகாடமி பரிசு கிடைத்திருக்கிறது. இந்த நூலை வெளியிட்ட பூங்கொடி பதிப்பகமும் இந்தப் பரிசால் பெருமை பெறுகிறது'' என்று தெரிவித்தார்.

திரு மூவேந்தர் முத்து உரையாற்றுகையில், ''தரமான சிறுகதைகளையும் நவீனங்களையும் தருவதில் தமிழ்நாட்டில் மிகச் சிறந்து விளங்குகிறார் திருமதி லட்சுமி'' என்று கூறினார்.

கவிஞர் மணிமொழி, ''லட்சுமி அவர்கள் முன்பு வெளிநாட்டில் வாழ்ந்த காலத்திலும் அவரது உள்ளமும் எழுத்தும் தமிழ்நாட்டைச் சுற்றியே வலம் வந்தன'' என்று குறிப்பிட்டார்.

**மாண்புமிகு அமைச்சர்**

மாண்புமிகு கல்வி அமைச்சர் திரு செ. அரங்கநாயகம் அவர்கள் தமது உரையில் தெரிவித்ததாவது—

''லட்சுமிக்கு சாகித்ய அகாடமிப் பரிசு கிடைத்ததன் மூலம் அந்த விருது மதிப்பைப் பெறுகிறது.

''மக்கள் ரசிக்கும் விதத்தில் எழுத்தாளர்கள் எழுதுவதைவிட மக்களை நெறிப்படுத்தும் வகையில் நல்ல புத்தகங்களை எழுத முன்வர வேண்டும். எழுத்தாளர்கள் ஒருவருக்கொருவர் பாராட்டிக் கொள்ளும் நிலைமையைப் பெருக்கிக் கொண்டாலே சிறந்த இலக்கியங்கள் தோன்ற முடியும்.

''முறையாக வாழ்க்கை ஆரம்பிக்கும் ஒவ்வொருவருக்கும் அனுபவம் தேவைப்படுகிறது. வாழ்க்கை அனுபவத்தை அறிந்து கொள்ள நவீனங்களைப் படிக்க வேண்டும். நவீனத்தைத் தவிர மற்றெல்லாம் நான் படிப்பேன் என்று சிலர் சொல்வதுண்டு. நவீனம் படிக்கும் பழக்கம் இல்லாதவர்கள் முழு மனிதர்கள் இல்லை.

''முன்பு வெளிவந்தநூல்களைப் பாராட்டும்போது அதுபோல வேறு நூல்கள் வெளிவர முடியாது என்று பேசுகிறோம். அது கூடாது. அதுபோல மற்றவர்களும் எழுத முடியும் என்ற எண்ணத்தை இளைஞர்கள் மனத்தில் உருவாக்க வேண்டும்.''

**மாண்புமிகு மேலவைத் தலைவர்**

மாண்புமிகு மேலவைத் தலைவர் சிலம்புச் செல்வர் டாக்டர் ம.பொ.சி. அவர்கள்தமது சொற்பொழிவில் இப்படித் தெரிவித்தார்:

''சோதனைகள் நேரும் போதெல்லாம் பெண் எப்படிச் சமாளிக்க வேண்டும் என்பதற்கு லட்சுமி சிறந்த உதாரணமாகத் திகழ்கிறார்.


''எழுத்தாளர்களிடம் படைப்புத் திறன் பெருக வேண்டும்.

''லட்சுமி எழுதிய கதைகள் எல்லாம் சுவையானவை. பண்பாட்டுக்கு ஊறு தராதவை என்று பலர் சொல்லக் கேள்விப்பட்டிருக்கிறேன்.


''சமுதாய விழிப்புணர்வுக்குப் பெண்ணினம் பெருமை பெறுவதற்கு அவரது கதைகள் பயன்படுகின்றன. அவர் மேலும்மேலும் வெற்றி பெற வாழ்த்துகிறேன்.''

விழா முடிவில் திரு.க. புகழேந்தி நன்றி கூறினார்.

—சுந்தர்




# ஆவின் பால் விலை சீரமைப்பு!



தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம் 'ஆவின் குட்னஸ்' ( Aavin Goodness ) என்ற பெயரில் புதிய பால் பொருள்கள் அறிமுக விழா சென்னையில் 1-4-85 அன்று கொண்டாடப்பட்டது. இந்த விழாவில் சுவையூட்டிய ஆவின் பால் விற்பனைப் போட்டியில் பங்கு கொண்டோருக்குப் பரிசுகளும் வழங்கப்பட்டன.

விழாவிற்கு வந்திருந்தோரை இணையத்தின் நிர்வாக இயக்குநர் திரு வி. சங்கர சுப்பையன் இ.ஆ.ப. வரவேற்றார்.

விற்பனைப் பிரிவு மேலாளர் திரு மிர்கயாம் அலி பொருட்களின் தரத்தையும் விற்பனையையும் பற்றி உரையாற்றுகையில் குறிப்பிட்டதாவது:

'பொருட்களின் விற்பனை ரூ. 6 கோடியிலிருந்து ரூ. 10 கோடியை எட்டியுள்ளது. நாங்கள் பரிசுத் திட்டத்தை அறிவித்தபோது யாரும் நம்பவில்லை. ஆனால் இன்று சொன்னபடி பரிசுகளை வழங்குகிறோம். பரிசுப் பொருள்கள் சிறியதாக இருக்கலாம். ஆனால் எங்களது எண்ணம் விற்பனையாளர்களை ஊக்கப்படுத்த வேண்டும் என்பதுதான. ஏறத்தாழ ரூ. 50 ஆயிரம் செலவில் பரிசுப் பொருட்கள் வழங்கப்பட்டன. ஏறத்தாழ 4,700 விற்பனையாளர்கள் உள்ளனர்.

விழாவிற்குத் தலைமை தாங்கிய வேளாண்மைத்துறை ஆணையர் மற்றும் செயலாளர் திரு. ஏ. வெங்கடராமன் இ.ஆ.ப. பேசுகையில், 'ஏற்கெனவே விற்பனை செய்யப்பட்டுவரும் ஆவின் பொருட்களுக்கு மேலும் சிறப்புச் செய்யும் வகையில் 'குட்னஸ்' என்ற பெயரில் நவீன முறையில் தயாரிக்கப்பட்ட பொருட்கள் இன்று அறிமுகப்படுத்தப்படுகின்றன. மக்கள் விரும்பும் பொருளை அவர்களது விருப்பத்திற்கு ஏற்றவாறு இந்த இணையம் செய்து வரும் பணி மகத்தான பணியாகும்' என்றார்.

கூட்டுறவு ஒன்றியப் பால் உற்பத்தியாளர்களாக உள்ள மாவட்டத் தலைவர்களின் சார்பில் திரு கே. ஏ. செங்கோட்டையன், எம். எல். ஏ. உரையாற்றுகையில்: 'தமிழக அரசு பால் கொள்முதல் விலையை உயர்த்தி 10 இலட்சம் ஏழை பால் உற்பத்தியாளர்களாகிய விவசாயிகளைப் பாதுகாத்தது குறித்து மகிழ்ச்சியடைகின்றோம்' என்றார்.

தமிழ்நாடு பால்வள உற்பத்தியாளர்கள் சார்பில் முதல்வர் உடல்நலச் சிகிச்சைக்கு ரூ. 1இலட்சம் மாண்புமிகு பால்வள அமைச்சரிடம் அளிக்கப்பட்டது.

மாண்புமிகு தொழிலாளர் நலம் மற்றும் பால்வளத் துறை அமைச்சர் திரு கே.ஏ. கிருஷ்ணசாமி அவர்கள் பரிசுகள் வழங்கியும், புதிய பொருட்களை அறிமுகப்படுத்தியும் சிறப்புரையாற்றுகையில் குறிப்பிட்டதாவது:

'மனித வாழ்வில் பின்னிப் பிணைந்த பொருள், ஆவின் பால் ஆகும். மாநிலத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்து தமிழ்நாட்டுப் பால்உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையத்துக்குப் பால் வழங்கும் ஏழை பால் உற்பத்தியாளர்கட்குக் கொள்முதல் விலையை உயர்த்தி அளிப்பதற்காகவே இந்த விலைச் சீரமைப்பு மேற்கொள்ளப்பட்டது'.

'கடந்த ஐந்து ஆண்டுகளில் 'ஆவின்' மிகுந்த வளர்ச்சி பெற்றுள்ளது. சென்னையில் பால் விற்பனை 1981-இல் ரூ. 24 கோடியாக இருந்தது. இன்று ரூ. 56 கோடியாகவும், பால்பொருட்கள் விற்பனை 1981-இல் ரூ. 2 கோடியாகவும் இருந்தது. இன்று ரூ. 10 கோடி அளவுக்கு உயர்ந்துள்ளது.



'பத்து மாவட்டக் கூட்டுறவு ஒன்றியப் பால் உற்பத்தியாளர்கள் மூலம் பத்து இலட்சம் பால் உற்பத்தியாளர்கள் நாளொன்றிற்கு லாரி, ரயில் மூலம் சென்னை நகர மக்களுக்கு 4.5 இலட்சம் லிட்டர் பால் அனுப்பி வைக்கிறார்கள்.

''தற்பொழுது ஒரு கிலோ கொழுப்புச் சத்துள்ள பாலிற்கு ரூ. 42 கொடுக்கப்படுகிறது. 1-4-1985 முதல் ரூ. 44 வழங்கப்பட்டு வருகிறது. இந்த உயர்வினால் பால் உற்பத்தியாளர்களாகிய விவசாயிகள் பயனடைவார்கள். தனி நபர்கள் இலாபத்திற்கு பால் விற்பனை செய்யவில்லை.

''இப்போது பாலின் விலை உயர்த்தப்படவில்லை - திருத்தியமைக்கப்பட்டுள்ளது. பால் நிறுவனத்திற்கு இழப்பு வராமல் பால் உற்பத்தியாளர்களுக்கு உயர்வு அளிக்கப்பட்டுள்ளது. செயற்கைக் கரு நிலையம் குஜராத்தில் உள்ள 'ஆனந்தில்' உள்ளது. அதை 'உறைவிந்து வங்கி' என்று சொல்வார்கள். அதே போல் ஈரோட்டிலும் உள்ளது.

'பால் புரட்சியால் இந்தியாவிலேயே முன்னோடியாக இருப்பது குஜராத். இன்னும் மூன்று ஆண்டுகளில் குஜராத்தையும் மிஞ்சும் அளவிற்குப் பால் புரட்சியில் முன்னணியில் நாம் இருப்போம் என்கிற நம்பிக்கை நமக்கு இருக்கிறது. மாண்புமிகு முதல்வர் அவர்கள் தமிழகம் முன்னணியில் இருக்க எல்லா உதவிகளையும் செய்கிறார்.

'தேசிய பால் பெருக்குத் திட்டத்தின் கீழ் திருச்சி, தஞ்சை, புதுக்கோட்டை ஆகிய 3 மாவட்டங்களும் கொண்டு வரப்பட்டு ரூ. 18 கோடி தேசிய பால் உற்பத்தியாளர் நிறுவனத்தால் வழங்கப்பட்டுள்ளது.

'பெரியார் மாவட்டத்தில் ரூ. 3 கோடி செலவில் விரிவாக்கம் செய்யப்பட்டு வரும் பால்பதனத் தொழிற்சாலை, வருகிற செப்டம்பரில் உற்பத்தியை முழு அளவில் தொடங்கும்.

'கிராம மக்களுக்கு 'ஆவின்' புதிய வருமான வழியைக் கண்டுபிடித்து சமூகப் புரட்சியை ஏற்படுத்தித் தந்துள்ளது என்பதை யாரும் மறுக்க முடியாது.'

—அன்பின் அடையாளமாக விற்பனையாளர்கட்குப் பரிசுகள் வழங்கப்பட்டன.

விழா இறுதியில் பொது மேலாளர் திரு எம். எச். ஜலால் இ.ஆ.ப., நன்றி கூறினார்.

—அ. ம. விநாயகம்



## ஆவின் 'குட்னஸ்'

ஆவின் நிறுவனத்தின் சார்பில் 9 சுவைகளில் ஐஸ்கிரீம் விற்பனைக்குவந்துள்ளது. புதிய ரக லஸ்ஸி, பால்கோவா, யோகர்ட் ஆகியவை மீண்டும் பயன்படுத்தக்கூடிய கப்களில் கிடைக்கிறது. முன்னதாக 3 சுவைகளில் விற்பனை செய்யப்பட்ட பால், தற்பொழுது 9 சுவைகளில் விற்பனைக்கு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

நறுமணம் ஊட்டப்பட்ட பால், லஸ்ஸி, ஐஸ்கிரீம், யோகர்ட், பால்கோவா ஆகியவை 'ஆவின் குட்னஸ்' என்று அழைக்கப்படுகிறது. இவை மக்கள் மத்தியில் நல்ல வரவேற்பைப் பெறும் என்பதில் ஐயமில்லை.

# மலைப் பகுதி விளை நிலம் ஆகிறது

ஆடிக் கொடுத்த சுடர்க்கொடி வாழும் ஸ்ரீவில்லிபுத்தூர் புதிய காமராஜர் மாவட்டத்தின் இதயம் போன்ற பகுதி. இவ்வூருக்கு அருகில் நீண்டு செல்லும் மலை தான் மேற்குத் தொடர்ச்சி மலை. இதன் அருகில் உள்ள கிராமம் தான் வெங்கடேஸ்வரபுரம்! வற்றாத ஜீவநதிகள் எதுவும் இங்கே பாய்வது இல்லை. ஆனால் மழைக்காலங்களில் இயற்கைச் செல்வத்தையும் அழிக்கும் வகையில் ஓடும் காட்டாறுகள் உண்டு. இப்பகுதியில் வளர்ந்திருந்த தெல்லாம் கருவேல மரம்போன்ற முள் மரங்கள் தாம்! ஆனால் மண்வளம் மிக்க பூமி! தமிழ்நாடு அரசின் தோட்டக்கலைத் துறையினர் இப்பகுதியைப் பார்வையிட்டு ஆராய்ந்ததன் விளைவாகச் சுமார் 120 ஏக்கர் மலைப் பகுதி இன்று அழிக்கப்பட்டு, வேளாண்மைக்கு ஏற்ற நிலமாக மாற்றப்பட்டுள்ளது. 1981-ல் ஆரம்பித்த இப்பணி 1983-ல் தான் முடிவுற்றது.

1983-84ன் ஆரம்பத்தில் சுமார் 40 ஏக்கரில் மாமரக் கன்றுகள் நடப்பட்டுள்ளன. கொய்யா மற்றும் நர்சரிச் செடிகள் சுமார் 11.75 ஏக்கரில் பயிர் செய்யப்பட்டுள்ளது. இவை

ரெ. இராவணன்
செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர், (பொறுப்பு),
காமராசர் மாவட்டம்,

களைப் பராமரிக்கத் திறந்த வெளிக் கிணறு ஒன்று ரூ. 50,000 செலவில் வெட்டப்பட்டுள்ளது.

இந்தக் கிணற்றுத் தண்ணீர் போதாத காரணத்தால், அருகில் உள்ள தோட்டக்காரர்களிடம் வாடகை அடிப்படையில் தண்ணீர் பாய்ச்சப்படுகிறது. இந்தப் பண்ணை மூலம் அருகில் உள்ள கிராமத்தைச் சேர்ந்த 40 ஆண்-பெண்கள், பானைகள் மூலம் தண்ணீர் எடுத்து ஒவ்வொரு கன்றுக்கும் ஊற்றுகின்றனர். சுமார் 50,000-க்கு மேற்பட்ட மாமரக் கன்றுகள் வளர்க்கப்பட்டு, விவசாயிகளுக்கு விற்பனைக்காக வைக்கப்பட்டுள்ளன.

இப்பகுதியில் மேலும் இதுபோல் மூன்று திறந்தவெளிக் கிணறுகள் தோண்டும் பணி அரசின் பரிசீலனையில் உள்ளது. இரண்டு ஆண்டுக்காலத்தில் இந்த மாமரம் கொய்யா மரங்கள் எல்லாம் வளர்ந்த பின் நாம் சென்று பார்த்தால் நிச்சயமாக அது ஒரு ராட்சதப் பண்ணையாகத் தான் தெரியும்! மலையைமாற்றி மாமரத் தோப்பாக்கிய பெருமை தமிழக அரசையும், தோட்டக் கலைத் துறையையுமே சாரும்!



## நெய்வேலிப் பெருமை

நெய்வேலியில் 3 ஆயிரம் மில்லியன் டன் பழுப்பு நிலக் கரி உள்ளது. இந்தியாவிலேயே நெய்வேலியில்தான் அதிக அளவு பழுப்பு நிலக்கரி இருக்கிறது. நெய்வேலிச் சுரங்கத்தை மையமாக வைத்துச் சாண எரி வாயுத் திட்டம் கண்டுபிடிக்கப்பட்டது. தமிழ்நாட்டில் மட்டும் சாண எரி வாயுத் திட்ட மையம் 5872 உள்ளது. ஆந்திரத்தில் 3612, பாண்டிச்சேரியில் 53, டெல்லியில் 7 மையங்கள் உள்ளன.




## ஜப்பானில்...

அலுவலகங்களில் - தொழிற்சாலைகளில் வேலை செய்யும் பெண்கள்-வேலை செய்யத் தகுதி பெற்று வேலையில் சேர இருக்கும் பெண்கள் ஆகியோரின் [illegible]ண்ணிக்கை 2 கோடியே 32 [illegible]மாக உயர்ந்துள்ளது ஜப்பா[illegible] மொத்தப் பெண்கள் தொ[illegible]யில் இவர்கள் 49 சதவிகிதம் அளவுக்கு இருக்கிறார்கள். அமெரிக்காவில் இத்தகையவர்கள் 51 சதவிகித அளவில் உள்ளனர். ஜப்பான் நாடு இந்த வகையில் அமெரிக்காவுக்கு அடுத்த இடத்தில் நிற்கிறது.

85353

ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002.



குழந்தைகள் முதலில் கற்பது — அ ஆ இ

குடும்பத்தை என்றும் காப்பதும் — அ ஆ இ

# அஞ்சலக
# ஆயுள்
# இன்சூரன்ஸ்

POSTAL LIFE INSURANCE


குறைந்த பிரிமியம் செலுத்தி அதிக போனஸ் பெறுவீர்! மத்திய மாநில அரசு ஊழியர்கள், அரசுடைமை வங்கி ஊழியர்கள், கல்வி நிலைய ஊழியர்கள், நகராட்சி, ஊராட்சி ஊழியர்கள் போன்றவர்களுக்கு

## சிறந்த இன்சூரன்ஸ் திட்டம்
## அஞ்சலக ஆயுள் இன்சூரன்ஸ்

ப்ரீமியம் மாதா மாதம் சம்பளத்திலேயே பிடித்தம் செய்ய வசதி உள்ளது.

PLI திட்டத்தில் போனஸ் எவ்வாறு உயர்ந்துகொண்டே வந்துள்ளது என்பதைக் கவனியுங்கள்

போனஸ் ஆண்டுக்கு ரு. 1000/-க்கு




**PLI** பாதுகாப்பிற்கும் செழிப்புக்கும்

விவரங்களுக்கு: போஸ்ட் மாஸ்டர் ஜெனரல்
சென்னை-600 002
தொலைபேசி
எண்கள்: 841619
843949
843138